இடக்கை

எஸ்.ராமகிருஷ்ணன்



இடக்கை

எஸ்.ராமகிருஷ்ணன்

கடைசி தனிமை

சத்கரில் ஒருவன்

அஜ்யா எனும் சேடி

மணற்பெண்

மரணசிம்மாசனம்

பிஷாடன்

நிழல்நகரம்

அந்தப்புரம்

முறையீடு

காலா எனும் தனியுலகம்

திறந்தவெளி இடுகாடு

சம்பு எனும் படகோட்டி

மக்பியின் பாடல்

விசித்திர உலகம்

நிழல்கள் பேசுவதில்லை

சந்தையில் குழப்பம்

டச்சு வணிகன்

அஜ்யாவின் கனவுகள்

கைதிகளின் அடையாளம்

சம்புவின் அதிர்ஷ்டம்

பண்டிதர் சபை

பிஷாடனின் உத்தரவு

ரெமியஸ்

நளாவின் கதை

மஞ்சா

மன்னரின் பயணம்

ரங்மஹால்

இரண்டு புழுக்கள்

அறியாப் பெண்

யார் குற்றவாளி

பிச்சைக்காரனின் பாடல்

முடிவற்ற பயணம்

இடையர்களோடு ஒரு இரவு

கடைசி நினைவுகள்

ரெமியஸின் திருமணம்

டெல்லி பயணம்

ஊர்களின் விசித்திரம்

குலாபி

கங்கை கரையில்

சம்புவின் கடற்பயணம்

மதுராவில் தூமகேது

விக்டோரியா பஜார்

அலையும் நாட்கள்

ஜமீல் எனும் கவிஞன்

நினைவுகளின் நிழலில்

கடைசி தனிமை

ஔரங்கசீப் விழித்துக்கொண்டிருந்தார். பின்னிரவில் அந்த அறையில் அவரைத் தவிர வேறு எவருமில்லை. அறையின் நான்கு மூலைகளில் எரிந்துகொண்டிருந்த நெய்விளக்கிலிருந்து

மஞ்சள் வெளிச்சம் கசிந்தோடிக் கொண்டிருந்தது. சுனேரி மஹால் என அழைக்கப்பட்ட அஹமத் நகர் அரண்மனையினுள் இருந்தது அவரது படுக்கை அறை. இரண்டு ஆள் உயரமுள்ள கதவுகள். தங்கத்தால் இழைக்கப்பட்ட வேலைப் பாடுகள். கதவில் ஒரு பக்கம் மீனும் முதலையும் யானையும் பருந்தும் செதுக்கப்பட்டிருந்தன.நீருக்கும் நிலத்திற்கும் வானிற்கும் அவரே அதிபதி என்பதன் அடையாளமாகவே அவை செதுக்கப்பட்டிருந்தன. அந்த அறையின் வெளியே பதினாறு காவல் வீரர்கள் பணியிலிருந்தார்கள். அதில் எட்டுப் பேர் தார்த்தாரியப் பெண்கள். ஈட்டிகள் போன்று வலிமையான உடற்கட்டு கொண்டவர்கள். நிழல் அசைந்தால்கூட தாக்கிவிடும் வல்லமை கொண்டவர்கள். கூர்மையான வாள் ஏந்தியபடியே காவலுக்கு நின்றிருந்தார்கள். மூன்று அடுக்குகளாக அமைக்கப்பட்டிருந்தது அந்த அறை. வாசற்கதவைத் திறந்தவுடன் பெரிய வரவேற்பு அறை. காஷ்மீரக் கம்பளம் விரிக்கப்பட்ட அந்த அறையின் சுவர்களில் விதவிதமான வாட்கள் மாட்டி வைக்கப்பட்டிருந்தன. தலைக் கவசங்களை மாலைகள்போலக் கோர்த்து ஒரு தாங்கியில் தொங்கவிட்டிருந்தார்கள். சுவரில் சித்திர வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அறையில் ஒரேயொரு சிம்மாசனம் மட்டுமே போடப்பட்டிருந்தது. அது பேரரசர் அமர்வதற்கான இருக்கை. அவர் முன்பாக எவரும் அமர்வது முறையில்லை என்பதால் தனிச்சந்திப்பிற்கு வரும் மந்திரிகளும் குடும்ப உறுப்பினர்களும் அவர் முன்பு மண்டியிட்டுதான் பேசுவார்கள். அந்த அறையிலிருந்து உள் அறைக்குப் போவதற்கு மூன்று கதவுகள் இருந்தன. முதற் கதவு பேரரசர் மட்டுமே நுழைவதற்கானது. தனிச் சந்திப்பிற்காக ராணி வருவதாக இருந்தால் இரண்டாவதுத் கதவை திறந்து நுழைந்து வருவார். சில வேளைகளில் அதன்வழியே மருத்துவர்களும் வருவதுண்டு. மூன்றாவது கதவு பணியாளர்கள் சென்று வருவதற்கானது.

உள் அறையில் சுவரோடு பொருந்திய இழுப்பறைகள் இருந்தன. அதில் மன்னரது உடைகளும் முத்திரைகளும் எழுதுபொருட்களும், காலணிகளும் பரிசுப் பொருட்களும் வேட்டையாடும் ஆயுதங்களும் துப்பாக்கியும் வைக்கப்பட்டிருந்தன. அதைக் கடந்து உள்ளே சென்றால் பேரரசரனின் படுக்கை அறை. வெண்ணிறத் திரைச்சீலைகள், வெண்ணிறப் படுக்கை விரிப்புகள், வெண்ணிறத் தலையணை, படுக்கை என எங்கும் ஒரே வெண்ணிறம்.

அலங்காரப் படிகள்கொண்ட அகன்ற கட்டிலும் விரிக்கப்பட்டிருந்த பட்டுமெத்தையும் பூவேலைப்பாடு கொண்ட தலையணைகளும் அப்படியே இருந்தன. ஔரங்கசீப் அவற்றை விலக்கி வலக்கோடியில் தரையில் மெல்லிய படுக்கை ஒன்றை விரித்துப் படுத்திருந்தார். அவரது கால்களைப் பிடித்துவிடுவதற்காக எப்போதும் உடனிருக்கும் ஹிஜ்ரா ஹஃபீஜாவும்கூட அவர் உறங்கிவிட்டார் என அறையை விட்டுப் போயிருந்தாள்.

பனிக்காலம் முடியப்போகிறது. ஆனாலும் குளிர் போய்விடவில்லை. கோடைக்கால இரவுகளைப் போலின்றி குளிர்கால இரவுகள் தனிமையை அதிகம் உணர்த்துகின்றன. அதுவும் சில நாட்களாக அவர் நோயுற்றிருந்த காரணத்தால் உடல் நனைந்த காகிதம் போலாகியிருந்தது.

அன்றாடம் அவரை மூன்று மருத்துவர்கள் பரிசோதனை செய்தார்கள். பிரெஞ்சு மருத்துவரான ஜோசப் தோர் காலையில் பரிசோதனைசெய்து மருந்துகள் தந்தார். அவரன்றி கண்பார்வையற்ற ஹக்கீம் நபினா சாகிப் அவரை நாடிபிடித்துப் பார்த்து மருந்து அரைத்துக் கொடுத்திருந்தார். அரண்மனை மருத்துவரான ஹக்கீம் குலாம் அகமது மூலிகைகளை அரைத்து கஷாயம் தயாரித்துக் கொடுத்து வந்தார். மூன்று சிகிட்சைகள் முறையாக நடந்தபோதும் அவரது உடல்நலம் தேறவில்லை. கை கால் எலும்புகள் வலிக்கத் துவங்கியிருந்தன. பனித்திரை மூடியிருப்பது போலவே புறக்காட்சிகள் தெரிந்தன. மூச்சுவிடுவதற்கு சிரமமாக இருந்தது. முதுகின் வலப்புறம் கடுமையான வலியிருந்தது. சில நேரம் அவரால் புரண்டுபடுக்கக் கூட முடியவில்லை. மூத்திரம் பெய்யும் நேரங்களில் விதைக்காய்கள் வலித்தன. அடிவயிற்றில் விட்டுவிட்டு வலி வந்துகொண்டிருந்தது. பாதங்கள்கூட வலித்தன.

எப்போதும் அவர் குரல் இரும்புச் சம்மட்டியால் அடிப்பது போல உறுதியாக, வலிமையாக ஒலிக்கும். உயரமான தோற்றம் கொண்டவர் என்பதால் அந்தக் குரல் கம்பீரமாக இருந்தது. சந்தோஷமான தருணங்களில்கூட அவர் சிரிப்பதில்லை என்பதால் முகம் எப்போதும் சிந்தனை வசப்பட்டதாகவே இருக்கும். ஆனால், நோயுற்ற பின்பு அவரது குரல் உடைந்து போனது. நடுக்கத்துடன் பெருமூச்சுடன் அவர் பேசினார். நாவறண்டு போயிருந்த காரணத்தால் சொற்கள் உடைந்து சிதறின. அவரால் எதையும் சாப்பிடவும் முடியவில்லை. மருத்துவர்கள் அவர் எதையும் யோசிக்காமல் உறக்கத்திலே இருக்கவேண்டும் என்றார்கள். உறக்கம் என்ன அவரது சேவகனா அழைத்தவுடன் வந்துவிடுவதற்கு.

கலக்கமும் பயமும் கொண்ட மனது அடங்கமறுத்து, கடந்த காலத்தில் நடந்த எதையெதையோ நினைத்துக் கிளைவிரித்துக் கொண்டிருந்தது.

சாவின் காலடிகள் தனது அறைக்கு வெளியே கேட்டுக் கொண்டிருப்பதை அவர் உணர்ந்தார். ஆனால், கதவைத் தட்டி உள்ளே

வரவில்லை. காத்திருக்கிறது. ஒருவேளை தன்னிடம் அனுமதி கேட்டுக் காத்திருக்கிறதா? அதுதான் நிஜம் என்றால் வெளியே காத்திருக்கட்டும். சாவைக் கண்டு அவர் பயப்படவில்லை. ஆனால், அவரது மரணத்தின் பின்பு ஏற்படப்போகும் அரியணைச் சண்டைகள் நினைத்து அவர் மிகவும் வேதனை கொண்டார். தேசத்தை ஆள முடிந்த தன்னால் வீட்டை நிர்வகிக்க முடியவில்லை, நல்ல மகன் ஒருவன்கூட அமையவில்லை. மனக்கஷ்டங்களைப் பகிர்ந்துகொள்ள ஒரு நண்பரில்லை. தான் தனி ஆள். உயரமான மலை உச்சியில் நின்று கொண்டிருக்கும் ஒற்றை மனிதன். தன்னிடம் மிஞ்சியிருப்பது கடந்த கால நினைவுகள் மட்டுமே.

எல்லா வெற்றிகளும் சந்தோஷங்களும் துயரங்களும் வெறும் நினைவுகளாக மட்டுமே மிஞ்சியிருக்கின்றன என்பது எவ்வளவு வேதனையானது. இவ்வளவுதானா மனித வாழ்க்கை.

வாழ்க்கை என்பது நினைவுகளின் தொகுப்பு மட்டும்தானா?

விரிந்து பரந்த ஹிந்துஸ்தானுக்கு பேரரசனாக இருப்பது பெரிய சாதனை என்பதுபோல நினைக்கிறாயோ. இப்பேருலகமே என் கைகளுக்குள் தானே கட்டுண்டு கிடக்கிறது எனச் சொல்வது இரவு அவர்முன் விரிந்திருந்தது.

இரவின் முன் மன்னரும் எளியவரும் ஒன்றுதானே.

பகல் மனிதர்களைப் பிரித்து வைக்கிறது. இரவு ஒன்று சேர்த்து விடுகிறது. உறக்கம் என்பது இரவு புகட்டும் பால். குழந்தைகளுக்குத் தாய் மார்பில் பால்புகட்டுவது போலத்தான் இரவு உறக்கத்தை மனிதர்களுக்குப் புகட்டுகிறது. முட்டிமுட்டிப் பால் குடித்த குழந்தை கண் அயர்ந்துவிடுவது போலத்தான் மனிதர்கள் உறங்கத் துவங்குகிறார்கள். உறக்கம் எவ்வளவு சிறந்த மருந்து. மனிதர்களின் கஷ்டங்களை, துயரங்களை ஆற்றுப்படுத்தி அடுத்த நாளை எதிர் கொள்ளும் சக்தியை இரவுதானே தருகிறது.

எல்லா இரவுகளும் ஒன்றுபோலத் தோன்றினாலும் ஒன்றில்லை. ஒவ்வொரு இரவும் தனித்துவமானது. தனிவாசனையும் இயல்பும் கொண்டது. எங்கிருந்து வருகிறது இந்த இருள். காற்றைப்போல அதுவும் ரகசியமாகப் பிறப்பெடுக்கிறதா. ஒவ்வொரு இரவிலும் மனிதர்கள் இறந்துபோகிறார்கள். விடியலில் மீண்டும் உயிர்பெற்று விடுகிறார்கள். இந்த நாடகத்தை எத்தனை பேர் உணர்ந்திருக்கிறார்கள்.

அவருக்கு கடந்த சில மாதங்களாவே எல்லா இரவிலும் கனவுகள் வருகின்றன. அதுவும் துர்க்கனவுகள். திடுக்கிட்டு விழிக்க வைக்கும் கனவுகள். முதுமை என்பது கனவுகளின் கூடாரம் என்பார்கள், நிஜம். முதியவர்கள் அதிகம் கனவு காணுகிறார்கள். எல்லாமும் சிறுநுரைகள் போல சின்னஞ்சிறு கனவுகள். பெரும்பான்மைக் கனவுகள் வருத்தம்கொள்ள வைக்கின்றன. சில கனவுகள் எதை எதையோ

நினைவூட்டுகின்றன.

அப்படி சில நாட்களுக்கு முன்பு அவருக்கு வந்த ஒரு கனவை அவரால் மறக்கமுடியவில்லை. அக்கனவில் அவர் ஒன்பது வயது சிறுவனாக இருந்தார்.

பால்யத்தில் அவர் மிகவும் முன்கோபியாக இருந்தார். யாரோடும் பழகமாட்டார். யாரையும் பிடிக்காது. ஆனால், அவரது தாதிப்பெண்களில் ஒருத்தியான அனாருக்கு அவரை மிகவும் பிடித்திருந்தது. ஆசை ஆசையாகக் கொஞ்சுவாள். கேலி செய்வாள். பழங்களைப் பறித்து சாப்பிடத் தருவாள்.

அனார் ஒரு முறை அவரிடம் கேட்டாள்,

“மாலிக், இந்த நாட்டை ஆளப்போகும் அடுத்த மாமன்னர் நீங்கள்தானா?’’

“ஆமாம்’’ எனத் தலையாட்டினார்.

“நீங்கள் கட்டளை இட்டால் இந்த உலகமே கைகட்டி சேவகம் செய்யுமில்லையா?”

“செய்யும்” என்றார்.

“உங்களால் எதையும் செய்யமுடியும்தானே” என்று கேட்டாள்.

“மன்னர்களால் முடியாதது ஒன்றுமில்லை’’ என்றார்.

“அதுதான் இல்லை. என்னோடு வாருங்கள்’’ என அவரை தோட்டத்திற்கு அழைத்துப் போனாள்.

பவளமல்லி மரத்தின் அடியில் பூக்கள் உதிர்ந்து கிடந்தன. அவள் வேடிக்கையான குரலில் சொன்னாள்.

“மாலிக், இந்தப் பூக்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?”

“நான் பெண்ணில்லை. எனக்குப் பூக்களைப் பிடிக்காது.”

“பூக்கள் பெண்களுக்கானது என யார் சொன்னது?’’

“பெண்கள்தானே பூக்களைச் சூடிக் கொள்கிறார்கள்.”

“அது எதனால்?”

“அவர்களுக்கு பூவின் நிறமும் வாசனையும் பிடித்திருக்கிறது.”

“அதுதான் இல்லை. பூக்கள் விசித்திரமானவை ஹுசூர். ஒவ்வொரு பூவும் ஒரு ரகசியம். மரம் தனது ரகசியங்களைத்தான் பூக்களாக மலரச்செய்கின்றன. பூவில் எதற்கு வாசனை. தான் ஒரு ரகசியத்தை வைத்திருக்கிறேன் என அடையாளம் காட்டுவதற்காகத்தான். பெண்கள் அந்த ரகசியத்தைக் கண்டுபிடித்துவிடுகிறார்கள். ஆராதிக்கிறார்கள். சந்தோஷப்படுகிறார்கள்.”

“என்ன ரகசியம் அது?”

“நீங்கள் பெண் இல்லையே.”

“பூக்களுக்குள் ரகசியம் இருப்பதாக நீ பொய் சொல்கிறாய்.”

“உண்மை. பூக்களின் ரகசியம் பெண்களுக்கு மட்டுமேயானது.”

“அப்படி ஒரு ரகசியம் எனக்கு வேண்டாம்.”

“கோவித்துக் கொள்ளாதீர்கள். ஞானிகளுக்குப் பூக்களைப் பிடிக்கும். ஞானி மீர் காசிம் ஜிலானிகூட கையில் ரோஜாப்பூ வைத்திருக்கிறாரே. அவர் ஆண்தானே.”

“எனக்கு ஞானிகளையும் பிடிக்காது. நான் போர்வீரர்களை மட்டுமே மதிப்பவன்.”

“எல்லா வீராதி வீரர்களும் பெண்களிடம் மண்டியிடுபவர்கள் தான்.”

“அப்படி என்றால் எனக்குப் பெண்களையும் பிடிக்காது.”

“நானும் பெண்தான்.”

“உன்னையும் எனக்குப் பிடிக்கவில்லை.”

“பிடிக்காத விஷயங்கள்தான் மனதில் ஆழமாகத் தங்கி விடுகின்றன.’’

“என்னைக் குழப்பாதே, எதற்காக இங்கே அழைத்து வந்தாய், அதை மட்டும் சொல்.”

அந்த தாதி அவரைக் கொஞ்சியபடியே சொன்னாள்.

“மாலிக், கோபம் ஒரு காட்டுக்குதிரையைப் போன்றது. அதை அடக்கி நம் கைக்குள் வைத்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அது உங்களைத் தூக்கி எறிந்து போய்விடும்.”

“அதிகம் பேசாதே. உன் நாக்கைத் துண்டிக்கச் சொல்லி விடுவேன்’’ எனக் கத்தினார்.

“மன்னித்துக்கொள்ளுங்கள் மாலிக். நான் ஒரு முட்டாள். மனதில் பட்டதைப் பேசிவிடுகிறேன். இந்த அடிமையை மன்னித்து விடுங்கள்’’

“என்னை ஏன் இங்கே அழைத்து வந்தாய் அதைமட்டும் சொல்.’’

“எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்.”

“என்ன உதவி?”

“மரத்திலிருந்து உதிர்ந்த பவளமல்லி ஒன்றை மறுபடி மரத்தில் ஒட்டவைக்க வேண்டும்.”

அவருக்கு அவள் சொன்னது புரியவில்லை.

“இந்தப் பூவையா?” என கீழே கிடந்த பூவைக் காட்டினார்.

“ஆமாம் மாலிக்.’’

இது என்ன பெரிய வேலையா என்பதுபோல அந்தப் பூவை எடுத்துப் பார்த்தார். பிறகு விடுவிடுவென பவளமல்லி மரத்தில் ஏறி அந்தப் பூவை ஒரு கிளையில் ஒட்ட வைக்க முயன்றார். பூ ஒட்டிக்கொள்ளவில்லை. மரத்திலிருந்து கீழே விழுந்தது. அவர் கீழே இறங்கிவந்து அதை எடுத்துக்கொண்டு மெலிந்த உடலுடன் மரமேறினார். பூவை ஒட்டவைக்கமுடியவில்லை. தாதி அதைக் கண்டு கைகொட்டிச் சிரித்தாள். அந்த வேடிக்கையை கண்ட மற்ற அரண்மனைப் பெண்களும் கைதட்டிச் சிரித்தார்கள். அவருக்கு பூவை மரத்தில் ஒட்டவைக்க முடியாததை விடவும் அந்தப் பெண்கள் தன்னை கேலி செய்தவிதம் ஆத்திரத்தை உருவாக்கியது. அவர் மரத்திலிருந்து தாவி விழுந்தார்.

அதைக் கண்ட தாதி பயந்துபோய்க் கத்தினாள். மயங்கிக் கிடந்த அவரைத் தூக்கிக்கொண்டு போய் படுக்கையில் கிடத்தினார்கள், உடனடியாக ஹக்கீம் வரவழைக்கப்பட்டார். மருந்துகள் தரப்பட்டன. அந்தத் தாதியும் உடனிருந்த பணிப்பெண்களுக்கும் தண்டனை வழங்கப்பட்டது. தாதி அனாரை யானைக் காலில் வைத்து மிதித்துக் கொன்றார்கள் எனப் பின்பு கேள்விப்பட்டார்.

ஆனால், அவளது கேலிக்குப் பின்பு மறைந்திருந்த உண்மையை அவர் தனது எண்பத்தியெட்டாவது வயதில்தான் உணர்ந்துகொண்டார்.

எந்தப் பேரரசனாலும் உதிர்ந்த ஒரு பூவை மரத்தில் ஒட்ட வைத்து விட முடியாது. எளிய விஷயங்களைப் புரிந்துகொள்வது சிரமமானது. இயற்கையை எவராலும் வெல்லமுடியாது. மனித சக்தி என்பது வரையறுக்கப்பட்ட ஒன்று. இயற்கை அப்படியானதில்லை. அது ஒரு மர்மம். புதிர். அவிழ்க்க அவிழ்க்க நீண்டுகொண்டே செல்லும் புதிர்.

இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு தாதி அனாரின் முகம் அவரது கனவில் வெளிப்பட்டது. அதே சிரித்த முகம். அதே கேலியான குரல். அந்த முகம் யானைக் காலில் மிதிபட்டுச் சிதைக்கப்பட்டது என்பதை நினைத்த போது அவருக்கு தன்மீதே அருவருப்பாக வந்தது.

தான் ஏன் அப்படி நடந்துகொண்டோம். சுய தோல்விகளுக்காக மற்றவர்களைப் பலி கொடுக்கிற பழக்கம் எப்படி எனக்குள் வந்தது? ஒருவேளை அது மன்னர்களின் இயல்பா. அப்பாவிகளைக் கொல்வது அனுமதிக்கப்பட்டது என ஏன் தோன்றுகிறது.

அந்தக் கனவிலிருந்து விடுபட்ட காலையில் அவர் என்றோ இறந்துபோன அந்தத் தாதி அனாரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். ஆனால், தவறுகளை உணர்ந்துகொள்வது மட்டும் அதற்கான பிரயாச்சித்தமில்லை என்று பட்டது. தாதியின் வாரிசுகளுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என முடிவு செய்துகொண்டார்.

அந்த கனவு தன்னைப்பற்றியே அவரை யோசிக்கச் செய்து கொண்டிருந்தது. நான் எல்லையில்லாத தவறுகளைச் செய்திருக்கிறேன். அதை மறைத்திருக்கிறேன். கண்டுபிடித்தவர்களைக் கொன்றிருக்கிறேன். எத்தனை தவறுகளுக்குப் பிராயச்சித்தம் செய்வது? ஒருவேளை அல்லா என்னை ஒரு கருவியாகக் கொண்டு இந்தத் தவறுகளை எல்லாம் அரங்கேற்றிக் காட்டுகிறாரா?

நல்லதை எடுத்துக் காட்ட ஒரு மனிதனை ஞானியாக்கும் கடவுள், தீமையை அடையாளம் காட்ட தன்னைப் பாவையாக்கிக் கொண்டாரா. அதுதான் நிஜம் என்றால் ஏன் தன்னைத் தேர்வு செய்தார்?

விடையில்லாத அந்தக் கேள்வி அவர் மனதைத் துயரப்படுத்தியது. பிறகு அவராக சுயசமாதானம் செய்துகொண்டார்.

எனது தவறுகள் யாவும் நான் விரும்பிச் செய்தவை. அதன் பலன்களை அனுபவித்திருக்கிறேன். இப்போது வருந்தி என்ன செய்வது. மன்னர்கள் கடந்தகாலத்தைத் திரும்பிப் பார்க்கக் கூடாது. வாள் எதையும் நினைவு வைத்துக்கொள்வதில்லை. தண்ணீர் ஒருபோதும் பின்னோக்கி ஓடாது. நடந்தவற்றை அசைபோடுவதைப் போல துயரம் எதுவுமில்லை. நாளையைப் பற்றி நினைப்பதுதான் இதற்கான ஒரே ஆறுதல். நேற்று நடந்தவற்றை என்னால் மாற்ற முடியாது. ஆனால், நாளை எப்படி நடப்பது என நான் முடிவு செய்ய முடியும்தானே.

அவராக இப்படி எதை எதையோ நினைத்துக்கொண்டார். நோயுற்ற உடலோடு சிந்தனை செய்வது குழப்பமான எண்ணங்களையே உருவாக்குகிறது. ஆறுதல்படுத்திக்கொள்வதால் மட்டும் ஒரு மனிதன் உறங்கிவிட முடியுமா என்ன?

அந்த இரவில் அவர் குழப்பமான சிந்தனைகளால் ஆக்கிரமிக்கப்பட்டு படுக்கையில் உறக்கமற்றுக் கிடந்தார்.

மரக்கிளையில் வந்தமரும் பறவையைப் போல உறக்கம் அவர் உடல் மீது வந்தமரவில்லை. பட்டுத்திரையை விலக்கி குளிர்காற்று அந்த அறைக்குள் பரவிக்கொண்டிருந்தது. மெலிந்த கால்களும் ஒடுங்கிய முகமும் துருத்தி நிற்கும் கன்னத்து எலும்புகளும் நரைத்த தாடியும் கொண்டிருந்த அவர் வெண்ணிற உடைகளை அணிந்திருந்தார். படுக்கை, தலையணை உறைகளும்கூட வெண்ணிறமாகவே இருந்தன. அவரது உடைவாள் கைவாக்கில் கழட்டி வைக்கப்பட்டிருந்தது.

குளிர்காற்றிற்கு பயந்து காதில் பஞ்சை அடைத்துக்கொள்ளும் பழக்கம் அவருக்குச் சிறுவயதிலிருந்தே இருந்தது. போர்க்களத்திலும் வெட்டவெளியில் பயணிக்கும்போதும் அதுதான் அவரது உடல் நிலையை காப்பாற்றியது. காதில் பஞ்சடைத்துக் கொண்டுவிட்டால் தண்ணீருக்குள் இருப்பது போன்ற உணர்வே ஏற்படுகிறது. சப்தங்களிலிருந்து துண்டித்துக்கொண்டுவிட்டால் போதும் மனது தானே தனிமையை உணரத் துவங்கிவிடுகிறது.

மாபெரும் ஹிந்துஸ்தானை ஆட்சி செய்யும் பாதுஷாவாக இருந்தாலும் உறக்கத்தின் முன் மண்டியிடத்தானே வேண்டியிருக்கிறது. நோயுற்ற நாட்களில் மரணம் தன்னை நெருங்கிக்கொண்டிருக்கிறது என்ற அச்சம் உருவாகத் துவங்கியது.

எண்பத்தியெட்டு வருஷங்கள் என்பது நீண்ட வாழ்க்கை, எத்தனைப் பகலிரவுகள். சலித்துப்போன சூரியன் சந்திரன். உண்பது உடுப்பது உறங்குவது யாவும் சலித்துப் போய்விட்டன.

இந்த உலகில் எதுவும் புதுசில்லை. சாவை எதிர்பார்த்துக் காத்திருந்த போர்முனையில் அது தன்னை நெருங்கவேயில்லை. அடிமையைப் போல அவரைக் கண்டு பயந்து ஓடியது. இளமையில் அவருக்குச் சாவு குறித்து பயமே ஏற்பட்டதில்லை.

ஆனால், வயதானதும் தன் சாவை அவர் ஒத்திகை பார்த்துக் கொள்ளத் துவங்கினார். தான் குரூரமாகக் கொல்லப்படக்கூடும் என்ற எண்ணமே கைது செய்து சிறைப்படுத்தி சித்ரவதை செய்து கொல்லப் அவருக்குள் ஆழமாகப் பதிந்து போயிருந்தது. தனது எண்ணிக்கையற்ற எதிரிகளில் எவரது கைவாள் தன் தலையைத் துண்டிக்கப்போகிறது, எந்த ரொட்டியில் தடவப்பட்ட விஷம் தனது உயிரைக் காவு வாங்கப்போகிறது, எந்தப் பெண் தன் குழந்தைகளில் ஒருவனை அரசனாக்க தன்னைக் கொல்லப் போகிறாள், எந்த மகன் தன்னைக் கொல்ல போகிறான். இந்த எண்ணங்கள் அவரைத் தீவிரமாக அலைக்கழித்தன.

ஆனாலும் அரசப் பதவியைத் துறக்கவோ, ஓய்வெடுக்கவோ அவர் விரும்பவேயில்லை. மன்னராகவேதான் இறக்க வேண்டும். ஒருவேளை பதவி போய்விட்டால் தான் மிகமோசமாக அவமானப்பட வேண்டியிருக்கும். இன்னமும் தான் செய்ய வேண்டிய பணி மீதமிருப்பதாகவே நினைத்துக்கொண்டார்.

ஒருவனை அல்லா மிக மோசமாக தண்டிக்கவிரும்பினால் அவனை தேசத்தின் பாதுஷாவாக அமர்த்தி வேடிக்கை பார்ப்பார் எனச் சொல்வர்கள். அரசபதவி என்பது ஒரு தண்டனை, வெளியே பகிர்ந்து கொள்ள முடியாத வலிகள் நிரம்பிய தண்டனை.

அதிகாரத்தை ருசிக்க விரும்புகிறவன் கடவுளையும் ஏமாற்றவே முயற்சிக்கிறான். அவன் மனக்குரல் கடவுளை சாந்திப்படுத்த என்ன செய்ய வேண்டும், கடவுளிடம் எப்படி மன்னிப்புக் கேட்க வேண்டும் எனக் கற்றுத் தருகிறது. ஆகவே கடவுளால் அனுமதிக்கபடாத குற்றங்களைச் செய்ய அவனை எந்த விசையும் தடுப்பதேயில்லை.

கடவுளிடம் கடைசியில் மன்னிப்புக் கேட்டுவிடலாம் எனச் சமாதானம் செய்து கொண்டுவிடுகிறான். அப்படித்தானே தானும் நடந்துகொண்டிருக்கிறேன்.

மனிதர்களில் பெரும்பான்மையினர் பலவீனமானவர்கள், அவர்கள் எதையும் சாதிக்க முடியாமல் போனதற்கு அவர்களின் தேவையற்ற குற்றவுணர்ச்சிகளும் தைரியமற்ற மனதுமே காரணம். ஒருவன் துணிந்துசெயல்பட ஆரம்பித்தால் எதையும் அடைந்துவிடலாம். குடும்பமும் உறவுகளும் நட்பும் வறுமையும் தான் தடைகளாக உருமாறுகின்றன. அவற்றைப் பொருட்படுத்தாதவன்தான் அதிகாரத்தின் உச்சநிலையை அடைகிறான்.

மயிலாசனத்தில் அமர்வது எளிதானதில்லை. ஒரு தேசத்தை ஆள்வது எளிதா என்ன? ஆயிரமாயிரம் சூழ்ச்சிகள், குழிபறிப்புகள், துரோகங்கள் அத்தனையும் கடந்துதான் ஆட்சி செய்ய வேண்டியிருக்கிறது. அதிகாரத்தைக் கைப்பற்றுவதைவிடக் கடினமானது அதிகாரத்தை நிலைநிறுத்தி வைத்திருப்பது. தனது செயல்களில் எந்தப் பக்கம் சாய்வு ஏற்பட்டாலும் வீழ்ச்சி நிச்சயம் என்பதே நிஜம்.

அதிகாரம் கற்றுத் தரும் முதல்பாடம் எவரையும் நம்பக்கூடாது என்பதுதானே. அதைத் தனது பத்து வயதிலே உணரத்துவங்கி விட்டிருந்தார். தான் என்ன நினைக்கிறோம், என்ன செய்யப்போகிறோம் என்பதை வெளிப்படையாகத் தெரிவிக்கும் ஒருவனால் ஒருபோதும் அரசனாக முடியாது.

குறைவாகப் பேசுகிறவனும் ரகசியமாகச் செயல்படுகிறவனும் கடந்தகால அவமானங்களை மறக்காதவனும் இரக்கமற்ற மனது உடையவனுமே அரசாட்சிக்கு உரியவன் ஆகிறான். சிம்மாசனத்தின் வரலாறு என்பதே அப்படித்தான். அதைக் கற்றுத் தேர்ந்திருந்த காரணத்தால் அவர் உணர்ச்சிவசப்பட்டதேயில்லை.

மக்கள் முன்பு கண்ணீர் விடுபவன் ஒருபோதும் அரசனாக முடியாது. சில வேளைகளில் தனது படுக்கையில் எதையோ நினைத்து அவரும் ரகசியமாக கண்ணீர் விட்டிருக்கிறார். தான் அழக்கூடும் என உலகம் ஒருபோதும் நினைத்ததில்லை, அப்படி ஒரு பிம்பத்தை அவராக உருவாக்கி வைத்திருந்தார்.

முதுமையில் காரணமில்லாமல் சில நேரம் அழுகை பீறிடுகிறது. அந்தக் கண்ணீரை அவர் துடைப்பதில்லை. கன்னத்தில் வழிந்தோடி நரைத்த தாடியைத் தொடட்டும் என விட்டுவிடுகிறார். தானே உலரும் அந்தக் கண்ணீர்தான் அவருக்கான தண்டனை.

முதுமை நிறைய விஷயங்களில் தன்னுடைய பல ஆண்டுக்காலப் பழக்கத்தை, மன இயல்பை மாற்றிவிட்டிருக்கிறது.

இளமையில் இப்படிக் கண்ணீர் சிந்தினால் அதை மறைத்துக்கொள்ள உடனடியாக யாரையாவது தண்டிப்பது வழக்கம். காரணமில்லாமல் எத்தனை மனிதர்களை கொன்றிருக்கிறோம். அதைப் பற்றி குற்றவுணர்ச்சி ஏற்பட்டதேயில்லை. இறந்தவர்களில் ஒருவர் முகம்கூட நினைவில் இல்லை. காலில் மணல் ஒட்டிக்கொண்டால்

உதறுவதில்லையா? மணலை நாம் கண்டுகொண்டா இருக்கிறோம். எளிய மனிதர்களின் சாவும் காலில் ஒட்டிக்கொண்ட மணல் போலத்தானே என நினைத்திருந்தார். ஆனால், காலம் அந்த மணல் கண்ணில் விழுந்த துகள் போன்று உறுத்திக்கொண்டேயிருக்கும் என்பதை உணர்த்திவிட்டது.

இன்றைய உறக்கமற்ற இரவிற்குகூட அதுபோன்ற ஒரு சம்பவம் காரணமாக இருந்தது.

அன்று அவர் படுக்கைக்கு மிகத் தாமதமாகவே வந்தார். அவரது அரசாட்சிக்கு எதிராக சத்கரை ஒட்டிய பகுதிகளிலும் கோல்கொண்டாவிலும் கிளர்ச்சி உருவாகிக்கொண்டிருந்தது. ஆயுதம் ஏந்திச் சண்டையிடுகிறார்கள். தனது படைப்பிரிவின் ஒரு பகுதி தோற்கடிக்கப் பட்டிருக்கிறது என்ற தகவல்கள் வந்து கொண்டிருந்தன.

தோல்வி என்பது பலவீனத்தின் அடையாளம். எதிரிகளுக்குக் கடுமையான தண்டனையும் பயமும் இல்லாவிட்டால் தேசம் வீழ்ந்துவிடும் என்பதால் எதிர்ப்பவர்களை ஒடுக்கி அழிப்பதோடு கொல்லப்பட்டவர்களின் நாக்கைத் துண்டித்துக் கொண்டுவரும்படி ஆணையிட்டிருந்தார்.

இருபதாயிரம் படைவீரர்கள் கலவரத்தை ஒடுக்கச் சென்றிருந்தார்கள். அந்த இரவில் வெற்றிச் செய்தி அவருக்கு வந்து சேர்ந்தது.

கூடவே ஒரு தங்கத் தாம்பாளத்தில் பட்டுத் துணி போர்த்திய பரிசும் அவர் முன் கொண்டுவந்து வைக்கப்பட்டது. அவர் பட்டுத்துணியை விலக்கிப் பார்த்தார். துண்டிக்கப்பட்ட நாக்குகள், ஒன்றிரண்டு அல்ல, ஆயிரம் நாக்குகள். உதிர்ந்த மாவிலைகள் போலக் கிடந்தன. அவர் அந்த நாக்குகளில் ஒன்றை கையில் எடுத்துப் பார்த்தார். துண்டிக்கப்பட்ட நாக்கைக் கொண்டு அது யாருடையது என அடையாளம் காணமுடியுமா? அதில் எது பெண் நாக்கு, எது ஆண் நாக்கு? ஒரு பேதமும் இல்லை.

வேட்டையின்போது, ஒருமுறை ஓநாயின் நாக்கைத் துண்டித்துக் கொண்டுவந்து அவருக்குக் காட்டினார்கள். உதிர்ந்த தாமரை இதழ் ஒன்றைப் போலவேயிருந்தது. நீளமான பிசுபிசுத்த நாக்கை அவர் கையில் தொட்டபோது லேசான உஷ்ணமாகயிருந்தது. வேட்டையாடுபவர்கள் ஓநாயின் நாக்கை மண்ணில் புதைத்து விடுவார்கள், இல்லாவிட்டால் தான் என்றாவது ஓநாயால் பழிவாங்கப் படுவோம் என்ற நம்பிக்கை கொண்டிருந்தார்கள்.

மனித நாக்கு ஓநாயை விடவும் சிறியது. ஆனால், அது எவ்வளவு பேசுகிறது. புரள்கிறது. சதி செய்கிறது என யோசித்தபடியே அவர் ஓநாயின் நாக்கை வேட்டையாளிடம் நீட்டினார். அவன் மண்ணில் புதைப்பதற்காக கொண்டுபோனான்.

நாக்கு வலிமையான ஆயுதம். அதைப் பயிற்சியில்லாமல் பயன்படுத்துபவர்கள் கொல்லப்படுகிறார்கள்.

அதிகாரத்திலிருப்பவனின் சந்தோஷமே தண்டனை தருவதுதான். தண்டனைதான் ஒருவனை முழுமையான மகிழ்ச்சி கொள்ள வைக்கிறது. தான் விரும்பும் எந்த தண்டனையும் நிறைவேற்ற முடிபவன் தானே சக்கரவர்த்தி.

கையிலிருந்த நாக்கினைத் தட்டில் போட்டுவிட்டு “இந்த நாக்குகளை மாலையாக்கிக் கோட்டையின் வெளியே தொங்கவிடுங்கள். நாளை என்னை எதிர்ப்பவர்களின் நாக்கும் இதுபோலத் துண்டிக்கப்படும் என்ற அச்சம் உருவாகட்டும்” எனக் கட்டளையிட்டார்.

தலையைத் துண்டித்துத் தொங்கவிடுவதை விடவும் நாக்கைத் துண்டித்துத் தொங்கவிடுவது பொதுமக்களிடம் அதிக அச்சத்தை உருவாக்கும் என்பதை அவர் அறிந்திருந்தார்.

அச்சத்தை உருவாக்குவதுதான் ஆள்பவனின் முதற்பணி.

சட்டங்கள் அதற்குத் துணை செய்கின்றன. எவன் நீதியைத் தனதாக்கிக்கொண்டு அதைத் தன்விருப்பத்தின்படியே செயல்பட வைக்கிறானோ அவனே அரசனாக முடிகிறது. நீதி என்பது எவ்வளவு எளிதான வழிமுறை. ஒருவனைக் காரணமில்லாமல் கொல்வதை விடவும் சட்டத்தின் வழியே குற்றவாளியாக்கிக் கொல்வது எத்தனை எளிதாகியிருக்கிறது.

அவர் சிறுவனாக இருந்தபோது ஆசிரியரான காசிம் கிலானி சொல்வார்,

“நீங்கள் மாமன்னர் ஆகும்போது மனிதர்களைக் கண்டு பயம் கொள்ள வேண்டியதில்லை. ஆனால், சட்டத்தைக் கண்டு பயம் கொள்ள வேண்டும். சட்டம் யாவருக்கும் சமம். அல்லாவின் விருப்பமே சட்டமாக நிச்சயம் உருக்கொண்டிருக்கிறது. சட்டத்தை எவன் ஒருவன் மீறுகிறானோ அவன் தன் வாழ்நாளில் தண்டிக்கப்பட்டு விடுவான்.’’

சட்டத்தின் முன்பு அனைவரும் சமம் என்பதை அவரால் ஒத்துக்கொள்ள முடியவில்லை.

“மாமன்னரும் எளிய விவசாயியும் எப்படி ஒன்றாகிவிட முடியும்? அப்படி ஒரு சட்டம் இருக்கிறது என்றால் அது மன்னருக்கு எதிரானதில்லையா” எனக் கேட்டிருக்கிறார்.

அதற்கு மீர் காசிம் கிலானி சொன்னார்,

“நீதியின் முன்பு மன்னர் விவசாயி என்ற பேதமில்லை. ஆயுதம் எப்படி ஆள் பார்க்காதோ அப்படித்தான் நீதியும். இதில் பேதமில்லை. சரி எப்போதும் சரி, தவறு எப்போதும் தவறுதான்.”

“மதம் ஒரு சட்டத்தையும், ஆட்சி அதிகாரம் ஒரு சட்டத்தையும்

கொண்டிருக்கிறதே. இதில் எந்தச் சட்டத்தை நான் ஏற்றுக்கொண்டு கடைப்பிடிக்க வேண்டும்” எனக்கேட்டீர் ஔரங்கசீப்.

“சந்தர்ப்பமே அதை முடிவு செய்கிறது.”

“இந்த இரண்டு சட்டங்களுக்குக் கட்டுப்படாமல் எனது விருப்பத் திற்கேற்ப சட்டங்களை உருவாக்கிக்கொண்டால் யார் தடுக்க முடியும்?”

“அப்படித்தான் இன்று வரை நடந்துவருகிறது. ஒருவன் நீதியை அவமதிக்கும்போது அதே நீதியால் பழிவாங்கப்படுகிறான். துர்மரணம் தான் அவனுக்கான தண்டனை.”

“நீங்கள் பயமுறுத்துகிறீர்கள்.”

“இல்லை உண்மையை எடுத்துச் சொல்கிறேன்.”

“நீதி என்றால் என்ன? அதை யார் யாருக்குத் தருவது? எதற்கு இத்தனை நீதி சாஸ்திரங்கள், விளக்கங்கள்?’’

மீர் காசிம் கிலானி சிரித்தபடியே சொன்னார்,

“இளவரசே, உங்களது கேள்வி முடிவில்லாத உரையாடலின் துவக்கம். என் காலம் முழுவதும் இதைத்தான் கேட்டுக்கொண்டேயிருக்கிறேன், மனிதன் இந்தப் பூமியில் தோன்றிய காலம் முதல் நீதி என்பதைப் பற்றிய கேள்வி இருந்துகொண்டேதானிருக்கிறது. முடிவான வரையறைகள் இல்லை. எல்லாம் தற்காலிகமான பதில்கள், தீர்வுகள்.”

“நீதியை வரையறை செய்யமுடியாதா?”

“முயன்றவர்கள் தோற்றுப்போயிருக்கிறார்கள், மனிதர்களால் உருவாக்கபட்ட நீதி காலதேசவர்த்தமனத்திற்கு ஏற்ப மாறிக் கொண்டேயிருக்கிறது. கடவுளின் நீதி நித்யமானது. அது மாறுவதேயில்லை. மனிதர்கள் வழங்கத் தவறுகிற நீதியை கடவுள் வழங்கிவிடுவார் என்பதே உண்மை.”

“அப்படி இதுவரை நடந்திருக்கிறதா’’ எனக் கேட்டார் ஔரங்கசீப்.

“நடந்திருக்கிறது. கடவுளை ஏமாற்றுகிறவன் தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்கிறான். அது அறியாமை என்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லை.”

ஔரங்கசீப் நீதி சாஸ்திரங்களையும் மதச்சட்டங்களையும் ஆழ்ந்து கற்றுக்கொண்டிருந்தார். அதை ஆழ்ந்து வாசிக்க வாசிக்க அவருக்கு ஒரு உண்மை புரிந்தது.

நீதியுணர்வு என்பது அழிக்கமுடியாத அறம். நீதியைப் பெறுவது எளிதானதில்லை. அதை அடைவதற்குக் காத்துக்கிடக்க வேண்டும். நீதியின் முன் அனைவரும் சமம் என்றால் அதற்கு முன்பாக மனிதர்கள் ஒருவருக்கொருவர் தான் சமம் என நினைக்க வேண்டும். அப்போதுதான் சமநீதி கிடைக்கும். மற்றபடி அரசனாக இருப்பவன்

நீதியைக் கண்டு பயம் கொள்ளத் தேவையில்லை. அவன் தனக்கான நீதியைத் தானே வரையறைத்துக்கொள்கிறான். பொதுநீதி என்பது பொதுமக்களுக்கானது. அது அரசர்களைக் கட்டுப்படுத்துவதில்லை.

ஒருமுறை பிஜப்பூர் சுல்தானை வெல்வதற்குப் படை நடத்திப் போய்க்கொண்டிருந்தபோது முகாமிட்டிருந்த இடத்தில் அதிகாலை நேரத்தில் ஒரு கறுப்புநிறக் குதிரையைக் கண்டார். அது வெட்டவெளியில் தனியே அலைந்துகொண்டிருந்தது. சேணமிடப்பட்ட அந்தக் குதிரை ஒரு போர்வீரனின் குதிரை என்பது தெரிந்தது. அந்த வீரன் இறந்து போயிருக்கக்கூடும். குதிரை தனது எஜமானன் இல்லாமல் தனியே வெட்டவெளியில் சுற்றிக்கொண்டிருந்தது. அதைக் காணும்போது, நீதியும் இது போன்று வெட்டவெளியில் தனியே சுற்றியலையும் குதிரைதான். அதைக் கொண்டுசெலுத்த ஒருவன் வேண்டும். குதிரை வெறும் வாகனம்தான். அதைச் செலுத்துபவன்தான் இலக்கை நிர்ணயிக்கிறான் எனத் தோன்றியது. அந்தக் குதிரையைப் பிடித்துவரும்படியாக தனது இரண்டு வீரர்களை அனுப்பி வைத்தார். அவர் நினைத்ததுபோல அதை வசப்படுத்துவது எளிதாக இல்லை. அந்தக் குதிரை தனது எஜமானனைத் தவிர வேறு எவரும் தன்மீது சவாரி செய்ய அனுமதிக்கவில்லை. முரட்டுத்தனத்துடன் திமிறி ஓடியது. தானே அதை அடக்கி சவாரி செய்வதற்காகச் சென்றார்.குதிரையின் அருகில் சென்றபோது அந்தக் குதிரை காயம் பட்டிருப்பதை அறிந்தார். எளிதாக இதை வசப்படுத்திவிடலாம் என அவர் சவுக்கை வாங்கி குதிரையை நோக்கி வீசினார்.

கண் இமைக்கும் நேரத்தில் குதிரை தாவி ஓடியது. சவுக்கடி படவில்லை. ஆத்திரமாகி அவர் குதிரையை வசப்படுத்தப் போராடினார். படைப்பிரிவே அதை வேடிக்கை பார்த்தது. அந்தக் குதிரையை அடக்கித் தனதாக்கிக்கொள்ளாவிட்டால் அவமானம் எனத் தோன்றியது. தாவி குதிரை மீது அமர்ந்தார். குதிரை தறி கெட்டு ஓடியது. அவரது கால்கள் குதிரையை இறுக்கப் பற்றிக்கொண்டிருந்தன. அப்படியும் அவரால் குதிரையைச் சீராகச் செலுத்த முடியவில்லை. குதிரை தனது முன்கால்களைத் தூக்கி அவரைக் கீழே வீசி எறிந்தது, மண்ணில் விழுந்து கைகால்களில் சிராய்ப்பு ஏற்பட்ட அவர் ஒரு குத்தீட்டியை வாங்கி அந்தக் குதிரையை நோக்கி எறிந்தார். அடி வயிற்றில் குத்தி ரத்தம் பீறிட குதிரை துள்ளி விழுந்தது. குதிரையின் அருகில் போய் தனது உடைவாளை உருவி அதன் தலையைத் துண்டித்தார். அப்படியும் ஆத்திரம் அடங்கவில்லை. அதன் கால்களை வெட்டி எறிந்தார். வலியோடு துடிக்கும் குதிரையின் கண்களைப் பார்த்துக்கொண்டிருந்தார். அப்படியும் மனம் சாந்தி கொள்ளவில்லை. ஆழமாக அதன் கண்களை நோக்கித் தனது கத்தியைச் செலுத்தினார். குதிரையின் மரணத்திற்குப் பிறகும் அதே இடத்தில் நின்றுகொண்டேயிருந்தார்.

திடீரென மனதில் தோன்றியது. நீதியும் இப்படிப்பட்டதுதான். அதை அடக்கி ஆள முடியாதபோது அதை பலி கொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை. தான் இந்நாள் வரை நீதியை பலி கொடுத்துதான் முன்னேறியிருக்கிறோம் எனத் தோன்றியது.

தனது முகாமிற்குத் திரும்பிய அவர் அந்தக் குதிரையின் மூர்க்கத்தை ஒருபோதும் மறக்கவேயில்லை. தன்னால் அடக்கமுடியாதவற்றைக் கொன்றுவிடுவதே தீர்வு என்ற ஆழமான பாடம் அவர் மனதில் வேரூன்றிப் போயிருந்தது.

•••

படுக்கையில் கிடந்த அவரது பாதங்களில் குளிர்படியத் துவங்கியது. குழந்தையின் விரல்கள் காலைத் தடவி விடுவதுபோல குளிர்காற்று தடவியது. திடீரென மனதில் காஷ்மீருக்குப் போனபோது பனிமலையின் முன்பாக நின்ற காட்சி மனதில் தோன்றியது, அந்த நாளை அவரால் மறக்க முடியவில்லை. எத்தனை இதமான காற்று, பரந்து விரிந்த வெண்பனி. தான் ஒரு பறவையைப் போல அந்தப் பனிச் சிகரத்தின்மீது பறந்து போய்விட முடியாதா என ஏக்கமாக இருந்தது. வாழ்வில் தன்னை இழந்த நிமிடங்கள் மிகக்குறைவு. அந்த நிமிடங்களை ஒருபோதும் மறக்கமுடியாது.

அதிகாலை மூன்றரை மணிக்கு எழுந்துகொள்வது அவரது வழக்கம். அதற்கு இன்னும் ஒரு நாழிகை நேரமிருந்தது.

தொலைவிலிருந்து கோட்டைக்காவல் மணிச்சப்தம் கேட்டது.

உறக்கமில்லாமல் படுத்துக்கிடப்பதற்கு பதிலாக எழுந்து ஏதாவது செய்யலாம் எனத் தோன்றியது. எழுந்துகொண்டு விளக்கு வெளிச்சத்தைத் தனது படுக்கையின் அருகில் கொண்டுவந்து வைத்தபடியே அவர் தனது கடைசி உயிலை எழுதத் துவங்கினார்.

என்ன எழுதுவது, எதைப்பகிர்ந்து தருவது?

இந்த தேசம் தனது சொத்தா என்ன? ஆனால், அதைப் பகிர்ந்து தர வேண்டும் என்றுதான் பிள்ளைகள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஏகச்சக்கரவர்த்தி என்பது வெறும் நம்பிக்கை. இந்த பூமியில் எதுவும் தன்னுடையதில்லை, தன்னால் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சிலவற்றைத் தான் உரிமையாக்கியிருக்கிறோம் என்பதைத் தவிர வேறு எப்படி அது தனது சொந்தமாகும்.

இதே ஹிந்துஸ்தானத்தைத் தனது மூதாதையர்கள் ஆண்டார்கள், அவர்களிடமிருந்துதான் இந்த நிலத்தை உரிமையாக்கிக் கொண்டேன், அபகரித்துக்கொண்டேன் என்பதுதான் உண்மை. அப்படிப் பறித்துக் கொள்வதற்குத்தான் எத்தனை பலிகள். எவ்வளவு உயிரிழப்புகள். கண் கவசமிட்ட குதிரையைப் போல அரியணை தவிர வேறு எதுவும் கண்ணிற்குத் தெரியவில்லை. இன்று யோசிக்கும்போது ஒருவேளை

தான் அப்படி நடந்து கொள்ளாவிட்டால் இறந்து புல் முளைத்துப்போனவர்களில் தானும் ஒருவனாகியிருக்கக் கூடும், முராத் தன்னைக் கொன்றிருப்பான் அல்லது தாராவால் தான் கொல்லப்பட்டிருக்கக் கூடும். அப்படி இறந்துபோயிருந்தால் இத்தனை கசடுகளும் குற்றமும் தன்மீது கவிழ்ந்துபோயிருக்காது.

வாழ்க்கையை இப்படி ஒரு நள்ளிரவில் உறக்கமற்று அழுத்தும் மனதுடன் வெறுமையைச் சந்திக்க வேண்டியிருக்காது. உலகம் இவ்வளவுதான். இந்த உலகிற்குத் தேவை நீர்க்குமிழி போன்ற ஆசைகள். அவற்றைத் துரத்திக்கொண்டே அலைய வேண்டும். அது ஒரு இன்பம். பலருக்கும் அதுவே போதுமானதாக இருக்கிறது. தானும் அப்படி நீர்குமிழியைத் துரத்திப் போகத் துவங்கி மெல்ல அதன் வசமாகிப் போனவன்தானே.

அவருக்கு நன்றாக நினைவிருக்கிறது. தன் மரணம் எப்படி நிகழும் என்பதை அறிந்துகொள்வதற்காக ஒருமுறை இபின் முகைதீன் அந்த சூபி ஞானியை தரிசிக்கச் சென்றிருந்தார்.

தார் பாலைவனத்தின் முடிவற்ற மணல்வெளியில் நடந்த போது வாழ்நாளில் முதன்முறையாகச் செருப்பு அணியாமல் மணலில் நடக்க வேண்டியிருந்தது. மணல் சுடும் என்பது தெரியும். ஆனால், இவ்வளவு கொதிக்கும் என்பது அந்தப் பாலைமணலில் நடந்துபோன போதே உணர முடிந்தது.

நடக்க நடக்க உடல் வியர்த்துக் கொட்டியது. படைகள், காவல் வீரர்கள் எவரையும் பின்தொடர்ந்து வரக்கூடாது என உத்தரவிட்டிருந்தார். அவர்கள் மக்கான் என்ற இடத்தில் முகாமிட்டுக் காத்திருந்தார்கள். நீர்க்குடுவையைக்கூட கையில் எடுத்துச் செல்ல மறுத்துவிட்டார்.

நடக்க நடக்க கண்கள் பஞ்சடைத்துக்கொண்டு வருவது விசித்திரமான உணர்வாக இருந்தது. முகத்தில் வழியும் வியர்வையுடன், உக்கிர வெயிலின் கொதிப்பில் மணலில் நடந்துகொண்டிருந்தார்.

எதற்காக இப்படி சுடுமணலில் நடக்கிறோம் எனத் தனக்குத் தானே கேட்டுக்கொண்டார். சூபி ஞானியிடம் தனது மரணத்தைப் பற்றித் தெரிந்துகொண்டுவிட்டால் வாழ்க்கை ரசமற்றுப் போய்விடாதா. இல்லை, இறுதி நாளுக்காக நம்மைத் தயார்செய்துகொள்வது எளிதானதா?

அவருக்குப் புரியவில்லை. ஆனால், ஞானி முகைதீனிடம் மன்றாடி தனது எதிர்காலத்தை அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசை மனதில் விரமாகியிருந்தது. அதற்காகவே பாலைவனத்திற்கு வந்திருந்தார்.

மணலில் நடந்துகொண்டிருந்தபோது கானல் பெரும் நீர்ப்பரப்பென விரிந்திருந்தது. அவர் கானலின் விசித்திர உருவங்களை தனது பயண வழியில் பலமுறை கண்டிருக்கிறார்.

அப்போது கானலைக் கண்டு அவர் வியந்ததில்லை, சில நேரங்களில் எரிச்சல் அடைந்திருக்கிறார். ஆனால், இன்று கானலைக் காணும்போது தனது ஒட்டுமொத்த வாழ்வும் இந்தக் கானலைப் போன்றதே என்று தோன்றியது. கானல் நிஜம்போலத் தோன்றினாலும் மாயத்தோற்றம்தானே. கானலை அள்ளிப் பருக முடியுமா என்ன?

அவர் தலைகவிழ்ந்தபடியே ஞானி இபின் முகைதீனை நோக்கி நடந்துகொண்டிருந்தார். ஒவ்வொரு அடியும் வலியோடு எடுத்து வைக்க வேண்டியதாயிருந்தது.

ஒப்பற்ற சூபி ஞானியான இபின் முகைதீன் மணல்மேடுகளின் ஊடே ஒரு ஈச்சமரத்தின் அடியில் அமர்ந்திருந்தார்.

அவரது உலகம் அந்த ஒற்றை மரம்தான். சிறுநிழல் மட்டுமே அவரது துணை.

எவ்வளவு அற்புதமான வாழ்க்கை. ஒரு மனிதனுக்கு ஒரு மரத்தைத் தவிர வேறு என்ன உறுதுணை வேண்டியிருக்கிறது. இப்படி தானும் வாழ்ந்துவிட்டுப் போயிருக்கலாமே எனத் தோன்றியது.

அசைவற்ற அந்த ஈச்சமர நிழலில் முகைதீன் அமர்ந்திருந்தார். நிலவொளியில் அமர்ந்திருப்பதுபோல அத்தனை சாந்தம், அமைதி.

அந்த முகம் சிற்பத்தின் புன்னகை போல அழிவில்லாத அழகைக் கொண்டிருந்தது. மெலிந்த தோற்றம். தலையில் ஒரு சிவப்புத் துணியைக் கட்டியிருந்தார். அணிந்திருந்த மேலாடை ஆங்காங்கே கிழிந்து போயிருந்தது. கோரையாக நரைத்த தாடி. உலர்ந்த உதடுகள். ஆனால், ஒளிரும் கண்கள். சூரியனை விழுங்கிவிட்டது போன்ற ஒளிர்வு.

அவர் முன்னே மண்டியிட்டு ஔரங்கசீப் வணங்கினார். இபின் முகைதீன் அவரை ஆசி செய்தபடியே அருகில் வருமாறு அழைத்தார்.

ஔரங்கசீப் அருகில் சென்று அமர்ந்தார். முகைதீன் அவரை உற்று நோக்கியபடியே இருந்தார். அப்படி என்ன பார்க்கிறார் என ஔரங்கசீப்பிற்குப் புரியவில்லை. ஆனால், முகத்தில் எறும்பு ஊர்வது போன்ற கூச்சம் உருவானது.

அவரது உதடுகள் முணுமுணுத்தன.

“அப்துல் முஷாபர் மொகதீர் மொகமட் ஔரங்கசீப்.”

அதுதான் அவரது இயற்பெயர், இந்த உலகிற்குத்தான் ஆலம்கீர், பாதுஷா ஔரங்கசீப், ஆனால், தன்னை தந்தை அப்துல் என்றுதானே அழைத்தார். அந்தப் பெயரை ன் உச்சரித்தபோது ஔரங்கசீப்பிற்கு சிலிர்ப்பாக இருந்தது.

அவர் ஞானி முகைதீனின் கண்களை உற்று நோக்கியபடியே கேட்டார்.

“எனது மரணத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள வந்திருக்கிறேன்.”

அதைக்கேட்டதும் பரிகாசமான குரலில் முகைதீன் சொன்னார், மூச்சு அடங்கியதும் இறந்துவிடுவாய். இதில் தெரிந்துகொள்ள வேறு என்ன இருக்கிறது. மரணத்தைக்கண்டு எதற்காக பயப்பட வேண்டும்? அதைச் சந்தித்த பிறகு நீ இருக்கமாட்டாயே. சந்திக்கும் முன்பு நீ எவ்வளவு தயார் செய்துகொண்டாலும் பயனில்லைதானே?”

“இல்லை. நான் பிறரால் கொல்லப்படுவேனா எனத் தெரிந்துகொள்ள வேண்டும்.”

“நீ அப்படி நம்புகிறாயா?”

“ஆமாம், என் மரணம் இயல்பாக இருக்காது எனத் தோன்றுகிறது.”

“எப்படி நடந்தாலும் மரணம் ஒன்றுதானே. கவலைப்படுவதால் என்ன ஆகப்போகிறது?”

“துர்மரணத்தை நான் விரும்பவில்லை.”

“மரணம் எவர் விருப்பத்தின்படியும் நிறைவேறுவதில்லை.”

“ஆனால், அதை உங்களைப் போன்ற ஞானிகள் முன்னறியமுடியும்.’’

“அப்படி நீ நம்புகிறாய். நான் நம்பவில்லை.”

“உங்களால் காலநிலைகளை முன்கூட்டியே கணிக்க முடியும் என அறிவேன். என் கண்ணுக்குத் தெரியாத எதிர்காலம் ஒருவேளை உங்கள் கண்ணுக்குத் தெரியக்கூடும்.”

“என் கண்கள் பூமியைத்தான் நோக்குகின்றன. ஆகாயத்தை அல்ல.”

“ஆனால், ஆகாயத்தில் இருந்து வரும் உத்தரவுகளை நீங்கள் அறிவீர்கள்தானே.”

அவர் சிரித்தபடியே சொன்னார்,

“அறிந்த எல்லாவற்றையும் பகிர்ந்துகொள்ள முடியாது. அரசனாக நீ அதை நன்றாக உணர்ந்திருப்பாய்.”

“அரசனாக அல்ல. ஒரு எளியவனாக உங்கள் முன்பு மண்டியிட்டு நிற்கிறேன். எனக்காக நீங்கள் என் எதிர்காலத்தை அறிந்து சொல்லத் தான் வேண்டும்.”

“ஒரு மரத்தில் எந்த இலை பழுத்து எப்போது உதிரப்போகிறது என மரம் யோசிப்பதுமில்லை. வருந்துவதுமில்லை. அதன் வேலை புதிய இலைகளைத் துளிர்க்கவிடுவது மட்டுமே.”

“எனது வேதனைகளைப் பரிகாசம் செய்ய வேண்டாம்.”

“கண்ணீர்விடுவதால் மட்டும் வேதனை சரியாகிவிடுமா?”

“நான் யாசிப்பது உண்மையை.”

“உனக்கு அல்லாவின் கருணை எவ்வளவு நாட்களை வழங்கியிருக்கிறதோ அத்தனை நாட்கள் பூமியில் இருப்பாய். இது போதாதா?”

“அதை நான் அறிவேன். அல்லாவின் கருணை என்மீது படிந்த காரணத்தால்தான் நான் பேரரசனாக மாறினேன். என் கவலை சொந்தப்பிள்ளைகளால் நான் கொல்லப்படுவேனா என்பதுதான்.”

“அவர்கள் உன் உதிரமில்லையா?”

“அதிகாரத்தைக் கைப்பற்ற முயலும்போது தந்தை தனயன் என உறவுகள் கண்ணில் தெரிவதில்லை.”

“அது நீ கற்றுத்தந்த பாடம். உன் பிள்ளைகளும் நிச்சயம் அதைப் பின்பற்றுவார்கள்.”

“அவர்களை நான் கொன்றுவிட்டால்?”

“சாவு உன்னை வேறுவடிவில் நெருங்கும்.”

“நான் போரைக் கண்டு அஞ்சியதில்லை. ஆனால், பிள்ளைகளைக் கண்டு பயப்படுகிறேன்.’’

“தேவையற்ற பயம். உன் மரணம் எப்படி இருக்கும் என நான் அறிவேன்.”

“சொல்லுங்கள்.’’

“சொன்னால் என்ன தருவாய்.’’

“உங்களின் மனம் எதை நாடுகிறதோ அதை நிச்சயம் தருவேன்.”

“நீ இந்த ஹிந்துஸ்தானை நேசிக்கிறாயா?”

“ரொட்டியை நேசிப்பது போல நேசிக்கிறேன்.”

“சரியாகச் சொன்னாய். தேசம் என்பது மாபெரும் ரொட்டித்துண்டு தான். உன் ஹிந்துஸ்தானை நீயே வைத்துக்கொள். எனக்காக சிறுஉதவி ஒன்று செய்வாயா?”

“நிச்சயம் நிறைவேற்றுவேன்.”

“அதோ அந்த மணற்குன்றின் அருகில் ஒரு கிணறு இருக்கிறது. அந்தக் கிணற்றில் இருந்து உன் உள்ளங்கை நிறைய தண்ணீர் கொண்டுவந்து தர வேண்டும், அவ்வளவுதான் எனது ஆசை.”

“உள்ளங்கையளவு தண்ணீரா?” என வியப்போடு கேட்டார்.

“ஆமாம். அந்தக் கிணற்றை சொர்க்கத்தின் கண் என்கிறார்கள். அந்தத் தண்ணீரைக் குடிப்பது சொர்க்கத்தின் சுகத்தை அனுபவிப்பதாகும்.

அதைக் கொண்டுவந்து கொடு. உன் எதிர்காலத்தைப் பற்றிச் சொல்கிறேன்''

“நீங்கள் முதலில் என் எதிர்காலத்தைப் பற்றி சொல்லுங்கள்.”

“ஏன் அவசரப்படுகிறாய். ஒரு கை தண்ணீர் கொண்டுவந்து தருவது உனக்குப் பெரிய வேலையா?”

“அல்லாவின் மீது ஆணை. இந்தக் கைகளில் கிணற்று நீரைக் கொண்டுவந்து தருகிறேன்.”

“அது போதும். உன் வாக்கை நான் நம்புகிறேன்.”

“இப்போதே அதைக் கொண்டுவந்து தருகிறேன்'' என எழுந்தார் ஔரங்கசீப்.

“பொறு. அந்தக் கிணற்றில் இரவில் மட்டுமே தண்ணீர் ஊறும். இன்று இரவு முழுநிலவு நாள்.”

ஔரங்கசீப் அன்றிரவு வரை காத்திருக்க வேண்டுமா எனப் பொறுமையற்றவராக அமர்ந்திருந்தார். ஈச்சமரத்தின் இலைகள்கூட அசையவில்லை. எப்படி இந்த வெயிலில் அமர்ந்திருக்கிறார். ஏன் காற்றே இல்லை. எதற்காக இங்கு போய் அமர்ந்திருக்கிறார்.

ஞானி முகைதீனிடம் கேட்டார், “இந்த வெயில் உங்களை சுடவில்லையா?”

“வெயிலா, எங்கேயிருக்கிறது. இது அமிர்தம். சூரியன் என்பது வெளிச்சத்தின் மலர். உலகில் மிக அபூர்வமான இரண்டு மலர்கள் தான் பகலும் இரவும். வெயில் என்பது வான் பொழியும் அமிர்தம். என்றாவது வெயிலைக் கண்டு மரம், செடி, கொடிகள் புலம்பியிருக்கிறதா. இல்லை காட்டு விலங்கில் ஏதாவது ஒன்று வெயிலுக்கு பயந்து ஓடியிருக்கிறதா?”

“என்னால் வெயிலைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. உடம்பு எரிகிறது. கண்கள் கொதிக்கின்றன. நாக்கு உலர்ந்து விட்டது, கால்கள் சோர்ந்துவிட்டன. வெயில் ஈரக்கமற்றது.”

“வெயிலைக் கோவித்துக்கொள்ளாதே. அது உன் தாயைப் போன்றது. ஒரு அடி முன்னால் நகர்ந்து உட்கார்ந்து கொள். சரியாகிவிடும்.”

“சுட்டெரிக்கும் வெயிலில் ஒரு அடி முன்னால் அமர்ந்தால் என்னவாகிவிடப் போகிறது எனப்புரியாமல் அவர் ஒரு அடி முன்னால் நகர்ந்து உட்கார்ந்தார்.

வியப்பாக இருந்தது. உஷ்ணமேயில்லை. தண்ணீர்மீது அமர்ந்திருப்பதுபோலக் குளிர்ச்சியாக இருந்தது. என்ன விந்தையிது. அவர் தன் கையில் மண்ணை அள்ளிப் பார்த்தபோது ஈரமில்லை.

அவரால் வியப்பைத் தாங்கமுடியவில்லை.

“மண் குளிர்கிறது.”

“அது உன் அதிர்ஷடம்” என முகைதீன் சிரித்தார்.

அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது, ஒரு நரி மணல்மேட்டின் மீது நின்றபடியே ஊளையிட்டது. அதற்கு பதில் சொல்வதுபோல முகைதீனும் சப்தமிட்டார். அந்த நரி மேற்கு நோக்கி நடந்து போகத்துவங்கியது.

“இந்தப் பாலையில் எல்லா உயிர்களும் நண்பர்களே. இந்த நரி எனது பேச்சுத் துணைகளில் ஒன்று. இரவில் என்னோடு தானிருக்கும். சில வேளைகளில் ஓநாய்களும் வருவதுண்டு.”

“என்னால் உங்களைப் புரிந்துகொள்ள முடியவில்லை.”

“அது பெரிய விஷயமில்லை. உன்னை நீயே புரிந்துகொள்ளாமல் வாழ்ந்துவருகிறாய் அதுதான் பிரச்சனை'' எனச்சொல்லிச் சிரித்தார் முகைதீன்.

“எனது சரி தவறுகள் எவையென எனக்குத் தெரியும்.”

“நான் சரி தவறுகளைப் பற்றி சொல்லவில்லை.”

“எனது பலம் பலவீனம் பற்றியும் புரியும்.”

“அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை.”

“பின் எதில் தான் என்னை நான் புரிந்துகொள்ளவில்லை.”

“உன்னை ஒரு அரசனாக நீ நினைத்துக்கொண்டிருக்கிறாய், அதுதான் பெருந்தவறு, நீ ஒரு அரசனில்லை.”

“நான் அரசனில்லையா? இந்த தேசம் எனதில்லையா?”

“குழந்தைகள் அழும்போது அதை சமாதானப்படுத்த கையில் கிலுகிலுப்பை தருவார்கள். அது ஆட்டி ஆட்டி விளையாடும். அது அழுகையைக் கட்டுப்படுத்தச் செய்யும் ஏமாற்று. அதை அறியாமல் குழந்தை அரிய பொருள் கிடைத்துவிட்டது போல சந்தோஷப்படும். அரச பதவியும் அப்படிப்பட்டதுதான். உன் காலடியில் கிடக்கும் மணல் இங்கே எப்படி வந்து சேர்ந்தது? யாராவது இங்கே கொண்டு வந்து கொட்டி விட்டுப் போனார்களா? இந்த மணல் தன் விதியின் புதிர்ப்பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பயணத்தில் இன்று உன் காலடியில் கிடக்கிறது. நாளை உன் கண்ணிற்குள் விழக் கூடும். அடுத்த நாள் அது குதிரையின் பிடறியில் ஏறி வேறு தேசம் செல்லக்கூடும். முடிவில்லாத பயணம் மட்டுமே நிஜமானது. மற்ற யாவும் விதி, புதிர். ஏன் இப்படி நடக்கிறது என யாராலும் அறிய முடியாது. மனிதர்கள் தங்களின் பிறப்பு குறித்த புதிர்களை அறிய ஆர்வம் கொள்வதில்லை. ஆர்வம் கொள்பவன் ஒதுக்கி வாழ ஆரம்பித்துவிடுகிறான்.”

“நான் இந்த மணல் துகளில்லை. மகுடத்தில் ஒளிரும் வைரம். மணல்தான் வைரமாகிறது. ஆனால், எல்லா மணல்துகளும் வைரமாகி விடுவதில்லை’’

“வைரமான பிறகு அது தான் ஒரு மணல் துகள் என்பதை நினைவில் வைத்திருப்பதில்லைதானே” எனச் சொல்லிச் சிரித்தார் முகைதீன்.

“என் வாழ்க்கையை நான் விரும்பியபடியே அமைத்துக் கொண்டிருக்கிறேன், வெற்றியும் சந்தோஷங்களும் இன்பங்களும் இல்லாத வாழ்க்கைக்கு என்ன பயன்.”

“அது வெறும் சூதாட்டம்.”

“இந்த மனித வாழ்விற்கு என்னதான் மதிப்பு, அர்த்தம்?”

“இந்த ஒற்றை மணல்துகளுக்கு என்ன அர்த்தம், மதிப்பு இருக்கிறதோ அதுதான் இந்த உலகில் படைக்கப்பட்ட எல்லாவற்றிற்கும் ஒரு காரணமிருக்கிறது. அதைக் கண்டுகொள்வது எளிதானதில்லை.

ஆனால், ஒரு உயிர் அதன் காரணத்தைக் கண்டறிந்து கொண்டு செயல்படத் துவங்கும்போது நிறைவான வாழ்வை அடைகிறது. உண்மையில் அது ஒரு புதிர். அவிழ்க்க அவிழ்க்க முடிவில்லாத புதிர். காலம் காலமாக மனிதர்களை விடை தேடிக்கொண்டிருக்கும் புதிர்.”

“விடையில்லாத அந்தப் புதிரை ஏன் தேட வேண்டும்.”

“விடையில்லை என யார் சொன்னது. கடவுளின் கருணைதான் விடையை நமக்கு அளிக்கும். அந்தக் கருணைக்காகக் காத்திருப்பது தவறில்லை.”

“இது ஞானிகளின் வழி. நான் ஆசை அடங்காத மனிதன். வாழ்வில் எதை எல்லாம் அனுபவிக்க முடியுமோ, அதை அனுபவித்துவிட முயலும் அற்பமனிதன்.”

“எந்த ஒன்றிலாவது நீ முழுமையான அனுபவத்தை அடைந்திருக்கிறாயா?”

“இல்லை.”

“போரில், பெண்களில், உணவில், எதிலும் நீ முழுமையை அடைந்தவனில்லை. சாப்பிடத் தெரியாத குழந்தை விருந்தில் கிடைத்த எல்லா உணவையும் அள்ளி வாயிலிட்டுத் துப்புவது போன்றதுதான் உனது வாழ்க்கை. நீ எதையும் அனுபவித்து அறிந்திருக்கவில்லை.”

“அதை நான் உணர்ந்துகொண்டிருக்கிறேன். இன்று எதிலும் எனக்கு விருப்பமில்லை.”

“பொய். எதிலும் உன்னால் ஈடுபட முடியவில்லை. உன் உடல் வெறும் கருவி. அது உடைந்த வில்லைப் போலாவிட்டது. உன் மனதின் திணவுகளுக்கு உடல் ஈடு கொடுப்பதில்லை.”

“அப்படியில்லை மனதில் வேட்கைகள் அடங்கிவிட்டன.”

“அது நிஜம் என்றால் நீ உன் அரசப் பதவியை ஏன் சுமந்து கொண்டு அலைகிறாய்?”

“இதை எங்கே இறக்கி வைப்பது எனத் தெரியவில்லை. என் மகன்கள் மீது எனக்கு நம்பிக்கையில்லை.”

“நீ உதறித் தள்ளிய பொருளை யார் எடுத்துக்கொண்டால் உனக்கென்ன?”

“இந்தப் பொருளை அடைவதற்கு நான் எவ்வளவு சவால்களை சந்தித்திருக்கிறேன் வலிகளை ஏற்றிருக்கிறேன். எவ்வளவு உதிரம் சிந்தியிருக்கிறேன்.”

“உனது நிழல்போல ஒருவன் அரசாள வேண்டும் என நினைக்கிறாயா?”

“உண்மை. எனக்கு அடுத்து ஆட்சிக்கு வருபவன் எனது நிழலைப் போலத்தானிருக்க வேண்டும்.”

“அது ஒருபோதும் நடக்காது. ஹிந்துஸ்தானத்தின் விதி எழுதப் பட்டுவிட்டது. அது பெருவீழ்ச்சியின் சுழலில் சிக்கிக் கொண்டுவிட்டது. இனி வரும் ஆண்டுகள் மோசமானவை. இந்த தேசம் வணிகர்களால் ஆளப்படப்போகிறது. தேசத்தைத் திறந்தவெளிச் சந்தையாக்கப் போகிறார்கள். அடிமைகளின் தேசமாக உருமாறப்போகிறது. கலைகளும் பண்பாடும் நம்பிக்கைகளும் அழியப்போகின்றன.”

“அந்த பயம் எனக்கும் இருக்கிறது. ஆனால், அதை நான் அனுமதிக்க மாட்டேன். வாளின் கூர்மை இருக்கும் வரை தேசம் எவருக்கும் அடிபணியாது.”

“அது உண்மையில்லை. இந்த தேசத்தை உன்னாலோ, உன் வாரிசுகளாலோ காப்பாற்ற முடியாது. காற்றில் அடித்துச் செல்லப்படும் மணல் போல உன் வாரிசுகள் அடித்துச் செல்லப் படுவார்கள். அரண்மனைகள், அரியணைகள், கோட்டை கொத்தளங்கள் யாவும் மண்மூடிப்போகும். சவமேடுகள் மட்டுமே மிச்சமிருக்கும். கடல்தாண்டி வருபவர்கள் இதை ஆளப்போகிறார்கள். செந்நிறத் தலையும் வெள்ளை உடலும் கொண்ட அவர்கள் ஹிந்துஸ்தானத்தைக் கொள்ளையிடப் போகிறார்கள். அதை யாராலும் தடுக்க இயலாது.”

“என் உயிர் உள்ளவரை அதை அனுமதிக்க மாட்டேன்.”

“அவர்கள் இந்த மண்ணை ஆளத்துவங்கும் போது நீயும் நானும் இருக்க மாட்டோம்.”

“எதிர்காலத்தைத் தடுத்து நிறுத்த யாரால் முடியும். எனக்கு ஒரேயொரு சந்தேகம். காலம் என்னைத் தன் நினைவில் வைத்திருக்குமா?”

“வெறுப்பின் வடிவமாக உன்னை நினைவில் வைத்திருக்கும். இருளும்

வெளிச்சமும் ஒன்று கலந்தவனாக நீ நினைவில் நிற்பாய்.”

அதன்பிறகு அவர்கள் பேசிக்கொள்ளவில்லை. பெருமூச்சுடன் ஔரங்கசீப் மணல்வெளியைப் பார்த்துக்கொண்டிருந்தார். மனம் துயரத்தில் ஆழ்ந்துபோயிருந்தது.

இரவு வந்தது. முடிவற்ற மணற்பரப்பில் நிலவொளி பரவத் துவங்கியது. நிலவொளியில் பாலைவனம் வெண்ணிறக் கடலென விரிந்திருந்தது. ஔரங்கசீப் மணற்குன்றை நோக்கி நடக்கத் துவங்கினார். நடக்க நடக்க அந்தக் குன்று தொலைவை நோக்கிச் சென்று கொண்டேயிருந்தது. என்ன மாயமிது, இதோ கண்எதிரே தெரியும் மணற்குன்றுகள் பின்சென்று கொண்டேயிருக்கிறதே.

அவர் கால்கள் சலிக்க நடந்துகொண்டேயிருந்தார். நிலவுவெளிச்சம் மாயத்திரை போல எங்கும் விரிந்திருந்தது. அவர் சோர்ந்து சலித்துப் போய்த் திரும்பிப் பார்த்தார். எந்த இடத்தில் நடக்கத் துவங்கினாரோ அங்கிருந்து சில அடிகள்தான் முன்னகர்ந்திருந்தார்.

இவ்வளவு நேரம் நடந்தது வெறும் கனவா-? தான் விழித்தபடியே கனவில் நுழைந்துவிட்டேனா. இல்லை இது மாயத்தின் இரவா?

மாயத்தின் இரவைப் பற்றி அவர் படித்திருக்கிறார். அந்த இரவில் எவை சாத்தியமில்லையோ அவை எல்லாம் இயல்பாக நடந்தேறும் என்பார்களே. அந்த இரவு இதுதானா?

அவர் வியப்போடு தலை திருப்பிப் பார்த்தார். ஞானி முகைதீன் தனது ஹுக்காவை உறிஞ்சிக்கொண்டிருந்தார். அந்தப் புகை காற்றில் சுழன்றுகொண்டிருந்தது. அவர் தன்னைப் பார்த்துப் பரிகாசம்செய்கிறாரோ என்றுகூடத் தோன்றியது.

களைத்துப்போன ஔரங்கசீப் குனிந்து மண்ணை முத்தமிட்டு வருந்தும் குரலில் சொன்னார்,

“கடந்து சென்ற தூரம் என்பது வெறும் கற்பனையே. என் வாழ்வில் நான் ஒரு தப்படி மட்டுமே முன்னேறியிருக்கிறேன். அது மட்டுமே உண்மை.”

அப்படிச் சொன்னபோது அவரது குரல் உண்மையான வருத்தமும் ஏக்கமும் கொண்டிருந்தது. அதைத் தொடர்ந்து மணலில் மண்டியிட்டு பிரார்த்தனை செய்தார். பின்பு எழுந்துகொண்டு நடந்தபோது அந்த மணற்குன்று பின்னகர்ந்து போகவில்லை. வேகமாக அதை எட்டிப்பிடித்தார்.

பெரிய மணற்குன்றின் சரிவில் அக்கிணறு இருந்தது, தடுப்புச் சுவர் இல்லாத கிணறு. அதில் தண்ணீர் இறைப்பதற்கு வாளியோ, கயிறுகளோ எதுவுமில்லை, அவர் குனிந்து கிணற்றின் உள்ளே எட்டிப் பார்த்தார், உள்ளே நிலவு மிதந்துகொண்டிருந்தது.

இந்தக் கிணற்றில் எப்படித் தண்ணீர் இறைப்பது எனப்புரியாமல் அவர் திகைத்தபோது ஒரு குரல் கேட்டது.

“கேட்பார் இல்லாத ஹிந்துஸ்தானைப் போன்றதில்லை இந்தக் கிணறு. இதற்கு காப்பாளன் இருக்கிறேன். என் அனுமதியில்லாமல் நீ கிணற்றை எட்டிப் பார்த்ததுகூடத் தவறு.”

அந்தக் குரல் எங்கிருந்து வருகிறது எனப் புரியாமல் அவர் திரும்பிப் பார்த்தபோது அது மணல்மேட்டிலிருந்து வருவது கேட்டது. அவர் மேடேறி குரல் வந்த திசை நோக்கிச் சென்ற போது வியப்பான காட்சி ஒன்றைக் கண்டார். ஒரு மனிதன் பாதி உடல் மணலில் புதைந்துபோயிருக்க, பாதி உடல் மேலே தெரியும்படி இருந்தான். நூறு வயதைக்கடந்தவன் போன்று சுருக்கம் விழுந்த முகம். அவனது குரல் உறுதியானதாயிருந்தது. அந்த மனிதன் ஏன் இப்படி பாதி பூமியில் புதையுண்டிருக்கிறான் எனப்புரியாமல் நீங்கள் யார் எனக் கேட்டார்.

அந்த மனிதன் உறுதியான குரலில் சொன்னான்,

“நான் ஒரு மனித விருட்சம். பாதி மண்ணுக்கு அடியிலும் பாதி மேலுமாக வாழ்கிறேன். இந்த வாழ்க்கையைப் பற்றி விளக்கிச் சொன்னால் புரியாது, அனுபவித்து வாழ்ந்தால் மட்டுமே புரியும். பூமியுடன் வேர்ப்பற்றுக் கொண்டு பார், சுகம் புரியும்.”

“உங்களால் மரங்களைப் போல பூக்கவும் காய்க்கவும் முடியுமோ’’ எனப் பரிகாசமாகக் கேட்டார் ஔரங்கசீப்.

“முடியும். என் நிசப்தம் மலரக்கூடியது. வாசனை அளிக்கக் கூடியது. சொற்களே எனது கனிகள்.”

“விசித்திரமாயிருக்கிறது. பாலைவனம் மர்மத்தின் வாழ்நிலமாயி ருக்கிறது. நான் ஞானி முகைதீனுக்குத் தண்ணீர் கொண்டுவந்து தருவதாக வாக்களித்திருக்கிறேன். இந்தக் கிணற்றில் வாளியும் கயிறுகளும் இல்லை.”

“தண்ணீர் இறைப்பதற்கு வாளியும் கயிறுகளும் எதற்கு’’ எனக் கேட்டான் அந்த மனிதன்.

“பின் எப்படித் தண்ணீரை இறைப்பது?”

“அது உன் பலவீனம், தண்ணீரைக் கையில் கொண்டுவர ஆயிரம் வழிகள் இருக்கின்றன.’’

“எனக்குத் தெரிந்த வழி இதுதான்.”

“இன்னொரு வழி இருக்கிறது. முயன்று பார். கிணற்றின் அருகில் செல். தண்ணீரை நோக்கிக் குனிந்து வணங்கு. பின்பு தண்ணீரே, தண்ணீரே உயர்ந்து வா, என அழை. தண்ணீர் உன் குரலுக்குச் செவி சாய்க்கும்.”

“நிஜமாகவா, தண்ணீர் கிணற்றின் மேலே உயர்ந்து வருமா?”

“அது உன் அன்பான அழைப்பைப் பொறுத்த விஷயம்.”

“நிச்சயம் முழு அன்போடு தண்ணீரை அழைக்கிறேன். ஒருவேளை தண்ணீர் வராவிட்டால்?”

“மறுபடியும் அழைத்துக்கொண்டிரு. இங்கே வாளி கயிறுகள் எதுவும் கிடையாது'' என்றபடியே அந்த மனிதர் தனது கண்களை மூடிக் கொண்டுவிட்டார்.

ஔரங்கசீப்பிற்கு என்ன செய்வது எனத் தெரியவில்லை, அவர் கிணற்றை நோக்கி நடந்தார். மாயத்திடம் தன்னை முழுமையாக ஒப்படைப்பதைத் தவிர வேறு ஒரு வழியுமில்லை.

அவர் கிணற்றின் முன் வணங்கி பிரார்த்தனை செய்தபடியே “தண்ணீரே, தண்ணீரே உயர்ந்து வா” என அழைத்தார்.

கிணற்றில் சலனமேயில்லை, தன் குரலை தண்ணீர் கேட்டிருக்காதா. அவர் மறுபடியும் உரத்த குரலில் அழைத்தார். அப்படியும் சலனமேயில்லை. ஆனால், அவர் முழுமனதுடன் இடைவிடாமல் அழைத்துக் கொண்டேயிருந்தார்.

திடீரென கிணற்றில் சரசரவென ஊர்ந்து வரும் சப்தம் கேட்டது. ஆச்சரியமாக இருந்தது. தண்ணீர் கிணற்றின் உச்சி வரை உயர்ந்திருந்தது. அவர் அல்லாவின் கருணைக்கு நன்றி தெரிவித்தபடியே தண்ணீரில் உள்ளங்கை அளவு அள்ளிக்கொண்டு ஞானி முகைதீனை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

நடக்க நடக்க கையிலிருந்த தண்ணீர் வடிய ஆரம்பித்தது, இரண்டு கைகளையும் ஒன்றாக இறுக்கிய போதும் தண்ணீர் கசிவதை நிறுத்த முடியவில்லை. ஞானி முகைதீன் முன்னால் அவர் கைகளை விரித்த போது அதில் ஒரு சொட்டுத் தண்ணீரில்லை.

முகைதீன் சிரித்தபடியே சொன்னார்,

“வெறும் கையாக உள்ளது, ஒரு துளித் தண்ணீரைக்கூடவா பாதுகாப்பாகக் கொண்டுவர முடியவில்லை?”

ஆத்திரமான ஔரங்கசீப் மறுபடியும் அதே கிணற்றடிக்கு ஓடினார். தண்ணீரை மன்றாடி அழைத்தார். கைகள் நிறைய அள்ளிக்கொண்டார்.

ஆனால், ஞானி முகைதீன் முன்னால் சென்றபோது கையில் ஒரு சொட்டு தங்கவில்லை. விடியும் வரை ஓடியோடி தண்ணீர் அள்ளி வந்து களைத்துப்போய் அவர் முன்னால் விழுந்த ஔரங்கசீப் சொன்னார்.

“ஒரு துளித் தண்ணீரைக்கூட என்னால் காப்பாற்ற முடியவில்லை.’’

“இதுதான் உன்விதி. இதுதான் உன் தேசத்தின் விதி.”

“ஏன் இப்படி ஆனது. என்ன தவறு செய்தேன்?”

“உன் கைகள் ரத்தக்கறை படிந்தவை. எந்தக் கரங்கள் தூய்மையானதாக, அடுத்தவரைத் தாங்கிப் பிடிப்பதாக, இருப்பதை அன்போடு பகிர்ந்து தருவதாக இருக்கிறதோ அக்கரங்களில்தான் தண்ணீர் தேங்கி நிற்கும். உன் கரங்கள் பேராசையின் கறை படிந்தது. அப்பாவிகளின் குருதிக்கறை படிந்தது. அதிகாரத்திற்காக ஆயிரமாயிரம் துரோகச்செயல்கள் செய்தது. இந்தக் கைகளால் ஒரு துளித் தண்ணீரைக் காப்பாற்ற முடியாது. உன் செயல்களே உனது இறுதியைத் தீர்மானிக்கின்றன.”

“இப்போதாவது சொல்லுங்கள் என் மரணம் எப்படியிருக்கும். நான் கொல்லப்பட்டுவிடுவேனா?”

“உன் மரணம் எவர் கைகளாலும் நிகழாது. ஆனால், நீ நோயில் அவதியுற்று இறந்து போவாய்.”

“இதுதான் எனது விதியா?”

“அப்படிதான் நடக்கும். உன் வாழ்க்கை ஒரு படிப்பினை.”

“யாருக்கு?”

“ஹிந்துஸ்தானத்திற்கு. அதன் ஆயிரமாயிரம் மக்களுக்கு.”

அதன்பிறகு ஞானி முகைதீன் ஒரு வார்த்தை பேசவில்லை. அன்று கேட்டு அறிந்துகொண்ட உண்மை இன்றைய இரவில் நினைவில் வந்து போனது. உயிலை எழுத மனம் குவியவேயில்லை. படுக்கைக்குத் திரும்பினார்.

•••

குளிர்காற்று அவர் கண்களை அழுத்தியது. யாரோ கைகளால் கண்களை அழுத்திப் பொத்துவது போலத் தெரிந்தது. தன்னை அறியாமல் அவர் உறக்கத்தில் அமிழ்ந்தார். அவரது கனவில் நீருற்றுகள் பொங்கி வழியத் துவங்கின. ஆச்சரியம் அந்த ஊற்றில் இருந்து தண்ணீருக்கு பதிலாக மணல் உயர்ந்து பொங்கி வழிந்து கொண்டிருந்தது. அதுதான் அவரது கடைசி இரவு என்பதை அவர் உணரத்துவங்கினார்.

பாதி விழிப்பு வந்து கண்ணைத் திறந்தார். இறந்துபோன சகோதரர் களும் பிள்ளைகளும் நண்பர்களும் மனைவியும் நினைவில் வந்து போனார்கள். எல்லா இலைகளையும் உதிர்த்துவிட்ட மரம் நான்.

முதுமை என்னை வென்றுவிட்டது. சக்தி என் உறுப்புகளை விட்டோடிவிட்டது. நான் தனியாகவே வந்தேன், தனியாகவே செல்கிறேன். நான் யார் என்றோ, இதுவரை நான் என்ன செய்துகொண்டிருந்தேன் என்றோ எனக்குப் புரியவில்லை. நோன்பில் கழித்த நேரங்களைத் தவிர மற்ற பொழுதுகளை நான் வீணடித்திருக்கிறேன். நான் நல்ல மனிதனில்லை. கடவுளின் கொடையான உயிர் இந்த தேகத்தில் குடியிருந்திருக்கிறது. அதன் மதிப்பை நான் உணரவேயில்லை. என் இருண்ட கண்கள் அடுத்தவர் துயரத்தை உணரவேயில்லை. இச்சையும் கோபமும் வெறுப்புமே என்னை ஆட்டுவைத்துள்ளன. நான் கோபத்தின் குழந்தை. ஆத்திரமே என்னை வழிகாட்டியிருக்கிறது. இறந்து மண்மூடிப் போன எத்தனையோ பேர் மண்ணுக்குள் புதைந்தபடியும் என்னை வெறுக்கிறார்கள். என் மீதான குற்றச்சாட்டுகளில் எதை நான் புறக்கணிக்க முடியும். ஆனால், இதில் எதுவும் காரணமற்றவை யில்லை. எனது புத்திமோசமே என் வாழ்க்கை.

யமுனை ஆற்றில் தீபங்களை மிதக்க விடுவதைக் கண்டிருக்கிறேன், அந்த தீபங்கள் காற்றின் கொடுங்கரம் தன்னை அணைத்துவிடப் போகிறதே என்ற அச்சத்தோடு ஆடிக்கொண்டிருக்கும். இன்று நானும் அப்படியே உணர்கிறேன்.

எனது பாவங்களுக்கு மீட்சியில்லை. கோதுமையைக் கண்ணில் காட்டி பார்லியை விற்பனை செய்யும் தந்திரக்கார வணிகனைப் போல நான் நடந்து கொண்டிருக்கிறேன்.

ஆயிரமாயிரம் வெற்றிகள் கற்றுத்தராத வாழ்க்கை குறித்த புரிதலை கடந்த சில நாட்களில் ஏற்பட்ட நோய் கற்றுத் தந்துவிட்டது. எனது மனம் இப்போது நடுங்குகிறது. இந்த வாழ்க்கையை ஏன் இப்படிக் கழித்தோம் எனக் குற்றவுணர்வு கொள்கிறது. ஆனால், இனிப் பயனில்லை, நான் தவறுகளின் பாதையில் நீண்ட தூரம் வந்துவிட்டேன். எனது குதிரை களைத்து விழுந்துவிட்டது. இனி

அதைக் கைவிடுவதைத் தவிர வேறுவழியில்லை.

சாவிலிருந்து என்னைக் காப்பாற்றுவதற்காக யானைகளை தானமாக வழங்கும்படி சொல்கிறார்கள். அதைவிடவும் பசித்த ஏழைகளுக்கு தானமிடுவதைச் சிறந்த வழியாக இப்போது கருதுகிறேன். நான் ஒரு மணல் துகள். அதற்கு மேல் ஒன்றுமில்லை என ஞானி முகைதீன் சொன்னது இன்றைக்கு முழுமையாகப் புரிகிறது. இந்த மண்ணாலான படைப்பை சீக்கிரமே மண்ணுக்குக் கொண்டுசென்று புதையுங்கள். சவப்பெட்டிகூட எனக்குத் தேவையில்லை.

பெற்றோர்களின் தவறு பிள்ளைகள் வழியே தொடரும். பால்யத்தில் பெற்றோரின் அன்பு கிடைக்காதவர்கள் அந்த ஏமாற்றத்தை வாழ்நாள் முழுவதும் அனுபவிப்பார்கள், தந்தையை வேதனைப்படுத்திக் கொல்பவன் அதே தண்டனைக்கு தானும் உள்ளாவான். நீதி தவறி நடந்துகொண்டதே எனது பாவங்களில் மன்னிக்கமுடியாதது.

நீதியின் பெருமதிப்பை நான் அறிந்துகொள்ளவேயில்லை. கசப்பையும் வலிகளையும் இன்னல்களையும் நான் மக்களுக்கு அளித்தேன், அவர்களும் அதே எனக்குப் பரிசாக அளித்தார்கள். தேங்கிக் கிடக்கும் தண்ணீர் கெட்டுப்போய்விடும் என்பதே எனது வாழ்க்கைப் பாடம். இடிந்த வீட்டிற்கு வர்ணம் பூசிக் காப்பாற்ற முடியாது என்பதை அறிந்துகொண்டுவிட்டேன், விடை பெறுகிறேன், விடை பெறுகிறேன், விடைபெறுகிறேன் என மனதிற்குள் மூன்று முறை தனக்குத் தானே சொல்லிக்கொண்டார்.

பிறகு பனிக்காலத்தின் விடிகாலையில் எழுந்து இதுவே தனது கடைசி நாள் எனச் சொல்லிக்கொண்டார். வெள்ளிக்கிழமை காலை துவங்கியிருந்தது. தனது வேலைகளில் சில பாக்கியுள்ளன என்பது போல அவர் மணியோசையை எழுப்பி உடனடியாக சில உத்தரவுகளைப் பிறப்பித்தார். உயிலை தானே எழுதி முத்திரையிட்டார். பின்பு எழுத்தரை வரவழைத்து எழுத வேண்டிய கடிதம் ஒன்றைச் சொல்லத் துவங்கினார். அஹமத் நகர் அரண்மனையில் காலை வெளிச்சம் பரவிக்கொண்டிருந்தது. பாதிக் கடிதத்தில், தன் மகள் என்றோ இறந்து போய்விட்டாள். அவளுக்கு எதற்காக இப்போது கடிதம் எழுதுகிறேன் எனத் தன்னைத்தானே வருந்தியபடியே அவர் அக்கடிதத்தை முடிக்காமல் கண்ணீர் விட்டார்.

தனது பணிகள் இப்போது முடிந்துவிட்டதை உணர்ந்தவரைப் போல மறுபடியும் படுக்கையில் படுத்துக்கொண்டபடியே உதடுகளில் கலிமா மந்திரத்தை உச்சரிக்கத் துவங்கினார். கைவிரல்கள் மாலையை உருட்டிக்கொண்டிருந்தன. சூரிய வெளிச்சம் வானில் ஒளிரத் துவங்கிய காலை எட்டுமணிக்கு அவரது இறுதி மூச்சு அடங்கியிருந்தது.

சாவு பேரரசனின் உடலைத் தனதாக்கிக்கொண்டிருந்தது. இப்போது அவர் வெறும் சடலம். அவரது மரணம் பெருந்துக்கமாக அறிவிக்கப்

படவில்லை. அரண்மனைக்குள் மட்டுமே ரகசிய செய்தியாகப் பரவியது. முஹமது ஆஜம் வரும் வரை அவரது உடல் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தது.

மறுநாள் தௌலதாபாத்திற்கு அருகிலுள்ள குல்தாபாத்தில் அவரது சடலம் மண்ணில் புதைக்கப்பட்டது. ஒரு நிமிடத்தில், ஒரு நொடியில், ஒரு மூச்சில் உலகமே மாறிவிடுகிறது என்ற அவரது கடைசி வார்த்தைகள் காற்றில் கரைந்து போயிருந்தன.

மண்ணில் புதையுண்டுபோனார் பேரரசர் ஔரங்கசீப். அரசனின் மரணம் வெறும் நிகழ்வில்லை. அது பல்வேறு திருப்புமுனைகளின் முதற்புள்ளி. அப்படித்தான் ஔரங்கசீப்பின் மரணமும் அமைந்திருந்தது.

சத்கரில் ஒருவன்

முகலாயப் பேரரசர் ஔரங்கசீப் இறந்துபோன இரண்டாம் நாள். சத்கரில் ஆட்டுத்தோல் பதப்படுத்துபவனும் ஒன்பது பிள்ளைகளின் தந்தையும் இடக்கைப் பழக்கம் கொண்டவனும் வறியவனுமான தூமகேது திருட்டுக் குற்றம் சுமத்திக் கைது செய்யப்பட்டான்.

அதே இரவில் ஔரங்கசீப்பின் அந்தப்புரப் பணியாளரும் அரவாணியும் மஹல்தாருமான அஜ்யா பேகம் அஹமது நகர் அரண்மனையில் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப் பட்டாள்.

மாமன்னரின் மரணத்திற்கும் இந்த இருவரின் கைதிற்கும் நேரடியாக ஒரு தொடர்புமில்லை என்றபோதும் அதிகாரத்தின் மாயக்கரங்கள் யாரை எப்போது குற்றவாளியாக்கிச் சிறைப் படுத்தும் என யார் அறிவார்?

தான் கைது செய்யப்பட்ட நாளில் இந்த வழக்கு முடிவேயில்லாமல் தொடரப்போகிறது என்றோ, இதற்காகத் தான் வாழ்நாள் முழுவதும் வருந்தி அலையப்போகிறேன் என்றோ தூமகேது அன்று அறிந்திருக்கவில்லை.

நீதிக்குக் காத்திருப்பது என்பது தனிநபரின் பிரச்சினை மட்டுமில்லை. தேசமும் தனக்கான நீதிக்காகக் காத்துக் கொண்டுதானிருக்கிறது. எவருக்கும் நீதி கிடைப்பது எளிதாக இல்லை. நீதியுணர்வு நெருப்பைப் போன்று பாரபட்சமற்றது என்பார்கள், ஆனால், நடைமுறையில் அது கானல் நீரைப் போல வெறும் மாயத்தோற்றமாக உள்ளது.

காலம் நீதிக்காக மனிதர்கள் வடிக்கும் கண்ணீரைப் பார்த்துக் கொண்டுதானிருக்கிறது. எத்தனை மனிதர்கள், எத்தனை விதமான வழக்குகள், நெடிய காத்திருப்புகள், விசாரணைகள், சாட்சியங்கள். ஆனாலும் மனிதர்கள் நம்பிக்கை இழப்பதேயில்லை.

நீதிக்காகக் காத்திருக்கும் ஒவ்வொரு மனிதனும் தனக்கான நீதி

கிடைத்துவிடும் என உறுதியாக நம்புகிறான். அந்த நம்பிக்கை கண் முன்னே பொய்த்துப்போகும் போதுகூட அவன் மனம் தளர்வதில்லை, இன்னொரு இடத்தில் தனக்கான நீதி கிடைக்கக்கூடும் எனத் தேடிச் செல்கிறான். பொருட்செலவு செய்கிறான். ஆண்டுக்கணக்கில் காத்திருக்கிறான். ஆனால், நீதியின் மீதான ஆழ்ந்த நம்பிக்கையை அவன் கைவிடுவதேயில்லை.

பிஷாட மன்னரின் ஆட்சியில் தீர்க்கப்படாத வழக்குகள்

பல்லாயிரத்துக்கும் மேலிருக்கும் என்கிறார்கள். அதில் தூமகேது, ஒரு துளி.

மரத்தின் கிளையில் சிக்கிக்கொண்ட பட்டம் காலத்தின் கைகளில் ஒப்புக்கொடுத்துக் கொண்டு பறக்கவும் முடியாமல் கீழே விழவும் வழியின்றித் தவித்துக்கொண்டிருப்பது போன்றதுதான் தூமகேதுவின் கதை.

ஆரம்பத்தில் தூமகேதுவின்மீது தொடுக்கப்பட்ட வழக்கு கள்ளத் தனமாக ஆட்டைத் திருடிவந்து அதன் தோலை உரித்து விற்றுவிட்டான் என்பது. ஆனால், அந்த வழக்கு காலப்போக்கில் வளர்ந்து ஆட்டைத் திருடும்போது தடுத்த மூன்று பேரை வெட்டிக் கொன்று விட்டான் என்றும், இந்தக் குற்றங்களை விசாரிக்கச் சென்ற காவலர் ஒருவரைக் கொலை செய்துவிட்டான் என்றும், கைது செய்யப்பட்டு காலா என்ற விசாரணைக் கூடத்தில் அடைக்கப்பட்டபோது அங்கேயிருந்த ஒரு பெண்ணை வன்புணர்ச்சி செய்தான் என்றும், இவ்வளவு ஏன், தன்னைக் கைது செய்ய ஆணையிட்ட பிஷாட மன்னருக்கு எதிராக சமையற்காரன் மூலம் உணவில் விஷம் வைத்துக் கொல்ல சதி செய்தான் எனவும் அடுக்கடுக்காக வளர்ந்து நின்றன.

அப்பாவிகளின் மீது குற்றங்களை ஏற்றிவிடுவது ஒன்றும் புதிய விஷயமில்லையே.

தூமகேது ஒரு துரதிருஷ்டசாலி.

ஆம் அப்படித்தான் அவனது குடும்பமும் உறவினர்களும் சொல்லிக் கொண்டார்கள். இல்லாவிட்டால் செய்யாத குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டிருப்பானா என்ன?

அதிர்ஷ்டத்திற்காகத்தான் நாம் காத்திருக்க வேண்டியுள்ளது. துரதிருஷ்டம் அப்படியில்லை. தானே நம்மைத் தேடிவந்து சேர்ந்துவிடுகிறது. அதிலும் குறிப்பாக ஏழைகளைத் தேடிவந்து புறந்தள்ளி வீழ்த்தி கெக்கலி செய்வதில் துரதிருஷ்டத்திற்கு அப்படி என்னதான் சந்தோஷமோ.

தூமகேதுவின் அம்மா அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பாள்,

“தூமா, ஒவ்வொரு மனிதனுக்கும் வழிகாட்டுவதற்காக அரூபமான

இரண்டு பறவைகள் உடனிருக்கின்றன. ஒன்று அவனது வலது தோளிலும், மற்றொன்று இடது தோளிலும் அமர்ந்திருக்கும்.

வலப்பக்கப் பறவை வரப்போகிற சந்தோஷங்களையும், இடப்பக்கப் பறவை வரப்போகிற கஷ்டத்தையும் சொல்லிக் கொண்டேயிருக்கும்.

மனிதர்களுக்கு எப்போதும் வலப்பக்கப் பறவையின் குரலைக் கேட்கத்தான் பிடித்திருந்தது. இடப்பக்கப் பறவை வரப்போகிற கஷ்டத்தை எடுத்துச் சொல்லும்போது ஒருவரும் காது கொடுத்துக் கேட்பதேயில்லை. அதனால்தான் உடலில் வலது பெறுகிற முக்கியத்துவம் இடது பெறுவதில்லை. இடக்கையும் இடக்காலும் அசுத்தமானவை, இடது கண் துடிப்பது மோசமானது. இடது காது வசைகள் கேட்கக்கூடியது எனப் பிரித்து வைத்திருக்கிறார்கள். உடம்பை ஏன் இப்படிப் பிரித்து வைத்திருக்கிறார்கள். இடக்கை என்பது வெறும் கையில்லை. நீயும் நானும் இந்த ராஜாங்கத்திற்கு இடக்கை போலதான். நம்மை கவனிக்க மாட்டார்கள். புறக்கணிப்பார்கள். கழிவுகளைச் சுத்தம் செய்யப் பயன்படுத்துவார்கள். நம் கதையை விடு. உடலில் பறவைகள் வழிகாட்டுவதாகச் சொன்னேன் இல்லையா. அந்தப் பறவைகள் வரப்போகிற சந்தோஷத்தையும் துயரத்தையும் ஒன்றுபோலத்தான் சொல்லிக்கொண்டிருக்கும்.

ஆனால், சந்தோஷங்களை வரவேற்கும் மனது கஷ்டங்களை எதிர்கொள்ள விரும்புவதில்லை. கஷ்டங்கள்தானே உடனிருப்பவர்களில் யார் நமக்கானவர், அன்பும் அக்கறையும் கொண்டவர் என்பதைக் காட்டிக் கொடுக்கின்றன. கஷ்டங்கள் தானே வருவதில்லை, நாம் என்றோ விதைத்தவை இன்று உருமாறித் திரும்பி வருகின்றன.

தூமா, நீ உன் இரண்டு தோளில் உள்ள பறவைகளின் குரலையும் உற்றுக் கேட்கப் பழகிக்கொள். அவற்றைப் புறக்கணிக்காதே. அவற்றைப் புறக்கணிக்கத் துவங்கிவிட்டால் அதன் குரலை நாம் கேட்கவே முடியாது."

தூமகேதுவின் அம்மா சொன்னது நிஜம். அவள் அரூபக்குரலைக் கேட்டுதான் வாழ்ந்து மடிந்தாள். ஆனால், தூமகேதுவிற்கு பறவைகளின் குரல் கேட்கவேயில்லை.

தூமகேது கஷ்டங்களுக்கும் துயரங்களுக்கும் நிறைய பழகியவன். அவன் ஒருபோதும் அழுதது கிடையாது. சில நேரம் தாங்க முடியாத கஷ்டம் வரும் போது பூமியை வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பான். இந்த பூமி எவ்வளவு அடிபட்டு மிதிபட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால், ஒரு நாளும் தனது வேதனைகளுக்காகப் புலம்பியதில்லை, பொங்கி அழுததில்லை என சமாதானம் சொல்லிக் கொண்டு விடுவான். சில நேரம் மண்ணை அள்ளி வாயில் போட்டுக்கொண்டு தனக்கும் அதே மனஉறுதி இருப்பதாக நம்பிக்கொள்வான். நம்பிக்கை இருக்கும்

வரை ஒருவனை கஷ்டம் என்ன செய்துவிடப்போகிறது.

கைது செய்யப்பட்டு அழைத்துப் போகப்பட்ட நாளில் தூமகேது பயந்து நம்பிக்கையற்றுப்போனான். அவனது மனஉறுதியும், தைரியமும் உடைந்த பானையிலிருந்து தண்ணீர் வெளியேறியது போல வடிந்து போய்விட்டது. குழப்பமும் பயமும் பற்றிக்கொண்டன.

இடதுதோளில் இருந்த பறவை இப்படி நடக்கும் என ஒருபோதும் தன்னை எச்சரிக்கவில்லையே என மனதிற்குள் கேட்டுக்கொண்டான்.

ஒருவேளை இரண்டு பறவைகளும் அவனைவிட்டுப் பறந்து போய்விட்டனவா.

வீரர்கள் அவனைக் கைது செய்ய வீட்டின் முன்வந்து நின்றபோது அவன் கிணற்றடியில் இருந்தான். கோழிக்குஞ்சு ஒன்று அவன் காலடியில் எதையோ கொத்திக்கொண்டிருந்தது. புழுதியில் தானியம் கிடைக்காதபோதும் அது பழக்கத்தால் மண்ணைக் கொத்திக் கொண்டிருந்தது.

தன்மீது ஏன் இப்படி அபாண்டமாகக் குற்றம் சொல்கிறார்கள் எனப் புரியவில்லை.

இதுதான் கடைசி நிமிடம். இனிமேல் இந்த வீட்டை சுற்றுப்புறத்தை, பிள்ளைகளைக் காணவே முடியாது. கலக்கத்துடன் அவன் தன் வீட்டை ஏறிட்டுப் பார்த்துக்கொண்டான்.

நளா இந்நேரம் எங்கே போய்த் தொலைந்தாள். கடைசியாக அவளை ஒருமுறை காணாமலே தனது வாழ்க்கை முடியப்போகிறதா?

ஒருவேளை அவள் இங்கேயிருந்தால் காவலர்களுடன் சண்டையிட்டிருப்பாள். அழுதுபுரண்டிருப்பாள். ஆனால், நளா எவர் வீட்டிலே மாவு திரிக்கப் போயிருக்கிறாளோ.

தூமகேதுவின் பிள்ளைகள் தெருவில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். மூத்தமகள் ஊர்மியின் வீட்டிற்குப் போய் அவளிடம் மட்டுமாவது சொல்லிவிட்டுக் கிளம்பலாமா என யோசித்தான், ஆனால், காவலர்கள் அனுமதிப்பார்களா எனத் தெரியவில்லை.

காவலர்கள் பயமுறுத்தும் குரலில் புறப்படு என மிரட்டிக் கொண்டிருந்தார்கள்.

தன் வீட்டின் நினைவாக எதையாவது ஒன்றைத் தன்னோடு எடுத்துக்கொண்டு போனால் பரவாயில்லை எனத் தோன்றியது. அவனது இளையமகள் விளையாடிச் சலித்துத் தூக்கி எறிந்த விரல் நீளமுள்ள மரப்பொம்மை ஒன்று அழுக்கேறி தண்ணீர்த் தொட்டியை ஒட்டி விழுந்து கிடந்தது. அந்தப் பெண் பொம்மையின் ஒரு கை உடைந்து போயிருந்தது.

பரவாயில்லை. அதைத் துணையாக எடுத்துக்கொள்வோம், பயம் தெரியாமல் இருக்கும் என அவன் புழுதியில் கிடந்த அந்த மரப்பொம்மையை எடுத்து வைத்துக்கொண்டான். காவலர்களில் ஒருவன் அது எதற்கு என்பது போல தூமகேதுவை முறைத்தான். ஆனால், பொம்மையைப் பறிக்கவில்லை.

தான் தனியாக இல்லை, தன்னோடு துணைக்கு ஒரு பெண் பொம்மை இருப்பது ஆறுதலாக இருந்தது.

காவலர்கள் கைப்பற்றிய ஆட்டுத்தோலுடன் அவனை அழைத்துக்கொண்டு கிளம்பியபோது தெருநாய் ஒன்று அவர்களைப் பார்த்துக் குரைத்தது. தூமகேது நன்றியோடு அந்த நாயைப் பார்த்தான். காவலர்கள் அவனை அழைத்துப் போவதை வேடிக்கை பார்த்தவர்களில் ஒருவர் கூட எதற்காக அவனை அழைத்துப் போகிறார்கள் எனக் கேட்கவேயில்லை.

எங்கே அழைத்துப் போகிறார்கள் எனத் தெரியாமல் தூமகேது தலைகவிழ்ந்தபடியே காவலர்களுடன் நடந்து போய்க் கொண்டிருந்தான்.

•••

தூமகேது வறியவன். அதிலும் சாமர் இனத்தைச் சேர்ந்தவன். தீண்டப்படாதவர்களாக ஒதுக்கி வைக்கப்பட்ட சாமர்களின் தொழில் செருப்பு தைப்பது மற்றும் தோல் பதப்படுத்துவது. கழிவுகளை சுத்தம் செய்வது. தூமகேதுவின் தாத்தாவின் காலத்தில் அவர்கள் சத்கரிலிருந்து எண்பது மைல் தொலைவில் உள்ள பர்பேலி கிராமத்தில் வசித்துக்கொண்டிருந்தார்கள். அரசாங்கம் அவர்களை கட்டாயமாக அழைத்துவந்து சத்கரில் குடியேற்றியது. காரணம் வணிகர்களின் வசிப்பிடமான சத்கரை சுத்தம் செய்வதற்கும் கழிவுகளை அகற்றுவதற்குமாகும்.

சாமர்கள் கடின உழைப்பாளிகள். சத்கரை அவர்களே அன்றாடம் துப்புரவு செய்தார்கள். கழிவுகளை சுத்தம் செய்தார்கள். குதிரை லாயங்களையும் மாட்டுத்தொழுவங்களையும் பராமரித்தார்கள். சாமர் இன ஆண்களைவிட பெண்களே அதிகம் வேலை வாங்கப்பட்டார்கள். ஆண்களில் பெரும்பான்மையினர் குடிப்பவர்கள். ஆகவே, அவர்களுக்கு நாட்டுச்சாராயத்தைக் கொடுத்து வேலை வாங்கி விடுவதை வணிகர்கள் வழக்கமாக வைத்திருந்தார்கள்.

சிலநேரம் சாமர்கள் அறுவடைக் காலத்தில் விவசாயப் பணிகளுக்குச் செல்வதுண்டு. இதற்கு தினக்கூலியாக இரண்டு சேர் தானியம் கிடைக்கும். சில இடங்களில் எச்சில் உணவோ அல்லது மாவுடன் உமி கலந்து சுட்ட வறட்டு ரொட்டியோ உணவாகத் தரப்படும். அதுபோன்ற ரொட்டிகள் இவர்களைப் போன்ற கூலிகளுக்காகவே தயாரிக்கப்படுவதாகும்.

வணிக வீடுகளில் மீதமான கோதுமை ரொட்டிகளை, பூரிகளைச் சேகரித்துக் கொண்டுவந்து வெயிலில் உலர வைத்து பாதுகாத்து வைத்துக்கொள்வார்கள். தேவைப்படும் நாளில் அதை நீரில் ஊற வைத்து உடைத்துச் சாப்பிடுவதும் உண்டு. யாராவது உடல் நலமற்றுப் போய்விட்டால் வைத்தியம் பார்ப்பது அபூர்வம்.
பேயோட்டிகளையோ, மந்திரம் செய்பவர்களையோ அழைத்து வந்து பூஜை வைத்து காணிக்கை தருவார்கள். மழைக்காலத்தில் அவர்களின் மண்வீடு ஓட்டை விழுந்துவிடும். அதை ஏறி அடைப்பதும் எளிதானதில்லை, சில நேரம் குழந்தைகளைக் கூரைகளில் ஏற்றிவிட்டு அடைப்பை சரிசெய்ய வைப்பார்கள். ஆனாலும் வீட்டுக்கூரை ஒழுகுவதை நிறுத்தமுடியாது. ஒவ்வொரு மழைக்காலத்தில் சில வீடுகள் முற்றிலும் இடிந்து விழுவது வழக்கமாகியிருந்தது. வெயில் வந்த பிறகு அவர்களே தங்களின் வீடுகளைக் கட்டிக்கொள்வார்கள். ரொட்டி சுடுவதற்கான மாவு, வெங்காயம், உப்பு, மிளகாய் இந்த நான்குதான் அவர்களின் சேமிப்புப் பொருட்கள். எப்போதாவது விசேஷ நாட்களில் பன்றிக்கறியும் ரொட்டியும் சேர்த்து சாப்பிடுவது உண்டு. அரிசியைச் சோறாக்கிச் சாப்பிடுவது அபூர்வமானது.

சாமர்கள் எல்லோரும் இடக்கைப் பழக்கம் கொண்டிருந்தார்கள். அது தற்செயலில்லை. மாறாக அவர்கள் வலதுகையைப் பயன்படுத்தக் கூடாது என தண்டிக்கப்பட்டிருந்தார்கள்.

விசித்திரம் என்றாலும் அப்படி ஒரு கதை அவர்களிடமிருந்தது.சாமர்களின் கடவுளான கோகாவிற்கும் சிவனுக்கும் ஒரு நாள் சண்டைவந்துவிட்டது. காரணம் கோகா தான் வேட்டையாடிய பன்றியை சிவன் ஒளித்துக்கொண்டுவிட்டதாகப் புகார் சொன்னான். பன்றியின் மீது பட்ட அம்பு தன்னுடையது என்பதால் அது தனக்கே சொந்தம் என சிவன் ஆத்திரப்பட்டார். அவர்களுக்குள் சண்டை நிகழ்ந்தது, இதில் கோகா தரையில் இருந்த ஒரு மரத்தைப் பிடுங்கி சிவனைத் தாக்கியதில் அவர் மயங்கிவிட்டார். கடவுள்கள் தலையிட்டு சண்டையை நிறுத்தியதோடு கோகாவிற்குப் பன்றியைக் கொடுத்து சமாதானம் செய்துவிட்டார்கள். கண்விழித்து ஆத்திரமான சிவன் கோகாவின் வலக்கரத்தைத் துண்டித்துவிட்டதோடு அவன் வம்சாவளியில் எவரும் வலக்கையைப் பயன்படுத்தக்கூடாது என்றும் சாபம் கொடுத்துவிட்டார். அதனால் இன்றைக்கும் அவர்கள் எவரும் வலக்கையைப் பயன்படுத்துவதில்லை. அத்துடன் கோகாவிற்குப் பன்றி ஊட்டு கொடுப்பதை வழக்கமாக்கி வைத்திருந்தார்கள்.

அதன் காரணமாகவே சாமர்கள் அத்தனை பேரும் இடக்கைப் பழக்கம் கொண்டவர்களாக இருந்தார்கள். யாராவது அறியாமல் வலதுகையைப் பயன்படுத்தும்போது வீட்டுப்பெரியவர்கள் கோபத்துடன் கண்டிப்பார்கள். கடவுள் தங்களை தண்டித்து விடுவார் என்ற பயம் அவர்களின் வலதுகையை முடக்கியிருந்தது.

சத்கர் மாநகரின் இடிந்த பழையகோட்டை மதிலை ஒட்டிய நகிலி என்ற சேரியினுள் சிறிய மண்வீட்டில் தூமகேது வாழ்ந்து கொண்டிருந்தான்.

தோல் விற்பனை செய்யும் காம்ரானுக்காக மாட்டுத் தோலையோ, ஆட்டுத்தோலையோ சுத்தம் செய்து பதப்படுத்தித் தருவதுதான் அவனது வேலை.

ஆட்டுத்தோலை சுத்தம் செய்வது எளிதானதில்லை. வீட்டின் பின்புறமிருந்த கிணற்றடியில் உட்கார்ந்து தோலைப் பதப்படுத்துவான். தோலைத் தண்ணீரில் ஊறவைத்தால் அதிலிருந்து ஒருவிதமான வாடை உருவாகும். அந்த வாடை நாய்களை ஈர்க்கக்கூடியது. ஆகவே, நாய்கள் ஊறவைத்த தோலைக் கவ்வி இழுத்துக்கொண்டு போய்விடும். அல்லது கிழித்துத் தின்றுவிடும். இதற்காகவே ஆவாரம் பட்டைகளை உரித்துத் துண்டுகளாக்கி தண்ணீரில் போட்டு ஆட்டுத்தோலை பல மணிநேரம் ஊற வைப்பான். இதனால் தோல் மிருதுவாவதுடன் சுவையும் மாறிவிடும்.

நாய்களுக்கு அந்த உவர்ப்புச் சுவை பிடிக்காது, ஆகவே தோலை நாடி வராது. அதுபோலவே உரித்தெடுத்த பின்னர் தோலின் உட்புறத்தில் சிறிது நிணம் ஒட்டிக்கொண்டிருக்கும். அதனால் தோல் அழுகிவிடாமலிருக்க உப்பைத் தூவி நன்றாகத் தேய்த்துச்சுருட்டி வைப்பான்.

இதற்காக ஒரு மண்கலயத்தில் எப்போதும் நாட்டுஉப்பு கொட்டி வைக்கப்பட்டிருக்கும். உப்பு கிடைப்பது எளிதில்லை என்பதால் அந்த உப்பை பொன்னைப் போலப் பாதுகாத்து வந்தான்.

நகிலியில் கதவில்லாத மண்வீடுகளே இருந்தன, சிலர் மரத்தடுப்பைக் கொண்டு வாசலை மூடியிருந்தார்கள். குளிர்காலத்தில் அது போன்ற மண்வீட்டில் குடியிருப்பது நரகவேதனை தரக்கூடியது, ஆனாலும் கதவு வைத்து வீடு கட்டிக்கொள்ள அனுமதிக்கப்படவில்லை. சேரிப்பெண்கள் தலையில் பூச்சூடிக்கொள்ளவோ, காதணி மூக்கணி அணிந்துகொள்ளவோ அனுமதியில்லை. தங்கத்தை அவர்கள் தொடக் கூட அனுமதியில்லை.

•••

ஐம்பது வயதைக் கடந்த தூமகேது ஐந்தரை அடிக்கும் குறைவான உயரமும், மெலிந்த உடலும் செம்பட்டை படிந்த தலையும், பூனையின் கண்கள் போன்ற கரும்பச்சை நிறக் கண்களும், அடர்ந்த தாடி கொண்ட முகமும் கொண்டிருந்தான்.

தூமகேதுவிற்கு பனிரெண்டு பிள்ளைகள். அதில் இரண்டு பேர் இறந்துபோய்விட்டார்கள். மீதமிருந்தது பத்துப் பேர். அதில் மூன்று மகள்களுக்கும் நான்கு மகன்களுக்கும் திருமணமாகிவிட்டது. இன்னும் மூன்று பையன்கள் அவனோடிருந்தார்கள். அவனது மூத்தமகள் ஊர்மி

தூமகேதுவின் வீட்டை ஒட்டியே ஒரு வீட்டில் குடியிருந்தாள். அவளது கணவன் பாரவண்டி ஓட்டிக் கொண்டிருந்தான்.

தூமகேதுவின் மனைவி நளா. வணிகர்களின் வீடுவீடாகப் போய் மலம் அள்ளுவாள். இதற்காக நார்க்கூடை ஒன்றை வைத்திருந்தாள், வணிகவீடுகளில் அமைக்கப்பட்ட கழிப்பறைகளை சுத்தம்செய்து கழிவுகளைத் தலைச்சுமையாகக் கொண்டுபோய் இடிந்த கோட்டையின் வெளிச்சுவருக்கு அப்பால் போட்டுவர வேண்டும். மதிய நேரம் மட்டுமே மலம் அள்ளும் வேலையிருக்கும். மற்ற பொழுதுகளில் அவள் குதிரை லாயங்களை சுத்தம் செய்யப் போய்விடுவாள். அதற்குக் கூலியாகக் கிடைத்த கோதுமை மட்டுமே பிள்ளைகளின் பசியை ஆற்றிக்கொண்டிருந்தது. அப்படியும் ஒன்பது வயிறுகளை நிரப்புவது எளிதாக இல்லை.

பலநாட்கள் பிள்ளைகள் சாப்பிட்டதுபோக அவளுக்கு உணவில்லாமல் போய்விடும். அப்போது மண்பானையில் இருக்கும் தண்ணீரை வயிறு நிறையக் குடித்துக்கொள்வாள். பசியில் உறக்கம் வராது, ஆனாலும் கண்களை இறுக்கிக்கொண்டு படுத்துக்கிடப்பாள். என்றைக்காவது ஒருநாள் வயிறுமுட்டும் அளவு விரும்பியதை எல்லாம் சாப்பிட வேண்டும் என்ற ஆசை அவளுக்குள்ளிருந்தது. ஆனால், அது சாத்தியப்படவேயில்லை.

சிலநாட்கள் தூமகேதுவிற்கும் சாப்பிட எதுவும் கிடைக்காமல் போய்விடும். அதுபோன்ற நேரங்களில் அவன் வாயில் உப்பை எடுத்துப் போட்டுக் கொள்வான். அது என்ன பழக்கம் என அவளுக்குப் புரியாது. ஆனால், நாக்கில் உப்பேறிவிட்டால் பசி மறைந்துபோய்விடும் என்பான் தூமகேது.

பசியை எத்தனை நாட்களுக்குத்தான் தாங்கிக்கொள்வது. எப்படியாவது ஒரு பசுமாட்டினை வாங்கிவிட்டால் போதும். அதை வைத்துக்கொண்டு பிழைத்துவிடலாம். ஆனால், ஒரு பசுவை வாங்குவது எளிதாக இல்லை. ஆத்திரத்தில் சிலமுறை அவள் “ஒரு பசுவைத் திருடிக் கொண்டுவந்துவிடு” என்றுகூட தூமகேதுவைத் திட்டியிருக்கிறாள்.

அப்போதெல்லாம் தூமகேது,“ஆத்திரப்படாதே, கடவுள் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவர் ஆசைப்பட்டால் மட்டுமே நமக்குப் பசு கிடைக்கும்” என்று சொல்வான்.

“கடவுளுக்குக் கண் தெரியாதா, இல்லை காது கேட்கவில்லையா. இல்லை அவரும் காசு உள்ளவர்களுக்கு மட்டும்தான் கண் திறந்து பார்ப்பாரா? ஒரு பசுமாட்டைப் பெறுவதற்குக்கூட நாம் தகுதியற்றவர்களா? உன் கடவுளுக்கு எத்தனை நாள் படையல் வைத்திருக்கிறேன், சாப்பிட்ட நன்றிக்கடன் கூடவா இல்லாமல் போய்விடும்’” என நளா திட்டுவாள்.

தூமகேது அவளின் கோபத்தைக் கட்டுப்படுத்தத் தெரியாமல்

சொல்வான்,

“வாயை மூடு, கடவுள் நம்மைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்.’’

நளா மேய்ச்சலுக்குச் செல்லும் பசுக்களைப் பார்க்கும் போதெல்லாம் இதில் ஒன்றை நாம் அடைந்துவிட மாட்டோமா என ஏங்கிக்கொண்டிருப்பாள்.

தூமகேது வீட்டின் வெளியே மண்தரையில் படுத்தபடி சில நாட்கள் வானில் ஒளிரும் நட்சத்திரங்களைப் பார்த்துக் கொண்டேயிருப்பான். வானத்தில் வசிப்பவர்கள் சமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்போது அடுப்பில் தெறிக்கும் நெருப்பு தான் நட்சத்திரமாக ஒளிர்கிறது என நினைத்துக் கொள்வான்.

உறக்கம் பிடிக்காத நாட்களில் கிணற்றடிக்குப் போய் துவைகல்லில் உட்கார்ந்துகொள்வான். அந்தக் குளிர்ச்சி இதமாயிருக்கும். சில நாட்கள் இருட்டிற்குள்ளாக அமர்ந்தபடியே ஆட்டுத்தோலை சுரண்டிக் கொண்டிருப்பான். அவ்வளவுதான் அவன் உலகம்.

திடீரென ஒருநாள் முன்பின் தெரியாத ஒருவன் மூன்று காவலர்களை அழைத்துக்கொண்டு தூமகேதுவின் வீட்டினைத் தேடி வந்திருந்தான். அப்போ தூமகேது கிணற்றடியில் ஆட்டுத்தோலை சுத்தம் செய்து கொண்டிருந்தான்.

காவலர்களை அழைத்துக்கொண்டு வந்தவன் கிணற்றடியில் ஊறிக்கிடந்த ஆட்டுத்தோலை வெறித்துப் பார்த்தபடியே சொன்னான்,

“இவன்தான் என் ஆடுகளைத் திருடியவன். இதோ பாருங்கள் எனது ஆட்டின் தோல்கள்.”

என்ன சொல்கிறான் எனப் புரியாமல் தூமகேது குழப்பத்துடன் கேட்டான்,

“நீங்கள் யார்?”

காவலர்களில் ஒருவன் அவனிடம் கேட்டான்,

“தேஜ்பூரைச் சேர்ந்த இந்த இடையன் தனது ஆடுகளை நீ திருடிவிட்டதாகக் கூறுகிறான். குற்றத்தை ஒப்புக்கொள்கிறாயா?”

“நான் திருடனில்லை. ஆட்டுத்தோல் சுத்தம் செய்பவன். இவரை நான் முன்பின் பார்த்ததே கிடையாது” என்றான் தூமகேது.

“பொய் சொல்லாதே. ஐந்து நாட்களுக்கு முன்பாக தேஜ்பூருக்கு வெளியே கிடை அமர்த்தியிருந்தபோது, நீ வந்து ஆடுகளைத் திருடிப் போகவில்லை? இந்த இரண்டு கண்களால் உன்னைப் பார்த்தேன். நீயேதான். இருட்டில் ஓநாயைப்போல ஒளிந்து கொண்டுவந்து என் ஆட்டைக் கவ்விக்கொண்டு போனவன் நீயேதான்.”

“இல்லை எஜமான். நான் சத்கரைத் தாண்டி வெளியே போனதே

யில்லை. இவரது ஆடுகளைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது.''

"சுத்தப்பொய். இவனும் இவனது கூட்டாளியும் ஆடு திருடுவதில் கில்லாடிகள். தேஜ்பூரைச் சுற்றிலும் மட்டும் நூற்றுக்கணக்கான ஆடுகளைத் திருடியிருக்கிறார்கள். இதுவரை யாரும் இவர்களைக் கண்டுபிடிக்க முடிந்ததேயில்லை ஆனால், நான் இந்தக் கள்ளன் ஆடு திருடும்போது நேரில் பார்த்தேன். இதே பூனைக்கண்கள். இவனேதான்.''

காவலர்களில் ஒருவன் மற்றவனிடம் சொன்னான்

"இவனிடம் ஆட்டுத்தோல் இருக்கிறது. இதைவிட திருடியதற்கு வேறு என்ன சாட்சியம் வேண்டும். நிச்சயம் இவன் திருடியிருக்கக் கூடும்.''

"இல்லை. நான் திருடவில்லை இது காம்ரான் கொடுத்த தோல்'' என மறுத்தான் தூமகேது.

இடையன் குனிந்து கிணற்றடியில் கிடந்த ஆட்டுத்தோலைக் கையில் எடுத்துப் பார்த்துவிட்டுச் சொன்னான்,

"இதோ பாருங்கள், எனது ஆடுகளுக்குச் சூட்டுக்கோலால் அடையாளம் போட்டிருக்கிறேன். அந்த அடையாளம் அப்படியே இருக்கிறது. இது திருடப்பட்ட ஆடேதான்."

"இந்தத் தோல் என்னுடையதில்லை. தோல்வியாபாரி கொடுத்தது. அவருக்கு இந்த ஆட்டுத்தோல்கள் எப்படிக் கிடைத்தன என எனக்குத் தெரியாது. நான் நிரபராதி.''

"ஒரு பொய்யை மறைக்க நூறு பொய்கள் சொல்கிறான். இவன் திருடனேதான். இவனைக் கைது செய்து தண்டனை அளியுங்கள்'' என்றான் அந்த இடையன்.

அரண்மனைக் காவலர்கள் அதன்பிறகு யோசிக்கவேயில்லை.

அவர்கள் தூமகேதுவை நீதி விசாரணைக்காக அழைத்துப்போக முயன்றார்கள். தூமகேதுவிற்கு என்ன செய்வது எனப் புரியவில்லை, காவலர்களின் கால்களில் விழுந்து வணங்கியபடியே சொன்னான்,

"நான் திருடனில்லை. எனக்கு இந்தத் திருட்டைப் பற்றி ஒன்றும் தெரியாது. என்னை விட்டுவிடுங்கள்.''

அதைக்கேட்ட காவலர்களில் ஒருவன் அழுத்தமான குரலில் சொன்னான்,

"நீ சாமர்தானே. பிறகு எப்படி யோக்கியமாக இருப்பாய். திருட்டு உங்கள் குலத்தொழில் இல்லையா. எழுந்து நடடா நாயே.''

"நான் எந்தத் தவறையும் செய்யவில்லை. என்னை விட்டுவிடுங்கள். இவர் சொல்லுகிற ஆள் நானில்லை. அடையாளம் தெரியாமல் சொல்கிறார்'' என அவன் கெஞ்சிக்கொண்டிருந்தான்.

காவலர்கள் அவனது வேண்டுதலைக் கேட்கவேயில்லை.

இந்த உரையாடல்களைக் கேட்டபடியே வீட்டின் வாசலில் ஒரு கயிற்றுக்கட்டிலில் சுருண்டுகிடந்த தூமகேதுவின் வயதான தந்தை நடுங்கும் குரலில் சொன்னார்,

“தூமகேது, அரசாங்கத்துடன் வாதம் செய்யாதே. அரசை ஒரு போதும் எதிர்க்காதே. நீ குற்றமற்றவன் என்றால் உனக்கு நிச்சயம் நீதி கிடைக்கும். கடவுள் உனக்கு வழிகாட்டுவார்.’’

தூமகேதுவிற்கு என்ன செய்வது எனப் புரியவில்லை.

அவனைக் காவலர்கள் தரதரவென இழுத்துக்கொண்டு நடக்க ஆரம்பித்தார்கள். மாவு திரிப்பதற்காகச் சென்ற தூமகேதுவின் மனைவி நளா நடந்த நிகழ்வைப் பற்றி அறியவில்லை. அவள் மாலையில் வீடு திரும்பி வந்தபோது நடந்த விஷயத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு ஆற்றாமையில் மண்ணை வாரித் தூற்றி அரண்மனைக் காவலர்களை சாபமிட்டாள். தன் கணவன் திருடனில்லை என்று கூச்சலிட்டாள். ஆனால், மனதிற்குள் இனி தூமகேது திரும்பி வரமாட்டான். அவனைத் தான் பார்க்கவே முடியாது. பிள்ளைகளை வைத்துக்கொண்டு இனி எப்படிப் பிழைக்கப் போகிறோம் என பயமாக இருந்தது. வேகமாக வீட்டிற்குள் போய்ச் சுருண்டு படுத்துக் கொண்டாள். அவளை மீறி அழுகை விம்மி வழிந்துகொண்டிருந்தது.

அஜ்யா எனும் சேடி

வெளியே எரிந்து கொண்டிருந்த பந்த நெருப்பின் வெளிச்சம் சிறைக்குள் லேசாகக் கசிந்து வந்தது. ஆனால், மஹல்தார் அஜ்யா அந்த வெளிச்சத்தைக் காண விரும்பவில்லை. அவள் இருட்டிற்குள்ளாகவே அமர்ந்திருந்தாள்.

பெண்களுக்கு இருட்டு ஒன்றும் புதிதான விஷயமில்லையே.

எத்தனையோ இருண்ட இரவுகளில் இப்படி விழித்துக் கொண்டுதானே இருந்திருக்கிறோம். இருட்டு பழகிப்போயிருந்தது. தண்ணீருக்குள் நீந்துவது போல அவள் இருட்டிற்குள் கையை வீசிக்கொண்டிருந்தாள்.

பற்றிக்கொள்ள முடியாத இருள். ஈரத்துணியின் மணம் போல ஒரு வாடை. மனம்தான் அப்படி கற்பனை செய்துகொள்கிறதோ என்னவோ.

சிறைச்சாலைச் சுவர்களில் இருந்துதான் அந்த வாடை வருகிறதா. சிறையின் பின்னால் ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த நீர்மை சுவரில் ஏறியதால்தான் இந்த வாசனையா.

அஜ்யாவின் கால்கள் சூகைபிடித்துக்கொண்டது போல மரத்துப் போகத் துவங்கியிருந்தன. கால்களை உதறிக் கொண்டபடியே அவள் தனக்குத் தானே சொல்லிக்கொண்டாள்.

“பசிக்கிறது.”

ஆனால், நினைத்த நேரம் சிறையில் யார் உணவு தரப்போகிறார்கள். காவலாளிகளை அழைத்துக் கேட்கலாமா என நினைத்தாள்.

அவள் இப்போது கைதி. அதுவும் இறந்துபோன பாதுஷா ஔரங்கசீப்பின் ரகசியங்கள் யாவும் அறிந்த கைதி. சாவை எதிர்நோக்கிக் காத்திருக்கும் கைதி. அவளுக்கு எப்படி உணவு தருவார்கள்.

மஹல்தார்கள்தான் அந்தப்புரத்தின் தலைமைப் பெண்கள், அதுவும் அவளைப் போன்ற அரவாணிகள்தான் ஆலம்கீரின் நம்பிக்கைக்கு உரியவர்களாக இருந்தார்கள், ஹபீசாதானே அவரது கால்களைப் பிடித்துவிடுபவள், எத்தனையோ முறை பேரரசர் தன்னோடு ஹபீசாவை ஒன்றாக உணவருந்தச் செய்திருக்கிறார். சகோதரி என அழைத்துப் பரிசளித்திருக்கிறார்.

உண்மையில் அஜ்யாவிற்கு ஔரங்கசீப் மாபெரும் ஹிந்துஸ்தானத்தின் பேரரசன் இல்லை, வயதானவர். ஒரு கிழவர். பிடிவாதமான கிழவர். அவ்வளவே. அவள் சில நேரங்களில் அவரை தனது மூத்த சகோதரனைப் போல நினைத்தாள். சில நேரங்களில் அவரை தனது தந்தையைப் போலக் கருதினாள். ஔரங்கசீப்பும் அப்படித்தான் அவளை நடத்தினார். உரிமையோடு அவருடன் பேச அனுமதித்திருந்தார்.

சில நேரம் அஜ்யா என்றும் சில நேரம் மகளே என்றும்தான் அழைத்தார். அதனால்தானோ என்னவோ அவரது உயிலில் கூட அவளைப் பற்றி மறக்காமல் எழுதியிருந்தார்.

“என் பணப்பை அஜ்யாவிடமுள்ளது. அதில் நான் தொப்பிகள் தைத்துக் கிடைத்த நான்கு ரூபாயும் இரண்டு அணாக்களும் உள்ளன. அந்தப் பணத்தில்தான் இறந்த என் உடலை மூடும் சவத்துணி வாங்கப்பட வேண்டும். இது எனது இறுதி விருப்பம். இது போலவே என்னுடைய கைகளால் பிரதி எடுக்கப்பட்ட குர் ஆனின் பிரதிகளை விற்று நான் முந்நூற்று ஐந்து ரூபாயைச் சன்மானமாகப் பெற்றுள்ளேன். அந்தப் பணமும் அஜ்யாவிடமுள்ளது. இந்தப் பணத்தில் ஏழை இஸ்லாமியர்களுக்கு உணவு வழங்கப்பட வேண்டும் என்பது என் விருப்பம்” என எழுதியிருந்தார்.

இந்த வாசகங்கள்தான் அவள் சிறைப்படுவதற்கான முக்கிய காரணங்கள். இளவரசன் முஹமத் ஆஜம் அவளை வெறுத்தான், ஒரு அடிமைப்பெண்ணிடம் தன் தந்தை வைத்திருந்த நம்பிக்கையைக் கூட மகனான தன் மீது வைத்திருக்கவில்லையே எனக் கோபம் அடைந்தான். அந்த உயிலைத் தான் ஏற்று நடக்க முடியாது என்றதோடு அவளையும் சிறையில் அடைக்க உத்தரவிட்டான், அதற்கு இன்னொரு முக்கிய காரணமிருந்தது. தனது தந்தை விலை மதிப்பில்லாத வைரங்களையும்

வைடூரியங்களையும் எங்கோ ஒளித்து வைத்துவிட்டிருக்கிறார். அந்த ரகசியங்கள் அஜ்யாவிற்கு மட்டுமே தெரியும் என்று ஆஜம் நம்பினான்.

அடித்து உதைத்து சித்ரவதை செய்து ரகசியங்களை அறிந்தவுடன் அவளைக் கொன்றுவிடும்படி ஆணையிட்டுதான் சிறையில் அடைத்திருந்தார்கள்.

அதை நினைக்கும்போது அஜ்யாவிற்கு சிரிப்பாக வந்தது. இல்லாத ஒன்றை எப்படி ரகசியம் என்பது. அதுவும் மாமன்னர் தனது பொக்கிஷ ரகசியங்களை தன்னைப் போன்ற மஹல்தாரிடமா சொல்லப்போகிறார். விதி தன் வாழ்க்கையை முடிக்க முடிவு செய்துவிட்டது. இனி மாற்று எப்படி இருக்க முடியும்?

தண்டனையை அறிந்தபிறகு சிறையில் இருப்பது ஒரு வித சுதந்திரம். சாவு நிச்சயக்கப்பட்டுவிட்டது, ஒரேயொரு புதிர் அது எப்போது தன்னைத் தேடி வரும் என்பது மட்டுமே. சிறை இருட்டில் கேட்கும் காலடி சப்தம் சாவின் காலடிகளாகக்கூட இருக்கலாம். வரட்டுமே. சாவு என்ன செய்துவிடப்போகிறது, வாழ்வின் துயரங்களை விடவா சாவு கொடுமையானது. எத்தனை அவமானங்கள், வலி வேதனைகளைக் கடந்து வந்துவிட்டோம். இனி என்ன நடந்துவிடப்போகிறது.

அஜ்யா பேகத்திற்கு வயது ஐம்பதைக் கடந்திருந்தது. பருத்த உடலும் அகலமான முகமும் குட்டையான கைகளும் கொண்டிருந்தாள். அவளது கண்கள் யானையின் கண்களைப் போல ஒடுங்கியிருந்தன. கழுத்தடியில் சதைகள் தொங்கிக் கொண்டிருந்தன. கறுப்பு அங்கி அணிந்தவளாக அவள் கற்படுக்கையில் உட்கார்ந்திருந்தாள்.

நிச்சயம் என்றாவது ஒரு நாள் தன்னைக் கைது செய்து சிறைப் படுத்துவார்கள் என அவள் முன்பே அறிந்திருந்தாள். மாமன்னரின் அந்தரங்கப் பணியாளராக இருப்பது சாவோடு தோழமை கொள்வது தானே.

சில நேரங்களில் தன்னை ஒளரங்கசீப்பே கொன்றுவிடக்கூடும் என்றும் அவள் பயந்திருக்கிறாள். ஆனால், தன்னைப் போன்ற அரவாணிகளிடம் ஒளரங்கசீப் ஒருபோதும் தன் கோபத்தை வெளிப்படுத்தியதில்லை, அபூர்வமாக சிலவேளைகளில் மன்னர் அழுவதைக் கூட அவள் கண்டிருக்கிறாள்.

அந்த அழுகையை அவளால் துடைக்கமுடியாது. ஆனால், தன் முன்னே அழுதுகொண்டிருப்பவர் ஹிந்துஸ்தானின் ஏகச்சக்கரவர்த்தி என்பது அவளுக்கு வேதனையாக இருக்கும். அதே நேரம் பாதுஷாவாக இருந்தாலும் மனக்கவலைகள் இல்லாமலா போய்விடும் என நினைத்துக்கொள்வாள்.

மாமன்னர்கள் அக்பரும் ஷாஜகானும் கவலையை மறக்க அபினை உட்கொண்டார்கள். பாதுஷா ஒளரங்கசீப் அப்படியில்லை, அவருக்கு

போதை வஸ்துகளில் ஈடுபாடில்லை. பெண்துணையும் விருப்பமில்லாமல் போய்விட்டது. தன்னைப் போலவே அவரும் முதுமையை விரும்பவில்லை. ஆனால், வயோதிகம் ஏற்படுத்தும் வலிகளையும் வேதனைகளையும் தாங்கிக்கொண்டு வாழத்தானே வேண்டும்.

முதுமையில் அரசனும் எளிய மனிதன்தானே. அஜ்யா சில நேரங்களில் ஔரங்கசீப் உறங்கும் வரை விசிறிக்கொண்டிருப்பாள். அல்லது கால்களை அமுக்கி விட்டுக்கொண்டிருப்பாள், மெலிந்த கால்கள். ஆனால், உறுதியானவை. இந்தக் கால்கள் எவ்வளவு தூரம் பயணித்திருக்கின்றன. எத்தனை பகலிரவுகள் குதிரையில் சென்றிருக்கின்றன. கால் பிடித்துவிடும் நிமிடங்களில் அவள் ஔரங்கசீப்பை ஒரு சிறுவனைப் போலவே நினைத்துக்கொள்வாள். பாவம் இந்தச் சிறுவன். எல்லோரையும் சந்தேகித்துப் பழகி எவருடனும் நெருக்கமற்றுப் போய்விட்டிருக்கிறான் என எண்ணிக்கொள்வாள்.

இப்படி யோசித்த மறுநிமிடமே தன் முன்னே உறங்கிக் கொண்டிருப்பது மன்னிக்கமுடியாத குற்றங்களைச் செய்த குற்றவாளி, கொலையாளி. இந்த தேசத்தின் மிகப்பெரிய குற்றவாளி என்றும் தோன்றும். எவ்வளவு கொலைகள், எத்தனை கொள்ளைகள். உறங்கும் போதுகூட இந்த முகத்தில் சாந்தம் படரவில்லை. சொந்தபிள்ளைகளால்கூட வெறுக்கப்படும் ஒருவன். இவனுக்குப் போய் ஏன் இப்படி சேவகம் செய்கிறோம் என்றும் தோன்றும். அந்த நிமிடங்களில் அவள் தனது கைகளை அவரது கால்களிலிருந்து விலக்கிக்கொள்வாள். ஆனால், அவள் கையை எடுத்த மறுநிமிடம் பாதுஷா விழித்துக்கொண்டு விடுவார்.

அந்தக் கண்கள் பாதி திறப்பதற்குள் அவள் மீண்டும் கால்களை அமுக்கிவிடத்துவங்குவாள், கண்கள் தானே சொருகிக் கொண்டுவிடும். பாதுஷா ஒரு போதும் அயர்ந்து உறங்குவதே யில்லை. அயர்ந்து உறங்காதவர்களின் ரத்தம் எப்போதும் கொதித்துக் கொண்டேதானிருக்கும் என்பார்கள், அது பாதுஷா விஷயத்தில் சரிதான். அவரது கோபமான சொற்கள் நடுங்க வைக்கின்றன. நிமிட நேரம்கூட அவர் யோசிப்பதேயில்லை.

மன்னர்களின் மனதில் ஆயிரமாயிரம் யோசனைகள் ஓடிக் கொண்டேயிருக்கும் என்பார்கள், நிஜம்தானே, ஒரு ராஜ்ஜியத்தை ஆள்வது எளிதா என்ன?

மன்னர்களின் வாழ்க்கையை மற்றவர்கள் கவனித்துக் கொள்வார்கள், எத்தனை வேலையாட்கள், வசதிகள். ஆனால், தன்னைப் போன்ற எளிய பெண்ணிற்கும் கால்வலிக்கத்தானே செய்கின்றன, அன்புடன் யார் கால்பிடித்துவிட இருக்கிறார்கள்.

அவள் பருத்த தனது உடலை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். இந்த உடல் தன் கட்டுப்பாட்டினை இழந்து தன்போக்கில் வளர்ந்து நிற்கிறது, பருத்த சுரக்குடுவை போலாகியிருக்கிறது. ஆனால், பத்துவயதில் அப்படியில்லை. எரியும் சுடரைப் போல திகுதிகுவென பொலிவோடு அழகோடு வேகத்துடன் இருந்தது. வீணையின் தந்திக் கம்பியைப் போல தன் உடல் முறுக்கேறி இருப்பதாக அந்த நாட்களில் உணர்ந்திருக்கிறாள்.

அந்தப்புர வாழ்க்கை அவள் உடலையும் மனதையும் ஒடுக்கிவிட்டிருந்தது. ஆறாவது குழந்தையாக அவள் பிறந்திருந்தாள். அவள்தானா, இல்லை அவனா. பால்ய வயதில் அவளாக தன்னை உணரவேயில்லை. அப்போது அவளுக்கு இந்தப் பெண் பெயர்கூட கிடையாது. ஆண். அதுவும் ஆக்ராவிலிருந்த வசதியற்ற ஒரு நெசவாளியின் வீட்டில் பிறந்த ஆறாவது ஆண். அப்போது அவனது பெயர் இம்ரான்.

ஒடிந்து விழுவதுபோன்ற உடலும் குழிவிழுந்த கண்களும் மென்குரலும் கொண்ட சிறுவன். அப்போது அணிந்திருந்த சிவப்பு நிறக் கால்சட்டையும், சொக்காயும் இன்றும் நினைவிலிருக்கிறது.

வீட்டின் வறுமை பெற்றோர்களை சொந்தக் குழந்தைகளைக்கூட வெறுக்க வைத்தது. சிறுவயதில் தாய் தகப்பனின் நேசம் கிடைக்காத பிள்ளைகள் தன் வாழ்நாள் முழுவதும் அதை நினைத்து நினைத்து ஏங்கிக்கொண்டுதானிருப்பார்கள், எத்தனை சந்தோஷங்களை தான் தேடிக்கொண்ட போதும் மனது கடந்தகால ஏக்கத்திலிருந்து விடுபடவே முடியாது. அஜ்யாவும் அப்படிதானிருந்தாள்.

ஆறேழு வயதுகளின் ஒரே நினைவாக மிஞ்சியிருப்பது பசி மட்டும்தான். ஏன் அந்த நாட்களில் தன்னால் பசியை அடக்கிக்கொள்ள முடியவில்லை. பசியைத் தாங்கிக்கொள்ள மனது பக்குவப் பட வேண்டும். சிறுவர்களுக்கு அந்த மனது எப்படி ஏற்படும். அதைவிடவும் ஏன் சாப்பாடு கிடைப்பதில்லை என்பது புதிராகவே இருக்கும்.

வறுமையைச் சந்திப்பது எளிது. புரிந்துகொள்வது சிக்கலானது.

அவளுக்கு வீட்டின் வறுமை பத்துவயதிற்குள் நன்றாகப் புரிந்து விட்டது. அந்த நாட்களில் தன் அம்மாவை நினைத்துதான் அதிகம் வருந்திருக்கிறாள்.

பாவம் அம்மா. ஒருபோதும் தன்னை அலங்கரித்துக் கொள்ளாதவள். வேலை, வேலை என சலித்து மயங்கி விழும் வரை வீட்டு வேலைகள் வெளிவேலைகள் என இழுத்துப் போட்டுக்கொள்வாள். அம்மா குளிப்பதேகூட கடமை என்பது போலதானிருக்கும். அவள் கூந்தலைப் பின்னிமுடித்து பூச்சூடிக் கண்டதேயில்லை. எதில்தான் அம்மாவிற்கு விருப்பமிருந்தது. அவள் சாப்பிடுவதேகூட கோழி தானியத்தைக்

கொத்துவதைப் போலதானிருக்கும். எந்த இன்பத்தையும் அனுபவிக்காமல் வாழும் வாழ்க்கைக்கு என்னதான் பயன். இத்தனை வேலைகளை இழுத்துப் போட்டுக்கொண்டு செய்தாலும் அப்பாவின் ஏச்சும் பேச்சும் கோபமும் அவளை விட்டு வைக்கவில்லை. சில நாட்கள் வேதனை தாங்க முடியாமல் அம்மா தனியே உட்கார்ந்து விக்கிவிக்கி அழுவாள். அழுதபடியே “இம்ரான், இம்ரான்” எனக் கூப்பிடுவாள்.

அருகில் போய் உட்கார்ந்து அம்மாவைப் பார்த்துக் கொண்டேயிருப்பான். அவள் கோபத்தில் “போ, போ” என அவனைத் துரத்திவிடுவாள்.

அப்படி ஒரு முறை துரத்தப்பட்ட போதுதான் பழைய குளத்தை ஒட்டியிருந்த கல்மண்டபத்திற்குப் போயிருந்தான். அந்த மண்டபத்தின் தூண்களில் நிறைய சிற்பங்கள் இருந்தன. அதில் பாதியை கையை உடைத்து தலையை உடைத்து சிதைத்திருந்தார்கள். கை உடைக்கப் பட்ட பெண்சிற்பம் ஒன்றை அப்போதுதான் இம்ரான் பார்த்தான். வலதுகையை உயர்த்தி தலையில் பூச்சூடுவது போன்ற ஒரு பெண்ணின் சிற்பமது. இடது கையை இடுப்பில் ஊன்றியிருக்கிறாள், அந்தக் கை உடைக்கப் பட்டிருந்தது. சற்றே நெளிந்து நிற்கின்றன கால்கள். சரிந்த இடை. இடுப்பில் மணி ஆரங்கள், நெகிழ்ந்து போயிருக்கிற உடை, பருத்த பெரிய மார்புகள். வலது பக்க ஸ்தனம் உயர்த்திய கையால் சற்றே சரிந்திருந்தது. கழுத்தில் தொங்கும் மாலைகள். ஒன்றில்லை. நான்கு மாலைகள் மார்பில் புரண்டுகிடந்தன. இடது ஸ்தனத்தைப் பாதி மூடுமளவு அந்த மாலைகள் விழுந்துகிடந்தன. வரிவரியான கூந்தல். அகன்ற காதுகள் கூர்மையான மூக்கு. அடிஉதடு பருத்துப் பெரியதாக இருந்தது, மேல்உதடுகள் அப்படியில்லை. பாதி மூடியது போன்ற கண்கள். மெல்லிய புருவங்கள். உற்றுப் பார்க்கும் போதுதான் அந்தப் பெண் சிற்பத்தின் முகத்தில் மெல்லிய புன்னகை மலர்ந்திருப்பது போல உணர முடிந்தது. தனக்குத் தானே எதையோ நினைத்து சிரித்துக் கொள்கிறாள். அப்படியான சிரிப்புதான் அது. அந்தச் சிற்பத்தை நெடுநேரம் பார்த்துக்கொண்டிருந்தான்.

கல்லில் எப்படி அவ்வளவு அழகான ஸ்தனங்களைச் செய்தார்கள் எனத் தெரியவில்லை. முலைக்காம்புகளின் வெடிப்புகூட துல்லியமாகச் செதுக்கப்பட்டிருந்தது. கல்மண்டபத்தில் ஆட்கள் எவருமில்லை. தனது சின்னஞ்சிறு கைகளால் அந்தச் சிற்பத்தின் வயிற்றை, மார்புகளை தடவத் துவங்கினான். கல்தான் என்றாலும் கைகள் கூசவே செய்தன. உறுதியான கல்ஸ்தனங்களைத் தடவும்போது அவனுக்கு சந்தோஷமாக வந்தது. மெதுவாகக் குனிந்து அந்த ஸ்தனங்களை முத்தமிட்டான். கல்லில் உதடுகள் படும்போது எச்சில் வழிந்தது. கல்லின் சுவை இப்படித் தானிருக்குமா. யாரோ வரும் காலடியோசை கேட்டது. அங்கிருந்து இறங்கி ஓடினான். ஆனால், அந்தச் சிலை அவனை

விடவில்லை.

மறுநாள் அதன் மறுநாள் என ஒவ்வொரு நாளும் தனது தனிமையின் தோழியாக அந்தச் சிலையைக் கண்டறிந்தான் இம்ரான். அதுபோன்ற ஒரு நாளில்தான் தனக்குள்ளிருந்த பெண்மையை அவன் அடையாளம் கண்டுகொண்டான். தான் ஆணில்லை. பெண். அதுவும் இந்த சிற்பத்தில் இருப்பது போன்று அழகும் பொலிவும் கொண்ட ஒரு பெண். வளர்ந்து நானும் இவளைப் போல உருவாவேன் என தனக்குத்தானே சொல்லிக்கொண்டான்.

அந்தப் பெண் சிற்பத்துடன் நெருக்கமான உறவை ஏற்படுத்திக் கொண்டபிறகு அதற்கு ராதா எனப் பெயரிட்டான். பின்பு வீட்டில் இருப்பதை விடவும் அதிக நேரம் ராதாவுடன் செலவிடத் துவங்கினான்.

ராதா யாருடைய மகள். தன் வயதில் அவள் என்ன செய்திருப்பாள். எதைச் சாப்பிட அவளுக்குப் பிடிக்கும். என்ன விளையாடுவாள். இப்படியாக நினைத்துக்கொண்டு அந்தச் சிற்பத்தைத் தொட்டும் தடவியும் கட்டிக்கொண்டும் உறவாடிக்கொண்டிருந்தான்.அவனுக்குள்ளிருந்த பெண்மையின் அரும்புகள் மலரத்துவங்கின. ஒருநாள் வீட்டில் இருந்த தங்கையின் உடையை எடுத்து அணிந்துகொண்டு வந்து அவன் ராதாவின் முன்பாகக் காட்டி நானும் உன்னைப் போல ஒரு பெண்தான் என்றான். ராதாவின் முகத்தில் இருந்த சிரிப்பு அதை ஆமோதிப்பது போலிருந்தது. கல்மண்டபத்திற்கு வந்த ஒரு ஆள் பாவாடை சட்டையுடன் சிற்பத்தைக் கட்டிக் கொண்ட இம்ரானை விநோதமாகப் பார்த்தபடியே,

“நீ யார்?” எனக் கேட்டான்.

என்ன சொல்வது எனப் புரியாமல் தன் பெயர் அஜ்யா எனச் சொன்னான் இம்ரான்.

“அஜ்யா நீ அழகாக இருக்கிறாய்” என்றான் அந்த ஆள்.

தன்னுடைய புதிய பெயரும் தான் அழகாக இருப்பதாகச் சொன்னதும் இம்ரானுக்குப் பிடித்திருந்தது. அன்று வீட்டிற்குப் போனபோது அம்மா அவன் தங்கையின் உடைகளை அணிந்ததைக் கண்டுபிடித்துவிட்டாள். நெருப்பில் கரண்டியைக் காயவைத்து அவன் காலில் சூடு போட்டுவிட்டாள்.

இம்ரான் வலியில் அலறினான்.

“இனிமேல் இப்படி பாவாடை சட்டை போடுவாயா” என அம்மா ரௌத்திரம் கொண்டவள்போல கத்தியபடியே கேட்டாள்.

“மாட்டேன், மாட்டேன்” என அழுதபடியே சொன்னான்.

அம்மாவிற்கு அப்படியும் ஆத்திரம் தணியவில்லை. இழுத்து வைத்து

மேலும் இரண்டு அடி போட்டாள்.

“எதுக்குடா பொம்பளைப் பிள்ளையாக ஆசைப்படுறே. நான் படுற அவஸ்தை போதாதா'' எனக் கேட்டபடியே அம்மா காரணமின்றி அழுதாள்.

ஏன் பெண் ஆடைகளை பையன்கள் அணியக்கூடாதா என இம்ரானுக்கு அழுகையாக வந்தது.

அதன்பிறகு அம்மாவை வெறுக்கத் துவங்கினான். தன்னைப் பெண்ணாக ஏன் அவள் பெறவில்லை என ஏங்கினான். அதன்பிறகு ரகசியமாக அவன் பெண் உடைகளை அணிந்து கொண்டு வெளியே சுற்றிவரத்துவங்கினான். குறிப்பாக சம்யுக்தா குளம் என்ற பெரிய குளத்தின் படிகளில் பாவாடை சட்டை அணிந்துகொண்டு விளையாடிக்கொண்டிருப்பான்.

ஒருநாள் பகலில் அப்படி அந்தப் படிக்கட்டில் சுற்றிக் கொண்டிருக்கும்போது தர்ஷனை சந்தித்தாள். தர்ஷனுக்கு அவளது வயது தானிருக்கும். ஆனால், ஆள் பெரிய பையன் போலிருந்தான். அவன் குளத்தில் உட்கார்ந்துகொண்டு கையிலிருந்த சர்க்கரையை கொஞ்சம் கொஞ்சமாக தண்ணீரில் தூவிக்கொண்டிருந்தான்.

“என்ன செய்கிறாய்'' எனக் கேட்டாள் அஜ்யா.

“சப்தம் போடாதே, தாத்தாவும் பாட்டியும் சக்கரை தின்று கொண்டிருக்கிறார்கள்” என்றான் தர்ஷன்.

“தாத்தாவும் பாட்டியுமா எங்கே?” எனக்கேட்டாள் அஜ்யா.

“உன் கண்ணுக்குத் தெரியவில்லையா. ஆமாம் எப்படி தெரியும். பெண்களின் கண்ணில் படாதே” என்றான் தர்ஷன்.

“நான் பெண்ணில்லை. ஆண்” என்றாள் அஜ்யா.

“யாரை ஏமாற்றப் பார்க்கிறாய். பாவாடை சட்டை அணிந்து தலையில் பூ வைத்துள்ள நீ ஆணா'' என ஏளனமாகக் கேட்டான் தர்ஷன்.

“ஆமாம், இப்படி ஆடை அணிந்துகொள்ள எனக்குப் பிடித்திருக்கிறது. என் பெயர் இம்ரான்.”

“நான் நம்பமாட்டேன். நீ பெண்ணேதான்.''

அவன் தன்னைப் பெண் என நம்புவது ஒரு பக்கம் சந்தோஷமாக இருந்தது. ஆனால், தாத்தாவும் பாட்டியும் இருப்பதாகச் சொன்னானே. அதைத் தெரிந்துகொள்ள ஆணாக சில நிமிடம் இருந்துவிட்டால் என்ன தவறு என்றும் தோன்றியது.

தர்ஷன் சிரித்தபடியே கேட்டான்,

“உனக்கு பசங்களைப் பிடிக்குமா?”

“இல்லை.’’

“அப்போ உன்னால இந்தத் தாத்தா பாட்டிய பாக்கவே முடியாது. நிக்காதே ஓடிப்போயிரு’’ என மிரட்டினான்.

“போக மாட்டேன். இந்தத் தாத்தா பாட்டி எல்லாம் எனக்கு வேண்டியதில்லை. நீ வைத்திருக்கும் சக்கரையில் கொஞ்சம் கொடு. அது போதும்.”

“சக்கரை வேண்டுமா வா’’ என அவளை அருகில் அழைத்து தண்ணீரில் பிடித்துத் தள்ளிவிட்டான். தடுமாறித் தண்ணீருக்குள் விழும்போது ஒரு கையால் அவளைப் பிடித்துக்கொண்டு, “இப்போ சொல்லு உனக்குப் பசங்களைப் பிடிக்குமா, பிடிக்காதா’’ எனக் கேட்டான்.

“பிடிக்கும்” எனச் சொன்னதும் இழுத்து படியில் உட்கார வைத்துவிட்டுச் சொன்னான்,

“இப்போ பாரு. தண்ணீருக்குள் ஒரு தாத்தாவும் பாட்டியும் உட்கார்ந்திருக்கிறார்களா?”

“ஒன்றுமே தெரியவில்லை.”

“கண்ணை நன்றாக உற்றுப்பார்.”

குனிந்து கண்களை நன்றாக உற்றுப் பார்த்தபோது பச்சை நிறத்தில் தண்ணீர் தெரிந்ததேயன்றி பாட்டியும் தாத்தாவும் தெரியவில்லை. ஆகவே தலையை ஆட்டிக்கொண்டு தெரியவில்லை என்றாள்.

“எப்படி தெரிவாங்க, அவங்க சக்கரையை சாப்பிட்டு இந்நேரம் தூங்கப் போயிருப்பார்கள்.”

‘‘தண்ணீருக்குள்ளா அவர்கள் குடியிருக்கிறார்கள்?”

“ஆமாம். உனக்கு அந்தக் கதை தெரியாதா. இந்த தாத்தாவும் பாட்டியும் ரொம்ப வருஷமாக தண்ணீருக்குள்தான் குடியிருக்கிறார்கள். ரொம்ப வருஷங்களுக்கு முன்னாடி இந்தத் தாத்தாவும் பாட்டியும் கோவில் கோவிலாக புண்ணிய யாத்திரை போய்க்கொண்டிருந்திருக்கிறார்கள்.

அப்படி வரும் போது இந்த சம்யுக்தா குளத்தில் பாட்டி தண்ணீர் குடிக்கப் போயிருக்கிறாள். குனிந்து குடிக்கும்போது யாரோ முதுகில் கைவைத்துத் தள்ளுவதைப் போல உணர்ந்தாள். மறுநிமிடம் அவள் குளத்திற்குள் விழுந்துவிட்டாள். இதைப் பார்த்த தாத்தா தாவிக் குளத்திற்குள் குதித்தார். அதற்குப் பிறகு அவர்கள் இருவரும் வெளியே வரவேயில்லை. இக்குளத்திற்குள்ளாகவே குடியிருக்க ஆரம்பித்துவிட்டார்கள். அவர்களுக்கு என்ன வேலை தெரியுமா?

குழந்தைகள் யாரும் குளத்தில் விழுந்துவிடாமல் பாதுகாப்பது. யாராவது சிறுவர்கள் குளத்தில் தடுமாறி விழுந்துவிட்டால் தாத்தா தாங்கிப் பிடித்து வெளியே கொண்டுவந்து விட்டுவிடுவார்.”

“உனக்கு எப்படித் தெரியும்?”

“நான் அப்படி குளத்தில் தடுமாறி விழுந்துவிட்டேன். தாத்தா தான் என்னைக் காப்பாற்றி கரையேற்றிவிட்டார்.”

“தாத்தா எப்படியிருப்பார்?”

“அவருக்கு பெரிய தாடி. எவ்வளவு பெரியது தெரியுமா. தாடையில் ஆரம்பித்து கால் பெருவிரல் வரை நீளமான தாடி. பாட்டி அந்த தாடியில் ஊஞ்சலாடுவாள் என்றால் பார்த்துக்கொள்ளேன்.”

அஜ்யா சிரித்தாள். அந்தச் சிரிப்பை ரசித்தபடியே தர்ஷன் சொன்னான். “நீ ரொம்பவும் அழகா இருக்கிறாய்.”

“அப்படியா?”

“ஆமாம். சிரிக்கும்போது உன்னைப் பார்க்க அவ்வளவு அழகாக இருக்கிறது. கடித்துத் தின்றுவிடலாம் என்று தோன்றுகிறது.”

அஜ்யாவிற்கு பெருமையாக இருந்தது. அவள் வெட்கத்துடன் “நீயும் அழகாக இருக்கிறாய். நன்றாக கதை சொல்லுகிறாய்’’ என்றாள்.

“கதையா, நான் சொன்னது அத்தனையும் உண்மை. இந்தத் தாத்தா பாட்டிக்கு பசிக்குமே என்று தினம் வீட்டிலிருந்து பொருட்களைத் திருடி வந்து தந்துகொண்டிருக்கிறேன்.”

“அப்போ நீ திருடனா’’

“திருடன் என்றால் மீசை வைத்திருக்க வேண்டுமே. எனக்கு இன்னமும் மீசை முளைக்கவில்லை.”

“அப்போ மீசை முளைக்காத திருடன், சரிதானா?”

“ஆமாம், நான் மீசை முளைக்காத திருடன்தான். இந்தத் திருடன் இப்போது என்ன செய்யப்போகிறான் தெரியுமா?” என்றபடியே அவள் சூடியிருந்த பூவைப் பறித்து எடுத்துக்கொண்டான், அஜ்யா சிரித்தாள்.

தர்ஷன் அதன்பிறகு அவளுடன் ஒன்றாகச் சுற்றி அலைய ஆரம்பித்தான். அவளைப் பெண்ணாகவே கருதினான். பெண்ணாகவே நடத்தினான். அவளுக்காக இனிப்புப் பண்டங்கள் கொண்டுவந்து தந்தான். சில நேரம் அவளது உள்ளங்கையை தன் கையில் வைத்து வியந்து ஏதேதோ பேசிக்கொண்டிருப்பான். சில நாட்கள் அவளை நடனமாடச் சொல்வான். நாணல்களுக்குள் அழைத்துப் போய் பயமுறுத்துவான். தர்ஷனின் நெருக்கமே அவளது பெண்மையை வளரச்செய்தது. தர்ஷன் ஒவ்வொரு நாளும் புதுப்புதுக் கதைகள் சொல்வான். சில நேரம் அவன் பேசுவதையே வியந்து பார்த்துக்கொண்டிருப்பாள்.

எங்கிருந்து கற்றுக் கொண்டுவருகிறான் இவற்றை. யார் சொல்லித் தருவார்கள்.

தர்ஷன் எப்போதும் சிரித்துக்கொண்டேயிருப்பான். விளையாட்டுத் தனம்தான் அவனது இயல்பு. சில வேளைகளில் அவளுக்காக தாமரைக்குளத்திலிருந்து தாமரை பறித்து வந்து தருவான். சில நேரம் இலைகளைக் கோர்த்து மாலை போலாக்கி அவளுக்குச் சூடி அழகு பார்ப்பான். அவனுடன் பேசிக்கொண்டிருந்தால் நேரம் போவதே தெரியாது.

தர்ஷன் தன்னைப் பெண் என்று நம்புவதும், ஆராதனை செய்வதும் அஜ்யாவிற்கு மிகவும் பிடித்திருந்தது.

ஒரு நாள் அம்மாவுடன் இம்ரான் மீன்வாங்கிக்கொண்டு திரும்பி வரும்போது தர்ஷன் அவனை அடையாளம் கண்டுவிட்டான்.

ஆத்திரத்துடன் அருகில் வந்து "ஏ அஜ்யா, நில்லு. நீ ஆம்பளைப் பையனா'' எனக் கேட்டான். இம்ரான் பதில் சொல்லவில்லை, வேகமாக அம்மாவோடு சேர்ந்து நடக்க ஆரம்பித்தான்.

தர்ஷன் ஒரு கல்லை எடுத்து அவன் மீது எறிந்தான். அம்மா தர்ஷனைத் திட்டி சப்தமிட்டாள். இம்ரான் திரும்பிப் பார்க்கவேயில்லை. வீட்டை நெருங்கும்போது அம்மா யார் அந்தப் பையன் எனக் கேட்டாள். இம்ரான் அவனைத் தனக்குத் தெரியவே தெரியாது என்றான்.

"உன்னை ஏன் கல்லால் அடித்தான். அவனோடு சண்டை போட்டாயா?''

"இல்லை. நான் அவனைப் பார்த்ததுகூட கிடையாது'' என மறுத்தான் இம்ரான்.

பிறகு அம்மா எதையும் கேட்டுக்கொள்ளவில்லை. ஆனால், அன்று பகல் முழுவதும் இம்ரான் வீட்டிலே அடைந்துகிடந்தான். இரவில் போர்வைக்குள் சுருண்டபடியே அழுதான். இரண்டு நாட் களுக்குப் பின்பு சம்யுக்தா குளத்திற்குப் போனபோது அங்கே தர்ஷனில்லை.

தர்ஷனைப் பார்த்துப் பேச வேண்டும் என்று ஏக்கமாக இருந்தது. அவனைத் தேடி அவன் வீடு இருந்த தெருவிற்குள் வந்தபோது தர்ஷன் இன்னொரு பையனுடன் குதிரைச் சவாரி விளையாடிக் கொண்டிருப்பது தெரிந்தது.

தள்ளி நின்றபடியே தர்ஷனை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

தர்ஷன் அதைக் கவனித்திருக்க வேண்டும். தன் நண்பனை அழைத்துக் கொண்டுவந்து அருகில் நின்று முறைத்தபடியே கேட்டான்.

"ஏ அஜ்யா, நீ ஆம்பளையா. பொம்பளையா?"

"தெரியவில்லை'' என்றான் இம்ரான்.

"அப்படியா. இப்போ பார்த்திடுவோம்" என அணிந்திருந்த பாவாடையைக் கழட்ட முயன்றபோது இம்ரான் தடுத்தான். அவனைக் கீழே தள்ளி, ஒருவன் அழுத்திப் பிடித்துக்கொண்டான். தர்ஷன்

வேகமாக உடைகளைக் களைந்தான். நிர்வாணமாகக் கிடந்த அவனது உடலைப் பார்த்தபடியே “நீ பையன்தான்” என்றபடியே ஆண் உறுப்பை காலால் ஓங்கி மிதித்தான். வலி தாங்க முடியாமல் இம்ரான் அழுதான்.

“எதுக்கு பொம்பளைப் பிள்ளை மாதிரி நடிக்கிறே’’ என இரண்டு பையன்களும் அவனை மாறி மாறி மிதித்தார்கள்.

யாரோ ஒரு பெரியவர் கைத்தடி ஊன்றியபடியே தெருவில் வருவது தெரிந்ததும் தர்ஷன் மண்ணை அள்ளி விழுந்து கிடந்த இம்ரான் முகத்தில் போட்டபடியே “பேடிப்பயலே, இனிமே இங்கே வராதே” எனக் கத்தியபடியே ஓடினான். அவனோடு விளையாடிய பையன் ஆபாசமாகத் திட்டயபடியே பின்னால் சப்தமிட்டபடியே ஓடினான்.

புழுதியில் விழுந்து கிடந்த இம்ரான் வேகமாக எழுந்து பாவாடையை உடுத்திக்கொண்டு தர்ஷன் தர்ஷன் எனப் பின்னாடியே ஓடினான். அவனைப் பிடிக்க முடியவில்லை. தர்ஷன் ஏன் தன்னை இப்படி நடத்த வேண்டும் என அவனுக்குப் புரியவேயில்லை. ஆனால், அதன்பிறகு இம்ரான் தர்ஷனைப் பார்க்கவேயில்லை.

ஆனால், தர்ஷன் இம்ரானுக்குள்ளிருந்து பெண்மையை முழுமையாக விடுதலை அடையச் செய்துவிட்டிருந்தான். அதன்பிறகு இம்ரான் தன் ஆசைகளை ஒளித்துக்கொள்ளவில்லை. பெண் உடைகளை அணிந்தான். பூச்சூடினான். அடியும் அவமானங்களையும் வசைகளையும் எதிர்கொண்டான். பின்னொரு நாள் வீட்டை விட்டு வெளியேறி ஓடினான்.

அன்றுமுதல் அவன் இம்ரானில்லை, அஜ்யா. முழுமையான பெண். அவளிடம் சிறபத்தில் இருந்த நளினமும் வாளிப்பும் ஒன்று சேரத்துவங்கின. அஜ்யா நடனம் கற்றுக்கொண்டு தாசிகளின் ஸ்நேகத்தில் வாழத்துவங்கினாள். தங்கரேகை கொண்ட அலங்காரமான உடைகளும் பின்னல் ஜடையும் வாசனை திரவியங்களும் தீட்டிய கண்களுமாக அஜ்யா நடனமாடும் போது பார்ப்பவர் கிறங்கிப்போனார்கள். வீசி எறியப்படும் காசுகள் அழகி என்பதை உறுதி செய்தன.

அஜ்யா ஆடும் தருணங்களில் தன்னோடு சிற்பமாக இருந்த ராதாவும் உடன் ஆடுவதாக நினைத்துக்கொள்வாள்.

நீண்ட பல வருஷங்களுக்குப் பிறகு அஜ்யா லக்னோவில் உள்ள நடனக்கூடம் ஒன்றில் நடனக்காரியாக இருந்தபோது ஒருநாள் அவர்கள் வீட்டுவாசலில் பிச்சை எடுப்பதற்காக வந்துநிற்கும் ஒருவனைக் கண்டாள்.

அவன் கன்னங்கள் ஒட்டிப்போய் உதடுகள் கறுத்தவனாக மெலிந்த கைகால்களுடன் நின்றிருந்தான். தலைமயிர்கள்

கொட்டிப்போயிருந்தன. அவனுக்கு கோதுமையை தானம் போட வந்த அஜ்யா குனிந்து அவனது பையில் தானியத்தைக் கொட்டியபோது அவனை அடையாளம் கண்டுகொண்டு விட்டாள்.

“நீ தர்ஷன்தானே’’ எனக் கேட்டாள்.

அவன் குழப்பமான முகத்துடன், “ஆமாம், நீ யார்?” எனக் கேட்டான்.

“என்னைத் தெரியவில்லையா’’ என அவள் நெகிழ்ந்துபோன குரலில் கேட்டாள்.

“நினைவில்லை. கடந்த காலத்தை நினைத்தால் எனக்குக் கசப்பாக இருக்கிறது. எதையும் நினைவில் வைத்துக் கொள்ளவில்லை’’ என்றான்.

“நான்தான் அஜ்யா” என்றாள்.

“அஜ்யாவா. எந்த அஜ்யா’’ எனக் கேட்டான் தர்ஷன்.

“சம்யுக்தா குளத்தில் விளையாடுவதற்காக வந்த நாளில் தண்ணீருக்குள் ஒரு தாத்தாவும் பாட்டியும் ஒளிந்திருப்பதாகச் சொன்னாயே அந்த அஜ்யா.”

“என் அஜ்யாவா நீ’’ என அவன் சொன்னபோது அவன் அறியாமல் கண்கள் கலங்கியிருந்தன.

“என்னை நினைவிருக்கிறதா. என்னைப் பெண்ணாக ஏற்று என் அழகை ஆராதனை செய்த முதல் ஆண் நீதான்.”

“இல்லை. நான் உன்னை அவமானப்படுத்தியிருக்கிறேன்.”

“அந்த அவமானம்தான் எனக்குள் இருந்த பெண்மையை வெளிக் கொண்டுவந்தது. அதன்பிறகுதான் நான் முழுமையாகப் பெண்ணாக உருமாறினேன்.”

“என்னை மன்னித்துக்கொள். அறியாமை, திமிரில் உன்னிடம் அப்படி நடந்துகொண்டுவிட்டேன்.”

“உன்னை இப்படிப் பார்ப்பது வேதனை அளிக்கிறது. தர்ஷன் உள்ளே வா. உனக்காக உடைகள் தருகிறேன். ருசியான உணவு தருகிறேன்.”

“இல்லை அஜ்யா. பிச்சைக்காரன் எதற்கும் ஆசைப்படக்கூடாது, பிச்சைக்காரன் தன் கடந்த காலத்தை நினைக்கத் துவங்கினால் வாழ முடியாது. என்னைப் போக விடு.”

“எனக்காக ஒருவேளை என் வீட்டில் நீ சாப்பிட வேண்டும்.”

“இல்லை. அதற்கான அருகதை எனக்கில்லை.”

“இதை ஏற்காமல் போனால் நான் வருந்தி அழுவேன்.”

“அஜ்யா, நீ ஏன் என் மீது இப்படி அன்புகாட்டுகிறாய்.”

“என்னோடு இளமையில் விளையாடியிருக்கிறாய். என்னைப் புரிந்துகொண்டிருக்கிறாய். சந்தோஷப்படுத்தியிருக்கிறாய்.”

“அது அறியாப்பருவம். விளையாட்டிற்காகச் செய்தவை.”

“இருக்கட்டுமே, அந்த சந்தோஷம் உண்மையானதுதானே.’’

“அஜ்யா, அந்த தர்ஷன் இப்போதில்லை. இது வெறும் கூடு நான் அருகதையற்றவன்.”

“தர்ஷன் நீ எனக்காக உணவை ஏற்றுக்கொள்ளதான் வேண்டும்.”

“உன் கண்ணீருக்கு பயந்து வருகிறேன்.”

தர்ஷனை அவள் தன் வீட்டிற்குள் அழைத்துப் போய் குளிக்க வைத்தாள். மாற்று உடைகள் தந்தாள். தன்னோடு உடனிருக்கும் நடனக்காரிகளுக்கு அறிமுகம் செய்து வைத்தாள். பிறகு அவனுக்கு தன் கையாலே உணவைப் பரிமாறினாள்.

அந்த நிமிடம் தர்ஷன் அழுதான். கன்னத்தில் வழிந்தோடும் கண்ணீரைத் தனது துப்பட்டாவால் துடைத்துவிட்டபடியே அஜ்யா சொன்னாள்.

“நானிருக்கேன் தர்ஷன். நீ என்னோடு தங்கிவிடலாம்.”

“இல்லை அஜ்யா. பால்யத்தில் நான் தந்த சந்தோஷத்திற்கு இதுவே அதிகம்’’

அவன் வேகமாக சாப்பிட்டு முடித்து வெளியே கிளம்பினான்.

அஜ்யா சொன்னாள்,

“என்னைத் தேடி நீ எப்போதும் வரலாம் தர்ஷன்’’

“இல்லை. இந்த ஒரு சந்திப்பே போதும். என் மனம் நிறைந்து விட்டது, அஜ்யா நீ வாழ்வில் நிறைய சந்தோஷங்களை அனுபவிப்பாய். அரசபோகத்தில் வாழ்வாய். ஒரு தாயைப் போல நீ நடந்து கொண்டிருக்கிறாய். இந்த அன்பை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன். அன்பால் நிரம்பிய உன் மனது உன்னை எங்கோ கொண்டு போய்ச் சேர்த்துவிடும். உனக்கு நிறைவான வாழ்க்கை கிடைக்கும் அஜ்யா?”

அஜ்யா அழுதாள். அந்த அன்பான சொற்களைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

“தர்ஷன் நீ ஏன் இப்படிப் பேசுகிறாய். நான் அப்படி என்ன செய்துவிட்டேன்.”

தர்ஷன் அதன்பிறகு ஒரு வார்த்தை பேசவில்லை, அவள் தந்த ஆடைகளைக் களைந்து போட்டுவிட்டு, தனது பிச்சைக்கார உடையை அணிந்துகொண்டு தானம் பெற்றிருந்த கோதுமை மணிகள் கொண்ட

பையை எடுத்துக்கொண்டு வெளியேறிப் போய்விட்டான்.

காலம் மறுபடியும் அஜ்யாவின் கண்களில் அவனைக் காட்டவில்லை. ஆனால், அவன் சொன்னது பலிக்கத் துவங்கியது.

அவளது நடனத்தையும் அழகையும் கண்டு அவளை சக்கரவர்த்தியின் ஆடற்பெண்களில் ஒருத்தியாக அரண்மனையில் சேர்த்துக்கொண்டார்கள். அப்படித்தான் அஜ்யா மாமன்னர் ஒளரங்கசீப்பின் அந்தப்புரத்திற்குள் வந்து சேர்ந்தாள்.

அந்தப்புரம் என்பது அரசனின் கேளிக்கைக்கூடம் என்பது வெறும் அடையாளம், உண்மையில் அது ஒரு இருண்ட உலகம். அந்தப்புரத்தில் அரச குடும்பப் பெண்களும் வேலைக்காரிகளும் ஆண்மை நீக்கம் செய்யப்பட்ட அடிமைகளும் வசித்தார்கள்.அதையடுத்து அரசரும் அவரின் ரத்த உறவுகளும் வசித்தனர், அது ஒரு மாபெரும் சிறைக்கூடம் போலிருந்தது. அதுவும் பெண்கள் மட்டுமே நிரம்பிய சிறைக்கூடம், போட்டியும் பொறாமையும் வன்முமும் கோபமும் நிரம்பிய பெண்கள் ஒருமித்து வாழுமிடம். அந்தப்புரம் என்ற இருண்ட உலகிற்கு வந்தபிறகு அஜ்யா எல்லா சுகபோகங்களையும் அனுபவிக்கத் துவங்கினாள். ஆனால், அது கூண்டுப்பறவையின் வாழ்க்கையைப் போலவே இருந்தது.

மாமன்னர் ஒளரங்கசீப்பிற்கு பத்தொன்பதாவது வயதில் திருமணம் நடைபெற்றது. மணமகள் ஷா நவாஸ்கானின் மகள் தில்ரோஜ் பானு. திருமணத்தின் போது மாப்பிள்ளைத் தோழனாக இருந்தவன் ஒளரங்கசீப்பின் தம்பி முராத், நான்கு லட்சம் மஹர் கொடுத்தே தில்ரோஜ் பானுவை மன்னர் கட்டிக்கொண்டார். அவர்களுக்குப் பிறந்த குழந்தைதான் ஜெபுன்னிசா.

வாரிசு உரிமைப்போரில் ஒளரங்கசீப் இறங்குவதற்கு முன்பே தில்ரோஜ் பானு இறந்துபோய்விட்டாள். அவளுக்குப்பிறகு இரண்டாவதாகத் திருமணம் செய்துகொண்ட பெண் நவாப் பாய். அவள் ராஜபுத்திரப் பெண் என்றும் சிலர் கூறினார்கள். ஆனால், அவள் காஷ்மீரைச் சேர்ந்தவள். ராஜ்வாரி ராஜாவின் மகள் என்றும் சொன்னார்கள். இவளுக்குப் பிறந்த பிள்ளைகள் தான் முஹமத் சுல்தான். முகமது ஆஜம், பத்ருனிச்சா ஆகியோர்.

அக்பர் காலத்திலிருந்தே அவரது ராணிகள் எந்த ஊரைச் சேர்ந்தவர்களோ அந்தப் பெயரிலே அழைக்கப்பட்டார்கள், உதய்பூரில் பிறந்தவள் உதய்பூரி என்றும் தௌலதாபாத்தில் பிறந்தவள் தௌலதா பாதி என்றும் அழைக்கப்பட்டார்கள், அப்படி மூன்றாவது ராணியாக வந்தவள் ஒளரங்கபாதி மஹல். இவளது மகள்தான் மெஹருனிச்சா. அவரது நான்காவது மனைவி உதய்பூரி மஹல் எனும் பாய் உதய்பூரி. இவள் அடிமைப் பெண் என்றும் இல்லை ராஜபுத இளவரசி என்றும் இரண்டுவிதமாகச் சொல்லிக் கொண்டார்கள்.

உதய்பூரி நல்ல அழகி. தங்கத்தை உருக்கிச் செய்தது போன்ற உடல். ரோஜாவின் வசீகரம் கொண்ட முகம். இவளது மகன் முஹமது காம்பக்ஷி. அந்தப்புரத்தில் உதய்பூரியின் தோழியாக ஆனதின் பிறகே அஜ்யாவிற்கு சுதந்திரக் காற்றையும் வெளிச்சத்தையும் அனுபவிக்க முடிந்தது. ஆனால், அதுதான் அவளை மற்ற பெண்கள் வெறுப்பதற்கும் விஷமிட்டுக் கொல்ல முயன்றதற்கும் காரணமாகயிருந்தது.

மணற்பெண்

பைராகிகளும் வாமமார்க்கிகளும் கஞ்சா புகைப்பதும் பாங் என்ற லாகிரிப் பொருள் உபயோகிப்பதும் அபின் அருந்துவதும் தங்களின் கடவுள் வழிபாட்டு நெறி என்று கூறியதை ஔரங்கசீப் ஏற்றுக்கொள்ளவில்லை. கஞ்சாதான் பாங் என்ற மதுவாக மாறுகிறது. இதை பங்கி என்றும் அழைப்பார்கள். கஞ்சாவைப் பக்குவப் படுத்தி இலை, பூ, விதை ஆகியவற்றை உலரச் செய்து சூர்ணமாக்கிய பின்பு பாங் ஆகிறது. ஹஷீஷ் என்ற பெயரில் இதைப் புகையாகவும் ஊதுவார்கள். இதுபோலவே அபினிச் செடியில் விளையும் காயை முற்றவிடாமல் உள்ளிருக்கும் திரவத்தை வடித்து எடுத்து உறையவைத்தால் அபினி கிடைக்கும். இதை சார்பக்ரா எனும் பானமாகத் தயாரித்து, குடித்து ஆட்டம்போடுவார்கள்.

பாங் சிவனுக்கு விருப்பமான பானம். அதற்கு காரணம் பாங் என்பது கங்கா தேவியின் தங்கையாக பைராகிகளால் நம்பப்பட்டது. அதனால் தான் பாங்கும் கங்கையும் சிவபெருமானின் தலையில், இரண்டு பக்கமும் குடியிருக்கிறது என்றும் துறவிகள் விளக்கம் தந்தார்கள்.

இந்த விளக்கங்கள் எதையும் ஏற்கமுடியாது என உறுதியான நிலைப்பாடு எடுத்த ஔரங்கசீப் எல்லா போதைப் பொருட்களையும் ஒழித்துக் கட்டியதோடு கஞ்சா, அபின் விற்பவர்கள், நாட்டுச் சாராயம் காய்ச்சுபவர்கள் அனைவரையும் கைதுசெய்து சிறையில் தள்ளத் துவங்கினார்.

அத்துடன் இசை என்பது மனிதனுக்கு போதை தரக்கூடியது. சிறந்த இசையைக் கேட்ட ஒருவன் மதி மயங்கிப் போய்விடுகிறான். ஆகவே போதை தரக்கூடிய இசையை அனுமதிக்கக் கூடாது என ஆடல்பாடல் கலைஞர்களையும் இசைவாணர்களையும் தடை செய்திருந்தார். விழாக்களில் ஆடல் பாடல் நிகழ்ச்சிகள் நடைபெறுவது முற்றிலும் தடை செய்யப்பட்டிருந்தது.

அரச சபை இசைக்கலைஞர்கள் அத்தனை பேரும் வேலையிலிருந்து விலக்கப்பட்டார்கள். இசைப்பள்ளிகள் மூடப்பட்டன. மானியம் இழந்துபோன பாடகர்கள் இசையை ஒரு கொடும்பாவியாகச் செய்து அதை பேரரசன் கண்ணில் படும் இடத்தில் வைத்து இசை இறந்து போய்விட்டது எனச் சொல்லி அதைப் புதைக்கப்போவதாக ஒப்பாரி வைத்தார்கள். அதைப் பற்றி அறிய வந்தபோது “ஆழப் புதைத்து விடுங்கள்” என பாதுஷா கேலிசெய்தார்.

அக்பர் காலம் முதல் நடைபெறும் மன்னரின் பிறந்தநாள் விழாக் கொண்டாட்டங்களைக்கூட அவர் தடை செய்திருந்தார். டெல்லி வீதியில் நிர்வாணமாகச் சுற்றி அலைந்த ஞானி சர்மத் இளவரசன் தாராவின் அபிமானத்திற்குரிய ஞானியாக இருந்தார். இஸ்லாமியராக

இருந்த அவர் உடைகளின்றி நிர்வாணமாகச் சுற்றி அலைவதையும் மக்கள் அவரை ஞான குருவாகக் கொண்டாடுவதையும் ஔரங்கசீப்பால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

அருவருக்கத்தக்க அந்த மனிதனைக் கடுமையாக தண்டிக்க வேண்டும் என உத்தரவிட்டார். சர்மத்துடன் இஸ்லாமிய மார்க்கவாதிகள் வாதம்செய்து அவரைத் தோற்கடித்தார்கள். அவருக்கு மரணதண்டனை அளித்துத் தீர்ப்பளித்தார்கள். கைது செய்து இழுத்துவரப்பட்ட சர்மத் கொல்லப்பட்டார்.

இந்துகளுக்கும் பிற மதத்தினர்களுக்கும் ஜசியாவரியை விதித்ததோடு அந்த வரியை அவர்கள் தேடிவந்து கட்ட வேண்டும் என்றும் ஆணையிட்டார். ஆண்டுவருமானம் ஐநூற்று இருபது உள்ளவர் ரூபாய் மூன்றும் இரண்டு அணாவும், ஐநூற்று இருபதுக்கும் மேல் இரண்டாயிரத்து ஐநூறு வரை சம்பாதிப்பவர் ஆறு ரூபாய் நாலு அணா வரியும், ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறுக்குமேல் சம்பாதிப்பவர் பனிரெண்டு ரூபாய் எட்டு அணா வரி செலுத்த வேண்டும் என்பதே நியதியாக இருந்தது. இதற்கு எதிர்ப்புக் கிளம்பியது. சீக்கியர்களும் ஜாட்டுகளும் மராத்தியர்களும் வரி கட்டமுடியாது எனப் போராடிய போது அதை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கினார்.

பேரரசருக்கு மக்கள் மண்டியிட்டு மரியாதை செய்வது தேவையற்றது என உணர்ந்த அவர் அதற்கும் தடை விதித்திருந்தார். அதிகாலை நேரங்களில் அக்பர் ஜாரோகா என்ற பலகணியில் வந்து நின்று மக்களுக்கு தரிசனம் தருவதை வழக்கமாக வைத்திருந்தார். அதுவும் இஸ்லாமிய நெறிகளுக்கு எதிரானது எனக் கருதிய ஔரங்கசீப் அதிகாலையில் காட்சி தருவதை நிறுத்திக்கொண்டார்.

பெருமையையும் புகழையும் வெறுத்த அவர் தன் வாழ்க்கை நிகழ்ச்சிகளை ஆவணப்படுத்தும் செயலைக்கூட அனுமதிக்கவில்லை. பாரசீக எழுத்தாளர்கள் அன்றாட அலுவல்களையும், அவரது நிர்வாகத் திறனையும் வியந்து எழுதியதை அவர் விரும்பாமல் கிழித்து எறிந்தார். ஆலம்கீர் நாமா என்ற நூலைத் தடையும் செய்தார்.

வேசைகளும் நடனக்காரிகளும் வேறுதொழில் செய்து பிழைக்கும்படியாகக் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். ரகசியமாக வேசைத்தொழிலில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். இஸ்லாமியர்கள் தாடி வளர்ப்பதில்கூட ஒரு நியதியும் கட்டுப்பாடும் தேவை என அறிவித்தார் ஔரங்கசீப்.

கரோரிகள் என அழைக்கப்பட்ட ராணுவத்தை நிர்வகிக்கும் எழுத்தர்களும் கணக்கர்களும் சுயலாபத்துக்காக எதையும் செய்பவர்களாக இருந்தார்கள். கையூட்டு பெறுவதில் கில்லாடிகளாக இருந்தார்கள். இந்த எழுத்தர், கணக்கர்களில் பெரும்பான்மையினர் காயஸ்தர் என்ற பிரிவைச் சேர்ந்தவர்கள். தன்னை எதிர்ப்பவர்களை

தந்திரமாக ஒடுக்குவதில் காயஸ்தர்கள் திறமைசாலிகள்.

ஒருமுறை மாதச்சம்பளம் வாங்க வந்த போர்வீரன் ஒருவன் எழுத்தர் தாமதம் செய்கிறார் எனக் கோபம் அடைந்து தனது வாளை உயர்த்தி அவருடைய பல்லை உடைக்கப் போவதாக சப்தமிட்டான். எழுத்தர் உடனே அவனுக்குரிய ஊதியத்தை எண்ணி ஒப்படைத்தார். அவன் போனபிறகு பதிவேட்டில் அவனைப்பற்றிய குறிப்பில் அந்தப் போர்வீரனுக்கு மேல் வரிசையில் இரண்டு பற்கள் கிடையாது எனத் திருத்தி எழுதிவிட்டார். அடுத்தமுறை சம்பளம் வாங்க அவன் வந்தபோது “பதிவேட்டில் உள்ள ஆள் நீயில்லை. உனக்கு மேல் வரிசையில் இரண்டு பற்கள் அதிகமிருக்கின்றன” எனக் காரணம் காட்டி அவனுக்கு சம்பளம் கொடுப்பதை நிறுத்தி விட்டார்.

அந்தப் போர்வீரன் தன்னை அவர் வஞ்சம் தீர்ப்பதைப் புரிந்து கொண்டு வேறு வழியில்லாமல் தனது பற்களில் இரண்டை உடைத்துக் கொண்டுவிட்டு “இப்போது பதிவேட்டில் உள்ளபடிதான் இருக்கிறேன்” எனச் சொல்லி சம்பளம் பெற்றுக்கொண்டு போனான். எழுத்தர்களின் மோசடிக்கு இது ஒரு சான்று.

போதைப்பொருட்களைத் தடை செய்த காரணத்தால் அவை ரகசியமாக விற்கப்பட்டதுடன் போதைப் பொருட்களை விற்கும் இரவுச் சந்தைகள் நிறைய இடங்களில் தோன்றத்துவங்கின. அப்படியான ஒரு சந்தையாகத்தான் போல்வாரின் இரவுச்சந்தை விளங்கியது. அந்தச் சந்தை எங்கே எப்போது கூடும் என்பது ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. பின்னிரவில் கூடும் அந்தச் சந்தை விடியும் வரை நடந்தேறியது. குடிகாரர்கள், கஞ்சாபுகைப்பவர்கள், பாங்கி குடிப்பவர் எனச் சகலரும் இந்தச் சந்தை நடக்குமிடத்தை எப்படியோ அறிந்திருந்தார்கள். இந்தச் சந்தைக்கு போதை வஸ்துகளைக் கொண்டுவருபவர்கள் தங்களை ஆபோகிகள் என அழைத்துக்கொண்டார்கள்.

காரணம் இந்திரனின் பசுவாகிய ‘காமதேனு’ தான் ‘ஆபோகி’, ஆகவே காமதேனு தருவதுபோல வான் உலகின் அமுதத்தை தாங்கள் போதையூட்டும் பானமாகத் தருகிறோம் என ஆபோகிகள் சொல்லிக் கொண்டார்கள். ஆபோகிகள் அனைவரும் தலையை மொட்டை அடித்திருந்த காரணத்தால் அவர்கள் முண்டகர்கள் என்றும் அழைக்கப்பட்டார்கள்.

பின்னிரவில் போல்வார் ஆற்றின் ஏதாவது ஒரு படித்துறையில் அந்தச் சந்தை துவங்குவது வழக்கம். இதற்காக காவல்வீரர்கள் எல்லா படித்துறைகளிலும் பந்தம் ஏந்திக் காவல் காப்பார்கள். ஆனால், ஆபோகிகளை எவராலும் தடுத்து நிறுத்தவே முடியாது. ஒரு ஆபோகிகூட கைது செய்யப்பட்டதில்லை.

ஆபோகிகள் சொல்வதுபோலவே உண்மையில் அவர்கள்

சொர்க்கத்திலிருந்த மதுவைத்தான் பூமிக்குக் கொண்டு வந்திருந்தார்கள். அவர்கள் தருகிற பாங்கி குடித்தவர்கள் கனவுகளில் மிதந்தார்கள், சிலர் தாங்கள் ஆற்றின் மீது நடந்து திரிவது போல உணர்ந்தார்கள். சிலர் சார்பக்ரா குடித்துவிட்டு விடிய விடிய வாய் ஓயாமல் சிரித்தார்கள். ஆபோகிகள் விளக்கைப் பயன்படுத்துவதேயில்லை. இருட்டிற்குள்தான் வணிகம் செய்வார்கள். ஆகவே அதை வாங்கிக் குடிப்பவர்கள் இருட்டிற்குள்ளாகவே வந்துபோனார்கள்.

ஔரங்கசீப் இறந்துபோன சில தினங்களுக்குப் பிறகு போல்வாரின் இரவுச்சந்தை கூடியது. முன் எப்போதுமில்லாத அளவு போதையடிமைகள் நிரம்பி வழிந்தார்கள். மூச்சிரைப்பு நோயாளிகள் எப்படியாவது தங்கள் நுரையீரலின் வேதனையை சாந்தி செய்துகொள்வது போலவே அவர்கள் போதையை நாடி வந்திருந்தார்கள். முதன்முறையாக அந்தச் சந்தையில் ஒருவன் பந்தம் ஒன்றை ஏற்றி வைத்தான், ஆபோகிகள் அவன் மீது கோபம் கொண்டு சப்தமிட்டபோது அவன் சொன்னான்.

“இறந்துபோன பாதுஷா ஔரங்கசீப்பிற்காக நாம் குடிப்போம். இனி நம்மைக் கைது செய்ய ஒருவனுமில்லை. நாம் பயப்பட வேண்டிய தில்லை. வெளிச்சத்தில் குடிப்போம்.’’

“வேண்டாம். வெளிச்சம் போதையைக் குறைத்துவிடும்’’ என்றான் ஆபோகிகளில் ஒருவன். மற்றவர்களும் அதையே உறுதி செய்தார்கள். ஆனால், பந்தம் வைத்திருப்பவன் சொன்னான்.

“இந்த வெளிச்சம் நாம் பயமற்றவர்கள் என்பதைக் காட்டும் அடையாளம். இதை நான் அணைக்கமாட்டேன்.”

ஆபோகிகள் அவனை அனுமதித்தார்கள். அவன் உற்சாகத்துடன் கஞ்சாபுகைத்தபடியே ஔரங்கசீப்பின் ஆவியை தன்னுடன் இணைந்து குடிக்க வரும்படியாக சப்தமிட்டான்.

அந்த இரவு முடிவில்லாத கொண்டாட்டத்தின் இரவாக விளங்கியது. அவர்கள் கூச்சலிட்டு சண்டையிட்டுக்கொண்டு குடித்தார்கள். புகைத்தார்கள். ஒரு படகு நிறைய கஞ்சா புகைப்பவர்கள் ஏறிக் கொண்டு ஆற்றில் ஊர்வலம் போனார்கள். இந்தக் கொண்டாட்டம் விடியும் வரை நடைபெற்றது.

முழுப்போதையில் ஒருவன் தனது மனைவியைப் பற்றிய விசித்திர மான கதை ஒன்றைச் சொல்லத்துவங்கினான். போதையேறிய கண்களுடன் அவனைச் சுற்றி பலரும் அமர்ந்துகொண்டு கேட்டார்கள்.

•••

என் மனைவியின் ஊரை முதலில் சொல்லி விடுகிறேன். புர்வா. எந்தப் புர்வா என்று கேட்கிறீர்களா, அதான் கைரோலிக்குப் பக்கத்தில் உள்ள புர்வா. அந்த ஊரிலுள்ள தச்சுவேலை செய்யும் பைகவாவின்

மகள்தான் என் மனைவி. அவள் பெயர் லகியா.

எங்கள் திருமணம் இரவில்தான் நடந்தது. பச்சை வண்ண உடை அணிந்த லகியா தலையில் முக்காடு அணிந்திருந்தாள். கைநிறைய வளையல்கள். திருமணப்பரிசாக எனக்கு ஒரு மட்டக்குதிரை ஒன்றும் பதினாறு கலம் தானியங்களும் பாலில் செய்த இனிப்பும் இரண்டு ஜோடி செருப்புகளும் தரப்பட்டன. மணமகன் வீட்டில் வைத்துதான் சாந்தி முகூர்த்தம் நடத்தப்பட வேண்டும் என்பதால் இரவோடு இரவாக நடந்து எனது ஊரான சிர்கியாவிற்கு வந்து சேர்ந்தோம்.

நாங்கள் வந்துசேர பின்னிரவாகியது. வழியில் லகியா ஒரு வார்த்தைகூட என்னோடு பேசவில்லை. என்னை விட்டு விலகியே நடந்து வந்தாள். கூச்சப்படுகிறாள் போலும் என நினைத்துக் கொண்டேன்.

விடிகாலையில் நாங்கள் வீட்டை வந்து அடைந்தோம், எனது பாட்டிகளில் ஒருத்தி ஆரத்தி எடுத்து எங்களை வீட்டிற்குள் அழைத்துப்போனாள்.

“சூரியன் வருவதற்குள் நாங்கள் உறங்கி எழுந்துவிட வேண்டும்” என்று பாட்டி சொன்னாள்.

எங்கள் வீடு சிறியது. மண் வீடது. வாசற்கதவை முழுவதுமாக மூடமுடியாது. ஆகவே எங்களை வீட்டில் விட்டு மற்றவர்கள் கிணற்றடியில் படுப்பதற்காகச் சென்றார்கள். நான் லகியாவோடு உறவு கொள்ள வேண்டும் என்பதற்காகத் துடித்துக் கொண்டிருந்தேன், படுக்கையை விரித்து வைத்துவிட்டு அவள் இருட்டில் ஓரமாக அமர்ந்திருந்தாள். “உறக்கம் வரவில்லையா?” எனக் கேட்டேன். அவள் பதில் பேசவில்லை. அவளது கைகளைப் பற்றி இழுத்த போது ஒரு உண்மையை அறிந்து அதிர்ந்துபோனேன்.

என்ன தெரியுமா? அவள் கைகள் மண்ணால் உருவாக்கப்பட்டது போலிருந்தன. பயந்துபோய் அவள் உடைகளைக் களையும்படி சொன்னேன். ஆச்சரியம் ஆனால், நிஜம். அவள் மண்ணால் ஆன பெண்.

எப்படி ஒரு பெண் மண் உடல் கொண்டிருக்கிறாள் எனப் புரியவில்லை.

அவளிடம் நீ உண்மையான பெண்தானா எனக் கேட்டேன்.

“ஆமாம், ஆனால், பிறப்பிலே நான் மண் உடல் கொண்டு பிறந்துவிட்டேன்” என்றாள்.

“குளிக்கும்போது இந்த மண் கரைந்து போய்விடாதா?” எனக் கேட்டேன்.

“இல்லை. பிறக்கும்போது இருந்தது போலவே என் கைகால்கள் உறுதியாக இருக்கின்றன. உடல் மண்ணாகியிருந்தாலும் என்னால்

எல்லா வேலைகளும் செய்யமுடியும். ஒரேயொரு குறை நான் கண்ணீர்விடக்கூடாது. கண்ணீர் என் உடம்பில் பட்டால் உடல் கரைய ஆரம்பித்துவிடும்."

"நிஜமாகவா. அழுதால் நீ கரைந்து போய்விடுவாயா?"

"ஆமாம் அழுதுகொண்டேயிருந்தால் நான் கரைந்து போய் விடுவேன்."

"வியப்பாக இருக்கிறது. உன் கைகளை நீட்டு."

அவள் தன் கைகளை நீட்டினாள். களிமண்ணால் செய்து வைத்தது போன்ற கைகள். மண்ணின் சொரசொரப்பு. அவள் கையை முகர்ந்து பார்த்தேன். மண்வாசனை. அவளை இறுக்கி அணைத்தேன். பெண் உடலின் எந்த நளினமும் மிருதுவும் அதில் கிடைக்கவில்லை. இப்படி ஒரு பெண்ணை ஏன் கட்டிக் கொண்டோம் எனத் தோன்றியது.

அவள் மௌனமாக என்னைப் பார்த்து சொன்னாள்,

"என்னால் உங்களுக்கு எந்த இன்பத்தையும் அளிக்கமுடியாது. நான் வெறும் மண் உருவம்."

"நீ மிருதுவான தோலும் சதைகளும் கொண்ட பெண்ணாக மாறவே முடியாதா?"

"இந்த ஜென்மத்தில் முடியாது."

"பாவம். உண்மை நினைத்து வருந்துகிறேன்."

"எனக்கு திருமணம் நடக்கும் என நான் நம்பவேயில்லை. மனைவியாக என்னை ஏற்றுக்கொண்டதற்கு நன்றி."

"மனைவியாக வீட்டுவேலைகளை ஏற்றுக் கொள். அது போதும்."

"நான் உங்களை நிச்சயம் சந்தோஷமாக வைத்திருப்பேன்."

"லகியா, எனக்குத் தேவை வீட்டு வேலைகளை கவனித்துக் கொள்ளும் ஒரு பெண். என்னை சுகப்படுத்திக்கொள்ள எனக்குத் தெரியும்."

"என்னைத் துரத்திவிட்டுவிட மாட்டீர்களே'' எனக் கலக்கமாகக் கேட்டாள்.

"ஒருபோதுமில்லை. நீ மண்ணால் ஆனவள் என்று யாரிடமும் சொல்லாதே. உனக்கு மண்நோய் வந்திருக்கிறது என்று சொல்லிச் சமாளித்துக் கொள்கிறேன். நீ படுத்து உறங்கு."

லகியா ஒரு ஓரமாகப் படுத்து உறங்கத் துவங்கினாள். என்னால் உறங்க முடியவில்லை. ஒரு பெண் எப்படி மண் உடலுடன் பிறந்தாள், ஏதாவது கடவுளின் சாபமா. இவளை உடன் வைத்து வாழ்வதால் என்ன பிரயோசனம் என நினைத்துக்கொண்டேன். சூரிய வெளிச்சம் பூமிக்கு வருவதற்குள் நான் வீட்டிலிருந்து குளிப்பதற்காக வெளியேறிப்

போயிருந்தேன்.

அன்று காலை லகியா தானே வீட்டுவேலைகளை இழுத்துப் போட்டுக்கொண்டு செய்தாள். அவள் செய்த கோதுமை ரொட்டிகளைப் போல ருசியான ஒன்றை நான் சாப்பிட்டதே யில்லை. வீட்டில் உள்ளவர்களுக்கு அவளுக்கு மண்நோய் இருப்பதால் சருமம் அப்படியாகிவிட்டது எனப் பொய் சொல்லி சமாளித்தேன். லகியா வீட்டு வேலைகள் செய்தாள். ஆடு மாடுகள் மேய்த்தாள். விறகு வெட்டிக் கொண்டுவந்து போட்டாள். திரிகை திரித்தாள். சாணி அள்ளினாள். சில நாட்கள் இரவிலும் அவள் கிணற்றில் தண்ணீர் இறைத்துக்கொண்டிருப்பதுண்டு. லகியாவை அவர்கள் உழைப்பாளி என ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், அவளுக்கும் எனக்கும் உடலுறவு ஏற்படவில்லை என்பதை எளிதாகக் கண்டுபிடித்துவிட்டார்கள். அம்மா அதைச் சொல்லிக் காட்டும்போது லகியா வேதனை தாங்க முடியாமல் பாடுவாள். அந்தப் பாடலைக் கேட்கும் போது இனம் புரியாத வலி உருவாக ஆரம்பிக்கும்.

ஒவ்வொரு இரவும் லகியா “நீங்கள் சந்தோஷமாக இருக்கிறீர்களா’’ எனக் கேட்பாள்.

பல நாட்கள் நான் இல்லை என்றுதான் பதில் சொல்வேன். அதைக் கேட்டவுடன் அவள் முகம் வாடிவிடும்.

ஒருநாள் லகியா என்னை அழைத்துச் சொன்னாள்,

“உங்களுக்காக ஒரு பானம் தயாரித்து வைத்திருக்கிறேன், குடித்துப் பாருங்கள்.”

அவள் தந்த பானத்தை வாங்கிக் குடித்தபோது போதை தலைக்கு ஏறியது. என்ன பானமது, எப்படி இவ்வளவு போதை தருகிறது எனப் புரியவில்லை. அவளிடம் கேட்டபோது அவள் பதில் சொல்ல மறுத்துவிட்டாள். ஆனால், அந்த போதை தரும் பானத்திற்காக மனது ஏங்க ஆரம்பித்தது, சில நாட்கள் என் கட்டாயத்தால் அதைத் தயாரித்துத் தருவாள். ஒருநாள் அவளிடம் அவள் அந்த பானத்தை எப்படித் தயாரிக்கிறாள் எனச் சொல்லாவிட்டால் அவளை வீட்டை விட்டுத் துரத்திவிடுவேன் எனச் சொன்னபோது அவள் வருத்தமான குரலில் சொன்னாள்,

“என் கண்ணீர்த் துளி பட்டுக் கரைந்த மண்ணை எடுத்துதான் இந்த பானம் தயாரிக்கிறேன். என்னைத்தான் நீங்கள் குடிக்கிறீர்கள்.”

என்னால் நம்பமுடியவில்லை. வியப்போடு கேட்டேன்,

“போதை தருவது உன் உடலில் உள்ள மண்தானா?”

“ஆமாம், என் உடலில் கண்ணீர்த் துளி படும் போது அந்த மண் நெகிழ்கிறது. அதை எடுத்துக் கரைத்து பானமாக்கிவிடுகிறேன்.”

“உன்னை அழித்துக்கொண்டு எனக்கு ஏன் சந்தோஷம் தருகிறாய்.”

“வேறு எப்படி உங்களை சந்தோஷப்படுத்துவது. கணவனின் சந்தோஷம்தானே மனைவியின் மகிழ்ச்சி.”

“அதற்காக உன் கண்ணீரால் உன்னை அழித்துக்கொள்வாயா?”

“அழியப்போகிற உடல்தானே. நானே அழித்துக்கொண்டால் என்ன?”

அவளைத் தடுத்துப் பேசியபோதும் எனக்கு அந்த போதை தேவையாக இருந்தது.

அதன்பிறகு எனக்கு போதைக்கான ஏக்கம் வரும்போதெல்லாம் அவள் கண்ணீர் வடிப்பாள். அது அவள் உடலில் பட்டு வழிந்தோடியதும் ஈரமண்ணை வழித்து எடுத்து தண்ணீரில் கரைத்து போதை பானமாக்கித் தருவாள்.

அந்த போதைக்கு நிகரான ஒன்றை நான் வேறு எதிலும் அடைந்ததேயில்லை. இதைப் பற்றி ஒரு நண்பனிடம் சொல்லியபோது அவனும் இப்போதை பானத்தைக் குடிக்க ஆசைப்பட்டான். வீட்டிற்கு அழைத்துப் போய் மனைவியின் உடல் மண்ணிலிருந்து உருவான பானத்தை அவனுக்கும் குடிக்கத் தந்தேன். இப்படி சில நாட்களில் அந்த பானம் பற்றிய தகவல் பரவ ஆரம்பித்தது. நண்பர்கள் பலரும் என்னோடு குடிக்க ஆரம்பித்தார்கள்.

அவளால் அதை ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. தன்னால் அழ முடியவில்லை என மறுத்தாள்.

அவள் கண்ணீர்விட மறுத்தபோது நானே அடித்து அவளைக் கண்ணீர்விட வைத்தேன், விம்மிவிம்மி அவள் அழுதபோது அதை போதையாக்கிக் குடித்தேன். கொஞ்சம் கொஞ்சமாக அவள் இறந்து கொண்டிருக்கிறாள் என்பதை நான் உணரவேயில்லை. கண்ணீர் பட்டு உடல் உறுப்புகளில் துளைவிழவே அவள் வீட்டிற்குள்ளாகவே முடங்கிக் கிடந்தாள்.

பின்பு ஒருநாள் ஊர்ப்பண்டிகை வந்தது. அன்றிரவு நிறைய நண்பர்களை வீட்டிற்கு அழைத்திருந்தேன். அவளிடம் போதை பானம் வேண்டும் என்றேன். தலையாட்டிக் கொண்டு சொன்னாள்.

“என்னால் அழ முடியவில்லை. ஏதாவது செய்து என்னை அழ வையுங்கள்.”

நான் அடித்தும் உதைத்தும் பார்த்தபோது அவள் அழவில்லை. முடிவில் அவள் பெற்றோர்களை நான் மோசமான வார்த்தைகளால் திட்டத் துவங்கியபோது அவள் பெருங்குரலெடுத்து அழ ஆரம்பித்தாள். கேவிக்கேவி அழுதாள். அந்த அழுகையை நிறுத்தமுடியவில்லை. போதை தரும் பானமாக அவள் உடல் மண் உருமாறியதை நாங்கள் குடித்து சந்தோஷம் கொண்டோம். அவள்

அழுது கொண்டேயிருந்தாள். நாடகம் முடிந்து நான் வீடு திரும்பி வந்தபோது அவளைக் காணவில்லை. அழுகை தாங்கமுடியாமல் அவள் கிணற்றில் குதித்து விட்டாள் என்றார்கள். நான் கிணற்றில் தேடினேன். அவள் முற்றிலும் கரைந்துபோயிருந்தாள். தலைமயிர் மட்டுமே மிச்சமாக இருந்தது. அவள் உடல்மண் தண்ணீரில் கரைந்து போயிருந்தது. அந்தத் தண்ணீரைக் குடித்துப் பார்த்தேன். அதே போதை. வெறிக்கூச்சலுடன் நான் போதை தரும் கிணறு ஒன்றாக என் மனைவி உருமாறிவிட்டாள் எனக் கத்தினேன். ஒருவரும் அதை நம்பவில்லை. ஆனால், மறுநாள் எனக்கு போதை தெளிந்து நிதானம் வந்தபோது நான் செய்த தவற்றை முழுவதுமாக உணர்ந்தேன். அந்தப் பெண் எனக்காக தன்னைக் கரைத்துக்கொண்டுவிட்டாள். இந்த போதையை ஏன் அருந்தினேன் என எனக்குக் குமட்டிக்கொண்டு வந்தது. நான் அவளை நினைத்து வருந்தத் துவங்கினேன். வாழ்வில் முதன்முறையாக அழுதேன். இந்தக் கிணற்றில் இருந்து யாரும் துளித் தண்ணீர் வெளியே எடுத்துவிடக்கூடாது எனக் கிணற்றை மரப்பலகை கொண்டு மூடினேன்.

“என் மனைவி மண்ணால் ஆனவள். அவள் ஒரு அதிசயப் பிறவி. அதை நான் புரிந்துகொள்ளாமல் பாழடித்துவிட்டேன்” எனப் புலம்பினேன்.

என்னைப் பலரும் பரிகாசம் செய்தார்கள். லகியாவை என்னால் மறக்க முடியவில்லை. அவளை நினைத்து வருந்திதான் இன்றும் குடிக்கிறேன். ஆபோகிகள் தரும் மது என் லகியாவின் மதுவோடு ஒப்பிட்டால் ஒன்றுமேயில்லை.

நான் என் மனைவியைக் கரைத்துக் குடித்தவன். மாபெரும் பாவி. என்னைப் போன்றவர்கள் வாழ்வதற்கு ஒரு அர்த்தமும் இல்லை. அதனால்தான் என்னை நானே அழித்துக்கொள்கிறேன்.

போதையில் அவன் சொன்ன கதையைக் கேட்ட சிலர் பயந்து போனார்கள். இது உண்மையா. இல்லை, இதுவும் போதையின் விளைவுதானா. அவனிடம் சிலர் திரும்பத் திரும்ப கேட்டார்கள்.

“லகியா மண் உருவம் கொண்ட பெண்தானா?”

“ஆமாம். அவள் மண்ணால் ஆனவள். நான் ஒரு மடையன். அதன் மகத்துவம் அறியவேயில்லை.”

அந்தக் கதையைக் கேட்ட பலருக்கும் போதை இறங்கிப் போயிருந்தது. சிலர் ரகசியமாக அப்படி ஒரு போதை இருந்தால் எப்படி இருக்கக்கூடும் என்றும் ஏங்கினார்கள்.

லகியாவின் கதையைச் சொல்லிக்கொண்டிருந்தவன், துயரமான பாடல் ஒன்றைப் பாட ஆரம்பித்தான். அது லகியா பாடியது என்பதை கேட்பவர்கள் உணர்ந்திருந்தார்கள். அந்தப் பாடலைக் கேட்டு

ஆபோகிகள்கூட வருத்தம் கொண்டார்கள். கேலியும் சிரிப்புமாகத் துவங்கிய பின்னிரவுக் கொண்டாட்டம் வருத்தமாக முடிவுற்றது.

அதிகாலை வெளிச்சம் ஆற்றின் மீது படரும் போது ஆபோகிகள் கொண்டுவந்த போதை வஸ்துகள் மொத்தமும் தீர்ந்துபோனதால் பை நிறைய நாணயங்களுடன் அவர்கள் வீடு திரும்ப முயன்றார்கள்.

அப்போது ஒருவன் சொன்னான்,

“பாதுஷா ஒளரங்கசீப் செத்து மண்ணுக்குள் புதையுண்டு விட்டார். போல்வார் மைதானத்தில் நாளை மதுக்கடை திறப்போம். யார் என்ன செய்துவிட முடியும்.”

மற்ற ஆபோகிகள் அதை ஏற்றுக்கொண்டார்கள்.

அதன்சில நாட்களில் போல்வார் மைதானத்தில் மிகப்பெரிய மதுக்கூடம் ஒன்று திறக்கப்பட்டது. சாராயமும் பாங்கியும் வழிந்தோட ஆரம்பித்தன.

மரணசிம்மாசனம்

ஒளரங்கசீப்பின் மரணத்திற்குப் பிறகு யார் இந்துஸ்தானை ஆளப்போகிறார்கள் எனப் புரியாமல் டெல்லிவாசிகள் குழம்பிப் போயிருந்தார்கள். பெரும் விருட்சம் ஒன்று முறிந்துவிழுந்து விட்டது என மௌலவிகள் புலம்பிக்கொண்டிருந்தார்கள். ஒளரங்கசீப்பைப் போல பரந்த ராஜ்ஜியத்தைப் பரிபாலனம் செய்து தன் முழுக்கட்டுப்பாட்டில் அரசாளக்கூடிய இன்னொரு பேரரசன் வரமுடியாது எனப் பாரசீகத் தூதுவர் அன்சாரி வருந்திக் கொண்டிருந்தார்.

அடுத்த அரசனாக ஷா ஆலம் வருவான் எனச் சிலரும், முகமது ஆஜம் வரக்கூடும் எனச் சிலரும், இல்லை காம்பக்ஷி பொருத்தமானவர் எனச் சிலரும் பேசிக்கொண்டார்கள்.

மயிலாசனத்தில் அமர்வது என்பது எளிதானதா என்ன?

இருட்டில் உலவும் வௌவால்கள்போல மனிதர்கள் அரண்மனையில் ரகசியமாக சந்தித்துக்கொண்டார்கள், தகவல்களைப் பரிமாறிக் கொண்டார்கள். ஒற்றர்கள் சங்கேத செய்திகளைக்கொண்டு சென்றார்கள்.

இரண்டு நாட்களுக்கு முன்பாக முகமது ஆஜமைக் கொல்வதற்காக உணவில் விஷமிட்ட சதி முறியடிக்கப்பட்டது.

சதியில் தொடர்பு என சந்தேகிக்கப்பட்ட மூன்று சமையற்காரர்களையும் விஷம் தயாரித்துத்தந்த மருத்துவரையும், இந்தச் சதிவேலைகளை முன்னின்று நடத்திய பானு பேகத்தையும் கைது செய்து உடனடியாக சிரச்சேதம் செய்ய உத்தரவிட்டார்கள். அவர்களின் துண்டிக்கப்பட்ட தலைகள் பொது மக்கள் பார்வைக்காக ஊசிக்கோபுரத்தில் தொங்கவிடப்பட்டிருந்தன.

இதைப் போல எத்தனை தலைகள் துண்டிக்கப்படப் போகின்றதோ, என்ன சதியெல்லாம் நடைபெறப்போகிறதோ எனப் புரியாத டெல்லிவாசிகள் குழம்பிப்போயிருந்தார்கள். அவர்கள், தாரா ஷிகோவின் மீது கொண்டிருந்த அன்பை ஒளரங்கசீப்பின்மீது வைக்கவில்லை, மாமன்னர் ஒளரங்கசீப்பின் ஆட்சியை வெறுத்தார்கள். தாரா ஷிகோ மக்களின் அபிமானத்தையும் அன்பையும் சம்பாதித்திருந்தான். அதற்கு தண்டனையாகத்தான் ஒளரங்கசீப்பால் டெல்லி மாநகரின் வீதிகளில் சங்கிலியால் பிணைக்கப்பட்டு, கைதியாக இழுத்துச் செல்லப்பட்டு, ஒளரங்கசீப்பின் ஆட்களால் கொல்லப் பட்டான்.

டெல்லி அரியணை ரத்தக்கறை படிந்தது. இதுவரை எளிய மனிதன் ஒருவனும் அதில் அமர்ந்ததேயில்லை.

ஆட்சியைக் கைப்பற்றுவது பற்றிக் கூறும்போது தாஜ் யா தக்தா என்றுதானே சொல்கிறார்கள். அதாவது ஒன்று மணிமுடி அல்லது கொலைக்கம்பம்.

அல்லாவின் கருணையில்லாமல் மரத்திலிருந்து ஒரு இலைகூட உதிர்ந்துவிடாது என்பதை மொகலாய இளவரசர்கள் அறிந்த போதும் அந்தக் கருணை தன் மீது விழுந்துவிடாதா எனக் காத்துக்கிடந்தார்கள்.

அரசபதவி என்பது ஒரு மரணசிம்மாசனம், அதில் ஏறி அமர்ந்தவன் மெல்ல தனது மனிதத்தன்மைகளை இழந்துபோவான். அவனை சிம்மாசனம் ஆட்சி செய்யத்துவங்கிவிடும். அரியணையில் அமர்ந்த பலரும், கைது செய்யப்பட்டு சிறைப்பட்டு நொந்து புலம்பியோ, சதி செய்தோதான் இறந்துபோயிருக்கிறார்கள்.

முகமது ஆஜமைக் கொல்வதற்காக சதி செய்தவர்களில் முக்கிய நபராக இருந்த ஆஷிப்கான் மட்டும் தப்பிவிட்டான் என அரண்மனையில் பேசிக்கொண்டார்கள். அவனைத் தேடி காவல்வீரர்கள் டெல்லி எங்கும் சுற்றிக்கொண்டிருந்தார்கள். இதற்கிடையில் பகதூர் ஷாவைக் கைது செய்துவிட்டார்கள். அவரை ரகசியமான இடத்திற்கு அழைத்துப் போய்க் கொன்றுவிட்டார்கள் என்றும் ஒரு தகவல் கசிந்துகொண்டிருந்தது.

•••

சம்புவிற்கு இருபது வயது கடந்திருந்தது. அவன் துடிப்பான வாலிபன். தேர்ந்த நீச்சல்காரன், படகோட்டி. மாலைநேரம் பெருக்கெடுத்து ஓடும் யமுனை ஆற்றை அவன் பார்த்துக்கொண்டிருந்தான். பனிக்காலத்தின் மாலை நேரம் வேகமாக இருட்டிவிடுகிறது. கோடையின் இருளைப் போலின்றி, குளிர்காலத்தின் இருள் அடர்த்தியானது. வெண்ணெய் உருகி வழிவது போன்ற இருளது.

கண்முன்னே விரிந்திருக்கும் பிரமாண்டமான ஆற்றைத் தன் அகன்ற கை கொண்டு மூடிவிடுகிறது இருள். ஒவ்வொரு நாளும் நடக்கும் நிகழ்வுதான் என்றாலும் அதைக் காணும் போது அடையும் வியப்பு குறைவதேயில்லை.

சம்பு ஆற்றைப் பார்த்துக்கொண்டேயிருந்தான். தண்ணீரின் வேகம் அதிகமாகியிருந்தது. பகலை விடவும் இரவில்தான் ஆற்றின் வேகம் அதிகமாகிறது. மனிதர்களுக்காக அது பகலில் ஒடுங்கிக்கொள்கிறதோ என்னவோ.

ஆறு ஒவ்வொரு நாளும் புதியது, அதன் விநோதங்களை நாம் கணிக்கவே முடியாது, அதிலும் யமுனையின் அழகிற்கு நிகரேயில்லை. சில நாட்கள் அவன் அதிகாலையில் ஆற்றின் மீது படரும் சூரிய வெளிச்சத்தை ரசித்துப் பார்த்துக்கொண்டிருப்பான். ஓடுவது தண்ணீரில்லை. வெளிச்சம், தூய வெளிச்சம். அதன் மினுமினுப்பும்

வசீகரமும் மனதை உற்சாகம் கொள்ளச் செய்யும். ஆறு எப்போதும் எதையோ முணுமுணுத்துக் கொண்டே யிருக்கிறது. அது மனிதர்களுக்கு எதையோ நினைவூட்டுகிறதோ என்னவோ. அந்தக் குரலை படகோட்டிகளும் சுமைகூலிகளும் அவனைப்போல படித்துறையில் வாழ்பவர்களும் நன்றாக அறிந்திருந்தார்கள்.

யமுனை ஆற்றில் திலோனி என்ற இடம் வணிகப்பொருட்கள் வந்திறங்கும் முக்கியமான ஊராகும். ஒவ்வொரு நாளும் நூற்றுக் கணக்கான படகுகள் அங்கே வந்து சேர்கின்றன. பகல் நேரத்தில் அந்தப் படித்துறைகளில் ஆள்கூட்டம் தள்ளுமுள்ளாக இருக்கும். சுமை தூக்கிகளும் பல்லக்குகளும், சுங்கப் பணியாளர்களும் படகோட்டிகளும் சப்தமிட்டபடியே இருப்பார்கள். காலை நான்கரை மணிக்கெல்லாம் படகுகள் வரத்துவங்கிவிடும்.

எந்தப் படகில் வரும் சரக்கை யார் இறக்குவது என சுமைகூலிகளுக்குள் போட்டியும் சண்டையும் நடப்பதுண்டு. சிலநேரம் படகுகளில் குதிரைகள் ஏற்றிவரப்படுவதும் உண்டு. அந்தக் குதிரைகளை இறக்குவதற்கென்று தனியான பணியாளர்கள் இருந்தார்கள். அவர்கள் படகிலிருந்து குதிரைகளைப் படித்துறைக்கு இறக்கிக் கூட்டிவருவதை வேடிக்கை பார்ப்பதற்கென்றே சிறார்கள் கூடியிருப்பார்கள். அவர்கள் குதிரை கரைக்கு வந்து சேர்ந்தவுடன் கூச்சலிடுவார்கள். சம்புவும் அப்படி சிறுவனாக குதிரைகளை வரவேற்றுக் கூச்சலிட்டிருக்கிறான். இப்போது அவன் முழுமனிதன். ஆனால், அவனது நண்பர்களைப் போல திருமணம் செய்துகொள்ளவில்லை. தனக்கென வீடு கட்டிக்கொள்ளவில்லை. அவன் உலகம் படித்துறை மட்டுமே.

அந்தப் படித்துறைக்கு ஏழு வயதில் அவன் வந்து சேர்ந்தான். தானாக வந்து சேரவில்லை. தரியாபூர் திருவிழாவிற்கு வந்துவிட்டு ஊர் திரும்பும் நேரம் பெற்றோர்களைத் தவறவிட்டுவிட்டான். அவனைத் தேடிக் காணாமல் அவர்கள் ஊர் திரும்பியிருந்தார்கள். யாராவது தெரிந்தவர் தென்பட்டால் அவர்களுடன் படகேறி ஊருக்குப் போய்விடலாம் என திலோனிக்கு வந்த சம்புவிற்கு அந்தப் படகுத்துறையும் அதன் பரபரப்பான சந்தையும் ஆள்கூட்டமும் பிடித்துப்போய்விட்டது. அங்கேயே தங்கிவிட்டான். அவனைத் தேடி யாரும் வரவும் இல்லை. வறுமையில் வாடும் குடும்பத்தில் ஒருவன் காணாமல் போய்விட்டால் சுமை குறைந்தது என்றுதானே நினைப்பார்கள். யார் அவனைத் தேடி வரப்போகிறார்கள்.

உண்மையில் அவனை வசீகரித்தது படித்துறையில்லை. யமுனை ஆறுதான். தனது ஏழு வயதில் அவன் முதன்முறையாக அதைப் பார்த்தபோது பந்தயக்குதிரையைப் போல ஆவேசமாக ஓடிக்கொண்டிருந்தது. படித்துறைகளில் தண்ணீர் வந்து மோதும் வேகமும், படகுகளின் தத்தளிப்பும், அடிவானத்தின் நீலநிறமும், படகோட்டிகளின் கூச்சலும் அவனுக்கு மயக்கமூட்டின. இங்கேயே

இப்படியே இந்தக் காட்சிகளைப் பார்த்தபடியே தங்கிவிட மாட்டோமா என ஆசைப்பட்டான். ஆனாலும் அவன் கண்கள் தெரிந்தவர்கள் யாராவது தென்படுவார்களா என ரகசியமாக தேடிக்கொண்டுதானிருந்தன.

தரியாபூர்த் திருவிழா முடிந்து ஆட்கள் திரும்பிக்கொண்டிருந்தார்கள். பயணிகளை ஏற்றிச் செல்லும் படகுகளில் முக்காடு இட்ட முகங்கள் சோர்ந்துபோய்த் தென்பட்டன. ஒரு படகோட்டி அவனைக் கைகாட்டி வருகிறாயா எனக் கேட்டான். இல்லை எனத் தலையசைத்தபடியே யமுனை ஆற்றைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

ஆற்றின் தொலைவில் வரிசை வரிசையாக படகுகள் வந்துகொண்டிருந்தன. எங்கிருந்து இவை வருகின்றன, யார் இதில் வருகிறார்கள் என யோசித்தபடியே நின்றுகொண்டிருந்தான். படகுகள் ஆற்றின் கரையை நோக்கி வரவர, சுமைகூலிகள் கூச்சல் அதிகமாகியது. அந்தக் கூட்டத்தில் சம்புவும் ஓடினான்-. அவன் தலையிலும் ஒரு சுமை ஏற்றப்பட்டது. அப்படித்தான் அவன் திலோனிப் படித்துறையில் வசிக்கத் துவங்கினான்.

சிலநேரம் அவன் யோசிப்பதுண்டு, ஒருவேளை ஊருக்குப் போயிருந்தால் அவனும் தந்தையைப் போலவே விவசாயம் செய்துகொண்டு மண்வீட்டிற்குள் முடங்கிப்போயிருக்கக்கூடும். இப்படி திலோனியில் விதவிதமான மனிதர்களையும் ருசியான உணவுவகைகளையும், குடியையும் அழகான இளம்பெண்களையும் அனுபவித்திருக்க முடியாது. இது வெறும் படித்துறையில்லை, சொர்க்கத்தின் நுழை வாயில். இந்தப் பதிமூன்று வருஷங்களில் அவன் நிறைய அனுபவித்து விட்டிருந்தான்.

உலகம் இத்தனை இன்பங்களால் ஆனது என்பதை திலோனிதான் அவனுக்கு அறிமுகம் செய்து வைத்தது. படகோட்டி களில் பலர் அவனது நண்பர்கள். அவர்களுடன் ஒன்றாகக் குடிப்பதும், சண்டையிடுவதும் ஆற்றில் படகோட்டியபடியே சுற்றுவதும் இயல்பாகியிருந்தது. அவனுக்கென்று திலோனியில் யாருமில்லை. ஆனால், எல்லாமும் அவனது சொந்தம்தான். உருவாக்கிக்கொள்வதுதானே உறவுகள்.

இரவில் சரக்கு ஏற்றிய படகுகள் வருவது அபூர்வம், எப்போதாவது ஒரு சில படகுகள் வரக்கூடும். ஆனால், அதை விடியும் வரை கரையை ஒட்டி நிறுத்தி வைத்திருப்பார்கள். சரக்கேற்றி வந்த படகுகளைப் பாதுகாப்பதற்காக காவல்வீரர்கள் தீப்பந்தங்களுடன் நிற்பதுண்டு. சில கூலிகள் படகிலே சுமை தூக்குவதற்காகத் தங்கி விடுவதும் உண்டு. அந்தப் படகுதுறைத் தனியுலகம், அங்கே சம்புவைப் போல பலநூறு மனிதர்கள் வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.

சம்பு பெரும்பான்மை இரவுகளில் கரையில் கட்டப்பட்ட படகில் ஏறிப்

படுத்துக்கொண்டுவிடுவான். ஆற்றின் குரலைக் கேட்டபடியே உறங்குவது அலாதியான சுகம். யமுனாதான் தனக்குத் தாய். அதன் அரவணைப்பு இல்லாமல் எப்படி உறங்குவது.

அன்றைக்கு சம்புவிற்கு உறக்கம் கூடவேயில்லை. வானில் மினுக்கும் நட்சத்திரங்களைப் பார்த்தபடியே படகில் படுத்துக்கிடந்தான். ஆற்றின் தொலைவில் திடீரென வெளிச்சம் ஊர்ந்துகொண்டிருந்தது. சில வேளைகளில் மீனவர்கள் பின்னிரவில் மீன்பிடித்துக் கொண்டிருப்பார்கள். ஆனால், அந்த வெளிச்சம் ஆற்றின் போக்கில் ஊர்ந்து வந்து கொண்டேயிருந்தது. சரக்கு ஏற்றிவரும் படகின் வெளிச்சம் இப்படி இருக்காதே என அவன் எழுந்து நின்று பார்த்தான். விட்டு விட்டு அந்த வெளிச்சம் தென்பட்டது.

என்ன செய்கிறான் அந்தப் படகோட்டி? ஒருவேளை குடித்துவிட்டு போதையில் படகுத்துறை எந்தப் பக்கமிருக்கிறது என அறியாமல் தடுமாறுகிறானா. இல்லை முதன்முறையாக திலோனிக்கு வரும் படகோட்டியா? அவன் கரையில் நின்றபடியே ஆற்றில் பந்தவெளிச்சம் ஊர்ந்துகொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்தப் படகு ஆற்றின் போக்கில் இழுபட்டுக்கொண்டிருந்தது. அதை உன்னிப்பாக கவனித்த சம்புவிற்குத் தோன்றியது, அந்தப் படகில் படகோட்டி இல்லை. படகு தானே அலைந்துகொண்டிருக்கிறது. அது சரக்கு ஏற்றிவந்த படகில்லை. பயணிகள் படகு. ஒருவேளை படகில் ஆட்கள் எவருமில்லையோ.

யாரோ தண்ணீருக்குள் குதித்து படகுத்துறையை நோக்கி வருவதைப் போலத் தெரிந்தது. இருட்டில் முகம் தெரியவில்லை. ஆனால், அவன் கையில் இருந்த குறுவாளை ஆற்றில் வீசி எறிவது தெரிந்தது.

யார் அந்த ஆள். சம்பு அந்த உருவம் படகுத்துறையை ஒட்டி நிறுத்தப்பட்ட குதிரை ஒன்றில் ஏறிப் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

சம்புவைப் போலவே அந்த பந்த வெளிச்சத்தைப் பார்த்துக் கொண்டிருந்த சுமைகூலிகளில் ஒருவன் ஆற்றில் குதித்து படகை நோக்கி நீந்திப்போகத் துவங்கியிருந்தான். அவன் படகினை நெருங்கும்போது அதில் ஒரு ஆள் மயங்கிக் கிடப்பதுபோலத் தெரிந்தது. அவன் படகின் மேலேறியபோது உள்ளே ஒரு மனிதன் இறந்து கிடந்தான். அவனுக்கருகில் படகோட்டியும் கொல்லப்பட்டுகிடந்தான். படகில் ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. இப்போதுதான் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பந்தத்தைக் கையில் எடுத்து இறந்து கிடந்த ஆளைப் பார்த்தான். வணிகனைப் போலத் தெரியவில்லை, யாரோ அரசாங்கத்து ஆள்.

அந்தப் படகு கரையை நோக்கி வரத்துவங்கியது. சம்பு அந்தப் படகை எதிர்கொள்வதற்காக முன்னே சென்றான். படகு கரைக்கு வந்தபோது

கூலி பந்தத்தை உயர்த்திப் பிடித்தபடியே சொன்னான்.

“ஒரு ஆள் படகில் செத்துக்கிடக்கிறான்.’’

சம்பு அந்தப் படகில் ஏறி இறந்து கிடந்தவனைப் புரட்டிப் பார்த்தான். அறுபது வயதிருக்கக்கூடும். ஆள் பருத்த வயிறு கொண்டிருந்தான். குட்டையான கால் கைகள். அவன் அணிந்திருந்த உடை அரசகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அணிவது போலிருந்தது.

அவன் கையில் நீலமோதிரம் அணிந்திருந்தான். சாவதற்கு முன்பு நிறைய குடித்திருக்கிறான் என்பது அவனது முகம் ஊதிப்போயிருப்பதில் தெரிந்தது. அடிவயிறு கிழிபட்டு இறந்துபோயிருக்கிறான். இறந்து கிடந்தவனின் சட்டை கிழிக்கப்பட்டிருக்கிறது. கையில் கீறல்கள் தெரிந்தன. சாவதற்கு முன்பு அவன் போராடியிருக்கிறான்.

அந்தப் படகில் பட்டுத்துணியில் ஏதோவொரு பொருள் சுற்றப் பட்டிருந்தது. அந்தத் துணியின் மீது அரக்கு முத்திரை பதிக்கப்பட்டிருந்ததால் அது ராஜாங்க ரகசியம் என்பதுபோலத் தெரிந்தது. அவன் ஒற்றனா, இல்லை ரகசியத் தகவலைக் கொண்டு போகிறானா. அந்தப் பட்டுத்துணியைக் கையில் எடுத்துப் பார்த்த சம்பு அதை ஆற்றில் தூக்கி எறிய மனதின்றி மறைத்து வைத்துக் கொண்டான்.

அந்த ஆள் எதற்காக இரவில் படகில் வந்திருக்கிறான். எங்கே போகிற மனிதன் அவன். இந்த இரவில் காவலர்களை அழைத்து இறந்தவனை ஒப்படைப்பதா இல்லை ஆற்றில் அப்படியே தூக்கி எறிந்துவிடுவதா எனக் குழப்பமாக இருந்தது.

அதற்குள் கூலி இரண்டு காவலர்களை அழைத்துக்கொண்டு வந்திருந்தான். அவர்கள் படகில் வேறு யாரும் இறந்துகிடக்கிறார்களா எனப் பரிசோதனை செய்தார்கள்.

பின்பு அந்த இரண்டு உடல்களையும் கல்மண்படத்திற்குத் தூக்கிக் கொண்டுவரச் சொன்னார்கள். ஆளுக்கு ஒரு கை பிடித்து இறந்துபோன உடலைத் தூக்கிக்கொண்டு போனார்கள்.

காவலர்களில் ஒருவன் சொன்னான்,

“இந்தப் படகு கோரியா படகுத்துறையைச் சேர்ந்தது. படகில் முத்திரை இடப்பட்டிருக்கிறது. இந்த ஆள் கோரியாவில்தான் படகில் ஏறியிருக்கக் கூடும்.”

அவன் யார் என அறிந்துகொள்வதில் சம்பு ஆர்வம் காட்டவில்லை. யாராக இருந்தால் நமக்கென்ன?

காவலர்கள் அந்த உடலின் அருகில் பந்தம் ஏந்தியபடியே உட்கார்ந்திருந்தார்கள்.

பிணத்தைத் தூக்கிவந்த தீட்டு போவதற்காக ஆற்றில் குளிக்க

வேண்டும் போலிருந்தது.

தண்ணீரின் குளிர்ச்சி உடலைத் தீண்டியது.

யமுனாவில் பிணம் வரத்துவங்கியிருக்கிறது. இன்னும் என்னவெல்லாம் வருமோ. ஒருவேளை இறந்துபோனவனும் பேராசை பிடித்த வணிகர்களில் ஒருவனாகத்தான் இருப்பானோ என்னவோ.

சம்பு ஆற்றினுள் மூழ்கிக் குளித்தான்.

மறுநாள் காலை இறந்து கிடந்தவன் முகமது ஆஜமைக் கொல்வதற்காக சதி செய்த ஆள் என்பதும் அவன் தப்பி வந்தபோது பகதூர் ஷாவின் ஆட்களே கொன்று படகில் வீசியிருக்கிறார்கள் என்றும் பேசிக்கொண்டார்கள்.

சம்புவிற்கு எதுவும் புரியவில்லை. இது என்ன புதுக்கதை? ஒரு சிம்மாசனத்திற்காக அண்ணன் தம்பிகள் இப்படி கொலை செய்யத் துணிவார்களா. அவர்கள் மனதில் ஒரே தாயின் முலைப்பாலை அருந்திய நினைவே இருக்காதா.

அதைக் கேட்ட படகோட்டி சொன்னான்,

“சம்பு நீயும் நானும்தான் உறவைப் பற்றி யோசிப்பவர்கள், அரியணைக்காகச் சண்டையிடும் மன்னர் குடும்பத்தில் உறவுகள்தான் சதி செய்யும் முதல் நபர்கள். மன்னர்களால் மனைவி, பிள்ளைகளை நம்பமுடியாது. மாமன்னர் ஔரங்கசீப்கூட தன் பிள்ளைகளை நம்பாதவர். மனைவிகூட அவரை விரும்பியபோது பார்க்கமுடியாது.

தனி அறையில் வெள்ளை உடையில் ஒரு ஆவிபோல அவர் சுற்றிக் கொண்டிருந்தார். டெல்லிக்கே பாதுஷாதான். ஆனால், மனதில் ஒரு துளி சந்தோஷமில்லை. அவரைவிட நான் சந்தோஷமாகத் தானிருக்கிறேன். இந்த ஒரு படகு போதும் என் வாழ்விற்கு. யமுனைத் தாய் என்னை சந்தோஷப்படுத்த உடனிருக்கிறாள். அவளது கருணை போதும் இந்த வாழ்க்கைக்கு.”

அந்தப் படகோட்டி சொன்னது நிஜம், சம்புவும் அப்படியான ஒரு வாழ்க்கையைத்தான் விரும்பினான்.

எதற்காக இந்த அற்பர்கள் இப்படி அரியணைக்கு அடித்துக் கொண்டு சாகிறார்கள். இந்த யமுனையில் படகோட்டிக் கொண்டு சர்வசுதந்திரமாகச் சுற்றியலைவதை விடவா அதிகாரம் சந்தோஷம் தந்துவிடும்.

சம்புவுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால், அவன் அந்தப் பிணம் அவன் வாழ்க்கையை முற்றிலும் புரட்டிப் போடப்போகிறது என்பதை அன்று அறிந்திருக்கவில்லை.

பிஷாடன்

தூமகேது கைது செய்யப்பட்ட போது, சத்கர் தேசத்தை ஆட்சி செய்து வந்தவன் பிஷாடன். ஔரங்கசீப்பிற்குக் கப்பம் செலுத்துகிற ஒரு சிற்றரசன். பெருங்குடிகாரனும் போகியும், உறக்கமற்ற நோயால் பீடிக்கப்பட்டவனும் முன்கோபியுமான பிஷாடன் நீதி விசாரணைக்காக வரும் எந்த வழக்கையும் விசாரணை செய்ததேயில்லை.

ஒருவன் மீது குற்றவாளி என்ற சந்தேகம் வந்து விட்டபிறகு எதற்கு விசாரணை? நிரபராதிகள் தன்மீது ஒரு சந்தேகமும் வராமல் நடந்துகொள்ள வேண்டாமா என பிஷாடன் நினைத்தான். ஆகவே அவனது நீதிபரிபாலனம் எளிதானது.

ஒரு நாளைக்கு இரண்டே இரண்டு வழக்குகளை மட்டுமே எடுத்துக்கொள்வான், அதில் ஒரு வழக்கிற்குத் தூக்குத் தண்டனை. மற்ற வழக்கிற்கு விடுதலை, அவ்வளவுதான் அவனது நீதிபரிபாலனம்.

யாரை விடுவிப்பது, யாரைத் தூக்கில் ஏற்றுவது என்பது அவனது மனப்போக்கின் விசித்திரம்.

அதைவிடவும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் ஆண்டுக்கணக்கில் கொட்டடியில் காத்துக்கொண்டேயிருக்க வேண்டும். எப்போது வேண்டுமானாலும் அவர்கள் தூக்கில் ஏற்றப்படலாம் அல்லது சிரச்சேதம் செய்யப்படலாம். மரணத்திற்காகக் காத்திருப்பதின் வலியை அவர்கள் அணு அணுவாக அனுபவிக்க வேண்டும், அப்படி வேதனைப்பட்டு கண்ணீர் விடுவதை பிஷாடன் வெகுவாக ரசித்தான்.

ஒரு ஆளை மட்டும் தூக்கிலிட்டுக் கொல்வதைவிடவும் ஒரே நேரத்தில் நூறு பேரைத் தூக்கிலிட்டுக் கொல்வது சிறந்தது இல்லையா என நூறு பேர்களுக்கு ஒரே நேரத்தில் மரணதண்டனை நிறைவேற்றுவான். நூறு பேர்கள் கிடைக்காதபட்சத்தில் விசாரணை இல்லாமலே அப்பாவிகளைத் தூக்கிலிட்டுவிடுவான். அவனது விளையாட்டுப் பொருட்களில் ஒன்றாக இருந்தது நீதி.

எல்லோருக்கும் சரியான நீதி வழங்குவதில் அரசனுக்கு என்ன லாபமிருக்கிறது?

நீதி கிடைக்குமா, கிடைக்காதா என மக்கள் தடுமாற வேண்டும், கைகூப்பிக் கண்ணீர்விட வேண்டும். அநியாயமாகக் கொல்லப்பட்ட போதும் வாயை மூடிக்கொண்டு மௌனமாக அடங்கியிருக்க வேண்டும். அதுதானே அதிகாரத்தின் ருசி. அதை அனுபவிப்பதற்குத் தானே அரசனாகியிருக்கிறோம் என பிஷாடன் நினைத்துக் கொள்வான்.

இன்னும் சில தருணங்களில் தூக்குத் தண்டனை பெற்ற அத்தனை பேரையும் விடுதலை செய்வதாக அறிவித்துவிட்டு அவர்கள் சந்தோஷமாக வெளியேறும்போது மான்களை மறைந்திருந்து

வேட்டையாடுவது போலத் துரத்திச் சென்று கொல்ல ஆணையிடுவான். அதில் ஒரு சந்தோஷம்.

எதிர்பாராமல் ஒரு மனிதனைக் கொல்வது எத்தனை சந்தோஷமானது என்பதை பிஷாடன் முழுமையாக அறிந்திருந்தான். மூர்க்கமும் வன்மும் கொண்ட அவனுக்கு அரசபதவி என்பதே அதிகாரம் செலுத்துவதற்காகவும் இன்பம் அனுபவிப்பதற்காகவும் மட்டுமே உருவாக்கப்பட்டது என்ற எண்ணமிருந்தது.

பிஷாடனின் நியாயசபை கடவுளின் சபையைப் போன்றது, அவன் ஒருவனே முடிவு எடுக்கக்கூடியவன். அங்கே குற்றவாளி வாயைத் திறந்து பேசமுடியாது, குற்றம் பற்றிய தகவல்களை எடுத்துச்சொன்னவுடன் அவன் குற்றவாளியை ஏறிட்டுப் பார்ப்பான், அந்த நிமிசம் அவன் மனதில் தோன்றுவதுதான் தண்டனை.

ஒருநாளில் இரண்டு வழக்குகள் மட்டுமே எடுத்துக் கொள்ளப்பட்ட தால் பிஷாடனின் தீர்ப்பிற்காக பல்லாயிரம் வழக்குகள் காத்துக் கொண்டிருந்தன.

குற்றம் சுமத்தப்பட்ட அத்தனை பேரையும் சிறையில் அடைக்க இடமில்லாமல் போய்விட்டதால் அவர்களுக்கென ஒரு சிறுநகரை பிஷாடன் உருவாக்கியிருந்தான். அந்த நகரை காலா என அழைத்தார்கள். அது ஒருவிதத் திறந்தவெளிச்சிறைச்சாலை.

அந்த நகரில் வசித்தவர்கள் அனைவரும் நீதிக்காகக் காத்திருந்தார்கள். சிலர் தூக்குத்தண்டனை அறிவிக்கப்பட்டு சாவை எதிர் நோக்கியிருந்தார்கள்.

காலாவைச் சுற்றிலும் மிகப்பெரிய கற்கோட்டை கட்டப்பட்டிருந்தது. இரண்டு சுற்றுக் கோட்டையாக அமைக்கப்பட்டிருந்தது. இடையில் பெரிய அகழியிருந்தது. கோட்டையின் மீது பகலிரவாக காவலர்கள் காவலிருந்தார்கள்.

காலாவினுள் ஏழு கிணறுகளிருந்தன, பெரிய குளியல் கூடமும், தச்சுவேலைகள், நெசவு வேலைகள் செய்வதற்காகப் பணிமனையும் இருந்தன. பெரிய பூந்தோட்டம் ஒன்றும் உள்ளே அமைக்கப் பட்டிருந்தது. குற்றவாளிகளே அங்கே தோட்டப்பணிகளைச் செய்தார்கள்.

சில குற்றவாளிகள் நீதிவிசாரணைக்கு அழைக்கப்படாமலே முப்பது, நாற்பது ஆண்டுகளை காலாவில் கழித்திருக்கிறார்கள், சிலர் காலாவினுள் இறந்தும் போயிருக்கிறார்கள். இறந்தவர்களை உள்ளேயே புதைத்துவிடுவதால் யார் இறந்து போனார்கள் என உலகிற்குத் தெரியவே தெரியாது.

அப்பாவியான தூமகேதுவும் அப்படித்தான் காலாவில் அடைக்கப் பட்டான். தன்னை என்ன செய்யப்போகிறார்கள் எனத் தெரியாத

தூமகேது இரவில் கோட்டை மதில் மீது எரியும் தீப்பந்தங்களை வெறித்துப் பார்த்தபடி யோசித்துக் கொண்டிருந்தான்.

யாரோ முன்பின் தெரியாத ஒரு இடையன் ஏன் தன்னை திருடன் என அடையாளம் காட்டினான்?

இதன் பெயர்தான் விதியா?

நளா சொன்னதைப்போல கடவுள் தன்னைக் கைவிட்டுவிட்டாரா?

இல்லை, குற்றவாளியாக்கப்பட்டு துன்பங்களை அனுபவிக்க வேண்டியதும் கடவுளின் விருப்பம்தானா?

கடவுள் ஏன் தன்னைப் போன்ற ஏழைகளுடன் விளையாடுகிறார்?

அவன் விதியைப் பற்றி ஒருபோதும் சிந்தித்தவனேயில்லை, ஆனால், அவன் மீது சுமத்தப்பட்ட திருட்டுக்குற்றம் அவனை விதியை நம்பச் செய்தது.

ஒருவன் விதியை நம்பத் துவங்கிய மறுநிமிசம் பலவீனமானவன் ஆகிவிடுகிறான். பின்பு அவனால் அதிலிருந்து விடுபடவே முடியாது.

தூமகேதுவிற்கும் அதுவே நடந்தது.

நிழல்நகரம்

சத்கர் மத்திய இந்தியாவின் வணிக நகரங்களில் ஒன்று. ஒருகாலத்தில் அது பெரிய தேசமாகப் பரந்து விரிந்திருந்தது. உட்பகையும் சூழ்ச்சிகளும் ஒன்று சேர்ந்து சத்கரைத் துண்டாடியதால் ஒன்பது பர்கானாக்கள் கொண்ட சிறிய பிரதேசமாகியிருந்தது. சத்கரைச் சுற்றிலும் சிறியதும் பெரியதுமாக நிறைய மலைகள் இருந்தன. சத்கர் நகரின் மேற்கில் சூர்ஜா நதி ஓடிக்கொண்டிருந்தது. அந்த நதி வழியேதான் சத்கருக்கு சரக்குகள் கொண்டுவரப்பட்டன.

சத்கரின் கிழக்கே நிறைய விவசாய கிராமங்கள் இருந்தன. வடக்கே டெல்லி செல்லும் பிரதான சாலை நீண்டோடிக் கொண்டிருந்தது. ஒரேயொரு முறை பேரரசன் ஔரங்கசீப் தனது படையோடு வந்த போது சத்கரில் தங்கியிருக்கிறார்.

சத்கரின் சிறப்பு அதன் புகழ்பெற்ற வணிகச் சந்தை. இந்தியாவின் மிக நீண்ட வணிகவீதி சத்கரில்தான் இருந்தது. நூர் மஹாலில் துவங்கி வடக்கே பசந்த்விலாஸ் வரை அந்த வணிகவீதி நீண்டோடி அமைந்திருந்தது, அதன் பெயர் கினாரி பஜார்.

முகப்பில் ஒரு வரிசையும் அதன் உள்ளோடி ஒரு வரிசையுமாகக் கடைகள் அமைக்கப்பட்டிருந்தன. பரபரப்பான அந்த வணிகவீதிக்குள் ஒரு துர்க்கை கோவிலும் இருந்தது. அந்தக் கோவிலின் படிக்கட்டுகள் முழுவதும் குரங்குகள் நிரம்பியிருந்தன. கோவிலைச் சுற்றி ரோகிகளும்

பிச்சைக்காரர்களும் எப்போதுமிருந்தனர்.

வணிகச்சந்தையை ஒட்டி வெளியூர் வணிகர்களுக்கான தங்குமிடங்கள், பொருள் காப்பகங்கள், வாகன ஓட்டிகளுக்கான சத்திரங்கள் நிறைய இருந்தன.

கினாரி பஜாரில் தங்கம் வெள்ளி விற்பனை செய்யும் கடைகள்; கோமேதகம், பவளம், முத்து விற்கும் அங்காடிகள்; சீனத்தட்டுகள், கூஜா, கெண்டி, கோப்பை விற்கும் கடைகள்; பட்டுவணிகர்களின் பெரியதும் சிறியதுமான கடைகள்; எகிப்தியநாட்டு ஹூக்கா விற்பவர்கள்; பாரசீகக் கம்பளம் விற்பவர்கள்; எண்ணெய் வணிகர்கள்; கூண்டு பறவைகள் விற்பவர்கள்; மரமேஜைகள், அலமாரிகள், பங்கா விற்பவர்கள்; குதிரைமுடியில் செய்த அலங்காரப்பொருள் விற்பவர்கள்; தந்தம், இரும்பு, செம்பு விற்பனை செய்யும் அங்காடிகள்; வெண்கலப்பொருட்கள், வாள், ஈட்டி, குறுவாட்கள் விற்பவர்கள்; கோதுமை, நெல், நவதானிய வணிகர்கள் என எண்ணிக்கையற்ற கடைகள் இருந்தன.

உள்ளோடும் வீதியை துராய் பஜார் என அழைத்தார்கள், அந்த வரிசையில் கடை வைத்திருப்பவர்கள் அத்தனை பேரும் சிறு வணிகர்கள், வாசனைத் திரவியங்கள், அலங்கார வேலைப்பாடு செய்பவர்கள், குங்குமம் விற்பவர்கள், சந்தனம் அரைத்து விற்பவர்கள், ஜரிகை வேலை செய்பவர்கள், நீர்க்குவளைகள் விற்பவர்கள், எள், கடுகு, சீரகம், வெங்காயம், புளி, கருப்பட்டி, மஞ்சள், பாக்கு, மிளகு, சுக்கு, தேன், சந்தனம், அகில், பன்னீர், கற்பூரம், சாந்து, புனுகு, கஸ்தூரி, தைலம், பூக்கள் விற்கும் கடைகள், தாயத்து விற்கும் கடைகள், பழக்கடைகள். சர்பத்விற்பவர்கள், தலைப்பாகை விற்பவர்கள், தண்ணீர் கயிறு, வாளி விற்கும் கடைகள், சுண்ணாம்புக்கல் விற்பவர்கள். சாயப்பொடி விற்பவர்கள், விசிறி, வெற்றிலைபாக்கு வியாபாரிகள், குதிரைச்சேணம் விற்கும் கடைகள், ஊதுபத்தி, ஜவ்வாது, சாம்பிராணி விற்கும் கடைகள், இனிப்புப் பண்டங்கள், உணவு வகைகள் விற்பவர்கள், சிவப்புமண்பாண்டம் விற்கும் சிறுவணிகர்கள், சூதாட்டப் பகடைகள், பலகைகள் விற்கும் கடைகள் என நிறைய இருந்தன. சுங்கவரியிலும், சந்தை வணிகத்தாலும் சத்கர் செழிப்பாகவே இருந்து வந்தது.

சத்கரின் பிரதான நுழைவாயில் கிழக்கே இருந்தது, பிரமாண்டமான மாளிகைகளும், அகன்ற வீதிகளும் கொண்டதாக நகரம் விரிந்திருந்தது, நகரின் வடக்கே பிஷாட மன்னரின் மொகலாய பாணி மாளிகைகளும், தர்பார் மண்டபமும், காவல் மைதானமும், கொடி மைதானமும், யானைக் கொட்டிலும், தெப்பக்குளமும், வசந்தமண்டபமும், ரங்க மண்டபமும் இருந்தன. அரண்மனைக்கு வெளியே காவலர்கள், அரண்மனைப் பணியாளர்கள் குடியிருப்புகள் அமைக்கப்பட்டிருந்தன.

மூன்று சுற்றுக் கோட்டை என்பதால் ஒவ்வொரு சுற்றிலும் ஒவ்வொரு

வகையான மனிதர்கள் வசித்தார்கள். இதில் இரண்டாவது சுற்றில்தான் சந்தையிருந்தது. அதை ஒட்டியே வணிகர்களின் குடியிருப்புகள் இருந்தன.

மேற்கே பழைய கோட்டை மதில் இடிந்து பாதியாக நின்றிருந்தது. அதை ஒட்டிய தாழ்வான பகுதிதான் நகிலி.

அதன் மேற்காக நடந்தால் சிறிய குன்று ஒன்றிருந்தது. அதை ஒட்டி இடிந்துபோன படிகள் கொண்ட சர்ப்பக் குளம் ஒன்றிருந்தது. அந்தக் குளத்தின் சுற்றுமதிலில் நூற்றுக்கணக்கான நாக உருவங்கள் செதுக்கப்பட்டிருந்தன. நாக கன்னிகைகள் அங்கே வந்து நீராடுவார்கள் என உள்ளூர்வாசிகள் பேசிக்கொண்டார்கள்.

அதையொட்டி சௌசட் மண்டபம் என்ற ஒன்றிருந்தது. அது 64 நான்கு தூண்கள் கொண்டதாக அமைக்கப்பட்டிருந்தது.

சத்கர் செம்மண்பூமி என்பதால் காற்றில் எப்போதும் புழுதி உயர்ந்து எழுந்துகொண்டிருந்தது. மழைக்காலத்தில் சத்கரின் வீதிகளில் ஓடும் தண்ணீர் குருதியின் சிவப்பை அடைந்துவிடுகிறது.

சத்கரின் ஒரே பொழுதுபோக்கு இடம் மித்ரகடிகா. அது மிகப்பெரிய கேளிக்கைக்கூடம். ஆரஞ்சு வண்ண மாளிகையது. அதை ஆயிரம் படுக்கைகள் கொண்ட வீடு எனச் சொல்வார்கள். உண்மையில் ஆயிரம் படுக்கைகள் இருக்கிறதா எனத் தெரியாது. ஆனால், எண்ணிக்கையற்ற அறைகளும் படுக்கைகளும் கொண்ட பெரிய மாளிகையாக இருந்தது.

அந்த மாளிகையினுள் எந்தப் பாதை வழியாக உள்ளே போக வேண்டும் எப்படி வெளியே வர வேண்டும் என்பது பணியாளர்களுக்கு மட்டுமே தெரியும்.

மித்ரகடிகாவில் இரண்டு நாடக அரங்குகள் இருந்தன. அதைத் தவிர மதுக்கூடங்களும், சூதாடும் இடமும், மல்யுத்தப் போட்டிக்கான இடங்களும் தனியாக அமைக்கப்பட்டிருந்தன. அதனுள் பகலிரவாக தாசிகளின் நடனமும் இசைக்கச்சேரிகளும் நடந்தபடியே இருந்தன.

பாரசீக மதுவும், உள்ளூர் தேறல்களும் பெருகியோடின. மித்ரகடிகாவிற்குச் சென்ற மனிதன் பல நாட்களுக்கு வெளியே வரவே மாட்டான், காரணம் அபின் கொடுத்துப் பழக்கிவிடுவார்கள் என்பார்கள்.

மித்ரகடிகாவில் வீசி எறியப்படும் பொற்காசுகளைக் கேட்டுக் கேட்டு காது கூசுகிறது என நடனமங்கைகள் பேசிக்கொண்டார்கள்.

சில நாட்கள் முன்பாக மித்ரகடிகாவிற்கு வந்து சேர்ந்த காசிம் என்ற குதிரைவணிகன் இரவு பகலாகக் குடித்துக்கொண்டிருந்தான். மித்ரகடிகாவில் வெள்ளிக்கிழமை எவரும் குடிக்க அனுமதிக்கப் படுவதில்லை. காரணம் ஒரு வெள்ளிக்கிழமையில்தான் கடவுள்

மனிதனைப் படைத்தார் என அதை நடத்தும் ஜலால் நம்புகிறார்.

ஆகவே, வெள்ளிக்கிழமைகளில் மித்ரகடிகாவில் இருந்த குடிகாரர் களையும் சூதாடிகளையும் வெளியே அனுப்பிவிட்டு சாம்பிராணி போடுவார்கள். உண்மையில் அது நடன மங்கைகளுக்கான ஓய்வு தினம்.

அவர்கள் அன்று முழுநாளும் உறங்குவார்கள், இரவில் விளக்குகள் ஏற்றப்படுவதுகூடக் கிடையாது. உணவு தயாரிப்பவர்களுக்கும் ஓய்வு என்பதால் பழங்கள் மட்டுமே அன்றைய உணவு. குதிரைகளை அந்த நாளில் குளிக்க வைப்பார்கள். பணியாளர்கள் சிகை திருத்திக் கொள்வது, உடைகளை சுத்தம் செய்வது எல்லாம் அந்த ஒரு நாள்தான். மறுநாள் சனிக்கிழமை மாலையில் மித்ரகடிகா மறுபடி திறக்கப்படும்போது சொர்க்கத்தின் கதவுகள் திறந்துகொண்டது போல ஒரே ஆரவாரமாக இருக்கும்.

ஆகவே, வியாழன் பின்னிரவில் இருந்தே குடிகாரர்களை வெளியே அனுப்பத் துவங்கிவிடுவார்கள். அதற்காக இரண்டு பணிப்பெண்கள் அந்தக் குதிரைவணிகனை எழுப்பிக் கொண்டிருந்தார்கள்.

காசிம் மிதமிஞ்சிய போதையில் உளறிக்கொண்டிருந்தான். ஒரு பணிப்பெண் அவன் கையைப் பற்றி வெளியே அழைத்துச் செல்வதற்கு முயன்றாள்.

அவன் கைகளை உதறியபடியே சொன்னான்.

“கடவுளே வந்தாலும் என்னை வெளியேற்ற முடியாது. நான் ஒரு முதலை. தண்ணீருக்குள்தான் கிடப்பேன். அதுதான் என் பலம். பூமியில் ஒரு சொட்டுக்கூட மது இல்லாத அளவு நான் குடித்து முடிப்பேன்.’’

“அப்படியானால் உங்களைத் தூக்கி அகழியில் போட்டு விடுகிறோம், நிறைய முதலைகள் அங்கேதான் கிடக்கின்றன’’ என்றாள் இன்னொரு பணிப்பெண்.

“மாமன்னர் பாபர், ஜஹாங்கீர், அக்பர் எல்லோரும்கூட வாரத்தில் மூன்று நாட்கள் மட்டும்தான் குடித்திருக்கிறார்கள். நான் அவர்களை விடவும் மேலானவன். வாரத்தின் ஏழு நாளும் குடிப்பேன். ஜஹாங்கீர் மன்னர் ஒரு நாளைக்கு இருபது கோப்பை திராட்சை ரசம் மட்டும் தான் குடிப்பாராம். எதற்கு அந்தக் கட்டுபாடு, ஆற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடும்போது யாராவது காலை மட்டும் நனைப்பார்களா என்ன. போங்கள், போய் மதுகுடுவைகளைக் கொண்டுவாருங்கள்.’’

“இன்னும் மது வேண்டும் என்று கேட்டால் கழுதை மூத்திரத்தைத் தான் கொண்டுவந்து தருவோம். நீ குடித்து சேர்த்த அத்தனை போதையும் இறங்கிவிடும் பரவாயில்லையா” எனக் கேட்டாள் மற்றவள்.

“போதை இறங்கிவிட்டால் என்ன? அபின் இருக்கிறதே. எனக்கு இந்தப்

பொறாமை பிடித்த உலகில் வாழப் பிடிக்கவில்லை. நான் சொர்க்கத்தை மண்ணிற்குக் கொண்டுவரப் பார்க்கிறேன். அதில் பெண்களுக்கு மட்டுமே அனுமதி. நான் ஒரே ஒரு ஆண் மட்டும் தான் அங்கேயிருப்பேன். குடியும் கொண்டாட்டமும் மட்டுமே அங்கே நடக்கும். உங்கள் இருவரையும் அதில் சேர்த்துக் கொள்கிறேன். எனக்கு மது கொண்டுவாருங்கள்" என்றான் காசிம்.

"இவனாகக் கிளம்பிப் போக மாட்டான். தூக்கி வெளியே போடுவோம்'' என அந்தப் பெண்கள் ஆளுக்கு ஒரு பக்கம் வந்து கையைப் பிடித்தார்கள். "கையை விடுங்கள். நான் யார் தெரியுமா? இளவரசன் ஷா ஆலத்தின் உறவினன். ஒரு ஆட்டுத்தோலைத் தேடி வந்திருக்கிறேன். அது ஒரு ரகசியம்."

"ஆட்டுத்தோல் என்ன முழு ஆடே தரச் சொல்கிறேன். சனிக்கிழமை மாலை வாருங்கள்" என்றாள் அந்தப் பெண்.

"உனக்கு அந்த ஆட்டுத்தோலின் மகத்துவம் தெரியாது. அந்தத் தோலில் வரைபடம் எழுதப்பட்டுள்ளது, மாமன்னர் ஔரங்கசீப் இறந்து போவதற்கு முன்பு அவரது விலைமதிப்பற்ற வைரவைடூரியப் பொக்கிஷங்களை எங்கோ புதைத்துவைத்துவிட்டு அந்த விபரங்களை ஒரு ஆட்டுத்தோலில் வரைந்து கொடுத்திருக்கிறார். அதைத்தான் தேடிக்கொண்டிருக்கிறேன்.''

"ஆயிரம் கட்டுக்கதைகளில் இதுவும் ஒன்று. இங்கே பெண்களின் மடியில் நிறைய பேர் புதையல் தேடிக்கொண்டிருக்கிறார்கள். நீ புது ரகம் போலிருக்கிறது'' எனக் கேலி செய்தாள் அந்தப் பணிப்பெண்.

"அந்த ஆட்டுத்தோல் மட்டும் என் கையில் கிடைத்துவிட்டால் போதும். பொக்கிஷம் என் கைவசமாகிவிடும். பின்பு இந்த சத்கரையே வாங்கிவிடுவேன்" எனச் சொல்லி தள்ளாடினான் காசிம்.

"சத்கரை வாங்குவது இருக்கட்டும். உன் தோற்பையை முதலில் வாங்கு" என நீட்டினாள் ஒருத்தி.

"இந்தத் தோற்பையில் என்ன இருக்கிறது தெரியுமா, ஒரு தலை, அதுவும் ஒரு இளைஞனின் தலை, அதை வெட்டி எடுத்து டெல்லிக்குக் கொண்டு போய்க்கொண்டிருக்கிறேன், இந்தத் தலை எனக்கு நிறைய தங்கக்காசுகளை அள்ளித்தரப்போகிறது."

நிஜமாகவா என அந்தப் பெண் தோல்பையை தூரவீசி எறிந்தாள், அந்தத் தோற்பையிலிருந்து துண்டிக்கப்பட்ட ஒரு ஆளின் தலை வெளியே விழுந்தது, பிதுங்கிய கண்கள், கோரையான தலைமயிர், பாதி வாய் திறந்திருந்தது, உதடுகள் கிழிந்து தொங்கின. பணிப்பெண்கள் இருவரும் வெட்டுப்பட்ட தலையைக் கண்டு அலறினார்கள்.

காசிம் சொன்னான்.

“இறந்த பின்னும் உங்களை பயமுறுத்துகிறான் பாருங்கள். மரியாதை தெரியாத பயல். இவன் யார் தெரியுமா? தௌலத். ஔரங்கசீப்பின் அந்தரங்கப் பணியாள். தப்பி ஒளிந்து கொண்டிருந்தான். தேடித் தலையைத் துண்டித்துவிட்டேன்.”

அந்தப் பணிப்பெண்களின் குரல்கேட்டு மித்ரகடிகாவின் காவலாளி பெரோஸ் அந்தக் குடிகாரனை நோக்கி கையில் குறுந்ததடி ஒன்றுடன் வந்தான். குடிகாரன் தனது வாளை உருவிக் கையில் எடுத்துக்கொண்டு அவனுடன் சண்டை போட முயன்றவன் போலத் தள்ளாடினான்.

“சைத்தானே, சுடுகாட்டிற்குப் போக வேண்டிய உன்னை இந்த மித்ரகடிகாவிற்குள் விட்டது எங்கள் தவறு’’ என்றபடியே பெரோஸ் அவனைத் தடியால் அடித்து வெளியே துரத்தினான்.

கீழே விழுந்து கிடந்த தௌலத்தின் தலையைத் தனது தோற்பையினுள் திணித்தபடியே காசிம் சொன்னான்.

“இந்தத் தலையின் மதிப்பைப் பற்றி உனக்குத் தெரியாது. இது டெல்லியை குஷிப்படுத்தப்போகிறது. இந்த சத்கரை நான் விலைக்கு வாங்கியதும் உன்னை தண்டிப்பேன்.’’

பெரோஸ் தனது கையில் இருந்த தடியைக் கொண்டு அவன் புட்டத்தில் அடிக்கப்போவது போல பாவனை செய்தான்.

அதற்குள் காசிம் தடுமாறியபடியே நடந்து வெளியே வந்து தனது குதிரையைத் தேடத் துவங்கினான்.

அவனது குதிரையின் நிறம் என்ன, எங்கே கட்டியிருந்தான் எனக் கேட்டான் வாயிற்காப்பவன்.

“என் குதிரைக்கு என்னைத் தெரியும். அது தானே வந்து சேரும்“ என்றான் காசிம்.

பிறகு இருட்டிற்குள் “அனார்’’ எனக் குரல் கொடுத்தான். ஒரு குதிரை எங்கிருந்தோ கனைத்து சப்தமிட்டது.

அவன் இருட்டிற்குள்ளாகவே தனது குதிரையைக் கண்டுபிடித்து அதில் ஏறிப் புறப்பட்டான். கிளம்பும்போது காசிம் உரத்த குரலில் சொன்னான்.

“இங்கேதான் எவரோ ஆட்டுத்தோலை ஒளித்து வைத்திருக்கிறார்கள், நான் படையோடு வந்து சத்கரைத் வைத்து எரிப்பேன், ஆட்டுத் தோலுக்காக இந்த நகரைக் கொளுத்தி விடுவேன்.’’

மித்ரகடிகாவின் வெளிவாசலை இழுத்து மூடிக்கொண்டிருந்தார்கள். குதிரை இருட்டில் ஓடி மறைந்தது, விளக்குகள் முழுமையாக அணைக்கப்பட்டன. இனி மித்ரகடிகா சனிக்கிழமை மாலையில் தான் திறக்கப்படும். அதுவரை உறக்கம் மட்டுமே அவர்களின் ஒரே துணை.

நடந்த எல்லா நிகழ்வுகளின் சாட்சியைப் போல வானிலிருந்த நிலா

பார்த்துக்கொண்டிருந்தது.

அந்தப்புரம்

மூன்று மாறுபட்ட உலகங்கள் ஒன்று சேர்ந்ததாக அந்தப்புரம் இருந்தது.

ராணிகள், அவர்களின் பிள்ளைகள் மற்றும் ஆசைநாயகிகள் கொண்டது முதல் உலகம். நடனக்காரிகள், பாடகிகள், இசைக்குழுவினர், ஆருடம் சொல்பவர்கள், சூதாடுபவர்கள், பணி விடை செய்யும் பெண்கள், அலங்காரம் செய்பவர்கள், உணவு தயாரிப்பவர்கள், மருத்துவச்சிகள், காவல் புரியும் ஹிஜ்ராக்களைக் கொண்டது இரண்டாம் உலகம். மூன்றாம் உலகம் துணி துவைப்பவர்கள், கழிவுகளை அகற்றுபவர்கள், பெண் நாவிதர்கள், குழந்தைகளைப் பராமரிப்பவர்கள், பாத்திரம் துலக்குபவர்கள், சந்தனம் அரைப்பவர்கள், வாசனைத் தைலங்களைக் காய்ச்சுபவர்கள், விசிறி வீசுபவர்கள், வெற்றிலை மடித்துத் தருபவர்கள், தையல் வேலை செய்பவர்கள், சாயமிடுபவர்கள், பூத்தொடுப்பவர்கள், விளக்குபிடிப்பவர்கள், தண்ணீர் இறைப்பவர்கள், தோல்வேலை செய்பவர்கள், விளக்கு ஏற்றுபவர்கள், எண்ணெய் ஊற்றுபவர்கள் என பலர் இருந்தார்கள். அந்தப்புரத்திற்குள் அரவாணிகளும் பெண்களும் மட்டுமே அனுமதிக்கப்பட்டார்கள். அரசர் மட்டுமே அதற்குள் வர முடியும். இளவரசர்கள் தனது தாயைக் காணவருவதாக இருந்தால்கூட அந்தப்புரத்திற்குள் வர முடியாது. அவர்கள் மோதிபாக் ஹாலில் வைத்துதான் தாயைக் காணமுடியும். அந்தப்புரத்தில் உள்ள பெண்களை நிர்வாகம் செய்வதற்கென நிர்வாக அதிகாரிகள், காவல் பிரிவினர், அவர்களின் குறைகளைக் கேட்டு நிவர்த்தி செய்யும் காரியஸ்தர் என அத்தனை வேலைகளையும் பெண்களே மேற்கொண்டனர். அந்தப்புரத்தின் உள்ளே பெரிய பூந்தோட்டமும், மூன்று குளியல் கூடங்களும், இரண்டு ஆடல் அரங்குகளுமிருந்தன. அது தவிர உடல் நலமற்ற பெண்களைப் பராமரிப்பதற்கான சிகிட்சைக் கூடம் ஒன்றுமிருந்தது. மாதவிலக்கு நாட்களில் பெண்கள் விலக்கி வைக்கப்படுவார்கள் என்பதால் அவர்களுக்கென ஜன்னல் இல்லாத சிறிய அறைகள் இருந்தன. அத்துடன் பிரசவம் நடைபெறுவதற்காக மூன்று பெரிய அறைகள் இருந்தன. ராணிகளின் கோபத்திற்கு ஆளாகி தண்டிக்கப்படும் பெண்களுக்கென தண்டனைக்கூடம் ஒன்றும் உள்ளே இருந்தது. அங்கே சவுக்கால் அடிப்பவர்கள், குறுந்தடி கொண்டு தாக்குபவர்கள், கண்ணைப் பறிப்பவர்கள் என தண்டனை தரும் வேலையையும் பெண்களே கவனித்தனர். அந்தப்புரத்திற்குள் வசிக்கும் சிறார்களுக்குப் பாடம் கற்றுத் தருவதற்காக ஆசிரியர்களும் சிறிய பாடசாலை ஒன்றுமிருந்தது. ஒவ்வொரு ராணிக்கும் பத்து முதல் நூறு பணியாளர்கள் வரை அனுமதிக்கப் பட்டிருந்தார்கள். அந்தப்புரத்தில் இருக்கும் நேரத்தில் அரசர் பணியாற்ற வசதியாக உள்ளேயே எழுத்தறையும், எழுத்தர்களும் ஒப்பந்த முத்திரைகளுமிருந்தன. இதுபோலவே ரகசிய ஆவணங்கள், உடன்படிக்கைகள், பட்டயங்கள் பாதுகாப்பாக வைப்பதற்காகக் காப்பறை ஒன்றுமிருந்தது. ஒவ்வொரு

நாள் காலையிலும் ராணிகளுக்கும் ஆசைநாயகிகளுக்கும் அவர்கள் நிலைக்கு ஏற்ப பரிசுப்பொருட்கள் அனுப்பி வைக்கப்படுவதுண்டு. ராணிகளுக்கு அன்றாடம் புதிய நகைகளும் பட்டாடைகளும் தரப்படும், அதை அவர்கள் ஒரு நாள் உடுத்திவிட்டு மறுநாள் பிறர் அணிய, தூக்கி எறிந்துவிடுவார்கள். அந்தப்புரக் காவல்பணிக்கென தார்த்தாரியப் பெண்கள் நியமிக்கப் பட்டிருந்தார்கள். ஆறடிக்கு மேலான உயரத்தில் இருந்த அந்தப் பெண்கள் கையில் குத்தீட்டியுடன் காவலிருப்பார்கள். அரேபிய அடிமைப் பெண்களும், போர்த்துக்கீசிய அலங்காரப் பெண்களும் ஆங்கில ஆசிரியரும்கூட அந்தப்புரத்திலிருந்தார்கள்.

கிளிக்கூண்டுகள், காதல்பறவைகள், புறாக்கள் அந்தப்புரத்தில் அதிகமிருந்தன. அந்தப்புரப் பெண்களை மகிழ்விக்க அடிக்கடி பாம்பாட்டி வரவழைக்கப்பட்டு பாம்பும் கீரிக்குமான சண்டை நடத்திக் காட்டப்பட்டது. இதைத் தவிர புறாப்பந்தயம், வாண வேடிக்கை, கதை சொல்வது, சீட்டு ஆடுவது, பகடை ஆடுவது, நீந்திக் களிப்பது போன்ற பொழுதுபோக்குகளிருந்தன.

மூன்றாவது நிலையில் உள்ள அடிமைகள் எவருக்கும் கூலி வழங்கப்பட மாட்டாது. அவர்களுக்கு உணவும் உடையும் மட்டுமே அனுமதி. விசேஷ நாட்களில் அவர்களுக்கு சில வேளை சில்லறைகள் தானமாக வழங்கப்படுவதுண்டு. அந்தப்புரத்திற்குத் தேவையான உணவுப்பொருட்கள், அலங்காரப்பொருட்கள், பூக்கள், உடைகள் போன்றவற்றை வாங்கித் தருவதற்கென்றே தனி அலுவலர்கள் நியமிக்கப் பட்டிருந்தார்கள். அவர்கள் அரண்மனைக்கு வணிகர்களை வரவழைத்து தங்களுக்கான பொருட்களை வாங்கிக்கொள்வார்கள். இந்த வணிகம் நடைபெறுவதற்கெனத் தனி மண்டபம் இருந்தது. இவையின்றி முத்து, பவளம், தங்கம், வைரம் போன்ற நகைகளை விற்கும் வணிகர்களும், வெளிநாட்டு வியாபாரிகளும், பட்டு விற்பனை செய்யும் வணிகர்களும் மாதம் பௌர்ணமி தினம் அன்று அரண் மனைக்கு வந்து வணிகம் செய்வார்கள்.

எந்த நகைகள், பொருட்கள் யார் வாங்கியிருக்கிறார், அதற்கான செலவு எவ்வளவு என்பது பற்றி முழுமையான கணக்கு பதிவு செய்துகொள்ளப்பட்டது. இது தவிர அந்தப்புர மருத்துவச்சிகள் தங்களுக்கான மருந்துப் பொருட்கள் வாங்கவும் அரைக்கவும் காய்ச்ச வும் தனிக்கூடம் ஒன்று வைத்திருந்தார்கள். அந்தக் கூடத்தை நிர்வகிக்க ஒரு தனி அலுவலர் நியமிக்கப்பட்டிருந்தார். அந்தப்புரத்திற்கென்றே கஜானா அதிகாரி ஒருவர் இருந்தார். அதுவும் பெண்தான். அவளிடமிருந்தே அன்றாடச் செலவிற்கான பணம் பெறப்பட்டது. அந்தப்புரத்தில் வசிக்கும் மகாராணிகள், ஆசைநாயகிகள் தவிர மற்றவர்கள் சாப்பிடும் நேரமும் குளிக்க வேண்டிய நேரமும் மத நூல்களைப் படிக்க வேண்டிய நேரமும் பட்டியலிடப்பட்டிருந்தது.

அதைப் பின்பற்றாதவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள். அந்தப்புரத்தில் வளரும் குழந்தைகளுக்கெனச் சிறப்பு மருத்துவச்சி ஒருவர் நியமிக்கப் பட்டிருந்தார். பால்மாடுகளும் ஆடுகளும் வான்கோழியும் மான்களும் முயல்களும் மயில்களும் அந்தப்புரத்தின் உள்ளேயே தனியிடத்தில் வளர்க்கப்பட்டன.

பட்டத்து ராணிதான் அந்தப்புரத்தின் தலைவி. அடுத்த ராணிகள் அனைவரும் அவளை அன்றாடம் நேரில் சந்தித்து மரியாதை செய்யவேண்டும். ஆசை நாயகிகள் அங்கீகரிக்கப்படாத மனைவிகள் என்பதால் அவர்களைப் பட்டத்து அரசி சந்திப்பதில்லை. ஒவ்வொரு நாளும் அரசர் எந்தப் பெண்ணுடன் எத்தனை நாழிகை உறங்கலாம் என்பதை ஆருடம் சொல்பவரே முடிவு செய்வார். இதற்கென ஆருடம் சொல்பவர்கள் அரண்மனையில் இருந்தார்கள். அவர்களிடம் அந்தப்புரத்தில் உள்ள ஆசைநாயகிகள், ராணிகளின் ஜாதகங்கள் இருந்தன. அவர்கள் கிரக சஞ்சாரங்களை மனதில் கொண்டு அரசன் எந்தப் பெண்ணுடன் உடலுறவு கொள்ள வேண்டும் என்பதை முடிவு செய்வார்கள். சில நாட்களில் அரசன் முன்னிரவில் ஒரு பெண்ணுடன் கலவி கொண்டு பின்னிரவில் அவன் வேறு பெண்ணுடன் உறங்க வேண்டும் எனவும் ஆருடம் சொல்வார்கள். எந்த நாட்களில் அரசன் அந்தப்புரத்திற்குள் நுழையக்கூடாது என்பதையும் அவர்களே முடிவு செய்வார்கள். அரசன் அந்தப்புரத்திற்குள் வரும் நேரம் முன் கூட்டியே அறிவிக்கப்பட்டு விடும். எந்தப் பெண்ணுடன் அவர் படுக்கையைப் பகிர்ந்துகொள்ளப் போகிறாரோ அந்தப்பெண் அன்றைய தினம் வெளியாட்கள் எவரையும் சந்திக்க அனுமதிக்க மாட்டார்கள். அதுபோலவே அவள் அன்று சாப்பிடும் உணவும் பகல் தூக்கமும் ரத்து செய்யப்படும். அவள் அணிந்துகொள்ள வேண்டிய ஆடைகளில் இருந்து சூடிக்கொள்ளப்போகும் பூ வரை பரிசோதனை செய்யப்படும். அந்தப் பெண்ணை காலையில் மருத்துவச்சி பரிசோதனை செய்து அவளுக்கு ஏதாவது தொற்றுநோய் இருக்கிறதா என சோதனை செய்வாள். குறிப்பாக தோல் நோயோ, பற்களில் ரத்தம் கசிவதோ, உடற்காயமோ ஏதாவது இருந்தால் அந்தப் பெண்ணுடன் அரசன் உடலுறவு கொள்ள அனுமதிக்கப் படுவதில்லை. சில வேளைகளில் அந்தப் பெண்ணை சிறுநீர் கழிக்கச்செய்து அவளின் யோனித்திறனை ஆராய்வதும் உண்டு. அரசனுடன் கலவி கொள்ளும்பொழுது அரசனைக் கடிக்கவோ, நகங்களால் கீறவோ ஆசை நாயகிகளுக்கு அனுமதியில்லை. அதுபோலவே அவர்கள் அரசன் படுக்கையில் உறங்கிய பிறகு எழுந்து போகவும் அனுமதிக்கப்பட மாட்டார்கள். அரசன் உறக்கம் விழிக்கும் வரை அவர்கள் கட்டிலில்தான் கிடக்க வேண்டும். ஆசைநாயகிகளில் எவர் கர்ப்பம் கொண்டாலும் அது உடனடியாகக் கலைக்கப்பட்டு விடும். அத்துடன் அந்தப் பெண் தனி அறைக்கு ஒதுக்கப்பட்டு மூன்று மாத காலம் விலக்கிவைக்கப்படுவாள். சில நேரங்களில் கர்ப்பம் கலைக்கும்போது இளம் பெண்கள் இறந்து

போய்விடுவதுண்டு. அதுபோன்ற நேரங்களில் அவர்களைத் துணியில் கட்டிக்கொண்டு போய் ஆற்றில் போட்டுவிட்டு வந்துவிடுவார்கள். புதைப்பதோ, இறுதிச் சடங்குகள் செய்வதோ கிடையாது.

ஆயிரம் பெண்களுக்கும் மேலிருந்த அந்த அந்தப்புரத்தை மஹல்தார் எனப்படும் அரவாணியே நிர்வாகம் செய்வாள். அவளுக்குக் கீழே முப்பத்திரண்டு துணை அதிகாரிகள் இருந்தார்கள். இந்தப் பணிக்குப் பெரும்பாலும் அரவாணிகளே நியமிக்கப்பட்டார்கள். அவர்களில் பேரரசனின் படுக்கை அறைக்குள் சேவகம் செய்யும் அரவாணிகளின் நாக்கு துண்டிக்கப்பட்டிருக்கும்.

பொறாமையும், வெறுப்பும், கசப்புணர்வும் பொங்கிவழியும் இடமாயிருந்தது அந்தப்புரம். பட்டத்து ராணியேகூட பேரரசனைக் காணாமல் மாதக்கணக்கில் இருப்பதுண்டு. அந்த விரக்தியும் வெறுமையும் கோபமும் பிற ராணிகள் மீதும் ஆசை நாயகிகள் மீதும் காட்டப்படும். ஆகவே பரஸ்பரம் வேவு பார்ப்பது, திருட்டுக் குற்றம் சுமத்தி தண்டிப்பது, உணவில் விஷம் கலந்து கொல்வது போன்றவை இயல்பான சம்பவங்களாக மாறியிருந்தன. சில நேரங்களில் பெண் உடையில் ஆணை உள்ளே அழைத்து வந்து சல்லாபம் செய்வதும், பிடிபடும் நேரத்தில் தற்கொலை செய்துகொள்வதும் நடைபெறுவதுண்டு.

அந்தப்புரத்திற்கு என நேரம் அறிவிப்பவர்கள் இருந்தார்கள். அவர்கள் நீர்கடிகை, நிழல்கடிகை, மணல்கடிகை கொண்டு நேரம் அறிவிப்பார்கள். ஏவல் பணி புரியும் பெண்கள் சூரிய வெளிச்சம் வருவதற்கு முன்பாகவே குளித்து உடைமாற்றி தனது பணியைத் துவக்கிவிட வேண்டும். ஆகவே இரவு மூன்று மணிக்கே அவர்கள் விழித்துக் கொண்டுவிடுவார்கள். ஏவல் பணி செய்பவர்கள் வெந்நீரில் குளிப்பது அனுமதிக்கப்படுவதில்லை என்பதால் அவர்கள் குளிர்ந்த தண்ணீரில்தான் குளிக்க வேண்டும், அந்தப் பெண்கள் அவசர அவரசமாகக் குளித்து உடைகளை மாற்றி தனது அன்றாடப்பணியை மேற்கொள்ளத் துவங்குவார்கள். நோயுற்ற நாட்களில்கூட அவர்களுக்கு ஓய்வு கிடையாது. தாயும் மகளுமாக வேலை செய்பவர்களில் சில நாட்கள் தாயே மகளின் வேலையும் சேர்த்துப் பார்ப்பதுண்டு.

அந்தப்புரப் பெண்களில் பலர் அடிக்கடி நோயுற்றார்கள். குறிப்பாக மலச்சிக்கலும் வலிப்பும் ரத்தக்கொதிப்பும் தலைவலியும் சிறுநீர்த்தொற்றும் சுவாச ஒவ்வாமையும் அவர்களின் தீரா நோயாக இருந்தன. சிலர் மனச்சிதைவு ஏற்பட்டு தனக்குத் தானே பேசிக் கொள்பவர்களாக, சதா அழுதுகொண்டேயிருப்பவர்களாக இருந்தார்கள்.

அந்தப்புரத்திற்குள் குடிவெறி அதிகமாகி சப்தமிடும் ஆசை நாயகிகள், முன்கோபிகள், ஆத்திரத்தில் தன் உடலைக் கத்தியால்

கிழித்துக்கொள்பவர்கள், சூதில் தோற்றதற்காகத் தலைமயிரைத் துண்டித்துக்கொள்பவர்கள், பெருந்தீனிக்காரர்கள், மல்யுத்தம் செய்பவர்கள், அழுதுகொண்டேயிருப்பவர்கள் எனப் பலவிதமான பெண்கள் இருந்தார்கள்.

ஆடையில்லாமல் அந்தப்புரத்திற்குள் உலாவுவது கடுமையாக தண்டிக்கப்பட வேண்டிய குற்றம். அதுபோலவே வெள்ளிக்கிழமை காலையில் சூரிய உதயம் வருவதற்கு முன்பு அனைவரும் துயில் எழுந்துவிட வேண்டும் என்பதும் சட்டம். அரசர் போருக்குச் சென்ற நாட்கள் அவர்களின் உல்லாசப் பொழுதுகளாக அமையும், விதவித மான நடனங்கள், இசைக்கச்சேரிகள் நடக்கும், இரவெல்லாம் குடிப்பார்கள். ஆடுவார்கள். பெண் மல்லர்களை சண்டையிட வைத்து வேடிக்கை பார்ப்பார்கள்.

அந்தப்புரத்திற்கு அரசர் வராமல் தன் அறையில் ஓய்வு எடுக்கும் போது அவருக்குப் பணிவிடை செய்வதற்காக ஹிஜ்ரா எனும் அரவாணிகளில் சிலர் அனுப்பி வைக்கப்படுவார்கள். அந்தப் பெண்கள் ராணிகளால் தேர்வு செய்யப்பட்டவர்கள். மன்னருக்கு அந்த ஹிஜ்ராவினைப் பிடித்துப் போய்விட்டால் அவள் மன்னரின் தனியிடத்தின் நிரந்தரப் பணியாளராக நியமிக்கப்பட்டுவிடுவாள். அவள்தான் மன்னர் அந்தப்புரம் கிளம்பும்போது உடன் வருபவள். மன்னருக்கான சயன ஏற்பாடுகள் முறையாக உள்ளதா எனக் கண்காணித்துக் கொள்வாள்.

ஒவ்வொரு நாள் மன்னர் எழுந்தவுடன் அவரது மூத்திரம் பரிசோதிக்கப்படும். நோய்க்கூறு இருக்கிறதா என வைத்தியர்கள் ஆராய்வார்கள். மன்னரின் உடலில் தேய்க்க வேண்டிய மூலிகைகள் எண்ணெயில் இட்டுக் காய்ச்சி வைத்திருப்பார்கள். சந்தனமும் ரோஜா இதழ்களும் கலந்த தண்ணீரில் குளிக்கத் துவங்கி பதினாறு விதமான தண்ணீரில் அரசர் குளிப்பதுண்டு. விசேஷ நாட்களில் இது நூற்றியெட்டு விதமான தண்ணீராக இருக்கும்.

இளவரசிகளும் அந்தப்புர நடனக்காரிகளில் சிலரும் கவிதை எழுதுவதிலும் பாடுவதிலும் ஆர்வம் கொண்டவர்கள் என்பதால் சிறிய நூலகம் ஒன்றும் உள்ளே அமைக்கப்பட்டிருந்தது. அந்த நூலகத்தில் உருது மற்றும் பெர்சிய ஏடுகள் இருந்தன. சித்திர எழுத்துகளைப் பயிலுவதற்கு இளவரசிகள் விரும்புவதால் அதற்கெனத் தனி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் அந்தப்புரத்திற்குள் வர அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால், இளவரசிகள் அவர்களின் பாடம் கற்க தனி அறை ஒதுக்கப்பட்டிருந்தது. ஔரங்கசீப்பின் காலத்திற்கு முன்பு ஓவியர்களும், இசைக்கலைஞர்களும் ஆசிரியர்களாகப் பணியாற்றினார்கள். ஆனால், அவர்கள் ஔரங்கசீப்பின் ஆட்சியில் வெளியேற்றப்பட்டார்கள்.

அந்தப்புரப் பெண்கள் ஆருடம் கற்றுக்கொள்ளக்கூடாது என்பது எழுதப்படாத விதி. ஆனால், அவர்கள் ஆருடம் பார்ப்பதற்கு

அனுமதியுண்டு.

உதய்பூரிபாய் எனப்படும் உதய்பூரி மஹல் பேரழகியாக இருந்தாள்.ஔரங்கசீப்பின் விருப்பத்திற்குரியவள் என்பதால் அவளுடன்தான் மன்னர் அதிக நாட்கள் இரவைக் கழித்தார். மன்னர் வருகை தருவதால் பணிப்பெண்களுக்கும் புத்தாடைகளும் பரிசுகளும் கிடைப்பதுண்டு. உதய்பூரி தன்னை அலங்கரித்துக்கொள்வதில் மிகுந்த அக்கறை காட்டுபவள். மன்னர் வரும் நாட்களில் அவளது அலங்காரம் மதியம் துவங்கிவிடும். அவளுக்காகப் புதிதுபுதிதாகச் செய்துவரப்பட்ட பொன்னால் ஆன அணிகளை அவள் உடல் முழுவதும் அணிந்து கொள்வாள். பகட்டான பட்டாடையும் நறுமணம் வீசும் தைலங்களையும் பூசிக்கொள்வாள். பாதுஷா அப்படியில்லை. அவர் எப்போதும் எளிய உடைகளை அணியக்கூடியவர். அதுவும் அந்தப்புரத்திற்கு வரும்போது அவரது உடைகள் மிக எளிமையானதாகவே இருக்கும். வெண்ணிறம்தான் அவருக்கு மிகவும் பிடித்தது. ஆகவே வெண்பட்டில் செய்த அங்கியை அணிந்துகொண்டு வருவார். அரண்மனையில் இருந்து காலை வெளியேறும்போதுதான் மன்னரின் விசேஷ உடைகளை அணிந்துகொண்டு கிளம்புவார்.

எப்போதும் சிந்தனையுடன் உள்ள முகம் அவருக்கு. ஆகவே சிரிப்பைக் காணமுடியாது. உதய்பூரி அவரை சந்தோஷப்படுத்த ஏதோ கதைகள் சொல்வாள். அடிமைப்பெண்களை விதவிதமாக நடந்து காட்டவைப்பாள். சில நேரம் சிறிய மாயவித்தைகளைச் செய்து காட்டுவதுகூட உண்டு. அவர் சலனமில்லாமல் பார்த்துக் கொண்டிருப்பார். சில சமயம் அவர் உறக்கம் வரும்வரை தனியே அமர்ந்து குரான் படித்துக்கொண்டிருப்பதுண்டு. அவருக்கு மாதுளம் பழங்கள் பிடிக்கும் என்பதால் பாரசீகமாதுளைகளைத் தங்கக் கிண்ணத்தில் இட்டுத் தருவார்கள். அவர் குழந்தைகள் சாப்பிடுவது போல ஒவ்வொன்றாக எடுத்து ருசித்து சாப்பிடுவார். அந்தப்புரத்தில் தான் ராணிகள் அரசனுடன் மனம்விட்டுப் பேசமுடியும். அக்பர் காலத்தில் அவர் ராணியோடு பேசுவதற்கு என்றே தனியாக நேரம் ஒதுக்கியிருந்தார். அக்பர் உணவுப்பிரியர். விதவிதமான பிரியாணி, புலாவ் என நூற்றுஐம்பதுக்கும் மேற்பட்ட உணவு வகைகளுடன்தான் அவரது மதிய உணவு இருக்கும். ஆனால், ஔரங்கசீப் அப்படியில்லை. அவருக்கு குஜராத்தி உணவுகள் அதிகம் பிடிக்கும். சில வேளை பிரியாணி விரும்பிச் சாப்பிடுவார். மூன்று பேர் அமர்ந்து சாப்பிடும் உணவு மேஜைதான் அவருடையது. அதில் எப்போதும் யாராவது ஒரு விருந்தினர் உடன் அமர்வதுண்டு.

உதய்பூரிக்கும் ஔரங்கசீப்பிற்கும் இடையில் முப்பது ஆண்டு களுக்கும் மேலான வயது வேறுபாடிருந்தது. ராஜபுத்ர பெண் என்பதால் உதய்பூரி வலிமை மிக்கவளாக இருந்தாள். மன்னர் படை எடுத்துச் செல்லும் போதுகூட அவருடன் கூடவே பயணம் செய்தாள்.

ஔரங்கசீப்பின் தீர்மானங்களை மாற்றமுடிகிற ஒரே பெண் என அவளைப்பற்றிப் பேசிக் கொண்டார்கள். உதய்பூரி, அஜ்யா மீது மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தாள். அவளது சொந்தப் பிரச்சினைகளைக்கூட பகிர்ந்துகொள்வதுண்டு. சில நாட்கள் அவள் தன்னை அரசியல்காரணங்களால் கொலை செய்ய முயல்கிறார்கள் என வருந்தி அழுவதைக் கண்ட அஜ்யா அப்படி ஒரு போதும் நடக்காது என ஆறுதல் கூறியிருக்கிறாள்.

சித்தூர் படையெடுப்பின் போது உதய்பூரி பாதுஷாவோடு கூடவே போருக்குச் சென்றாள். அந்த நாட்களில்தான் அஜ்யா மன்னருக்கு சேவை செய்வதற்கு அதிகம் தேவைப்பட்டாள். பாதுஷாவின் எலும்புகள் துருத்திக்கொண்டிருக்கும் மெலிந்த உடலைப் பிடித்துவிடுவதற்கும் அவரது கால்களுக்கு மூலிகைத் தைலம் தேய்த்துவிடுவதற்கும் அஜ்யா உதவி செய்தாள். அந்தத் தருணங்களில் மன்னர் ஒரு வார்த்தைகூட அவளிடம் பேசியதில்லை.

யுத்த வெற்றிக்குப் பிறகான ஒரு நாள் அவளை அழைத்து வரும்படியாக ஆணையிட்டிருந்தார் பேரரசர். அஜ்யா பதற்றத்துடன் அவரைக் காணச் சென்றாள். ஔரங்கசீப் படுக்கையில் இருந்தார். அவரது வலது கன்னம் வீங்கியிருந்தது. குறிப்பாக வலதுபுருவங்கள் வீங்கிப் பெரியதாக இருந்தன. ஏதோ ஒரு விஷவண்டு அவரைக் கடித்துவிட்டது என்றார்கள். வண்டு தன்னைக் கடித்ததைவிடவும் அப்படி ஒரு விஷவண்டு அரண்மனைக்குள் எப்படி வந்தது என்ற கோபமே அவருக்கு அதிகமாயிருந்தது. அந்த வண்டைத் தேடிக் கொல்லும்படியாக காவல்வீரர்களை அனுப்பியிருந்தார். அந்த வண்டு எப்படி அரண்மனைக்குள் வந்தது என்ற விசாரணை நடந்து கொண்டிருந்தது. ஹக்கீம் குலாம் அகமது அதுபோன்ற வண்டுகள் புதர்ச்செடியிலிருந்தே பறந்து வந்திருக்கக்கூடும். அரண்மனைத் தோட்டத்தில் நிறைய பூச்செடிகள் இருப்பதால் ஒருவேளை அங்கிருந்து வந்திருக்கக் கூடும் என்றார். வண்டு கடித்த கடுகடுப்பில் இருந்த ஔரங்கசீப் தோட்டத்திலிருந்த அத்தனை பூச்செடிகளையும் உடனே பிடுங்கி எறிய ஆணையிட்டார். வலி குறையும் வரை அவருக்குத் தொடர்ந்து மருந்தைப் பூசிக்கொண்டிருக்க வேண்டும் என அரைத்து வைத்த மருந்தை அஜ்யாவிடம் காட்டினார் ஹக்கீம்.

ஔரங்கசீப் வலி தாங்கமுடியாமல் படுக்கையில் சுருண்டு படுத்துக் கொண்டார். மெய்காவலர்களைத் தவிர மற்றவர்கள் அங்கிருந்து வெளியேறிப் போய்விட்டார்கள். அஜ்யா மருந்தை மயிலிறகால் தொட்டு அவருக்குத் தடவிவிட முயன்றபோது அவர் வலியில் கத்தியதோடு “சைத்தானே, ஏன் என்னைச் சித்ரவதை செய்கிறாய்” எனக் கூப்பாடு போட்டார். அவள் மன்னிப்புக் கேட்டபடியே அந்தக் கடிபட்ட இடத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பூவில் இருந்த தேனீ கொட்டியிருக்கிறது. இப்படி அவளையும் ஒருமுறை தேனீ கொட்டி

முகம் வீங்கிய ஞாபகம் வந்தது. அவள் தயக்கத்துடன் சொன்னாள்.

“ஹுசூர், தேனீ கொட்டி வீங்கியிருக்கிறது. இதை உடனே சரி செய்துவிடலாம்.’’

“தேனீயா, ஹக்கீம் ஏதோ விஷ வண்டு என்று சொன்னரே.”

“இல்லை ஹுசூர். இது தேனீ கொட்டியதேதான். நானும் இதே வலியை அனுபவித்திருக்கிறேன். சிறிது சுண்ணாம்புடன் புளி சேர்த்து, தேனீ கொட்டிய இடத்தில் போட்டால் வலி மறைந்து விடும்.”

“நிஜமாகவா?’’

“என் அம்மாவிற்குத் தெரிந்த வைத்தியம் இதுதான்.”

அவர் உடனே காவலாளியிடம் ஹக்கீம் குலாமை அழைத்து வா என ஆணையிட்டார்.

அதற்குள் அஜ்யா மண்டியிட்டுச் சொன்னாள்,

“மாமன்னர் அனுமதித்தால் நானே அதைச் செய்துவிடுவேன்’’

“எதையாவது செய். என்னால் வலி தாங்கமுடியவில்லை.’’

அடுத்த சில நிமிடங்களில் அவள் சுண்ணாம்பும் புளியும் சேர்த்து வீக்கத்தில் தடவி விட்டாள். எரிச்சல் தாங்கமுடியாமல் அவர் ஆத்திரப்பட்டுக் கத்தினார். ஆனால், சிறிது நேரத்தில் வீக்கம் குறைந்து போனதுடன் வலியும் அடங்கிப்போனது. ஒரு குழந்தையைப் போல அவர் வியப்போடு சொன்னார்,

“இப்போது வலியில்லை. கடித்தது தேனீ என்று உனக்கு எப்படித் தெரியும்?”

அஜ்யா மௌனமாக நின்றிருந்தாள். அவர் சந்தோஷத்தில் அவளிடம் கேட்டார்.

“உன் பெயரென்ன?’’

“அஜ்யா. உதய்பூரி பேகத்தின் பணியாள்.’’

“உதய்பூரி சரியான ஆட்களைத்தான் உடன் வைத்திருக்கிறாள். இன்று முதல் நீ எனது பணியாள். இங்கேதான் இருக்க வேண்டும்.’’

அஜ்யா தலையாட்டினாள். அவர் வலி குறைந்த மறுநிமிடம் தனது அரண்மனை அலுவல்களைப் பார்வையிடத் துவங்கினார்.

அப்படித்தான் அஜ்யா அந்தரங்க வேலையாட்களில் ஒருவராக மன்னரின் நெருங்கிய வட்டத்திற்குள் சென்றாள்.

சில நேரம் அவளுக்கு பயமாக இருக்கும். அவளை ஔரங்கசீப் நம்புகிறார். முழுவதுமாக நம்புகிறார். அந்த நம்பிக்கையைக் கெடுக்கும் படியாக ஏதாவது சிறு சம்பவம் நடந்தால்கூட தலை போய்விடும்.

கவனமாகச் செயல்பட வேண்டும். காலை நான்கு மணிக்குத் துயில் எழும் ஔரங்கசீப் சில விசித்திரமான நம்பிக்கைகள் கொண்டிருந்தார். ஒவ்வொரு இரவும் அவர் படுக்கைக்குப் போவதற்கு முன்பு தனது பெயரை ஒரு காகிதத்தில் எழுதி அதைப் படுக்கை அடியில் வைத்திருப்பார். விடிகாலையில் எழுந்தவுடன் தன் பெயரை தானே உரக்கப் படிப்பார். எதற்காக அப்படிச் செய்கிறார் என ஒருவருக்கும் புரியாது. ஆனால், தன் பெயரை அவர் உச்சரிக்கும் விதம் கம்பீரமாக இருக்கும். அவரிடம் சில ரகசியமான பதிவேடுகள் இருந்தன. ஒன்றில் அவர் தனது கவலைகளை மட்டுமே பதிவு செய்து வந்திருந்தார். எந்த நாளில் எது பற்றிக் கவலைப்பட்டோம். அந்தக் கவலை மனதை எப்படி வாட்டியது என்பதைப் பற்றி அவர் கைப்படவே பதிவேட்டில் எழுதி வந்தார். இதுபோல தனக்கு வரும் கனவுகளை அவர் தனியே ஒரு பேரேட்டில் எழுதிப் பதிவு செய்து வைத்திருந்தார். காலை ஐந்து மணிக்குள் குளித்துத் தயாராகி அவர் குர் ஆன் ஓதத் துவங்கிவிடுவார். பின்பு ரகசியக் கூட்டம் நடைபெறும். அதில் அரசாங்க உயர் அலுவலர் மந்திரிகள் குறித்த நியாய விசாரணைக்கூட்டத்தில் குறைகளைக் கேட்டு அறிவார். பின்பு படைகளைப் பார்வையிடுவார். காலை ஒன்பது மணிக்கு தர்பார் நடத்தச் செல்வார். சுபேதார்கள், திவான்களுக்கு ஆணைகள் பர்மான்கள் எழுதுதல் போன்றவை நடைபெறும். பனிரெண்டு மணி நடுப்பகல் தொழுகை. பின்பு சற்று உறங்குவார், தரையில் புலித்தோலை விரித்துப் படுப்பதே அவரது பகல்தூக்கத்தின் வழக்கம். விழித்து எழுந்தவுடன் தனி அறையில் படிப்பார். கடிதங்கள் எழுதுவார். அரசியல் விவகாரங்கள் குறித்தும், மத நெறிகள் குறித்தும் விவாதிப்பார். ஐந்து மணிக்கு பிற்பகல் தொழுகை. பின்பு விருந்தினர். வெளிநாட்டுப் பயணிகள் சந்திப்பு. முன்னிரவு தொழுகை அதன்பிறகு உல்மாக்கள் பிரபுக்களின் ஆலோசனைக் கூட்டம். இரவு தொழுகை. அதன்பிறகு ஒன்பது மணிக்கு மீண்டும் குர்ஆன் ஓதுதல், தியானம் செய்தல் போன்றவை நடைபெறும். பதினோரு மணிக்கே அவர் படுக்கைக்குச் செல்வார். அவரது துயில் கொள்ளும் நேரம் நான்கு அல்லது ஐந்து மணி நேரம் மட்டுமே. ஐந்து வேளை தொழுகையை அவர் மறப்பதேயில்லை. வெள்ளிக்கிழமை புனிதநாள் என்பதால் அன்று தர்பார் கிடையாது. அரசாங்க விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டிருந்தது. வியாழக் கிழமையும் பாதி நாள் விடுமுறையே. உலமாக்கள் அமீர்கள் கூட்டமும் கிடையாது. நாளை என்பது தனக்கில்லை என்பது போலவே ஔரங்கசீப் நடந்துகொள்வார். பதற்றமும் கோபமும் ஆத்திரமும் கொண்ட அவரது மனப்போக்கினை அஜ்யா நன்றாகப் புரிந்துகொண்டிருந்தாள்.

இருபத்தாறு ஆண்டுகள் கூடவே அவரது நிழல் போலிருந்தாள். அவளுக்குத் தெரியாத ரகசியங்களில்லை. ஆனால், அவளது உதடுகள் எதையும் வெளிப்படுத்தியதில்லை. அரண்மனை அதிகாரிகளில் சிலர் அவளை சதிவேலைகளுக்கு இழுப்பதுபோல சோதனை செய்து

பார்த்திருக்கிறார்கள். அவள் மசியவேயில்லை. அவர் மன்னரில்லை. பெரும் விருட்சம். அதன் நிழலில்தான் அமர்ந்திருக்கிறோம் என்பதில் அஜ்யா உறுதியாக இருந்தாள்.

மரணத்தின் முந்திய தினம் அஜ்யாவிடம் அவர் “எனக்காக நீ ஒரு காரியம் செய்துமுடிக்க வேண்டும்’’ என்றார்.

அவள் ‘‘உங்கள் கட்டளையை நிறைவேற்றுவதே எனது கடமை’’ என மண்டியிட்டாள்.

“இது கட்டளையில்லை. வேண்டுகோள்.’’

அஜ்யா, அந்த மரப்பெட்டியை எடுத்து வா என அறையின் மூலையில் இருந்த அலங்காரமான மரப்பெட்டி ஒன்றைக் காட்டினார்.

அதை அஜ்யா எடுத்துவந்தாள்.

“திற” என்று சொன்னார்.

அவள் அதைத் திறந்தாள். உள்ளே ஒரு வெண்ணிறக் குல்லாவும் தங்க நாணயங்களும் இருந்தன.

ஔரங்கசீப் அந்த வெண்ணிறக் குல்லாவை எடுத்து நீட்டியபடியே சொன்னார்.

‘‘என் கையால் செய்த குல்லா’’

அவளுக்குத் தெரியும், ஓய்வு நேரங்களில் அவர் குல்லா செய்வார் என. அதை அறிந்திருக்கிறேன் என்பதுபோலத் தலையாட்டினாள்.

“இதை புர்க்கான்பூர் மசூதியில் உள்ள ஒருவரிடம் ஒப்படைக்க வேண்டும்.”

‘‘உல்மாவிடமா’’ என மெல்லிய குரலில் கேட்டாள்.

“இல்லை. அந்த மனிதன் பெயரைக்கூட நான் கேட்டுக் கொள்ளவில்லை. அது ஒரு கதை. படை நடத்திப் போன நாள் ஒன்றில் புர்க்கான்பூர் மசூதிக்குத் தொழுகைக்குச் சென்றேன். என்னை யாரும் அறிந்துகொள்ள முடியாதபடி அரச உடைகளைக் களைந்து விட்டு பிச்சைக்காரனைப் போல உடையணிந்திருந்தேன். தொழுகை மண்டபத்தின் உள்ளே நிறைய கூட்டம், என் முன்னிருந்த மனிதன் ஸ்நேகபாவத்துடன் என்னைப் பார்த்து ‘சகோதரா’ என அழைத்தான். அவ்வளவு வாஞ்சையாக யாரும் என்னை அழைத்ததேயில்லை. நான் அந்த மனிதனை ஏறிட்டுப் பார்த்தேன். அவன் இனிமையான குரலில், ‘தலையில் குல்லா இல்லாமல் தொழுகைக்கு வந்திருக்கிறீர்கள், இதோ என்னுடைய குல்லா அணிந்து கொள்ளுங்கள். நான் என் பையனின் குல்லாவை வாங்கிக் கொள்கிறேன்’ எனத் தனது குல்லாவை எனக்குத் தந்தான். அந்த ஈகை என்னை நெகிழச்செய்தது. நான் அந்தத் தொப்பியை அணிந்துகொண்டு தொழுகை செய்தேன். அன்று அடைந்த

மனநிறைவும் அமைதியும் இன்று வரை கிடைக்க வில்லை. தொழுகை முடிந்து நான் வெளியே வருவதற்குள் அந்த மனிதன் வெளியேறிப் போயிருந்தான். அவனது குல்லாவைத்தான் இன்று வரை நான் தொழுகையின்போது அணிந்துகொள்கிறேன். அவனது ஈகைக்குப் பரிசாக எதையாவது தர வேண்டும் என ஆசைப்பட்டேன். அவனுக்காக நானே என் கைகளால் ஒரு குல்லாவைத் தயாரித்திருக்கிறேன். இதை அவனிடம் ஒப்படைக்க வேண்டும். அத்தோடு என்னை சகோதரன் என அழைத்த அந்த மனிதனின் அன்பிற்காக ஆயிரம் தங்க நாணயங்களைப் பரிசாக வழங்கவேண்டும். இதை நானே நேரில் போய் அந்த மனிதனின் வீட்டுக் கதவைத் தட்டி வழங்க வேண்டும் என்றுதான் காத்திருந்தேன். காலம் நாம் விரும்புகிற எல்லாவற்றையும் நிறைவேற்றிவிடுவதில்லை. எனது வாழ்வின் கடைசி நாட்களை எண்ணிக்கொண்டிருக்கிறேன். இப்போதாவது அதை ஒப்படைத்துவிட வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி யிருக்கிறது. அஜ்யா, நீயும் என் சகோதரிதான். எனக்காக நீயே நேரில் சென்று இந்தக் குல்லாவையும் தங்க நாணயங்களையும் ஒப்படைத்து வருவாயா?" எனக்கேட்டார்.

அதைக் கேட்டபோது அஜ்யாவால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஹிந்துஸ்தானத்தின் பாதுஷா தன்னைச் சகோதரி என அழைத்தது அவளைக் கண்ணீர் சிந்த வைத்தது.

அவர் நடுங்கும் குரலில் சொன்னார்.

"அஜ்யா என் பதிமூன்று வயதில் தாயை இழந்தேன். எத்தனையோ இரவுகளில் தாய் அன்பு இல்லாத வெறுமையை நினைத்து அழுதிருக்கிறேன். ஆனால், என் தாயின் மறுவடிவம் போலவே நீ என்னைக் கவனித்துக்கொண்டாய். நான் நோயுற்ற நாட்களில் நீ அழுது பிரார்த்தனை செய்வதைக் கண்டிருக்கிறேன். அஜ்யா உனக்கு என்ன வேண்டும் கேள், இந்நாள் வரை உனக்கு எதையும் செய்ததில்லை."

"மாமன்னரே, இந்த உலகில் யாருக்கும் கிடைக்காத இடம் எனக்குக் கிடைத்திருக்கிறது. உங்கள் மனதின் மூலையில் இந்த ஏழை அடிமைக்கு ஒரு இடம் தந்ததைவிட வேறு என்ன பரிசு கிடைத்துவிடப்போகிறது. எனக்கென யாரும் இல்லை. இந்த உலகம் என்னைப் பரிகாசம் செய்தது, அவமானப்படுத்தியது. உங்கள் நிழலுக்கு வந்தபிறகுதான் நான் சந்தோஷம் கொள்ளத் துவங்கினேன்."

"அஜ்யா உனக்கு எதன்மீதும் ஆசையில்லையா?"

"இருந்தது. அந்த வயதைக் கடந்துவிட்டேன். இப்போது எனக்கு ஒரேயொரு ஆசை மட்டுமேயிருக்கிறது."

"சொல் உடனே நிறைவேற்றி வைக்கிறேன்."

"உங்கள் கைப்பட எனக்கு ஒரு நன்றிக் கடிதம் எழுதித் தர வேண்டும். ஆயிரமாயிரம் உத்தரவுகளை, ஆணைகளை, கொடைகளை எழுதிய

உங்கள் கைகள் என் பெயரை ஒருமுறை எழுத வேண்டும். அந்தக் கடிதத்தை என் உயிர் உள்ளவரை பாதுகாத்து வைத்துக் கொள்வேன்.”

“அஜ்யா, கடிதம் என்ன, என் உயிலில் உன்னைப் பற்றி எழுதிவிடுகிறேன். நீயில்லாமல் என் இறுதிக் காரியம் நடக்காது. என் கைப்பட குரான் எழுதிக் கிடைத்த வருவாயை உன்னிடம் ஒப்படைக்கிறேன். அதில்தான் எனது சவத்துணி வாங்கப்பட வேண்டும். என் பெயர் இந்த உலகில் வாழும் காலம் வரை நீயும் இருப்பாய். இப்போதே அந்த ஆணையை எழுதிவிடுகிறேன்.”

என அவர் உடனே எழுத்தரை அழைத்து, தனது உயிலில்

அஜ்யாவிடம் தான் ஒப்படைத்துள்ள பொருட்கள் பற்றிக் குறிப்பிட்டு அவற்றைத் தன் மரணத்தின் பிறகு அவளிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதை மறக்காமல் எழுத வேண்டும் எனச் சொன்னார்.

அஜ்யா கண்ணீர் மல்க நன்றி சொன்னாள்.

“அஜ்யா, இந்த உலகம் பெண்களின் அன்பால்தான் உயிர்ப்புடன் இருக்கிறது. அந்த அன்பை உணராத ஆண்களில் நானும் ஒருவன்.’’

“ஒரு அடிமையிடம் இவ்வளவு அன்பு செலுத்த வேண்டிய அவசியமில்லை மாமன்னரே.”

“இல்லை அஜ்யா, மரணத்தின் முன்பு நான் மண்டியிட்டு நிற்கிறேன். இந்தத் தருணம் இனிக் கிடைக்காது. உன் வாயால் என்னை ஒரு முறை சகோதரனே என அழை. நான் கேட்க வேண்டும்.”

அவள் மீண்டும் அழுதாள். அவர் தனது பட்டுத் துண்டினால் அவளது கண்ணீரைத் துடைத்துவிட்டு சொன்னார்,

“விசித்திரமானது உலகம். எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்த உன்னை காலம் என் பணிப்பெண்ணாகப் பிணைத்து விட்டிருக்கிறது. என்னோடு இருந்ததற்காக ஒருவேளை நீ கொல்லப்படக்கூடும். அதுதான் எனக்கு அச்சமாக இருக்கிறது. அஜ்யா நான் உன்னைக் காப்பாற்ற வேண்டும். என் மரணத்தின் மறுநாள் நீ வெளியேறிப்போய்விடும் உன் சொந்த ஊருக்குப் போ. உன் மனிதர்களுடன் உன் முதுமையைக் கழி. உனக்கான எல்லா வசதிகளையும் நானே ஏற்பாடு செய்துவிடுகிறேன்.”

“எனக்கான மனிதர்கள் எவருமில்லை. வானம் என்னை அழைக்கும் வரை நான் இந்த நகரை விட்டு வெளியேறிப் போக மாட்டேன்’’ என்றாள் அஜ்யா.

“அஜ்யா, என் விருப்பத்தை இன்னமும் நீ நிறைவேற்றவில்லை’’

அவள் தயக்கத்துடன் ஹிந்துஸ்தானத்தின் பேரரசன் ஔரங்கசீப்பை நோக்கி ‘சகோதரா’ என அழைத்தாள். அவர் கண்களிலும் ஈரம் கசிந்தது. அவர் நெகிழ்ந்து போனவராக தனது பட்டுத் துண்டினை அவள் மீது போர்த்திவிட்டபடியே சொன்னார்,

“அஜ்யா, நீ புர்க்கான்பூர் மசூதிக்குப் போய் அந்த ஆளை விசாரித்து பரிசை ஒப்படைத்து வர இரவே புறப்படு.”

அவள் தலையசைத்தாள். அந்தக் குல்லாவை மரப்பெட்டியில் வைத்து ஒரு காவலனை உடன் அனுப்பி வைத்தார்.

வெளியேறும்போது சொன்னார்.

“ரகசியம். இந்த விஷயம் யாருக்கும் தெரியக்கூடாது.”

அஜ்யா அந்த மரப்பெட்டியைத் தனது அறைக்குக் கொண்டு சென்றபோது ஒற்றர்களில் ஒருவன் மாமன்னர் தனது மஹல்தார்

அஜ்யாவிடம் ஏதோ ரகசியமாகக் கொடுத்து அனுப்புகிறார். அநேகமாக பொக்கிஷங்களைப் புதைத்துள்ள இடம் பற்றிய விபரமாகத்தான் இருக்கக்கூடும். அஜ்யா இரவோடு புறப்படத் திட்டமிடுகிறாள். அவள் கோட்டையை விட்டு வெளியேறிவிட்டால் பொக்கிஷங்கள் கைவிட்டுப் போய்விடும் என இளவரசன் முகமு ஆஜமிற்கத் தகவல் அனுப்பினான்.

அன்றிரவு அஜ்யா தனது பயணத்திற்குத் தயாராக இருந்தபோது அரண்மனைக் காவலர்களால் தடுத்து நிறுத்தப்பட்டாள். அதன் பிறகு அவள் மாமன்னர் ஔரங்கசீப்பை காண முடியவேயில்லை.

முறையீடு

தூமகேதுவைப் போன்ற ஒரு அப்பாவியை ஏன் கைது செய்துகொண்டு போனார்கள் என நளாவிற்குப் புரியவேயில்லை. அவள் தூமகேது கைதுசெய்யப்பட்ட இரவில் உறங்கவேயில்லை. அவனை நிச்சயம் கொன்றுவிடுவார்கள் என நம்பினாள். துர்க்கனவுகளால் அலைக்கழிக்கப்பட்டாள். பின்னிரவில் எழுந்து வந்து வீட்டின் முன்பு இருளில் உட்கார்ந்துகொண்டு அழுதாள்.

இனி என்ன செய்வது. யாரை நம்பித் தனது குழந்தைகளை வளர்ப்பது. ஒருவேளை அரசாங்கத்தினர் தன்னையும் பிள்ளைகளையும் தேடி வந்து கைது செய்துவிடுவார்களா. நினைக்கவே பயமாகவும் இருந்தது.

எல்லா தெய்வங்களையும் மனதிற்குள் வணங்கிக்கொண்டாள். ஒரேயொரு முறை கணவனைப் பார்த்தால்கூடப் போதும். ஆனால், எங்கே போய்ப் பார்ப்பது. எப்படிப் பார்ப்பது. எதுவும் அவளுக்குத் தெரியவில்லை.

முதலையின் வாயில் கால்கள் மாட்டிக்கொண்டால் அது தண்ணீருக்குள் இழுத்துக்கொண்டு போய்க் கொன்றுவிடும் என்பார்கள். தூமகேது அப்படி அரசாங்கத்திடம் மாட்டிக் கொண்ட தாகவே நினைத்தாள்.

மறுநாள் அவள் தெரிந்தவர்கள் பலரிடமும் தூமகேதுவை எங்கே

கொண்டு போயிருப்பார்கள், எப்படிக் காண்பது என விசாரிக்கத் துவங்கினாள். ஒருவருக்கும் அதைப்பற்றித் தெரியவில்லை.

ஒரு வணிகன் மனைவி "அவனை காலாவில் அடைத்திருப்பார்கள். காலாவிற்குள் வெளியாட்கள் போக முடியாது. நீ ஜாதவ்ராவிடம் முறையிடு. அவர் நினைத்தால் நீ காலாவிற்குள் போக முடியும்'' என்றாள்.

"ஜாதவ் ராவ் வீடு எங்கிருக்கிறது'' என நடுங்கிய குரலில் கேட்டாள் நளா.

"மாடவீதியில்" என்றாள் வணிகனின் மனைவி.

ஜாதவ் ராவின் வீட்டை நளா தேடிப் போனபோது, அது பெரிய மாளிகையாக இருந்தது. வாயிற்காப்பவர்கள் அவளை உள்ளே அனுமதிக்கவில்லை. எவரும் ஜாதவ் ராவைக் காணமுடியாது எனத் துரத்திவிட்டார்கள். எப்படியாவது ஜாதவ்ராவைப் பார்த்தேயாக வேண்டும் என்பதுபோல மாளிகை ஒட்டிய மரத்தடியில் உட்கார்ந்தேயிருந்தாள். இரவாகி விளக்குள் ஏற்றப்பட்ட போதும் அவள் அங்கிருந்து நகரவில்லை. காவலர்கள் அவளை அடித்துத் துரத்திய போதும் அவள் விலகிப்போகவில்லை. இரண்டு நாட்கள் அந்த வீட்டின் முன்பு காத்துக்கிடந்த போதும் ஜாதவ் ராவைக் காண இயலவில்லை. அந்த ஆற்றாமையைத் தாங்கமுடியாமல் அழுதாள்.

தன்னைப் போன்ற ஏழைகள் யாரிடம்தான் முறையிடுவது, கடவுள் ஏன் தன் கணவனைத் தன்னிடமிருந்து பறித்துக் கொண்டார். தான் ஏதேனும் பாவம் செய்துவிட்டேனா எனப் புலம்பியபடியே அவள் நிகிலிக்கு வந்து சேர்ந்தாள். தூமகேது திரும்பி வரமாட்டான் என்றால் நாமும் செத்துப் போய்விடலாமா என்றுகூட யோசித்தாள். பசியும் தாகமும் அவள் கால்களை நடுங்க வைத்தது. அவள் கோதுமை மாவில் கொஞ்சம் அள்ளி வாயிலிட்டு தண்ணீர் குடித்துக்கொண்டாள்.

வருத்தத்தை அவளால் கட்டுப்படுத்தமுடியவில்லை. எதற்கும் ஆசைப்படாத பெண்தானே நான். என்னை ஏன் கடவுள் இப்படி சோதிக்கிறார் எனத் தனக்குத் தானே பேசிக் கொண்டேயிருந்தாள்.

உறக்கம் வராத அவளது மாமனார் டோலு அந்தப் புலம்பல்களைக் கேட்டு ஆத்திரமாகி அவளைத் திட்டினார். வழக்கமான நாளாக இருந்தால் பதிலுக்கு சண்டையிட்டிருப்பாள். அன்று அவள் அமைதியாக இருந்தாள்.

மறுநாள் அவள் ஆருடம் கேட்பதற்காக பாக்புரா சென்றிருந்தாள். ஜோதிடரின் வீட்டு முன்பு நிறைய கூட்டம். நார்ப்பெட்டி நிறையக் கொண்டுபோன தானியத்தை அவருக்குக் காணிக்கையாகச் செலுத்தினாள்.

ஐந்தே வார்த்தைகளில் ஜோதிடர் அவளது எதிர்காலத்தைச்

சொல்லிவிட்டார்.

“உன் கணவன் இனி வீடு திரும்பமாட்டான்.”

அதைக் கேட்டபோது அவளுக்குத் தலை சுற்றியது. கண்முன் விரிந்திருந்த பகல் அப்படியே மங்கிக் கருத்து இருண்டுபோனது போலாகியது. அவள் வேறு சில கேள்விகளைக் கேட்க விரும்பினாள். ஆனால், உதடு உலர்ந்து ஒட்டிக்கொண்டது போலாகியது.

அவள் கண்ணீரை மறைத்தபடியே கையெடுத்துக் கும்பிட்டு எழுந்து கொண்டாள். பிறகு விடுவிடுவெனத் தன்வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள். இனி என்ன செய்வது. ஜோதிடரே சொல்லிவிட்டார். சத்கரை விட்டு தன்பிள்ளைகளுடன் சொந்த ஊருக்குப் போய்விடலாமா, இல்லை, கணவன் இறந்துவிட்டான் என மனதைத் தேற்றிக்கொண்டு எப்போதும் போல வேலைகளைத் தொடர வேண்டுமா. நினைக்க நினைக்க அவளுக்கு ஒரே மனக்குழப்பமாக இருந்தது. பாதி வழியில் வந்தபோது அவள் ஒரு மரத்தைப் பார்த்தாள். அதில் முறிந்த கிளை ஒன்று மரத்தில் தொங்கி ஆடிக்கொண்டிருந்தது. அதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கிளை முறிந்துவிட்டது. ஆனால், மரத்தின் பிடி அதை விடவில்லை. இலைகள் உதிர்ந்து போனாலும் அக்கிளை மரத்தோடுதானிருந்தது.

அதைப் பார்க்கப் பார்க்க மனதில் ஒரு உறுதி பிறந்தது. கிளை முறிந்தாலும் மரம் வாழ்ந்துகொண்டுதானிருக்கிறது. நான் என் பிள்ளைகளைக் காப்பாற்றுவேன். என உறுதியாக முடிவு செய்து கொண்டாள். வெயில் அதிகமாக இருந்தபோதும் அந்த மன உறுதி வந்தபிறகு அவளது நடை உறுதியானதாக மாறியது.

காலா எனும் தனியுலகம்

காலாவில் அடைக்கப்பட்ட தூமகேதுவும் தன் எதிர்காலத்தை நினைத்து வருந்திக்கொண்டுதானிருந்தான். மனைவி பிள்ளைகள் என்ன செய்துகொண்டிருப்பார்களோ. நளா ஒருத்தி வேலை செய்து எப்படி குடும்பத்தை நடத்த முடியும். ஆண் துணை யில்லாத பெண் என்றால் எவ்வளவோ அவமானங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும். நளா தைரியசாலி, எப்படியாவது சமாளித்து விடுவாள். ஆனால், தன்னால் இப்படி ஒரு விசாரணைக் கொட்டடியில் முடங்கிக் கிடந்து வாழ முடியாது எனப் புலம்பிக் கொண்டிருந்தான்.

அந்த இடையன் ஏன் என்னைக் குற்றவாளியாக்கினான். ஒருவேளை அவன் சொல்வதுபோல என்னைப் போல வேறு ஒருவன் இருக்கிறானா. அல்லது ஜாடை பொருந்தியிருப்பதால் தன்னை வேறு ஆளாக நினைத்துக்கொண்டானா. காவலர்கள் ஏன் எதையும் விசாரிக்கவில்லை.

காலாவிற்குள் வந்தபிறகு தூமகேது ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொண்டுவிட்டான். அவனைப் போன்ற அப்பாவிகள் பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஏதேதோ குற்றங்களைச் சுமந்துகொண்டிருக்கிறார்கள். எண்பது வயதான முதியவர் ஒருவரை காலாவில் தூமகேது சந்தித்தான். அவர் முப்பது ஆண்டுக்காலமாக நீதி விசாரணை முடியாமல் காத்திருப்பதாகச் சொன்னார். வாழ்க்கை முடியப்போகிறதே எனக் கேட்டதற்கு அவர் சொன்னார்,

“அதுதான் என்விதி.”

“எதற்காக நீங்கள் கைது செய்யப்பட்டீர்கள்?”

“எச்சில் துப்பியதற்காக.”

“எச்சில் துப்பியதற்குக் கூடவா கைது செய்வார்கள்.”

“வேண்டும் என்றே தன்னைப் பார்த்து எச்சில் துப்பிவிட்டதாக வணிகன் சந்தர்மால் புகார் கொடுத்துவிட்டான். நான் செய்த ஒரே தவறு. ஒருமுறை அவனிடம் உப்பை ஏன் அநியாய விலைக்கு விற்கிறாய் எனச் சண்டையிட்டது. அதை மனதில் வைத்துக்கொண்டு புகார் செய்துவிட்டான். ஒரு விசாரணையும் இல்லை. என்னைக் கைது செய்து கொண்டுவந்துவிட்டார்கள்.”

“அநியாயமாக இருக்கிறதே.”

“அநியாயம்தான் ஆனால், அதை யார் கேட்பது. புலம்பிப்புலம்பி எனது உதடுகள் தேய்ந்து போய்விட்டன. முப்பது ஆண்டுகள் காலாவில் அடைபட்டுக் கிடக்கிறேன்.’’

“நானும் செய்யாத குற்றத்திற்குத் தான் கைது செய்யப்பட்டேன்.’’

“இங்கிருப்பவர்களில் பெரும்பான்மையினர் நிரபராதிகளே.”

“எப்போது நீதி விசாரணை நடக்கும், எப்போது என்னை விடுவிப்பார்கள்?”

“யாருக்குத் தெரியும். பிஷாடனின் ஆட்சியில் நீதி கிடைப்பது என்பது கால் இல்லாதவன் மரம் ஏறிப் பழம் பறிப்பது போன்றது தான்.”

“இங்கேயே கிடந்து சாக வேண்டியதுதானா?”

“உன்னைப் போலதான் நானும் புலம்பினேன். இப்போது அதை மறந்துவிட்டேன். அழுது புலம்பி எதுவும் நடக்கப்போவதில்லை.’’

“குடும்பத்தை நினைத்து என்னால் சாப்பிட முடியவில்லை. உறங்க முடியவில்லை.”

“நானும் அப்படித்தானிருந்தேன். ஆனால், நாம் நினைப்பது போல் இல்லை. குடும்பம் தானே நடந்துகொண்டு தானிருக்கும். அவர்களின் சந்தோஷங்களை, துக்கங்களைப் பகிர்ந்துகொள்ள நாம் உடனிருக்க மாட்டோம் என்பதுதான் வருத்தமானது.”

“காலாவில் எவ்வளவு பேர் இருக்கிறார்கள்.”

“பத்தாயிரம் என்கிறார்கள். அதிகமிருக்கலாம்.”

“நமக்கு என்னதான் தீர்வு?”

“காலம்தான் அதை முடிவு செய்யும்’’ என அந்தக் கிழவர் சொன்னார்.

அதைக் கேட்ட நாளில் தூமகேது மனதளவில் நொறுங்கிப் போனான். கூட்டிலிருந்து தவறி விழுந்த பறவைக்குஞ்சைப் போல அவன் செய்வதறியாமல் தவிக்கத் துவங்கினான்.

•••

சத்கரில் உறக்கம் வராத ஒரு மனிதன் இருந்தான். அவன் தான் அந்த நகரை ஆண்டுவந்த பிஷாட மன்னன். பல ஆண்டுகளாகவே அவனுக்கு உறக்கமின்மை தீர்க்கமுடியாத நோயாக இருந்து வந்தது.

ஒவ்வொரு இரவிலும் அவனை எப்படியாவது உறங்க வைத்துவிட வேண்டும் என்பதற்காக விதவிதமான மூலிகைகளை மருந்தாக அரைத்துத் தந்தார்கள். ஆனாலும் எந்த வைத்தியனாலும் பிஷாடனை உறங்க வைக்க முடியவில்லை. நாட்கணக்கில் தொடர்ந்த உறக்கமின்மை அவனை மூர்க்கம் கொள்ளச் செய்திருந்தது. வெடித்து எழும் கோபமும் ஆத்திரமும் ஒன்றுகலந்து வசைபொழியும் குணம் கொண்டவனாகவே பிஷாடனிருந்தான்.

அரிதாக சில நாட்கள் விடிகாலையின் மென்வெளிச்சம் பூமியில் படும்போது தன்னை அறியாமல் அவன் உறங்கிவிடுவது உண்டு. மதியம் வரை உறங்கிக்கொண்டேயிருப்பான். பின்மதியத்தில் எழுந்து

கொள்வான். நீராடியதும் அவன் தன் விருப்பத்திற்குரிய குரங்குடன் சதுரங்கம் ஆடப் போய்விடுவான்.

அந்தக் குரங்குதான் அவனது உயிர்த்தோழன்.

அது ஒரு பேசும் குரங்கு.

அதற்கு ‘அநாம்’ என பிஷாடன் பெயரிட்டிருந்தான்.

தங்கக் குல்லா அணிந்து செம்பட்டை மயிர் அடர்ந்த முகமும், அகன்ற கைகளும் கூர்ந்த கண்களும் கொண்டிருந்தது அக்குரங்கு.

நெருங்கிப்போனால் அதன் மீதிருந்து சந்தன மணம் வீசும். அந்த மணம் பிஷாடனுக்குப் பிடித்தமானது, அதற்காகவே சந்தன வாசனைத் தைலத்தைக் குரங்கிற்குத் தேய்த்துக் குளிக்க வைத்தார்கள்.

அநாம் பிஷாடனின் செல்லப்பிராணி. நாள் முழுவதும் தன் கூடவே அதை வைத்திருப்பான். சில வேளைகளில் படுக்கை அறையில் நிர்வாணமாகக் கிடக்கும் அவன் தன்மீது அநாமை நடக்கவிடுவதும் உண்டு. அது ஒரு கிளர்ச்சி. அந்தக் கிளர்ச்சியை பிஷாடன் விரும்பினான்.

அநாம் குரங்கு என்றபோதும் மனிதனைப் போலவே எதையும் உற்று நோக்கியது. அந்தக் கண்களில் பிஷாடனைப் போலவே ஆத்திரமும் ஏளனமும் கலந்திருந்தன. அக்குரங்கின் குரல் விநோதமானது. சில நேரம் அநாம் ஆத்திரமாகிக் கத்தும்போது அது மனிதர்களின் குரலைப் போலவே ஒலிப்பதை பிஷாடன் அறிந்திருந்தான். அப்போது அநாம் பாதிமனிதன் என பிஷாடனுக்குத் தோன்றும்.

அநாம் மிகவும் அறிவாளியாக இருந்தது, குறிப்பாக அதற்கு நிகராக சதுரங்கம் ஆடுவதற்கு யாருமே இல்லை எனும்படியாக விளையாடியது. மனித மூளைக்கு சாத்தியமற்ற நகர்வுகளை அது உருவாக்கியது, சில நேரம் கண் இமைக்கும் நேரத்தில் எதிராளியைத் தோற்கடித்தது.

குரங்கு சதுரங்கம் ஆடுகிறது என்பதைப் பற்றி அறிந்த பலரும் வியப்போடு பார்க்க வந்தார்கள், அதனுடன் போட்டியிட்டார்கள், யாரும் அநாமை வெல்லமுடிந்ததில்லை, அநாம் விளையாடும் தருணங்களில் வெறி கொண்டது போலவே நடந்துகொண்டது. சதுரங்கம் ஆடுவதற்காகவே பிஷாடன் ஒரு மாளிகையை உருவாக்கியிருந்தான். அதன் பெயர் ரங் மஹால், அந்த மாளிகையின் உட்புறத்தில் விதவிதமான வடிவங்களில் சதுரங்கப் பலகைகள் உருவாக்கபட்டிருந்தன, வெளிப்புறத்தோட்டத்தில் மனிதர்கள் சதுரங்கக் காய்களாக உடையணிந்துகொண்டு விளையாடுவதற்கு ஏற்ப ஒரு திறந்தவெளிப்பலகை உருவாக்கப்பட்டிருந்தது.

இதுபோலவே பெண்ணின் முதுகில் வரையப்பட்ட சதுரங்கப்

பலகையை உபயோகித்து சதுரங்கம் ஆடுவதும் அவளுக்கு விருப்பமானது. உறக்கமின்மையால் பீடிக்கப்பட்ட பிஷாடன் பலநாட்கள் விடியும் வரை அநாமோடு சதுரங்கம் ஆடுவான். பிஷாடனுடன் விளையாடும்போது அநாம் ஒரு போதும் ஜெயிப்பதில்லை.

அநாம் தன்னைக் கண்டுப் பயப்படுகிறது என்பது பிஷாடனுக்கு புரிந்திருந்தது. அவன் அநாமை சீண்டுவதற்காகவே தோற்பதுபோல விளையாடுவான். ஆனால், அநாம் ஒரு போதும் அவனை வெல்ல முயன்றதேயில்லை. என்ன பயம் அது. குரங்குதானே. அதற்கும் சாவைப்பற்றிய பயமிருக்குமா, இல்லை நடிக்கிறதா?

அநாமோடு போட்டியிட்டுத் தோற்றவர்களின் விரல்களை பிஷாடன் துண்டித்துவிடுவான். அந்த விரல்களை ஒரு மாலையாக்கி அநாமின் கழுத்தில் சூடிவிடுவான். அதுபோன்ற நேரங்களில் அந்த விரல்களை உற்றுப் பார்த்தபடியே அநாம் எதையோ யோசித்துக் கொண்டிருக்கும்.

பிஷாடனின் மாளிகையில் தனி அறை ஒன்றில் வசித்தது அநாம். அதைக் குளிக்க வைக்கவும், உணவு தரவும், அணிகலன்கள் அணிவிக்கவும் மூன்று இளம்பெண்கள் பணியில் இருந்தார்கள்.

அநாமிற்கும் அணிவிப்பதற்கெனப் பட்டாடைகள் இருந்தன. அதை அணிந்துகொண்டு மன்னர் எழுவதற்கு முன்பு அநாம் அவர் அருகில் போய்க் காத்திருக்கும். பிஷாடன் குளித்து வந்தவுடன் அநாமைக் கட்டி அணைத்து முத்தமிடுவான்.

“அநாம்… அநாம்…” எனப் பிதற்றுவான்.

நான்கு வயதில் பிஷாடன் ஆட்சிக்கு வந்தான். அவனது தந்தையை விஷம் கொடுத்துக் கொன்றவர்கள் அவனையும் கொல்வதற்காக ஆள் அனுப்பினார்கள். ஆனால், அந்தச் சதி முறியடிக்கப்படவே, பிஷாடன் தனது நான்குவயதில் சத்கரின் அரசனாக முடிசூட்டப்பட்டான்.

தந்தையைப் போலவே எந்த நேரத்திலும் அவனும் விஷம் வைத்துக் கொல்லப்படக்கூடும் என்பதற்காகவே அவனைத் தனி மாளிகையில் வளர்த்தார்கள். அங்கே விலங்குகள் மட்டுமே அவனுக்குத் துணையாக இருந்தன. ஒன்றிரண்டு பணியாளர்களைத் தவிர வேறு மனிதர்கள் எவரும் அந்த மாளிகைக்குள் நுழைய முடியாது. பிஷாடனை சந்தோஷப்படுத்துவதற்காக உலகெங்குமிருந்து விநோதமான மிருகங்கள், பறவைகள் பிடித்துக் கொண்டு வரப்பட்டன, அதற்கெனத் தனியே கூண்டுகள் அமைக்கப்பட்டிருந்தன.

பிஷாடன் மகிழ்ச்சி கொள்வதற்காக மிருகங்களை சவுக்காலோ, தடியாலோ அடிப்பார்கள். வலி தாளமுடியாமல் மிருகங்கள் அலறும் போது பிஷாடன் வாய்விட்டுச் சிரிப்பான். உற்சாகமாக எழுந்து ஆடுவான். சில நேரங்களில் அவனே சவுக்கைக் கையில் வைத்துக்

கொண்டு அடிப்பதும் உண்டு. அந்த அலறல் சப்தம் நாள் எல்லாம் மாளிகைக்குள் எதிரொலித்துக்கொண்டிருந்தது.

பிஷாடனுக்கு வலியில் யார் துடித்தாலும் கண்ணீர் விட்டாலும் பிடித்திருந்தது. அதுதான் தனது ஒரே இன்பம். அவனிடம் விதவிதமான சித்ரவதை செய்யும் கருவிகள் இருந்தன. சிலவற்றை அவனே உருவாக்கவும் செய்திருந்தான்.

விஷமிட்ட உணவை காக்கைகளுக்கு வீசி எறிந்து அவற்றைக் கொல்வது பிஷாடனுக்கு விருப்பமான பொழுதுபோக்கு. இதற்காக அவன் அரண்மனையின் மேற்தளத்திற்கு மதிய நேரங்களில் செல்வான்.

விஷமிட்ட உணவைக் கொத்த வரும் காகங்களை அவன் ரசித்துப் பார்ப்பான். சில நாட்களில் காகங்கள் மட்டுமன்றி, குருவிகள் புறாக்கள் எனப் பலவிதமான பறவைகள் விஷமிட்ட தானியத்தையோ, உணவையோ சாப்பிட்டுச் செத்து விழுவதுண்டு. விஷத்தைச் சாப்பிட பறவைகள் வராத நாட்களில் அதை அரண்மனைப் பணியாளர்கள் சாப்பிட்டுச் செத்துப் போக வேண்டும் என்பதை வழக்கமாக்கி வைத்திருந்தான் பிஷாடன்.

பிஷாடனைச் சமாளிக்கத் தெரிந்த ஒரே ஆள் அவனது மாமா முத்கலன். அவர் ஒருவரின் பேச்சை மட்டுமே பிஷாடன் முழுமையாக நம்பினான். அவர்தான் பிஷாடனை மன்னராக்கியவர். வளர்த்து எடுத்தவர். ஆட்சியில் அவனுக்கு உறுதுணை செய்பவர்.

பிஷாடன் ஒரு நாள் திடீரென, பறக்கும் யானை ஒன்று தனக்கு உடனே வேண்டும் எனக் கேட்டான்.

முத்கலன் தனது தங்கப்பூண் போட்ட கைத்தடியைத் தடவியபடியே “மருமகனே, உனக்கு இந்த ஆசை எப்படி வந்தது’’ எனக்கேட்டார்.

“பறக்கும் யானையைப் பற்றிய ஒரு கதையை நீங்கள்தானே எனக்கு சிறுவயதில் சொன்னீர்கள். அது திடீரென இப்போது ஞாபகம் வந்தது. பறக்கும் யானை எனக்கு உடனே வேண்டும்’’ என்றான் பிஷாடன்.

“அதற்கென்ன உடனே கொண்டு வரச்சொல்கிறேன்“ என உத்தர விட்டார் முத்கலன்.

யானை எப்படி பறக்கும். இது என்ன முட்டாள்தனமான யோசனை என சபையிலிருந்தவர்கள் மனதிற்குள் புலம்பிய போதும் ஒருவரும் அதை வெளிக்காட்டிக்கொள்ளவில்லை. மாலைக்குள் பறக்கும் யானையைக் கொண்டுவருவதாகச் சொன்னார்கள்.

பறக்கும் யானைக்கு எங்கே போவது எனப் புரியாமல் மந்திரிகள் குழம்பிக்கொண்டிருந்தபோது முத்கலன் சொன்னார்.

“அரண்மனைக் கொட்டிலில் இருந்த யானைக்கு வெண்ணிற வண்ணம் பூசி அதுதான் பறக்கும் யானை என்று கொண்டு வந்து நிறுத்துங்கள்.”

அதுதான் ஒரே வழி. அவர்கள் உடனடியாக யானைக்கு வெண்ணிறம் பூசும் பணியைத் துவங்கினார்கள். அன்று மாலை பிஷாடன் தன்முன்னே நிறுத்தப்பட்ட வெள்ளை யானையைக் குழப்பத்துடன் பார்த்துக்கொண்டிருந்தான். பிறகு கண்களைச் சுருக்கியபடியே கேட்டான்.

“இதுதான் பறக்கும் யானையா?’’

“ஆமாம்’’ எனத் தலையாட்டினார் மந்திரி.

“யானை எப்படிப் பறக்கும் எனப் பார்க்க ஆசையாக இருக்கிறது. உடனே வானில் பறக்க விடுங்கள்’’ என்றான் பிஷாடன்.

அதைக் கேட்ட மந்திரி சொன்னார்.

“மாமன்னரே யானையை பறக்க வைக்கும் சூட்சுமம் பாகனுக்கு மட்டுமே தெரியும். அவன் கிராமத்திலிருக்கும் தன் மகள் வீட்டிற்குப் போயிருக்கிறான். நாளை வந்துவிடுவான். யானையை நிச்சயம் பறக்கவிடலாம்.’’

“முட்டாளே, என்னால் அந்தப் பாகனுக்காகக் காத்திருக்க முடியாது. யானை உடனே பறக்க வேண்டும்’’ எனக் கட்டளையிட்டான் பிஷாடன்.

இப்போது என்ன செய்வது எனப் புரியாமல் இரண்டு காவலர்கள் யானையின் அருகில் போய் ஈட்டியால் அதைக் குத்தினார்கள்.

அடுத்த சில நிமிசங்களில் யானை தன் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓட ஆரம்பித்தது.

யானை வானில் பறப்பதற்கு பதிலாக ஏன் வெறி கொண்டு ஓடுகிறது எனப் புரியாமல் “யானையைக் கொல்லுங்கள்’’ எனக் கத்தினான் பிஷாடன்.

“பறக்காத இந்த யானையை தூக்கிலிட்டுக் கொல்லுங்கள்’’ என உத்தரவிட்டான்.

யானையை எப்படித் தூக்கிலிடுவது என மந்திரிக்குப் புரியவில்லை, அவர் அந்த தண்டனையை உடனே நிறைவேற்றுவதாகச் சொல்லி யானையின் சோற்றுக்கவளத்தில் விஷத்தைக் கலக்க வைத்து அதைக் கொன்றார். பின்பு பத்து ஆட்களை வைத்து அதைக் கயிற்றில் கட்டித் தூக்கி, கோட்டை முகப்பில் தூக்கிலிட்டதுபோலத் தொங்க விட்டார். பிறகு பிஷாடனை அழைத்து வந்து காட்டினார்.

ஒரு யானை தூக்கில் தொங்குவதை முதன்முறையாக அப்போது தான் பிஷாடன் பார்த்தான்.

இதுவரை எந்த மன்னரும் அளிக்காத விசித்திர தண்டனை என சந்தோஷம் கொண்டவன்போல சொன்னான்.

யானை கொல்லப்பட்ட நிகழ்வு அநாமை மிகவும் வருத்தமடையச்

செய்தது. தன்னையும் இந்த முட்டாள் ஒரு நாள் இப்படிக் கொன்று விடுவான் என நினைத்தது. அதன்பிறகு பிஷாடனுடன் சதுரங்கம் விளையாடுவதற்குக்கூட பயந்தது.

போதையும் முட்டாள்தனமும் உச்சம் அடைந்த ஒருநாளில் மன்னன் பிஷாடன் அநாமை அழைத்துக் கொஞ்சியபோது திடீரென அவனுக்கு ஒரு யோசனை உருவானது.

“ஏன் அநாமிற்கு ஒரு பெண்ணைத் திருமணம் செய்து வைக்கக் கூடாது?’’

அந்த யோசனை வந்த மறுநிமிடம் அவன் உற்சாகம் அடைந்து அநாமிடம் சொன்னான்,

“உனக்கு ஒரு அதிசயமான பரிசு தரப்போகிறேன்.”

அநாம் சதுரங்கக் காய்களை வெறித்துப் பார்த்தபடியே இருந்தது.

பிஷாடனே சொன்னான்.

“உனக்குத் திருமணம் செய்து வைக்கப்போகிறேன், நல்ல அழகி ஒருத்தியைத் தேடிக் கண்டுபிடித்து உனக்கு மனைவியாக்குகிறேன்.’’

அநாம் திடுக்கிட்டு திரும்பியது.

“அவள் நிச்சயம் உன்னைவிட பேரழகியாக இருப்பாள். நன்றாக அவளை அனுபவி’’ எனச் சொல்லி பிஷாடன் சிரித்தான்.

அந்த சிரிப்பின் விபரீதம் புரிந்த அநாம் சதுரங்கக் காய் ஒன்றை வீசி எறிந்தது. பிஷாடன் வெறித்தனமாக சிரித்தபடியே சொன்னான்,

“நீ அந்தப் பெண்ணுடன் கூடுவதை நான் அருகில் இருந்து பார்ப்பேன். இனிமையான காட்சியாக இருக்கும், குரங்குக் கலவியை நான் கண்டதேயில்லை.”

வெறுப்போடு அநாம் அந்த அறையை விட்டுத் தாவியோடியது.

திறந்தவெளி இடுகாடு

கடந்தகாலத்தை நினைத்துக்கொண்டு முடங்கிக் கிடப்பது ஒன்றுதான் சிறைப்பட்டவர்களின் ஒரே ஆறுதல். தூமகேதுவும் அப்படித்தானிருந்தான்.

தூமகேதுவின் தாத்தா பாரமத்தின் காலத்தில் அவர்கள் மன்னரின் ஆணையால் சத்கருக்கு கட்டாயப்படுத்தி அழைத்து வரப்பட்டார்கள். அதற்கொரு காரணமிருந்தது. திடீரென சத்கரில் விஷக்காய்ச்சல் பரவியது. கைகால்களில் வலி ஏற்பட்டு நடக்க முடியாமல் எலும்புகள் இறுகிக் கொண்டன. நோயாளிகளின் வாயிலிருந்து கறுப்பான திரவம் வழிய ஆரம்பித்தது, சில நாட்களில் கண்கள் புடைத்துப் போய்

உதடுகள் வெடித்து ஆட்கள் இறந்துபோகத் துவங்கினார்கள். ஆண்கள், பெண்கள் குழந்தைகள் என வயது வேறுபாடின்றி நூற்றுக் கணக்கில் ஆட்கள் இறந்துபோனார்கள்.

அந்தக் காய்ச்சல் எதனால் வருகிறது? ஏன் இறந்துபோகிறார்கள் என ஒரு மருத்துவராலும் கண்டுபிடிக்கமுடியவில்லை. காய்ச்சல் கண்ட எல்லோருக்கும் நினைவுதப்பிப்போனது, தனக்கு என்ன ஆனது, தான் எங்கிருக்கிறோம் என்ற தன்னுணர்வுகூட அவர்களுக்கு இல்லை. நோயாளிகளை உயிரோடு பிழைக்க வைக்க வேண்டும் என்றால் ஈரமண்ணில் புதைத்து வைக்க வேண்டும் என்றார்கள். இதற்காகக் குழி தோண்டி பலரைப் புதைத்தும் வைத்தார்கள். ஆனால், அப்படியும் குணமாகவில்லை.

சாவு எண்ணிக்கை பெருகிக்கொண்டேவந்தது. ஐந்து நாட்களில் இரண்டாயிரம் பேர் செத்துப் போயிருந்தார்கள். விஷக்காய்ச்சல் முற்றிக்கொண்டேவந்தது. ஒரு வீட்டில் கணவன் மனைவி பிள்ளைகள் உள்ளிட்ட ஏழு பேர் ஒரே நாள் இறந்துபோனார்கள். வணிகச்சந்தையில் பொருள்வாங்க வந்தவர்கள் வழியிலே செத்து விழுந்தார்கள். ஒரு வயதுக் குழந்தை முதல் நூறைத் தொட்ட கிழவர்கள் வரை காய்ச்சலில் சுருண்டுவிழுந்து இறந்துபோனார்கள். இறந்த உடல்கள் அப்படி அப்படியே கிடந்தன. வீடுகளில், வீதிகளில், நகரமையத்தில் என எங்கும் இறந்த உடல்கள். யாராலும் சவங்களை அப்புறப்படுத்த முடியவில்லை. விறைத்துப்போன குளிர்ச்சியான உடல்களைச் சுற்றி ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன. திறந்த கண்களுடன் இறந்து போனவர்கள் வானை வெறித்துப் பார்த்தபடியேயிருந்தார்கள். தெருநாய்களும்கூட காய்ச்சல் கண்டு இறந்தன. இறந்த உடல்களைத் தின்னும் எலிகள் தைரியமாக தெருவில் ஓடியலைந்தன. சாம்பல்நிறப் பூனையொன்று வீட்டின் கூரைமீது நின்றபடியே ஓயாமல் கத்திக் கொண்டிருந்தது. தவளையைப் போல கால்களை அகற்றியபடி ஒருவன் விழுந்து இறந்துகிடந்தான். சுருங்கிப்போன அவனது ஆண் உறுப்பு சரிந்துகிடந்தது. அதில் எறும்புகள் அப்பிக்கொண்டிருந்தன. இறந்த உடல்களில் இருந்து பீறிடும் புழுக்கள் மண்ணில் நெளிந்து கொண்டிருந்தன.

காய்ச்சல் கட்டுப்படவும் இல்லை. மரணம் குறையவுமில்லை. கறுப்புக் காய்ச்சல் சக்தரை மட்டுமன்றி சுற்றியுள்ள ஊர்களையும் தாக்கத் துவங்கியது. நோயாளிகள் வலி தாங்கமுடியாமல் அலறுவதும் துடிப்பதுமாக இருந்தார்கள். குழந்தையை மார்போடு இறுக்கி அணைத்தபடி ஒரு பெண் இறந்து போயிருந்தாள். புதிரான அந்த வியாதி அவர்களைக் கொன்று குவித்தது.

இதன் அடுத்த கட்டமாக வானில் பறக்கும் பறவைகள் தானே செத்துவிழ ஆரம்பித்தன. கறுப்புக் காய்ச்சலில் ஆயிரக்கணக்கான பறவைகள் வானிலிருந்து மழை பெய்வது போல சரசரவென செத்து

விழுந்தன.

வீடுகள், வணிகவீதிகள், அரண்மனை என எங்கு பார்த்தாலும் இறந்துபோன மனித உடல்கள் பறவைகள் கிடந்தன. செத்துக்கிடந்த பறவைகளைத் தின்பதற்காக பூனைகள் போட்டியிட்டன. செத்த மனிதர்களை, பறவைகளைக் கொண்டுபோய்ப் புதைக்க ஆள் கிடைக்கவில்லை. எங்கும் ஒரே துர்வாடை.

திடீரென சத்கர் நகரமே திறந்தவெளி இடுகாடு போலாகியிருந்தது. வீட்டுக்கு வீடு சாவின் ஓலம். சத்கரில் சாவு விழாத வீடேயில்லை. றெக்கையை விரித்தபடியே பறவைகள் செத்துக்கிடப்பதைக் காண்பது கலக்கமூட்டியது.

கிணறு, குளம் ஏரி என நீர்நிலைகளில் பறவைகள் செத்து மிதந்த காரணத்தால் குடிநீர் கிடைப்பது சிரமமானது.

சத்கரில் கறுப்புக் காய்ச்சல் பரவியதற்கு வணிகர்களின் மிதமிஞ்சிய மோசடிகளே காரணம் என பண்டிதர்கள் புலம்பினார்கள்.

இறந்த உடல்களை அப்புறப்படுத்தவும் குளங்களை சுத்தம் செய்து குடிநீரைப் பாதுகாக்கவும் பல நூறு சாமர்கள் குடும்பத்துடன் சத்கருக்கு அழைத்துவரப்பட்டார்கள், அப்படி வரப்பட்டவர்களில் ஒருவர்தான் தூமகேதுவின் தாத்தா பாரமத்.

இருபத்தியோரு நாட்கள் தொடர்ந்து மனிதர்களும் பறவைகளும் செத்து விழுந்தார்கள். பின்பு தானே ஒரு நாள் இந்தச் சாவு குறையத் துவங்கியது. நோய் கட்டுப்பட ஆரம்பித்தது. எதனால் இந்நோய் தாக்கியது எனக் கடைசிவரை எவருக்கும் தெரியவில்லை. ஆனால், இந்த சம்பவம் வணிகர்களிடம் ஆழமான பயத்தை உருவாக்கியது. அவர்கள் தங்களின் பேராசையால்தான் இதுபோன்ற மோசமான துர்சம்பவங்கள் நடைபெறுகின்றன என்று உணர்ந்தவர்கள் போல தர்மசத்திரங்களை நிறுவியதோடு பறவைகளுக்கு தானியமும் தண்ணீர் குடிக்க கல் கிண்ணங்களையும் உருவாக்கி வைத்தார்கள்.

அரசாங்க உத்தரவில் அழைத்துவரப்பட்ட சாமர்கள் அந்நாள் முதல் நகரின் துப்பரவுப் பணிகளை மேற்கொள்ளத் துவங்கி அங்கேயே தங்கிவிட்டார்கள். வாக்குறுதி தந்தபடி அவர்களுக்கு வீடோ, தானியங்களோ எதையும் அரசாங்கம் வழங்கவில்லை. அவர்களாக இடிந்து போன கோட்டைச்சுவரை ஒட்டி மண் வீடுகளை உருவாக்கிக்கொண்டார்கள். நிழல்களைப் போல மௌனமாக தங்கள் இருப்பைப் பிறர் அறியாதபடியே சத்கரில் வாழ்ந்து வரத் துவங்கினார்கள்.

பாட்டனின் காலத்திற்கும் தூமகேதுவின் காலத்திற்கும் பெரிய மாற்றம் ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை. அதே வாழ்க்கை. அதே பிரச்சினைகள். அதே அவமானங்கள், வேதனைகள்.

நினைத்து சந்தோஷம் கொள்ளும் அளவிற்கு அவனது கடந்த காலத்தில் எந்த சுவையான நிகழ்வும் நடந்திருக்கவில்லை. மனது எப்போதுமே கடந்தகாலத்தின் வலி, வேதனைகளைத்தான் மறக்காமல் வைத்திருக்கிறது. சந்தோஷங்களை மறந்துவிடுகிறது.

அப்படி ஒன்றும் பெரிய சந்தோஷங்களை தூமகேது அடைந்ததேயில்லை. இரண்டு சம்பவங்கள் தூமகேதுவின் மனதில் மாறாத வடுவைப் போல ஆழமாகப் பதிந்து போயிருந்தன. ஒன்று, அவனது பத்து வயதில் நடந்தது. ஒருநாள் இடிந்த கோட்டையை ஒட்டிய ஆலமரக்கோவிலில் ஏதோ ஒரு விழா நடந்தது. அதற்காக மேளதாளங் களுடன் ஆட்கள் கூடியிருந்தார்கள், தூமகேது வேடிக்கை பார்ப்பதற்காகச் சென்றிருந்தான்.

அவனைப் போன்ற சேரிச்சிறுவர்கள் அங்கே வரக்கூடாது என விரட்டிவிட்டார்கள். ஆகவே விழா முடிந்த பிறகு அந்த இடத்திற்குப்போனான்.

காளிக்கு எருமையை வெட்டி பலி கொடுத்திருந்தார்கள். கல்லில் ரத்தம் படிந்திருந்தது. பலி கொடுக்கக் கொண்டுவந்த எருமைக்கு அணியப்பட்ட சாமந்தி மாலைகள் தரையில் கிடந்தன. அந்த மாலையை எடுத்து தனது கழுத்தில் அணிந்துகொண்டான் தூமகேது.

அன்றுதான் முதன்முறையாக கழுத்தில் மாலை அணிந்து கொண்டிருக்கிறான். அவர்களைப் போன்ற சேரிவாசிகள் திருமணத்தின் போதுகூட பூமாலைகள் அணிந்துகொள்ளக்கூடாது. அவர்கள் எவரது திருமணமும் பகலில் நடக்கக்கூடாது. இரவில்தான் நடக்க வேண்டும். ஆனால், பனியாக்களின் குடியிருப்பில் பூமாலைகள் அணிந்துகொண்டு குதிரையில் மணமகன் பவனி வருவதைக் கண்டிருக்கிறான். அதைக் காணும்போது ஆசையாக இருக்கும். இப்படி எல்லாம் தன்னால் ஒரு நாளும் ஊர்வலம் போக முடியாது என ஏக்கமாக இருக்கும்.

இன்றைக்கு சாமந்தி மாலை கீழே கிடந்தவுடன் அதைக் கையில் எடுத்து முகர்ந்து பார்த்துவிட்டு அணிந்துகொண்டுவிட்டான். யாராவது தன்னைப் பார்க்கிறார்களா என சந்தேகமாக இருந்தது.

யாரும் இல்லை. கற்பனையாக ஒரு குதிரையில் ஏறிக்கொண்டு தான் போவது போல பாவனை செய்தபடியே மரத்தைச் சுற்றி ஓட ஆரம்பித்தான்.

அப்போது யாரோ அவனை “நில்லுடா நாயே’’ என சப்தமாகக் கூப்பிடுவது கேட்டது.

பயத்தில் ஓடாமல் நின்றான்.

பருத்த வயிறு கொண்ட ஒருவன் அருகில் வந்து நின்று மூச்சிரைத்தபடியே அவன் கழுத்தில் அணிந்துள்ள மாலையைப்

பார்த்து முறைத்தபடியே கேட்டான்.

“நீ டோலுவின் மகன்தானே?”

“ஆமாம்'' எனத் தலையாட்டினான்.

“கீழ்சாதி நாயே. எவ்வளவு திமிர் இருந்தால் சாமந்தி மாலை போட்டுக்கொண்டு குண்டியை ஆட்டிக்கொண்டு ஆடுவாய்'' எனத் திட்டியபடியே பாய்ந்து அவனைப் பிடித்து அடிக்கத் துவங்கினான்.

தூமகேதுவிற்கு எதுவும் புரியவில்லை.

காளிபூஜைக்குப் போடப்பட்ட மாலை உன் கழுத்தில் விழலாமா எனக் கேட்டு அடித்தான் அந்த முரட்டு ஆள். அத்தோடு ஆவேசமாக தூமகேது கழுத்தில் அணிந்திருந்த மாலையைப் பிடுங்கி வீசினான். தலைமயிரைப் பற்றிக்கொண்டு காலால் அடிவயிற்றோடு சேர்த்து உதைத்தான். தூமகேதுவால் வலி தாங்கமுடியவில்லை, கதறி அழுதான்.

அந்த ஆள் அவனை மாறிமாறி அடித்தும் ஆத்திரம் தீராமல் தரதரவென இழுத்துக்கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

எங்கே கூட்டிப் போகிறான் எனப் புரியாமல் திமிறிக்கொண்டு வந்தான் தூமகேது.

அவன் காயஸ்தர் வீட்டின் முன்பாக இழுத்துக்கொண்டு போய் நின்று கூச்சலிட்டான்.

“கீழ்சாதிப் பயல். காளிக்குப் படைத்த சாமந்தி மாலையை எடுத்துப் போட்டு ஆடுகிறான். இவனை இப்படியே விட்டுவைத்தால் நாளை நம் வீட்டில் வந்து பெண் கேட்க ஆரம்பித்துவிடுவான். இவனுக்கு சரியான பாடம் புகட்ட வேண்டும்.”

அவன் போட்ட கூச்சலைக் கண்டு வணிகர் பலரும் ஒன்று கூடினார்கள். ஆளுக்கு ஒரு யோசனை சொன்னார்கள்.

முடிவில் மாலையை எடுத்த தூமகேதுவின் உள்ளங்கையில் சூடு போட்டு தலையில் சாணத்தைக் கரைத்து ஊற்றி அனுப்பி வைக்க வேண்டியதுதான் என முடிவு செய்தார்கள்.

அவன் பயந்து அலறியபடியே தன்னை விட்டுவிடும்படியாகக் கெஞ்சினான். அவன் வயதை ஒத்த சிறுவர்கள் அவனை முறைத்த படியே ஆளுக்கு ஒரு சிறு கல்லை எடுத்து அவன் மீது எறித்தார்கள்.

தூமகேதுவிற்கு சூடு போட்டது ஒரு பிராமணன். அதுவும் வயதான பிராமணன். அவன் பழுக்கக் காய்ச்சிய கம்பியைக் கொண்டுவந்து உள்ளங்கையில் சூடு போட்டுவிட்டு “இனி ஒருநாளும் பூமாலையை உன் கையால் தொடக்கூடாது” என்றான்.

அதுபோலவே நான்கு பெண்கள் சாணத்தைக் கரைத்துக் கொண்டு வந்து அவன் தலையில் ஊற்றினார்கள். தலையில் ஊற்றியது போதாது

என்று அவன் வாயைத் திறக்க வைத்து அதிலும் ஊற்றினார்கள். குமட்டிக்கொண்டு வாந்தி எடுத்தான். அவன் கழுத்தில் பிய்ந்துபோன இரண்டு செருப்புகளை மாலை போல அணிவித்து அடித்துத் துரத்திவிட்டார்கள்.

அழுதபடியே வீட்டிற்கு வந்தபோது டோலு தூமகேதுவைத் திட்டினான்.

"உன்னை யார் சாமந்திமாலைகள் போட்டுக்கொள்ளச் சொன்னது, செத்தால்கூட நம் பிணத்துக்கு மாலை கிடைக்காது."

அன்றுதான் பிறப்பில் தாழ்ந்தவன் என்பதை தூமகேது முழுமையாக உணர்ந்தான். இதற்காக தன்னை யார் வேண்டுமானாலும் அவமதிக்கலாமா, வாழ்நாள் முழுவதும் இப்படி அடிஉதை பட்டுதான் வாழ வேண்டுமா.

இன்னொரு முறை, இதுபோன்ற அவமானம் நளாவின் மூன்றாவது பிரசவ நேரத்தில் நடந்தது. நளா வலி தாங்காமல் கூச்சலிட்டாள். அவளைப் போன்ற கீழ்சாதிப் பெண்களுக்கு பிரசவம் பார்க்கும் பிரஜா என்ற கிழவி தனது பேரனைப் பார்க்க நிசிதாப்பூர் போயிருந்த காரணத்தால் பிலாஸிட்டில் வசித்து வந்த ஒரு மருத்துவச்சியை அழைத்து வந்தார்கள்.

அவள் நகிலிக்கு வந்து சேர்ந்தபோதுதான் நளா ஒரு கீழ்சாதிப்பெண் என்பதை அறிந்துகொண்டாள். ஆகவே அவளை கையால் தொட மறுத்துவிட்டதோடு தனது கொண்டை ஊசியை வைத்து அவளது பனிக்குடத்தைக் குத்தி சேதப்படுத்திவிட்டாள். இதனால் கருப்பை முற்றிலும் சிதைந்தநிலையில் குழந்தை இறந்து போனது. குருதிப்பெருக்கில் நளாவும் மயங்கிப்போனாள்.

அந்த மருத்துவச்சி "உங்களைப் போன்ற கீழ்சாதி நாய்களுக்கு எதற்கு பிள்ளைகள்? ரத்தப்பெருக்கு நிற்கவில்லை, இனிப் பிழைக்க மாட்டாள்" என ஏசியபடியே நளாவை ரத்தவெள்ளத்தில் மிதக்க விட்டு வெளியேறிப் போனாள்.

என்ன செய்வது எனப் புரியாமல் மாட்டிற்கு வைத்தியம் செய்யும் ஆளை அழைத்துக்கொண்டு வந்தான் தூமகேது.

அந்த ஆள் நளாவின் குருதியோட்டத்தை நிறுத்த நாட்டு மருந்துகள் அரைத்துக் கொடுத்தார். அதன்பிறகுதான் நளா பிழைத்துக்கொண்டாள். ஆனால், அவள் உடல் நலிந்துபோனது. அதிலிருந்து அவளது நடையே மாறியிருந்தது. கால்களை அகட்டி அகட்டி நடக்கத் துவங்கினாள்.

உயிர்போய்விடும் அபாயம் என்றாலும் சாதித் தீட்டின் காரணமாக மருத்துவர்கள் தங்களைத் தொட மாட்டார்கள். ஆனால், அவர்கள் வீட்டின் மலத்தை அள்ள நாங்கள் மட்டும் வேண்டுமா என தூமகேது நினைத்துக்கொண்டான்.

இதுபோலவே சேரியில் வசிப்பவன் எவனும் தனது மனைவியின் கையைப் பிடித்துக்கொண்டு தெருவில் நடந்து போகக்கூடாது. பொது இடத்தில் தும்மவோ, சிரிக்கவோ கூடாது. குளத்தில் தண்ணீர் குடிக்கக் கூடாது. மழைக்குக்கூட பண்டிதர்களின் வீடுகளின் முன்பு ஒதுங்கக் கூடாது. தங்க நகை அணியக்கூடாது. தாமரை இலையில் சாப்பிடக்கூடாது. விசிறி வைத்துக் கொள்ளக்கூடாது. கதவு வைத்து வீடு கட்டக்கூடாது. பசு மாடு வளர்க்கக்கூடாது. துளசிச் செடியைத் தொடக்கூடாது. இப்படி ஆயிரம் கட்டுப்பாடுகள் இருந்தன. இதை எல்லாம் தூமகேதுவும் அவன் மூதாதையர்களும் ஏற்றுக்கொண்டு சத்கரில் வாழ்ந்து வந்தார்கள்.

இத்தனை கெடுபிடிகள் சிரமங்களுடன் ஏன் வாழ வேண்டும் என தூமகேதுவிற்குச் சிலசமயம் தோன்றும். ஆனால், அதை மீறினால் தன்னைத் தண்டித்துவிடுவார்கள். தன் குடும்பத்தை சித்ரவதை செய்து தண்டிப்பார்கள் என்ற பயம் அவனை அதைப்பற்றி எல்லாம் யோசிக்கவிடாமல் தடுத்து வைத்திருந்தது.

சம்பு எனும் படகோட்டி

சம்பு படகில் வந்திறங்கிய மயில்தோகைகளைப் பார்த்துக் கொண்டிருந்தான். இவ்வளவு மயில் தோகைகள் எப்படிக் கிடைத்தன. எங்கே கொண்டு போகிறார்கள். அந்த வணிகனிடம் பேச்சுக் கொடுத்தபோது அவை எல்லாம் தென்னாட்டில் ஆட்களை அனுப்பி மயில்களை வேட்டையாடிச் சேகரிக்கப்பட்டவை என்றும் அந்த மயில்தோகைகளை கப்பலில் கிரேக்கம் அனுப்பி வைப்பதாகவும் சொன்னான். இவ்வளவு தோகைகளைச் சேகரிக்க எவ்வளவு மயில்கள் கொல்லப்பட்டிருக்க வேண்டும். எப்படி இதை அனுமதிக்கிறார்கள். இந்த வணிகர்கள் தந்திரசாலிகள். எதையும் விற்றுக் காசாக்கிவிடுகிறார்கள்.

சம்பு சிறுவனாக இருந்த போது இது போல எலும்புகளை வாங்கும் ஒரு வணிகனை சந்தித்திருக்கிறான். அந்த வணிகன் ஒரு மாட்டுவண்டியில் இரண்டு துணை ஆட்களை அழைத்துக்கொண்டு வருவான். அவர்கள் ஆடு மாடு மனிதர்களின் எலும்புகளை விலைக்கு வாங்குவார்கள். என்ன செய்வார்கள் அந்த எலும்புகளை என அவனுக்குத் தெரியவில்லை. ஆனால், எலும்புகளை எடை போட்டு அவர்கள் வாங்கிப் போவதைக் கண்டிருக்கிறான். எலும்புகளை அரைத்துப் பொடியாக்கி மருந்து செய்கிறார்கள் என சம்புவின் பாட்டி சொல்வாள்.

அந்த எலும்பு வியாபாரியிடம் விற்பதற்காக சம்புவும் அவனது பாட்டியும் இடுகாட்டில் சுற்றியலைந்து எலும்புகளைச் சேகரிப்பார்கள். இறந்துபோனவர்களின் கைகால் எலும்புகள், கபாலங்களை சாக்குப்பை ஒன்றில் போட்டு நிரப்பிக்கொண்டு வருவார்கள்.

குதிரை எலும்புக்குத்தான் அதிகவிலை, ஆனால், குதிரை எலும்புகள் எளிதில் கிடைக்காது. ஆகவே யாரிடமாவது குதிரை எலும்புகள் இருக்கிறதா என்றுதான் அந்த வணிகன் ஊருக்குள் வந்தவுடன் கேட்பான். ஆடு மாடுகளின் எலும்புகளையும்விட மலிவானவை மனித எலும்புகள். அவற்றை தான் கொண்டுவந்த சுத்தியால் அடித்து உடைத்து நொறுக்கி தனது சாக்கில் போட்டுக்கொள்வான் அந்த வணிகன்.

இடுகாட்டில் பாம்புகள் அதிகமிருந்தன. எதற்காக இறந்தவர்களுடன் பாம்புகள் ஒன்றாக வாழ்கின்றன. ஒருநாள் சம்பு ஒரு பாம்பின் வீட்டினைக் கண்டுபிடித்தான். அது ஒரு பாறையின் அடியில் குடியிருந்தது. அந்தப் பாம்பு எப்போது வெளியே வரும், எதை சாப்பிடும் என அவன் ஒளிந்திருந்து பார்த்து அறிந்து கொள்ளத் துவங்கினான். இப்படி ஒருவன் தன்னைப் பின்தொடர்வதை பாம்பு கண்டுகொள்ளவேயில்லை. ஒருநாள் அவன் பாம்பு சட்டை உரிப்பதை நேரில் பார்த்தான். திடீரென பாம்பு இளமையானது போலத்

தோன்றியது. உரிந்து கிடந்த பாம்புச்சட்டையை சம்பு வீட்டிற்கு எடுத்து வந்தான். பாட்டி சொன்னாள்.

“பாம்புச் சட்டையை வீட்டில் வைத்திருந்தால் அதைத் தேடி பாம்பு வந்துவிடும்.’’

பாம்பு தன்னைத் தேடிவந்தால் என்ன. எதற்காக பாட்டி பயமுறுத்துகிறாள். பாட்டியிடம் அதைப்பற்றிக் கேட்டபோது சொன்னாள்.

“பாம்புகள் சிறுவர்களை விழுங்கிவிடும். அதன் வயிற்றுக்குள் பெரிய உலகமிருக்கிறது. அந்த உலகிற்குள் போனவர்கள் ஒருபோதும் திரும்பி வரவே முடியாது.”

“நிஜமாகவா, பாம்பு ஆளை உயிரோடு விழுங்கிவிடுமா?’’

“ஆளை என்ன யானையைக்கூட உயிரோடு விழுங்கிவிடும்’’ என்றாள்.

அவனால் நம்பமுடியவில்லை. பாட்டி சொன்னாள்,

“வண்ணானின் மனைவியை அப்படி ஒரு பாம்பு விழுங்கிக் கொண்டிருந்தபோது அதைக் கண்ட வண்ணான் ஓடிவந்து அவளை பாம்பு வாயிலிருந்து காப்பாற்றியதாகவும் ஆனால், காலுக்குக் கீழே மாட்டிக்கொண்டதால் அவள் உடலில் பாதி நீலநிறமாக மாறி விட்டது’’ என்றாள்.

உண்மைதான். அந்த வண்ணாத்தியின் பாதங்கள் நீலநிறமாக இருப்பதை சம்பு கண்டிருக்கிறான்.

“வண்ணான் வராவிட்டால் அவளைப் பாம்பு விழுங்கியிருக்குமா” என சம்பு பாட்டியிடம் கேட்டான்.

“ஆமாம். நல்லவேளை பிழைத்துக்கொண்டாள். ஆனால், பேச்சு வராமல் போய்விட்டது.”

பாட்டி சொன்னது நிஜம்தானா என அறிந்துகொள்வதற்காகவே சம்பு அந்த வண்ணாத்தியின் வீட்டிற்கு மறுநாள் போயிருந்தான். நீலநிறப்பாதங்கள் கொண்ட அவள் அவனை முறைத்துப் பார்த்த படியே சைகையால் என்ன வேண்டும் எனக் கேட்டாள்.

சம்பு சப்தமாக “பாம்பு” எனக் கத்தினான்.

அவள் தாவி வீட்டிற்குள் ஓடிவிட்டாள்.

அவளை ஊர்ப்பிள்ளைகள் “பாம்பு பாம்பு” எனக் கேலி செய்வது வழக்கமாயிருந்தது. அவள் ஒவ்வொரு முறை பாம்பின் பெயரைக் கேட்கும்போதெல்லாம் நடுங்கினாள்.

எலும்பு வியாபாரியிடம் விற்பதற்காக எலும்புகளைச் சேகரிக்க பலரும் வெட்டவெளியில் சுற்றித் திரிவார்கள். சிலநேரம் அபூர்வமாக

காட்டுவிலங்குகளின் எலும்புகள் கிடைப்பதுண்டு.

ஒருமுறை அப்படி சம்புவும் அவனது பாட்டியும் எலும்புகளைச் சேகரித்துக்கொண்டிருக்கும்போது பாட்டி ஒரு கதை சொன்னாள். அது ஒரு எலும்பின் கதை. இறந்துபோன ஒருவனின் வலக்கை எலும்பு ஒன்று ஒருநாள் மண்ணைப் பிளந்து வெளியே வந்துவிட்டது. இடுகாட்டினை விட்டு அந்த எலும்பு எப்படி கிராமத்திற்குள் வந்தது என ஒருவருக்கும் புரியவில்லை, ஆனால், அதைக் கண்ட கோவில் பூசாரி எலும்பை எடுத்துக்கொண்டு போய் இடுகாட்டில் போட்டு வந்தான். ஆனால், சில நாட்களுக்குப் பிறகு அந்த எலும்பு திரும்பவும் ஊருக்குள் திரும்பி வந்துவிட்டது. இது என்ன மாயம். ஒரு எலும்பு தானே நகர்ந்து வருகிறதே என பயந்து போனவர்கள், அதை ஒரு குழி தோண்டி ஊருக்குள்ளே புதைத்தார்கள். ஆனால், மறுநாள் அந்த எலும்பு ஒரு வீட்டின் ஓட்டில் கிடந்தது. ஊர்மக்கள் அந்த எலும்பைக் கண்டு பயந்தார்கள். எதற்காக அந்த எலும்பு இப்படி அலைந்துகொண்டிருக்கிறது. யாருடைய கை எலும்பு அது என அவர்களுக்குப் புரியவில்லை.

முடிவில் ஒரு நாள் அந்த ஊரிலிருந்த பீரான் என்பவன் இரவில் தனியே வரும்போது அந்த எலும்பு, 'பீரான், மகனே, பீரான்' என அழைத்திருக்கிறது. பயந்துபோன பீரான் அலறியபடியே ஓடிப்போய் விட்டான். ஆனால், மறுநாள் வெளிச்சத்தில் அவன் ஊரைக் கூட்டி நடந்ததைச் சொன்னான். ஊர் பூசாரி அந்த எலும்பைத் தேடி எடுத்து கையில் வைத்துப் பார்த்துவிட்டு அது பீரானின் தந்தையின் எலும்பேதான் என்றான்.

அந்த எலும்பைக் கையில் வாங்கி கண்ணீர் விட்டபடியே பீரான் சொன்னான், 'வயதான போதும் என் தந்தைக்குப் பசி குறையவில்லை. எவ்வளவு சாப்பிட்டாலும் அவருக்குப் போதவில்லை. திருடிக்கூட சாப்பிடத் துவங்கினார். இதனால் நானும் என் மனைவியும் சேர்ந்து ஒருநாள் அவரது கையை உடைத்துவிட்டோம். முறிந்த கை கூடாமலே அவர் இறுதிநாள் வரை வாழ்ந்து இறந்து போய்விட்டார். அந்த ஞாபகத்தில் இன்னமும் அந்தக் கைக்குப் பசி அடங்கவில்லை, அது சாப்பாட்டைத் தேடி வந்திருக்கிறது.'

ஊர்வாசிகளுக்கு அந்தச் செய்தி வியப்பாக இருந்தது. பீரான் விருந்து தயாரித்து அந்தக் கைக்குப் படையலிட்ட பிறகு அந்தக் கை எலும்பு தானே போய் இடுகாட்டில் புதைந்துகொண்டது. இது உண்மையான சம்பவம்" என்றாள் பாட்டி.

அதைக் கேட்டபோது சம்புவிற்கு பயமாக இருந்தது. எலும்புகள் தானே வெளியே வந்துவிடும் என்றால் தன்னைத் தேடியும் அவை வந்துவிடுமா.

எலும்பு விற்பவன் சில சமயம் தனது மாட்டுவண்டியில் எருதின் தலை

எலும்பைக் கொண்டுவருவதுண்டு. கொம்புகளுடன் அவற்றைக் காணும் போது சம்புவிற்கு பயமாக இருக்கும். சிலநாட்கள் அந்தக் காட்சி அவனது கனவிலும் வருவதுண்டு.

•••

படகில் பிணம் ஒதுங்கிய இரண்டுநாட்களுக்குப் பிறகு இரவில் சம்புவைத் தேடி ஒரு ஆள் வந்திருந்தான். முரட்டு உருவம். முகத்தைத் துணியால் மறைத்திருந்தான். கண்கள் மட்டும் ஒளிர்ந்துகொண்டிருந்தன.

கனத்த குரலில் அவன் சம்புவிடம் கேட்டான்,

“இடிந்த கோட்டை வரை உன்னால் படகு ஓட்ட இயலுமா?”

இதே ஆள்தான் அன்று இருட்டில் படகிலிருந்து தப்பி ஆற்றில் நீந்திவந்து குதிரையேறிப் போனவன். அதைக் காட்டிக் கொள்ளாதவன் போல சம்பு கேட்டான்.

‘‘இரவில் எதற்காக இடிந்த கோட்டைக்குப் போக வேண்டும்?”

“அதைப்பற்றிக் கேட்காதே. உன்னால் ஓட்டமுடியும் என்றால் படகை எடு.”

“இல்லாவிட்டால் நீந்தியே போய்விடுவீர்களா’’ எனக் கேட்டான் சம்பு.

அந்த ஆள் சம்புவை முறைத்தபடியே சொன்னான்.

“ஐந்து மடங்கு கூலி தருகிறேன். படகை எடு. இன்றிரவு நான் கட்டாயம் டிலோனா கோட்டையில் இருக்க வேண்டும். அது ஹிந்துஸ்தானின் எதிர்காலத்தை முடிவு செய்யக்கூடியது.”

“அப்படியானால் நீங்களே படகோட்டிக்கொண்டு போக வேண்டியதுதானே’’

“முடியாது. எனது இடதுகையில் காயம்பட்டிருக்கிறது. ஒற்றைக் கையால் யமுனையில் படகோட்ட முடியாது.”

“என்னால் இரவில் படகோட்ட முடியாது.”

“என்னை நம்பு. எனக்கிடப்பட்ட பணி ரகசியமானது. உனக்கான வெகுமதி நிச்சயம் கிடைக்கும்.”

சம்பு அந்தக் குரலில் உண்மையிருப்பதை உணர்ந்தான். படகை எடுத்துக்கொண்டு யமுனையில் துடுப்பு போடத் துவங்கினான். இருட்டில் படகோட்டுவது அவனுக்குப் புதிதில்லை. ஆகவே, சரளமாக அவன் துடுப்பை அசைத்து முன்னேறிப் போய்க் கொண்டிருந்தான். ஆற்றின் வேகம் அதிகமாக இருந்த காரணத்தால் படகு இழுபட்டுக்கொண்டிருந்தது. படகில் அமர்ந்திருந்த மனிதன் இருட்டை வெறித்தபடியே தனக்குத்தானே எதையோ முணுமுணுத்துக்

கொண்டான்.

அவர்கள் இடிந்த கோட்டையை ஒட்டிய இடிந்த படகுத்துறைக்குப் போய்ச் சேர்ந்தார்கள். படகை மறைவாக நிறுத்தும்படி சொன்னான் அந்த மனிதன்.

யாரோ வருவதற்காக அவர்கள் காத்திருப்பது போலத் தெரிந்தது, படகு தண்ணீரின் வேகத்தில் முன்னும்பின்னும் அலைந்தபடியே இருந்தது.

வானில் அதிக நட்சத்திரங்களில்லை. குளிர்காற்று வேகமாயிருந்தது. அவர்கள் நெடுநேரம் காத்திருந்தார்கள். பிறகு அந்த மனிதன் படகை இடிந்த அரண்மனையின் படித்துறையை ஒட்டி நிறுத்தச் சொல்லிவிட்டு இறங்கி இருட்டில் உள்ளே போனான். இன்னொரு படகு வந்து அதிலிருந்து ஒருவன் இறங்கி உள்ளே போனான். பிறகு அந்த மனிதன் படகில் கிளம்பிப்போய்விட்டான்.

சம்புவின் படகிலிருந்தவன் திரும்பி வந்தபோது அவன் கையில் கனமான பெட்டி ஒன்றிருந்தது. அதைப் பட்டுத்துணி போட்டுச் சுற்றியிருந்தார்கள்.

“கரைக்குப் போக வேண்டும். உடனே படகைத் திருப்பு” என்றான் அந்த ஆள்.

படகை சம்பு திருப்பும்போது எங்கிருந்தோ வீசி எறியப்பட்ட குறுங்கத்தி அவர்களை நோக்கிப் பாய்ந்து வந்தது. கண்மூடித் திறக்கும் நேரத்தில் அந்தக் கத்தி அந்த மனிதன் தொண்டையில் பாய்ந்தது. அந்த மனிதன் வழிந்தோடும் குருதியை அழுத்திப் பிடித்தபடியே “படகை எடு” எனக் கத்தினான்.

சம்பு படகைச் செலுத்தத் துவங்கியபோது அவன் குருதி வழியும் கைகளுடன் சொன்னான்.

“இதை எப்படியாவது இளவரசர் முகமது ஆஜம் இடம் ஒப்படைக்க வேண்டும்.’’

“இதில் என்ன இருக்கிறது?”

“அரிய பொருட்கள். இதைத் திறந்து பார்க்காதே. உன் தலை போய்விடும்.’’

சம்பு அந்த மரப்பெட்டியைத் தன் கையில் வாங்கிக் கொண்டான். அந்த மனிதன் சம்புவின் காதருகே வந்து “நீ உடனே டெல்லி போக வேண்டும். இது யாருக்கும் தெரியக்கூடாது” என்றான்.

சில நிமிடங்களில் அந்த மனிதன் படகிலே இறந்துபோனான். எதற்காக தன்னிடம் இப்படி ஒரு பொறுப்பை ஒப்படைத்திருக்கிறான். தான் உண்மையிலே டெல்லி போக வேண்டுமா. நாமாகப் போய் சதிவலையில் மாட்டிக் கொள்கிறோமா? சம்புவிற்குக் குழப்பமாக வந்தது. நடு ஆற்றில் இறந்துபோன மனிதனைத் தூக்கி எறிந்தான். அந்த

உடலை இழுத்துக்கொண்டு போனது தண்ணீர். சம்புவின் கைகளில் அந்த மனிதனின் ரத்தம் வழிந்துகொண்டிருந்தது. தன் முன்னே இருக்கும் பட்டுத்துணி சுற்றிய பெட்டியைப் பார்த்தபடியே சம்பு படகோட்டிக்கொண்டிருந்தான். பனிக்காற்று ஊசி போல அவன் உடலைக் குத்திக்கொண்டிருந்தது.

மக்பியின் பாடல்

சிறைக்கு வெளியே யாரோ பாடிக்கொண்டிருக்கும் குரல் அஜ்யாவிற்குக் கேட்டது. அந்தப் பாடலை அவளே பலமுறை பாடியிருக்கிறாள். அற்புதமான பாடலது. இன்று யாரோ ஒரு பிச்சைக்காரன் பாடும்போது அதன் துயரம் பலமடங்கு அதிகமாக ஒலித்தது.

பயனற்ற எனது கைகளே

எத்தனை நாட்கள் வெறுமையைத் தழுவிக்

கொண்டிருப்பீர்கள்

முட்டாள் இதயமே

இன்னும் எத்தனை நாட்களுக்கு பிரிவை

நினைத்து வருந்திக்கொண்டிருப்பாய்

என் காதல் ஆற்றில் விழுந்த மழைத்துளி

அதை யாராலும் கண்டறிய முடியாது

மக்பியின் இதயம் மட்டுமே அறியும்

காதலின் வேதனை கொப்பளிக்கும் அந்தப் பாடலை அஜ்யா கேட்டுக்கொண்டிருந்தாள்.

பாதுஷா ஔரங்கசீப்பின் மகள் ஜெப்புன்னிஷா தான் மக்பி என்ற பெயரில் கவிதை கள் எழுதினாள்.

மக்பியின் பாடல்கள் வழிப்போக்கர்களாலும் பிச்சைக்காரர்களாலும் நடனக்கூடங்களின் இசைக் கலைஞர்களாலும் ஞானிகளாலும் பாடப்பட்டு பிரபலமாயிருந்தது. மக்பி இருபது ஆண்டுகள் டெல்லி சிறையில் தந்தையால் அடைக்கப்பட்டு நோயுற்று இறந்துபோனாள். மரணமடையும்போது, அவளது வயது முப்பத்தைந்து. திருமணம் செய்து கொள்ளாதவள்.

நோயுற்ற தந்தையோடு லாகூர் சென்றிருந்த நாட்களில் ஆளுநரின் மகனும் அழகனும் கவிஞனுமான அகில்கானைக் காதலித்தாள். தந்தை டெல்லிக்குப் புறப்பட்ட போதும் அவனுக்காகவே லாகூரில் தங்கியிருந்தாள். அவர்கள் இரவில் சந்தித்து கவிதைபாடி மகிழ்ந்தார்கள். டெல்லியில் இருந்த பாதுஷாவிற்கு ஜெப்புன்னிஷாவின் காதல் தெரிய வந்தது. அவர் அவளைத் திருமணம் செய்து தருகிறேன் எனச் சொல்லி அகில்கானை டெல்லிக்கு வரும்படி அழைத்தார். தன்னைப் பழிவாங்க அழைக்கிறார் என பயந்த அகில்கான் ஜெப்புன்னிஷாவின் காதலைக் கைவிட்டான்.

ஜெப்புன்னிஷா அவனை மறக்கமுடியாமல் காதல் துயரில் கவிதைகள் பாடத்துவங்கினாள். ரகசியக் கடிதங்களை அனுப்பி வைத்தாள். ஆத்திரம் கொண்ட பாதுஷா அவளை டெல்லி சலிம்கர் சிறையில் அடைத்தார். இருபது ஆண்டுகள் இருண்ட சிறையில் அவள் தனிமையில் மனதிற்குள் கவிதைகள் பாடியபடியே இருந்தாள்.

அப்போது அவள் எழுதிய பாடல்களில் ஒன்றைத்தான் இன்று பிச்சைக்காரன் வெளியே பாடிக்கொண்டிருந்தான்.

“பாவம் மக்பி. இளவரசி என்றாலும் பெண்தானே. விரும்பியவனைக் காதலிக்க முடியுமா என்ன.”

அஜ்யா மக்பியை சந்தித்திருக்கிறாள். எத்தனையோ நாட்கள் தந்தையை சந்திக்க வரும் மக்பியை வரவேற்று உபசரித்திருக்கிறாள்.

மெலிந்த உடற்கட்டு கொண்ட பெண். வலது கன்னத்தில் இரண்டு மச்சமிருக்கும். எப்போதும் வெண்ணிற உடைகளை மட்டுமே உடுத்தியிருப்பாள். அலங்கார நகைகள் எதையும் அணிபவளில்லை. ஒரேயொரு முத்துமாலை மட்டுமே கழுத்தில் அணிந்திருப்பாள். விரலில் மோதிரங்கள்கூட அணிவதில்லை. ஒருமுறை பாதுஷா இதைப்பற்றி அவளிடம் கேட்டபோது சொன்னாள்

“வைரங்களைவிட பிரகாசமான சொற்கள் என்னிடம் இருக்கின்றன.அதை நான் உருட்டி விளையாடுகிறேன் அதுவே போதும்.”

தந்தையும் மகளும் பேசிக்கொண்டிருப்பதைப் பார்க்க அஜ்யாவிற்கு வியப்பாக இருக்கும். அது இரண்டு ஞானிகளின் உரையாடலைப் போலவே இருக்கும். பாதுஷா அவளிடம் ஆலோசனைகள்கூடக் கேட்பார்.

ஒருமுறை அவளிடம் தனது தக்காணத்தை நிர்வாகம் செய்யும் மீர் பஹர் மீது அதிகார துஷ்பிரயோகக் குற்றசாட்டுகள் வந்தபடி இருக்கின்றன. அவரைப் பதவி நீக்கம் செய்யப்போவதாகக் கூறினார். அதைக்கேட்டு சிரித்த மக்பி சொன்னாள்,

“இன்னொரு பகைவனை உருவாக்கிக்கொள்கிறீர்கள்.”

“தவறு செய்தவர் யாராக இருந்தாலும் தண்டிக்கப்படத்தானே வேண்டும்.”

“அவருக்குப் பதவி உயர்வு கொடுப்பதாகச் சொல்லி உங்கள் அருகில் கொண்டுவந்துவிடுங்கள்.’’

“அது முட்டாள்தனம்.”

“இல்லை. உங்கள் அருகில் இருக்கும்போது எவரும் அதிகார துஷ்பிரயோகம் செய்ய முடியாது.”

“உண்மை.”

“அதே நேரம் அவருக்கு முக்கியமான பொறுப்புகள் எதையும் தர வேண்டாம். தான் தண்டிக்கப்பட்டிருக்கிறோம் என அந்த மனிதன் உணர வேண்டும். பயப்பட வேண்டும். அத்தோடு அந்த மனிதனின் குடும்பம் ஊரிலே இருக்க வேண்டும். அவன் மட்டும் தனியே வசிக்கவும் உத்தரவிடுங்கள்.”

“அபாரம் மகளே. நீ என் அமைச்சரவையில் இருக்க வேண்டியவள்'' எனப் பாராட்டினார்.

“என்னையும் உங்கள் விரோதிகள் பட்டியலில் இணைத்துக் கொள்ள நான் விரும்பவில்லை.”

அதைக் கேட்டு பாதுஷா சிரித்தார். மக்பி அறிவில் சிறந்தவள். அரபு, உருது, பெர்ஷியா என மூன்றிலும் அவள் கவிதைகள் பாடுவாள். கணிதம், வானவியல், தத்துவம் கற்றவள், அவளது அந்தப்புரத்தில் பெரிய நூலகம் ஒன்றிருந்தது. அங்கே ரகசியமாக கவிஞர்கள் சந்தித்துக் கவிதைகளைப் பகிர்ந்துகொள்வார்கள்.

மக்பி எப்போதும் தனியே வருவதேயில்லை. தன் தோழி இமாமியை அழைத்துக்கொண்டுதான் வருவாள். ஜோடிப்புறாக்களைப் போல அவர்கள் ஒன்றாக அலைவார்கள். இமாமியும் மக்பியும் இரட்டையர்கள் போலவே இருந்தார்கள். மக்பி தன் கவிதைகளை இமாமியிடம் தான் சொல்லுவாள். பலநேரம் இமாமி தான் அதை ஏட்டில் பதிந்திருக்கிறாள். மக்பியின் நான்கு சகோதரிகளுக்கும் அவள்மீது பொறாமை.

தந்தையோடு சரிசமமாக அமர்ந்துகொண்டு நீதிவிசாரம் செய்கிறாள், நிர்வாக ஆலோசனைகள் சொல்கிறாள். ஜெப்புன்னிஷாவிற்கு அதிக இடம் கொடுத்து அவளைக் கெடுத்து வைத்திருக்கிறார் தந்தை என எரிச்சல் கொண்டிருந்தார்கள்.

மக்பி யாரையும் பொருட்படுத்தவில்லை. அவள் கவிதைகளின் உலகில் சஞ்சாரம் செய்துகொண்டிருந்தாள். கவிதை என்பது ஒரு கண்டுபிடிப்பு. குழந்தைகள் ஒளித்துவைத்த பொருளைத் தேடிக் கண்டுபிடிப்பது போன்றது. அல்லது கண்ணைக் கட்டிக் கொண்டு ஒளிந்த ஆளைக் கண்டுபிடிப்பது போன்ற ஒரு விளையாட்டு.

சொற்கள் கவிதையாகும் போது ஒளிரத்துவங்கிவிடுகின்றன. அந்த விந்தை அவளை வசீகரித்தது. அவள் எப்போதும் தன் உதட்டில் சொற்களை உருட்டிக்கொண்டேயிருந்தாள்.

தந்தைக்குக் கவிதைகள் பிடிக்காது என அறிந்த போதும் அவள் ரகசியமாக கவிஞர்களின் சந்திப்பை அரண்மனையினுள் நடத்தினாள். நஸர் அலியும், ரஸ்வியும் நஜ்மதுல்லா கானும் அவள் சபையில் கவிதை பாடியிருக்கிறார்கள். ஒவ்வொரு சிறந்த கவிதைக்கும் ஒரு ரோஜா

பரிசாக வழங்கப்படும். அதிக ரோஜாக்களை எப்போதும் மக்பிதான் பெறுவாள்.

ரஸ்வி ஒருமுறை அவளிடம் கேட்டார்.

“மக்பி, துயரமான கவிதைகளையே ஏன் அதிகம் புனைகிறாய்.”

“துயரம்தான் கவிதைக்கு அழகு சேர்க்கிறது” எனச் சிரித்தாள் மக்பி.

“இல்லை, சந்தோஷம்தான் அழகு” என்றார் நஸர் அலி.

“இல்லை. ஒரு துளிக் கண்ணீர் சேரும்போதுதான் கவிதைக்கு உயிர்வருகிறது” என்றார் நஜ்மதுல்லா கான்.

அதைக் கேட்ட மக்பி சொன்னாள்,

“சந்தோஷமும் கண்ணீரை வரவழைக்கும்தானே.”

“துயரத்தின் கண்ணீரும் சந்தோஷத்தின் கண்ணீரும் ஒன்றா என்ன” எனக் கேட்டான் ரஸ்வி.

“கண்ணீரில் என்ன பேதமிருக்கிறது’’ எனக் கேட்டார் நஜ்மதுல்லா கான்.

மக்பி சொன்னாள், “காதல் என்னைத் துயரம் கொள்ள வைக்கிறது.’’

“யாரைக்காதலிக்கிறாய் மக்பி’’ எனக் கேட்டார் ரஸ்வி.

“பனித்துளியை, ரோஜாமலர்களை, அந்திவானத்தை, இரவை, பகலை, குளிரை, காற்றை நிலவை மேகங்களை…” என அடுக்கிக் கொண்டே போனாள்.

“உன் பட்டியலில் ஆண்களே இல்லை” எனச் சிரித்தார் நஜ்மதுல்லா கான்.

“அது எனது ரகசியம்’’ என அவளும் சிரித்தாள்.

அவர்கள் காதலைப் பற்றி கவிதைகள் பாடத்துவங்கினார்கள். இந்த நிகழ்வைப் பற்றி பின்னொரு நாள் மக்பியே அஜ்யாவிடம் சொன்னாள்.

அந்த உற்சாகத்தில் அஜ்யாவின் முன்பாக மக்பி ஒரு கவிதையை முணுமுணுத்தாள்,

காஃபிர்-இ-இஷ்கம் முசால்மணி மாரா டார்கார் நீஸ்ட்

ஹார் ராக்-இ முன் டார் கஷ்டா ஹஜட்-இ ஜ்§ன்னார் நீஸ்ட்;

ஆஜ் சார்-இ பாலீன்-இ முன் பார் கீஜ் ஐ நாடான் டாபீப்

டார்ட் மேண்ட்-இ இஷ்க் ரா டாரூ பாஷஸ் டீடார் நீஸ்ட்;

நாகுடா டார் காஷ்டி-இ மா கார் நாபாஜாத் கூ முபாஷ்

அஜ்யா தன்னை அறியாமல் சபாஷ் எனச் சொன்னாள்.

அதைக் கண்ட மக்பி வியப்போடு “அஜ்யா உனக்குக் கவிதைகள்

பிடிக்குமா?" எனக் கேட்டாள்.

அஜ்யா தலையாட்டினாள்.

"அமீர் குஸ்ரோ எவ்வளவு அழகாக எழுதியிருக்கிறார். பெர்ஷிய சொற்கள் தேனில் ஊறிய பேரீச்சம்பழங்களைப் போல சுவையாக இருக்கின்றன. நீ கவிதைகள் எழுதுவாயா" எனக் கேட்டாள் மக்பி.

"கேட்டிருக்கிறேன். என் மனதில் எப்போதும் சில கவிதைகள் தங்கியிருக்கின்றன. அந்த வெளிச்சம்தான் என்னை வழிநடத்துகிறது."

"எனக்காக ஒரு கவிதை சொல்."

அஜ்யா பாடத்துவங்கினாள்.

ஹர் ஏக் பாத் பே கஹதே ஹோ தும் கி தூ க்யா ஹை?

தும் ஹி கஹோ கி யே அந்தாஸ்-ஏ-குஃப்தகூ க்யா ஹை?

என ஒரு பாடலை அவள் உணர்ச்சிபூர்வமாகப் பாடிமுடித்தபோது, கைதட்டிப் பாராட்டியபடியே மக்பி சொன்னாள்,

"மிர்ஸா சாகிப் எவ்வளவு அழகாகப் பாடியிருக்கிறார். இந்த ராஜ்ஜியத்தைப் பரிசாகத் தந்தாலும் போதாது.''

அஜ்யாவிற்கு இளவரசி தன்னைப் பாராட்டியது வெட்கமடையச் செய்தது. அவள் தலைகவிழ்ந்தபடியே சொன்னாள்,

"மிர்ஸாவிற்கு நிகரானது உங்கள் கவிதை என்று புகழ்கிறார்கள்.''

"அப்படியா, என் கவிதைகளும் உனக்குத் தெரியுமா?''

"கேட்டிருக்கிறேன்.''

"பாடு. என் கவிதையை நீ பாடிக் கேட்க வேண்டும்.''

அவள் மக்பியின் பாடல் ஒன்றைப் பாட ஆரம்பித்தாள்.

அதைக் கேட்டவுடன் மக்பியின் முகம் இருண்டு போகத் துவங்கியது. அவள் தன்னை மறந்து அழுதாள்.

பிறகு அழுகையைத் துடைத்தபடியே பாதிப் பாடலில் அதை நிறுத்தச் சொல்லிவிட்டு விடுவிடுவென வெளியேறிச் சென்று விட்டாள்.

காதலின் நினைவுகளை யார் தடுக்க முடியும்?

மக்பியைச் சிறையில் அடைத்தபிறகு நீண்ட பல வருஷங்களுக்குப் பின்பு ஒரு இரவு பாதுஷாவிடம் அஜ்யா தயக்கத்துடன் சொன்னாள்,

"இன்றைக்கு இளவரசி ஜெப்புன்னிஷாவின் பிறந்த தினம்."

ஔரங்கசீப் வேண்டாத செய்தி ஒன்றைக் கேட்பது போல தலையசைத்தபடியே சொன்னார்,

“அவள் நோயுற்று இருப்பதாக மருத்துவர் சொன்னார்.”

“அவளது நோயிற்கான மருந்து எதுவென உங்களுக்குத் தெரியும்.”

“அது மருந்தில்லை. விஷம்.”

“ஆனால், அந்த விஷத்தால் மட்டுமே அவளை குணப்படுத்த முடியும்.”

“அஜ்யா, பெண்கள் ஏன் இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறீர்கள். ஒரு தந்தையாக நான் அவள் மீது எவ்வளவு அன்பு வைத்திருக்கிறேன். அதை ஏன் அவள் உணரவேயில்லை.”

“தந்தை மட்டுமே வாழ்க்கையில்லையே மாலிக்.”

“யாரோ ஒருவன் என் பெண்ணைக் கவிதை பாடி மயக்கிவிட்டால் அவன் பின்னால் போக அவளை எப்படி அனுமதிக்க முடியும். அவள் இந்த ஹிந்துஸ்தானத்தின் இளவரசி. இதன் மரியாதைகளைக் காக்க வேண்டியவள்.”

“அதன் பொருட்டுதான் சிறையில் ஒடுங்கிக்கிடக்கிறாள்.”

“அஜ்யா என் வேதனைகளை யாருடனும் நான் பகிர்ந்து கொள்ள முடியாது. ஆனால், நான் மோசமாவன் இல்லை. எனது தலையில் உள்ள கீரிடம் என்னை அழுத்தும்போது நான் விரும்பாத விஷயங்களையும் செய்ய வேண்டியிருக்கிறது.”

“ஒரு பெண் தனது தந்தையைத் தவிர யாரிடம் தன் ஆசைகளைச் சொல்ல முடியும்.”

“அடைய முடியாத ஆசைகள் அடக்கிக்கொள்ள வேண்டும். அடங்க மறுத்தால் அவதிப்படத்தான் வேண்டும்.”

“பாவம். தாயில்லாத பெண்” என்றாள் அஜ்யா.

“பிடிவாதமானவள். பெண்களுக்கு எதற்குக் கவிதை. அதுவும் பாழாய்ப் போய் அந்தக் குடிகாரர்களை அழைத்து வந்து இரவெல்லாம் கவிதை பாடுகிறாள். அவமானமாயிருக்கிறது.

அஜ்யா, கவிஞர்கள் இல்லாத சொர்க்கத்தை இருப்பதாக நினைத்துக்கொண்டு புலம்புகிறார்கள். கண்டதையும் கற்பனை செய்வது ஆபத்தானது. அதுவும் கவிஞர்களின் கற்பனை மிக மிக ஆபத்தானது.”

“மனவேதனையைத் தீர்த்துக்கொள்ள வேறு என்னதான் வழியிருக்கிறது’’ எனத் தயங்கித் தயங்கி கேட்டாள் அஜ்யா.

“கவிதைகள் ஒருவர் மனதை குழப்பமடையச் செய்துவிடும். கவிதைகள் எதையும் நேரிடையாகப் பேசுவதில்லை. ரகசியங்கள். புதிர்கள். இல்லாத கற்பனைகள் இதுதானே கவிதைகள்.’’ “கவிதைகள் மனதை ஆறுதல்படுத்துகின்றன. கவிதை ஒரு மருந்து’’ என்றாள்

அஜ்யா.

அவளை முறைத்தபடியே மன்னர் சொன்னார், “மென்னுணர்வுகளே மனிதர்களை பலவீனமடையச் செய்கின்றன. உணர்ச்சிவசப்பட வைக்கின்றன. நான் கவிதைகளை வெறுக்கிறேன்’’

“மக்பி உங்கள் மகள்.’’

“அதனால்தான் அவளுக்கு இருபதாயிரம் பொற்காசுகள் பரிசு கொடுத்து அவள் அறிவைப் பாராட்டினேன். ஆலோசனைகள் கேட்டேன். அவள் அறிவுரைப்படி வரிவிதிக்கும் முறையை மாற்றினேன். ஆனால், அவள் தன் அறிவை கவிதை பாடி வீணடிக்கிறாள். அவளைச் சிறையில் இருந்து விடுவித்துவிட்டால் என்னை மீறி லாகூர் போய்விடுவாள். என் மகளாக நடந்துகொள்ள மாட்டாள்.’’

“சிறையிலே அவள் இறந்துபோகக் கூடும். அப்போது உலகமே உங்களை வெறுக்கும். உலகில் எந்தத் தந்தையும் தன் மகளை இப்படி சிறையில் தள்ளிக் கொன்றதில்லை என அபவாதம் பேசும் மாலிக்.’’

“அஜ்யா, குற்றவாளிகள் மீது நான் ஒருபோதும் இரக்கம் காட்டுவதில்லை.”

“இளவரசர்களும் சிறைப்படுத்தப்பட்டார்கள். ஆனால், இவ்வளவு கடுமையாகத் தண்டிக்கப்படவில்லை. விடுவிக்கப்பட்டு புதிய பதவி வழங்கப்பட்டிருக்கிறார்கள்.”

“அவர்கள் ஆண்கள்’’ என உறுதியான குரலில் சொன்னார் ஔரங்கசீப்.

“ஆணுக்கு ஒரு நீதி பெண்ணுக்கு ஒரு நீதியா’’ எனத் தணிவான குரலில் கேட்டாள் அஜ்யா.

அவர் கோவித்துக்கொள்ளவில்லை. தாடியை வருடியபடியே அஜ்யாவை நோக்கி சொன்னார், “நீ சலிம்கர் சிறைச்சாலைக்குப் போ. அவள் இனிக் கவிதை பாட மாட்டேன் என்று உறுதி அளித்தால் என்னிடம் வந்து சொல். உடனே விடுதலை செய்துவிடுகிறேன்.”

அஜ்யா தலையாட்டினாள். இரவோடு இரவாக அவள் சலிம்கர் சிறைச்சாலைக்குச் சென்றாள்.மக்பி உறங்கவில்லை. எரியும் பந்தவிளக்கைப் பார்த்தபடியே எதையோ முணுமுணுத்துக் கொண்டிருந்தாள். அஜ்யாவைப் பார்த்தவுடன் அவள் கண்கள் விரிந்தன. கைகளை நீட்டினாள்.

அஜ்யா அவளது கைகளைப் பற்றிக்கொண்டு சொன்னாள்

“நீங்கள் மெலிந்துவிட்டீர்கள் இளவரசி’’

அவள் சிரித்தபடியே கேட்டாள்.

“பாதுஷா எப்படியிருக்கிறார் நலம்தானே?”

அஜ்யா அவளிடம் உற்சாகமான குரலில் சொன்னாள்,

“உங்களை விடுதலை செய்யச் சொல்லிவிட்டார். ஒரேயொரு நிபந்தனை.”

“விடுதலை. மரணம் மட்டுமே எனக்கான விடுதலை.’’

“நீங்கள் ஒரேயொரு வாக்குறுதி தர வேண்டும் என பாதுஷா விரும்புகிறார்.”

“கவிதைகளை விட்டுவிட வேண்டுமா” எனப் பரிகாசமாகக் கேட்டாள் மக்பி.

எப்படித் தெரியும் என்பது போல அஜ்யா வியப்போடு பார்த்தாள். மக்பி சொன்னாள். “பாதுஷாவிடம் போய்ச் சொல். மக்பி கவிதை பாடுவதற்காகவே பிறந்தவள். அவள் இறந்துபோனாலும் எலும்புகள் பாடிக் கொண்டிருக்கும். ரோஜாச் செடியைப் புதைமேட்டில் வைத்தாலும் பூக்கவே செய்யும். அதன் நிறம் மணம் மாறிவிடாது.”

அவளின் குரலில் இருந்த உறுதியும் தைரியமும் அஜ்யாவினை நெகிழச் செய்தது. அஜ்யா எதையோ சொல்ல வந்த போது அவள் கேட்கவிருப்பமற்றவள் போல ஒரு கவிதை பாடினாள்.

“பாதுஷாவின் கட்டளைக்கு வேலையாட்கள் அடிபணிவார்கள் காற்று ஒருபோதும் அடிபணியாது.’’

அஜ்யா வேதனையோடு சிறைச்சாலையில் இருந்து வெளியேறிப் னாள். அதன்பிறகு அவள் மக்பியைக் காணவில்லை. சில ஆண்டுகளுக்குப் பிறகு மக்பி இறந்துபோன செய்தியை அறிந்த போது அவள் அழுதபடியே அவளது பாடலைப் பாடினாள்.

முப்பதாயிரம் மரங்கள் சூழ்ந்த தோட்டத்தில் மக்பியைப் புதைத்து நினைவிடம் கட்டினார்கள். அங்கே ரோஜாக்களைக் கொண்டுவந்து கொட்டியபடியே இசைவாணர்கள் மக்பியின் கவிதைகளைப் பாட ஆரம்பித்தார்கள். பாதுஷா அதைத் தடுக்கவில்லை.

சிறையில் இருந்த இரவில் மக்பியின் பாடல் அவள் மனதைக் கரைப்பதாக இருந்தது. அந்தக் கவிதை தன்னைப் போல வேதனைகளை மனதிற்குள்ளாக மறைத்தபடியே வாழும் எத்தனையோ பெண்களின் விம்மலாக இருந்தது.

அஜ்யா அன்றிரவு முழுவதும் மக்பியைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தாள்.

விசித்திர உலகம்

தூமகேது அடைக்கப்பட்டிருந்த விசாரணைக் கூடமான காலா விசித்திரமான உலகமாயிருந்தது, அங்கே குற்றவாளியாக அடைக்கப்பட்டிருந்த ஒவ்வொருவனும் வியப்பூட்டும் ஒரு கதையைக் கொண்டிருந்தார்கள்.

சிலர் அதை மற்றவர்களிடம் பகிர்ந்துகொண்டார்கள். ஒருசிலர் தனக்குத்தானே புலம்பிக்கொண்டார்கள்.

கள்ளநாணயம் அடித்த ஒருவன் தான் அச்சடித்த நாணயங்களில் சிலவற்றைத் தன்னோடு வைத்திருந்தான். அவன் தன்னைக் காண வருகிற எல்லோரிடமும் அதைக் காட்டிப் பெருமைப் பட்டுக்கொண்டிருந்தான். உண்மையில் அந்த நாணயங்களில் வேறுபாடே கண்டுபிடிக்க முடியவில்லை.

குதிரை திருடியதாகக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவன் மனச்சிதைவுற்று கரித்துண்டால் காணும் இடமெல்லாம் குதிரையின் உருவத்தை வரைந்து கொண்டிருந்தான்.

வரி கொடுக்கவில்லை என ஒரு கிராமத்திலிருந்த அத்தனை விவசாயிகளும் கைது செய்யப்பட்டு அடைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் காலாவிலிருந்த நிலத்தைக் கொத்தி உழுது பயிரிடத் துவங்கியிருந்தார்கள்.

தூமகேதுவும் அவனைப்போன்ற தாழ்ந்த சாதியைச் சேர்ந்த பதினாறு பேர்களும் காலாவைத் துப்புரவு செய்வது, கழிவுகளை அகற்றுவது, மீதமான உணவைச் சேகரித்துக் கொண்டு போய்க் குப்பையில் போடுவது போன்ற வேலைகளில் ஈடுபடுத்தப் பட்டார்கள்.

ஒருவன் தூமகேதுவிடம் கேட்டான்,

“சிறைப்பட்டாலும் நாம் துப்பரவுப் பணிகள்தான் செய்ய வேண்டுமா. வேறு வேலை எதுவும் நமக்குத் தரப்படதா?’’

“சொர்க்கத்திற்குச் சென்றாலும் அங்கேயும் நம்மை கழிவுகளைத்தான் அள்ளச் சொல்வார்கள். நம்மை இவர்கள் மனிதர்களாக மதிப்பதேயில்லை.’’

தூமகேதுவிற்கும் இந்த ஆற்றாமை இருந்தது. ஆனால், அதை அவன் வெளிக்காட்டிக்கொள்ளவில்லை.

காலாவினுள் பெரிய ஆலமரம் ஒன்றிருந்தது. அதுதான் கைதிகள் பலரும் கூடுமிடம். அங்கே சில நாட்கள் கைதிகள் ஆடிப்பாடுவார்கள். பெண் வேஷமிட்டு நடிப்பார்கள். சில பெண்கைதிகளும் உடன் ஆடிப்பாடுவதுண்டு.காலாவின் சமையற்கூடம் மிகப்பெரியது. அதை விசாரணைக் கைதிகளே நிர்வாகம் செய்தார்கள். சமைப்பது

அவர்களின் வேலை. பிஷாடனின் உத்தரவின்படி கோதுமை மாவும் சமையல் பொருட்களும் சத்கர் சந்தையிலிருந்து இலவசமாக அனுப்பி வைக்கப்பட்டன. காலாவிற்குள் ரகசியமாக சாராயம் காய்ச்சப்படுவதும், பகிர்ந்து தரப்படுவதும் நடந்தேறியது. போதை அதிகமான சிலர் கூச்சலிடும் போது காவல் அதிகாரி அதைக் கண்டுகொள்ளாதவன் போல நடந்துகொள்வான்.

கூன்விழுந்த ஒருவனிருந்தான். அவன் காலாவிற்கு வந்த நாள் முதல் உறங்கவேயில்லை. குற்றவாளி பஞ்சிலிருந்து நூல் நூற்பதை வேலையாகச் செய்துகொண்டிருந்தான். இரவிலும் அவன் நூல் நூற்பதை நிறுத்தவேயில்லை. எழுத்தராக இருந்த ஒருவன் கைது செய்யப்பட்டு காலாவில் அடைக்கப்பட்டிருந்தான். அவன் வானத்தைக் கடந்து செல்லும் பறவைகளை எண்ணுவதை தனது அன்றாட வேலையாக வைத்திருந்தான். காலாவில் சில இந்துத் துறவிகளும் இருந்தார்கள். அவர்கள் காலாவிற்குள்ளாகவே வழிபாடுகளை நடத்தி வந்தார்கள்.

அவர்களை வணங்குகிறவர்களும் உள்ளேயே இருந்தார்கள். சூதாடிகளும் வம்பு பேசுகிறவர்களும் முரடர்களும் இசைவாணர்களும் கழைக் கூத்தாடிகளும் காலாவில் இருந்தார்கள். அவர்கள் சிறுசிறுகுழுக்கள் போல ஒன்று திரண்டிருந்தார்கள். சில சமயம் அவர்களுக்குள் மோதிக்கொண்டார்கள்.

காலாவிற்குள் ஒரு குருடன் விசித்திரமான வாத்தியக் கருவி ஒன்றை நாள் எல்லாம் வாசித்துக்கொண்டிருப்பதை தூமகேது கேட்டான். அப்படி ஒரு இசைக்கருவியை அவன் இதற்கு முன்பு கேட்டதேயில்லை.

அந்தக் குருடனுக்கு தன்னிடமிருந்த உணவைப் பகிர்ந்து தந்தபடியே தூமகேது கேட்டான்,

“நீ யார், எதற்காக நாள் எல்லாம் இந்த வாத்தியக் கருவியை வாசித்துக்கொண்டிருக்கிறாய்?’’

“அதைத் தெரிந்துகொண்டு என்ன செய்யப்போகிறாய்’’ எனக் கேட்டான் குருடன்.

“நீ வாசிக்கின்ற இசை பாம்பு சீறுவதைப் போல இருக்கிறது.’’

“நிஜம். இது பாம்பின் சீற்றமேதான். வெறும் சீற்றம் மட்டுமில்லை விஷம். இசையைக் கேட்கக் கேட்க நீ விஷமேறத்துவங்கிவிடுவாய்.’’

“விசித்திரமாயிருக்கிறது’’ என்றான் தூமகேது.

“நீ சிகிரிகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா?’’

“கொள்ளையடிக்கும் சிகிரிகள்தானே.”

“ஆமாம்.”

“சிகிரிகளில் ஒருவன்கூட இப்போது உயிருடனில்லை.”

“எல்லோரையும் கொன்றுவிட்டார்களா?”

“பிஷாடனின் படையும் பாதுஷா ஔரங்கசீப்பின் ஆட்களும் ஒன்று சேர்ந்து அவர்களைத் தேடிக் கண்டுபிடித்து கொன்று விட்டார்கள். பச்சைக் குழந்தையைக்கூட விட்டுவைக்கவில்லை.”

“உனக்கு இதெல்லாம் எப்படித் தெரியும்.”

“சிகிரிகளிடமிருந்து தப்பி வந்தவன் நான் ஒருவன் மட்டுமே.”

“நீ சிகிரிகளிடம் மாட்டிக்கொண்டாயா?”

“ஆமாம், என் பெயர் பெல்கிரான். சாமர்கண்டிலிருந்து சிகிரிகளைப் பற்றிக் கேள்விப்பட்டு அவர்களைத் தேடி வந்தவன்.”

“நிஜமாவா?”

“என் கதை இந்த இசையைப் போல துயரமானது.’’

“சொல். அதைக் கேட்க ஆசைப்படுகிறேன், கதைகள்தான் மனதை ஆறுதல்படுத்துகின்றன.”

பெல்கிரான் தனது கதையைச் சொல்ல ஆரம்பித்தான்.

•••

பகலில் பூச்சிகளாகவும் இரவில் மனிதர்களாகவும் உருமாறி அலையும் திருடர்கள் என சிகிரியர்களைப் பற்றி லூப்பூத் தவாரிக் ஹிந்த் என்ற மொகலாய வம்ச வரலாற்று நூல் சுட்டிக்காட்டுகிறது. ராய் பஹாராமால் என்பவரின் மகன் ராய் பிந்த்ராபன்மால் எனும் திவான் எழுதிய இந்த நூல் ஹிஜ்ரி 1100ஆம் ஆண்டு முடிக்கப்பட்டது. இதில் சிகிரியர்களைப் பற்றி சிறிய குறிப்பு ஒன்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மற்றபடி சிகிரியர்கள் எங்கே வசித்தார்கள். என்ன ஆனார்கள் என்பதைப் பற்றி எவ்விதமான தகவல்களும் வரலாற்றில் பதிவு செய்யப்படவில்லை.

சிகிரியர்களைத் தேடியே நான் சத்கருக்கு வந்தேன். நான் கேள்விப்பட்டதெல்லாம் கதைகள் மட்டுமே. அந்தக் கதைகள் விசித்திரமானவையாக இருந்தன. எவர் சிகிரியர்களைப் பற்றி நினைத்துக்கொண்டிருப்பார்களோ அவர்கள் கனவில் சிகிரியர்கள் புகுந்துவிடுவார்கள். சில நேரம் கனவிலே தங்கிவிடுவதும் உண்டு. பின்பு அவர்கள் கனவில் துர்நிகழ்வுகளை நிகழ்த்தத் துவங்குவார்கள். அதன்காரணமாக ஒரு மனிதன் நோயுறுவதும் உறக்கத்தில் புலம்புவதும் நடைபெறும், பின்பு அந்த மனிதன் உடல் மெலிந்து இறந்துபோன பிறகே கனவிலிருந்த சிகிரியர்கள் வெளியேறிப் போவார்கள் என்று சொன்னார்கள்.

கேட்கவே எனக்கு விசித்திரமாக இருந்தது.

சிகிரியர்களைப் பற்றிய உண்மைகளை மறைப்பதற்காகவே இதுபோன்ற கதைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என மனதிற்குள் சிரித்துக்கொண்டேன்.

அப்போது ஒருநாள் சத்கரின் அருகிலுள்ள டோம்பி எனும் சிறுநகரை சிகிரிகள் இரவில் தாக்கிக் கொள்ளையடித்துப் போய் விட்டார்கள் என்ற தகவலைக் கேள்விப்பட்டேன். நிச்சயம் ஏதாவது ஒரு சிகிரியை தான் சந்தித்துவிட முடியும் என உறுதியாக நம்பினேன்.

சிகிரிகள் ஒரு காலத்தில் காட்டிற்குள் வசித்துவந்தவர்கள் என்றும் அந்தக் காட்டை அழித்து சத்கர் நகர் உருவாக்கப்பட்ட காரணத்தால் போக்கிடம் இல்லாமல் அலைந்த சிகிரிகள் பகலில் பூச்சிகளாகவும் இரவில் மனிதர்களாகவும் உருமாறுகிறார்கள். அவர்கள் கற்று வைத்திருந்த மந்திரவித்தையே இதற்கு காரணம் எனச் சொன்னார்கள்.

சிகிரிகளில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என பேதமில்லாமல் கொள்ளையில் ஈடுபடுவார்கள். உண்மையில் விட்டில்பூச்சிகள் கூட்டமாக வந்து விளைச்சல் நிலத்தை அழிப்பது போலவே அவர்கள் வேட்டையாடுவார்கள் என்றார்கள். டோம்பியிலும் அப்படியே நடந்திருந்தது.

சிகிரிகளில் ஒருவன்கூட அதுவரை அகப்பட்டதேயில்லை. சிகிரிகள் எப்போது வருவார்கள், எப்படி வருவார்கள் என யாராலும் கண்டறியவும் முடியவில்லை. தன்னால் சிகிரிகளை ஒடுக்கமுடியவில்லை என்பதாலே சத்கர் அரசன் பேரரசன் ஔரங்கசீப்பின் உதவியை நாடி அவரது படைகளைத் துணைக்கு வைத்திருந்தான். அப்படியும் சிகிரிகளைக் கண்டறியவோ, கைது செய்யவோ, கொன்று குவிக்கவோ முடிந்ததேயில்லை.

“சிகிரிகள் காற்றில் அலையும் பாம்புகள். அவர்களை மனிதர்களால் பிடிக்கமுடியாது’’ என ஒருவணிகன் ஆற்றாமையில் சொன்னது தான் நிஜம்.

டோம்பியில் நடந்த கொள்ளை சத்கர் வணிகர்களை வெகுவாக பயமுறுத்தியிருந்தது.

டோம்பியிலிருந்த ஒரு வணிகன் சொன்னான்.

“குதிரைகள், காளைகள், எருமைகள், கழுதைகள் ஏன் ஆடுகளின் மீதுகூட ஏறிக்கொண்டு சிகிரிகள் வந்திருந்தார்கள். ஒன்றிரண்டில்லை. ஓராயிரம் பேர். டோம்பி சந்தைக்குப் பௌர்ணமி அன்று அதிகம் பொருட்கள் வருவதுண்டு, அவர்கள் அந்த இரவில் கிழக்கிலிருந்து தான் புறப்பட்டு வந்திருந்தார்கள். அதை ஒரு இடையன் பார்த்திருக்கிறான். அவன் பெயர் பசீரா.’’

நான் அந்த இடையனைத் தேட ஆரம்பித்தேன். அவன் வீட்டைத் தேடிக் கண்டுபிடித்தபோது அந்த ஆள் தனக்கு எதுவும் தெரியாது என

பயந்துபோய்ச் சொன்னான்.

“நான் அரசாங்கத்தின் ஆள் இல்லை. சிகிரிகளைச் சந்திக்க விரும்புகிறவன். உனக்கு எந்த ஆபத்தும் இதனால் உருவாகாது” என நான் சொன்னபோதும் இடையன் அதை நம்பவில்லை.

தனது பையிலிருந்த சில்லறைகளை அவன் முன்னே குவித்து வைத்து திரும்பவும் கேட்டேன்.

“சிகிரிகள் எங்கிருந்து வந்தார்கள். எப்படியிருப்பார்கள்?’’ பசீரா தன் கண்முன்னே கிடந்த நாணயங்களை வெறித்துப் பார்த்தபடியே சொன்னான்.

“ஒருவேளை அவர்கள் இங்கேயும் மறைந்திருந்து கேட்டுக் கொண்டிருக்கக்கூடும்.”

“இங்கேயா? எப்படி?’’

“இதோ பூச்சிகள் சப்தம் கேட்கிறது பாருங்கள். இந்தப் பூச்சிகள் வேறு யாருமில்லை. சிகிரிகள்தான். சிகிரிகள் மாய உருவம் எடுப்பவர்கள்.’’

“அதெல்லாம் கதை. நீ நடந்ததை மட்டும் சொல்.”

“இல்லை. அவர்கள் என்னைக் கொன்றுவிடுவார்கள்.”

“நான் பாதுஷாவிடம் சொல்லி உன்னைப் பாதுகாக்கிறேன். இந்த நாணயங்களை எல்லாம் எடுத்துக்கொள்.”

“பூச்சிகளைப் பகைத்துக்கொண்டு மனிதனால் வாழ முடியாது.”

எனக்கு ஆத்திரமாக வந்தது.

“அவர்கள் பூச்சிகள் இல்லை. மனிதர்கள். உங்களை ஏமாற்றுகிறார்கள்.”

“மனிதர்களால் அப்படி நடந்துகொள்ள முடியாது. நான் கண்கூடாகப் பார்த்தேன்.”

“என்ன பார்த்தாய், எப்போது பார்த்தாய் அதை மட்டும் சொல்.”

“பயமாக இருக்கிறது. அதை நினைக்கும் போது உடலில் உள்ள ரோமங்கள் குத்திக்கொண்டு நிற்கின்றன. சிகிரிகளின் சிரிப்பு என் காதில் கேட்டுக்கொண்டேயிருக்கிறது.”

“எங்கே அவர்களைப் பார்த்தாய்?”

“கிழக்கே அடிவானத்துக்கு அருகில்.”

“இந்த நாணயங்கள் அத்தனையும் உனக்குத்தான். எடுத்துக் கொள். உனக்குத் தெரிந்ததை எல்லாம் சொல்.”

அவன் பயத்துடன் ஆசையுடன் அந்த நாணயங்களை அள்ளி எடுத்து ஒரு துணியில் முடிந்துகொண்டு சொன்னான்.

“அன்றைக்குப் பௌர்ணமி இரவு. நான் ஆடுகளை கிழக்கில் உள்ள ஒரு நிலத்தில் கிடை அமர்த்தியிருந்தேன். என்னோடு துணையாக எனது நாயும் உடனிருந்தது. வானில் முழுநிலவு ஒளிர்ந்து கொண்டிருந்தது. பொதுவாக முழுநிலவு நாட்களில் நாய்கூட உறங்குவதில்லை. நானும் விழித்துக்கொண்டே தானிருப்பேன். ஒற்றை ஆளாக நிலவைக் காணும் போது ஏதோஒருவித சந்தோஷம் உருவாகும். அதுவும் பல ஆண்டுகளாக தனியே நிலவைச் சந்தித்து வருபவன் என்பதால் நிலாவோடு பேசிக்கொண்டிருப்பேன். உண்மையில் அந்த அழகு பயமுறுத்தக் கூடியது. பௌர்ணமி நிலவு வெளிச்சத்தில் பூமியைப் பார்த்திருக்கிறீர்களா. நீரோடை போல வெளிச்சம் பெருகியோடிக் கொண்டிருக்கும், தரையே ஒளிரும். அப்படி லயித்துப் போய் வானைப் பார்த்தபடியே குத்துக்காலிட்டு உட்கார்ந்திருந்தபோது திடீரென குதிரையின் கனைப்பொலி தொலைவில் கேட்டது. அந்த சப்தம் சில நிமிடங்களில் அதிகமாகியது.

எழுந்து நின்று பார்த்தேன். என் கண்களை நம்பமுடியவில்லை. குதிரைகள், குதிரைகள். வரிசை வரிசையாக பலநூறு குதிரைகள். கறுப்பு, சிவப்பு, வெண்மை என விதவிதமான குதிரைகள். அதன் மீது சிகிரியர்கள். அத்தனை பேரும் மொட்டை அடித்திருந்தார்கள். சிகிரியர்கள் இடக்கைப் பழக்கம் கொண்டவர்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்களில் ஒருவன் ஒரு பொழுதுகூட வலக்கையை எதற்கும் பயன்படுத்தியதில்லை. சிலர் வலக்கையைத் துண்டித்துவிட்டவர்கள் என்றுகூட கேள்விப்பட்டிருக்கிறேன். அது உண்மை என்பதை அன்று கண்டேன். இடக்கையில்தான் அவர்களின் லகானைப் பற்றியிருந்தார்கள். ஹோ ஹோ எனக் கூச்சல். தாவி வரும் குதிரைகள். ஆவேசமாக அவர்கள் வந்துகொண்டிருந்தார்கள். எனது நாய் அந்தக் குதிரைகளைக் கண்டு குரைத்தது. சிகிரியர்கள் கையில் கோடாரிகள். பிடி நீண்ட வாட்கள். முள்தடிகள். சிலர் இரண்டு ஆள் உயர முள்கம்பம் ஒன்றை ஏந்தியிருந்தார்கள். தாடியும், வெறித்தனமிக்க கண்களும் காற்றில் அலையும் கைகளும் உறுதியான கால்களும் கொண்டிருந்தார்கள். சிலர் நரித்தோலை அணிந்திருந்தது தெரிந்தது. சிலர் வில் அம்புகளை ஏந்தியிருந்தார்கள். குதிரைகளின் பிளந்த மூக்கிலிருந்து சீற்றம் பொங்கிவழிந்துகொண்டிருந்தது. கொம்பு, குழல் ஊதிக்கொண்டு அவர்கள் வந்துகொண்டேயிருந்தார்கள்.

ஏதோ போருக்குக் கிளம்பிப் போகிறவர்கள் போலவே அவர்கள் இருந்தார்கள். போகிறபோக்கில் குதிரையில் இருந்த ஒருவன் தன் கையில் இருந்த மணலை எனது நாயைப் பார்த்து ஊதினான். மறுநிமிடம், எனது நாயின் வாய் கட்டப்பட்டுவிட்டது. நாய் மட்டுமில்லை. என் வாயும்தான். என்னால் ஒரு வார்த்தை பேச முடியவில்லை. அவர்கள் என்னைக் கடந்து போய்க் கொண்டிருந்தார்கள். வலிமையான ஆண்கள், பெண்கள் என அந்தக் குதிரைகளில் இருந்த முகங்கள் மறக்கமுடியாதவை. அந்தக்

குதிரைகளின் பின்னால் காளைகள், எருதுகள், ஆடுகள் என அவர்களிடமிருந்த விலங்குகள் எல்லாவற்றிலும் ஏறி வந்தார்கள். எல்லா விலங்குகளும் வேகமாக ஓடப் பழக்கப்படுத்தப் பட்டிருந்தன. ஆடுகள் அவ்வளவு வேகமாக ஓடும் என்பதை அன்றுதான் கண்டறிந்தேன். கழுதைகளில் இருந்தவர்கள்கூட கூச்சலிட்டார்கள். சிலர் கையில் எதையோ வைத்து குடித்துக்கொண்டும், சிலர் வாத்தியம் இசைத்துக்கொண்டும், சிலர் உறங்கிக்கொண்டும் பயணிப்பதைக் கண்டேன். அவர்கள் சத்கரைக் கொள்ளையிடத்தான் போய்க்கொண்டிருக்கிறார்கள் என்பது நன்றாகப் புரிந்திருந்தது.

எங்கிருந்து வந்தார்கள் எனப் புரியவில்லை. ஆனால், பூமியின் அடியிலிருந்து கிளம்பி வந்தவர்கள்போல புழுதியும் அழுக்கும் படிந்தவர்களாகவே அவர்கள் இருந்தார்கள். குதிரையில் வந்த ஒருவன் கழுத்தில் கபாலம் ஒன்றைக் கட்டித் தொங்க விட்டிருந்தான். பெண்களில் சிலர் கூந்தலில் பறவையின் இறகுகளைச் செருகியிருந்தார்கள். சொல்ல மறந்துபோனேன். சிறுவர்களுக்குப் பத்து பனிரெண்டு வயதிருக்கும். அவர்கள்கூட கையில் குத்தீட்டிகளுடன் ஆவேசமாகக் கத்தியபடியே போய்க்கொண்டிருந்தார்கள். என் முகத்தை உரசிக்கொண்டு போவதுபோல நெருக்கமாக எருது ஒன்று கடந்து போனது, அதிலிருந்தவன் வாயால் ஊளையிட்டுக்கொண்டே சென்றான்.

அவர்கள் கடந்துபோன பிறகு என்னால் அந்த இடத்தில் நிற்க முடியவில்லை. கால்கள் நடுங்கிக்கொண்டிருந்தது. ஆடுகளை ஓட்டிக்கொண்டு இங்கிருந்து ஓடிப்போய்விடலாம் என நினைத்தேன். ஆனால், மனது கேட்கவில்லை. அவர்கள் டோம்பியைக் கொள்ளையடித்துவிட்டு இந்த வழியாகத்தானே திரும்பிப் போவார்கள். அவர்களை மறுபடியும் பார்க்க வேண்டும் என்ற ஆசை உருவானது. அதுதான் சிகிரிகளின் வெற்றி. அவர்களை ஒரு மனிதன் ஒருமுறை கண்டுவிட்டால் மறுபடியும் காண வேண்டும் என ஆசைப்பட்டுக்கொண்டேதானிருப்பான்.

காத்துக்கொண்டேயிருந்தேன். விடிகாலை நேரம் அந்தக் குதிரைகள் திரும்பி வரும் சப்தம் கேட்டது. முன்பு விட இப்போது கூச்சல் அதிகம். ஆண்களும் பெண்களும் கொள்ளையில் கிடைத்த நகைகளை கழுத்தில் கைகளில் அணிந்திருந்தார்கள். கிடைத்த இறைச்சிகளைத் தின்றபடியே வந்தார்கள். முத்துமாலைகளை அறுத்து வழியெல்லாம் வீசினார்கள். சிகிரிகளில் ஒருவன் நாணங்களை தானியங்களை விதைப்பதைப் போல நிலமெங்கும் விதைத்தபடியே வந்தான். அவர்கள் எந்தப் பொருளையும் மதிக்கவில்லை. அந்தக் குதிரைகள் என்னைக் கடந்து போகும்போது ஒருவன் என்னை நோக்கி எதையோ வீசினான். நாணயமோ நகையோ எதையோ வீசுகிறான் என ஆசையாகக் குனிந்து அதை எடுத்துப் பார்த்தேன். அது ஒரு பெண்ணின் காது. நகைக்காக

காதோடு அறுத்துத் துண்டித்துவிட்டிருக்கிறார்கள். ரத்தம் உறைந்துபோன அந்தக் காதை கையில் தொடவே அசூயையாக இருந்தது. எருது ஒன்றில் சென்றுகொண்டிருந்த ஒரு பெண் என்னை நோக்கி விரல் நீளமுள்ள கத்தி ஒன்றை வீசினாள். அப்படி ஒரு கத்தியை என் வாழ்நாளில் கண்டதில்லை. பூவின் இதழ் போன்ற வடிவில் அக்கத்தி இருந்தது. மிகக் கூர்மையான கத்தி. அவர்களே அதை வடிவமைத்திருக்க வேண்டும். அந்தக் கத்தியை எடுத்து எனது தலைப்பாகைக்குள் செருகிக்கொண்டேன்.

சூரிய உதயம் வானில் வெளிப்படுவதற்குள் அவர்கள் அடிவானத்திற்குள் சென்று மறைந்திருந்தார்கள். ஆடுகளை ஓட்டிக்கொண்டு வரும் வழி முழுவதும் நாணயங்களும் நகைகளும் சிதறிக்கிடந்தன. அவற்றை அள்ளிக் கொண்டு வர வேண்டும் என ஆசை வந்தது.

ஆனால், காவலர்கள் தேடி வந்து பிடித்துவிட்டால் சிகிரிகளுடன் தானும் கொள்ளையில் ஈடுபட்டதாக தூக்கிலிட்டுவிடுவார்களே என பயமாக இருந்தது. வீட்டிற்கு வந்து சேர்ந்தேன். என்னால் சிகிரிகளை மறக்கமுடியவில்லை. அவர்கள் நினைவாக என்னிடம் இருப்பது இந்தக் கத்தி மட்டுமே'' எனத் துணிப்பொதி ஒன்றில் இருந்து அந்தக் கத்தியை எடுத்துக் காட்டினான் பசீரா.

அந்தக் கத்தியைக் கையில் வாங்கிப் பார்த்தேன். கனமேயில்லை. உண்மையில் ஒரு பூவின் இதழ் எடைதான் அக்கத்தியும் இருந்தது, அதன் கூர்மையை சோதிக்க லேசாக விரலில் இழுத்தால் விரல் ஆழமாக வெட்டி ரத்தம் கொப்பளித்தது.

சிகிரியர்கள் கலைத்திறன் கொண்டவர்கள். இப்படி ஒரு கத்தியைச் செய்வது எளிதில்லை. ஏன் இவர்கள் கொள்ளையடிக்கிறார்கள். அந்தக் கத்தியை நானே விலை கொடுத்து வாங்கிக்கொண்டேன். பசீரா சொன்னான்.

“சிகிரிகள் எந்தப் பொருளுக்கும் ஆசைப்படவில்லை. தங்களால் கொள்ளை அடிக்க முடியும் என்பதைத்தான் நிரூபணம் செய்கிறார்கள். அவர்கள் சிதறிய நகைகள், பொருட்கள் நிலமெங்கும் கிடக்கின்றன.''

“சிகிரியர்களைப் பற்றி வேறு என்ன செய்தி உங்களுக்குத் தெரியும்?'' எனக் கேட்டேன்.

“சிகிரியர்கள் ஒவ்வொரு இரவும் ஒரு இடத்தில் தங்குவார்கள், பன்றி இறைச்சி அவர்களுக்கு விருப்பமானது. அதிலும் பன்றியின் கால்களை விரும்பி உண்ணுவார்கள். பன்றியின் வாலை நிலத்தில் புதைத்துவிடுவார்கள். எந்த நாயாலும் அவர்கள் இருந்த இடத்தை மோப்பம் கண்டுபிடித்துவிட முடியாது. சிகிரியர்கள் தாங்கள் தங்கியிருந்த இடத்தை விட்டு நீங்கும்போது மண்மீது ஏதோ மந்திரம் போட்டுவிடுகிறார்கள். அதனால் மண்ணில் அவர்கள் இருந்த தடம்கூட

இருக்காது.”

எனக்கு சிகிரிகளை எப்படியாவது காண வேண்டும் என்ற ஆசை அதிகமானது. நிச்சயம் அவர்களைக் கண்டுபிடித்துவிடமுடியும் என உறுதியாக நம்பினேன். இதற்காக சத்கரிலே தங்கிவிட வேண்டும் என முடிவு செய்து சந்தையில் கண்ணாடிப் பொருட்கள் விற்கும் கடை ஒன்றை ஆரம்பித்தேன்.

வாடிக்கையாளர்கள், சந்தையில் இருந்த மனிதர்கள் எனப் பலரிடமும் நேரம் கிடைக்கும்போதெல்லாம் சிகிரிகளைப் பற்றி கேட்டுக்கொண்டிருப்பேன்.

பின்பு ஒரு நாள் தற்செயலாக எனது கண்ணாடிக் கடையில் ஒரு பெண்ணைக் கண்டேன். அந்தப் பெண் ஆறடி உயரமிருந்தாள். கருகருவெனக் கூந்தல். அவள் கண்களில் பயமேயில்லை. அவள் ஆள் உயரக் கண்ணாடி ஒன்றை வியந்து பார்த்தபடியே நின்றிருந்தாள்.

அந்தப் பெண் பின்னால் போய் நின்றபடியே “அழகாயிருக்கிறாய்” என்று சொன்னேன்.

“அது எனக்கே தெரியும்” என்றாள் அந்தப் பெண்.

“கண்ணாடி பிடித்திருக்கிறதா, எடுத்துக்கொள்’’ என்றேன்.

“என்னை நானே எதற்காகப் பார்த்துக்கொள்ள வேண்டும். எனக்குக் கண்ணாடி தேவையில்லை” என்றாள் அந்தப் பெண்.

“உதடுகள் வேண்டாம் என்கிறது. ஆனால், கண்கள் வேண்டும் என்கின்றன” என்றேன்.

“நீ ஒரு தந்திரசாலி. வணிகன் இல்லை. பறவை பிடிப்பவன் போல எதற்கோ காத்துக்கொண்டிருக்கிறாய்.”

“ஆமாம். அழகான பெண் ஏதாவது கிடைக்காதா எனக் காத்துக் கொண்டிருக்கிறேன்” என்றேன்.

“உனக்கு தைரியம் மிக அதிகம்.”

“என்னிடம் ஒரு அதிசயமான பொருள் இருக்கிறது. அதை மட்டும் ஒருமுறை பார்த்துவிட்டு நீ போகலாம்.” என அவசரமாக பசீரா தந்த பூவின் இதழ்வடிவம் கொண்ட கத்தியைத் தேடி எடுத்து அவளிடம் காட்டுவதற்கு எத்தனித்தேன். அதற்குள் அந்தப் பெண் வெளியேறிப் போயிருந்தாள். அவளைப் பின்தொடர்ந்து சென்றபோது தூர்ந்து போயிருந்த கிணறு ஒன்றினுள் அவள் இறங்குவது தெரிந்தது. சில நிமிடங்களில் நானும் அதற்குள் இறங்கினேன். ஒரே இருட்டு. மனதைரியத்துடன் இருட்டிற்குள் இறங்கியபோது உள்ளே தண்ணீரைப் போல வெளிச்சம் கசிவதைக் கண்டேன்.

எங்கிருந்து வெளிச்சம் வருகிறது எனப் பார்த்தபோது கிணற்றின்

உள்ளே ஒரு வழி குகை போல நீள்வதைக் கண்டேன். குனிந்து அந்தப் பாதையில் தவழ்ந்து உள்ளே போனபோது நிழல்போல மனித உருவங்களின் நடமாட்டத்தைக் கண்டேன். அவர்களை நோக்கி இரண்டு அடி முன் எடுத்து வைத்தபோது ஒரு கத்தி எனது தொண்டையின் அடியில் வைத்து அழுத்தப்படுவதை உணர்ந்தேன். சிகிரிகளில் ஒருவன் என் கழுத்தில் கத்தி வைத்திருந்தான். அந்தக் கத்தியின் கூர்மை கழுத்தில் ரத்தம் கசியச் செய்துகொண்டிருந்தது. சற்று வேகமாக அழுத்தினால் தொண்டை நரம்புகள் அறுபட்டுவிடும். நான் மன்றாடும் குரலில்தான் அரசாங்கத்தின் ஆள் இல்லை, அவர்களை சந்திப்பதற்காகவே வந்தவன் எனச் சொன்னேன்.

என் முன்பாக பந்த வெளிச்சம் காட்டப்பட்டது. சிகிரிகளை முதன்முறையாக பந்த வெளிச்சத்தில் கண்டேன். மொட்டை அடிக்கப் பட்ட தலைகள், அகன்ற முகம். குடிவெறி ஏறிய கண்கள். பெரிய பற்கள் தாடைகள். உறுதியான கைகள். அவர்கள் மூர்க்க உருவங்களாயிருந்தார்கள்.

“உனக்கு என்ன வேண்டும்?” எனக் குரல் வந்தது. திரும்பிப் பார்த்த போது, முகத்தில் வெட்டுத்தழும்புகள் நிரம்பிய ஒரு வயதான ஆள் நின்றிருந்தார். இறுக்கமான முகம். அச்சமூட்டும் கண்கள்.

“நான் சாமர்கண்டிலிருந்து வருகிறேன். ஒருமுறை நீங்கள் வாசிக்கும் சர்ப்பநயனி என்ற இசைக்கருவியை ஒருவன் வாசிக்கக் கேட்டேன், அதிலிருந்து இந்த இசையைத் தேடி அலைந்து சத்கருக்கு வந்து சேர்ந்தேன்.”

“நம்மிடம் சர்ப்பநயனி படிக்க வேண்டுமாம். வேடிக்கையாக இல்லை” என அங்கிருந்த சிகிரிகளைப் பார்த்துக் கேட்டதும் அவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

“அதற்கு நீ சிகிரியாகப் பிறந்திருக்க வேண்டும்” என்றார் வயதானவர்.

“எனக்கு அந்த இசைக்கருவியை மட்டுமாவது கொடுங்கள். நானே கற்றுக்கொள்கிறேன்.’’

“உன் ஆசையை நிறைவேற்றி வைக்கிறேன். ஆனால், உலகமே தேடிக்கொண்டிருக்கும் சிகிரிகளின் வசிப்பிடத்தை நீ கண்டறிந்து விட்டாய். இனி உன் கண்கள் உனக்கானதில்லை.’’எனத் தன் கையிலிருந்த கத்தியால் எனது கண்களைத் தோண்டி வெளியே எடுத்தான். பிசுபிசுப்பான அந்தக் கண்களை என்னிடமே தந்தார்கள்.

பின்பு யாரோ சர்ப்ப நயனி என்ற அந்த வாத்தியக்கருவியை எடுத்து வாசிக்க ஆரம்பித்தார்கள். அந்த இசையை கேட்டதும் எனது ரத்தம் சூடாகியது. என் கையில் ஒருவன் அந்த இசைக்கருவியைத் திணித்தபடியே சொன்னான்,

“நீ கேட்டதைப் பரிசாகத் தந்துவிட்டேன், சத்கரின் சந்தையில் இதை

வாசித்துப் பிச்சை எடு.”

மற்றவர்கள் பலத்த சப்தத்துடன் சிரித்தார்கள். இந்த வாத்தியத்தை நானே வாசித்துக் கற்றுக்கொண்டேன், சத்கரின் வணிகச்சந்தையில் பிச்சை எடுத்துக்கொண்டிருந்த என்னை இசை பிடிக்காத வணிகர்கள் பொய்க்குற்றம் சுமத்திச் சிறையில் அடைத்துவிட்டார்கள். இந்த வாத்தியம் இருக்கும் வரை நான் சந்தோஷமாக இருப்பேன். இதுதான் என் கதை.”

அதைக் கேட்ட தூமகேது இப்படியும் ஒரு மனிதன் இருப்பானா என வியந்துபோய் அவனைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

குருடன் தன் கையில் வைத்திருந்த சர்ப்பநயனியை வாசிக்கத் துவங்கினான். அதன் இசை நரம்புகளை முறுக்கேற்றுவதாக இருந்தது.

•••

காலாவில் கொலைக் குற்றம் சாட்டப்பட்ட தர்மேயு என்ற ஒருவன் இருந்தான், அவன் தனது வலக்கையை நாள் முழுவதும் திட்டிக் கொண்டேயிருந்தான்.

காரணம் அதுதான் அவனது குற்றத்திற்கான ஆயுதம்.

அந்தக் கைகளால்தான் ஒருவனை நெறித்துக் கொன்றான்.

தர்மேயு செய்த கொலைக்கான காரணம் அவன் மனைவி செய்த நம்பிக்கை துரோகம். அதற்கு அவளைத் தண்டிப்பதற்குப் பதிலாக எதற்காக அவளது காதலனைக் கொன்றான்.

அதுதான் அவளுக்கு தண்டனையா?

தானும் கைதாகி, கள்ளக்காதலனும் இறந்துபோய்விட்டபிறகு அவள் என்னதான் செய்வாள்.

இன்னொரு ஆணைத் தேடிக்கொள்ளாமலா இருப்பாள்.

அப்படியானால் தானே முனைந்து அவளுக்கு இன்னொரு ஆணை ஏற்பாடு செய்துவிட்டேனா.

இது எப்படி தண்டனையாகும்.

உண்மையில் அந்தக் கொலையைச் செய்வதற்கான காரணம் தனக்குத் தெரியாத ஏதோவொன்றை தன் மனைவியிடம் அந்தக்கள்ளகாதலன் எப்படிக் கண்டுபிடித்தான் என்பதே.

ஒவ்வொரு நாள் உணவு பரிமாறும்போதும் அவன் தன் மனைவியை ஏறிட்டுப் பார்த்தபடியே சாப்பிடுவான். தனக்குத் தெரியாமல் ஒரு கள்ளக்காதலனைத் தேடிப்போகிறாள். அவனோடு படுத்து இன்பம் காண்கிறாள். ஆனால், அப்படி ஒன்று நடக்கிறது என்ற சுவடேயில்லாமல் அப்பாவி போல தனக்கு உணவு பரிமாறுகிறாள்.

இந்த அக்கறைக்கு என்ன பெயர். எதற்காக அவள் தனக்கு சமைத்துப் போடுகிறாள், பயமா, இல்லை தன்னை அவமதிக்கிறாளா?

தர்மேயு தன் மனைவியை வெறித்துப் பார்க்கும்போது அவள் ஒருபோதும் தன்னை நேர்கொண்டதில்லை என்பதை அறிந்திருந்தான்.அவள் வேண்டும் என்றே தனது உடையை சரிய விட்டு மார்பகங்களை அவனுக்குக் காட்டுவாள். எதற்காக இந்தச் சீண்டல். இந்த மார்பகங்கள் உனக்கு மட்டுமானதில்லை. வேறு ஒருவன் அதை சுவைத்திருக்கிறான் என உணர்த்துகிறாளா. அவளது உடலின் கவர்ச்சியை ரசித்தபடியே மெதுவாக சாப்பிடுவான்.

ஒருபோதும் உணவு வேளையில் அவள் பேசியதேயில்லை. அந்த வீட்டில் அவர்கள் இருவரையும் தவிர ஒரு பூனையும் உடனிருந்தது. அந்தப் பூனையை அவள்தான் வளர்த்து வந்தாள். அதுவும் அவளைப் போலவே மௌனமாக திருட்டுப்பார்வையுடன் சமையல் அறையில் சுற்றிக்கொண்டிருந்தது.

அவளைவிடவும் அந்தப் பூனையை தர்மேயு வெறுத்தான். அதை முதலில் கொல்ல வேண்டும் என நினைத்தான். ஒரு நாளிரவு அந்தப் பூனைக்குக் கிண்ணத்தில் பாலை வைத்துவிட்டு அழைத்தான், அது வேகமாக வந்து பாலை நக்கி நக்கிக் குடித்தது, இடையிடையே அவனை ஏறிட்டுப் பார்த்துக்கொண்டது. பாலைக் குடித்து முடித்தவுடன் தனது நீண்டவாளால் அதை இரண்டு துண்டாக வெட்டினான். பூனையின் தலையை வெள்ளித்தட்டில் வைத்து மூடியிட்டு அவனது மனைவியின் அறையில் கொண்டுபோய் வைத்தான். தனது ஆசைப்பூனையைத் தேடிக் காணாமல் சலித்துப் போன மனைவி தன் அறைக்கு வந்தபோது மூடிவைக்கபட்ட வெள்ளித்தட்டைக் கண்டாள். அதைத் திறந்த போது உள்ளே பூனையின் தலை, ரத்தம் உறைந்து போயிருந்தது. அவள் அதைக் கண்டு அலறினாள். வாய்விட்டுக் கதறி அழுதாள். அவளது அழுகைக் குரலைக் கேட்டபடியே தர்மேயு படுத்துக்கிடந்தான்.

சில நாட்கள் வணிகத்திற்காக வெளியூர் செல்வதுபோல அறிவித்து விட்டு அவனது வீட்டை அவனே ஒளிந்து உளவுபார்த்தான். தன் வீட்டைத் தானே நோட்டம் பார்ப்பது வேடிக்கையாக இருந்தது. அவள் வெளியே போகவேயில்லை. அவளைத் தேடி யாரும் வரவும் இல்லை. ஆனால், அவளுக்கு ஒரு காதலன் இருக்கிறான். அது நிச்சயம். அவன் எப்போது வருகிறான்? எங்கே சந்திக்கிறார்கள்? எதையும் அவன் அறிந்துகொள்ள முடியவில்லை.

பின்பு ஒருநாள் அவனைக் கண்டுபிடித்தான். பால் கறக்க வருபவன் தான் அவளது கள்ளக்காதலன். பொழுது புலர்வதற்கு முந்திய இருளில் அவன் வந்துவிட்டு இருள் கலைவதற்குள் வெளியேறிவிடுகிறான். அவர்கள் இருவரும் மாட்டுத்தொழுவத்தில் சல்லாபம் செய்கிறார்கள். இந்த மாளிகை, மெத்தை தராத சுகத்தை வைக்கோல் போரும் பால்கார

இளைஞனும் அவளுக்குத் தந்து கொண்டிருந்தான்.

ஒரு நாள் பின்னிரவில் அந்த இளைஞன் தொழுவத்திற்குள் நுழைவதைக் கண்டான், அவன் பின்னாலே தர்மேயுவின் மனைவியும் தொடர்ந்து சென்றாள். சில நிமிடங்களுக்குப் பிறகு தர்மேயு அங்கே சென்றான்.

உடைகளின்றி தனது அகலமான தொடைகளை உயர்த்தியபடியே அவள் இன்பத்தில் ஊளையிட்டுக் கொண்டிருந்தை ஒளிந்திருந்துப் பார்த்தான். உயர்த்திய கால்களையும் அந்த பாதவளைவுகளையும் அப்போதுதான் முதன்முதலாகப் பார்ப்பது போலிருந்தது. பறவையின் சிறகைப் போல அந்தப் பாதங்கள் அசைந்துகொண்டிருந்தன. அவள் புணர்ச்சிவேகத்தில் அரற்றிக்கொண்டிருந்தாள். கருத்த ஆணின் உடல் தண்ணீரில் படகு செல்வதுபோல அவள் மீது ஊர்ந்து கொண்டிருந்தது. இருட்டில் நின்றிருந்த மாடுகள் அவர்களின் கலவிக்கூச்சலைக் கேட்டு தலையை அசைத்துக்கொண்டிருந்தன. விடிகாலையின் மென்வெளிச்சம் பரவத்துவங்கியபோது அவன் வெளியேறிப் போய்க்கொண்டிருந்தான். அவள் எதுவும் நடக்காதவள் போல கூந்தலை விரித்தபடி கால்களை ஒடுக்கிக்கொண்டு நடந்து வீட்டிற்குள் போனாள்.

தர்மேயு அப்போதே அவளைக் கொல்ல விரும்பினான். ஆனால், அப்படிக் கொல்லக்கூடாது. அந்தக் காதலனை கலவி நேரத்தில் பிடிக்க வேண்டும். அவனைக் கெஞ்ச வைக்க வேண்டும். பின்பு தண்டிக்க வேண்டும் எனத் தோன்றியது. நாய்கள் புணரும்போது இப்படி மாட்டிக் கொண்டு அவஸ்தைப்படுவதைக் கண்டிருக்கிறான். நாய்களுக்கு எதற்கு புணர்ச்சி என்பதுபோல மனிதர்கள் அதைக் கல்லால் அடித்து வதைப்பார்கள். சில நேரம் கட்டையால் அடித்துப் பிரித்துவிடுவார்கள். குறியில் ரத்தம் ஒழுக நாய் தெறித்து ஓடும். அப்படி அவர்களை அடித்து உதைக்க வேண்டும் என ஆசை கொண்டிருந்தான்.

அந்த நாளிற்காக அவன் காத்துக்கொண்டேயிருந்தான். ஒரு சந்தர்ப்பம் வந்தது, அதேபோல காதலனுடன் அவள் உடலுறவு கொண்டிருந்தபோது தர்மேயு மாட்டுத் தொழுவத்திற்குள் எரியும் பந்தத்தோடு போனான். வெளிச்சத்தைக் கண்டு அவள் எழுந்துகொள்ள முற்பட்டபோது தர்மேயு அவனிடம் ‘உன் ஆசையைப் பூர்த்தி செய்துகொள்’ என்றான். அந்த ஆள் என்ன செய்வது என அறியாமல் நிர்வாணமாக எழுந்து நின்று வணங்கினான். பின்பு தனது குற்றத்தை உணர்ந்தவன் போல மண்டியிட்டான்.

ஆனால், தர்மேயுவின் மனைவி நிர்வாணமாக எழுந்து நின்றபடியே அவர்களை வெறித்துப்பார்த்துக்கொண்டிருந்தாள். அவளது கள்ளக் காதலன், தன்னை மன்னித்துவிடும்படியாக தர்மேயுவின் காலைப் பிடித்துக்கொண்டு அழுதான். ஆண் அழும்போது ஆத்திரம்தான் உருவாகிறது. அவன் தலைமயிரை இழுத்துப்பிடித்தான் தர்மேயு.

அவன் தன் முன்பாகவே நிற்கும் அவளிடம், “தேவசேனா, நீயாவது சொல்லேன்” என்றான்.

அது தர்மேயுவிற்கு மேலும் கோபத்தை உருவாக்கியது.

தன் மனைவியை இவ்வளவு உரிமையாக ஒருவன் பெயரைச் சொல்லி அழைப்பதை அவனால் தாங்கிக்கொள்ளமுடியவில்லை.

அவன் கத்தியை உருவி, கொல்ல முற்பட்டான். திடீரென அவனைத் தனது கையால் நெரித்துக் கொல்ல வேண்டும். ஆயுதங்களின் தொடுதலைவிட கைகளால் அவனைப் பழிதீர்த்துக் கொள்ள வேண்டும் என நினைத்தான். கத்தியை நழுவவிட்டு அவனது கழுத்தை இறுக்கிப் பிடித்து நெரிக்கத் துவங்கினான். அவனது மனைவி இடையில் குறுக்கிட்டு தடுக்கவேயில்லை. அவன் காதலனை கழுத்தை நெரித்துக் கொன்றபோது, அவள் இறந்துகிடந்தவனைத் தொட்டுத்தூக்கி, தழுவியபடியே அழுதாள்.

அவளையும் கொல்ல வேண்டும் என தர்மேயுவிற்கு ஆத்திரமாக வந்தது. ஆனால், அவன் கைகள் பலமற்றதாக சோர்ந்து

போயிருந்தன.

உண்மையில் தர்மேயு அழுதான். தன் மனைவி இன்னொரு ஆணின் உடலைத் தொட்டு அழுவதைக் கண்டது அவனுக்குப் பெருந்துக்கத்தை ஏற்படுத்தியது. இறந்த உடலை ஒரு கயிற்றில் கட்டி இழுத்தபடியே அவன் வீதியில் நடந்து போனான். பயமும் திகைப்புமாக மக்கள் வேடிக்கை பார்த்தார்கள். குற்றத்திற்கான விசாரணைக்கு அழைக்கும்வரை அவன் காலாவில் தங்கியிருக்கும்படி அனுப்பி வைக்கப்பட்டான்.

இங்கே வந்த நாள் முதல் அவன் தனது வலக்கையைத் திட்டிக் கொண்டேயிருந்தான்.

காரணம் அதுதான் அவளை அணைத்தது. அந்தக் கைதான் அவளைப் பற்றியது. அந்தக் கைதான் காதலனைக் கொன்றது. கைகள் ஏன் ஆயுதமாக உருமாறின.

திடீரென அவனுக்கு வலதுகையைப் பிடிக்காமல் போனது. அதைத் திட்டிக்கொண்டேயிருந்தான்.

வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியக்கூடாது என்கிறார்கள். இடது கைக்குத் தெரியாமல் வலது கை என்னவெல்லாம் செய்கிறது தெரியுமா. வலது கைக்குக் கிடைக்கும் மரியாதை ஏன் இடது கைக்குக் கிடைப்பதில்லை, இடதை ஏன் எப்போதுமே நாம் அற்பமாகக் கருதுகிறோம்.

வலது கை சூதாடுகிறது, வலது கை ஆளை அடிக்கிறது, கள்ளத் தனமாக பணத்தை வாங்குகிறது. ஆனாலும் வலது கை புனிதமானது.

மனிதனுக்கு எதற்கு இரண்டு கைகள். ஒரே உடலில் இருந்தாலும் இடதுகையும் வலது கையும் ஒன்றில்லை. இடதுகை புறக்கணிக்கப்பட்ட ஒன்றே. இப்படி அவன் தனது வலது கைகைத் திட்டிக் கொண்டேயிருந்தான். யாரும் அதைப் பொருட்படுத்தவே யில்லை.

•••

தர்மேயுவைப் போலின்றி காலாவிற்கு வந்த நாள் முதல் அங்குள்ள வர்களை சிரிக்க வைத்துக்கொண்டேயிருந்தான் பில்வன்.

அவன் சந்தையில் கோமாளியைப் போல வேஷம் அணிந்து கொண்டு வேடிக்கைப் பாடல்களைப் பாடுகின்றவன்.

அவனால் கேலி செய்யப்படாத மனிதர்களே இந்த உலகில் இல்லை. கடவுள் உள்பட எல்லோரையும் கேலி செய்து அவன் பாடுவான். கதைகள் சொல்வான். அவனது வேடிக்கைப் பாடல்களைக் கேட்பதற்கு மக்கள் ஒன்றுகூடுவார்கள். உரத்த குரலில் அவன் பாடுவான். சில நேரம் அவன் ஏணி ஒன்றைக் கொண்டுவந்து போட்டு அதன் மீது ஏறி நின்றுகொண்டு பாட்டு பாடுவான். எதற்காக ஏணி என்று கேட்டால், தான் மற்றவர்களை விட உசந்தவன் என்பதை அடையாளம் காட்டுவதற்காக என்பான்.

அவனது கேலி வணிகர்களையும் மந்திரிகளையும் கோபப்படுத்தியது. ஒருநாள் அவன் சந்தைத் திடலில் ஏணியில் நின்றபடியே பாடிக் கொண்டிருந்தபோது கீழே இருந்து ஒருவன்.

“பில்வா, இரண்டு தலை அரசனைப் பற்றிய பாடலைப் பாடு” என சப்தமிட்டான், அதைக் கேட்ட பில்வன் சப்தமாக அந்தக் கதையை உற்சாகமாகச் சொல்ல ஆரம்பித்தான்.

தன் முதுகைத் தானே பார்த்துக்கொள்ள முடியாத மனிதர்கள் வாழும் உலகில் இரண்டு தலைகள் கொண்ட ஒரு அரசன் வாழ்ந்து வந்தான். அவனது ஒரு தலை பின்னால் பார்த்துக்கொண்டிருந்தது. இன்னொரு தலை முன்னால் பார்த்துக்கொண்டிருந்தது. ஆகவே அவன் தான் மற்றவர்களைவிட மேலானவன் என நம்பிக்கொண்டான். முன்னால் பார்க்கும் தலையின் பேச்சைக் கேட்பதா இல்லை பின்னால் பார்க்கும் தலையின் பேச்சைக் கேட்பதா என அவன் உடல் குழம்பிப் போயிருந்தது.

ஒருநாள் அவன் முன்னால் இருக்கும் தலையிடம் “உனக்கு யார் எதிரி?” எனக் கேட்டான்.

அது “பின்னால் உள்ள தலை” என்றது.

இதுபோலவே பின்னால் உள்ள தலையிடம் கேட்டான். அது “முன்னால் உள்ள தலை” என்றது.

இரண்டு தலைகளுக்கும் நியாயம் செய்ய ஆசைப்பட்ட அரசன் தன்

இரண்டு தலைகளையும் வெட்டி எடுத்துவிட்டான். நீதியை நிலைநாட்டிவிட்டான். பாவம் அவன் உயிர் மட்டும் போய்விட்டது. பிணத்திற்கு எதற்கு தலை. முண்டமாகவே அவனைப் புதைத்து விட்டார்கள்.

அதைக்கேட்டு காலாவில் இருந்தவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள். அவன் எல்லோரும் போன பிறகு தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

குற்றத்தின் நிழலில் வாழும்போது சிரிப்பது ஒன்றுதான் ஆறுதலானது.

நிழல்கள் பேசுவதில்லை

உடைகள் களையப்பட்ட அஜ்யா தலைகீழாகத் தொங்கவிடப்பட்டிருந்தாள். ரத்தம் அவளது உச்சிநோக்கி இறங்கி அழுத்திக் கொண்டிருந்தது. பின்னிரவில் அவள் சிறைக்கூடத்திலிருந்து அழைத்துவரப்பட்டாள். அந்த அறையில் தாவூத் கான் மட்டுமேயிருந்தான். அவன் தனது குறுந்தாடியைத் தடவியபடியே அவளுக்கு வணக்கம் செய்தான். அஜ்யாவும் அவனை வணங்கினாள்.

அவன் பரிகாசமான குரலில் சொன்னான்.

“உங்களுக்கு என் தாயின் வயது இருக்கும் என நினைக்கிறேன்.”

அவள் பதில் சொல்லாமல் தலை கவிழ்ந்திருந்தாள்.

“என் தாய் திருட்டுவேலைகள் எதையும் செய்ததில்லை. அரசனுடன் அந்தரங்கமாகப் பழகி வேண்டியதை அபகரித்ததில்லை. ஏமாற்றியதில்லை.”

அவள் பதில் சொல்ல வாய் எடுத்தாள். ஆனால், பேசிப்பயனில்லை என்பது போல அவனை முறைத்தபடியே நின்றிருந்தாள்.

“அஜ்யா, பாதுஷா உன்னிடம் கொடுத்த பொருட்களை எங்கே வைத்திருக்கிறாய்?”

“யாரிடம் சேர வேண்டுமோ அவர்களிடம் சேர்க்கப்பட்டு விட்டது.”

“அது யாருக்கு அனுப்பி வைக்கப்பட்டது, அதில் என்ன இருந்தது?”

“எனக்குத் தெரியாது.”

“பொய். உனக்குத் தெரியும். நீதானே அவற்றைக் கொண்டு சென்றாய்.”

“அது அரச கட்டளை.”

“வைர வைடூரியங்களை ரகசியமாக ஒரு இடத்தில் புதைத்து வைத்துவிட்டு அந்த இடத்தை ஒரு ஆட்டுத்தோலில் வரைபடமாக வரைந்து உன்னிடம் பாதுஷா கொடுத்து அனுப்பிவிட்டார் என்கிறார்களே. அந்த ஆட்டுத்தோல் எங்கேயிருக்கிறது?”

“நான் கொண்டு சென்ற பொருள் அதைவிடவும் உயர்வானது.”

“என்ன பொருள். அது இப்போது எங்கேயிருக்கிறது?”

“நீ என்னை எவ்வளவு சித்ரவதை செய்தாலும் அதைத் தெரிந்து கொள்ளமுடியாது.”

“உன்னை எப்படிப் பேச வைக்க வேண்டும் என எனக்குத் தெரியும் அஜ்யா.”

“தண்டனைகளைக் கண்டு நான் பயப்படப் போவதில்லை. வலி எனக்குப் புதியதில்லை.”

“அஜ்யா, உன்னைக் கொல்வது எனது விருப்பமில்லை. அதுதான் கட்டளை என்றால் சிறைச்சாலையிலே உனது சிரம் துண்டிக்கப்பட்டிருக்கும். எனக்கு சில உண்மைகள் தெரிய வேண்டும்.”

“அது பாதுஷாவிற்கு மட்டுமே தெரியும்.”

“இல்லை உனக்கும் தெரியும், நீதானே பாதுஷாவின் நிழல்.”

“நிழல்கள் ஒருபோதும் பேசுவதில்லை.”

“ஆனால், என்னால் நிழலைப் பேச வைக்க முடியும்.”

அவள் பதில் பேசவில்லை. தாவுத்கான் காவலர்களில் ஒருவனை ஏவிவிட்டு அவள் முதுகில் பிடிநீண்ட கொறாடால் ரத்தம் வர கிழித்தான். அவள் வலி தாங்கமுடியாமல் கதறினாள். அவளது தொடைகளில் இரும்புக் கோல் கொண்டு சூடு வைத்தான். நகங்களை இரும்புக் குறடு கொண்டு பிடுங்கினான். அவளது மிருவான மார்பகங்களை முள்பற்கள் கொண்ட இடுக்கியால் கவ்வி இழுத்து நாய் கடிப்பது போலக் குதறினான். அவள் அலறினாள். துடித்தாள். தாவுத்கான், “உண்மையைச் சொல், எங்கே அந்த ஆட்டுத்தோல்?” எனக் கத்திக் கொண்டிருந்தான்.

அவளது தலைமயிர் நீண்டு விரிந்து கிடந்தது. எரிந்து கொண்டிருந்த பந்தம் ஒன்றைப் பிடுங்கி அவளது தலைமயிரினுள் செருகினான். மயிர் கருகும்வாசனை. பிடறியில் நெருப்பு சுடும் போது தாங்கமுடியாத வலி. அவன் அந்த அலறலைத் தாண்டி எங்கே ஆட்டுத்தோல் எனக் கேட்டுக்கொண்டிருந்தான். அஜ்யா மயங்கி விழுந்தாள். அவள் மீது மர வாளியிலிருந்த தண்ணீரை எடுத்து ஊற்றித் தெளிய வைத்தார்கள். அவளுக்கு தாகம் அதிகமாயிருந்தது. ஆனால், தண்ணீர் கேட்கவில்லை. நெருப்பை அஜ்யாவின் கண்களில் வைத்து அழுத்தினான். அவளது கண் பொசுங்கிப்போவது போலிருந்தது. அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. தன் அம்மாவை நினைத்துக்கொண்டு அழுதாள். தாவுத்கான் அவள் பதில் சொல்ல மறுத்து வீம்பு பிடிப்பதைத் தாங்கமுடியாமல் நீள ஊசிகள் இரண்டை தாடையில் தொங்கிய சதையினுள் செருகினான். அவளால் கத்தவும் முடியவில்லை. அவள் நாக்கு வெளியே தள்ளுவது போலிருந்தது. காலை வெளிச்சம் சிறை ஜன்னலில் படும்வரை அவர்கள் சித்ரவதை செய்தார்கள். இளவரசன் முகமது ஆஜம் சித்ரவதை செய்யும் கூடத்திற்கு வந்திருந்தான். மயங்கிக் கிடந்த அவளைக் கண்டு ஏமாற்றம் கொண்டவனைப்போல கேட்டான்,

“கிழட்டு நாய் இறந்து போய்விட்டாளா?”

“இல்லை இளவரசே, உண்மையைச் சொல்ல மறுக்கிறாள்.”

“ஆட்டுத்தோலை ஒருவன் சத்கருக்குக் கொண்டுபோய் விட்டதாக ஒற்றர்கள் சொல்கிறார்கள், உடனடியாக சத்கருக்கு ஆள் அனுப்பித் தேடுங்கள். சந்தேகப்படும் எவரையும் கைது செய்யுங்கள். எனக்கு அந்தப் பொக்கிஷங்கள் வேண்டும்.”

“இளரவசே இவளைக் கொன்றுவிடலாமா?”

“வேண்டாம். இவள் என்னைத் தூக்கி வளர்த்திருக்கிறாள். சிறையில் கொஞ்ச காலம் வைத்திரு. நான் பதவி ஏற்கும் நாளில் இவளைத் தூக்கிலேற்றிவிடலாம்.”

அஜ்யா மயங்கிய நிலையில் இளவரசனின் குரலை கேட்டுக் கொண்டிருந்தாள். இன்னும் சில நாட்கள் தான் உயிர்வாழ அனுமதிக்கப் பட்டிருக்கிறோம். அல்லாவின் கருணை தன்னைப் பிழைக்க வைத்திருக்கிறது என மனதிற்குள் நன்றி கூறிக்கொண்டாள். காவலர்கள் அவளை மீண்டும் சிறைக்கு இழுத்துக்கொண்டு போனார்கள். உடலில் இருந்து ரத்தம் வழியெல்லாம் சொட்டிக்கொண்டே வந்தது.

சந்தையில் குழப்பம்

தூமகேதுவைக் கைது செய்ய வந்த காவலர்களில் ஒருவனான நிசாரன் அன்றைய காலையில் வீட்டிலிருந்து கிளம்பும்போது ஒரு தானிய வணிகன் அவனது வீட்டுவாசலில் வந்து நின்று கோதுமை மூட்டைகள் ஏற்றிவந்த தனது பார வண்டியைக் கொள்ளையடித்துப் போய்விட்டார்கள் என முறையிட்டான்.

எரிச்சலான நிசாரன் “எந்த இடத்தில்?” என்று கேட்டான்.

“சௌபட் மண்டபத்தின் அருகில்” எனப் புலம்பினான் வணிகன்.

கடந்த சில மாதங்களாகவே நகரில் இதுபோல பகிரங்கமாக தானியக்கொள்ளைகளும் கோதுமை மாவு திருடுவதும் நடந்து வந்தது. காரணம் நாடு முழுவதும் வேலையின்மை அதிகரித்துப் போனதுடன் சந்தையில் பொருட்களின் விலை மிக அதிகமாகிப்போனது. சாமானிய மக்கள் சந்தையில் எதையும் வாங்கமுடியாமல் திண்டாடினார்கள். சிலர் ஆவேசத்தில் கடைக்காரர்களுடன் கூச்சலிட்டார்கள். வணிகர்கள் எவரும் கோபப்படவில்லை. அரசின் உத்தரவு இது எனச் சொல்லிச் சிரித்தார்கள்.

சந்தையில் ஏற்பட்ட புதுக் குழப்பமே இந்தக் கொந்தளிப்பிற்கான காரணம். இதுவும் மன்னன் பிஷாடனின் புத்திசாலித்தனமான முடிவால் உருவானதே.

சந்தையில் பொருட்களின் விலை கட்டுப்படுத்தமுடியாமல் ஏறிக்கொண்டேயிருக்கிறது. வணிகர்களின் பேராசையும் சூழ்ச்சியும்தான் இதற்கு காரணம். வெங்காயத்தின் விலை தங்கத்தின் விலை போலாகி விட்டது. தேங்காயைக் கண்ணால் பார்க்க மட்டுமே முடிகிறது. அரிசியும் பருப்பும் கோதுமையும் பத்துமடங்கு விலை அதிகமாகி விட்டது. விலையேற்றத்தைத் தாங்கிக்கொள்ள முடியாத மக்கள் ஒரு வணிகனை உயிரோடு வைத்து எரித்துவிட்டார்கள் என்று மந்திரி சஞ்சயன் பிஷாடனிடம் முறையிட்ட போது இதற்கு என்ன தீர்வு?” எனக் கேட்டான் பிஷாடன்.

“அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை அரசே நிர்ணயம் செய்துவிட வேண்டியதுதான் ஒரே வழி’’ என்றார் மந்திரி சஞ்சயன்.

“வெண்டைக்காய், வெங்காயத்தைப் பற்றிக் கவலைப்படுவதா அரசின் வேலை. விலை வைப்பது வணிகர்களின் உரிமை. அதில் நாம் தலையிடக்கூடாது’’ என்றான் பிஷாடன்.

“இப்படியே நிலைமை வளர்ந்துகொண்டு போனால் அது சத்கரில் பெருங்கலகமாக உருமாறிவிடும்’’ என்றார் சஞ்சயன்.

“அரசனின் முதற்பணி வணிகர்களைப் பேணுவதே. எந்த அரசனும்

வணிகர்களிடம் விரோதம் காட்டமாட்டான். அரசனின் இருக்கை ஆட்டம் காணாமல் வைத்திருப்பது வணிகர்களின் அன்பும் ஆதரவும் தான் என சாஸ்திரங்கள் சொல்கிறதே அதை அறியவில்லையா சஞ்சயா'' எனக் கேட்டார் பிஷாடன்.

"உண்மைதான் மன்னா. ஆனால், விலை ஏற்றத்தைத் தடுக்கா விட்டால் நாடு பெரும் அபாயத்தை சந்திக்க வேண்டியது வரும். செல்வத்தில் கொழுத்த வணிகர்கள் தங்களையே சக்கரவர்த்தியாக நினைத்துக்கொண்டுவிடுவார்கள்'' என பதில் தந்தார் சஞ்சயன்.

"அதுவும் உண்மை. வணிகர்கள் விசிறியைப் போன்றவர்கள். கையடக்கமாக வைத்துக்கொள்ள வேண்டும். பெரிதாகிவிட்டால் பயன்படுத்தமுடியாது. மிகவும் சிறியதாக இருந்தால் பிரயோசனமில்லை'' என்றார் பிஷாடனின் தாய்மாமன் முத்கலன்.

"சரியாகச் சொன்னீர்கள் மாமா. ஒரு நாட்டின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் வணிகர்களின் முடிவில்தானிருக்கிறது என்பதை நான் அறிவேன். எனது தேசத்து வணிகர்கள் நன்றிமிக்கவர்கள், அவர்களுக்காக எத்தனையோ சலுகைகளை நான் அளித்திருக்கிறேன்."

"உண்மைதான் பிஷாடா. ஆனால், இன்று வணிகர்கள் உன்னை நம்பியில்லை. தண்ணீரும் வணிகர்களும் சேரும் இடத்திற்கு ஏற்ப மாறிவிடக்கூடியவர்கள். நாம்தான் ஜாக்கிரதையாகக் கையாள வேண்டும்'' என்றார் முத்கலன்.

"இதற்கு என்ன மாமா தீர்வு'' எனக் கேட்டான் பிஷாடன்.

"உனது புத்திசாலிதனத்தை நான் அறிவேன். உன்னால் இதை எளிதாகத் தீர்த்துவிட முடியும் பிஷாடா'' என அவனைப் புகழ்ந்து பேசினார் முத்கலன்.

"எனது புத்திசாலிதனத்தை நான் அறிவேன். ஒருவன் தனது புத்திசாலித்தனத்தை மற்றவர் புகழ்வதைக் கேட்கும்போது அடையும் இன்பத்திற்கு ஈடே கிடையாது மாமா'' என்றான் பிஷாடன்.

"எவ்வளவு புத்திசாலித்தனமாகப் பேசுகிறாய்'' என வியந்தார் முத்கலன்.

இந்தப் புகழ்ச்சியுரைகளைக் கேட்டு எரிச்சல் அடைந்தவராக சஞ்சயன் சொன்னார்.

"அத்தியாவசியப் பொருட்களை நாமே நேரடியாக விலைக்கு வாங்கி விற்பனை செய்யலாம் அரசே."

"அரசன் வணிகம் செய்யக்கூடாது. அது ராஜவிரோதம். எனக்கொரு நல்ல யோசனை மனதில் தோன்றுகிறது. எனது பாட்டன் முப்பாட்டன் காலத்தில் இருந்தே சேர், படி, துலா என எடைக்கணக்குகள் ஒன்றுபோலவே இருக்கின்றன. அதுதான் பிரச்சினைக்கு காரணம்.

அதை மாற்றிவிட வேண்டியது தானே. ஒரு படி என்பதை இனிமேல் பத்துப்படிகள் என அழைக்க வேண்டும். அது போலவே பத்துப்படிகள் என்பதை நூறு படிகள் என்றும் மாற்றிவிட்டால் ஒருவன் ஒரு படி கோதுமை வாங்குகிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். இந்தப் புதிய மாற்றத்தால் அவனுக்குப் பத்துப்படிகள் கோதுமை அல்லவா கிடைக்கும்'' எனச் சிரித்தான் பிஷாடன்.

"பத்துப்படிகள் கிடைக்காது அரசே, ஒரு படியை அவன் பத்துப்படி என எண்ணிக்கொள்ள வேண்டியது வரும்."

"நினைக்கட்டுமே. நிறைய பொருட்கள் வாங்கிவிட்டதாக மக்கள் நினைத்தால் போதுமே. பிரச்சினை தீர்ந்துவிடுமே. இதனால் வியாபாரிகளும் ஏமாற்றம் அடையமாட்டார்கள், மக்களுக்கும் சந்தோஷம் உண்டாகும்."

"இது புதிய பிரச்சினைகளை உண்டாக்கிவிடும். எடைக் கணக்குகள் நிரந்தரமானவை, அவற்றை மாற்றுவது எளிதானதில்லை."

"இது எனது தேசம், இங்கே ஒரு படிக்கல்லின் மதிப்பைக்கூட என்னால் மாற்ற முடியவில்லை என்றால் எதற்காக நான் மன்னராக இருக்க வேண்டும். சொல்லுங்கள் மந்திரி'' எனக் கோபம் அடைந்தான் பிஷாடன்.

சஞ்சயன் செய்வதறியாமல் நின்றபோது முத்கலன் சொன்னார்,

"புதிய முடிவுகள் எப்போதும் எதிர்ப்பை சந்திக்கவே செய்யும். ஆனால், நாளடைவில் ஏற்றுக்கொண்டுவிடும். எதிர்காலத் தலைமுறை பிஷாடனின் அறிவாற்றலை கண்டுவியக்கப் போகிறது."

"இன்று முதல் புதிய எடைக்கணக்கு நடைமுறைப்படுத்த வேண்டும் என அறிவித்துவிடுங்கள்" என்றார் பிஷாடன்.

அன்று மாலைக்குள் நாடு முழுவதும் புதிய எடைக்கணக்கு அறிமுகமானது. சந்தை வணிகர்கள் மிகுந்த சந்தோஷம் அடைந்தார்கள். மன்னரின் நலத்திற்காகவும் நாட்டின் வளத்திற்காகவும் அவர்கள் ஒன்றுகூடிக் குடித்தார்கள். ஆனால், ஏழை எளியவர்களும் கூலிகளும் அடிமைகளும் இது ஒரு மோசடி. ஒரு படி கோதுமையை எப்படி பத்துப் படி கோதுமை என அழைப்பது எனப் புலம்பினார்கள். ஆனால், யாரால் இந்த மாற்றத்தைத் தடுத்து நிறுத்த முடியும்.

சில நாட்களில் புதிய எடைக்கணக்குகளை மக்கள் ஏற்றுக் கொண்டு விட்டார்கள்.

ஆனால், எடைக்கணக்கு மாற்றப்பட்டால் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியவில்லை. பசியால் துடித்த மக்கள் பொது இடங்களில் புகுந்து திருடத் துவங்கினார்கள். தானியக்கடைகளை முற்றுகையிட்டு அள்ளிக் கொண்டு போக ஆரம்பித்திருந்தார்கள்.

இதனால் வணிகர்கள் அச்சமடைந்தார்கள். சிலர் சத்கரை விட்டு வேறு தேசத்திற்குப் போய்விடலாமா எனக்கூட யோசனை செய்தார்கள். வணிகர் கூட்டமைப்பினர் அரசனை சந்தித்து இந்த மாற்றத்தால் மக்கள் கொதிப்படைந்து போயிருப்பதை எடுத்துச் சொன்னார்கள்.

பிஷாடன் சிரித்தபடியே சொன்னான்.

“வேலையின்மைதான் இந்தப் பிரச்சினைகளுக்கு காரணம் என்றால் எனக்கு புதியதொரு யோசனை தோன்றுகிறது, ஒவ்வொரு வணிகனும் தனது பாதுகாப்பிற்காக பத்துப் பேருக்கு வேலை தரவேண்டும், அப்படியானால் நிறையப் பேருக்கு வேலை கிடைத்துவிடுமே, வேலையில்லாத பிரச்சினை பாதியாகக் குறைந்துவிடுமே.”

“பத்துப் பேருக்கு சம்பளம் தருவது என்பது வணிகர்களுக்குப் பெரிய சுமையாகிவிடும்” எனக் கதறினார்கள் வணிகர்கள்.

“சம்பளம் இல்லாமல் பாதுகாப்பு தருவதற்கு நாய்களை வைத்துக் கொண்டால் எப்படி? ஒரு வணிகன் பத்து நாய்களை வைத்துக் கொண்டால் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும்தானே.”

“அதுவும் நல்லயோசனைதான்’’ என்றான் ஒரு வணிகன்.

“நாய்கள் சம்பளம் கேட்காது, தானியங்களைக் கொள்ளையடித்துப் போகாது. எல்லாவற்றையும்விட அதற்கு குடும்பம் பிள்ளைகள் எதுவும் கிடையாது. எப்படி என் யோசனை” என்று சொல்லிச் சிரித்தான் பிஷாடன்.

“இத்தனை ஆயிரம் வணிகர்களுக்கும் ஆளுக்கு பத்து நாய் தேவை என்றால் எங்கே போவது” எனக்கேட்டான் ஒரு வணிகன்.

“வெளிநாட்டிலிருந்து நாம் நாய்களை வரவழைப்போம். நாடு முழுவதும் உள்ள நாய்களைப் பிடித்து வந்து விற்கச் செய்வோம். புதிய தொழில் ஒன்று துவங்கப்படும்தானே” என உற்சாகமாகச் சொன்னான் பிஷாடன்.

“ஆனால், பத்துநாய்களைப் பராமரிப்பதும் எளிதானதில்லை” என ஒரு வணிகன் தயங்கித் தயங்கிச் சொன்னான்.

“அப்படியானால் நீங்கள் உயிரை விட்டுவிடுங்கள். நல்ல யோசனைகள் எளிதாகத் தோன்றுவதில்லை. புத்திசாலிகளால் மட்டுமே இதை ஏற்றுக்கொள்ள முடியும். வணிகர்களில் எவரும் புத்திசாலிகள் இல்லையே” எனச் சொல்லிச் சிரித்தான் பிஷாடன்.

பிஷாடனின் யோசனைகளை ஏற்று நாய்களை பாதுகாப்பிற்கு வைத்துக்கொள்வது என வணிகர்கள் யாவரும் ஒருமித்து முடிவு செய்தார்கள். அடுத்த சில வாரங்களில் சத்கர் எங்கும் நாய்களைப் பிடித்துவந்து விற்கத் துவங்கினார்கள். இதனால் தெருநாய்கள், சொறிபிடித்த கிழட்டு நாய்கள் யாவும் பயந்து ஓடி ஒளிந்தன.

அவற்றைத் தேடிப்பிடித்து கயிறு போட்டுப் பிடித்து விற்பனை செய்வதை சிலர் தொழிலாகக் கொள்ளத்துவங்கினார்கள்.

தூமகேதுவின் வீட்டைச் சுற்றிக் கொண்டு திரிந்த கறுப்பு நாய் ஒன்றை கழுத்தில் கயிறு போட்டுப் பிடிக்க நாய் பிடிப்பவர்கள் முயலுவதை தூமகேதுவின் மனைவி நளா பார்த்துக் கொண்டிருந்தாள். கழுத்தில் விழுந்த கயிற்றை இழுத்துக்கொண்டு நாய் ஓடியது. ஒருவன் தன் கையில் இருந்த தடியால் அடித்து அதை விழச்செய்ய முயன்றான். நாய் திமிறியது. அதன் கழுத்தில் மாட்டியிருந்த கயிறு இறுகியதால் அது குரைக்கமுடியாமல் திணறியது.

நளா இதைக் கண்டு ஆத்திரம் தாங்க முடியாமல் நாய்பிடிப்பவர்கள் மீது கல்லை எடுத்து வீசியதுடன் அவர்களைத் தாக்க வாள் ஒன்றை எடுத்துக் கொண்டு ஓடினாள். ஒரு பெண் ஆவேசமாக தங்களை நோக்கி வருவதைக் கண்ட நாய்பிடிப்பவர்கள் கயிற்றைப் போட்டுவிட்டு ஓடினார்கள். நளா அந்த நாயின் கழுத்துக் கயிற்றை அவிழ்த்துவிட்டு நாயைத் தடவிக் கொடுத்தாள். நாயின் நாக்கு வேகமாகத் துடித்துக் கொண்டிருந்தது, அவள் நாயின் நெற்றியைத் தடவியபோது நாய் மூச்சுவாங்குவதை உணர்ந்தாள், அந்த நாயை தன் வீட்டிற்குள் அடைத்து வைத்துப் பாதுகாக்கத் துவங்கினாள்.

அதன்பிறகான நாளில் அந்த நாய் வீட்டை விட்டு வாசலுக்கு வருவதற்கே பயந்தது, அவள் மண்கலயத்தில் கொண்டுவந்த கஞ்சியைக் குடிப்பதற்குக்கூட தயங்கியது. தூமகேது தன் மனைவி எதற்காக ஒரு தெருநாயை வீட்டிற்குள் வைத்து பழங்கஞ்சி கொடுக்கிறாள் எனக் கோபித்துக்கொண்ட போது நளா ஆத்திரத்துடன் சொன்னாள்,

“பிஷாடனைப் போல முட்டாள் அரசாளும் ராஜ்ஜியத்தில் நாளை நீயும் இந்தத் தெருநாயைப் போலப் பிடித்துக்கொண்டு போகப்படுவாய், அப்போது உன்னையும் யாராவது இப்படிக் காப்பாற்றி ஒளித்து வைக்கத்தான் வேண்டும், இல்லாவிட்டால் உன்னையும் விலை வைத்து விற்றுவிடுவார்கள்.”

“என்னை யார் என்ன செய்துவிடப்போகிறார்கள், நாய்களுக்கு சந்தையில் நல்லவிலை கிடைக்கிறது, நாமே இதைக் கொண்டுபோய் விற்றுவிடலாமே’’ எனக் கேட்டான் தூமகேது.

“நல்ல விலை தருவார்கள் என்றால் என்னையும் விற்றுவிடுவாயா’’ எனக் கேட்டாள் நளா.

“பெண்களும் நாயும் ஒன்றா என்ன’’ எனக் கேட்டான் தூமகேது.

“அப்படித்தான் நீங்கள் நடத்துகிறீர்கள். இந்த நாயைக் காப்பாற்ற வேண்டியது நமது கடமை. நாயை ஒளித்து வைத்திருப்பதைப் பற்றி யாரிடமும் சொல்லிவிடாதே’’ என்றாள் நளா.

தூமகேது எரிச்சலான குரலில் சொன்னான்.

“பெண்கள் தேவையில்லாத பிரச்சினையை உண்டுபண்ணிக் கொள்ளக்கூடியவர்கள், இந்த நாய் நம்மை எங்கே கொண்டுபோய் விடும் எனத் தெரியவில்லை. அப்புறம் உன் இஷ்டம்.”

அந்த நாய் வீட்டிற்குள் சுருண்டேகிடந்தது. அதன் வால் மட்டும் அசைந்தபடியே இருந்தது. ஒருநாள் பார்வை மங்கிப்போய் கட்டிலில் சுருண்டுகிடந்த தூமகேதுவின் தந்தை தன் மருமகளிடம் கேட்டார்.

“நாய்களை ஏன் பிடித்துப் போகிறார்கள்?”

“ஒவ்வொரு வியாபாரியும் பத்து நாய் வைத்துக்கொள்ள வேண்டும் என ராஜா கட்டளை போட்டு இருக்கிறார், அதான் சந்தையில் நாய்களை விற்கிறார்கள்’’ என்றாள் நளா.

“ஒரு நாயின் விலை எவ்வளவு’’ எனக்கேட்டார் தூமகேதுவின் தந்தை.

“ஒரு வெள்ளி’’ என்றாள் நளா.

“நல்ல விலை. இந்த நாயை விற்றுவிட்டால் நாம்கூட கறிச்சோறு சமைத்து சாப்பிடலாமே. ஆட்டு ஈரல் ருசியாக இருக்கும், சாப்பிட்டு எத்தனையோ காலமாகிவிட்டது’’ என்றார் டோலு.

அதைக்கேட்டதும் ஆத்திரமான நளா சொன்னாள்.

“குருட்டு சைத்தானே. நாயை விற்கச் சொல்கிறாயே, ஈனமாக இல்லை.

நீ செத்துப்போன மறுநாள் கட்டாயம் ஆட்டு ஈரலை

சமைத்துப் படைக்கிறேன்.’’

தூமகேதுவின் தந்தை சொன்னார்.

“நாய்தானே. அதற்குப் போய் ஏன் என்னைக் கோபித்துக்கொள்கிறாய். அரிச்சந்திரன் தன் பொண்டாட்டியை விற்றிருக்கிறான்’’ நளா ஆவேசம் கொண்டவளைப் போல கத்தினாள்.

“அதனால்தான் அரிச்சந்திரன் பிணம் எரிக்கப் போனான், பொண்டாட்டியை விற்றவனுக்கு வேறு என்ன கதி கிடைக்கும். இந்த நாய்கூட எத்தனையோ தடவை எனக்காகக் குரைத்திருக்கிறது. நீ உயிரோடு இருந்து என்ன பிரயோசனம், ஒருநாள் நானே உன் கழுத்தை நெறித்துக் கொன்று போடுகிறேனா இல்லையா பார்.’’

அந்தக் குரலின் ஆவேசத்தை உணர்ந்தவன் போல டோலு திரும்பிப் படுத்துக்கொண்டார். இனி வாயைத் திறக்கமாட்டார்.

நளா பரிவோடு நாயின் தலையைத் தடவிவிட்டாள். அது மெதுவாக வாலை ஆட்டியது. அவள் நாயிடம் சொன்னாள்,

“கடவுள் பார்த்துக்கொண்டிருக்கிறார். அவரது தண்டனையிலிருந்து

எவரும் தப்பிக்க முடியாது.’’

புரிந்துகொண்டதைப் போல நாயின் காதுகள் அசைந்து கொண்டிருந்தன.

டச்சு வணிகன்

நகரில் வசித்த அத்தனை வணிகர்களுக்கும் தேவையான நாய்கள் கிடைக்காமல் போனதால் நாய் வாங்குவதற்குப் போட்டி உருவானது. வேறு தேசங்களில் இருந்து நாய்கள் விற்பதற்காக ஆட்கள் வரத்துவங்கினார்கள், நாய்கள் கிடைக்காத வணிகர்கள் கள்ளச்சந்தையில் அதிக விலை கொடுத்து வாங்கத் தயாராக இருந்தார்கள்.

புதியதொரு வணிகம் சத்கர் தேசத்தில் உருவாகி வருவதை அறிந்த ரெமியஸ் என்ற டச்சு வணிகன் ஒரு கப்பல் நிறைய நாய்களை ஏற்றிக்கொண்டு வணிகம் செய்வதற்காகப் புறப்பட்டான்.

வணிகச்சந்தையில் நாய்களை விற்பனைப் பொருளாக கொண்டுசெல்லும் முதல் கப்பலாக அது இருந்தது. ஒரு நாட்டில் இத்தனை நாய்கள் விலை கொடுத்து வாங்கப்படுகிறது என்றால் அந்த நாய்களுக்கான கழுத்துப்பட்டிகள், சங்கிலிகள், பெயர் பொறிக்கும் தகடு, நாய்களுக்கான விசேஷ உணவுப்பொருட்கள். அத்தனையும் தேவைப்படுமே என அதையும் தனது கப்பலில் பெட்டி பெட்டியாக ஏற்றிக்கொண்டு வந்துகொண்டிருந்தான்.

சத்கர் வணிகச் சந்தையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட நாட்டு நாய்கள் பளுப்புக் கண்களுடன் எச்சில் ஒழுகும் நாவும் கோரைப் பற்களுமாக வெறிகொண்டு நிற்பதைக் கண்ட மக்கள் கடைகளில் சாமான்கள் வாங்குவதற்கு பயந்தார்கள்.

வணிகர்கள் எந்த பயமும் இன்றி கடைகளில் அமர்ந்தபடி இனிமையான குரலில் வாடிக்கையாளர்களை அழைத்துக் கொண்டிருந்தார்கள். வேறுவேறு வகை நாய்களை பராமரிப்பது வணிகர்களுக்கு எளிதாக இல்லை.

அதற்கு அவர்கள் பணியாளர்களை நியமிக்க வேண்டியதிருந்தது. அதைவிடவும் தினமும் நான்கு பேராவது சந்தையில் நாய்க்கடி பட்டு ரத்தம் சொட்ட கதறி வீழ்ந்தார்கள். வெறிநாய் கடித்து இரண்டு சிறுவர்கள் செத்துப்போனதும் நடந்தேறியது. நாய்களைக் கொண்டுவந்தபிறகு சந்தையில் திருட்டுப் போவதோ, சண்டை சச்சரவுகளோ குறைந்து போய்விட்டது என்பதை அறிந்த சந்தோஷத்துடன் சொன்னான் பிஷாடன்.

“எளிதான தீர்வுகளை மக்கள் எப்போதும் சந்தேகத்துடன் தான் பார்ப்பார்கள். இந்த வெற்றி எனக்கு சந்தோஷம் தருகிறது. பிரச்சினைகளைக் கண்டுகொள்ளாமல் விடுவது நல்லாட்சியில்லை. அதற்கு புதியமுறையில் தீர்வு சொல்வதுதான் சிறந்த ஆட்சி.”

அதைக்கேட்டு பிஷாடனின் தாய்மாமன் சொன்னார்.

“உனது ஆட்சியின் புகழ் கடல் கடந்து போய்விட்டது பிஷாடா, அதனால் தான் கப்பல் நிறைய வெளிநாட்டு நாய்களுடன் ஒரு வணிகன் உன்னைக் காண வந்து காத்துக்கொண்டிருக்கிறான்.”

“நிஜமாகவா, கப்பலில் நாய்கள் வந்திருக்கிறதா'' என ஆசையாகக் கேட்டான் பிஷாடன்.

அன்று மாலை ரெமியஸை மன்னரின் சபைக்கு அழைத்து வந்தார்கள். ரெமியஸ் தன்னோடு துபாஷ் ஒருவனை அழைத்து வந்திருந்தான். அவன் ஒரு கறுப்பின அடிமை, ரெமியஸ் சபைக்கு வந்து மன்னருக்கு தான் கொண்டுவந்த பரிசுகளைக் கொடுத்தான், அதில் தொலைநோக்குகருவியும், வட்டக் கண்ணாடிகளும் சீனத்துப் பட்டும், அலங்காரவிளக்குகளும், வாசனைத் தைலங்களும் இருந்தன.

அத்தோடு பெரிய உலகஉருண்டை ஒன்றுமிருந்தது, அதைக்கண்ட பிஷாடன் வியப்புடன். “இது என்ன கோளம்'' எனக் கேட்டான்.

“இதுதான் உலகம்'' எனச் சொன்னான் ரெமியஸ்.

“உலகம் என்பது இவ்வளவுதானா'' என வியப்புடன் கேட்டான் பிஷாடன்.

“உலக வரைபடம் கொண்ட கோளம். எல்லா தேசங்களும் இதில் குறிக்கப்பட்டிருக்கின்றன.''

“எனது தேசம் இதில் எங்கேயிருக்கிறது'' எனக் கேட்டான் பிஷாடன்.

பிஷாடனை சந்தோஷப்படுத்துவதற்காகவே அதைத் தங்க எழுத்துகளில் பொறிக்கச்செய்து கொண்டுவந்திருந்தான் ரெமியஸ், ஆகவே பவ்வியமாக குனிந்து உலக உருண்டையில் உள்ள தங்க எழுத்தை சுட்டிக்காட்டிச் சொன்னான்,

“பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட்டுள்ளதுதான் உங்கள் தேசம்.''

“எனது தேசம் மட்டும் ஏன் பொன்னால் எழுதப்பட்டிருக்கிறது?''

“அந்தப் பெருமை உங்கள் ஒருவருக்கு மட்டுமே சொந்தமானது'' என்றான் ரெமியஸ்.

அதைக் கேட்டு மகிழ்ந்த பிஷாடன் சொன்னான், “எனது பெருமை கடல்கடந்த உங்களுக்குத் தெரிந்திருப்பது மிகுந்த சந்தோஷம் அளிக்கிறது. இவை எல்லாம் ஏன் பெயரிடப்படாமல் இருக்கின்றன'' எனக் கேட்டான் பிஷாடன்.

“அவை கடல்கள்'' என்றான் ரெமியஸ்.

“நிலத்தைவிட கடல்கள் பெரியதாக உள்ளதே.”

“உலகம் அப்படிப்பட்டதுதான் அரசே.”

“இந்தக் கடல்களில் ஒன்றுக்கு எனது பெயரை வைத்துவிட்டால்

உலகமே என்னை வியந்து பேசும் இல்லையா'' எனக் கேட்டான் பிஷாடன்.

என்ன பதில் சொல்வது எனப் புரியாத ரெமியஸ் உண்மைதான் எனத் தலையசைத்தான்.

"கடல்களுக்கு யார் பெயர் வைத்தவர், அது எந்த மன்னரின் உரிமை" என மறுபடியும் கேட்டான் பிஷாடன்.

"அது எவரது உரிமையுமில்லை, கடல்களுக்குப் பெயர் வைத்தவர்கள் யார் எனத் தெரியாது."

"அப்படியானால் நானே அந்த உரிமையை எடுத்துக் கொள்கிறேன். உலகின் பெரிய கடல்களில் ஒன்றுக்கு எனது பெயரை வைத்து விடுங்கள்."

"அப்படியே செய்துவிடலாம் அரசே" என்றான் ரெமியஸ்.

"இந்தச் செய்தியை நாடு முழுவதும் அறிவித்து கொண்டாட்டங்களுக்கு ஏற்பாடு செய்யுங்கள், இதுவரை எந்த அரசனும் செய்யாத செயலிது" என்றான் பிஷாடன்.

"இன்றே கொண்டாட்டங்களைத் துவக்கிவிடலாம்" என உற்சாகமாகச் சொன்னார் பிஷாடனின் தாய்மாமன் முத்கலன்.

"வெளிநாட்டிலிருந்து நாய்களைக் கொண்டுவந்துள்ளதாகக் கேள்விப் பட்டேன். அந்த நாய்கள் எப்படியிருக்கும்? அவற்றில் ஒன்றைக் கையோடு கொண்டுவந்திருக்கலாமே."

"நாய்களுடன் மன்னரை சந்திப்பது மரபானதில்லை அரசே" என்றான் ரெமியஸ்.

"மன்னர்கள் நாயைச் சந்திப்பது மரபிற்கு எதிரானதா'' என ஏளனமாகக் கேட்டான் பிஷாடன்.

"மரபை உருவாக்குபவர்களும் மீறுபவர்களும் அரசர்கள்தானே பிஷாடா'' எனச் சொல்லி சிரித்தார் முத்கலன்.

"அப்படியானால் நாம் உடனே நாய்களைக் காணுவதற்குப் புறப்படலாம்'' என்றான் பிஷாடன்.

"உங்களுக்காகவே இன்னும் இரண்டு பரிசுகளைக் கொண்டு வந்திருக்கிறேன். அவற்றையும் ஏற்றுக்கொள்ளவேண்டும்'' என்றான் ரெமியஸ்.

"குதிரைகளா?" எனக் கேட்டான் பிஷாடன்.

"இல்லை, விளையாட்டுப்பொருட்கள்."

"நான் ஒன்றும் சிறுவன் இல்லையே."

“உங்களுக்குப் பிடித்தமான விளையாட்டுப் பொருட்கள், பிடிக்க வில்லை என்றால் நானே திரும்ப எடுத்துக்கொண்டு விடுகிறேன்.”

“உடனே கொண்டுவரச் சொல்லுங்கள்’’ என உத்தரவு போட்டான் பிஷாடன்.

ரெமியஸ் தனது அடிமையை அனுப்பி வெளியே அனுப்பி வைத்தான். சில நிமிஷங்களுக்குப் பிறகு அடிமை முக்காடு இட்ட இரண்டு இளம்பெண்களை அழைத்துக்கொண்டு வந்தான்.

அந்தப் பெண்கள் பட்டால் உடையுடுத்தியிருந்தார்கள், வெண் பளிங்குச் சிலைகள் போன்ற உடல்வாகு. அவர்களிடமிருந்து கசியும் நறுமணம் பிஷாடனை ஈர்த்தது. நெருங்கிப் போனதும் அந்தப் பெண்கள் குனிந்து வணங்கினார்கள்.

அவர்கள் முக்காடுகளை விலக்கிப் பார்த்தான். செம்பட்டை நிறக் கூந்தல், நீலநிறக் கண்கள், பால் வெண்மையான முகம், மிளகாய்ப்பழம் போன்ற உதடுகள். கிச்சலிப் பழம்போல பருத்த ஸ்தனங்கள், அதன் கனம் தாங்காமல் ஒடிந்துவிடுவது போன்ற மெல்லிடை, கிறக்கமூட்டும் நறுமணம் கமழும் உடல்.

அந்தப் பெண்களில் ஒருத்தியின் விரலைத் தொட்டுத் தடவினான் பிஷாடன். குளிர்ந்த தண்ணீருக்குள் கையை நுழைத்தது போலிருந்தது.

பிஷாடனின் கிறக்கத்தை அறிந்து கொண்டவனைப் போல ரெமியஸ் சொன்னான்,

“இவள் அடிலா, அவள் அமந்தா.’’

“பெயர்களே வாசனையாக இருக்கிறது’’ என்றான் பிஷாடன்.

“இவை எனது எளிய பரிசுகள். மேன்மைதாங்கிய மன்னருக்கு இந்த விளையாட்டுப் பொருட்கள் பிடித்திருக்கிறதா?”

“உடனே இவற்றோடு விளையாடவேண்டும் போலிருக்கிறது. ஆனால், நான் மனிதர்களை விடவும் விலங்குகளை அதிகம் நேசிப்பவன். என்னிடம் பேசும் குரங்குகூட இருக்கிறது. அதுதான் எனது தோழன். இந்தப் பெண்களை அந்தப்புரத்திற்கு அனுப்பிவிடுங்கள், நாம் நாய்களைப் போய்ப் பார்த்துவரலாம், நாய்கள் எங்கேயிருக்கின்றன?”

“தனி மாளிகையில்’’ என்றான் ரெமியஸ்.

பிஷாடன் தனது பரிவாரங்களுடன் தனி மாளிகையில் உள்ள நாய்களைக் காணப் புறப்பட்டான். கோட்டை வாயில்களுக்கு அறிவிப்பு மணி ஒலிக்கப்பட்டது. எக்காள ஓசையுடன் மன்னர் கிளம்பிச்சென்றான். தனி மாளிகையில் நூற்றுக்கணக்கான நாய்கள் இருப்பதைக் கண்டு மிரட்டுபோனான் பிஷாடன்.

“அத்தனை உயர்சாதி ரகங்கள். மாதக்கணக்கில் கப்பலில் வந்த

காரணத்தால் நாய்கள் களைத்துப்போயிருக்கின்றன’’ என விளக்கினான்.

‘‘இந்த நாய்கள் அத்தனையும் நானே வாங்கிக்கொண்டு விடுகிறேன். வெளிநாட்டு நாய்கள் மன்னருக்கானவை. வணிகர்கள் நாட்டு நாய்களைப் பயன்படுத்திக் கொள்ளட்டும்’’ என்றான் பிஷாடன்.

‘‘உங்கள் விருப்பம் அதுவென்றால் அப்படியே செய்துவிடலாம், நாய்களின் கழுத்துப்பட்டி, பெயர்த்தகடு இவற்றையாவது விற்பனை செய்வதற்கு மட்டுமாவது அனுமதி கொடுங்கள்’’ எனக் கேட்டான் ரெமியஸ்.

‘‘உங்களைப் போன்ற வணிகரை ஆதரிக்கவேண்டியது எனது கடமை. நீங்கள் எதை வேண்டுமானாலும் விற்பனை செய்துகொள்ளலாம். இந்த நாய்கள் அத்தனையும் எனது அரண்மனைக்கு அனுப்பி விடுங்கள்’’ என்றபடியே பிஷாடன் கிளம்பினான்.

‘‘இவற்றைப் பராமரிப்பதற்காக நான்கு பணியாளர்களையும் உடன் அனுப்பிவைக்கிறேன் அரசே.’’

‘‘உங்கள் செயல் எனக்கு சந்தோஷம் அளிக்கிறது, இதற்கான அங்கீகாரம் உரிய முறையில் வழங்கப்படும்.’’

‘‘உங்களை சந்தோஷப்படுத்த முடிந்தது எனக்குக் கிடைத்தபேறு’’ என வணங்கினான் ரெமியஸ்.

பிஷாடன் மிகுந்த சந்தோஷத்துடன் அரண்மனைக்குப் போய்க் கொண்டிருந்தான்.

•••

உலகின் மிகப் பெரிய கடலுக்கு பிஷாட மன்னரின் பெயர் சூட்டப்பட்டதை மக்கள் கொண்டாடும்படியாக கட்டாயப்படுத்தப் பட்டார்கள். வணிகர்கள் இந்த சந்தர்ப்பதைப் பயன்படுத்திக்கொண்டு பிஷாட மன்னரை மகிழ்ச்சிப்படுத்த பரிசுளை அளித்தார்கள்.

குடியும் ஆட்டமும் பாட்டுகளும் ஒருபக்கம் நடந்து கொண்டிருந்தபோது இன்னொரு பக்கம் பசி தாங்க முடியாமல் மக்கள் கரையான் புற்றுகளை உடைத்து தானியங்களைத் தேடிக்கொண்டிருந்தார்கள்.

பிஷாடன் நாய்களை வைத்துப் பராமரிப்பதற்கென்றே ஒரு தனி மாளிகையை ஒதுக்கியிருந்தான். அந்த மாளிகை முழுவதும் நாய்களும் அதைப் பராமரிப்பவர்களும் மட்டுமே இருந்தார்கள். நாய்கள் குளிப்பதற்கான குளம் அமைக்கப்பட்டது. ஒவ்வொரு நாளும் காலையில் நாய்களுடன் பிஷாடன் தனது தோட்டத்தில் உலா வரும்போது அரண்மனைப் பணியாளர்கள் மிரட்சியோடு பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

சத்கரில் ரெமியஸ் தனது வணிகத்தை வெற்றிகரமாகத் துவக்கியிருந்தான். நகரில் நாய் வைத்திருந்த அத்தனை வணிகர்களும் அவனிடம் உள்ள கழுத்துப் பட்டைகளையும் பெயர்த்தகடுகளையும், நாய்களுக்கான உணவுப் பொருட்களையும் விலைகொடுத்து வாங்கினார்கள். அதைவிடவும் அவன் மன்னருக்கு நெருக்கமானவன் என்பதால் அவனை அழைத்து விருந்து கொடுத்தார்கள்.

ரெமியஸ் சத்கர் நகரில் பெரியமாளிகை ஒன்றை விலைக்கு வாங்கிக் கொண்டு அதில் வசிக்கத் துவங்கினான். அந்தப்புரத்திற்கு புதியவர்களாக இருந்த அடிலாவும் அமந்தாவும் வெக்கை தாங்க முடியாமல் அடிக்கடி குளித்துக்கொண்டேயிருந்தார்கள். கணப்பு அடுப்பிற்குள் உட்கார்ந்திருப்பது போல உணர்ந்தார்கள். இருவருக்கும் சிறுநீர் கழிப்பதில் பிரச்சினை உண்டானது.

அடிலா மூத்திரம் பெய்யும்போது ஏற்படும் கடுகடுப்பைத் தாங்கமுடியாமல் அழுதாள். இவ்வளவு சூட்டை அவர்கள் கண்டதேயில்லை. அதைவிடவும் பிஷாடனை அவர்களுக்கு பிடிக்கவேயில்லை. உறக்கமின்மையால் பீடிக்கப்பட்ட பிஷாடன் இரவு முழுவதும் அந்த இரண்டு பெண்களையும் நிர்வாணமாக தன் முன்னே நிற்க வைத்துவிட்டு குரங்கோடு சதுரங்கம் ஆடிக்கொண்டிருந்தான்.

அந்தப் பெண்களுக்கு பிஷாடனை மட்டுமில்லை, அந்தக் குரங்கையும் பிடிக்கவில்லை.

நிர்வாணமாக அவர்கள் இருவரும் இரவெல்லாம் பிஷாடன் முன்பாக நின்றுகொண்டேயிருந்தார்கள். திடீரென பிஷாடன் விளையாட்டினை நிறுத்திவிட்டு விளக்கு ஒன்றை எடுத்துவந்து அடிலாவின் உடலை ஆராயத் துவங்குவான். தன் உடலில் என்ன தேடுகிறான் என அடிலாவிற்குத் தெரியாது. ஆனால், அவன் விரல்கள் தன்மீது ஊர்ந்து போவது அசூயையாக இருக்கும். அவள் முகத்தில் புன்சிரிப்புடன் போர்த்துக்கீசிய மொழியில் மிக மோசமான கெட்ட வார்த்தைகளால் பிஷாடனைத் திட்டுவாள்.

அவன் சிலவேளைகளில் கொடுக்கு துண்டிக்கப்பட்ட ஒரு தேளை எடுத்துவந்து அவள்மீது ஊர்ந்து போகவிடுவான், சில தருணங்களில் அவள் உடல் முழுவதும் தேனை மயிலிறகு கொண்டு தடவிவிடுவான். அமந்தாவைவிடவும் அடிலாவைத்தான் அவன் அதிகம் விரும்பினான். நாய்களுடன் பிஷாடன் உலாப் போகும்போது அமந்தாவை நிர்வாணமாக கூடவே நடந்துவரச் செய்வான். அவள் தலை கவிழ்ந்தபடியே அவனோடு நடந்துபோவாள்.

பின்பு ஒருநாள் பிஷாடன் தனது தோழனாக இருந்த குரங்கிற்கு அமந்தாவைத் திருமணம் செய்து வைப்பது என முடிவு செய்து அரண்மனை மண்டபத்தில் அவர்களுக்குத் திருமணமும் செய்து வைத்தான்.

•••

ரெமியஸ் ஆறுமாதங்களுக்குள் அந்த தேசத்தின் விதியையும் பிஷாடனின் முட்டாள்தனத்தையும் வணிகர்களின் பலவீனத்தையும் முழுமையாக உணர்ந்து கொண்டுவிட்டான்.

இந்த மக்களை ஏமாற்றுவதற்கு எளியவழி அவர்கள் மொழியில் பேசுவதுதான். அதைக் கற்றுக் கொள்ளவேண்டும் என அவசர அவசரமாக அவன் உருதுவும் சமஸ்கிருதமும் பேசக் கற்றுக்கொண்டான்.

பாதுகாப்பிற்கு நாய்களை வாங்கியபிறகு திருட்டே நடக்கவில்லை என வணிகர்கள் சந்தோஷம் அடைந்து வந்தது நீண்டநாட்கள் நிலைக்கவில்லை. ஐந்து பெண்கள் ஒன்றுகூடி லம்போதர் என்ற தானிய வணிகனின் நாய்களை வெட்டிப்போட்டு, தடுத்த அவன் தலையைத் துண்டித்துத் தராசில் தொங்கவிட்டு கடையிலிருந்த கோதுமைகளைக் கொள்ளையடித்துப்போனார்கள்.

இதுபோலவே தன் மகளின் திருமணத்திற்காக ஏற்பாடு செய்யப் பட்ட விருந்தில் புகுந்து ஆயிரம் பேர் உணவைத் தின்று முடித்து விட்டதுடன், திருமணத்திற்காக வாங்கிவைத்த நகைகள், பண்ட பாத்திரங்களைக் கொள்ளையிட்டுப் போய்விட்டார்கள் என முறையிட்டான் இன்னொரு வணிகன்.

குழப்பம்தான் பணம் சம்பாதிப்பதற்கான சரியான சூழல். குழப்பத்தை நாம் ஏற்படுத்துவதற்கு பதிலாக, அது தானே நடக்கும் போது அதைப் பயன்படுத்திக் கொண்டு காசை அள்ளிச் சுருட்டத் துவங்கினான் ரெமியஸ்.

அஜ்யாவின் கனவுகள்

அஜ்யா உடல்முழுவதும் ஏற்பட்ட காயங்களின் வலி தாங்க முடியாமல் சுருண்டே கிடந்தாள். அவளுக்குத் தரப்பட்ட உணவைக்கூட கையால் அள்ளிச் சாப்பிட முடியவில்லை, தாடையைத் திறக்கமுடியாத வலி. உடம்பை உரித்துப் போட்டது போலிருந்தது. உறக்கத்திலும் அவள் புலம்பினாள்.

சில நேரம் அவளை அறியாமல் உறங்கியபோது துர்க்கனவுகள் அவளை திடுக்கிட்டு விழிக்கச் செய்தன. வலியோடு சில நேரம் பாதுஷாவை நினைத்துக்கொள்வாள். ‘எனது மரணத்தின் பிறகு நீ நாட்டை விட்டுப் போய்விடு’ என அவர் செய்த எச்சரிக்கை நினைவில் வந்து போகும்.

அவளிடம் மன்னரைப் பற்றி எத்தனையோ பேர் புகார்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவளே சிலவற்றைக் கண்டுமிருக்கிறாள். ஒருமுறை அவரது அறைக்குப் போனபோது தங்கத் தாம்பாளத்தில் ஒரு மனிதத் தலை வைக்கப்பட்டிருந்தது. வயதான அந்தத் தலையை வெறித்துப் பார்த்தபடியே அதனுடன் பேசிக்கொண்டிருந்தார் ஔரங்கசீப்.

அது யாருடைய தலை என அவளுக்குத் தெரியவில்லை. அஜ்யாவிடம் அவர் சிரித்தபடியே அந்தத் தலை குடிப்பதற்கு சர்பத் கொண்டு வரும்படி சொன்னார்.

அவள் ஒரு குவளை நிறைய சர்பத் கொண்டு போய்க் கொடுத்தாள். அதை அவர் துண்டிக்கப்பட்ட தலையின் முன் வைத்தபடியே சொன்னார்,

“அக்தர், இப்போது நீ என் விருந்தாளி. உன்னை உபசரிக்க வேண்டியது எனது கடமை. என்னை எதிர்த்து எவ்வளவு பேசினாய். போரில் என் தலையைத் துண்டித்து உன் கோட்டை வாசலில் தொங்கவிடுவதாகச் சொன்னாயே. எங்கே போயிற்று அந்தக் குரல். அக்தர் ஏன் உன் குரல் இப்போது எழவில்லை. மரணம் உனக்குக் கொடுக்கப்பட்ட சிறிய தண்டனை. அது போதாது. உன்னை அதைவிட கடுமையாகத் தண்டிக்க வேண்டும். உனக்கு எந்த மரணச்சடங்கும் நடக்கக்கூடாது. அதைவிடவும் உன்னை துண்டுதுண்டாக வெட்டி நாய்களுக்கு உணவாகப் போடப் போகிறேன். அப்போதும் என் ஆத்திரம் அடங்காது.”

அஜ்யா பயத்துடன் பாதுஷாவைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவர் அந்தத் தலைமீது காறி உமிழ்ந்தார். தன் காலால் எட்டி உதைத்தார். அப்படியும் ஆத்திரம் தீரவில்லை.

“இந்தத் தலையை சிறுசிறு துண்டுகளாக்கி நாய்களுக்கு

உணவாக்குங்கள்" என்றார்.

காவலர்கள் அந்தத் தலையைக் கொண்டுபோனார்கள். அஜ்யா மன்னர் கைகளைக் கழுவிக்கொள்வதற்காக தண்ணீர் கொண்டுபோய் கொடுத்தாள். அவர் தனது இரண்டு கைகளையும் கழுவித் துடைத்துக் கொண்டு சொன்னார்,

"துரோகிகளை மன்னிக்கக் கூடாது. இந்த உலகில் மன்னிக்க முடியாத குற்றம் துரோகமே."

அஜ்யா அமைதியாக தரையிலிருந்து கீழே சிந்திய ரத்தத்துளிகளைத் துடைத்துக்கொண்டிருந்தாள்.

"அஜ்யா மனிதர்கள் ஏன் நம்பிக்கை துரோகம் செய்கிறார்கள்'' எனக் கேட்டார்.

அவளுக்கு என்ன பதில் சொல்வது எனத் தெரியவில்லை.

"பதில் சொல். உன்னை நான் தண்டிக்க மாட்டேன்."

"ஹுசூர், அதிகாரத்தை அடையும் ஆசையும் பொறாமையும் பேராசையும்தான் துரோக்கத்திற்கான காரணங்கள்."

"கோழைகளும் பலவீனமானவர்களும் குரூரமனம் கொண்டவர்களுமே துரோகம் இழைக்கிறார்கள். இந்த அக்தர் யார் தெரியுமா. என்னோடு இருந்தவன். எனக்காக சண்டையிட்டவன். ஆனால், திடீரென எதிரிகளுடன் இணைந்து என்னைக் கொல்ல சதி செய்தான். அவனது சதிச்செயல் முறியடிக்கப்படவே எதிரிகளுடன் ஒன்று சேர்ந்துகொண்டு என்னைக் கொல்லப்போவதாகக் கொக்கரித்தான். முடிவு, என் கையால் அவனைக் கொன்றேன். அப்படியும் என் ஆத்திரம் அடங்கவில்லை."

அஜ்யா சொன்னாள்.

"மரணத்தைவிட பெரிய தண்டனை வேறு என்ன இருக்கிறது ஹுசூர்."

"இல்லை அஜ்யா, மனிதர்களில் சிலர் மரணத்தைக் கண்டு பயப்படுவதில்லை. அதைவிடப் பெரிய தண்டனை ஒன்று தேவைப்படுகிறது."

அன்றிரவு அவர் உறங்கும்வரை இறந்துபோனவனைப் பற்றியே திட்டிக்கொண்டிருந்தார். அஜ்யா சொன்னாள். "ஹுசூர் நீங்கள் அவனை ஆழமாக நேசித்திருக்கிறீர்கள், அது தான் இவ்வளவு வெறுப்பிற்கும் காரணம்."

"ஆமாம் அஜ்யா. அவன் எத்தனையோ முறை போர்க்களத்தில் என் உடன் நின்று சண்டையிட்டிருக்கிறான். எனக்காக காயங்களை ஏற்றுக்கொண்டிருக்கிறான். ஒரு முறை குதிரையில் இருந்து காயம்பட்டு விழுந்த என்னைத் தாங்கிப்பிடித்து முகாமிற்குக் கொண்டுவந்தவன்

இவன். ஆனால், எதற்காக இப்படி ஒரு துரோகத்தை மேற்கொண்டான். அதைத்தான் புரிந்துகொள்ள முடியவில்லை.”

“ஹுசூர், உங்களால் தர முடியாத ஒன்றை உங்கள் எதிரி அவனுக்குத் தர முன்வந்திருப்பான்” என்றாள் அஜ்யா.

“உண்மை. அவனை நான் அங்கீகரிக்கவேயில்லை. அவன் அதற்காக ஏங்கியிருக்கிறான். காத்துக்கொண்டிருந்திருக்கிறான். ஏமாற்றத்தின் உச்சத்தில்தான் எதிரியோடு இணைந்திருக்கிறான். அவனை நான் தான் துரோகியாக்கியிருக்கிறேன்.”

அஜ்யா சொன்னாள், “உங்களைச் சுற்றிலும் உங்களை நேசிப்பவர் களைவிட வெறுப்பவர்களே அதிகமிருக்கிறார்கள் ஹுசூர்.”

“அதை நானும் அறிவேன். ஆனால், அவர்களால் என்னை ஒன்றும் செய்ய இயலாது. விட்டில் பூச்சிகளால் நெருப்பை அணைக்கமுடியுமா என்ன?”

அஜ்யா அவரது படுக்கையை சரி செய்தபோது ஔரங்கசீப் சொன்னார். “கடந்தகாலமே என்னை வழிநடத்துகிறது. கடந்தகாலத்தின் கசப்புகளே என்னை ஆத்திரப்படுத்துகின்றன. தூண்டுகின்றன. பழி வாங்க வைக்கின்றன. கடந்தகாலத்தை நான் மறந்துபோக ஆசைப்படுகிறேன். ஆனால், அது முடிவதேயில்லை.’’

அஜ்யா சொன்னாள். “ஹுசூர், இது உங்கள் பிரச்சினை மட்டுமில்லை. உலகமே கடந்தகாலத்தின் மீதுதான் சாய்மானம் கொண்டிருக்கிறது. நிகழ் காலத்தை எதிர்கொள்ள கடந்தகாலம்தான் துணை நிற்கிறது.”

அவர் வியப்போடு சொன்னார். “எவ்வளவு அழகாகச் சொல்லி விட்டாய். அஜ்யா, நீ மிகவும் புத்திசாலி. உன்னை எனது ஆலோசகராக நியமிக்கப்போகிறேன். நாளை முதல் நீதான் எனக்கு வழிகாட்ட வேண்டும்.”

இப்படிச் சொல்லும்போது அவரது குரலில் பரிகாசம் வெளிப் பட்டது. அவள் சிரித்தபடியே சொன்னாள். “ஹுசூர், தேனைத் தொட்ட விரலும் ருசிக்கத்தானே செய்யும்.” வர் அதைக்கேட்டு பலமாகச் சிரித்தார். அப்படி மாமன்னர் சிரித்து அவள் கண்டதேயில்லை.

கைதிகளின் அடையாளம்

காலா விசாரணைக் கைதிகளின் கூடமாக இருந்தபோதும் அதற்குள்ளும் சாதியும் குரூரமான கட்டுப்பாடுகளும் தடைகளுமிருந்தன. தூமகேதுவைப் போன்ற சூத்திரர்கள் கிணற்றில் குளிக்க அனுமதிக்கபடவில்லை. மீதமான உணவுகளே அவனுக்கு அளிக்கப்பட்டன. காலாவில் இரண்டு கிணறுகள் இருந்தன. ஒன்று உயர்சாதியினருக்கு மற்றொன்று தூமகேதுவைப் போன்ற கீழ்சாதியினருக்கு.

ஒரு நாள் தனது கிணற்றில் வாளியில்லை என அறிந்த தூமகேது உயர்சாதியினர் குளிக்கும் கிணற்றில் இருந்து தண்ணீர் வாளியை எடுத்து வந்துவிட்டான். தூமகேது கிணற்றிலிருந்து வாளியை எடுத்துக்கொண்டு நடக்கும்போது பண்டிதன் விஸ்வாம்பரன் கூக்குரலிட்டான்.

“அடேய் சண்டாளா. வாளியைக் கீழே வை. உனக்கு என்ன தைரியமிருந்தால் இந்த வாளியைத் தொட்டுத் தூக்குவாய். கழிசடை நாயே.”

பயந்து போய் தூமகேது வாளியைக் கீழே போட்டுவிட்டு நடுங்கியபடியே நின்றான். தங்கள் கிணற்று வாளியை தூமகேது தொட்டு விட்டான், தீட்டுப்பட்டுவிட்டது எனப் பலரும் கூச்சலிட்டார்கள். விஸ்வாம்பரனுக்காகப் பரிந்து பேச ஒரு கூட்டம் திரண்டது. அவர்கள் விஸ்வாம்பரனை சுவாமி என்றே அழைத்தார்கள்.

விஸ்வாம்பரன் ஆவேசத்துடன் தூமகேதுவைப் பார்த்து சொன்னான். “காலாவில் இருப்பவர்கள் எல்லோரும் விசாரணைக் கைதிகள் தான், அதற்காக நீயும் நானும் ஒரு போதும் ஒன்றாகிவிட முடியாது. நீ ஒரு சாமர், அதை மறந்துவிடாதே. காகம் ஒரு போதும் கிளியாக முடியாது.’’

ஆத்திரத்துடன் மற்றொருவன் சொன்னான்,

“சுவாமி, தெருநாய்கள் கல்லைக் கண்ட இடத்தில் காலைத் தூக்கி மூத்திரம் பெய்யத்தான் செய்யும். உங்கள் செருப்பைக் கொடுங்கள், நானே இவனை அடித்து நொறுக்குகிறேன்.”

தூமகேது கையெடுத்துக் கும்பிட்டுச் சொன்னான்.

“கிணற்றில் வாளி இல்லை என்றுதான் எடுத்தேன். அறியாமல் செய்த தவற்றை மன்னித்துவிடுங்கள்.”

“பொய் சொல்கிறான். இவனை தண்டித்தே தீர வேண்டும்’’ என்றான் மற்றவன்.

“இவன் கைகளில் சூடு போட்டுவிடலாம்’’ என உரத்த குரலில் சொன்னான் இன்னொருவன்.

“அந்த தண்டனை போதாதே’’ என்றான் விஸ்வாம்பரன். “நாய்ப் பீயைக் கரைத்து அவன் வாயில் ஊற்றிவிடுவோம், அதுதான் சரியான தண்டனை. அப்போதுதான் இன்னொரு முறை இத்தவறை செய்யமாட்டான்’’ என்றான் சதுர்வேதி. அந்தக் குரல் யாருடையது எனத் திரும்பி பார்த்த விஸ்வாம்பரன் அவனும் தன்னைப் போல ஒரு பண்டிதன் எனச்சிரித்தபடியே சொன்னான்,

“இதுதான் சரியான தண்டனை. உடனே நிறைவேற்றுங்கள்.’’

“அதுதான் சரியான தண்டனை’’ எனப் பலரும் குரலிட்டார்கள்.

கூனிக் குறுகிப் போயிருந்த தூமகேது கண்ணீர் மல்க, கைகூப்பி, “என்னை விட்டுவிடுங்கள்” எனக் கதறினான்.

அந்தக் குரல் அவர்கள் காதில் கேட்கவேயில்லை.

அந்தக் கூட்டம் எங்கிருந்தோ ஒரு மண்கலயத்தில் நாய்ப் பீயைக் கரைத்துக்கொண்டு வந்திருந்தது.

தூமகேது தலைகவிழ்ந்து நின்றிருந்தான்.

தன் வாயில் நாய்ப்பீயைக் கரைத்து ஊற்றாமல் விடமாட்டார்கள் என தூமகேது நன்றாக உணர்ந்திருந்தான். அவன் தன்முன்னே நிற்கும் அந்த மனிதர்களை ஏறிட்டுப் பார்த்தான்.

தன்னைப் போல அதே கண்கள், காதுகள், கை கால்கள், உடல், பிறகு ஏன் தன்னை இப்படி அவமானப்படுத்துகிறார்கள். இந்தக் கொடுமையிலிருந்து எப்படித் தப்பிப்பது.

இரண்டுபேர் தூமகேதுவின் தலையை அழுத்தி பிடித்துக் கொண்டார்கள். ஒருவன் அவன் வாயைக் கிழிப்பதுபோல இழுத்துப் பிடித்தான். மண்கலயத்திலிருந்த நாய்ப்பீயை அவன் வாயில் ஊற்றினார்கள். வாயை மூடிக்கொண்டு திமிறினான், நாய்ப்பீ உதட்டில் வழிந்தது. கூட்டம் ஆரவாரமாகச் சிரித்தது.

தூமகேதுவின் தலையைப் பிடித்திருந்த கை விலகியது, அவன் வாயிலிருந்த நாய்ப்பீயைத் துப்பியபடியே வாந்தி எடுத்தான். அடிவயிறு எக்கி பிடித்துக்கொண்டது. அவன் வாயில் விரலை விட்டு வாந்தியெடுத்தான். கைவிரல்களில் மலக்கசிவு. குத்துக்காலிட்டு அவன் வயிற்றைக் கிழித்து வெளியே எடுக்குமளவு வாந்தி எடுத்தான். அதைக் கண்ட கூட்டம் மேலும் ஆரவாரத்துடன் கூச்சலிட்டுக் கத்தியது.

விஸ்வாம்பரன் சிரித்தபடியே சொன்னான்.

“இனிமேல் காலாவில் எந்த சூத்திரனும் கிணற்றில் குளிக்கவோ, தண்ணீர் குடிக்கவோ கூடாது, மீறித் தண்ணீரைத் தொட்டால் இது தான் தண்டனை. மறக்கமுடியாத தண்டனை.”

கூட்டம் கலைந்து போன பின்பு தன் முன்னே வழிந்துகிடக்கும்

வாந்தியையும் மலத்தையும் வெறித்துப் பார்த்தபடியே இருந்தான் தூமகேது. அவனால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தன்னை மீறி வெடித்து அழுதான். இப்படியே செத்துப் போய்விட வேண்டும் எனத் தோன்றியது.

இதற்குள் காலாவில் ஒருவனை நாய்ப்பீயைக் கரைத்து வாயில் ஊற்றி தண்டித்திருக்கிறார்கள் என்ற தகவல் ஜாபருக்குச் சென்று சேர்ந்தது. அவன் ஆத்திரமாகிக் கூச்சலிட்டான்.

"இந்த விஸ்வாம்பரன் தான் ஒரு கைதி என்பதை மறந்துவிட்டான். குற்றவாளிகளுக்குள் என்ன சாதித் தீட்டு, துவேசம், தண்டனை."

அதைக்கேட்ட அமீர் சொன்னான்.

"மாலிக், இந்த விஸ்வாம்பரனைப் போன்றவர்கள் செத்தாலும் தீட்டை விட மாட்டார்கள், பாவம் அந்தத் தூமகேது."

"தூமகேதுவை உடனே கொட்டடிக்கு திரும்பிப் போகச் சொல், இல்லாவிட்டால் கலவரம் வெடித்துவிடும்" என்றான் ஜாபர்.

அமீர் வந்து கொட்டடிக்குப் போகும்படி தூமகேதுவிற்கு ஆணையிட்டபோதும் அவன் எழுந்துகொள்ளவேயில்லை. அவனை என்ன செய்வது எனப்புரியாமல் அமீர் கிளம்பிப் போய்விட்டான்.

தூமகேது இருள்சூழ்ந்த பிறகும் அதே இடத்தில் அழுதுகொண்டேயிருந்தான். அவனது விசும்பல் தனியே கேட்டுக்கொண்டிருந்தது. பின்னிரவில் அவனைக்காண எண்பது வயதைத் தாண்டியிருந்த சக்ரதார் வந்திருந்தார். குனிந்து அவன் தலையைத் தொட்டுத் தடவிக் கொடுத்து சொன்னார்.

"உனக்கு இழைக்கப்பட்ட இந்த அவமானத்திற்கு காலம் பழி வாங்கியே தீரும். மன்னித்துவிடு தூமகேது. இவர்கள் அற்பப் புழுக்கள். மனிதர்களுக்குள் என்ன உயர்ந்தவன், தாழ்ந்தவன். பிறப்பில் இந்த வேறுபாட்டை உருவாக்கியவன் அயோக்கியன்."

தூமகேது அந்தக் கைகளை விலக்கிவிட்டு கேட்டான்

"நான் என்ன தவறு செய்தேன், எதற்காக இந்த தண்டனை."

சக்ரதார் பதிலற்றவராக அவன் கைகளைப் பற்றியபடியே சொன்னார்.

"தவறு உன்னுடையதில்லை. நூற்றாண்டுகளாகத் தொடரும் அநியாயம் உன்னை பலிவாங்கியிருக்கிறது. இந்த துவேசத்திற்கு எதிராகப் பாடியும் பேசியும் வந்தவன் என்பதற்காகத்தான் என்னைக் கைது செய்திருக்கிறார்கள். நீ அவமதிக்கப்பட்ட போது ஓடி வந்து நான் காப்பாற்றியிருக்க வேண்டும். ஆனால், கிணற்றடியில் இப்படி ஒரு சம்பவம் நடந்தது என்று இப்போதுதான் அறிய நேர்ந்தது. அதைக் கேட்டவுடன் கூசிப்போனேன். என்ன ஜென்மங்கள் இவர்கள். இழிபிறவிகள்.''

சக்ரதாரின் கைகளில் தூமகேதுவின் கண்ணீர் வழிந்தது. அவர் அந்தக் கண்ணீரின் சூட்டை உணர்ந்தவரைப் போல சொன்னார்.

“உன்னை என் சகோதரனைப் போல நினைக்கிறேன் தூமகேது. அழாதே. கண்ணீரால் இந்த அவமானத்தைத் துடைத்துவிட முடியாது. சகித்துக்கொள்ள முடியாத இந்த சாதியக் கொடுமையை வேரோடு அறுத்து எறிவதற்கு ஏதாவது செய்தே ஆக வேண்டும். நீ இறந்து போய்விட்டால் இந்த அவமானமும் உன்னோடு சேர்ந்து புதைக்கப் பட்டுவிடும். அதைத்தான் அவர்கள் விரும்புகிறார்கள். நீ வாழ வேண்டும். உன் குரல் உலகிற்குக் கேட்க வேண்டும்.”

தூமகேது நடுங்கிய குரலில் சொன்னான்.

“என்னை விட்டுவிடுங்கள்.”

சக்ரதார் அவனை இறுக்கி அணைத்துக்கொண்டபடியே சொன்னார். “விடியட்டும். உன் அவமானத்திற்காக நாம் பழி வாங்கிடுவோம், என்ன நடந்தாலும் நான் இருக்கிறேன்.”

விடிகாலை வரை சக்ரதார் அவனுடன் இருந்தார். பின்பு அவர் தூமகேதுவைப் போல சூத்திரனாகக் கருதப்பட்ட குற்றவாளிகள் பலரையும் கிணற்றடியில் ஒன்று திரட்டினார். அவர்கள் முன்பாக தூமகேதுவைக் கொண்டுபோய் நிறுத்தி சொன்னார்.

“சகோதரர்களே, குற்றவிசாரணைக்காக நம்மை அரசாங்கம் இங்கே அடைத்து வைத்திருக்கிறது. ஆனால், இதற்குள் நடைபெறுகின்ற குற்றமோ சகித்துக்கொள்ள முடியாத கொடுமையாக இருக்கிறது. விஸ்வாம்பரன் மீது உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தூமகேதுவிற்கு நடந்த இழிசெயல் நாளை உங்களுக்கும் நடக்கக் கூடும். நீங்கள் அத்தனை பேரும் இந்தக் கிணற்றில் தண்ணீர் இறைத்துக் குளியுங்கள். நாம் ஒன்றாகக் குளிப்போம். ஒன்றாக உணவு அருந்துவோம். என்ன நடக்கிறது பார்த்துவிடலாம்.”

அதைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்பதற்காகவே விஸ்வாம்பரனும், சதுர்வேதியும் தனது ஆட்களுடன் திரண்டு நின்றிருந்தார்கள், விஸ்வாம்பரன் சொன்னான்.

“சக்ரதார், இது உனக்குத் தேவையில்லாத வேலை. நீ சூத்திரனில்லை. அவர்களுக்காக நீயும் பன்றியைப் போல நடந்துகொள்ளாதே.”

“விஸ்வாம்பரா, நீதி என்பக்கமிருக்கிறது, உனது தவறான செயல்களுக்கு மன்னிப்புக் கேள். உனது ஆணவப்போக்கை நிறுத்திக் கொள். இல்லாவிட்டால் நீ கடுமையாக தண்டிக்கப்படுவாய்.”

“அதையும் பார்த்துவிடுவோம்.”

விஸ்வாம்பரனின் ஆட்கள் அவர்களை நோக்கி ஓடிவந்து தாக்கத்

துவங்கினார்கள், சக்ரதாரும் அவரது ஆட்களும் கூச்சலிட்டார்கள், இதற்குள் காலாவின் காவல்அதிகாரியான ஜாபர் தனது காவல்வீரர்களுடன் வந்திருந்தான். அவன் கூட்டத்தைக் கலைந்து போகும்படி கட்டளையிட்டான். ஒருவரும் கலையவில்லை.

அவன் சக்ரதாரிடம்,

“உங்கள் மீது மரியாதை வைத்திருக்கிறேன், நடந்த விஷயத்தைப்பற்றி நானும் கேள்விப்பட்டேன், விசாரணை செய்து தண்டனை தருவேன்” என்றான்.

சக்ரதார் அவனது பேச்சை ஏற்றுக்கொண்டவர் போல தனது ஆட்களுடன் கலைந்து போனார். விஸ்வாம்பரனையும் அவனது கூட்டத்தையும் ஜாபர் கடுமையாக எச்சரிக்கை செய்து அனுப்பி வைத்தான்.

இது நடந்து இரண்டு நாட்களுக்குப் பிறகு தூமகேதுவை சந்திக்க சக்ரதார் வந்திருந்தார். அவரது ஆறுதலான சிரிப்பும் பேச்சும் மனதைத் தொட்டது, அதன்பிறகு அவரைத் தேடிப்போய் அவனே பேசிக்கொண்டிருக்கத் துவங்கினான்.

•••

சக்ரதார் மீது இரட்டைக் கொலை வழக்கு சுமத்தப் பட்டிருந்தது. அவர் ஒரு பண்டிதர். நீதி சாஸ்திரங்களைக் கற்றவர். கிரகங்களைப் பற்றி ஆய்வு செய்துகொண்டிருந்தவர்.

ஆறு மொழிகள் அவருக்குத் தெரியும். அவரையும் குற்றவாளியாக்கியிருந்தார்கள். தான் எப்படி குற்றவாளியாக்கப்பட்டேன் என்பதை சக்ரதார் ஒரு சுவாரஸ்யமான கதையாகச் சொல்வார். அதைக் கேட்க காலாவில் இருந்தவர்கள் ஒன்று கூடுவார்கள்.

தன்னைப் பற்றிய கதையில் துவங்கி தூர தேசங்களில் நடந்த குற்றங்களையும் தான் கேட்ட படித்த கதைகளும் சேர்த்துச் சொல்லிக் கொண்டேயிருப்பார்.

ஆகவே காலாவில் வசித்தவர்கள் இரவில் கதை கேட்பதற்காக அவர் முன்னே கூடுவார்கள், ஒவ்வொரு இரவும் அவர் விசித்திரமான கதை ஒன்றைக் கூறுவார். கதை சொல்லி முடிந்தபிறகு ஆட்கள் கலைந்து போய்விடுவார்கள். ஆனால், தூமகேது கதையைப் பற்றியே நினைத்துக்கொண்டிருப்பான். எல்லா தேசங்களிலும் எளிய மனிதர்கள்தான் குற்றவாளியாக்கப் படுகிறார்கள். எவருக்கும் நீதி எளிதாகக் கிடைத்துவிடுவதில்லை. ஒருநாள் தூமகேது சக்ரதாரிடம் கேட்டான். ‘‘நீதி என்றால் என்ன?’’

அவர் சிரித்தபடியே சொன்னார்,

“அரசிற்கு எது நன்மை பயக்கிறதோ அதுவே நீதி.”

‘‘என்னைப் போன்ற ஆட்டுத்தோலைப் பதப்படுத்துபவன் கூடவா அரசிற்கு எதிரானவன்’’ எனக்கேட்டான் தூமகேது.

“ஒருவன் மீது குற்றம் சுமத்த ஒரு காரணமும் தேவையில்லை, நிரூபணம் செய்யத்தான் சாட்சிகள் வேண்டும். நீயும் நானும் அரசால் குற்றவாளியாக்கப்பட்டிருக்கிறோம். நம்மைப் போல எண்ணிக்கையற்ற மனிதர்கள் உலகெங்கும் குற்றவாளியாக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்களில் சிலர் தான் நிரபராதி என நிரூபிக்கப்படும் முன்பே இறந்தும் போய்விட்டார்கள். நீதிக்காகக் காத்திருப்பது தொடர்ந்து நடந்துகொண்டிருக்கும் பெருநிகழ்வு. அதில் நாம் சிற்றெறும்புகள்.”

“நீங்கள் பண்டிதர், அறிவாளி, உங்களால் கூட குற்றத்தை மறுக்க முடியவில்லையா?”

‘‘பிரச்சினையே நான் பண்டிதர் என்பதுதானே. அறிவாளிகள் எதையும் முன்னுணர்ந்துவிடக்கூடியவர்கள். அதன் காரணமாக அவர்கள் ஒதுங்கியே வாழ்கிறார்கள். நானும் அப்படித்தான் வாழ்ந்தேன். ஆனால், உலகம் அறிவாளிகளைத் துன்புறுத்துவதில் இன்பம் காணக்கூடியது. அதனால் தான் குற்றம் சுமத்தப்பட்டேன், அதுவும் இரட்டைக் கொலை வழக்கு. தாயும் மகளுமான இரண்டு வேசைகளைக் கொன்றேன் என்று குற்றம் சுமத்தியிருக்கிறார்கள். அந்தப் பெண்களை எனக்குத் தெரியும். தேர்ந்த இசைக் கலைஞர்கள், அவர்களைக் கொன்றவர் யார் என்றும் எனக்குத் தெரியும், ஆனால், ஏன் அந்தத் பெண்கள் கொலை செய்யப்பட்டார்கள் எனத் தெரியவில்லை.”

“உங்கள் மீது சுமத்தப்பட்ட குற்றத்தைக் கண்டு நீங்கள்

அஞ்சவில்லையா, கதறி அழவில்லையா?”

‘‘படித்தவர்கள் அழுவதற்குக்கூட வெட்கப்படுவார்கள் எனக் கேள்விப்பட்டதில்லையா? அழுவதன் காரணமாக குற்றத்திலிருந்து விடுபட்டுவிடுவோமா என்ன? அது ஒரு மனஆறுதல். தண்டனையை நினைத்து பயப்படுகிறவன்தான் அஞ்சுவான். நான் தண்டனையை எதிர்நோக்குகிறேன். அது ஒரு தீர்வு. ஒன்று வாழ்க்கை அல்லது சாவு. எவ்வளவு எளிமையாக இருக்கிறது பார் ராஜநீதி.”

“இது அநீதியில்லையா?”

“நீதி, அநீதி என்பது மாறிக்கொண்டேயிருக்கக்கூடியது. யாருக்கு நீதி, யாருக்கு அநீதி என்பதைப் பொறுத்த விஷயமது. இன்று வரை எது நீதி என முடிவாக யாராலும் வரையறுக்க முடியவில்லை. நீதியும் நமது உடலும் ஒன்றுதான். இரண்டினையும் நாம் முறையாகக் கையாள வேண்டும். உடற்பயிற்சியில்லாத உடல் நோய்மையுறுவது போலதான் சுயஒழுக்கமும் வளர்ப்பும் கல்வியும் முறையாக இல்லாத ஒருவன்

குற்றத்தை நாடுகிறான். நோய்மை அடைந்தவனுக்கு மருத்துவனும், நீதி மறந்தவனுக்கு வழக்கறிஞனும் தேவையாகிறார்கள். எது சரி, எது தவறு எனப் பட்டியல் ஏதாவது இருக்கிறதா என்ன? நேற்றைய தவறு இன்றைய சரியாகிவிடுகிறது. இன்றைய சரி நாளை தவறாகலாம். சரியும் தவறும் வெறும் வழிகாட்டுதல்கள். நீதி என்பது மாறாத அறவுணர்வு. அது வளர்வதுமில்லை. தேய்வதுமில்லை. அதைப் பயிலுவது கடினமானது. நீதிவழங்குவதைப் பொறுத்தவரை எது நீதி என உணர்ந்திருந்தாலும் அதை நிலைநாட்டுவது எளிதானதில்லை. ஒருவனை தண்டிக்க முடிவு செய்துவிட்டால் அவன் மீது குற்றங்களைச் சுமத்துவது கஷ்டமா என்ன. எந்த நாட்டையும் மன்னர்கள் ஆளவில்லை. சட்டங்கள்தான் ஆள்கின்றன. அந்த சட்டங்களை மன்னர்கள் நிலைநாட்டுகிறார்கள். சட்டத்தின் ஆட்சி என்பது எளிதானதில்லை. சட்டம் மன்னர்களுக்காக வளைந்து கொடுக்காதபோது புதிய சட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. சாமானிய மனிதர்கள் எழுதப்பட்ட சட்டங்களைவிடவும் எழுதப்படாத அரூபமான சட்டங்களால்தான் வழிநடத்தப் படுகிறார்கள். அந்தச் சட்டங்கள் நமது அறவுணர்ச்சியின் வெளிப்பாடு. அதுதான் ஒழுக்கத்தின் ஆதாரம். அந்த எழுதப்படாத சட்டங்களை ஒரு சமூகம் கைவிடும்போது குழப்பமும் கொந்தளிப்பும், முறைகேடுகளும் வன்முறையும் உருவாவதைத் தடுக்கமுடியாது. நீயும் நானும் அதன் பலி ஆடுகள்தான்.”

‘‘நீங்கள் சொல்லிய கதைகளில் முடிவில் நீதி வென்றுவிடுகிறது, உண்மையில் இது சாத்தியம்தானா’’ என சந்தேகத்துடன் கேட்டான் தூமகேது.

‘‘அப்படித்தான் காலம் சொல்கிறது. வரலாற்றின் பக்கங்களில் நீதியை செல்வமும் செல்வாக்கும் வென்றதற்கு எத்தனையோ சாட்சியங்கள் இருக்கின்றன. அதிகாரத்திலிருந்த குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்பி அரசாண்டிருக்கிறார்கள். பேரும் புகழும் அடைந்திருக்கிறார்கள். ஆனால், முடிவில் நீதிதான் வென்றிருக்கிறது. நீதியுணர்வை மனிதர்களிடமிருந்து முற்றிலும் அழித்துவிட முடியாது. அது மனித ஆதார இயல்புகளில் ஒன்று. பல்லாயிரம் ஆண்டுகளாக மனிதர்கள் நீதியுணர்வுடன்தான் இந்த மண்ணில் வாழ்ந்திருக்கிறார்கள், ஒரு தலைமுறை மறைந்து புதிய தலைமுறை உருவாகும் போது அதன் கையில் நீதி ஒப்படைக்கப்படுகிறது.”

‘‘எனக்கு நம்பிக்கையில்லை, நான் விடுவிக்கப்படுவேன் என நம்பவேயில்லை. இன்னும் எத்தனை ஆண்டுகள் இந்தக் காலாவிற்குள் காத்துக்கிடக்க வேண்டுமோ’’ எனப் புலம்பினான் தூமகேது.

‘‘காத்துக்கிடப்பவனுக்கு காலம் நீண்டுவிடக்கூடியது. ஒரு நாள் என்பதே மிக நீண்டதாகத்தான் இருக்கும், அதை மறக்கடிக்கவே நான் கதைகள் சொல்கிறேன்.”

‘‘நான் இங்கேயிருந்தாலும் மனது வீட்டைத்தான் சுற்றி வந்து கொண்டேயிருக்கிறது, நளாவும் பிள்ளைகளும் என்ன ஆகியிருப்பார்கள் என நினைத்து நடுங்கிக்கொண்டேயிருக்கிறேன். அவர்கள் குரல் என் காதில் கேட்டுக்கொண்டேயிருக்கிறது. ஒரு குருவியைப் போல இங்கிருந்து பறந்து போய்விட முடியாதா என ஏங்கிக்கொண்டிருக்கிறேன்’’

“அதற்கும் ஒரு வழியிருக்கிறது” எனச் சிரித்தார் சக்ரதார்.

‘‘என்னவழி, எதுவாக இருந்தாலும் சொல்லுங்கள்’’ என ஆதங்கமாகக் கேட்டான் தூமகேது.

‘‘கதைக்குள் மறைந்து போய்விடுவது’’ என்றார் சக்ரதார்.

‘‘கதைக்குள்ளாக எப்படி மறைந்து போக முடியும்?”

‘‘உன்னைப் பற்றி சில விசித்திரமான கதைகளை உருவாக்க வேண்டும். அந்தங்க கதைகளை மக்கள் நம்பத் துவங்கினால் நீ வெளியேறிப் போய்விடலாம்” எனக் கண்சிமிட்டினார்.

“எப்படி கதைகளால் ஒருவன் தப்பிப் போகமுடியும்?”

“முடியும். அது ஒரு தந்திரம். எந்த ஒரு மனிதனையும் அடையாளமற்றுப் போகச் செய்ய மூன்று விஷயங்கள் அவசியமானது. ஒன்று அவன் முகத்தோற்றத்தை மாற்றியமைக்க வேண்டும். பற்களையோ, தாடைகளையோ, புருவத்தையோ தலைமயிரையோ மாற்றி அமைத்து விட வேண்டும். தேவைப்பட்டால் அவன் ஒரு கண்ணைக்கூட பிடுங்கிவிடலாம். உயிர்வாழ்வது ஒரு கண்ணை இழப்பதைவிட மேலானது. அடுத்தது அவனது உணவு. ஒருவன் சாப்பிடுகிற உணவை வைத்து அவனது அடையாளத்தை எளிதாகக் கண்டுபிடித்துவிடலாம். ஆகவே எந்த உணவுகள் இதுவரை அவனுக்குப் பரிச்சயமில்லையோ, பிடிக்காதோ, அதை உண்ணப் பழகிக் கொள்ள வேண்டும். மூன்றாவது அவன் பேசும் மொழி. தனது தாய்மொழியை அவன் ஒருபோதும் பயன்படுத்தக்கூடாது. அந்நிய மொழி ஒன்றைக் கற்று அதைப் பேசத்துவங்க வேண்டும். இந்த மூன்றையும் ஒருவன் சாதுர்யமாகச் செய்து முடித்துவிட்டால் அவனை யாராலும் கண்டுபிடிக்கவே முடியாது.”

‘‘இதற்கும் கதைக்கும் என்ன சம்பந்தம்’’ எனக் கேட்டான் தூமகேது.

‘‘இந்த உருமாற்றத்தைக் கதையில் எளிதாகச் செய்துவிடலாம். கதை என்பதை ஒருவனின் அடையாளங்களை மாற்றுவதுதானே” எனச் சொல்லிச் சிரித்தார் சக்ரதார்.

‘‘நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை.”

“நீ இங்கிருந்து தப்பித்து காணாமல் போய்விட்டால் உனது பிரச்சினை தீர்ந்து போய்விடுமில்லையா?”

“ஆமாம்.”

‘‘அதை கதைகள் வழியாக எளிதாக சாத்தியப்படுத்தலாம்.”

“எப்படி?”

“நீ இங்கே இருக்கும்போதே வெளியிலும் இருப்பதாக ஒரு கதையை உருவாக்கினால்?”

“அது எப்படி சாத்தியம்?”

“அதுதான் கதையின் வல்லமை.”

“உனக்கு விசேஷ சக்திகள் இருக்கின்றன. நீ ஒரு அரூபி. இங்கே இருக்கும்போதே வெளியே பல்வேறு இடங்களில் பல்வேறு விஷயங்களைச் செய்வதாக என்னால் கதைகளை உண்டாக்க முடியும்.”

“அதை நம்புவார்களா?”

‘‘நம்ப வைக்க வேண்டியது கதை சொல்பவன் கடமை, என்னால் அதை எளிதாகச் செய்துவிட முடியும்.”

‘‘கதைகள் என்னைக் காப்பாற்றிவிடுமா?”

“கதைகள்தான் கடவுள்களையே காப்பாற்றி வைத்திருக்கின்றன. உன்னை நிச்சயம் காப்பாற்றும். உன்னைப் பற்றிய கதைகளை நிஜமாக்குவதுபோல நீ நடந்துகொள்ள வேண்டும்.”

‘‘எப்படி?”

“அதைக் கதைகள் உருவானபிறகு சொல்கிறேன்.”

தூமகேதுவிற்கு அவர் சொன்னது சாத்தியம்தானா என சந்தேகமாயிருந்தது. சக்ரதார் சிரித்தபடியே சொன்னார்,

“பௌணர்மிக்குள் நீ காணாமல் போய்விடலாம், போதுமா?”

இன்னும் பனிரெண்டு நாட்கள் இருக்கின்றன. அதற்குள் என்ன நடந்துவிடப்போகிறது எனப் புரியாமல் தலையாட்டினான் தூமகேது.

சம்புவின் அதிர்ஷ்டம்

சம்பு டெல்லிக்குப் போகவில்லை. படகில் அந்த மனிதன் கொடுத்த பட்டுத்துணி சுற்றிய மரப்பெட்டியை யாருமற்ற இரவில் திறந்து பார்த்தான். அத்தனையும் வைரங்கள், தங்க நாணயங்கள். அதனுடன் ஒரு கடிதம் இருந்தது. அரசமுத்திரை இட்ட கடிதம். அதைப் பிரித்துப் படிக்கலாமா என நினைத்தான். பிறகு எதற்கு அதைப் படிக்க வேண்டும் என அப்படியே வைத்து எரித்தான். இந்தப் பெட்டி தனக்குக் கிடைத்த அதிர்ஷ்டம். இதை வைத்துக் கொண்டு வணிகம் செய்ய வேண்டும். சதிவேலைகளுக்குப் பயன்படுத்த இருந்த நாணயங்கள்தானே என்றபடியே அவன் அந்த மரப்பெட்டியில் இருந்த வைரம், தங்க

நாணயங்கள் அத்தனையும் துணியில் சுற்றி பொட்டலம் கட்டிவிட்டு அந்த மரப்பெட்டியைச் சிறுசிறு துண்டாக உடைத்து ஆற்றில் வீசி எறிந்தான். பின்பு கையிலிருந்த தங்க நாணயங்களைக் கொண்டு சம்பு வணிகப் பொருட்களை வாங்கி விற்கத் துவங்கினான். யாரும் அவனை சந்தேகம் கொள்ளவில்லை. கேட்கும் சிலருக்கும்கூட தான் வங்காளத்தைச் சேர்ந்த வணிகன் பிமல்நாத்திற்காக வேலை செய்வதாகச் சொல்லிக்கொண்டான். யார் பிமல்நாத் என ஒருவரும் கேட்கவேயில்லை.

சம்புவின் வணிகம் வசதியைத் தேடித்தந்தது. இரண்டு மாத காலத்தில் சம்பு சந்தையில் முக்கிய வணிகனாகியிருந்தான். அவனிடம் எப்படியோ காசு வந்து சேர்ந்துவிட்டது என மற்றவர்கள் பொறாமை கொண்டார்கள்.

சம்பு எவரது கேலிப்பேச்சைப் பற்றியும் கண்டுகொள்ளவில்லை. பொறாமையும் வெறுப்பும் வணிகர் மீது இருக்கத்தானே செய்யும். அவன் இரண்டு படகுகளைத் தனதாக்கிக் கொண்டான். அந்தப் படகுகளில் சரக்குகள் இரவு பகலாக ஏற்றப்பட்டு போவதும் வருவதுமாயிருந்தன. சம்புவை சிலர் சம்பு மகராஜ் என அழைக்க ஆரம்பித்தார்கள். சம்புவிற்கு ஆச்சரியமாக இருந்தது. வாழ்க்கை இப்படி ஒருவனை திடீரெனப் புரட்டிப் போட்டுவிடுமா என்ன. எல்லா வசதிகளும் அவனை வந்து அடைந்துவிட்டன. அழகான பெண் ஒருத்திதான் மிச்சம். வசதியான வீட்டுப் பெண் ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்டுவிட்டால் போதும்தானே ராஜா

சில நேரங்களில் தன்னை அரசாங்கக் காவலர்கள் கண்டுபிடித்து விசாரணைக்கு அழைத்துப் போய் உண்மையைக் கண்டுபிடித்து தூக்கிலிடுவது போலக் கனவு வரும். திடுக்கிட்டு விழித்து எழுந்து கொள்வான்.

தான் திருடியதற்கு என்ன சாட்சியிருக்கிறது. யாருக்கு இந்த உண்மை தெரியும். திடீரென அவனுக்குத் தோன்றியது. இந்த உண்மையை அறிந்த ஒரே சாட்சி யமுனா நதி மட்டுமே, அது நேரில் வந்து சாட்சி சொல்லப்போகிறதா என்ன.

இனி பயம் கொள்ளக்கூடாது என மனதிற்குள் உறுதி எடுத்துக்கொண்டான். தனது பாவத்திற்கு பிராயச்சித்தம் செய்வதுபோல ஏழைகளுக்கு தானம் அளித்தான். கூலிகள் உறங்குவதற்கு ஒரு மண்டபம் கட்டிக் கொடுத்தான். ஒவ்வொரு நாள் விடியும்போது சம்பு சந்தோஷமாக இன்றைய நாள் அமையப்போகிறது என நினைத்துக்கொள்வான். அவன் விரும்பியபடியே நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன.

ஒரு நாள் யமுனையில் படகில் செல்லும் போது பார்த்தான். சம்பு ஆற்றில் தூக்கிவீசிய மனிதனின் உடல் மிதந்து கொண்டிருந்தது.

இத்தனை நாட்களாக அது தண்ணீரில் எப்படி மிதந்து கொண்டிருக்க முடியும். அவனுக்கு எதுவும் புரியவில்லை.

படகை வேறுபக்கம் செலுத்தினான். அங்கும் அதே பிணம் மிதந்துகொண்டிருந்தது. பயத்தில் முகம்வெளிறிப்போய் அவன் வேகமாக படித்துறைக்குப் போனான். அதன்பிறகு அவன் யமுனையில் படகில் இறங்கவேயில்லை.

தனது வீட்டிலே முடங்கிக் கிடந்தான். வணிகர்களை வீட்டிற்கே அழைத்து வணிகம் செய்தான். ஆற்றங்கரைக்குப் போகவேயில்லை. அவனது வீடு ஆற்றை நோக்கியது. ஒருநாள் அந்த வீட்டிலிருந்த பார்த்தபோது ஆற்றின் தொலைவில் அந்த உடல் மிதந்து கொண்டிருப்பது அவனுக்கு நன்றாகத் தெரிந்தது.

அதைக்கண்டு பயந்து போய் வாய்விட்டு அலறினான்.

அவனது கூச்சல் கேட்டு வந்த பணியாள் என்னவென்று கேட்டபோது, “ஆற்றில் ஏதாவது உடல் மிதப்பது தெரிகிறதா?” எனக்கேட்டான். அவன் உற்றுப்பார்த்துவிட்டு “அப்படி ஒன்றுமில்லை எஜமான்” என்று சொன்னான்.

சம்பு திரும்பிப் பார்த்தான் அவனுக்கு அந்த உடல் தண்ணீரில் மிதப்பது தெரிந்துகொண்டிருந்தது. அவன் வேகமாக தன் அறைக்குள் ஓடிக் கதவைத் தாழிட்டுக்கொண்டான். அடுத்த சில நாட்களுக்கு அவன் வெளியே வரவேயில்லை. ஆனால், காய்ச்சல் கண்டு புலம்ப ஆரம்பித்திருந்தான்.

பண்டிதர் சபை

சத்கரில் பண்டிதர் சபை என்ற ஒன்று இயங்கியது, அதுதான் நகரின் ஒழுக்க விதிகளை, நியாய தர்மங்களை வகுத்தது. மன்னருக்கே தாங்கள்தான் அறிவுரை சொல்லக்கூடியவர்கள் என பண்டிதர் சபையைச் சேர்ந்தவர்கள் கூறினார்கள். பண்டிதர் சபையைச் சேர்ந்த ஒருவர்கூட சத்கரில் பிறந்து வளர்ந்தவர்களில்லை. அவர்கள் வேறு தேசத்திலிருந்து பிழைப்பிற்காக குதிரைகளுடன் வந்தவர்கள். கணக்கிடுவதிலும் நிர்வாகமுறைகளிலும் மொழித் திறனிலும் மிகத் திறமையானவர்கள். அவர்கள் தங்களை மகாபிரஜைகள் என அழைத்துக்கொண்டார்கள்.

மகாபிரஜாக்களுக்கு அரண்மனையிலும் சிறப்பிடம் ஒதுக்கப் பட்டிருந்தது. அவர்களுக்கெனத் தனியான உணவுப்பழக்கமிருந்தது. இசைக்கருவிகளுமிருந்தன. அந்த இசையை அவர்களைத் தவிர எவரும் கற்றுக்கொள்ள அனுமதிக்கப்படவில்லை. பெருவணிகர்கள் அத்தனை பேருக்கும் கணக்காளர்களாக, நிர்வாகிகளாக, ஆலோசகர்களாக மகாபிரஜாக்கள் இருந்தனர்.

அவர்கள் உண்ணும் முறையும் உணவுப்பொருட்களும்கூட புனிதமானதாகக் கருதப்பட்டன. சடங்குகள் நடத்தி வைப்பதற்கும், சாஸ்திரங்களை எடுத்துச் சொல்வதற்கும் அவர்களுக்கு மட்டுமே உரிமை இருப்பதாகச் சொல்லிக்கொண்டார்கள். அவர்கள் நாடோடிகளாக வந்தபோது தங்களின் இரண்டு கடவுளை உடன் கொண்டுவந்திருந்தார்கள். அந்தக் கடவுளுக்காக பெரிய பெரிய கோவில்களை உருவாக்கிக்கொண்டதுடன் அக்கோவிலில் வேறு எவரும் வழிபடக்கூடாது என்ற கட்டுப்பாட்டினையும் உருவாக்கி வைத்திருந்தார்கள். தங்களுக்கான தனிக் குடியிருப்புப் பகுதி ஒன்றையும் அவர்கள் சத்கரில் உருவாக்கியிருந்தார்கள், அந்த வீதிக்குள் எவரும் நுழையக்கூடாது என்பது சட்டம்.

மஹாபிரஜாக்களின் சபை ஒன்று கூடி எடுக்கும் முடிவுகளை பிஷாடன் கட்டாயம் செயல்படுத்த வேண்டும் என்பது எழுதப்படாத விதி.

அந்த மகாபிராஜாக்களின் பண்டித சபை ஒரு இரவு கூடியது. வயதில் மூத்தவரும் சாஸ்திர விற்பன்னருமான வித்யாகர் எழுந்து பேசத்துவங்கினார்.

“நாம் இன்று ஒரு முக்கியமான பிரச்சினை பற்றிப் பேசுவதற்காக ஒன்றுகூடியிருக்கிறோம், இது ஏதோ என் ஒருவன் சம்மந்தப்பட்ட பிரச்சினை மட்டுமில்லை. நாளை உங்கள் யாருக்கு வேண்டுமானாலும் நடக்கலாம், அவமானம் எல்லோருக்கும் பொதுவானதுதானே.’’

“என்ன நடந்தது சொல்லுங்கள்’’ எனப் பலரும் குரல் எழுப்பினார்கள்.

“சத்கர் சந்தையில் நான் போய்க்கொண்டிருந்தபோது, ஒரு வணிகனின் நாய் என்னைப் பார்த்துக் குரைத்தது. அதை அடக்கி வைக்கும்படி வணிகனை நான் எச்சரித்த போது அவன் நாய்களுக்கு மஹாபிரஜாக்களைப் பற்றி ஒன்றும் தெரியாது. காவல் நாய்களுக்குக் குரைப்பதுதான் இயல்பு எனக் கேலி பேசினான். எனது தண்டத்தால் அந்த நாயை ஓங்கி அடித்தபோது அது பாய்ந்து என்னைக் கடித்து விட்டது. கேவலம் ஒரு நாய் அதற்கு நம் மரியாதை தெரியவில்லை. அந்த வணிகன் உடனடியாக தண்டிக்கப்பட வேண்டும், நாய்களின் வாய்கள் தைக்கப்பட வேண்டும்.”

அவர் பேசிக்கொண்டிருக்கும்போதே திரிலோக் குறுக்கிட்டு சொன்னார்.

“உங்களுக்கு நடந்த அதே அவமானம் எனக்கும் நடந்துவிட்டது. வணிகர்கள் வேண்டும் என்றே நாய்களை நம் மீது ஏவி விடுகிறார்களோ என ஒரு சந்தேகம்.”

“இந்த சபை என்ன முடிவு செய்யப்போகிறது” என உரத்த குரலில் கேட்டார் வித்யாகர்.

“நாய்களை வளர்க்கச் சொன்னது முட்டாள் பிஷாடனின் யோசனை. ஆகவே நாய்களை எதிர்ப்பது என்பது மன்னரை எதிர்ப்பது

போன்றதுதான்” என்றார் அஸ்வதரன்.

“பிஷாடனுக்கு நாம் யார் எனக் காட்ட வேண்டும். சத்கர் சந்தை நம்மை நம்பித்தானிருக்கிறது கணக்கர்கள் இல்லாமல் ஏது வணிகம்’’ என்றார் வித்யாகர்.

“உண்மை. இந்த பனியாக்களுக்கு நாம் யார் எனக் காட்ட வேண்டும்.’’

“அதே நேரம் அவர்களைப் பகைத்துக்கொள்ளவும் கூடாது.’’

“அதற்காக நம் மரியாதையை இழக்க வேண்டுமா?”

“இல்லை. குதிரையின் கடிவாளம்போல நாம் செயல்பட வேண்டும்’’

இப்படி ஆளுக்கு ஆள் பேசிக்கொண்டிருந்தார்கள். முடிவில் அவர்கள் ஒரே குரலில் சொன்னார்கள்.

“முடிவை நீங்களே எடுங்கள். நாங்கள் அனைவரும் கட்டுப்படுகிறோம்.”

உறுதியான குரலில் சொன்னார் வித்யாகர்.

“சத்கரில் இருக்கும் நாய்கள் யாவும் உடனே கொல்லப்பட வேண்டும்.”

அப்போது பார்வையற்றவரும் மஹாபண்டிதருமான சுரபர் மெல்லிய குரலில் சொன்னார்.

“கிரகநிலைகள் மோசமாக உள்ளன. ஆகவே நாய்களை உடனே கொல்லாவிட்டால் ஆட்சிக்கு அபாயம் வந்துவிடும் என பிஷாடனைச் சந்தித்துச் சொல்வோம். இது ஒன்றுதான் மன்னரைப் பகைத்துக் கொள்ளாமல் பிரச்சினையைத் தீர்க்கும் வழி.’’

அனைவரும் இந்த யோசனையை ஏற்றுக்கொண்டார்கள். அன்று மாலையே பிஷாடனைச் சந்தித்து தங்களின் முடிவை அறிவித்து விடலாம் என அறிவித்தார்கள்.

“பண்டிதர் சபை வேறு எதையாவது பற்றி விவாதிக்க வேண்டும்” எனக் கேட்டார் சுரபர்.

“ஒளரங்கசீப்பின் ஆட்டுத்தோலை சத்கர் முழுவதும் தேடிக் கொண்டிருக்கிறார்கள், அதைப் பற்றி பண்டிதர் சபை விவாதிக்க முடியுமா’’ எனக் கேலியாகக் கேட்டார் அநிதர்.

“ஏன் விவாதிக்கக்கூடாதா’’ எனக் கேட்டார் சுரபர்.

“இல்லை. நமக்கும் ஆட்டுத்தோலுக்கும் என்ன தொடர்பு? நாம் புதையலுக்கு ஆசைப்படுகிறவர்களா என்ன” எனக் கேட்டார் அநிதர்.

“அப்படி ஒதுங்கியிருக்கக்கூடாது. இதுபோன்ற குழப்பங்களைத் தான் நமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இதற்கென நாம் ஒரு விசேஷ சடங்கு செய்வதாகச் சொல்லி பொன்னும் மணியும்

தானமாகப் பெற வேண்டும். புதையல் வேண்டும் என்றால் பூமிக்கு மேலேயும் நமக்குக் கிடைக்கும் அநிதா.”

“அதுவும் நல்ல யோசனைதான்” என்றார் அநிதர்.

பண்டிதர் சபை சுரபரின் அறிவாற்றலை வியந்தபடியே கலைந்தது, ஐந்து மஹாபிரஜாக்கள் பிஷாடனைச் சந்தித்து ஆசி கூறி அவனுக்கு வந்துள்ள பெரும் ஆபத்தைப் பற்றி எச்சரிக்கை செய்து போகவே வந்துள்ளதாகக் கூறினார்கள்.

பயந்துபோன பிஷாடன் என்ன செய்ய வேண்டும் எனக் கேட்டான்.

“நாய்கள் மரணதேவனின் பிள்ளைகள். அவற்றை சத்கரில் அதிகம் நடமாட விட்டது உன் ஆட்சிக்கு ஆபத்து. நாய்களை உடனே கொல்ல வேண்டும்” என்றார்கள்.

பிஷாடன் உடனே சத்கர் நகரிலுள்ள நாய்களைக் கொன்று குவிக்கும்படியாக ஆணையிட்டான். மஹாபிரஜாக்கள் பிஷாடனுக்கு நன்றி தெரிவித்துவிட்டதோடு ஆட்டுத்தோலுக்காகச் செய்யவேண்டிய சடங்கு பற்றி எடுத்துச் சொன்னார்கள். விசேஷ மந்திரங்களுடன் சடங்குகள் செய்ய உத்தரவு தந்தான் பிஷாடன். பொன்னும் மணியும் அனுப்பி வைக்கப்படும்” என்றும் உறுதி அளித்தான்.

அரண்மனையை விட்டு வெளியே வந்த மஹாபிரஜாக்கள் சொன்னார்கள்.

“ஆள்வது பிஷாடனாக இருக்கலாம், ஆட்டு வைப்பது நாம் தானே.”

பிஷாடனின் உத்தரவு

நாய்களைக் கொல்வது எளிதாயில்லை. ஆனால், பிஷாடனின் உத்தரவு என்பதால் இரவும் பகலும் நாய்களைத் தேடித்தேடிக் கொன்றார்கள். அடிபட்டு வலியில் துடிக்கும் நாய்களின் ஓலம் சத்கர் எங்கும் எதிரொலித்துக்கொண்டிருந்தது. சிலர் வளர்ப்பு நாய்களை அடித்துக்கொல்வதற்குத் தயங்கி விஷமிட்டார்கள். செத்துப்போன நாய்களின் உடலை இடிந்த கோட்டை வாசலை ஒட்டிய அகழியில் வீசியிருந்தார்கள். உயிர்தப்பி ஒளிந்த நாய்களை வேட்டையாட காவலர்கள் குத்தீட்டிகளுடன் அலைந்தார்கள். கொல்வதற்காக தங்களைத் துரத்துகிறார்கள் என அறிந்த நாய்களில் சில வெறி கொண்டு தாக்கின, சில வாயில் எச்சில் ஒழுக, மஞ்சள் பீடித்த கண்களுடன் ஊளையிட்டன. அந்த ஓலம் சத்கரை நடுங்கச் செய்தது. பிஷாடன் தனது அரண்மனையில் இருந்தபடியே நாயின் ஓலத்தைக் கேட்டுக்கொண்டிருந்தான். அவன் முன்னே அமர்ந்தபடி பகடைகளை உருட்டிக்கொண்டிருந்த மாமா முத்கலனிடம் சொன்னான்.

“மாமா நாய்களின் மரண ஓலம் கேட்பதற்கு இனிமையாக இருக்கிறது. ஏன் நாய்கள் ஒரே போல ஊளையிடுகின்றன. சாவை தைரியமாக

எதிர்கொள்ள ஒரு நாய்க்குக் கூடவா துணிச்சல் இல்லை.''

“பிஷாடா, நீ சரமை என்ற நாயைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறாயா?”

“சரமையா, யாருடைய நாயது'' எனக் கேட்டான் பிஷாடன்.

“அது வான் உலகில் வசிக்கும் ஒரு நாய். தேவேந்திரனுக்குச் சொந்தமான நாய். இந்த உலகிலுள்ள எல்லா நாய்களுக்கும் சரமாதான் தாய் என்கிறார்கள். அதற்கு தேவஷூனி என இன்னொரு பெயருமிருக்கிறது. முன்பு ஒரு சமயம். தேவலோகப் பசுக்களை அரசுரர்கள் களவாடிச் சென்றபோது, சரமாதான் அந்தப் பசுக்களைக் கண்டுபிடித்து அவற்றை மீட்டது.

சரமாவின் குட்டிகள் இரண்டு. ஒன்றின் பெயர் ஷயாமா, மற்றொன்றின் பெயர் சபலா. அந்த இரண்டு நாய்களும் நான்கு கண்கள் கொண்டவை. இரண்டு கண்கள் நிகழ்காலத்தைப் பார்க்கும். மீதமுள்ள இரண்டு கண்கள் கடந்த காலத்தையும் எதிர்காலத்தையும் பார்க்கக் கூடியவை. அந்த நாய்களைத்தான் எமதர்மன் தன்னோடு வைத்திருக்கிறான். அவை யமனின் விருப்பத்திற்குரிய நாய்கள்.

மஹாபாரதக் கதையில் ஜனமேஜயன் தனது தம்பிகளுடன் பெரிய வேள்வி ஒன்றை நடத்திக்கொண்டிருந்தான். சரமாவின் குட்டி நாய் அந்த வேள்வி நடக்கும் இடத்திற்கு வந்தது. ஜனமேஜயனின் தம்பிகள் மூவரும் அந்த நாய்க்குட்டியை அடித்து நையப்புடைத்து விரட்டிவிட்டனர். அந்தக் குட்டியும் வலியால் கதறிக் கொண்டே தனது தாயிடம் சென்று முறையிட்டது.

“நீ என்ன தவறு செய்தாய்?” என சரமா கேட்டது.

“நான் எந்தத் தவறும் செய்யவில்லை. ஆனால், என்னை அடித்து வதைத்துவிட்டார்கள்'' என்றது குட்டிநாய்.

அதனைக் கேட்ட சரமா, தனது குட்டியின் துயரைப் பொறுக்கமுடியாமல், வேள்வி நடக்கும் இடத்திற்கு கோபத்துடன் வந்து சேர்ந்தது.

ஜனமேஜயனிடம் கோபத்துடன் “எந்தக் குற்றமும் செய்யாத என் குட்டியை உன் சகோதரர்கள் ஏன் அடித்தார்கள்'' எனக்கேட்டது.

“ஏதேனும் அபவாதம் ஏற்பட்டுவிடுமோ என அஞ்சி நடந்து கொண்டார்கள்'' என்றான் ஜனமேஜயன்.

“நடக்காத ஒன்றை நினைத்துக்கொண்டு தண்டிப்பது எந்தவகையில் நியாயம்'' எனக் கேட்டது சரமா.

“நாய்களை தண்டிக்க நீதி சாஸ்திரங்கள் தேவையா என்ன'' எனக் கேட்டான் ஜனமேஜயன்.

“நீதி அனைவருக்கும் பொதுவானதே. என் குட்டிகளை தண்டித்த

உனக்கு நீ அறியாதிருக்கும்போது தீமை வந்தடையட்டும்” என்று சபித்தது. சொன்னது போலவே சரமாவின் சாபம் பலித்தது மருமகனே.நாய்களிடம் நாம் எப்போதும் எச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டும். அவை வான்உலகின் தூதுவர்கள்.”

பிஷாடன் சரமையின் கதையைக் கேட்டு சிரித்தபடியே சொன்னான்.

“பயமுறுத்துகிறீர்களா மாமா, நாய்களால் இந்த பிஷாடனை என்ன செய்துவிட முடியும்?”

“உன்னை ஒன்றும் செய்துவிட முடியாது. ஆனால், அது சத்கருக்கு பெரும் ஆபத்தை உண்டாக்கிவிட முடியும்.”

“என்னைத் தவிர இன்னொருவரால் சத்கரை அழித்துவிட முடியாது.”

“அது உண்மை. இது உன் தேசம். இதை அழிக்கும் உரிமை உனக்கு மட்டும்தான் இருக்கிறது.”

“மாமா, எனக்கு நான்கு கண்கள் கொண்ட நாய்கள் வேண்டும், யமனிடம் இருந்து எப்படி அதை அபகரிப்பது.”

“பிஷாடா, அந்த நாய்கள் துரதிருஷ்டமானவை. நமக்கு அவை வேண்டாம். இந்த மஹாபிரஜைகளை நம்பாதே, அவர்கள் உன்னைப் பகடையாகப் பயன்படுத்துகிறார்கள்.”

“அறிவாளிகளால் ஒரு ஆபத்தும் வராது மாமா, அப்பாவிகள்தான் பயப்பட வேண்டியவர்கள். அவர்கள் எப்போது ஆத்திரம் கொள்வார்கள் என நம்மால் அறிந்துகொள்ள முடியாது. அறிவாளிகள் எதையும் மனதிற்குள்தான் கற்பனை செய்துகொள்வார்கள், நிஜத்தில் செய்வதற்குத் துணிச்சல் இருக்காது.”

“இருந்தாலும் மஹாபிரஜைகள் நாம் நினைப்பதுபோல எளிமையானவர்களில்லை, அவர்கள் தந்திரசாலிகள். நெருப்பைக் கையாளத் தெரிந்தவர்கள்.”

“இருக்கட்டும். அந்தத் தந்திரங்களை பிஷாடன் அறிவான்.”

“நீ மஹாபிரஜைகளைவிடவும் புத்திசாலி என்பதை அறிவேன்” என்றார் முத்கலன்.

“அடிக்கடி இப்படி புகழுந்துகொண்டேயிருங்கள் மாமா, புகழ்ச்சிக்கு அளவு ஏது. புகழ் உரைகளைக் கேட்கும் போது சந்தனம் பூசிக்கொள்வதுபோலக் குளிர்ச்சியாக இருக்கிறது. மஹாபிரஜைகள் நன்றாகப் புகழந்தெரிந்தவர்கள்.”

“அறிவாளிகளின் புகழ்ச்சி அலாதியானது பிஷாடா’’ எனச் சிரித்தார் முத்கலன்.

திடீரென பிஷாடன் கண்களை இடுக்கிக்கொண்டு காதுகளைக் கூர்மையாக்கிக்கொண்டு கேட்டான். அவன் முகம் மாறியது. ஆத்திரம்

ஆனவன் போலக் கத்தினான்.

“வெறி கொண்ட நாய் ஒன்று குதிரைகளைக் கடிக்கிறது. அதைத்தேடிக் கொல்லுங்கள்.”

பிஷாடனின் வெறிகொண்ட கண்களை வெறித்துப் பார்த்தபடியே முத்கலன் சொன்னார்,

“விடிவதற்குள் எல்லா நாய்களும் கொல்லப்பட்டுவிடும்.”

எங்கோ ஒலிக்கும் நாயின் ஊளையைக் கேட்டு பிஷாடன் பலமாகச் சிரித்தான். பிறகு உற்சாகமிகுதியில் அவன் உடைகளைக் களைந்து எறிந்தபடியே ஆடத்துவங்கினான்.

ரெமியஸ்

ரெமியஸ்ஸின் சமையற்காரனாகவும் எடுபிடி ஆளாகவும் இருந்த ராபி என்ற பெர்ஷியன் மதுப்போத்தலும் கண்ணாடிக் கோப்பையும் எடுத்து வைத்து சூடான வான்கோழி இறைச்சியுடன் காத்துக் கொண்டிருந்தான்.

ரெமியஸ் வான்கோழி இறைச்சியின் மணத்தை நுகர்ந்தபடியே சொன்னான்.

“இங்கே வந்தபிறகு நான் நிறைய சாப்பிடத் துவங்கிவிட்டேன்.”

“மனதில் சந்தோஷம் நிரம்பியிருந்தால் நம்மை அறியாமலே நிறைய சாப்பிடுவோம் ஜனாப்'' என்றான் ராபி.

“சரியாகச் சொன்னாய் ராபி. சத்கர் வந்தபிறகு நான் மிகுந்த சந்தோஷமாக இருக்கிறேன்.”

அப்போது ரெமியஸ்ஸைக் காண்பதற்காக பொன்வணிகனும் பெருங்குடிகாரனுமான புவன் வந்திருந்தான். அவன் ரெமியஸ் குடித்துக்கொண்டிருப்பதைக் கண்டதும் சந்தோஷத்துடன் கண்கள் விரிய வெளிநாட்டு மதுப் போத்தலை வெறித்துப் பார்த்தபடியே வணங்கினான்.

ரெமியஸ் நரித்தனமிக்க புவனேந்திரனின் கண்களை வெறித்துப் பார்த்தபடியே தனது மதுக்கோப்பையை உயர்த்திச் சொன்னான்.

“நல்வரவு. அமருங்கள்.”

ரெமியஸ் புவனேந்திரனுக்கும் ஒரு கோப்பை மதுவை ஊற்றி நீட்டினான், அதை வாங்கி ருசித்தபடியே புவன் சொன்னான்.

“இதுதான் அமுதமா? என்ன ருசி. என்ன மணம்.''

அவன் சொல்வது என்னவென்று புரியாமல் ரெமியஸ் திகைத்தபோது ராபி விளக்கிச் சொன்னான்.

“இந்த மதுவை வான்உலகில் கடவுள்குடிக்கும் பானம் எனப் பாராட்டுகிறார்.”

ரெமியஸ் சிரித்தபடியே சொன்னான்.

“நீங்கள் மண்ணுலகில் வாழும் கடவுள் இல்லையா, அதான் கடவுளுக்கான பானத்தையே தந்திருக்கிறேன்.”

அதைக் கேட்டுச் சிரித்தபடியே புவன் சொன்னான். “பேசக்கற்றுக் கொண்டுவிட்டாய் ரெமியஸ்.”

“பேசத்தெரியாதவன் வணிகம் செய்யமுடியாது.”

“நீ வெறும் வணிகன் மட்டுமில்லை. இந்த நாட்டின் முக்கிய

விருந்தாளி.”

“அது பிஷாடன் அளித்த கௌரவம்.”

“ஆமாம் ரெமியஸ். மன்னருக்கு மட்டும்தான் விளையாட்டுப் பொருட்களைப் பரிசளிப்பாயா?”

“அடுத்த கப்பலில் நிறைய விளையாட்டுப் பொருட்கள் வருகின்றன’’ எனக் கண்சிமிட்டினான் ரெமியஸ்.

“அப்போது என்னை மறந்துவிடாதே’’ என உற்சாகமான குரலில் சொன்னதுடன் ரெமியஸ் அருகில் வந்து ரகசியம் போல சொன்னான்

“பிஷாடனைப் பற்றி ஒரு விஷயம் கேள்விப்பட்டேன்’’

“தெரியும், ஒரு குரங்கிற்கு அவர் அமந்தாவைத் திருமணம் செய்துவிட்டதைப் பற்றித்தானே’’

“அந்தப் பெண் தற்கொலை செய்துகொண்டு இறந்து போய் விட்டதைப் பற்றி’’ என்றான் புவன்.

“அது எப்போது நடந்தது?”

“நேற்றிரவு. அந்தப் பெண் குரங்கின் முன்னால் தன் கழுத்தைத் தானே அறுத்துக்கொண்டு இறந்து போய்விட்டாள்.

அந்தக் குரங்கு வெறிபிடித்துக் கத்திக்கொண்டிருக்கிறது. அதை ஒரு கூண்டில் அடைத்து வைத்திருக்கிறார்கள்.’’

“பிஷாட மன்னர் விசித்திரமானவர். எதற்காக ஒரு குரங்கைத் தனது தோழனாக வைத்திருந்தார்” எனக் கோப்பையை உயர்த்திய படியே கேட்டான் ரெமியஸ்.

“அந்தக் குரங்கு சாதாரணமானதில்லை. அது சதுரங்கம் ஆடக் கூடியது, பேசக்கூடியது என்கிறார்கள்.”

“அப்படி பழக்கியிருப்பார்கள். கிளிகள் பேசும் போது குரங்குகள் பேசாதா என்ன’’ எனக் கேட்டான் ரெமியஸ்.

“இல்லை ரெமியஸ். இந்தக் குரங்கு மனிதனைப் போலவே நடந்து கொள்ளக்கூடியது.”

“பாவம் அமந்தா. நிறைய கனவுகளுடன் வந்தாள். பிஷாடன் ரசனையற்றவன். அவளை ஒரு குரங்கிற்குத் திருமணம் செய்து வைத்துவிட்டான்” என்றபடியே குடிக்கத் துவங்கினான்.

“அதை நீ நினைத்தால் தடுத்திருக்க முடியும்’’ என்றான் புவன்.

“தடுத்திருந்தால் பிஷாடன் என்னை நாட்டை விட்டுத் துரத்தியிருப்பான். அவனது முட்டாள்தனம்தான் நமது சொத்து. அதை முழுமை யாக நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.’’

“அதற்கு வணிகம் செய்தால் மட்டும் போதாது” எனக் கண் சிமிட்டினான் புவன்.

கையிலிருந்த மதுக்கோப்பையைக் கீழே வைத்துவிட்டு ரெமியஸ் ஏறிட்டுப் பார்த்தபடியே கேட்டான்,

“வேறு என்ன செய்ய வேண்டும்?”

“அதிகாரத்திற்குள் அடி எடுத்து வைக்க வேண்டும்.”

“அது சூழ்ச்சிகளும் குழப்பமும் நிறைந்த உலகம், வணிகத்தைப் போல நம் கட்டுப்பாட்டில் இருக்காது.”

“ஆர்ப்பரிக்கும் கடலைக் கடந்துவருவதை விட அது ஒன்றும் பெரிய விஷயமில்லை ரெமியஸ்.”

“அதிகாரம் நம் கைக்கு எளிதாக வந்துவிடாது புவன்.”

“ஆனால், அதை அடைவதற்கான படிக்கட்டுகள் திறந்துதான் இருக்கின்றன.”

“நீ சொல்வது ஒன்றும் புரியவில்லை புவன்.”

“அரியணையில் இடம் கேட்டால்தான் கிடைக்காது. ஆனால், வரிவசூலிக்கும் உரிமை கேட்டால் கிடைத்துவிடும்தானே.”

“மன்னருக்காக நாம் ஏன் வரி வசூலித்துத் தர வேண்டும்.”

“முட்டாள் ரெமியஸ், வரிவசூல் செய்வது என்பது தங்கப்புதையலுக்குள் நாம் கைவிடுவதைப் போன்றது. வேண்டியதை அள்ளிக்கொள்ளலாம்.”

“ஆனால், இத்தனை காலம் சுங்க அதிகாரிகள்தானே வரிவசூல் செய்கிறார்கள். அவர்கள் கோபம் நம்பக்கம் திரும்பிவிடாதா?”

“புதிய வரியை நாமே உண்டாக்கினால்.”

“எதற்குப் புதிய வரி போடுவது?”

“அதை நீதான் முடிவு செய்ய வேண்டும். ஆனால், பிஷாட மன்னரிடம் நீ வரிவசூல் செய்வதற்கான உரிமை கேட்டால் உடனே கிடைத்துவிடும்.”

“யோசிக்கிறேன்.”

“டெல்லியில் ஔரங்கசீப்பின் மரணத்திற்குப் பிறகு ஒரே குழப்பமாக உள்ளது. இந்தக் குழப்பங்கள் நமக்கு சாதகமானது.”

“புயலைக்கூட நாம் கணித்துவிட முடியும். அரசியலை எந்தப் பக்கம் திரும்பும் எனக் கணித்துவிட முடியாது’’ என்றான் ரெமியஸ்.

“மீகாமன்கள் காற்றைக் கண்டு பயப்படுவதில்லை’’ எனச் சிரித்தான்

புவன்.

மிளகிட்டுப் பொரித்த முயல்கறியைக் கொண்டுவந்து வைத்தான் ராபி. அதைப் பிய்த்துத் தின்றபடியே புவன் இரவெல்லாம் பேசிக்கொண்டிருந்தான்.

போதையில் மயங்கிப்போயிருந்த ரெமியஸ்ஸுக்கு புவன் பேசியது முழுவதும் நினைவில் இல்லை. ஆனால், அதிகாரத்திற்குள் அடி எடுத்து வைக்க வேண்டும் என்ற வார்த்தை மட்டும் திரும்பத் திரும்ப மனதில் கேட்டுக் கொண்டேயிருந்தது.

ரெமியஸ் உறக்கம் அழுத்திய கண்களுடன் அமந்தாவை நினைத்து புலம்பிக்கொண்டிருந்தான், அவளுடன் படுக்கையைப் பகிர்ந்து கொண்ட நினைவு அவனை வாட்டியது.

•••

அநாம் என்ற அந்தக்குரங்கு தனக்குத் திருமணம் செய்து வைக்கப் பட்ட பெண்ணை வெறித்துப் பார்த்தபடியே இருந்தது.

அமந்தா அந்தக் குரங்கு தன்னை நெருங்கிவிடக்கூடாது என்பதற்காக கையில் ஒரு கத்தியை ஏந்தியபடியே மணக்கோல உடையில் நின்றிருந்தாள்.

குரங்கு தனது படுக்கையில் தாவி உட்கார்ந்துகொண்டது.

அதைக் கண்டு எரிச்சலுடன் அமந்தா சொன்னாள்.

“உன்னைக் கொல்வதுதான் பிஷாடனை பழிவாங்குவதற்கான ஒரே வழி.”

குரங்கு அவளை வெறித்துப் பார்த்தபடியே இருந்தது. அதன் கண்கள் நெருப்பைப் போல மினுங்கின.

அநாமை நோக்கி அவள் கத்தியோடு பாய்ந்தாள்.

அநாம் ஒரே தாவலில் படுக்கையின் மேலிருந்த சரவிளக்குகள் மேலேறிக்கொண்டது.

அவள் ஆவேசத்துடன் அக்குரங்கைக் கொல்ல முயன்றாள்.

“உன்னைக் கொல்ல முடியாது என்றால் என்னை நானே கொன்றுவிடுவேன்” என சப்தமிட்டாள்.

குரங்கு அவளை ஊடுருவுது போல பார்த்துக்கொண்டிருந்தது.

அவள் அநாமின் கண்முன்பாக தன் கையில் இருந்த கத்தியை அடிவயிற்றினுள் ஆழமாகச் செலுத்தினாள்.

வயிறு கிழிந்து குருதி பெருகியோடியது. அவள் பயங்கரமான சிரிப்புடன் சொன்னாள், “நான் சாவதை நீ பார்த்துக்கொண்டேயிருக்க

வேண்டும். அதுதான் உனக்கு தண்டனை.”

அநாம் தன் கண்முன்னே அமந்தா குருதி பெருகி செத்துக் கொண்டிருப்பதை வெறித்துப் பார்த்துக்கொண்டேயிருந்தது.

பிறகு அவள் இறந்துவிட்டாள் எனத் தெரிந்தபிறகு இறங்கி அருகில் வந்து அவள் வயிற்றில் செருகப்பட்ட கத்தியைப் பிடுங்கி வீசியது.

பிறகு அவள் முகத்தை தன் கைகளால் தொட்டுப் பார்த்தது.

இவ்வளவு மிருதுவானவர்களா பெண்கள், அவளது ஆடையை விலக்கி அவளது ஸ்தனங்களைத் தொட்டுப் பார்த்தது. பிறகு அவள் உடையில் இருந்தமணத்தை முகர்ந்து பார்த்தது. பிறகு வெறிபிடித்தது போல அநாம் அலறத் துவங்கியது.

படுக்கையைக் கிழித்து எறிந்தது. அறையில் இருந்த பொருட்களை எடுத்து வீசியது. விளக்கைப் பிடுங்கி தூர எறிந்தது. அதன் ஆர்ப்பாட்டத்தையும் வெறித்தனமான குரலையும் கண்டு பணிப்பெண்கள் பயந்துபோனார்கள்.

தன் கண்முன்னே இறந்து கிடக்கும் பெண் உடலைக் காணப் பிடிக்காததுபோல அது அங்குமிங்கும் தாவி ஓடியது.

ஓடிவந்த அரண்மனைக் காவலர்கள் கழுத்தை அறுத்துக்கொண்டு இறந்து கிடக்கும் அமந்தாவின் உடலை மீட்டார்கள். குரங்கு இரவெல்லாம் அலறிக்கொண்டேயிருந்தது. மறுநாளில் தான் அதைக்கொன்றுவிடுவது என பிஷாடன் முடிவு செய்தான்.

•••

அமந்தா இறந்துபோனதைவிடவும் தான் நேசித்த குரங்கு வெறிபிடித்து கூண்டில் அடைக்கப்பட்டது பிஷாடனுக்கு மிகவும் வருத்ததைத் தந்திருந்தது. அதைவிடவும் அமந்தா இறந்துபோன நாளில் இருந்து அடிலா அழுதுகொண்டேயிருந்தாள். திடீரென அரண்மனையை இருள் பீடித்துவிட்டதுபோல உணர்ந்தான் பிஷாடன்.

இரவு முழுவதும் அவன் உறக்கமில்லாமல் அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டேயிருந்தான், அரண்மனை வைத்தியர்கள் அவனுக்காக விசேஷ மருந்து அரைத்துக்கொண்டுவந்து தந்தார்கள். அந்தக் குளிகைகளை விழுங்கியபோதும் அவனுக்கு உறக்கம் வரவில்லை. இசைக்கலைஞர்கள் சாரங்கி வாசித்து அமைதிப்படுத்தப் பார்த்தார்கள். இசையைக் கேட்கக் கேட்க கோபம்தான் கொப்பளித்தது, பிஷாடனின் கோபம் காற்றின் பக்கம் திரும்பியது

. “இந்தக் குளிர்காற்றுதான் என்னைத் தூங்கவிடாமல் செய்கிறது. இந்தக் காற்றைத் தடுத்து நிறுத்துங்கள்” எனக் கத்தினான்.

அறையின் கதவுகளையும் ஜன்னல்களையும் மூடினார்கள். ஆனாலும் காற்று அடித்துக்கொண்டேதானிருந்தது. அதை சகித்துக்

கொள்ளமுடியாமல் பிஷாடன் அலறினான். தனது வாளை உருவி காற்றைக் கொல்வதற்காக ஓடினான்.

தனது இயலாமையை உணர்ந்தவன் போல அவன் வாளை வீசி எறிந்துவிட்டு தான் உடனே குளிக்க ஏற்பாடு செய்யும்படியாக கூச்சலிட்டான்.

இரவெல்லாம் அவன் குளித்துக்கொண்டேயிருந்தான். தலையில் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருக்கும்போதே தன்னை அறியாமல் பிஷாடன் உறங்கினான். உடனே பணிப்பெண்கள் தண்ணீர் ஊற்றுவதை நிறுத்துவார்கள். சில நிமிடங்களில் விழித்துக்கொண்டு அலறுவான். அந்தப் பெண்கள் மறுபடியும் வாசனைத் தைலம் கலந்த தண்ணீரை ஊற்ற ஆரம்பிப்பார்கள். விடிகாலையில் அவன் தன்னை அறியாமல் உறங்கியபோது அந்தப் பணிப்பெண்கள் சோர்ந்து போய் தரையில் விழுந்து கிடந்தார்கள்.

பிஷாடன் உறங்கி விழித்தபோது பின்மதியமாகியிருந்தது. அவன் அறையின் மூடப்பட்ட ஜன்னல்களைத் திறந்துவிடும்படி கத்தினான். பளீரென வெயில் உள்ளே பிரவேசித்தது. கூச்சத்துடன் கண்களைச் சுருக்கியபடியே அவன் சோம்பல் முறித்துக்கொண்டு பணிப்பெண்ணிடம் கேட்டான்.

“நேற்றிரவு நான் என்ன சாப்பிட்டேன்?”

“நீங்கள் சாப்பிடவேயில்லை அரசே’’ என்றாள்.

“ஏன் சாப்பிடவில்லை?”

“நீங்கள்தான் வேண்டாம் என்று உணவைத் திருப்பி அனுப்பி விட்டீர்கள்.”

“நேற்றிரவு நீ சாப்பிட்டாயா?”

அவள் பதில் பேசாமல் இருந்தாள். அவன் வெறித்தனமாக அலறினான்.

“நேற்றிரவு நான் சாப்பிடவில்லை. ஆனால், நீங்கள் சாப்பிட்டு இருக்கிறீர்கள். யார் எல்லாம் நேற்று இரவு சாப்பிட்டார்களோ அவர்கள் அத்தனை பேரின் நாக்கையும் பிடுங்கிவிடுங்கள்.”

அப்போது அறைக்குள் நுழைந்த பிஷாடனின் தாய்மாமன் கேலியான குரலில் கேட்டார்,

“மாமனின் நாக்கையும்தானே பிஷாடா?’’

“இல்லை மாமா, இந்தப் பணிப்பெண்கள் என்னைப் பட்டினி போட்டுவிட்டார்கள்.”

“இல்லை பிஷாடா. நீ சாப்பிட்டாய். என்னுடன்தான் சாப்பிட்டாய், மறந்துவிட்டாயா?”

“இந்தப் பணிப்பெண் இல்லை என்றாளே.”

“அவளுக்குத் தெரியாது. நான் இரவில் உன்னோடு தானிருந்தேன். நீ அதிகம் குடித்திருந்தாய். அதனால் தன் உணர்வு மங்கிப்போயிருந்தது.”

“நான் சாப்பிட்டு இருந்தால் சந்தோஷம் மாமா.”

“நீயே சாப்பிடாதபோது நாங்கள் எப்படி சாப்பிடுவோம்? ராஜமரியாதை அழிந்து போய்விடுமா என்ன.”

“உங்களைப் போல என்னைப் புரிந்துகொண்டவர் எவருமில்லை மாமா'' என பிஷாடன் சந்தோஷமாக சிரித்தான்.

அவனை மேலும் உற்சாகப்படுத்துவதுபோல முத்கலன் சொன்னார்,

“வெளிநாட்டிலிருந்து அடுத்த கப்பல் நாளை வந்து சேரப்போகிறது.''

“கப்பலில் என்ன கொண்டுவருகிறார்கள்?”

“அது ரெமியஸ்ஸுக்குத்தான் தெரியும்.”

“அந்தப் பொருட்கள் மொத்தமும் எனக்குத்தான். இப்போதே ரெமியஸ்ஸை அழைத்து வரச் சொல்லுங்கள்.”

“பிஷாடா, உன்னை சந்தோஷப்படுத்துவதைப் பற்றியே நான் எப்போதும் யோசிப்பவன். இதைக் கூடவா செய்ய மாட்டேன். உடனே வரச்செய்கிறேன். கூண்டில் அடைக்கப்பட்ட குரங்கிற்கு வெறிமுற்றிவிட்டது. அதைக் கொன்றுவிடலாம் என நினைக்கிறேன்.''

“அநாம் கொல்லப்படுவதை நான் பார்க்கவிரும்புகிறேன் மாமா.''

“விருப்பமானவர்கள் கொல்லப்படுவதைக் காண்பது அளவற்ற சந்தோஷம் தரக்கூடியது. உன்னை நினைத்து வியந்துபோகிறேன் பிஷடா'' என்றார் மாமா.

“அந்தக் குரங்கை ரங்மஹாலில் வைத்துதான் கொல்ல வேண்டும், அநாமிற்கு மிகவும் விருப்பமான இடமது.”

“அப்படியே செய்துவிடலாம். கூண்டோடு குரங்கைக் கொண்டு வரச்சொல்கிறேன்.''

“ரெமியஸ்ஸையும் அங்கே வரவழைத்துவிடுங்கள்'' என்றபடியே தனது ஹுக்காவை உறிஞ்சத்துவங்கினான்.

நளாவின் கதை

தூமகேது கைது செய்யப்பட்டு காலாவிற்குக் கொண்டு செல்லப்பட்ட சில மாதங்கள் நளா மிகவும் கஷ்டப்பட்டாள், அவளது பிள்ளைகள் ஷர்மி வீட்டில் போய் பசியாறினார்கள், படுக்கையில் கிடக்கும் தாத்தாவிற்கும் அம்மாவிற்கும் கூட ஷர்மி உணவு கொண்டுவந்து தந்தாள்.

நளா பிறந்த கிராமத்தின் பெயர் தன்பன். மிகவும் வறுமையான குடும்பத்தின் முதல் மகளாகப் பிறந்து வளர்ந்த நளா ஆறு வயதில் திருமணம் செய்து வைக்கப்பட்டாள்.

அதற்கு பிறகும் ஒன்றிரண்டு ஆண்டுகள் அவள் பாகிம் வீட்டில் திருகை திரித்துக்கொண்டிருந்தாள். அவள் அளவிற்கு வேகமாக திருகை சுற்ற யாராலும் முடியாது. எவ்வளவு அரிசி, சோளம், கோதுமை எதுவாக இருந்தாலும் திரித்து முடித்துவிடுவாள். அதற்காவே அவளை வேலைக்குக் கூப்பிடுவார்கள். நாள் முழுவதும் திரிகை திரித்துத் தந்தால் அரைப்படி மாவு தருவார்கள் என்பதற்காக அவள் அசராமல் திரிகை திரித்துக் கொண்டிருந்தாள்.

அந்த நாட்களில் ஊரில் வறுமையானவர்களே அதிகமிருந்தார்கள். பணக்கார வீடுகள் ஒன்றே இரண்டோதானிருந்தன. அதிலும் அவளது ஊர் சிறிய கிராமம் என்பதால் பாகிம் குடும்பம் ஒன்று மட்டும்தான் வசதியானதாக இருந்தது. ஊரின் நடுவில் அவர்கள் பெரிய அரண்மனை கட்டியிருந்தார்கள்.

நளாவின் அப்பா பொம்மைகள் செய்பவர். மண் பொம்மைகள் செய்து அதற்கு வர்ணம் பூசி சந்தையில் விற்றுவரக்கூடியவர். ஆகவே அவர் எப்போதும் மண்ணைக் குழைத்து பொம்மைகள் செய்துகொண்டேயிருப்பார்.

வாரம் ஒரு நாள் நளாவின் அம்மாவும் அப்பாவும் வர்ணம் அடித்த பொம்மைகளைக் கூடையில் தூக்கிக்கொண்டு சந்தைக்குப்போய்வருவார்கள். பொம்மைகள் விற்பதில் எவ்வளவு காசு கிடைத்து விடப்போகிறது. நளா எப்போதும் பசித்த வயிற்றோடுதானிருந்தாள். அவள் வயதை ஒத்த சிறுமிகள் பலரும் அவளைப் போலவே வேலை செய்துகொண்டு தானிருந்தார்கள், ஒரு நாள் முழுவதும் எந்த வேலையும் செய்யாமல் ஆற்றங்கரையில் விளையாடிக் கொண்டிருக்க வேண்டும் என நளா ஆசைப்பட்டுக் கொண்டிருந்தாள்.

தன்பனின் கிழக்கே ஆறு ஓடிக்கொண்டிருந்தது, ஆற்றில் இரண்டு இடத்தில் படித்துறைகள் அமைத்திருந்தார்கள்.அந்தப் படித்துறைகளை ஒட்டியே நிசாரன்கோவில் ஒன்றுமிருந்தது. புளியமரங்கள் அடர்ந்த மைதானத்தைத் தாண்டித்தான் ஆற்றின் படித்துறைக்குப் போகவேண்டும். அந்தப் பாதை ரம்மியமானது. எப்போதும் வெயில் படாமல் குளுமையாக இருக்கும். வேலையை முடித்துவிட்டு தினமும் மாலை நேரம்தான் நளா குளிக்கப் போவாள். அப்படிக் குளிப்பதற்காக நடந்து போகும்போது அவள் உதிர்ந்து கிடக்கும் புளிய இலைகளைக் கையில் அள்ளி முகர்ந்தபடியே மரங்களை ஆசையுடன் தடவிக்கொடுப்பாள். அந்த இடத்தில் எப்போதும் புளிப்புவாடை அடித்துக் கொண்டேயிருக்கும்.

ஒருநாள் மாலை அரிசி திரித்துவிட்டு கூலியாக வாங்கிய மாவுடன் அவள் புளியந்தோப்பில் தனியே நடந்து வந்துகொண்டிருந்தபோது ஒரு ஆள் மரத்தடியில் துண்டை விரித்து உறங்கிக்கொண்டிருப்பதைக் கண்டாள். அந்த ஆள் அருகில் ஒரு கூண்டில் கிளி ஒன்றிருந்தது. கிளி ஜோசியக்காரன் உறங்கிக்கொண்டிருக்கிறான் என்பதை அறிந்தவள் போல மெதுவாக நடந்து போய் அந்தக் கூண்டைத் தூக்கிக்கொண்டு போனாள்.

“ஆற்றின் படித்துறையில் அந்தக் கூண்டினை வைத்துவிட்டு கிளியைப் பார்த்து உன் பெயர் என்ன'' எனக் கேட்டாள் நளா.

“ரிங்கா” என்றது கிளி

அவள் ஆசையுடன் “ரிங்கா கூண்டைத் திறந்துவிட்டால் பறந்து போய்விடுவாயா” எனக் கேட்டாள்.

கிளி சிறகடித்தது. அவள் மெதுவாக கூண்டின் கதவை உயர்த்தி கிளியை வெளியே எடுத்தாள். கிளி பறக்க முடியாமல் வேகமாக நடந்தபடியே அங்குமிங்கும் ஓடியது. அவள் பிடிக்க எத்தனித்த போது கிளி சப்தமிட்டது.

கிளியின் குரல் கேட்டு விழித்துக்கொண்ட ஜோசியக்காரன் கூண்டினைத் தேடினான். கிளி சப்தம் தூரத்தில் கேட்பதை அறிந்து வேகமாக நடந்து வந்தான். திறந்த கூண்டின் முன்னால் நளா நின்று கொண்டிருப்பதையும் கிளி வெளியே ஓடிக்கொண்டிருப்பதையும் பார்த்து ஆத்திரத்துடன் “ரிங்கா நில்லு” என்றான்.

கிளி அவன் சப்தம் கேட்டதும் அப்படியே நின்றது.

அவன் அதைக் கையில் பிடித்து திரும்பவும் கூண்டில் அடைத்து விட்டு உன் பேர் என்ன என நளாவைப் பார்த்துக் கேட்டான்.

‘‘நளா''

‘‘கிளிக்கூண்டை எதுக்கு திறந்துவிட்டே” எனக் கேட்டான்.

‘‘தப்பு. இனிமே செய்ய மாட்டேன்” என்றாள் நளா.

‘‘தப்புக்கு தண்டனை கொடுக்கணும், என் கூட வா” என அவளை புளியந்தோப்பினுள் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு போனான். பகல் முடிந்து இருட்டிக் கொண்டு வந்தது. புளியந்தோப்பில் ஆள் நடமாட்டமேயில்லை.

பிறகு தனது வேஷ்டியை அவிழ்த்துவிட்டு நிர்வாணமாக நின்றான். அவள் விலகியோட எத்தனித்தாள். அவன் பெரிய பற்களைக் காட்டி இளித்தான்.

அவளுக்கு பயத்தில் மூத்திரம் வருவது போலிருந்தது. கைகள் நடுங்கிக்கொண்டிருந்தன. அவன் குனிந்து அவள் கன்னத்தில் முத்த

மிட்டபடியே மிரட்டும் குரலில் சொன்னான்,

“உன்னோட பாவாடையைக் கழட்டு.”

யாரோ புளியந்தோப்பிற்குள் விறகு சுமந்தபடியே வருவதுபோல தெரிந்தது.

அங்கிருந்து ஓடிவிட வேண்டும் என்ற பதைபதைப்பு நளாவிற்கு அதிகமானது. கண்ணை மூடிக்கொண்டு ஓட ஆரம்பித்தாள். நிர்வாணமாக இருந்த அவன் என்ன செய்வது எனப் புரியாமல் அவள் பின்னாடியே ஓடிவந்தான்.

மேற்கே நீண்டு செல்லும் சாலையில் அவள் ஓடிக்கொண்டேயிருந்தாள். அந்த ஜோசியக்காரன் பின்னால் வரவில்லை. ஓடி மூச்சிரைத்து அவள் வடக்குத் தெருவிற்குள் வந்தபோது ஒரே இருட்டாயிருந்தது. அந்த ஊரில் ஒரு சில வீடுகளில்தான் விளக்கு வைக்கும் வழக்கமிருந்தது. பெரும்பான்மை வீடுகள் இருளுக்குள்தான் இருந்தன. அவள் இருட்டுக்குப் பழகியிருந்தாள்.

வீட்டு வாசலுக்கு வந்தபோதுதான் துணியில் முடிந்துகொண்டு வந்த கோதுமை மாவை புளியந்தோப்பிலே விட்டுவைத்தது நினைவிற்கு வந்தது.

நளாவின் அம்மா மாவு கொண்டுவராமல் போனதற்காக அடித்தாள். ஆனால், நளா அழவேயில்லை. அன்றிரவு அவளுக்கு உறக்கம் வரவேயில்லை. வாழ்வில் முதன்முறையாக இப்படி ஒரு அசிங்கமான விஷயம் நடந்தேறியதை நினைத்து வருத்தப்பட்டுக் கொண்டேயிருந்தாள். இது நடந்த சில மாதங்களுக்குள் அவளை புருஷன் வீட்டிற்கு அழைத்துப் போவதற்காக சத்கரிலிருந்து தூமகேது வின் அப்பாவும் ஆட்களும் வந்திருந்தார்கள்.

பிள்ளைகளைப் பெற்று வளர்த்து எடுப்பது எளிதானதில்லை. நல்லவேளை. ஏழு ஆண்பிள்ளைகள். மற்றவர்கள் பெண்கள். ஏழு பெண்கள் பிறந்திருந்தால் தூமகேது திண்டாடியிருப்பான் என நளா நினைத்துக்கொள்வாள். மூத்தவள் ஷர்மி அப்படியே அப்பனைக் கொண்டிருந்தாள். அவனைப் போலவே அப்பாவியும்கூட. நல்லவேளை அவளுக்குப் பொருத்தமான ஒருவனைத் திருமணம் செய்து கொடுத்து விட்டார்கள். ஷர்மியும் தன்னைப் போலவே நன்றாக திருகை திரிப்பவள் என்பதால் தினமும் அவள் திரிக்கும் வேலைக்குப் போய்வந்துகொண்டிருந்தாள். அவளது கணவன் பாரவண்டி ஓட்டிக்கொண்டிருந்தான். அவர்களை தன் வீட்டின் அருகிலே குடித்தனம் வைத்துக்கொண்டாள் நளா.

தூமகேது சம்பாதிக்கத் தெரியாதவன். ஆனால், கடினமான உழைப்பாளி. ஆட்டுத்தோலைக் கழுவி சுத்தம் செய்து பதப்படுத்துவது எளிதானதில்லை. ஆனால், அந்த வேலையை அவன் ஒரேஆளாகச்

செய்வான். கிணற்றடியில் ஈரத்தோலைத் தூக்கமுடியாமல் தூக்கியபடியே அவன் வேலை செய்து கொண்டிருப்பதைக் காணும்போது நளாவிற்கு ஏன் இந்த மனிதன் இப்படி அவதிப்படுகிறான் என்றுதான் தோன்றும், ஆனால், குடும்பத்தின் வயிற்றை நிரப்ப வேண்டுமே.

பலநேரங்களில் அவளுக்கு வயிற்றின் மீது கோபமாக வரும், இந்த வயிறு மட்டும் வேளை வேளைக்குப் பசிக்காமல் அடங்கியிருந்தால் எவ்வளவு நிம்மதியாக இருக்கும், காளவாசல் போல எப்போதும் புகைந்துகொண்டேயிருக்கிறதே. எதை எதையோ மனிதர்கள் கண்டு பிடிக்கிறார்கள். இந்தப் பசி இல்லாமல் போவதற்கு எதையும் கண்டுபிடிக்க முடியவில்லையா?

அவளுக்குத் திருமணமாகி வந்த இத்தனை வருஷங்களில் தூமகேது ஒருமுறைகூட நோயுற்று படுக்கையில் விழுந்ததேயில்லை, அவள் இரண்டுமுறை கிணற்றடியில் விழுந்து கால் முறிந்து வைத்தியம் பார்த்துப் படுத்திருக்கிறாள், ஆனால், தூமகேது நோயுற்றதேயில்லை.

தூமகேதுவைக் காட்டிக்கொடுத்த இடையனை அவள் எங்கேயோ வைத்து ஒருமுறை கண்டிருக்கிறாள், எங்கே பார்த்தாள் என்பது நினைவில் இல்லை, அவன் அவளை அடையாளம் கண்டுகொண்டு விட்டவனைப் போலதான் நடந்துகொண்டான்.

தூமகேதுவைப் பற்றி நினைத்துக்கொள்ளும்போது சந்தோஷமான தருணங்கள் எதுவும் அவள் நினைவில் இல்லை.

பாவம் அந்த மனிதன் என்ற ஒரே உணர்ச்சிதான் அவளுக்குள் நிரம்பியிருந்தது.

அவனுக்காக அழுவதைத் தவிர தன்னால் வேறு என்ன செய்துவிட முடியும். இதற்காகவே அவள் அழுது தீர்த்தாள்.

ஒருநாள் இரவில் ஷர்மி அம்மாவைத் தேடி வந்து சொன்னாள்,

“என் கணவரும் நானும் நூரெம்பூருக்குப் போய்விடலாம் என நினைக்கிறோம். சத்கரில் வசிப்பது நரகத்திலிருப்பதைப் போலிருக்கிறது.’’

“உனக்கென்ன பிரச்சினை’’ எனக் கேட்டாள் நளா.

“பாரவண்டி ஓட்டிப்போன அவரை யாரோ சிலர் கட்டி வைத்து அடித்திருக்கிறார்கள். முதுகு பூராவும் ரத்தக்காயம். எதற்குத் தெரியுமா? தலையில் தலைப்பாகை கட்டிக்கொண்டு போகக் கூடாதாம்.’’

“அநியாயமாக இருக்கிறது.”

‘‘இந்த நரகத்தில் எப்படி வாழ்வது? அதனால்தான் நானும் அவரும் நூரெம்பூருக்குப் போவது என முடிவு எடுத்துவிட்டோம்.”

“உன் அப்பா விடுதலையாகி வரும்வரை என்னால் இந்த ஊரை விட்டு வரமுடியாது ஷர்மி.”

‘‘அப்பாவிற்கு ஒரு போதும் விடுதலை கிடைக்காது, காலாவிற்கு பல்லாயிரம் பேர் நீதிக்காக காத்திருக்கிறார்கள்’’

‘‘எத்தனை வருஷங்கள் ஆனாலும் நான் காத்துக்கொண்டிருப்பேன்.’’

‘‘என்னால் இங்கே கிடந்து கஷ்டப்பட முடியாது, சத்கர் பைத்தியக் காரர்கள் கையில் சிக்கிக் கொண்டுவிட்டது.”

“நாம் அதற்கு பலியாடுகளாக ஆனாலும் பரவாயில்லை இங்கு தானிருப்பேன்.’’

அம்மாவும் மகளும் இரவெல்லாம் பேசிக்கொண்டேயிருந்தார்கள், மகள் ஆறுதல் அடையவேயில்லை. அம்மா இரவில் விசும்பியபடியே இருந்தாள். மறுநாள் ஷர்மி தன் கணவருடன் ஊரை விலக்கி வெளியேறிப் போனாள்.

அன்றைக்கு நளா சமைக்கவில்லை. சாப்பாட்டு நேரம் ஆகியும் உணவு தயார் ஆகவில்லை என டோலு புலம்பிக் கொண்டேயிருந்தார்.

அவள் ஆத்திரத்துடன் “கிழட்டு சனியனே, கஞ்சியில் விஷத்தைக் கலந்து தரப்போகிறேன் பார்” எனக் கத்தினாள்.

கிழவர் வாயை மூடிவிட்டார்.

மஞ்சா

தூமகேதுவின் பிள்ளைகளில் ஒருவனும் பசி அடங்காமல் மண்ணை வாயிலிட்டு மென்று கொண்டிருப்பவனுமான மஞ்சா தனது வயிற்றைத் தடவிக்கொண்டே ஏதாவது தின்பதற்குக் கிடைக்கிறதா என கினாரி பஜாரினுள் தேடிக்கொண்டிருந்தான்.

தானியக்கடைகளுக்குக் கொண்டுவரப்படும் மூட்டைகளில் இருந்து சில வேளைகளில் தானியங்கள் சிந்தியிருக்கும். அவற்றை எறும்புகள் இழுத்துக்கொண்டு போவதற்குள் மஞ்சா கண்டுபிடித்து வாயில் போட்டு மென்றுவிடுவான். இவ்வளவு ஏன்? வெற்றிலைக் கடையில் வீசி எறியப்படும் பழைய வெற்றிலைகள், இனிப்புக் கடைகளில் யாரோ தாமரை இலையில் தூக்கி எறிந்த இனிப்பு வகைகள் எது கிடைத்தாலும் அவன் ஆசையாக எடுத்துத் தின்னுவான். சாப்பிட வேண்டும். எது கிடைத்தாலும் சாப்பிட வேண்டும். அப்போதுதான் இந்த வயிறு நிறையும். ஒரு நாள் அவன் துராய் பஜாரில் பீங்கான் பாத்திரங்கள் விற்கும் சோலங்கி வீட்டில் பெரிய விசேஷம். அதற்காக அன்னதானம் தருகிறார்கள் என்று அறிந்துசாப்பிடப்போய் நின்றான்.

நீண்டதொரு வரிசை நின்றிருந்தது. அவன் வயதை ஒத்த சில சிறுவர்கள் அந்த வரிசையில் நின்றிருந்தார்கள். அதில் மஞ்சாவிற்கு முன்னால் நின்ற சிறுவன் ஆசையோடு சொன்னான்.

“பால் பாயாசம் இருக்கிறதாம். அதுவும் முந்திரிகள் போட்டது.’’

‘‘யார் சொன்னது?’’

‘‘என் தம்பி, ஏற்கனவே அவன் இரண்டு முறை சாப்பிட்டுவிட்டான்.’’

‘‘நாம் போவதற்குள் அன்னதானம் முடிந்துவிடுமா?’’ என ஏக்கத்துடன் கேட்டான் மஞ்சா.

‘‘இல்லை, இன்னும் ஆயிரம் பேருக்கு சாப்பாடு இருக்கிறது, சோலங்கியின் பேரனுக்குப் பெயர் வைக்கிறார்கள். அதற்குதான் இந்த அன்னதானம்.’’

‘‘ஒரு ஆளுக்குப் பெயர் வைப்பதற்கு இவ்வளவு பெரிய விழாவா, தனக்கெல்லாம் இந்தப் பெயரை இப்படி அன்னதானம் கொடுத்துதான் வைத்தார்களா என்ன. காசு இருந்தால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம், சரி நமக்கென்ன, பாயாசத்துடன் சாப்பாடு போடப்போகிறார்கள், ஒட்டகத்தைப் போல வயிற்றை நிரப்பிக் கொண்டுவிட வேண்டும்” என நினைத்துக்கொண்டான் மஞ்சா.

முன்னாடி நின்றுகொண்டிருந்தவன் கேட்டான்,

‘‘உன் வீடு எங்கேயிருக்கிறது?’’

‘‘நகிலி’’ என்றான் மஞ்சா.

‘‘அதைச் சொல்லாதே. வெளியே துரத்திவிடுவார்கள். கேட்டால் மைலாரி என்று சொல்.’’

மைலாரி வணிகர்களின் குடியிருப்பு. மஞ்சா தலையாட்டிக் கொண்டான். பிறகு தன்முன் நிற்பவனிடம் கேட்டான்,

“நீ இதற்கு முன்பு அன்னதானத்தில் சாப்பிட்டிருக்கிறாயா? உன் பெயர் என்ன?’’

‘‘கின்புத், இரண்டு முறை சாப்பிட்டிருக்கிறேன். துர்காதேவி கோவிலில்கூட அன்னதானம் போட்டிருக்கிறார்கள்.’’

‘‘நான் இதுவரை சாப்பிட்டதேயில்லை’’ என்றான் மஞ்சா.

கின்புத் ஆசையுடன் சொன்னான்.

“வயிற்றை நன்றாக திறந்து வைத்துக்கொள். சோற்றை அள்ளி கோட்டை கட்டவேண்டும்.’’

மஞ்சா சிரித்துக்கொண்டான், வரிசை மெதுவாக ஊர்ந்து கொண்டிருந்தது, ஓலைப்பந்தல் ஒன்றில் உள்ளே பந்தி நடந்து கொண்டிருந்தது, மஞ்சாவும் கின்புத்தும் சாப்பிட உட்கார்ந்தார்கள். யாரும் அவர்களை எதுவும் கேட்டுக் கொள்ளவில்லை.

சுடுசோற்றில் அன்றுதான் முதன்முறையாக பருப்புப் போட்டு நெய் ஊற்றிச் சாப்பிட்டான் மஞ்சா.

இத்தனை ருசியான உணவு உலகில் இருக்கிறதா என்ன, ஏன் அம்மா ஒருபோதும் இதை எல்லாம் செய்து தந்ததேயில்லை.

கையால் அள்ளமுடிந்த அளவு சோற்றை அள்ளி அவன் சாப்பிட்டான். கூழாங்கற்களைப் போட்டு கிணற்றை நிரப்ப முயல்வது போல இருந்தது அந்தச் செய்கை.

ஆசை தீர சோறு சாப்பிட்டான். பிறகு பாயசம் வந்தது. அதை ஒரு தொன்னையில் வைத்துக் கொடுத்தார்கள்.

வாங்கி வாங்கிக் குடித்துக்கொண்டேயிருந்தான். வயிறு ஊதிப்போய் புடைத்துப் பிதுங்கி நின்றது. அதைத் தடவிக் கொடுத்தபடியே கின்பத்திடம் சொன்னான்.

“தினமும் இதுபோல அன்னதானம் தந்தால் எப்படியிருக்கும்?”

“சூரஜ்மாலின் வீட்டில் இப்படித்தான் தினமும் சாப்பிடுகிறார்களாம்.”

“நிஜமாகவா?’’

“ஆமாம். ஜாடி ஜாடியாக அந்த வீட்டில் நெய் இருக்கிறதாம். நாம் அந்த வீட்டில் பிறந்திருந்தால் எவ்வளவு சந்தோஷமாக இருந்திருக்கும்.”

“நெய் வாசம் கையில் இன்னமும் இருக்கிறது’’ எனக் கையை முகர்ந்து ரசித்தான் மஞ்சா. சாப்பிட்ட சந்தோஷத்தில் அவர்கள் இருவரும் துராய் பஜாரினுள் நடந்தார்கள்.

மஞ்சா அவனை இடிந்த கோட்டைச் சுவருக்கு அழைத்துக்கொண்டு போனான், அதுதான் அவனது உலகம், இடிந்த கோட்டைச் சுவரின் மீது ஏறி நடந்துகொண்டிருப்பான். சில சமயம் அவனுடன் அவனது தம்பிகளும் நடப்பார்கள். யார் வேகமாக அந்தக் கோட்டைச் சுவரில் ஓடுகிறார்கள் எனப் பந்தயம் வைப்பார்கள். சில சமயம் ஓடும்போது கற்கள் பெயர்ந்து போய் கீழே விழுந்துவிடும். ஒரேயொரு முறை மஞ்சா விழுந்து கால் உடைந்து போயிருக்கிறான். கோட்டைச் சுவரில் ஏறி விளையாடக்கூடாது என அம்மா திட்டிக்கொண்டிருப்பாள். வீட்டில் எத்தனை நேரம் அடைந்து கிடப்பது. அப்பா எந்த நேரமும் ஆட்டுத்தோலைக் கழுவிக் கொண்டிருப்பார். அவருக்கு உதவியாக கிணற்றில் தண்ணீர் இறைத்து ஊற்றச்சொல்வாள் அம்மா. அதில் எல்லாம் மஞ்சாவிற்கு விருப்பமில்லை. அவனுக்குச் சாப்பிடுவதில் மட்டும்தான் விருப்பமிருந்தது. சதா எதையாவது சாப்பிடுவதற்காக தேடிக்கொண்டிருப்பான்.

சிலநேரம் கீழே கிடக்கும் கற்களைக்கூட எடுத்துக் கடித்துப் பார்ப்பான்.

“இந்தக் கற்களை மட்டும் தின்ன முடிந்தால் எளிதாக பசி அடங்கி விடும்.’’

“ஏன் இந்தக் கற்களைக் கடிக்க முடியவில்லை.”

“கல் ஏன் ருசியே இல்லாமல் இருக்கிறது.”

தன் வீட்டை ஒட்டிய செடிகள், பூக்கள், உதிர்ந்து கிடந்த பழங்கள் எல்லாவற்றையும் மஞ்சா எடுத்துத் தின்றிருக்கிறான்.

ஒருமுறை அவனுக்கும் ஒரு ஆட்டுக்குட்டிக்கும் போட்டி வந்தது.

அவனும் ஆட்டுக்குட்டியைப் போல தரையில் வளர்ந்த புற்களைக் கடித்துத் தின்ன ஆரம்பித்தான். புல்லை சவைக்க சவைக்க அதில் ஒரு சுவையிருப்பதைக் கண்டுகொண்டான்.

ஆட்டுக் குட்டி தனக்குப் போட்டியாக புல்லைத் தின்னும் அவனை ஏளனமாகப் பார்த்தது. அவன் ஆட்டுக்குட்டியைவிட வேகமாகப் புல்லைத் தின்றான். பிறகு சலித்துப் போனவன் போல அங்கிருந்த வேப்பமரத்தைப் பார்த்துச் சொன்னான்.

“ஒரு நாள் இந்த மரத்தை உடைத்துத் திங்கப்போகிறேன்.”

மரம் காற்றில் அசைந்துகொண்டிருந்தது.

பசி அவனை அலைய வைத்துக் கொண்டிருந்தது. மற்ற சகோதரர்களைப் போலின்றி அவன் அசாத்திய துணிச்சல் உள்ளவனாக இருந்தான். யாரையும் பற்றி அவனுக்கு பயமேயில்லை. சில சமயம்

தொலைவில் தெரியும் அரண்மனையைப் பார்த்துக்கொண்டிருப்பான். அதற்குள்ளே போக முடிந்தால் எப்படி இருக்கும். உள்ளே என்ன சாப்பிடுவார்கள் எனக் கற்பனையாக யோசித்துக்கொண்டிருப்பான்.

சில நாட்கள் அவன் சிறுவர்களை அழைத்துக்கொண்டு மீன் பிடிக்கப் போவான். தூண்டில் போட்டு மீன்களைப் பிடித்து அங்கேயே சுட்டுத் தின்றுவிடுவான்.

நளா அவனைத் திட்டுவாள்.

“ஒருநாள் எதையாவது தின்று நீ செத்துப் போகப் போகிறாய் பார்.”

அம்மா அடித்தால் அவன் அழ மாட்டான். மாறாக அவளிடம் பசி, பசி எனக் கூச்சலிடுவான். அவள் பிள்ளைகள் பசிக்கிறது என்று சொன்னால் அடிக்க மாட்டாள், குற்றவுணர்ச்சியோடு அவள் அடுப்பை நோக்கிச் சென்றுவிடுவாள்.

பாவம் அம்மா, அவள் தங்களுக்காக பகலிரவாக வேலை செய்து கொண்டேயிருக்கிறாள் எனச் சில சமயம் நினைத்துக்கொள்வான் மஞ்சா. அவனும் கின்பத்தும் கோட்டையின் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டார்கள். தொலைவில் நகரம் மாலை வெளிச்சத்தில் ஒளிர்ந்து கொண்டிருந்தது. கின்பத் அவனிடம் கேட்டான்.

“இந்த சூரியன் எப்படி வானத்தில் போகிறது தெரியுமா?”

“தெரியும், ஏழு குதிரைகள் கொண்ட தேரில் போகிறது’’ என்றான் மஞ்சா.

“யார் சொன்னது?’’ எனக் கேட்டான் கின்பத்.

“அம்மா, அவள் நிறைய கதைகள் சொல்லியிருக்கிறாள்’’ என்றான் மஞ்சா.

“அந்தத் தேரை யார் ஓட்டிக்கொண்டு போகிறார் தெரியுமா?’’

‘‘சூரியன்தான்’’ என்றான் மஞ்சா.

“அதுதான் இல்லை, அதை ஓட்டிக்கொண்டு போகிறவன் அருணதேவா.’’

“உனக்கு எப்படித் தெரியும்?’’

“என் அம்மா தினமும் சூரியனைக் கும்பிடுவாள். அந்தக் குதிரை களின் பெயர்கள்கூட எனக்குத் தெரியும், காயத்ரி, உஷ்னிக், ஜெகதி, மற்ற பெயர்கள் மறந்து போய்விட்டது.”

“நாமும் வானத்தில் இப்படிப் பறந்து போனால் எப்படியிருக்கும்?’’

“சொர்க்கத்திற்கே போய்விடலாம்.’’

“சொர்க்கத்தில் நெய் கிடைக்குமா’’ எனக் கேட்டான் மஞ்சா.

“நெய்யும் பாலும் பாயாசமும் ஆறாக ஓடிக்கொண்டிருக்கும்.’’

“நீ சொர்க்கத்திற்குப் போயிருக்கிறாயா?’’

“அதைப் பற்றியும் என் அம்மாதான் கதை சொல்லியிருக்கிறாள்.’’

“நான் எப்படியாவது சொர்க்கத்திற்குப் போய்விடுவேன்.’’

“செத்துப்போனால்தான் சொர்க்கத்திற்குப் போக முடியும்.’’

“நிறைய சாப்பிட முடியும் என்றால் செத்துப் போக வேண்டியது தானே. எனக்கொரு யோசனை வருகிறது. உன் அம்மாவை நானும் என் அம்மாவை நீயும் மாற்றிக்கொள்வோமா” எனக் கேட்டான் மஞ்சா.

“உன் அம்மா அடிப்பாளா?’’

“சில சமயம் அடிப்பாள்.’’

“என் அம்மா சில சமயம் சூடு வைத்துவிடுவாள். என் காலைப் பார்’’ என அவன் தன் காலைக்காட்டினான், நீளமான தழும்பு இருந்தது.

“எதற்காக இந்தச் சூடு?”

“திருடிச் சாப்பிட்டதற்காக.”

“என்ன திருடிச் சாப்பிட்டாய்?’’

“எள் உருண்டைகள். யார் வீட்டில் தெரியுமா? சமந்த் வீட்டில். அவன் காட்டிக் கொடுத்துவிட்டான்.”

“எள் உருண்டைகளை நான் சாப்பிட்டதேயில்லை.”

“ருசியாக இருக்கும். நூறு உருண்டைகளைக்கூட தின்றுவிடலாம்’’

அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது மஞ்சாவின் தம்பி அவனை அம்மா கூப்பிடுவதாகச் சொன்னான்.

“எதற்கு?” என மஞ்சா கேட்டான்.

“அம்மா அழுதுகொண்டிருக்கிறாள். அவள் உன்னைத் தேடி கூட்டிக்கொண்டு வரச்சொன்னாள்.”

அப்பாவை அரசாங்கக் காவலர்கள் பிடித்துக்கொண்டு போனதில் இருந்தே அம்மா அழுதுகொண்டுதான் இருக்கிறாள். பிடித்துக்கொண்டு போனால் நமக்கு என்ன, அம்மா ஏன் அழுகிறாள், அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவன் கின்பத்தை மறுநாள் இதே இடத்திற்கு வரும்படி சொல்லிவிட்டு தனது தம்பியோடு வீட்டிற்குப் போனான். நளா எழுந்து உட்கார்ந்திருந்தாள். வயிற்றைத் தள்ளிக்கொண்டு வந்து நிற்கும் மஞ்சாவைக் கண்டதும் அவள் ஆத்திரத்துடன் கேட்டாள்.

“இங்கே வா. உன் கையை நீட்டு.”

அவன் கையை நீட்டத் தயங்கி நின்றான்.

“மஞ்சா கையை நீட்டு” என அவள் கோபமாகக் கத்தினாள். மஞ்சா தயங்கித் தயங்கி கையை நீட்டினான்.

அவள் முகர்ந்து பார்த்துவிட்டு கேட்டாள்.

“நெய் வாசனை. எங்கே போய் எதைத் தின்று தொலைத்தாய்? சொல்.”

“அன்னதானம் கொடுத்தார்கள். சாப்பிடப்போயிருந்தேன்.’’

“உன்னை அடித்துத் துரத்தவில்லையா?”

“யாரும் எதுவும் கேட்கவில்லை, கேட்டால்கூட நான் மைலாரி என்று சொல்லியிருப்பேன்.’’

“யார் உனக்கு இதைச் சொல்லிக் கொடுத்தது?’’

“கின்பத்.’’

“அங்கே என்ன சாப்பிட்டாய்?’’

“சோறு, பருப்பு, நெய், பொரியல், பாயசம்.”

“நிஜமா இத்தனையும் கொடுத்தார்களா?’’

“ஆமாம். வயிறு புடைக்க சாப்பிட்டேன்.’’

“நீ மட்டும்தான் போயிருந்தாயா?’’

“ஆமாம். இவர்களைக் கூட்டிக்கொண்டு போனால் என்னை அடித்துத் துரத்தியிருப்பார்கள்.’’

“உனக்கு வெட்கமாகயில்லை. உன் ஒருவனுக்கு மட்டும்தான் வயிறு பசிக்குமா?’’

மஞ்சா பதில் பேசாமல் இருந்தான்.

“அய்யோ நான் ஏன் இப்படி புத்திகெட்டுப் போய்ப்பேசுகிறேன். பசி என்னையும் பைத்தியம் ஆக்கிவிட்டதா? டேய், மஞ்சா, தெருநாயே, உன் இஷ்டம்போல கண்டதை நக்கிவிட்டு வந்து இங்கே பெருமை அடிக்கிறாயா? உன்னை இன்றைக்கு அடித்துக் கொல்கிறேனா இல்லையா பார்” என அவள் ஒரு விறகுக் கட்டையை எடுத்துக்கொண்டு பாய்ந்தாள்.

மஞ்சா வெளியே ஓடினான். கட்டிலில் கிடந்த கிழவன் டோலு சொன்னான்.

“அவனை அடித்துக் கொன்றுவிடு. தனியே நெய்யும் பாயாசமும் சாப்பிட்டு வந்திருக்கிறான். நெய்யை என் வாழ்நாளில் ஒரு முறைதான் சாப்பிட்டிருக்கிறேன். என்ன ருசி, என்ன ருசி.”

மஞ்சாவை துரத்திக்கொண்டு ஓடினாள் நளா. அவன் இடிந்த கோட்டையைத் தாண்டி வடக்கே ஓடிக்கொண்டிருந்தான். அவளால்

துரத்தியோட முடியவில்லை. அவள் ஒரு இடத்தில் குத்துக்கால் வைத்து உட்கார்ந்தபடியே தன் இயலாமையை நினைத்து வருந்த ஆரம்பித்தாள்.

தன்னைத்தானே திட்டிக்கொண்டாள். பிறகு தூமகேதுவை திட்டினாள். பிறகு கடவுளை கோபத்தில் கண்டபடி பேசினாள். பிறகு இனியும் தான் இப்படியே இருந்தால் பிள்ளைகள் திருடத்துவங்கி விடுவார்கள் என்பதை உணர்ந்தவள்போல தனக்குத் தானே சொல்லிக்கொண்டாள்.

“பிள்ளைகளை அழைத்துக் கொண்டு பிறந்த ஊருக்குப் போய்விட வேண்டியதுதான். சத்கரில் இனி வாழ்ந்து என்ன பிரயோசனம்.”

அன்றிரவு அவள் வீட்டில் மீதமிருந்த கோதுமையை கொண்டு ரொட்டி செய்தாள். மஞ்சா இரவு வீட்டிற்கே வரவில்லை. அவனை இருட்டில் தேடி குரல் கொடுத்துக்கொண்டேயிருந்தாள்.

மறுநாள் காலை வரை அவன் எங்கே போய் தொலைந்தான் என்றுகூட அவளுக்குத் தெரியவில்லை. அவள் காலையில் மாவு திரிப்பதற்கான வேலை கேட்டு கிளம்பிப் போனாள்.

வழியில் மஞ்சாவைப் பற்றியே நினைத்துக்கொண்டு போனாள்.

எப்படியாவது அவன் வயிற்றை அவன் நிரப்பிக் கொண்டு விடுகிறான் சாமர்த்தியசாலி.

அன்று மதியம் அவள் மக்கார்டி வீட்டில் திருகை சுற்றிக்கொண்டிருந்தபோது அவளது பிள்ளைகளில் ஒருவனான கினு அவளைத் தேடிக்கொண்டு வந்திருந்தான்.

“என்னடா கினு? ஏன் அழுதுகொண்டு வந்திருக்கிறாய், யார் அடித்துவிட்டார்கள்” எனக் கேட்டாள்.

அவன் அழுதபடியே சொன்னான்.

“மஞ்சா கோட்டைச் சுவர் அருகே செத்துப்போய்க் கிடக்கிறான். அவன் வயிற்றில் ஈ மொய்த்துக்கொண்டிருக்கிறது.”

“என்னடா சொல்கிறாய்? மஞ்சாவா?'' எனக் கேட்டபடியே அவனை இழுத்துக்கொண்டு இடிந்த கோட்டைச் சுவரை நோக்கி ஓடினாள் நளா. அந்த இடத்தில் ஆட்கள் கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள். வயிறு ஊதிப்போய் கண்கள் செருகிக்கிடந்தான் மஞ்சா. அவன் உடலைச் சுற்றிலும் ஈக்கள் மொய்த்துக்கொண்டிருந்தன. கூட்டத்தை விலக்கிவிட்டு அவன் உடலை அள்ளி எடுத்துக்கொண்டு நளா அழுது கூப்பாடு போட்டாள்.

அம்மா அழுவதைக் கண்டு மற்ற பிள்ளைகளும் சேர்ந்து அழுதார்கள்.

நளா மஞ்சாவின் வயிற்றைத் தடவிக்கொண்டே கேட்டாள்.

“எதைத் தின்று வயிற்றை இப்படி நிரப்பிக் கொண்டிருக்கிறாய், என்னடா சாப்பிட்டாய்?”

இறந்துகிடந்த மஞ்சாவின் கையை எடுத்து முகர்ந்தபடியே கேட்டாள்.

“அய்யோ நெய் வாசனை அப்படியே இருக்கிறதே. மஞ்சா எதைத் தின்று செத்துப் போனாய்’’ என வாயில் அடித்துக்கொண்டு அழுதாள்.

அப்போது கூட்டத்தில் ஒதுங்கி நின்றுகொண்டிருந்த கின்பத் அழும் குரலில் சொன்னான்.

“ஏதோ காட்டுக்காய்களைக் கையில் வைத்திருந்தான். அதை எனக்கும் திங்கக் கொடுத்தான். நான் திங்கவில்லை. அது கோமுட்டிக் காய் என நினைக்கிறேன்.”

“நீ அவனைப் பார்த்தயா? என்ன சொன்னான்? கடைசியாக என்ன சொன்னான்?’’

“பசிக்கிறது என்றுதான் சொன்னான்’’.

“அய்யோ. என் பிள்ளைகள் பசியாற்ற என்னால் முடியவில்லையே. இது என்ன பிழைப்பு. நான் எதற்கு உயிர் வாழுகிறேன். நானும் கோமுட்டிக்காயைத் தின்று செத்துப்போய்விடுகிறேன்.”

நெஞ்சு வெடித்தும்விடும்படி அவள் அழுதாள். இறந்துபோன மஞ்சாவை இடுகாட்டிற்குக் கொண்டுபோய் புதைப்பதற்குக்கூட அவளுக்கு யாரும் துணை வரவில்லை. அவளாக இடிந்த கோட்டையை ஒட்டிய ஒரு இடத்தில் குழி தோண்டி அவனைப் புதைத்து வைத்தாள்.

அதன் இரண்டு நாட்களுக்குப் பிறகு அவள் மாவு திருடுவது என முடிவுக்கு வந்தாள். போதும். பிள்ளைகள் பசியால் துடித்து செத்துப் போவதைவிடவும் திருடுவது குற்றமேயில்லை. மீதமிருக்கும் உயிர்களைக் காப்பாற்றுவதற்கு மாவு மூட்டை ஏற்றிவரும் வண்டியை மறித்துத் திருட வேண்டியதுதான். பிடிபட்டால் நாமும் காலாவிற்குப் போய்விடுவோம் என்றபடியே அவள் பிள்ளைகளை அழைத்துச் சொன்னாள்.

“நாளை நான் சொல்லும் இடத்தில் நீங்கள் ஒளிந்து நின்றுகொண்டு மாவு வண்டி வருகிறதா என ரகசியமாகப் பார்த்துச் சொல்ல வேண்டும். நாம் மாவு வண்டியைக் கொள்ளை அடிக்கப்போகிறோம்.’’

“நிஜமாகவா’’ எனக் கேட்டான் கினு.

“ஆமாம், அதுதான் நமக்கு உள்ள ஒரே வழி’’ என்றாள் நளா.

அதன் மறுநாள் அவள் தன் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு மாவு மூட்டை ஏற்றி வரும் வண்டியைக் கொள்ளை அடிக்கக் கிளம்பினாள்.

•••

இரண்டு கிழவர்கள் மல்யுத்தப் போட்டிகளில் ஈடுபடும் மல்லர்களுக்குத் தேவையான ரொட்டி செய்வதற்கான மாவு மூட்டைகளை வாங்கிக்

கொண்டு மாட்டுவண்டியில் போவதைக் கண்காணித்தாள், அவர்கள் இடிந்த கோவில் வழியாகத்தான் கடந்து போகிறார்கள் என்பதை உறுதி செய்துகொண்ட நளா மறுநாள் தனது பிள்ளைகளை உடன் அழைத்துக்கொண்டு வந்து அந்த மாட்டுவண்டியைத் தாக்க முடிவு செய்தாள். கிழவர்கள் வண்டியை மெதுவாக ஓட்டிக்கொண்டு வந்தார்கள். இடிந்த கோவிலை வண்டி கடக்கும்போது நளாவின் இரண்டு மகன்கள் உயரத்திலிருந்து வண்டியில் குதித்தார்கள். மறு நிமிடம் நளா ஆட்டுத்தோலைச் சீவும் கத்தியொன்றுடன் பாய்ந்தாள்.

கிழவர்களை வண்டியை விட்டு நளாவின் பிள்ளைகள் உருட்டி விட்டார்கள். அவர்களின் அலறல் சப்தம் கேட்கும் முன்பு நளா வாயில் பழந்துணியை அடைத்து கிழவர்களின் கைகளைக் கட்டினாள். இடிந்த கோவிலின் பின்புறம் அவர்களைக் கட்டிப்போட்டுவிட்டு மாவு மூட்டையுடன் அவர்கள் வண்டியை ஓட்டிக்கொண்டு போனார்கள்.

நளா மாவு மூட்டையைத் தூக்கி வீட்டிற்குள் வைத்துவிட்டு மாட்டுவண்டியை ஓட்டிப்போய் பத்தர்தெரு தாண்டி ரகசியமாக ஒரு இடத்தில் நிறுத்திவிட்டு வந்தாள்.

இவ்வளவு மாவை என்ன செய்வது என அவர்களுக்குத் தெரியவில்லை.

ஆளுக்குக் கொஞ்சம் அள்ளி வெறும் வாயில் தின்றார்கள். முகத்தில் பூசிக்கொண்டார்கள். ஒருவர் மீது மற்றவர் வீசி விளையாடினார்கள்.

கிழவர் படுக்கையில் கிடந்தபடியே “மாவு மூட்டையைத் திருடிக் கொண்டு வந்தீர்களா?” எனக் கேட்டுக்கொண்டேயிருந்தார். யாரும் அவருக்கு பதில் சொல்லவில்லை.

அன்றிரவு அவர்கள் பசியடங்கி நிம்மதியாக உறங்கினார்கள், நளா மட்டும் யோசனையுடன் படுத்து கிடந்தாள்.

நிச்சயம் நாளை தன்னைத் தேடி அரசாங்கக் காவலர்கள் வந்து விடுவார்கள். கைது செய்து இழுத்துப்போய் காலாவிற்குள் அடைத்து விடுவார்கள். கணவனுடன் காலாவிற்குள் வாழலாம். அல்லது விடியும்போது பிள்ளைகளுடன் நகரை விட்டு வெளியேறிப் போய் விடலாம், எதைச் செய்வது என யோசனையாக இருந்தது.

அவள் மூட்டையிலிருந்த மாவை தலைச்சுமை அளவிற்கு துணியில் தனியாகக் கட்டினாள். மீதமான மாவை மண்பானை ஒன்றில் போட்டு கிழவன் கட்டிலை ஒட்டிக்கொண்டுபோய் வைத்தாள். கிழவர் ஆழ்ந்து உறங்கிக்கொண்டிருந்தார்.

இன்றிரவு தான் எடுக்கப் போகும் முடிவு தன் வாழ்க்கையின் போக்கை மாற்றிவிடக்கூடியது என்பதை அவள் முழுமையாக உணர்ந்திருந்தாள். வெளியே காற்று குளிரத் துவங்கியிருந்தது. எழுந்து வாசலுக்குப் போய் நின்றுகொண்டாள். வானில் ஆங்காங்கே நட்சத்திரங்கள்

மினுங்கிக்கொண்டிருந்தன.

தான் கைது செய்யப்பட்டுவிட்டால் இந்தப் பிள்ளைகள் தெருவில் பிச்சை எடுக்க வேண்டியது வரும். அதற்கு பதிலாக ஊரை விட்டுப் போய்விடலாம். ஒருவேளை தூமகேது விடுதலையாகி வந்துவிட்டால், அப்போது திரும்பி வரலாம் என அவள் முடிவு செய்துகொண்டாள்.

ஊரைவிட்டுப் போவது என முடிவு செய்த மறுநிமிடம் அந்த இடமும் இருளும், செடி கொடிகளும் இடிபாடுகள் கொண்ட மேடும் அவளுக்குப் பிரியமுடியாத பொருட்களாக உருமாறின. அவள் குளிர்க்காற்றை பலமாக இழுத்து நெஞ்சில் நிறைத்தபடியே நின்றிருந்தாள்.

பிறகு அவள் இருட்டிற்குள்ளாகவே நடந்து போய் மாட்டுவண்டியை ஓட்டிக்கொண்டு வந்தாள். உறங்கிக் கொண்டிருந்த பிள்ளைகளை எழுப்பி ஆளுக்கு ஒரு துணிமூட்டையைத் தந்து வண்டியில் ஏறிக்கொள்ளச் சொன்னாள். அவர்கள் வண்டியில் ஏறும் போது கிழவர் விழித்துக்கொண்டு விட்டார். அவர்கள் எங்கே போகிறார்கள் எனப் புரியாமல் “நளா நளா” எனக் கூப்பிட்டுக்கொண்டேயிருந்தார். அவள் அந்தக் குரலைக் காதில் வாங்கவேயில்லை.

அவள் மாட்டுவண்டியை ஓட்டிக்கொண்டு கிளம்பினாள். அவர்கள் விடிகாலை சூரியன் கிழக்கில் எழுந்தபோது நகரை விட்டு வெளியே வடக்கே போய்க்கொண்டிருந்தார்கள்.

மன்னரின் பயணம்

அஜ்யா, ஔரங்கசீப் படை எடுத்துச் செல்லும் போது உடன் சென்றிருக்கிறாள். படை புறப்படுவதற்கு ஆறு நாட்களுக்கு முன்பு படை கிளம்ப இருப்பதற்காக எக்காளம் ஊதப்படும். அன்றிலிருந்து படைப்பிரிவு ஒவ்வொன்றாகப் புறப்படத் துவங்கும். ஔரங்கசீப் நாற்பதாயிரம் காலாட் படை வீரர்கள் பின்தொடர குதிரையில் முன்செல்வார். அத்தோடு எட்டாயிரம் குதிரை வீரர்கள் கொண்ட நான்கு பிரிவும் முந்நூறு யானைகளும், பீரங்கிகளும் உடன் வருவதுண்டு.

மன்னர் எந்தவழியில் பயணம் செய்யப் போகிறாரோ அந்தப் பாதை முழுவதும் முன்னதாகக் கண்காணிக்கப்பட்டு பாதைகள் சீர்செய்யப்பட்டிருக்கும். அத்தோடு அவர் கண்ணில் கழிவுகளோ, பிணமோ பட்டுவிடாமல் இருக்க ஆங்காங்கே ஆட்கள் நிறுத்தப்பட்டிருப்பார்கள். ஒவ்வொரு நாளும் எவ்வளவு தூரம் கடந்திருக்கிறோம் என்பதைத் துல்லியமாகக் கணக்கிட்டுப் பதிவு செய்வார்கள். அதுபோல அவர் கடந்து செல்லுகிற பகுதியின் முழுமையான வரைபடம் அவர் கையில் இருக்கும். எந்த வழியாக நாம் போகிறோம் என்பதை ஒவ்வொரு நாளும் அவருக்கு விளக்கமாகச் சொல்வார்கள். சில நேரம் அவர்கள் ஆற்றைக் கடக்க வேண்டியது வரும் என்பதற்காக சிறு சிறு படகுகள் கூடவே எடுத்துப் போகப்படுவதுண்டு. மன்னருக்கான மருத்துவர்கள், எழுத்தர்கள், சமையற்கலைஞர்கள் அனைவரும் தனிவண்டிகளில் உடன் வருவார்கள். இருநூறு ஒட்டகங்களில் கூடாரம் அடிக்கத் தேவையான பொருட்கள் ஏற்றிக்கொண்டு செல்லப்படும். அது தவிர இருநூறு ஒட்டகங்களில் வழி செலவிற்காக நாயணங்கள் கொண்டு செல்லப்படும். மன்னர் பயண வழியில் உத்தரவுகள் பிறப்பிக்க விரும்புவார் என்பதால் எழுத்தர்கள், கணக்கர்கள், அவர்களின் பழைய பதிவேடுகள் யாவும் கொண்டதாக எண்பது ஒட்டகங்களும் முப்பது யானைகளும் இருபது பாரவண்டிகளும் உடன் வருவதுண்டு. படைவீரர்களுக்குத் தண்ணீர் தேவை என்பதால் ஐம்பது ஒட்டகங்களில் தண்ணீர் கொண்டு செல்வார்கள். மன்னருக்கு மட்டும் கங்கை நீர் ஐந்து யானைகளில் பெரிய பாத்திரங்களில் கொண்டு செல்லப்படும். ஆயிரம் கூலி ஆட்கள் சமையற்சாமான்கள், உணவுப்பொருட்கள், அலங்காரப் பொருட்கள், உடைகளை வண்டியில் ஏற்றிக்கொண்டு செல்வார்கள். சில வேளைகளில் மகாராணியும் மன்னருடன் வருவதுண்டு. அதுபோன்ற நேரங்களில் யானையில் மகாராணி பெரிய சிம்மாசனம் அமைக்கப்பட்டு அதில் பவனி வருவாள். ராணியோடு நூற்றிஐம்பது பெண்களும் உடன் வருவார்கள். எட்டு பாரவண்டிகள் நிறைய உடைகளும், எண்பது ஒட்டகங்களில் அலங்காரப் பொருட்களும் நகைகளும் கொண்டு செல்லப்படும். ஆர்மீனியர், சுமேரியர், சிரியர்,

துருக்கியர் எனப் பல்வேறு தேசத்தைச் சேர்ந்த இசைக்கலைஞர்கள் எக்காளம், யாழ், போன்ற இசைக் கருவிகளை வாசித்தபடியே உடன்வருவார்கள். ஆருடம் சொல்பவன், வானிலை அறிந்து சொல்பவன் எனப் பதினாறு பேர் உடன் செல்வார்கள். போர்க் கருவிகளை ஏற்றிவருவதற்காக பாரவண்டிகள் இருநூற்று முப்பத்தைந்து அவர்களின் பின்னால் வரும்.

படை பெரும்பான்மை நாட்கள் அதிகாலை மூன்று மணிக்குப் புறப்பட்டுவிடும். வெயிலைத் தாங்க முடியாமல் மதிய நேரம் அவர்கள் பயணத்தை நிறுத்திக்கொண்டுவிடுவார்கள். அது போலவே சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகும் பயணிப்பதில்லை. படையின் பெரிய பிரச்சினை. குளிப்பது. இத்தனை ஆயிரம் பேர் எங்கே குளிக்க முடியும் என்பதால் அவர்கள் ஏதாவது ஏரி அல்லது ஆற்றைக் கடக்கும் நாள் வரை குளிக்க மாட்டார்கள்.

அப்படி ஒரு ஏரியை அஜ்யா சார்பஹாரி என்ற இடத்தில் கண்டாள். கண்கொள்ளமுடியாத பெரிய ஏரி. அடிவானம் வரை விரிந்து கிடந்தது. கொக்குகள் பறந்தலையும் அதில் நாற்பதாயிரம் படைவீரர்களும் தங்களின் ஆடைகளைக் களைந்துவிட்டு குதித்து குளித்து ஆர்ப்பரித்தார்கள். உடல்கள், உடல்கள், எங்கும் மனித உடல்கள். ஆண்களின் நிர்வாணத்தைப் போலவே ஏரியின் இன்னொரு பக்கம் பெண்களும் உடைகள் எதுவுமின்றி நீந்திக் குளித்துக்கொண்டிருந்தார்கள்.

மாமன்னர் தனது படைகள் தண்ணீரோடு சமர் செய்வதைப் பார்த்துக்கொண்டிருந்தார். அந்த உடல்களின் திணவும் வெறியும் அவரை உற்சாகம் கொள்ள வைத்தன. ஒட்டகங்களையும் நாய்களையும் குதிரைகளையும் யானைகளையும் கூட ஏரியில் அவிழ்த்துவிட்டிருந்தார்கள். ஒருவன் தனது குதிரையில் நிர்வாணமாக அமர்ந்து ஏரியினுள் அதை ஓட்டினான். தண்ணீரில் குதிரை தத்தளித்து. மற்றவர் ஹேஹே என சப்தமாக சிரித்தார்கள். சூரிய வெளிச்சம் நிர்வாண உடல்களில் பட்டு மினுங்கியது. மனிதர்களின் கூச்சல் கண்டு பயந்துபோய் ஒரு பறவைகூட ஏரியில் இல்லை. அதுபோலவே மீன்களும் பயந்து உள்ளோடியிருந்தன. வாயில் தண்ணீரை நிரப்பிக் கொண்டு சிலர் துப்பினார்கள். சிலர் தண்ணீரைக் கையால் அடித்து சப்தம் எழுப்பினார்கள். சிலர் தண்ணீரில் படுத்து உறங்கினார்கள். ஏரிக்கரையில் முளைத்த செடிகளைப் பிடுங்கி உடம்பைத் தேய்த்துக் கொண்டார்கள். அஜ்யா அந்த வேடிக்கைகளைப் பார்த்துக் கொண்டேயிருந்தாள். காலை துவங்கிய நீராடல் மதியம் வரை நடந்தேறியது. மதியமும்கூட எக்காளம் ஒலித்து நீந்தியது போதும் என்ற அறிவிப்பு தந்த பிறகே வீரர்கள் கரையேறினார்கள். தண்ணீர் சொட்ட கடந்து சென்ற வீரர்களின் முகங்களைக் காணும் போது ஏதோ சிற்பத்தைக் காண்பது போலவே இருந்தது.

ஔரங்கசீப் படை எடுத்துச் செல்லும் நாட்களில் பெரும்பான்மை நேரம் யோசனையிலே இருப்பார். உதய்பூரி பாய் அவரை சந்தோஷப்படுத்த ஏதேதோ செய்தபோதும் அவரது கவனம் கலையவே கலையாது. உணவைக்கூட அவர் விரும்புவதில்லை.

அஜ்யா அப்படி ஒரு நாள் உணவில்லாமல் தனிமையில் அமர்ந்து வரைபடங்களை உற்று நோக்கிக்கொண்டிருந்த போது அவர் பின்பாக நின்றுகொண்டிருந்தாள். ஔரங்கசீப் அவளை அழைத்தார்.

“அஜ்யா, முன்னே வா. இந்த வரைபடத்தைப் பார்.”

அவளுக்கு வியப்பாக இருந்தது, ராணுவ விஷயங்களைப் பற்றி தனக்கு என்ன தெரியும், அவர் விரல்காட்டிய இடத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“இந்தக் கோட்டை உன் கண்ணில் தெரிகிறதா?”

இல்லை எனத் தலையாட்டினாள் அஜ்யா.

“எனக்குத் தெரிகிறது. கோட்டை மட்டுமில்லை. அதில் நிற்கும் காவலர்கள். அங்கு எரியும் பந்தவிளக்கு எல்லாமும் தெரிகிறது. இந்த இடத்தில் வில்லேந்திய வீரர்கள் நிற்கிறார்கள். இது நுழைவாயில். இந்தக் கோட்டைக்கு இன்னொரு வாசல் இருக்கிறது. அது மேற்காக உள்ளது. நம் படையின் ஒரு பிரிவுதான் கிழக்கே நுழையப் போகிறது. நான் மேற்கில் இருந்து தாக்கப்போகிறேன். ஒரு நாள் சண்டையில் கோட்டை விழுந்துவிடும்.”

எல்லாமும் ஏற்கனவே நடந்துமுடிந்துவிட்டது என எழுதி வைக்கபட்ட ஒன்றைச் சொல்வதைப் போல அவர் விளக்கிச் சொல்லிக்கொண்டிருந்தார். அவளுக்கு எதுவும புரியவில்லை. ஆனால், அவள் பாதுஷாவின் துல்லியமான கணிப்பையும் தைரியத்தையும் நினைத்து வியந்துகொண்டிருந்தாள்.

•••

பாதுஷா ஔரங்கசீப் இறந்து மாதங்கள் உருண்டோடிப் போயிருந்தன. இன்னமும் அந்த ஆட்டுத்தோல் கிடைக்கவில்லை. தேடிக்கொண்டே யிருந்தார்கள்.

எதற்காக இன்னமும் உயிரோடு விட்டுவைத்திருக்கிறார்கள் தன்னை என அஜ்யாவிற்குப் புரியவில்லை. சில வேளைகளில் அவள் செத்துப்போய்விடுவதே தனக்கான மீட்சி என்று நினைத்துக் கொண்டாள்.

பாதுஷா சொன்னது நிஜம்.

அவரது மறைவிற்குப் பிறகு சதிகளும் ரத்தவெறியும் வன்முறையும் தான் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன.

இந்தக் குழப்பத்தினுள் தானும் மாட்டிக்கொண்டு அவதிப்படுவது சகித்துக்கொள்ள முடியாமலிந்தது. அவள் சாவிற்காக காத்திருக்கத் துவங்கினாள்.

ரங்மஹால்

பிஷாட மன்னன் அழைப்பதாக ரெமியஸ்ஸை அழைத்துவர அவனது வீட்டில் அரண்மனை ஆட்கள் பல்லக்கோடு வந்து காத்திருந்தார்கள். ரெமியஸ் உடைமாற்றியபடியே சந்தோஷத்தில் தனக்குத்தானே சிரித்துக்கொண்டான்.

“இதுதான் அதிர்ஷ்டம் என்பதா, நேற்றிரவு தான் பிஷாடனை நேரில் சந்திக்க விரும்பினேன், இன்று அவனே என்னை அழைக்கிறான், அதிர்ஷ்ட தேவதையின் கண்கள் என் பக்கம் திரும்பிவிட்டதா.”

தனது உடைவாளையும் கைத்துப்பாக்கி ஒன்றையும் எடுத்து செருகிக்கொண்டு ரெமியஸ் நறுமணம் கமழ தன் அறையை விட்டு வெளியே வந்தபோது ராபி சொன்னான்.

“இளவரனைப் போலிருக்கிறீர்கள் மாலி.”

ரெமியஸ் புன்சிரிப்புடன் தனது தொப்பியை எடுத்து அணிந்து கொண்டு வாசலுக்கு வந்தபோது பல்லக்கு காத்துக்கொண்டிருந்தது.

அவன் ரங்மஹாலுக்குப் போய் இறங்கியபோது குரங்கைக் கூண்டோடு கொண்டுவந்து வைத்திருந்தார்கள்.

கூண்டின் எதிரில் இருந்த உயரமான மேடையில் பிஷாடன் அலங்கார நாற்காலி ஒன்றில் அமர்ந்திருந்தான். ரெமியஸ் வருவதைக் கண்டதும் உற்சாகமாகக் கையை அசைத்து மேடைக்கு வரச்சொன்னான்.

ரெமியஸ் அமர்வதற்காக ஒரு நாற்காலி கொண்டுவந்து போடப் பட்டது.

பிஷாடன் முன்பாக வந்து வணங்கியபடியே ரெமியஸ் சொன்னான்,

“இரண்டு கப்பல்கள் வந்துசேர்ந்திருக்கின்றன, நாளை பொருட்கள் வந்து சேர்ந்துவிடும் அரசே.’’

“எனக்கு புதுமையாக ஏதாவது இருக்கிறதா, புதிய விலங்குகள் ஏதாவது கொண்டுவருகிறாயா?”

“பனிக்கரடி ஒன்று வருகிறது. வெள்ளை வெளேர் என ரோமங்களுடன் அழகான பொம்மை போலிருக்கும், அதை நீங்கள் பார்த்தால் வியந்துபோவீர்கள்.’’

“பனிக்கரடி பேசக்கூடியதா?’’

“கரடிகளுக்குப் பேசத்தெரியாது.’’

“நம்மால் அதை பேசுவதற்கு பழக்கமுடியுமா?’’

“யாரும் முயற்சி செய்ததில்லை.’’

“நான் முயற்சி செய்கிறேன், என்னால் நிச்சயம் ஒரு பனிக்கரடியைப் பேச வைத்துவிட முடியும்.”

“நிச்சயம் முடியும். உங்களின் அறிவாற்றல் யாருக்கு இருக்கிறது? நீங்கள் மகாபுத்திசாலி” என்றான் ரெமியஸ்.

“இந்தக் குரங்கைக் கொன்றுவிடப்போகிறேன். இதற்கு பதிலாக என்னோடு சதுரங்கம் ஆடுவதற்கு ஒரு ஆள் தேவை. பனிக்கரடிக்கு பேசத்தெரிந்தால் அதை சதுரங்கம் ஆட வைத்துவிடலாமே’’ எனக் கேட்டான் பிஷாடன்.

“பிரமாதம். இப்படி ஒரு யோசனை இதுவரை யாருக்கும் தோன்றியதேயில்லை“ என்றான் ரெமியஸ்.

“இந்தக் குரங்கு அமந்தாவைக் கொன்றுவிட்டது.’’

“அப்படித்தான் கேள்விப்பட்டேன்.”

“பாவம் அந்தப்பெண். குரங்குகளுக்குக் குடும்பம் நடத்தத் தெரியவில்லை.”

“குரங்கு அப்படித்தானே நடந்துகொள்ளும்’’ என்றான் ரெமியஸ்.

குரங்கைக் கொல்வதற்காக அழைத்துவரப்பட்ட இரண்டு தடியர்கள் கையில் கொடுவாளுடன் நின்றிருந்தார்கள்.

பிஷாடன் திடீரென யோசனை வந்தவனைப் போல சொன்னான்,

“அநாம் பேசுவதை நீ கேட்டிருக்கிறாயா ரெமியஸ்.’’

“இல்லை அரசே’’ என்றான் ரெமியஸ்.

“அநாம் சாவதற்குள் ஒருமுறை நீ அதன் பேச்சைக் கேட்க வேண்டும்” என்றபடியே கூண்டினைத் திறந்துவிடும்படி கட்டளை இட்டான் பிஷாடன்.

கழுத்தில் சங்கிலி போட்டுக் கட்டி வைக்கப்பட்டிருந்த குரங்கு கூண்டிற்குள் ஒடுங்கி உட்கார்ந்திருந்தது, பகலும் இரவும் வெறி கொண்டு கத்திக்கொண்டிருந்த அநாம் தனது சாவை அடையாளம் கண்டுவிட்டதைப் போல அமைதியாகியிருந்தது.

கூண்டைத் திறந்தபோதும் அது வெளியே வரவில்லை.

“அநாம், இங்கே வா’’ என உரத்த குரலில் அழைத்தான் பிஷாடன்.

அநாம் அந்தக் குரலை கேட்காதது போல அமர்ந்திருந்தது.

“அந்தக் குரங்கை இழுத்துக்கொண்டு வாருங்கள்” என உத்தரவு

இட்டான் பிஷாடன்.

சங்கிலியைப் பிடித்து இழுத்து குரங்கை வெளியே கொண்டு வந்தார்கள். அது மெதுவாக நடக்க ஆரம்பித்தது.

தன்னை நோக்கி நடந்து வந்துகொண்டிருந்த குரங்கின் கண்களில் இருந்த வெறுப்பை ரெமியஸ் பார்த்துக்கொண்டிருந்தான்.

மேடையில் பிஷாடன் அருகில் அழைத்துவரப்பட்ட குரங்கு பிஷாடனை வெறித்துப்பார்த்தபடியே நின்றுகொண்டிருந்தது.

“அநாம். நீ சாகப்போகிறாய். அதற்குள் ஒரேயொரு முறை இவரோடு சதுரங்கம் ஆடுகிறாயா?’’

அநாம் ரெமியஸ்ஸை வெறித்துப் பார்த்தது.

விஷமேறிய அதன் கண்கள் ஒளிர்ந்தன.

ரெமியஸ் அதை எதிர்கொள்ள முடியாமல் சொன்னான்,

“எனக்கு சதுரங்கம் ஆடத்தெரியாது.”

அதைக்கேட்டு சிரித்தபடியே பிஷாடன் குரங்கைப் பார்த்து சொன்னான்,

“அநாம், உன்னைப் பார்க்க எனக்குப் பரிதாபமாக இருக்கிறது, உனது சாவை நீயே தேடிக்கொண்டுவிட்டாய்.”

குரங்கு பிஷாடனை வெறித்துப் பார்த்தபடியே இருந்தது.

“நீ எனது நண்பன், அதனால்தான் உனது மரணம் என் கண்முன்னே நிகழ வேண்டும் என விரும்பினேன். நண்பர்கள் சாகும்போது நாம் அருகில் இருக்க வேண்டும்.”

பிஷாடன் பேசி முடிப்பதற்குள் பழம் நறுக்குவதற்காக வைக்கப் பட்டிருந்த கத்தி ஒன்றை பாய்ந்து எடுத்துக்கொண்டு குரங்கு பிஷாடன் குரல்வளையை நோக்கிப் பாய்ந்தது, ரெமியஸ் தனது துப்பாக்கியை எடுத்துச் சுட்டான். குரங்கு எகிறிப்போய் விழுந்தது.

பிஷாடனின் குரல்வளையில் மெல்லிய கோடு போல கீறல் விழுந்திருந்தது, ரெமியஸ் சுடாமல் போயிருந்தால் இந்நேரம் பிஷாடன் கழுத்து அறுபட்டிருக்கும், பயமும் திகைப்புமாக பிஷாடன் தனது கழுத்தைத் தடவிப் பார்த்துக்கொண்டான். லேசாக ரத்தம் துளித்தது.

ரெமியஸ் சுடப்பட்டு விழுந்து கிடந்த குரங்கைக் கண்டான். கழுத்தில் குண்டுபாய்ந்திருந்தது. வாயிலிருந்து ரத்தம் கசிந்துகொண்டிருந்தது.

பிஷாடன் கீழே விழுந்து கிடந்த கத்தியை எடுத்து செத்துக்கிடந்த குரங்கை ஆத்திரம் தீருமளவு குத்தினான். பிறகு வெறிபிடித்தவன் போல அதன் மீது மூத்திரம் பெய்தான்.

“குரங்கின் உடலை கழுகுகள் தின்பதற்காக வீசி எறியுங்கள்’’

என்றபடியே ரெமியஸ்ஸின் பக்கம் திரும்பி சொன்னான்.

“என் உயிரைக் காப்பாற்றியிருக்கிறாய் ரெமியஸ். உனக்கு என்ன வேண்டும்?”

“உங்களின் நட்பைத் தவிர வேறு ஒன்றும் தேவையில்லை. கடவுளின் கருணை உங்களைக் காப்பாற்றும் ஒரு நல்வாய்ப்பை எனக்குத் தந்திருக்கிறது.”

“இதை நான் என்றும் நினைவில் வைத்துக்கொண்டிருப்பேன்.” என்றபடியே பிஷாடன் ஆவேசமாக கிளம்பிச் சென்றான்,

ரெமியஸ் அதிர்ஷ்ட தேவதை தன் தோளில் அமர்ந்து கொண்டு விட்டாள் என உறுதியாக நம்பி மனதிற்குள் சிரித்தபடியே ரங்மஹாலைவிட்டு வெளியே வந்தான். திடீரென அந்த சத்கர் தேசமே அவனுக்கு சொந்தமாகிவிட்டதைப் போல உணர்ந்தான்.

இனி பிஷாடன் நான் எதைச் சொன்னாலும் கேட்பான், கடவுளுக்கு நன்றி என மனதிற்குள்ளாகச் சொல்லிக்கொண்டு ரெமியஸ் வாசலுக்கு வந்தபோது குரங்கின் ஒரு துளி ரத்தம் அவனது இடதுகையில் படிந்திருப்பதைக் கண்டான்.

அந்த ரத்தத்துளியைத் துடைத்துவிட்டு அவன் சாரட் வண்டியில் ஏறினான். திரும்பவும் அந்த ரத்தத்துளி அவனது இடது கையில் அப்படியே இருந்தது.

இரண்டு புழுக்கள்

சக்ரதார் காலாவில் தன் முன் அமர்ந்திருந்த விசாரணைக் கைதிகளிடம் ஒரு கதையைச் சொல்லிக்கொண்டிருந்தார்.

துவாபர யுகத்தில் ஒரு புழு ஒன்று வானுலகம் சென்று தனக்காக நீதிக்காக முறையிட்டு வென்றது என்ற கதையை தூமகேது சிறுவயதில் கேள்விப்பட்டிருக்கிறான்.

கணவனும் மனைவியுமான இரண்டு புழுக்கள் காசியில் வாழ்ந்துவந்தன. கோடைக்காலத்தில் ஒருநாள் அவை இரண்டும் பசியோடு மண் பாதையைக் கடந்தபோது வேகமாக வந்த தேர்ச் சக்கரம் ஒன்றில் சிக்கி ஆண்புழு இறந்துபோனது. அதைக் கண்டு துயருற்ற பெண்புழு தன் கணவன் கொல்லப்பட்டதற்கு நீதி கேட்டு புலம்பிக் கொண்டிருந்தது.

புழுவின் சோகம் தாங்கமுடியாமல் ஒரு காகம் அரண்மனைக்குச் சென்று நீதி கேள் என ஆலோசனை சொன்னது.

புழு தன் உடலை இழுத்து ஊர்ந்தபடியே அரண்மனையை அடைவதற்குள் மழைக்காலம் துவங்கியிருந்தது.

புழு அரண்மனையின் உயர்ந்த படிக்கட்டு களில் ஏறி மூச்சிரைக்க உள்ளே சென்றது.

எல்லா உயிர்களுக்கும் நீதிமன்றம் பொதுவானது. அதன் வாசல்கள் எப்போதும் திறந்திருக்கும் என்பதால் அந்தப் புழு நீதிமன்றத்தின் உள்ளே நுழைந்து சீற்றத்துடன் சொன்னது.

“எனது கணவரைக் கொன்றுவிட்டார்கள். நீதி வேண்டும்.’’

அற்பப்புழு ஒன்று இத்தனை வலிமையோடும் சீற்றத்துடனும் தனது குரலை எழுப்புகிறதே என வியந்த எட்டு நீதிமான்களில் மூத்தவரான அத்ரி. “உனது ஊர், பெயர் விபரங்களை முதலில் தெரியப்படுத்து” என உரத்த குரலில் சொன்னார்.

“அது இந்த நீதிசபைக்குத் தொடர்பில்லாதது. பசிவேளையில் நானும் என் கணவனும் மண்பாதையைக் கடந்து கொண்டிருந்தபோது ஒரு ரதச் சக்கரம் என் கணவரை நசுக்கிக் கொன்றுவிட்டது. என் கணவரைக் கொன்றவருக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும்’’ என்றது.

“யாருடைய தேர் அது எனத் தெரியுமா” எனக் கேட்டார் அத்ரி.

“அதை நான் அறியேன். ஆனால், அந்த ரதத்தில் எட்டு வெள்ளைக் குதிரைகள் பூட்டியிருந்தன.”

“இதை வைத்து யாருடைய ரதம் என எப்படிக் கண்டுபிடிப்பது? எப்படி நீதிவழங்குவது?” எனக் கேட்டார் காசி ராஜன்.

“அது உங்களுடைய வேலை. எனக்குத் தேவை நீதி” என்றது புழு.

“தேரில் சக்கரத்தில் அடிபட்டு புழு செத்துப்போவது ஒன்றும் பெரிய குற்றமில்லையே” எனச் சொன்னார் அத்ரி.

“எல்லா ஜீவராசிகளுக்கும் உயிர் ஒன்றுதான். அதுவும் பசியோடு உணவைத் தேடிப் போகையில் என் கணவனைக் கொன்றது மகாபாவம்” என்றது புழு.

“இருக்கலாம். அந்தத் தேரை ஓட்டிக்கொண்டு போனவன் தன் சக்கரத்தின் அடியில் ஒரு புழு மாட்டி உயிரை விட்டதை அறியாமல் இருக்கக்கூடும் இல்லையா?” எனக் கேட்டார் காசிராஜன்.

“அறிந்து செய்கிற குற்றத்தை விடவும் மோசமானது, ஒரு குற்றத்திற்கு தான் காரணம் என அறியாமலே இருப்பது” எனச் சீறியது புழு.

“உண்மை. ஆனால், தற்செயலை குற்றம் எனக் கருதமுடியாது’’ என்றார் அத்ரி.

“சாதுர்யத்தால் நீதியை வளைக்கப் பார்க்காதீர்கள்’’ என்றது புழு.

“உனக்கான நீதி நிச்சயம் வழங்கப்படும்’’ என்றார் காசிராஜன்.

“எத்தனை நாட்களுக்குள்’’ எனக் கேட்டது புழு.

“காலக்கெடு வைத்து நீதி வழங்கமுடியாது’’ என்றார் அத்ரி.

“காலம் தாழ்த்தி வழங்கப்படும் நீதி அநீதிக்கு சமமானதே’’ என்றது புழு.

“நீதி ஒருபோதும் அநீதிக்கு சமமாக மாறாது’’ என மறுத்தார் காசிராஜன்.

“ஏன் மாறாது. நீங்கள் நீதி வழங்குவதற்குள் நான் இறந்து போய் விட்டால் அந்த நீதியால் என்ன பயன், அதன் பெயர் அநீதியில்லையா?”

“நீதி எல்லா காலத்திற்குப் பொதுவானது’’ என்றார் அத்ரி.

“அப்படி நம்பவைத்திருக்கிறீர்கள், உண்மையில் ஒவ்வொரு காலமும் அதற்கான நீதியை தானே உருவாக்கிக் கொள்கிறது’’ என்றது புழு.

“நீதி என்பது நெருப்பைப் போன்றது. அதன் இயல்பு ஒன்றுதான்” என்றார் காசிராஜன்.

“வீட்டின் விளக்கில் உள்ள சுடரும் நெருப்புதான். காட்டுத் தீயும் நெருப்புதான். இரண்டும் ஒன்றாகிவிடுமா’’ எனக்கேட்டது புழு.

“கேட்டவுடன் தானம் தருவதைப் போல நீதியை அளித்துவிட முடியாது. நீதி என்பது விசாரித்து அறியப்பட வேண்டிய உண்மை” என மறுத்தார் காசிராஜன்.

“அந்த நம்பிக்கையில்தான் உங்கள் முன்பு நின்று கொண்டிருக்கிறேன்” என்றது புழு.

“அடுத்த பௌர்ணமிக்குள் உனக்கான நீதி வழங்கப்படும்’’ என்றார் காசிராஜன்.

“அதுவரை இதே நீதிசபையில் பட்டினி கிடப்பேன்’’ என்றது புழு.

ஆற்றங்கரையில் புழுவைக் கொன்றது எவரது ரதம் என அத்ரி விசாரிக்கத் துவங்கினார். மூன்று நாட்களில் அதற்கான பதிலை அவர் கண்டடைந்துவிட்டார்.

நீதி சபையில் அதைத் தெரிவிப்பதற்கு முன்பாக அதைப் பற்றிப் பேசுவதற்காக காசிராஜனைக் காணுவதற்காக வசந்தமண்டபத்திற்குச் சென்றிருந்தார்.

காசிராஜன் யாழ் இசைத்துக்கொண்டிருந்தார். அத்ரியின் வருகையைக் கண்டதும் யாழை நிறுத்திவிட்டு அவரிடம் கேட்டார்,

“அந்தப் புழுவைக் கொன்றது யாருடைய ரதம், கண்டுபிடித்து விட்டீர்களா?”

“அது மகாராணியின் ரதம். படகுத் துறையிலிருந்து திரும்பி வரும்போது ரதச்சக்கரம் ஏறி புழு செத்துப் போய்விட்டது.’’

“இதை உறுதியாக உங்களால் எப்படி சொல்லமுடிந்தது.”

“புழு கொல்லப்பட்ட பாதையில் அந்த நேரத்தில் வந்த ஒரே ரதம் மகாராணியுடையது மட்டுமே.”

“இந்த விஷயம் பற்றி மகாராணியிடம் கேட்டீர்களா?”

“தேரோட்டியிடம் விசாரித்துவிட்டேன். அவன் மகாராணி ரதத்தை வேகமாக ஓட்டச் சொன்னதாக ஒத்துக்கொண்டிருக்கிறான்.”

“இப்போது என்ன செய்வது'' எனக் கவலை கொண்டார் காசி ராஜன்.

“கவலை வேண்டாம் அரசே. அற்பப் புழுவிற்காக மகாராணியை நாம் தண்டிக்கமுடியாது'' என்றார் அத்ரி.

“அதற்காக புழுவிற்கு நீதி வழங்காமல் எப்படி இருப்பது?”

“தேரோட்டிக்கு தண்டனை வழங்கிவிடலாம்.”

“குற்றம் அவனுடையது இல்லையே'' எனக் கேட்டார் காசிராஜன்.

“இருக்கலாம். ஆனால், நமக்குத் தேவை தண்டிப்பதற்கு ஒரு ஆள். எளிய மனிதர்கள்தான் அதற்கு பொருத்தமானவர்கள். இந்த தண்டனைக்கு ஈடாக தேரோட்டியின் குடும்பத்திற்கு ஐந்துகுழி நிலத்தை வழங்கிவிடலாம்.”

“இது நீதிக்கு எதிரானதில்லையா?” எனக் கேட்டார் மன்னர்.

“நீதி என்பது ஆள்பவர்களுக்கு சாதகமானது. அரசனின் பிள்ளைகள், உறவினர்கள், பெண் கொடுத்தோர், இவர்களுக்கு எப்போதுமே விசேச நீதியே வழங்கப்படுகிறது'' என்றார் அத்ரி.

“புழுவிடம் உண்மையை மறைக்கச் சொல்லுகிறீர்களா'' எனக் கேட்டார் காசிராஜன்.

“உண்மையை நாம் மறைக்கச் சொல்லவில்லை, பாதி உண்மையைச் சொல்லும்படி சொல்கிறேன்'' என்றார் அத்ரி.

“பாதி உண்மையை மறைப்பது என்பது பொய்தானே.''

“இல்லை. எல்லா உண்மைகளும் பாதி உண்மைகள்தானே. முழு உண்மையை யாராலும் அறியமுடியாது” என்றார் அத்ரி.

“நீ சொல்வது தத்துவம். நான் சொல்வது நியாயம். இங்கே உண்மை என்பது சாட்சிகளால் நிரூபிக்கப்பட வேண்டிய செயல்.''

“மாமன்னரே, சாட்சிகள் ஒருவனை குற்றவாளி என்று சொல்லி விடுவதால் மட்டும் ஒருவன் குற்றவாளி ஆகிவிடுவதில்லை. சாட்சிகளின் தன்மையும் அதில் புதைந்திருக்கும் உண்மையுமே ஒருவனைக் குற்றவாளியாக்குகிறது. அல்லது விடுதலை செய்கிறது. புழுவை நாம் ஏமாற்றவில்லை. ஆனால், நடந்த குற்றத்திற்கு மகாராணி காரணம் என்பதை மட்டுமே நாம் மறைத்துவிடுகிறோம். இது தவறில்லை.''

“நாளை நான் நீதிசபையில் என்ன தீர்ப்பு கூறுவது?”

“தீர்ப்பை முடிவு செய்துவிட்டு விசாரணையைத் துவக்குவது நல்ல ஏற்பாடு. தேரோட்டி தனது குற்றத்தை ஒத்துக்கொள்வான், அதற்கு தண்டனையாக ஐந்து கசையடிகள் தந்தால் போதுமானது.’’

“இது குறைவான தண்டனையில்லையா?’’

“குற்றவாளிகள் பக்கம் நாம் எப்போதும் கருணை காட்ட வேண்டும்’’ எனச் சொல்லிச் சிரித்தார் அத்ரி.

•••

காசி ராஜனின் நீதிசபை கூடியது, தேரோட்டி சபைக்கு இழுத்து வரப்பட்டான்.

அவன் தனது தவற்றை ஒப்புக்கொண்டு தானே புழுவைக் கொன்றவன். அதற்கான தண்டனையை ஏற்றுக் கொள்கிறேன் என்றான்.

புழு அதை ஒத்துக்கொள்ளவில்லை.

“இவன் ரதத்தை ஓட்டியவன். அந்த ரதத்தில் இருந்தவர் மகாராணி’’ என்றது.

“உனக்கெப்படி தெரியும்’’ எனக் கேட்டார் அத்ரி.

“மகாராணியின் ரதத்தை தேரோட்டிகள் தனியே ஓட்டிச் செல்வதில்லை’’ என்றது புழு.

“இல்லை, அந்த ரதத்தில் மகாராணி இருக்கவேயில்லை’’ என்றார் மன்னர்.

“அதை மகாராணி சபையில் வந்து சொல்லட்டும்’’ என்றது புழு.

“அது ராஜ மரபிற்கு எதிரானது’’ என்றார் அத்ரி.

“நீதிசபைக்கு அரசன், பிரஜை என்ற பேதமில்லை. மகாராணி மீது நான் குற்றம் சாட்டுகிறேன். அவரை விசாரணை செய்தே ஆக வேண்டும்’’ என்றது புழு.

“அது சாத்தியமில்லை. அற்ப புழுவிற்காக மகாராணி நீதிசபையின் படிக்கட்டுகளை ஏற நாங்கள் அனுமதிக்க மாட்டோம்’’ என்றார் நீதிமான்.

“இது அநீதி, இந்த சபை எனக்கான நீதியை வழங்காது என்றால் நான் கங்கையிடம் சென்று நியாயம் கேட்பேன். அதுதானே காசியின் தாய்’’ என்றது புழு.

“நீ யாரிடம் சென்று முறையிட்டாலும் மகாராணியை தண்டிக்க முடியாது” என ஏளனமாகச் சொன்னார் அத்ரி.

“எனக்கான நீதியைப் பெறும்வரை நான் ஓயவே மாட்டேன்’’

என்றபடியே அந்தப் புழு காசிராஜனின் அரண்மனையை விட்டு வெளியேறியது.

அது கங்கையை நோக்கிச் சென்று தண்ணீரில் குதித்தது.

அப்படி குதிக்கும்போது அது உரத்து சப்தமிட்டபடியே குதித்தது.

“கங்கைத் தாயே உன்னிடம் நீதி கேட்பதற்காக வருகிறேன்”

கங்கை தனது கைகளில் அந்தப் புழுவை ஏந்தியபடியே அதனிடம் கேட்டது.

“நீ யார், உனக்கு என்ன அநீதி நடந்தது?”

“காசிராஜனின் மனைவி என் கணவனை ரதச்சக்கரத்தில் ஏற்றிக் கொன்றுவிட்டாள். அதற்கு அரசன் நீதிவழங்கமறுக்கிறான்.”

“காசி ராஜன் நீதி தவறாதவன், அவன் ஒருபோதும் இப்படி நடந்துகொள்ள மாட்டான்.”

“அந்த நம்பிக்கை எனக்கில்லை, மகாராணி தண்டிக்கப்பட வேண்டியவர். நீதி சபை என்னை ஏமாற்றுகிறது’’

“இல்லை. கருணையும் தாய் அன்பும் கொண்ட மகாராணி ஒருபோதும் இப்படி நடந்து கொண்டிருக்கமாட்டார். ஆள்பவர்கள் சில சமயங்களில் தவறிழைக்கலாம். அதற்காக அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்களில்லை’’ என்றது கங்கை.

“மன்னரின் சொந்த நலனுக்காக அநீதி வழங்கப்படுவதை என்னால் ஏற்றுக்கொள்ளமுடியாது. என் பக்கம் நியாயம் இருக்கிறது. அதை நீ உணர்ந்தால் எனக்காக சீறிப் பாய்ந்து இந்தக் காசி நகரை விழுங்கிவிடு” என அலறியது புழு.

“ஒரு உயிருக்கு பதிலாக ஆயிரம் உயிர்களைக் கொல்வது நியாய மில்லை’’ என்றது கங்கை.

“தண்ணீரிடம் கருணையை எதிர்பார்க்கக் கூடாது என்பார்கள். தவறு என்னுடையது, நான் வானுலகின் கதவுகளைத் தட்டுகிறேன். அங்காவது எனக்கான நீதி கிடைக்கிறதா பார்க்கலாம்.”

என்றபடியே அந்தப் புழு தண்ணீரை விட்டு நீந்தி வெளியே தரையில் ஊர்ந்து வானுலகை நோக்கிச் செல்ல ஆரம்பித்தது,

பல மாதங்கள் போராடி அது ரிஷிகளின் உதவியோடு வான் உலகிற்குச் சென்று சேர்ந்தது.

கடவுளின் முன்னால் போய் நின்றபடியே அந்தப் புழு சொன்னது,

“நீதி கேட்டு வந்திருக்கிறேன்.’’

“உன் கதையை எனக்குத் தெரியும். ஆண்புழு சாகவேண்டிய தருணம்

வந்த காரணத்தால் ரதச்சக்கரத்தில் அடிபட்டு இறந்து போனது. அது புழுவின் விதி. இதில் நியாய அநியாயங்களுக்கு இடமில்லை’’ என்றார் கடவுள்.

அதைக் கேட்டு தனக்குத்தானே புலம்பியது புழு.

“கடவுளும்கூட மன்னர்களுக்கு சாதகமாகவே பேசுகிறார். அதுதான் வேதனை அளிக்கிறது.’’

கடவுள் சிரித்தபடியே கேட்டார்.

“தண்டனை தருவதன் வழியே இறந்த உயிர் திரும்பக் கிடைத்து விடுமா?’’

“கிடைக்காது. ஆனால், ஒரு உயிரின் மதிப்பு எவ்வளவு முக்கியமானது என்பது உணரப்படுமில்லையா?”

“தண்டனையால் மனிதர்கள் ஒருபோதும் நீதியை உணர்வதில்லை.’’

“பின் எதற்கு தண்டனைகள்?’’ எனக் கேட்டது புழு.

“தண்டனை இல்லாவிட்டால் எல்லா குற்றங்களும் அங்கீகரிக்கப் பட்டுவிடும். நீதி என்பது உயரிய மனிதப்பண்பு.’’

“நீதி என்பது வலிமை மிக்கவர்களின் நலனாகத்தான் எப்போதும் இருந்து வருகிறது. சாமானியர்கள் அதன் உயிர்பலிகள்தானா. எனக்கான நீதி மறுக்கப்படும்போது நான் சாவதைத் தவிர வேறு வழியில்லை’’ என புழு அங்கே எரிந்துகொண்டிருந்த நெருப்பில் விழுந்து உயிரை மாய்த்துக்கொள்ள முயன்றது.

கடவுள் அதைத் தடுத்து நிறுத்திக் காப்பாற்றியபடியே சொன்னார்,

“யுகங்கள் தோறும் எல்லாப் பொருள்களும் காலத்தை அனுசரிப்பது போல், பூமி, நதிகள், மலைகள், மரங்கள், சித்தர்கள், தேவர்கள், மகரிஷிகள் முதலான எல்லோரும் காலத்தை அனுசரிக்கிறார்கள். மனிதர்களுடைய பலம் உடம்பு, புகழ் ஆகியவை எல்லாம் அந்தந்தக் காலத்தில் குறைவையும், வளர்ச்சியையும் அடைகின்றன. ஆகையால் நானும் இந்த யுகத்தின் காலத்தை அனுசரித்துத்தான் ஆகவேண்டும். எந்த யுகத்தில் தர்மம் நிலைபெற்றிருந்ததோ, அதுவே கிருத யுகம், அதில் தர்மங்கள் வாடுவதில்லை. மக்களும் குறைவே இல்லாமல் இருந்தார்கள். வாங்குவதும் விற்பதும் கிருத யுகத்தில் இல்லை. துரோகமும் பகையும் கிடையாது. அந்த யுகத்தில் பற்றை விடுவதே தர்மமாக இருந்தது. பொறாமை, அழுகை, அகங்காரம், கபடம், சண்டை, சோம்பல், விரோதம், பயம், தன்மீதே வெறுப்பு, அருவருப்பு முதலான எவையும் கிருத யுகத்தில் இல்லை. மக்கள் அனைவரும் அவரவர் கடமைகளை பொறுப்புடன் செய்தார்கள்.

கிருத யுகத்தில் தர்மம் நான்கு கால்களுடன் இருந்தது. திரேதா யுகத்தில் தர்ம தேவதையின் கால் ஒன்று குறைந்தது. மூன்று கால் உள்ளதாக

ஆனது. இன்னது செய்தால் இன்னது அடையலாம் என்று பலவிதமான காரியங்களைச் செய்வதில் மக்கள் ஆர்வம் உள்ளவர்களாக ஆனார்கள். கொடை செய்வதின் மூலம் பலன் அடைந்தார்கள். தவமும் தானமுமே முக்கியமாக இருந்தது.

இப்போது நடப்பது துவார யுகம் இதில் தர்மம் இரண்டு கால்களுடன் நடமாடுகிறது. மனிதர்கள் அதர்மத்தால் நலிந்து போயிருக்கிறார்கள். அதன் விளைவுதான் உனக்கு அளிக்கப்பட்ட அநீதி. அதைவிடவும் அடுத்த யுகமான கலியுகத்தில் தர்மம் ஒரே காலில் நிற்கும். அலட்சியமும், சோம்பேறித்தனமும் மேலோங்கும். நற்செயல்கள் அற்றுப்போகும். பஞ்சம் பட்டினி, வெள்ளம், அரசாங்கத்தால் தொல்லை, அடுத்த நாட்டுக்காரர்களால் தொல்லை என மக்களுக்கு தாங்க முடியாத துயரம் உண்டாகும்.

துவார யுகத்தில் தர்மத்தை நிலைநாட்ட யுத்தம் அவசியமானது, உனக்காக வாதிட நானே காசி ராஜனின் அரண்மனைக்கு வருகிறேன்'' என்றார் கடவுள்.

மறுநிமிடம் அவர்கள் காசி ராஜனின் நீதிசபையில் காட்சி அளித்தார்கள், வந்திருப்பது கடவுள் என்று அறிந்த காசிராஜன் வணங்கி, தொழுது ஆசி கேட்டு நின்றான்.

அதற்கு கடவுள் இந்தப் புழுவிற்காக நான் நீதிகேட்டு வந்திருக்கிறேன்.

நீதிமான்களில் மூத்தவரான அத்ரி எழுந்து கடவுளை வணங்கி விட்டு சொன்னார்.

“முன்பே இந்தப் புழுவிற்கான நீதி வழங்கப்பட்டுவிட்டது.”

“இல்லை, இந்தப் புழு மகாராணியைக் குற்றவாளி என்கிறது என்றார் கடவுள்.

“அது அறியாமை. இந்த நீதிசபை வழக்கை விசாரித்து தேரோட்டிக்கு தண்டனை கொடுத்தாகிவிட்டது.”

“இல்லை மகாராணி விசாரிக்கப்பட வேண்டியவர். அவரை நீதிமன்றத்திற்கு அழைத்துவாருங்கள்'' என்றது புழு.

காசிராஜன் வேறுவழியில்லாமல் மாகாராணியை நீதிசபைக்கு அழைத்து வரச்சொன்னான்.

அவள் நீதிசபையின் படியேறி வந்து அங்கிருந்த கடவுளையும் நீதிமான்களையும் வணங்கினாள். பின்பு தன் மீது குற்றம் சுமத்தப்பட்ட புழுவைப் பார்த்துக் கேட்டாள்.

“ரதம் வரும் ஓசை கேட்டபிறகும் பாதையில் ஊர்ந்துகொண்டிருந்தது உனது தவறில்லையா?''

“பசியில் சென்றுகொண்டிருந்தேன்'' என்றது புழு.

“அதே பசிதான் நான் வேகமாக ரதத்தைச் செலுத்திக்கொண்டு வருவதற்கும் காரணம். குற்றத்தை நான் ஒத்துக்கொள்கிறேன். அறியாமல் ஏற்பட்ட தவறு அது.”

“இதற்கு உங்கள் நாட்டில் தண்டனை என்ன’’ எனக் கேட்டது புழு.

“அதேபோல ரதச்சக்கரத்தில் ஏற்றிக் கொல்வதுதான்’’ என்றார் அத்ரி.

“தண்டனையை நிறைவேற்றுங்கள்’’ என்றார் கடவுள்.

அதைக்கேட்ட மன்னர் செய்வதறியாமல் தலைகவிழ்ந்து நின்றார்.

அப்போது புழு உரத்த குரலில் சொன்னது,

“தேவையில்லை. எனக்கான நீதி கிடைத்துவிட்டது. நான் இவளை மன்னிக்கிறேன். தண்டனையைவிட மேலானது மன்னிப்பு. அது கழுத்தில் கட்டப்படும் மணியைப் போல வாழ்நாள் முழுவதும் இவள் கூடவே ஒலித்துக்கொண்டிருக்கும். சாமானியர்களின் குரலை யாராலும் ஒடுக்கிவிடமுடியாது என்பதற்குத்தான் வான்உலகம் வரை சென்று மன்றாடினேன். இனி என் வேலை முடிந்துவிட்டது. நன்றி கடவுளே’’

என்றபடியே அந்தப் புழு தான் வசித்த ஆற்றங்கரையை நோக்கி ஊர்ந்து செல்ல ஆரம்பித்தது.

•••

கதையைக் கேட்டுக்கொண்டிருந்த காலாவின் விசாரணைக் கைதிகள் கண்ணீர்விட்டார்கள். தங்களுக்கும் இப்படி நீதி கிடைத்துவிடும் என நம்பினார்கள். ஆனால், தூமகேது மட்டும் கடவுளை அழைத்து வந்தால் மட்டுமே நீதி கிடைக்கும் என்பதை உணர்ந்திருந்தான்.

அறியாப் பெண்

எப்போதும் பெரிய குற்றங்களின் முன்பாக சிறிய குற்றங்கள் முக்கியமற்றுப் போய்விடுகின்றன, அதை தூமகேது காலாவிற்கு வந்த பிறகு நன்றாக உணரத் துவங்கியிருந்தான். இந்நாள் வரை அவன் கேள்விப் பட்டும் அறிந்திராத பல குற்றங்களையும், அதற்கான முகாந்தரங்களையும் பற்றி அவன் காலாவிற்கு வந்த பிறகு அறிந்துகொண்டு விட்டான். உண்மையில் அவன் குற்றவாளியாக்கப்பட்ட பிறகு தைரியத்துடன் பிறருடன் பேசப் பழகியிருந்தான்.

ஒருவேளை தான் கைது செய்யப்பட்டது நல்லதுதானோ. இல்லாவிட்டால் இப்படி ஒரு உலகம் இருக்கிறது என்பதையே அறிந்திருக்க மாட்டேனா. தன்னைப் போலத்தானே இவர்களும் இருக்கிறார்கள். ஆனால், எப்படி இப்படியான வன்குற்றங்களைச் செய்ய முடிந்திருக்கிறது. மனது தான் காரணமா, மனதிற்கு எப்படி இந்தத் துணிச்சல் வந்தது. அவன் நிறைய நேரம் தன்னைப் பற்றியும் தன்னோடு வசிப்பவர்களைப் பற்றியும் யோசித்துக் கொண்டிருந்தான்.

காலாவில் விசாரணைக்காகக் கொண்டுவந்து அடைக்கப்பட்ட பெண்கள் தடுப்புச் சுவர் ஒன்றின் மறுபக்கமிருந்தார்கள். அந்தச் சுவரில் சிறிய வழி இருந்தது. அங்கே காவல் கிடையாது, எந்த ஆணும் மறுபக்கம் போய்வரலாம். அதுபோலவே பெண்களும் ஆண்கள் பகுதிக்குள் வந்து போவார்கள். ஒரு நாள் தயக்கத்துடன் தூமகேதுவும் பெண்கள் பகுதிக்குள் பிரவேசித்தான்.

குற்றவாளிகளான பெண்களைப் பற்றி அவன் மனதில் இருந்த பிம்பம் கலைந்து போனது. அவர்கள் துயரத்துடன் கண்ணீரும் கதறலுமாக முடங்கிக் கிடக்கவில்லை. ஆளுக்கு ஒருவேலை செய்து கொண்டிருந்தார்கள். சிலர் பேசிச் சிரித்தபடியே தாயமாடினார்கள். சில பெண்கள் கூட்டமாக உட்கார்ந்து தலைவாரிக் கொண்டிருந்தார்கள். தூமகேதுவைப் பற்றி அந்தப் பெண்களுக்குத் தெரிந்திருந்தது, ஒரு பெண் அவனை வழியில் நிறுத்தி, “உன் அதிசயம் எல்லாம் ஆண்களுக்கு மட்டும்தானா, பெண்களிடம் எந்த அதிசயமும் நிகழ்த்த மாட்டாயா’’ எனக் கேட்டாள்.

“அதெல்லாம் கதை’’ என்று சொன்னான் தூமகேது.

“கதையா, கதையை நம்புவதற்கு நான் ஒன்றும் சிறுமியில்லை. உண்மையில் உன்னால் காற்றில் நடந்து போக முடியுமா” எனக் கேட்டாள்.

“காற்றில் நடக்க முடிந்திருந்தால் காலாவை விட்டு வெளியேறிப் போயிருப்பேனே’’ எனக் கேட்டான் தூமகேது.

“பிறகு ஏன் உன்னைப் பற்றி இப்படி விசித்திரமான கதைகள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.”

“அதைப்பற்றி எனக்குத் தெரியாது. உன் கண்கள் ஏன் பச்சை நிறமாக இருக்கின்றன. சிறுவயதில் பச்சைப் பாம்பை மிதித்துவிட்டயா?’ எனக் கேட்டான் தூமகேது.

“ஆமாம். அது உனக்கு எப்படி தெரியும்’’ எனத் திகைத்துப் போய்க்கேட்டாள் அந்தப் பெண்.

“கேள்விப்பட்டிருக்கிறேன், பச்சைப் பாம்பை மிதித்துவிட்டால் கண்கள் நிறம் மாறிவிடும் என்பார்கள்.”

“பொய். என் மனதில் உள்ள ரகசியங்களை உன்னால் படிக்க முடிகிறது. நீ மாயாவிதான்” என்றாள்.

“இல்லை, பச்சைக் கண்கள் கொண்ட பெண் ஒருத்தி என் வீட்டின் அருகில் குடியிருந்தாள். அப்படித்தான் தெரிந்துகொண்டேன்’’

“என்னால் நம்பமுடியவில்லை, நீ உன்னை மறைத்துக்கொண்டு வாழ்கிறாய்.’’

“அப்படி எல்லாம் இல்லை. நான் வெறும் ஆட்டுத்தோல் உரிப்பவன்.’’

“உன்னைப் பற்றிய கதைகள் எல்லாம் நிஜமானதுதான். நான் நம்புகிறேன்.’’

“பெண்கள் யார் எந்தக் கதை சொன்னாலும் எளிதாக நம்பி விடுவார்கள்” என்றான் தூமகேது.

பச்சை நிறக் கண்கள் கொண்ட பெண் கேட்டாள்,

“உன்னால் என் எதிர்காலத்தைப் பற்றிச் சொல்ல முடியுமா? என்னைத் தூக்கிலிட்டுவிடுவார்களா, பயமாக இருக்கிறது, உன்னால் என்னையும் காற்றில் நடக்க வைக்க முடியுமா?”

“எனக்கும் அந்த பயமிருக்கிறது” என்றான் தூமகேது.

அந்தப் பெண் திடீரெனக் கேட்டாள்.

“உனக்கு கனவுகள் வருகிறதா?”

“இல்லை” என்றான் தூமகேது.

“எனக்கு காலாவிற்கு வந்தபிறகு நிறைய கனவுகள் வருகின்றன. எல்லாமும் துர்ச்சொப்பனங்கள். என் உடலைப் பத்துக் கழுகுகள் ஒன்று கூடி உண்பதைப்போல ஒரு கனவு வந்தது. அதை நினைக்கும் போது நடுக்கமாயிருக்கிறது.”

“கனவுதானே?” என்றான் தூமகேது.

“அதனால்தான் பயமாக இருக்கிறது. கனவுகள் என்றாவது நிஜமாகி

விடக்கூடியவை” எனச் சொன்னாள் அந்தப் பெண்.

“நீ என்ன குற்றம் செய்ததாக இங்கே அடைக்கப்பட்டிருக்கிறாய்'' எனக் கேட்டான் தூமகேது.

“பிள்ளைகளைக் கொன்ற குற்றத்திற்காக என்னைக் கைது செய்திருக்கிறார்கள்.”

“உன் பிள்ளைகளை நீ கொன்றுவிட்டயா?''

“நான்தானே பெற்றேன். எனக்கு கொல்லும் உரிமையில்லையா?''

“அது எப்படி உனது உரிமையாகும்? ஒரு உயிரைக் கொல்ல யாருக்கு உரிமையிருக்கிறது?” எனக் கேட்டான் தூமகேது.

“உயிரை உருவாக்க முடிந்தவர்களுக்கு கொல்லும் உரிமையிருக்கிறது'' என்றாள் அவள்.

“இல்லை. நீ செய்தது மன்னிக்கமுடியாத குற்றம்.”

“இருக்கலாம். ஆனால், அதைச் செய்வதைத் தவிர வேறு வழியில்லாமல் போய்விட்டது.”

“உனக்கு எத்தனை குழந்தைகள்?”

“ஐந்து.''

“எதற்காக அந்தக் குழந்தைகளைக் கொன்றாய்?''

“கணவன் இல்லாத ஒரு பெண்ணால் குழந்தைகளை எத்தனை நாள் பராமரிக்கமுடியும்?''

“உன் கணவன் எங்கே போனான்?''

“அரண்மனைக்கு தேரோட்டியாக வேலைக்குச் சென்றவன், ஒருநாள் கிணற்றில் பிணமாக மிதந்துகொண்டிருந்தான். அவன்முதுகில் சவுக்கடிபட்ட தடங்கள் இருந்தன. பிணத்தை என்னிடம் கொண்டு வந்து ஒப்படைத்தார்கள்.”

“எதற்காக அவன் கொல்லப்பட்டான்.''

“அதைத்தான் நானும் கேட்டேன். ஆனால், யாரும் அதற்கான பதிலைச் சொல்லவில்லை. இறந்துபோனவன் வந்து சொன்னால் மட்டுமே காரணத்தைத் தெரிந்துகொள்ள முடியும்.”

“அநியாயமாக இருக்கிறதே.”

“அநியாயம்தான். ஆனால், அந்த துரதிருஷ்டம் யாருக்குத்தான் நடக்கவில்லை? என் கணவன் அதில் ஒருவன்.”

“தேரோட்டிகள் ரகசியம் அறிந்தவர்கள். உன் கணவன் எந்த ரகசியத்தை அறிந்துகொண்டிருந்தானோ தெரியவில்லை'' என்றான் தூமகேது.

“அரண்மனை ரகசியங்கள்தான் ஊருக்கே தெரிகிறதே. இதில் எதற்காக என் கணவனை மட்டும் அடித்துக் கொல்லவேண்டும்?’’

“அதுதான் எனக்கும் புரியவில்லை.”

“நானும் அழுது முறையிட்டேன். கோவில் கோவிலாக ஏறி பிரார்த்தனை செய்தேன், ஆனால், ஐந்து பிள்ளைகளை வைத்துக் கொண்டு அவற்றிற்குச் சோறு போடுவது எளிதாகயிருக்கவில்லை, பசி பசி என அந்தப் பிள்ளைகள் கூச்சலிட்டன. வறுமை அடங்கவில்லை. முடிவில் ஒரு நாள் உணவில் விஷத்தைக் கலந்து கொடுத்தேன். பசியோடு அதையும் அள்ளி அள்ளி சாப்பிட்டார்கள். நானும் மீதமிருந்த உணவைத் தின்றேன். அவர்கள் இறந்துபோய் விட்டார்கள். நான் பிழைத்துக் கொண்டுவிட்டேன்.”

“உன்னை யார் காப்பாற்றினார்கள்?”

“என் பிள்ளைகளில் ஒருவன், இறந்து போவதற்கு முன்பாக எனது பிள்ளைகளில் ஒருவன் வாசலுக்கு வந்து வாந்தி எடுத்தான். அவன் உணவில் விஷம் கலந்தது தெரியாமல் அம்மா அம்மா என அரற்றினான். பிறகு சப்தமாக ‘காப்பாற்றுங்கள்’ எனக் கத்தினான். அதைக் கேட்டு உமி விற்பவன் மனைவி ஓடிவந்தாள். அதற்குள் பிள்ளைகள் வாயில் ரத்தம் கசிய இறந்துபோயிருந்தார்கள். மயங்கிக்கிடந்த என்னை மருந்து கொடுத்துக் காப்பாற்றி விட்டார்கள்.’’

“கேட்கவே அச்சமாக இருக்கிறது. உன் குழந்தைகளைக் கொல்ல உனக்கு எப்படி மனது வந்தது?’’

“குளவி கூடு கட்டுவதுபோல அந்த மனதை உருவாக்கிக் கொண்டேன். ஆனால், என் பிள்ளை அம்மா அம்மா என்று கதறியபோதுதான் என் தவற்றை உணர்ந்தேன். இன்றைக்கும் இரவில் அவர்களை நினைத்து அழுதுகொண்டிருக்கிறேன். அவர்கள் எப்படியாவது வாழ்ந்திருப்பார்கள்தானே. நான் ஏன் கொன்றேன்?”

“உன்னை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. எனக்கு பயமாக இருக்கிறது. ஒருவேளை என் மனைவியும் இப்படி நடந்து கொண்டிருந்தால், என் பிள்ளைகள் என்னவாகியிருப்பார்கள்? என் மனைவி என்னவாகியிருப்பாள்?”

“யாருக்குத் தெரியும்? ஆனால், சூழ்நிலை எவரையும் எந்தக் குற்றத்தையும் செய்ய வைத்துவிடும். அதுதான் விதி. அதை மீறவே முடியாது.”

“நளா ஒருபோதும் அப்படி நடந்துகொள்ள மாட்டாள். அவள் தைரியசாலி.”

“வறுமை எல்லா தைரியத்தையும் போக்கிவிடும். அவமானத்திற்கு பயந்துபோய்த்தான் பிள்ளைகளைக் கொன்றேன். அந்த முடிவிற்கு ஒரு

பெண் வேகமாக வந்துவிடுவாள்.”

“இந்த உலகில் பிள்ளைகளைத் தவிர வேறு எவரும் எனக்கு முக்கியமில்லை.”

“அது ஆண்களின் சுயநலம். அந்தப் பிள்ளைகளை உனக்காக பெற்றுத்தந்தவள் உன் மனைவி, அவளைவிடவும் உனக்குப் பிள்ளைகள் முக்கியம்தானா?”

“பெற்றவர்கள் பிள்ளைகளுக்காக செத்துப் போகலாம், ஆனால், பிள்ளைகளைக் கைவிடக்கூடாது.”

“அப்படித்தான் நானும் நினைத்துக்கொண்டிருந்தேன், ஆனால், நான் இறந்துபோய்விட்ட பிறகு என் பிள்ளைகளை யார் பார்த்துக் கொள்வார்கள். இந்த உலகம் அவ்வளவு கருணையானதில்லை. அது என் பிள்ளைகளை நான் வாழும்போதே எவ்வளவு இம்சிக்கிறது. நானும் இல்லாவிட்டால் அவர்கள் என்ன ஆவார்கள்? அந்த பயம் தான் அவர்களைக் கொல்ல வைத்தது.”

“நீ ஆயிரம் காரணங்கள் சொன்னாலும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.”

“இந்தக் காரணங்கள் நீ ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக சொல்லப்படவில்லை. இதுதான் உண்மை. என்னைப் போல உன் மனைவியும் இதைப் பற்றி யோசித்துக்கொண்டுதான் இருப்பாள்.”

“அவள் ஒருபோதும் தன்பிள்ளைகளைக் கொன்றுவிட மாட்டாள்.”

“அது உன் நம்பிக்கை, நீ காலாவிற்கு வந்து எவ்வளவு நாட்கள் ஆகிறது.”

“பல மாதங்கள் கடந்துவிட்டன.”

“இத்தனை காலம் அவர்கள் எதை சாப்பிட்டு வாழுவார்கள், யார் அவர்களுக்காக வேலை செய்வார்கள்? உன் வீட்டில் என்ன சேமித்து வைத்திருக்கிறாய்?’’

“எதுவுமில்லை, என் மனைவி மாவு திரிப்பவள்.’’

“பாவம், உன் பிள்ளைகள்’’ எனச் சொல்லி ஏளனமாகப் பார்த்தாள் அந்தப் பச்சைநிறக் கண் கொண்ட பெண்.

“அப்படி என்னைப் பார்க்காதே. என் பிள்ளைகளுக்கு ஒன்றும் நடந்திருக்காது. அவர்கள் உயிருடன்தான் இருப்பார்கள். இப்போதே வெளியே போய் அவர்களைப் பார்க்க வேண்டும் என மனது துடிக்கிறது.”

அவள் வெறிகொண்டதுபோல சப்தமாகச் சிரித்தாள். பயந்து போய் பெண்கள் பகுதியை விட்டு வெளியேறி ஓட ஆரம்பித்தான் தூமகேது.

ஒருவேளை அந்தப் பெண் சொன்னதுபோல நளாவும் பிள்ளை களும் இறந்துபோயிருந்தால், தான் ஒருவன் மட்டும் எதற்காக உயிர் வாழ வேண்டும்? இதுதான் தனக்கு அளிக்கப்பட்ட தண்டனையா? அவன் தன்னை மறந்து கூச்சலிட்டான். காலாவில் ஒரு மனிதன் சப்தமாக அழுவதோ, கூச்சலிடுவதோ இயல்பானது என்பதால் யாரும் அவனைக் கண்டுகொள்ளவேயில்லை. பிறகு வெறிகொண்டவன்போல காலாவிற்குள் ஓடத் துவங்கினான்.

யார் குற்றவாளி

ஸச்சல் என்ற உருது மொழி கற்பிக்கும் ஆசிரியனும் கைது செய்யப்பட்டு காலாவில் அடைக்கப்பட்டிருந்தான். அதற்குச் சொல்லப்பட்ட காரணம் அவன் மாணவர்களிடம் கடவுள் இல்லை என்று பொய்யுரை சொல்லிவந்தான் என்பதே. அத்துடன் தனது மாணவர்களைக் கொண்டு அவன் பகடியான நாடகம் ஒன்றை நிகழ்த்தியிருந்தான். அது ஆட்சியில் இருக்கும் பிஷாடனையும் அவனது மந்திரிகளையும் கேலி செய்கிறது எனச்சொல்லி அவன் மீது ராஜதுரோக வழக்கை உருவாக்கியிருந்தார்கள்.

ஸச்சல் காலாவிற்கு வந்த நாளில் இருந்து தன்னை விசாரணை செய்யாமல் ஒரு நாள் தூக்கிலிட்டுவிடுவார்கள். அறிவாளிகள் விஷயத்தில் அரசு கருணை காட்டாது எனச் சொல்லிக் கொண்டேயிருந்தான். அவன் பேச்சில் வரலாற்று உண்மைகள் வெளிப்பட்டன. சில சமயம் அவன் ஆவேசம் அடைந்து கோபம் கொப்பளிக்க உரக்கப் பேசுவான். சில நேரம் என்றோ கொல்லப்பட்டவர்களுக்காக கண்ணீர் விடுவான்.

ஒருநாள் அவன் தூமகேதுவைத் தேடி வந்திருந்தான்.

தூமகேது அவன் வந்த போது காலாவைத் துடைத்து சுத்தம் செய்துகொண்டிருந்தான்.

ஸச்சல் கேலியான குரலில் கேட்டான்.

“நீ தான் தூமகேதுவா? உன்னைப் பற்றி விசித்திரமான பல கதைகள் காலாவில் உலவுகின்றன. காற்றில் நடந்துபோகக் கூடியவன் என்கிறார்கள். ஆனால், இப்படி தரையை சுத்தம் செய்துகொண்டிருக்கிறாய்?”

“அவை கதைகள், என்னைப் பற்றிய கதைகளுக்கும் எனக்கும் எந்தத் தொடர்புமில்லை” என்றான் தூமகேது.

“அந்தக் கதைகள் எதற்காக உண்டாக்கப்படுகின்றன என எனக்குத் தெரியும். எல்லாம் அந்த சக்ரதாரின் வேலை’’ என்றான் ஸச்சல்.

“நான் நிரபராதி, பொய் வழக்கு சுமத்தப்பட்டிருக்கிறேன்.’’

“காலாவிற்குள் யார் குற்றவாளி, உண்மையான குற்றவாளிகள் இங்கே எப்படி வருவார்கள்? அவர்களுக்கு அரியணை அல்லவா பரிசாக வழங்கப்பட்டிருக்கிறது?’’

“பல மாதங்களாக நான் காலாவில் விசாரணைக்குக் காத்துக் கொண்டிருக்கிறேன்.’’

“சந்தோஷப்படு. நீதி மறுக்கப்படுவதும் ஒருவகை நீதிதான். ஒருவேளை

நீதி வழங்கப்பட்டிருந்தால் இதற்கு வழங்கப்படாமலே இருந்திருக்கலாமே என்றுகூட தோன்றக்கூடும்.”

“மனைவி பிள்ளைகளை விட்டு எத்தனை நாள் இங்கே அடைந்து கிடப்பது?’’ எனக் கேட்டான் தூமகேது.

“அதுதானப்பா தண்டனையே. ஒருவனை குடும்பத்திலிருந்து பிரித்துவிடுவதுதான் உண்மையான தண்டனை. மனிதர்கள் தனிமையில் வாழ பயப்படுகிறவர்கள். உடலை கண்ணாடிப் பாத்திரம்போல நினைக்கிறார்கள். உண்மையில் மனித உடல் என்பது இந்த பூமியைப்போன்றது, அதன் உறுதியை நாம் அழிக்காமல் இருந்தாலே போதும்.’’

“எனக்குப் பயமாக இருக்கிறது. ஒருவேளை என் வாழ்க்கை முழுவதுமே இங்கே அடைப்பட்டுக் கிடக்க நேரிடுமோ எனக் குழப்பமாக இருக்கிறது.’’

“நாளையைப் பற்றி பயப்படுகிறவன்தான் அப்படி நினைப்பான். நாளை என்ன வேண்டுமானாலும் நடக்கலாம்.’’

“ஒருவேளை நான் கொல்லப்பட்டுவிட்டால்?’’

“உனக்காக நீதி கேட்க யாரும் இருக்கமாட்டார்கள். இறந்தவர்களால் நீதி கேட்க முடியாது. இறந்தவர்களுக்காக கேட்கப்படும் நீதி எளிதில் கிடைத்து விடாது.”

“இவ்வளவு அறிவாளியாகப் பேசுகிறீர்களே. நீதி என்பது எது?’’

“எவ்வளவு எளிதாகக் கேட்டுவிட்டாய்? நீதி என்றால் நீயும் நானும் உடல் வாழ்வதற்கு உணவை உட்கொள்வது போல உயிர் வாழ்வதற்கு வகுத்துக்கொண்ட அறம்.’’

“நான் எந்தத் தவறும் செய்யவில்லையே. பின்பு எனக்கு ஏன் அநீதி இழைக்கப்படுகிறது?’’ என ஆதங்கமாகக் கேட்டான் தூமகேது.

“தவறுகளின் பட்டியல் முடிவில்லாதது. அது மனிதர்களால் காலத்திற்கு காலம் வளர்த்து எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. மனிதர்கள் தவற்றை விரும்புகிறவர்கள். தவறுதான் அவர்களுக்குப் பாடமாக அமைகிறது. ஆனால், தவறிலிருந்து அதிகம் கற்றுக்கொள்வதில்லை. தவறு செய்வது என்பது ஒரு சுகம். அதை அனுபவித்துப் பார்த்தவர்களால் எளிதில் விட முடியாது.’’

“நீங்கள் தவறு செய்திருக்கிறீர்களா?’’

“நிறைய செய்திருக்கிறேன். அதன் பலன்தான் இந்தக் காலாவில் அடைக்கப்பட்டிருக்கிறேன்.’’

“நீங்கள் செய்த தவறுதான் என்ன?’’ எனக் கேட்டான் தூமகேது.

“எனது முதற் தவறு சிந்திக்கிற மனிதனாக இருப்பது. எவன்

கூர்மையான உணர்ச்சியுடையவனாக இருக்கிறானோ அவனால் வாழமுடியாது. அவதிப்படுவான். தனக்குத்தானே பேசிக் கொள்ளத் துவங்கிவிடுவான். உலகம் அத்தனை சொரணையானதில்லை. இதற்கு எருமை மாடுகள்தான் சரி. அது சுவரில் உடம்பை உரசினாலும் தண்ணீரில் கிடந்தாலும் ஒன்றுபோல நினைக்கும். தெருவில் எது நடந்தாலும் கண்டுகொள்ளாமல் அசை போட்டுக்கொண்டு செல்லும், இவ்வளவு ஏன், தன் மூத்திரத்தை வீதி முழுவதும் பெய்தபடியே போவதில் அதற்கு ஒரு சுகமிருக்கிறது. எருமை மாடுகள் போல வாழ்வது எளிதானது. அதற்கு சொரணையிருக்கக் கூடாது. கூர் உணர்ச்சிகள் கூடாது. நவத்துவாரங்களையும் பொத்திக்கொண்டு வாழ வேண்டும். என்னால் அப்படியிருக்க முடியாது. நான் படித்தவன், கேள்வி கேட்பவன். எனக்கு பயமில்லை. ஆகவே நான் கடவுளையும் கேள்வி கேட்கிறேன்.''

“உண்மையில் கடவுள் இல்லை என்கிறீர்களா?''

“அது பொய். நானும் ஒரு கடவுள் என்கிறேன்.''

“மனிதன் எப்படி கடவுளுக்குச் சமமாக முடியும்?''

“ஏன் சமமாக முடியாது? கடவுள் பற்றி எல்லாமும் கதைகள். உன்னைப் பற்றிய கதைகள் உனக்கே ஆச்சரியமாக இருக்கிறதில்லையா? அப்படித்தான்.''

“கடவுள் இல்லை என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. கடவுள் நம்மைப் பார்த்துக்கொண்டிருக்கிறார் என நம்புகிறேன்'' என்றான் தூமகேது.

“அப்படித்தான் மனிதனும் கடவுளைப் பார்த்துக் கொண்டிருக்கிறான்'' எனச் சொல்லிச் சிரித்த ஸச்சல் சொன்னான்.

“கடவுள் மனிதனைப் படைத்த கதை உண்மை என்றால் மனிதன் கடவுளைப் படைத்த கதையும் உண்மைதான். பரஸ்பரம் படைத்துக் கொள்வது சரிதானே.''

“எனக்கு உங்களைப்போல சாதுர்யமாகப் பேசத் தெரியாது. நான் படிக்காதவன், முட்டாள்.''

“அதனால்தான் எளிதாக குற்றவாளியாக்கப்படுகிறாய். கல்வியைத் தவிர உங்களை முன்னேற்றுவதற்கு வேறு வழியே இல்லை.''

“வயிற்றுப்பாட்டைக் கவனிக்க நேரமில்லாதவனுக்கு எதற்கு கல்வி?'' எனக்கேட்டான் தூமகேது.

“உன் வயிறு ஏன் பசிக்கிறது என்பதைத் தெரிந்துகொள்வதற்கே கல்விதான் வேண்டும். பசிக்கிற நேரத்தில் உனக்கு மட்டும் உணவு கிடைக்கவில்லை என்பதைத் தெரிந்துகொள்ள படிக்கத்தான் வேண்டும், இவ்வளவு ஏன்? நீயும் நானும் மட்டும் ஏன் வேலை செய்து

சாப்பிடுகிறோம். சிலர் பணத்திலும் போகத்திலும் திளைக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள படிக்கத்தான் வேண்டும் நண்பா.”

தூமகேது தன்னை அவன் நண்பன் என அழைத்த விதத்தில் இருந்த நெருக்கத்தை உணர்ந்தவனைப் போல சொன்னான்,

“யார் எங்களுக்குக் கல்வி தருவார்கள்?’’

“அதைப் பற்றிப் பேசியதற்காக, நாடகம் போட்டதற்காகத்தான் நான் ராஜதுரோகியாகியிருக்கிறேன்.’’

“நானும் பண்டிகைநாளில் சில புராண நாடகங்கள் பார்த்திருக்கிறேன். வேடிக்கையாக இருக்கும்’’ என்றான் தூமகேது.

“கடவுளையும் அதிகாரத்திலிருப்பவர்களையும் விமர்சனம் செய்தால் கண்டுகொள்ளமாட்டார்கள். ஆனால், கேலி செய்தால் அவர்களால் ஏற்றுக்கொள்ளமுடியாது. கேலி வலிமையான ஒரு ஆயுதம். அதை நம்மைவிட எதிராளிகள் தெளிவாகப் புரிந்து வைத்திருக்கிறார்கள்’’ எனச் சொல்லி சிரித்தான் ஸச்சல்.

அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது, சக்ரதார் ஒரு ஆளை அழைத்துக்கொண்டு தூமகேதுவைக் காண வந்திருந்தார். ஸச்சல் இருப்பதைக் கண்டதும் வியப்போடு சொன்னார்.

“மஹாபுத்திசாலியும் நாத்திகனும் கவிஞனுமான ஸச்சல் பிரபுவுக்கு பணிவான வணக்கம்.’’

அதைக் கேட்டுச் சிரித்த ஸச்சல் சொன்னான்,

“நீதிமான் சக்ரதாருக்கு வந்தனம். கதை கேட்டுப்போவதற்காக தூமகேதுவைத் தேடி வந்திருந்தேன். அதற்குள் நீங்களும் வந்து விட்டீர்கள்.”

“உன்னிடம் இல்லாத கதைகளா? பாவம் இவன்.”

“ஆனால், சூத்ரதாரியான உங்களால் ஆட்டுவிக்கப்படும் பாவைகளில் ஒருவன்.”

“நான் யார் இவர்களை ஆட்டுவிக்க. எல்லாம் ஆண்டவன் செயல்.’’

“இரண்டு பொய்யை ஒரே நேரத்தில் கேட்கிறேன்’’ எனச் சொல்லிச் சிரித்தான் ஸச்சல்.

சக்ரதார் தன்னோடு அழைத்து வந்தவனைக் காட்டிச் சொன்னார்,

“இவரும் நம்மைப் போன்ற ஒரு அப்பாவி. உயர்ஜாதிக்காரன் ஒருவனின் நிழலை மிதித்து நடந்து போயிருக்கிறான். அதற்காகக் கைது செய்திருக்கிறார்கள்.”

“நிழலை மிதித்ததற்காகவா?’’ எனத் திகைப்போடு கேட்டான் ஸச்சல்.

“ஆமாம். நிழலைத்தான். ஆனால், உயர்ஜாதியினரின் நிழலுக்கும் சாதிப் பெருமை இருக்கத்தானே செய்கிறது. அதை சூத்திரன் மிதிக்க முடியுமா என்ன?’’

“அநியாயமாக இருக்கிறது. பிஷாடனுக்கு புத்தி பிசகிவிட்டது.”

“அது எப்போதோ பிசகிவிட்டது. அதற்குப் பரிசுதானே அரியணை.’’

“நான் காலாவிற்குள்ளாகவே ஒரு நாடகம் போடலாம்’’ என நினைக்கிறேன்.”

“காலாவே ஒரு திறந்தவெளி நாடக அரங்குதானே. அதில் நாம் எல்லோரும் அதன் நடிகர்கள்’’ என்றார் சக்ரதார்.

“உங்களுக்கு எல்லாமே வேடிக்கைதான். நீதிகேட்டு நாம் ஒரு நாடகம் போட்டால் என்ன?’’

“யாரிடம் நீதி கேட்பது? என்ன கேட்பது? யார் அதை அனுமதிப்பார்கள்?’’ எனக் கேட்டார் சக்ரதார்.

“நாம் குற்றவாளிகள் இல்லை. குற்றவாளிகளாக ஆக்கப்பட்டவர்கள், அதை மறுக்கவேண்டியது நமது கடமை.”

“காலாவின் பொறுப்பாளன் ஜாபரைப் பற்றி உனக்குத் தெரியாது, அவன் நமக்குள்ளாகவே ஒற்றர்களை வைத்திருக்கிறான்’’ என்றார் சக்ரதார்.

“இருக்கட்டும். அந்த ஒற்றர்களையும் நாம் நடிகர்களாக்கி விடுவோம். புகழுக்கு மயங்காத மனிதர்களே இல்லை. இன்றிலிருந்து நாம் அனைவரும் ஜாபரைப் புகழ்ந்து பேசிக்கொண்டேயிருப்போம். இரண்டு நாட்கள் பேசினால் போதும். அனுமதிதானே கிடைத்துவிடும்.’’

“இதற்குத்தான் உன்னைப் போல ஒரு அறிவாளி வேண்டும் என்பது’’ எனச் சொல்லிச் சிரித்தபடியே ‘‘நீ வந்தவேலையை இன்னமும் முடிக்கவில்லை’’ என நினைவூட்டினார்.

“நான் எந்த வேலைக்காகவும் இங்கே வரவில்லை. தூமகேதுவைப் பற்றிய கதைகளைப் பற்றி கேள்விப்பட்டு நிஜத்தை அறிந்து போக மட்டுமே வந்தேன்.”

“அந்தக் கதைகள் யாவும் நிஜம். இவனால் காற்றில் நடக்க முடியும். ஒரே நேரத்தில் ஐந்து இடங்களில் சுற்றித் திரிய முடியும், இவ்வளவு ஏன்? தன்னை ஒரு வண்டாக மாற்றிக்கொண்டு இங்கிருந்து பறந்து போய்விடக்கூட முடியும். பாவம் தன் பலம் அறியாத யானையைப் போல ஒடுங்கிக் கிடக்கிறான்.”

“கதைகளைக்கொண்டு ஒருவனைக் காப்பாற்றிவிட முடியாது சக்ரதார். கதைகள் காட்டிக் கொடுத்துவிடும்” என்றான் ஸச்சல்.

“இல்லை ஸச்சல். கதைகள் ஒருபோதும் காட்டிக் கொடுப்பதில்லை. அது கதை சொல்லத் தெரியாதவன் செய்யும் தவறு’’ என்றார்.

“உங்கள் கதைகள் காலா முழுவதும் பரவியிருக்கின்றன, பலரும் அதை நம்புகிறார்கள். இப்படியே போனால் தூமகேதுவினை மாயாவி போல ஆக்கிவிடுவார்கள்.’’

“அவன் மாயாவிதானே’’ எனச் சொல்லிச் சிரித்தார் சக்ரதார்.

“உங்கள் கதைகள் என்னிடம் பலிக்காது. இரவில் வருகிறேன். நாம் உரையாடலாம்.’’

“உங்கள் விருப்பம்’’ எனத் தலையைக் குனிந்து வணங்கியதுபோல சொன்னார் சக்ரதார்.

ஸச்சல் அங்கிருந்து கிளம்பிச் சென்றான். அவன் வெளியேறியதும் சக்ரதார் சொன்னான்.

“இவனுடன் உரையாடுவது எளிதானதில்லை. இவன் எவர் மனதையும் ஆழம் கண்டுவிடக்கூடியவன்.”

“என்னை எதற்காகத் தேடி வந்தான் எனப் புரியவில்லை” என்றான் தூமகேது.

“அறிவாளிகள் கதைகளை ஒருபோதும் நம்புவதில்லை. ஆராயத்தான் செய்வார்கள்.’’

சக்ரதாரிடம் கவலையோடு தூமகேது கேட்டான்.

“நான் காலாவை விட்டு தப்பிப் போய்விட முடியுமா?’’

“வாசற்கதவுகளைத் திறந்துகொண்டிருக்கிறேன். நிழலைப் போல நீ வெளியேறிப் போய்விடலாம். பிறகு உன்னை யாராலும் கண்டு பிடிக்கவே முடியாது. உனக்குப் பதிலாக உன்னைப் பற்றிய கதைகள் காலாவில் சுற்றிக்கொண்டிருக்கும்.’’

•••

அன்றிரவு தூமகேது தன் அறையில் தனியே இருந்த போது யாரோ ஒரு பெண் தன்னை ரகசியமாக ஒளிந்து பார்த்துக்கொண்டிருப்பதைப் போல உணர்ந்தான். அந்தப் பெண் ஜாபரின் ரகசியக்காதலி அஸ்மா. அவள் ஏன் ஒளிந்துகொண்டு தன்னை வேவு பார்க்கிறாள் எனப் புரியாமல் தூமகேது எழுந்து வெளியே வந்தான். அந்தப் பெண் இருட்டில் மறைந்து நழுவிப்போனாள்.

தூமகேது அவளைப் பின்தொடரவில்லை. அந்தப் பெண் வேகவேக மாக ஜாபரின் குடியிருப்பினை நோக்கி நடந்தாள்.

•••

ஜாபர் குடித்துக்கொண்டிருந்தான். போதை உச்சிக்கு ஏறியிருந்தது.

அவன் சப்தமில்லாமல் நடந்து வந்த அஸ்மாவை கவனிக்கவில்லை. உள்ளே வந்த அஸ்மா சொன்னாள்.

“ஹுசூர் அந்த ஆள் நிஜமாகவே காற்றில் நடக்கிறான். என் இந்த இரண்டு கண்களால் நானே பார்த்தேன்.’’

“யாரைப்பற்றி சொல்கிறாய்?’’

“அந்தத் தூமகேது. ஆட்டுத்தோல் உரிப்பவன்.’’

“அவன் காற்றில் நடந்தால் நமக்கு என்ன, நடந்துவிட்டுப்போகட்டும்.”

“இவ்வளவு மந்திரசக்தி படைத்தவனைப் பயன்படுத்தி நீங்கள் அந்த டெல்லி பாதுஷாவின் ஆட்டுத்தோல் இருக்கும் இடத்தைத் தெரிந்துகொண்டுவிட்டால் சத்கரே உங்களுடையதாகிவிடுமே.’’

“அப்படியா சொல்கிறாய்? அவன் அவ்வளவு மந்திரசக்தி கொண்டவனா?’’

“அப்படித்தான் பேசிக்கொள்கிறார்கள். அவன் இங்கே இருக்கும் போதே பாலைவனத்தில் ஒட்டகத்தில் போய்க்கொண்டும் இருப்பானாம்.’’

“கனவிலா?’’ எனக் கேட்டான் ஜாபர்.

“இல்லை. நிஜமாகவே. அவனை ஐந்து பேர் ஐந்து இடத்தில் ஒரே நேரத்தில் கண்டிருக்கிறார்கள்.’’

“அப்படியானால் அது மந்திரசக்தியேதான். அவனிடம் நாம் எப்படி உதவி கேட்பது?’’

“அதை என்னிடம் விட்டுவிடுங்கள். அவன் விஷயத்தில் நீங்கள் எதையும் காதில் போட்டுக்கொள்ள வேண்டாம். எல்லாவற்றையும் நான் பார்த்துக்கொள்கிறேன்.’’

“அவன் மீது உனக்கு எதற்கு இவ்வளவு அக்கறை?’’

“அக்கறை அவன் மீதில்லை. உங்கள் மீது. உங்களை இந்த நகரின் சக்ரவர்த்தியாக்கிப் பார்ப்பதுதான் எனது ஆசை.’’

“அதை நான் பார்த்துக்கொள்கிறேன். வெளியே யாரோ குதிரையில் வந்து இறங்கும் சப்தம் கேட்கிறது. யார் என்று பார்.’’

கைவிளக்கை எடுத்துக்கொண்டு வாசலுக்கு நடந்தாள் அஸ்மா.

வாசலில் குதிரையை விட்டு இறங்கிய காவல்வீரன் ஒருவன் பதற்றத்துடன் சொன்னான்.

“காவல் கோபுரத்துக்கு யாரோ தீ வைத்துவிட்டார்கள். எங்கும் ஒரே நெருப்பு.’’

“எப்போது? யார் தீ வைத்தது?’’ என அவன் காலாவின் வலப்புறம்

அமைந்திருந்த காவல்கோபுரத்தை நோக்கி ஓடத்துவங்கினான்.

அஸ்மா இருளில் வெளியேறிப் போனாள். சக்ரதாரின் அறையை நோக்கி அவள் போவது புரிந்தது.

அன்றிரவு தூமகேது காலாவில் இருந்து தப்பிப் போனான்.

காலாவை விட்டு வெளியே வந்தபோது உடம்பு சிலிர்த்துப் போனது.

தரையில் விழுந்து வணங்கினான். பின்பு வெளிக்காற்றை ஆழமாக மூச்சிழுத்தான்.

இருளில் எங்கே போவது எனத்தெரியவில்லை.

கால்கள் போன திசையில் அவன் நடக்கத் துவங்கினான்.

மறுநாள் காலை எரிந்த காவல் கோபுரம் பற்றி விசாரணை நடத்திக்கொண்டிருந்த காவல் அதிகாரி ஜாபரிடம் அஸ்மா சொன்னாள்,

“ஹுசூர், அந்தத் தூமகேது காவல் கோபுரத்தில் நெருப்புப் பற்றி எரிந்துகொண்டிருந்தபோது காற்றில் நடந்து போவதைக் கண்டேன் அவன் புகையினுள் சென்று மறைந்து போய்விட்டான்.”

“நிஜமாகச் சொல்கிறாயா? புகையில் மறைந்து போய்விட்டானா?”

“இதே கண்களால் பார்த்தேன்.”

“இதைப்பற்றி யாரும் பேசிக்கொள்ள வேண்டாம். அவன் தப்பிப் போனது தெரிந்தால் என் தலை உருண்டுவிடும்.”

“பாவம் உங்கள் அதிர்ஷடம் நழுவிப்போய்விட்டதே என்றுதான் எனக்கு ஒரு ஆதங்கம்.”

“பாதுஷாவின் புதையல் பற்றிய ஆட்டுத்தோல் வரைபடம் கிடைக்காமல் போனால் என்ன? பிஷாட மன்னர் ஒருநாள் நிச்சயம் என்னை இந்த நகரின் கொத்தவால் ஆக்கிவிடுவார் அதுபோதும் எனக்கு.”

“அப்போது நான் கொத்தவாலின் மனைவி” எனச் செல்லமாக சிரித்தாள் அஸ்மா.

சக்ரதார் எப்படி காற்றில் தூமகேது மறைந்து போனான் என்பதைப் பற்றி கேட்டுக்கொண்டிருந்தார்.

ஆளுக்கு ஒருவிதமாகச் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

கதைகள் எப்படி விதவிதமாக உருமாறுகின்றன என்பது அவருக்கே வியப்பாக இருந்தது.

பிச்சைக்காரனின் பாடல்

அஜ்யாவின் நம்பிக்கைக்குரிய தோழியும் அரவாணியுமான அனுராதா தன்னிடம் ஒப்படைக்க குல்லாவையும் ஆயிரம் பொற்காசுகளையும் எடுத்துக்கொண்டு ரகசியமாக புர்க்கான் பூருக்கு எடுத்துச் சென்று பாதுஷா சொன்ன மனிதரைப் பற்றித் தேட ஆரம்பித்தாள்.

அந்த மனிதன் சந்தனம் அரைத்து விற்பவன் என அறிந்துகொண்டு அவனது முகவரியைத் தேடிப்போன போது அந்த வீடு பூட்டிக்கிடந்தது. அருகிலிருந்த ஒரு நபரிடம் அவள் கேட்டபோது அவர்கள் புதிய வீடு கட்டி குடிபோய்விட்டார்கள். நான் அழைத்துப் போகிறேன் என அவளை தன்னோடு உடன் அழைத்துக்கொண்டு சென்றான்.

நீண்டோடிய சந்து ஒன்றுக்குள் அவர்கள் நடந்து போய்க் கொண்டிருக்கும்போது அந்த மனிதன் தனது முக்காட்டினை விலக்கிவிட்டு அவளிடம் “நீ அஜ்யா அனுப்பிய பெண்தானே?’’ எனக் கேட்டான்.

அவளுக்கு என்ன சொல்வது எனப்புரியவில்லை.

தனக்கு வழிகாட்டுவதாகச் சொன்னது ஒரு ஒற்றன் என்பது புரியவே அவள் இறுக்கமான முகத்துடன் இல்லை என பதில் சொன்னாள்.

“உன் கையில் உள்ள பொருட்களைக் கொடு’’ என அவன் தனது குறுவாளை நீட்டினான். அவள் தரமறுத்தாள்.

அடுத்த நிமிடம் அவன் அந்தக் குறுவாளை அவளது அடிவயிற்றில் செருகினான். குருதி பெருகிவழிந்த போது அவள் ஓட ஆரம்பித்தாள். துரத்தி அவளைக் கீழே தள்ளி அவளது கழுத்தை அறுத்துப் போட்டு பரிசு பொருளைப் பிடுங்கிக்கொண்டு அந்த ஆள் மறைந்தான்.

அனுராதா தான் அஜ்யாவிற்கு தந்த வாக்கினை நிறைவேற்ற முடியவில்லை என்ற ஆதங்கத்துடன் இறந்துபோனாள்.

அந்த ஒற்றன் மறைவிடம் ஒன்றுக்குப் போய் அந்த மூட்டையைப் பிரித்துப் பார்த்தான். ஆயிரம் பொற்காசுகளும் ஒரு வெண்ணிறக் குல்லாவும் இருந்தன. ஆட்டுத்தோலைக் காணவில்லை.

இதைப் போய் எதற்காக டெல்லிக்கு அறிவிக்க வேண்டும் என அவன் அந்த நாணயங்களைத் தனதாக்கிக்கொண்டு குல்லாவை வீசி எறிந்தான். அந்தக் குல்லாவை தற்செயலாகக் கண்டெடுத்த பிச்சைக்காரன் ஒருவன் மிகுந்த சந்தோஷத்துடன் அதை தலையில் அணிந்துகொண்டான்.

திடீரென தான் மிகவும் அழகாக ஆனதுபோல அந்தப் பிச்சைக் காரன் பாடத்துவங்கினான்.

அந்தத் தொப்பி தன் தலைக்கு அளவு எடுத்துச் செய்தது போலிருக்கிறது. அதை அணிந்துகொள்ளும்போது மேகத்தை மடித்துஅணிந்துகொண்டிருப்பதுபோல உள்ளது என அவன் சந்தோஷமாக உணர்ந்தான்.

தான் அணிந்துள்ள குல்லா பேரரசன் ஔரங்கசீப் தன் கைப்படச் செய்தது என அவனுக்குத் தெரியவேயில்லை.

முடிவற்ற பயணம்

தூமகேது காலாவில் இருந்து தப்பி வந்த இரவில் தனது மனைவி, பிள்ளைகளைத்தான் தேடிக்கொண்டு நகிலிக்குப் போனான். ஆனால், அவர்கள் ஊரைவிட்டு வெளியேறிப் போய்விட்டார்கள் என்பதையும் அவனது தகப்பன் அநாதையாகக் கிடந்து இறந்துபோய்விட்டான் என்பதையும் அறிந்து கண்ணீர் விட்டான்.

“இவ்வளவுதானா வாழ்க்கை?”

இனி சத்கரில் தான் இருந்து என்னச் செய்யப் போகிறேன் என அவனும் ஊரை விட்டு வெளியேறி நடக்க ஆரம்பித்தான்.

நளாவும் பிள்ளைகளும் எங்கே போயிருப்பார்கள் எனத் தெரியவில்லை. சத்கருக்கு அருகில் உள்ளது நூரம்பூர் மட்டும்தான். ஒருவளை அங்கே போயிருப்பார்களோ என நடக்க ஆரம்பித்தான். கால்கள் சோர்ந்து போகுமளவு அவன் நடந்தான். வழியில் யாருடனும் அவன் ஒரு வார்த்தை பேசவில்லை.

ஒரு இடத்தில் லம்பாடிகளின் கூட்டம் ஒன்று கூடாரம் அடித்திருந்தது. அவர்களிடம் தனது பசிக்காக ஏதாவது கிடைக்குமா? எனக் கேட்டான், லம்பாடிகள் அவனது தோற்றத்தைக் கண்டு பரிதாபம் கொண்டு அங்கேயே படுத்துக்கொண்டு காலையில் அவர்களுடன் சேர்ந்து அவனும் பயணிக்கலாம் என்றார்கள்.

லம்பாடிகள் வண்டியில் மறுநாள் அவர்களுடன் பயணிக்கத் துவங்கினான். எங்கே போவது? என்ன செய்வது? எதுவும் புரியவில்லை. லம்பாடிகள் ஆடிப்பாடுவதும், பாசிமணிகள், பாம்பு தைலம் விற்பதுமாக அலைந்தார்கள். இரண்டு மாதகாலம் அவர்களுடன் சுற்றியலைந்தான். எங்கேயும் நளாவையும் பிள்ளைகளையும் காணமுடியவில்லை.

ஒருவேளை எல்லோரும் செத்துப்போய்விட்டார்களா? அப்படி நடந்திருந்தால் தான் ஒருவன் மட்டும் எதற்காக உயிரோடு இருக்க வேண்டும்?

அவன் பைசாபாத்தை நோக்கிச் செல்லும் சாலையில் தனியனாக நடக்க ஆரம்பித்தான். பித்தேறியவன் போல அவனது தோற்றம் உருமாறியிருந்தது. அவன் யாருடனும் பேசவேயில்லை. சில நேரம் காலாவிலே இருந்திருக்கலாமோ என்றுகூட அவனுக்குத் தோணியது.

சில இரவுகளில் அவனை காவல்வீரர்கள் துரத்திக்கொண்டு வருவதைப் போல கனவு கண்டு திடுக்கிட்டு எழுந்தான்.

என்ன வாழ்க்கை? எதற்காக இப்படி அலைந்து கொண்டிருக்கிறோம்? இனி எப்படி தன் மனைவி பிள்ளைகளுடன் ஒன்று சேர்வது? எனக் குழப்பமாக இருந்தது.

வாழ்வை முடித்துக்கொண்டுவிடலாம் என்றும் தோன்றியது. பிறகு கடவுள் தன்னைப் பார்த்துக்கொண்டுதானிருக்கிறார். அவர் காட்டும் வழியில் போக வேண்டியதுதான் என அவன் பக்ரவால் என்ற ஊரை நோக்கி நடந்து போனான்.

மறுநாள் விடிந்தபோது அவன் ஒருவன் மட்டுமே உறங்கிக் கிடந்தான். ஆட்டு இடையர்கள் ஆடுகளை ஓட்டிக்கொண்டு போயிருந்தார்கள். நிலமெங்கும் ஆட்டுப் புழுக்கைகளாகக் கிடந்தன.

புதர்ச்செடி ஒன்றையடுத்து உதிர்ந்து கிடந்த பறவை ஒன்றின் இறகைக் கண்டான்.

அதைக் கையில் எடுத்துக்கொண்டு கிழக்கு நோக்கி நடக்க ஆரம்பித்தான். முன்னெப்போதும் கண்டிராத நிலத்தின் ஊடே அவன் ஒற்றை மனிதனாக நடந்து கொண்டிருந்தான். சிற்றூர்களையும் ஏரிகளையும் மரங்கள் அடர்ந்த பாதைகளையும் கடந்து அவன் நடந்துகொண்டிருந்தான். ஒரு இடத்தில் இறந்துபோன கிழவன் ஒருவனுக்காக ஒரு இளம் பெண் சிதையில் எரிவதைக் கண்டான். அந்தப் பெண் நளாவைப் போலவே இருந்தாள். அருகில் ஓடி “நளா நளா” எனக் கத்தினான். அது யாரோ ஒரு பெண். மயானத்திலிருந்தவர்கள் அவனை வெறித்துப் பார்த்தார்கள்.

யாராக இருந்தாலும் என்ன, விருப்பமில்லாமல்தானே சாகிறாள் என சிதையில் எரியும் பெண்ணிற்காகக் கண்ணீர் வடித்தான் தூமகேது.

•••

நளாவும் பிள்ளைகளும் எங்கே போய்விட்டார்கள்? எந்த வழியில் போய் அவர்களைக் கண்டுபிடிப்பது? யாரைக்கேட்டால் இதற்கான பதில் தெரியும்? நான்கு பக்கமும் ஒன்று போலிருந்த வெட்டவெளியில் நின்றுகொண்டு யோசித்தான். குழப்பமாக இருந்தது. மனதின் துக்கத்தை அடக்கிக்கொண்டு கால்போன திசையில் நடக்கத் துவங்கினான்.

வழியில் ஒரு இடத்தில் யாரோ அவனை “அண்ணா, அண்ணா” என அழைப்பது கேட்டது.

திரும்பிப் பார்த்தான். மாடு மேய்த்துக்கொண்டிருந்த இளம்பெண் ஒருத்தி, தன் மகளின் வயதிலிருந்தாள். அவள்தான் அழைத்திருக்கிறாள்.

“என்ன வேண்டும்?’’ எனக் கேட்டான்.

“கன்றுக்குட்டி ஒன்று கிணற்றில் விழுந்துவிட்டது. என்னால் கிணற்றில் இறங்கிக் காப்பாற்ற முடியாது. உதவி செய்யுங்கள்.’’

அந்தப் பெண் காட்டிய கிண்றறை நோக்கி நடந்தான்.

தண்ணீர் இல்லாத கிணறு. கன்றுக்குட்டி உள்ளே கிடந்து கத்திக் கொண்டிருந்தது.

தூமகேது கிணற்றின் உள்ளே இறங்கத் துவங்கினான். மண் சரிந்து உள்ளே விழுந்து கன்றுக்குட்டி திடுக்கிட்டது.

அருகில் போய் கன்றுக்குட்டியைத் தடவிவிட்டான். பிறகு கன்றுக் குட்டியைத் தன் தோளில் போட்டுக்கொண்டு ஏறத் துவங்கினான்.

தரையில் விட்டதும் அந்தக் கன்றுக்குட்டி துள்ளிக்கொண்டு ஓட ஆரம்பித்தது.

அந்தப் பெண் நன்றிப் பெருக்கோடு சொன்னாள்,

“நல்லவேளை நீங்கள் வந்து காப்பாற்றினீர்கள். நீங்கள் எங்கே போய்க் கொண்டிருக்கிறீர்கள்’’ எனக் கேட்டாள் அந்தப் பெண்.

“மனைவி, பிள்ளைகளைத் தேடி” என்றான்.

“நிச்சயம் அவர்கள் வந்து சேர்ந்துவிடுவார்கள். கடவுள் வழி காட்டுவார்’’ என்றாள்.

அதைக்கேட்டதும் தூமகேது தன்னை அறியாமல் கண்ணீர் விட்டான்.

எதற்காக அழுகிறான் எனப் புரியாமல் அந்தப் பெண் நின்று கொண்டிருந்தாள்.

•••

இன்னொரு இடத்தில் ஐந்து பூனைகள் ஊரை விலக்கி அடிவானத்தை நோக்கிப் போய்க்கொண்டிருப்பதைக் கண்டான் தூமகேது, மனிதர்கள் மட்டுமின்றி பூனைகளும் வெளியேறிப் போய் வாழும் என்பதை அன்றுதான் கண்டுகொண்டான்.

தண்ணீர் வற்றிய நதிக்கரை வழியாகவும், மனித எலும்புகள் சிதறிக்கிடந்த மயானம் வழியாகவும், இடிந்த கோவில்களைக் கடந்தும், அவன் நடந்துகொண்டேயிருந்தான்.

•••

ஒருநாள் ஹக்கீம்பூரைக் கடந்த போது விடிகாலையில் வெளிச்சத்தில் வானில் அவனது மனைவியும் பிள்ளைகளும் நடந்துபோய்க் கொண்டிருப்பதுபோல தோன்றியது.

“நளா, நளா” எனக்கத்திக் கொண்டே ஓடினான்.

சில நிமிடங்களில் அந்தக் காட்சி மறைந்துபோனது.

கனவா, இல்லை பிரமையா?

அவனுக்கே புரியவில்லை. அடிவானத்திலிருந்து சூரியன் வெளியே வந்துகொண்டிருந்தது. சூரிய வெளிச்சம் அவன் மேல் படும்போது திடீரெனத் தோன்றியது. தனக்குத் தானே சொல்லிக்கொண்டான்.

“அவ்வளவுதான். இனி நம்பிக்கையில்லை.”

அதன் பிறகு தூமகேதுவை யாரும் காணவில்லை.

அவன் எங்கே போனான்? என்ன ஆனான் என ஒருவருக்கும் தெரியவில்லை.

நீதி மறுக்கப்பட்டவர் யாராக இருந்தாலும் அவன் தூமகேது தான் என மக்கள் பேசிக்கொண்டார்கள்.

தூமகேது பற்றிய விசித்திரக் கதைகள் எங்கும் உலவிக்கொண்டிருந்தன. அதில் அவன் ஒவ்வொரு ஊரிலும் ஒரு வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருந்தான்.

இடையர்களோடு ஒரு இரவு

சத்கரின் மேற்காக நூறு மைல் தொலைவில் இருந்த சௌஹான் என்ற கிராமத்தில் நான்கு ஆட்டு இடையர்கள் ஒரு இரவில் ஒன்று கூடியிருந்தார்கள். தங்கள் ஆடுகளை ஒரு நிலத்தில் கிடை அமர்த்திவிட்டு அவர்கள் தங்கள் கூடாரத்தை ஒட்டியே நிலத்தில் நெருப்பு போட்டு அதைச் சுற்றி உட்கார்ந்திருந்தார்கள். கல் அடுப்பு ஒன்றில் இருந்த பாத்திரத்தில் தண்ணீர் கொதித்துக் கொண்டிருந்தது. ஆடுகள் இருளில் அடங்கியிருந்தன. ஒன்றையொன்று உரசும் அசைவும் மூச்சொலியும் மட்டுமே கேட்டுக்கொண்டிருந்தது.

மூன்று வருஷங்களுக்கு முன்பு சௌஹானில் மழையில்லாமல் போனது. விவசாயிகள் கவலை கொண்டார்கள். அடுத்த பருவ மழை பூமியைக் குளிரவைத்துவிடும் என நம்பினார்கள். ஆனால், அந்த மழையும் பொய்த்துப் போனது. பட்டினியும் பசியுமாக விவசாயிகள் ஆகாயத்தை அண்ணாந்தபடியே இருந்தார்கள். ஊரின் பெரிய ஏரி வற்றிப்போனது. அருகிலுள்ள எல்லா கிராமத்திலிருந்தும் ஆட்கள் ஒன்று கூடி தாமரையின் வேர்களையும் அடித்தண்டுகளையும் தோண்டித் தின்றார்கள். அப்படி ஒரு காட்சியைக் காண்பது வேதனை தருவதாயிருந்தது. பட்டினி தாங்கமுடியாமல் பலரும் ஊரைவிட்டு வெளியேறிப் போனார்கள்.

அப்போது ஒரு பட்வாரி வரிபாக்கியை வசூல் செய்வதற்காக சௌஹான் வந்திருந்தான், அழுக்கு படிந்த சட்டை, தலையில் சிறிய துணித் தொப்பி. தோல்செருப்பு அணிந்திருந்த அவன் ஊர் மைதானத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு விவசாயிகள் அனைவரையும் தன் முன்னே வரவழைத்தான்.

“இதுவரை பத்தில் ஒரு பங்கு வாங்கப்பட்ட வரியை ஐந்து மடங்காக பிஷாட மன்னர் அதிகரித்துவிட்டிருக்கிறார், வரிக்கட்டாதவர்களை அடித்து இழுத்துக்கொண்டு வரும்படியும் உத்தரவு வந்திருக்கிறது, குழந்தை குட்டிகளை விற்றாவது நீங்கள் வரி கட்டியாக வேண்டும்’’ என்றான் பட்வாரி.

“மழையில்லை. விவசாயமில்லை. இதில் எப்படி வரிக்கட்டுவது?’’ எனக் கேட்டான் ஒரு விவசாயி.

“மழையில்லை என்றால் சாப்பிடாமலா இருக்கிறீர்கள்? இல்லை பெண்டாட்டியோடு படுத்துக்கொள்ளாமல் இருக்கிறீர்களா? இது அரசாங்க விஷயம். உங்கள் கஷ்டங்களைச் சொல்லி தப்பித்துக் கொள்ள முடியாது’’ எனக் கறாரான குரலில் சொன்னான் பட்வாரி.

“ஏன் இப்படி எங்களைக் கொள்ளை அடிக்கிறீர்கள்? இன்னமும் பிடுங்கிக்கொண்டு போக எங்களிடம் என்ன இருக்கிறது?” என ஒருவன்

ஆவேசப்பட்டான்.

“என்னை கோவித்துக்கொண்டு என்ன பிரயோசனம்? நானும் உங்களைப் போல ஒரு வேலையாள்தானப்பா. அரசாங்கம் ஆணையிடுகிறது. நான் உங்கள் கதவைத் தட்டுகிறேன்’’ என சாதுர்யமாகப் பேசினான் பட்வாரி.

“இப்போது உள்ள நிலையில் நாங்கள் எங்கிருந்து வரியைக் கொடுப்பது?’’ எனக்கேட்டான் ஒரு கிழவன்.

“உங்கள் நிலை எனக்குப் புரிகிறது, ஆனால், பிஷாட மன்னருக்கு இது புரிய வேண்டுமே.’’

“அவரை ஒருநாள் பாளம் பாளமாக வெடித்துப்போன இந்த மண்ணில் வந்து நிற்கச்சொல்லுங்கள். அப்போது தெரியும் எங்கள் கஷ்டம்’’ என்றார் இன்னொரு விவசாயி.

“உங்களுக்காக நிச்சயம் நான் பரிந்து பேசுவேன். அதற்கு முன்பு எனக்குக் குடிக்க மோர் கொண்டு வாருங்கள்.’’

“யாரிடம் மோர் இருக்கிறது? இருந்த பசுக்களை எல்லாம் விற்றுப் பசியாறிவிட்டோம்’’ என்றான் ஒரு விவசாயி.

“பொய். மோட்டுவின் வீட்டில் ஒரு சிவப்புப் பசு நிற்பதை நான் வழியில் பார்த்தேன், அவன் வீட்டில் மோர் இருக்கும்.’’

ஒருவன் மோட்டுவின் வீட்டிற்குப் போய் கலயம் நிறைய மோர் வாங்கி வந்தான். அதை ஒரே மூச்சில் குடித்து முடித்த பட்வாரி சொன்னான்.

“ருசியாக இருக்கிறது. வரியைக் கட்டாமல் சமாளிப்பதற்கு ஒரு வழி இருக்கிறது’’ என அவன் கையில் விழுந்த மோர்த்துளியைத் துடைத்துக்கொண்டான்.

“அந்த உபாயத்தைச் சொல்லுங்கள். உங்களுக்குப் புண்ணியமாகப் போகும்” என்றான் ஒருவன்.

“உபாயத்தைச் சொல்வதால் எனக்கு என்ன கிடைக்கப் போகிறது?’’ என விவசாயிகள் முகத்தைப் பார்த்தான் பட்வாரி.

“அடுத்த விளைச்சலில் உங்களுக்கு வீட்டிற்கு ஒரு மூட்டை கோதுமை தந்துவிடுகிறோம்’’ என்றான் ஒரு விவசாயி.

“அதுவரை நான் பட்டினி கிடப்பதா? அந்த மோட்டுவின் பசு மாட்டினை எனக்குத் தந்துவிடுங்கள். உபாயம் சொல்கிறேன்.’’

“அந்த ஒரு பசுவின் பாலை இந்த ஊரின் முப்பது கைக்குழந்தைகள் குடித்துப் பசியறுகிறார்கள்.”

“எனக்கும் ஆறு குழந்தைகள் இருக்கின்றன. அதில் ஒருவன் கைக்குழந்தை. மார்பு வற்றிப்போய் என் மனைவி படுக்கையில்

கிடக்கிறாள்'' என்றான் பட்வாரி.

மோட்டுவின் பசுவையும் கொடுத்துவிட்டால் கைப்பிள்ளைகளுக்கு என்ன செய்வது என அவர்களுக்குத் தெரியவில்லை. ஆனால், வேறுவழியின்றி அதற்கும் ஒத்துக்கொண்டார்கள்.

பட்வாரி சொன்னான்.

“எல்லா நிலத்தையும் கோவிலுக்கு எழுதிக் கொடுத்துவிடுங்கள். கோவில் நிலங்களுக்கும் அதன் விளைச்சலுக்கும் வரி கிடையாது. ஆகவே நீங்கள் எவரும் வரி செலுத்த வேண்டியது இருக்காது.''

“நிலத்தைக் கோவிலுக்குக் கொடுத்துவிட்டு நாங்கள் என்ன செய்வது?''

“கோவில் உங்கள் ஊரில்தானே இருக்கிறது. இது அரசாங்கத்தை நம்ப வைக்கப் போடும் நாடகம்தானே. பின்பு ஒருநாள் கோவில் நிலத்தை உங்களுக்கு தானம் கொடுப்பதாகச் சொல்லி ஊர்

பஞ்சாயத்து ஆணையிட்டால் போதும் நிலம் உங்களுக்கே வந்துவிடும்.''

“இது சாத்தியம்தானா?'' என சந்தேகமாகக் கேட்டான் ஒருவன்.

“நான்கு தலைமுறையாக கிராம கணக்குப்பிள்ளையாக இருக்கிறோம். இந்த பட்வாரி சொன்னால் அதில் ஒரு தவறுமிருக்காது. இது ஒன்றுதான் உங்களுக்கு இருக்கும் ஒரே வழி.''

விவசாயிகள் ஒன்று சேர்ந்து தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள். முடிவில் பட்வாரி சொன்னதுபோலச் செய்ய ஒத்துக்கொண்டார்கள், கோவில் முன்பாகக் கூடி நிலத்தை கோவிலுக்குத் தருவதாக சத்தியம் செய்தார்கள். பட்வாரி சொன்னான்,

“இது போதும். மற்றதை நான் பார்த்துக்கொள்கிறேன். அந்தப் பசுவைப் பிடித்துக்கொண்டுவந்துவிட்டீர்களா?”

மோட்டு தனது பசுவைக் கொடுக்க மனமில்லாமல் பட்வாரி கையில் பிடித்துக் கொடுத்தான். மோட்டுவின் மனைவி புலம்பிக் கொண்டிருந்தாள். அவனது பிள்ளைகள் மாடு போவதை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பட்வாரி மாட்டைத் தன் கையில் பிடித்துக்கொண்டு வெயிலேற நடந்து போனான். பட்வாரி சொன்னது போல வரிவசூல் செய்ய அதன்பிறகு யாரும் வரவில்லை, ஆனால், பட்வாரி கோவிலுக்கு அளிக்கப்பட்ட நிலம் முழுவதையும் தனக்கு தானமாகத் தந்துவிட்டதாக பெய்யாக ஒரு ஆவணத்தை உருவாக்கி அந்த நிலங்களைத் தனதாக்கிக் கொண்டுவிட்டான். அதிலிருந்து சௌகான் கிராமத்தில் யாருக்கும் பிடி நிலம் சொந்தமாக இல்லை. அவர்களால் பட்வாரியை எதிர்த்து ஒன்றும் செய்யவும் முடியவில்லை.

வேறு வழியின்றி அடுத்த ஆண்டு மழை வந்தபோது தங்கள் நிலத்தில் அவர்கள் கூலியாக வேலை செய்யத் துவங்கினார்கள். ஊரிலிருந்த

எல்லா நிலமும் பட்வாரி ஒருவனுக்கே சொந்தமாகியது.

பட்வாரியின் நிலத்தில்தான் இந்த இடையர்கள் கிடை அமர்த்தியிருந்தார்கள்.

•••

ஆட்டு இடையர்களில் மூத்தவரான சனத் ஆகாயத்தை ஏறிட்டுப் பார்த்தபடியே சொன்னார்.

“வானில் எரிநட்சத்திரம் விழுந்துகொண்டிருக்கிறது.”

மற்ற இடையர்களும் நிமிர்ந்து பார்த்தார்கள். நீலமும் சிவப்புமாக எரிந்து விழுந்தது நட்சத்திரம்.

இடையர்களில் ஒருவரான பன்சி சொன்னார்.

“சில மாதங்களுக்கு முன்பு இதேபோல எரிநட்சத்திரம் வெடித்து விழுவதை நான் பார்த்தேன். அதன் பிறகுதான் டெல்லி பாதுஷா இறந்துபோனார்.’’

“வானம் நமக்குச் சொல்ல வேண்டியதைச் சொல்லிக் கொண்டுதானிருக்கிறது. நாம்தான் கேட்டுக்கொள்வதேயில்லை’’ என்றார் பைரவ்.

“எரிநட்சத்திரம் விழுந்தால் ராஜாங்கத்திற்குத்தான் ஆபத்து. அதுவும் இரட்டை எரிநட்சத்திரங்கள் விழுந்தால் தேசம் வீழ்ச்சி அடையப்போகிறது என்று அர்த்தம்.”

“எந்த பாதுஷா ஆண்டால் நமக்கென்ன? நமக்கு இந்த ஆடுகள் போதும். இவை நம்மைக் காப்பாற்றிவிடும்.”

“அப்படி விட்டுவிட முடியாது பைரவ். ஆட்டுத்தோல் ஒன்றைத் தேடிக் கொண்டிருக்கிறார்களாம். அதற்காக ஆட்டு இடையர்களையும் வியாபாரிகளையும்கூட கைது செய்து அடைத்து வருகிறார்கள் எனப் பேசிக்கொள்கிறார்கள்” என்றார் சனத்.

“ஆட்டுத்தோலுக்கும் இடையர்களுக்கும் என்ன சம்பந்தம்?’’ எனக் கேட்டார் பன்சி.

“அது அரசாங்கத்திற்குப் தெரியாது. காரணமேயில்லாமல் தண்டித்துவிடுவார்கள்“ என்றார் பைரவ்.

“நமக்கு எதற்கு அரசாங்கத்தை பற்றி பேச்சு? இந்த ஆடுகளை கவனிக்கவே நமக்கு நேரமில்லை’’ எனச் சலித்துக்கொண்டார் பன்சி.

சனத் ஆகாயத்தை ஏறிட்டபடியே சொன்னார்.

“இந்த நாட்டில் இன்னும் மோசமான குழப்பங்கள் நடக்கப் போகின்றன. வானம் அதைத்தான் சுட்டிக்காட்டுகிறது. சத்கர் அழியப்போகிறது.”

“கொலையும் கொள்ளையும் திருட்டும் சத்கரில் அதிகமாகி விட்டது, அப்படி நடந்தாலே நாடு அழியப்போகிறது என்றுதானே அர்த்தம்'' என்றார் பன்சி.

அதுவரை பேசாமல் இருந்த நான்காவது இடையன் மெல்லிய குரலில் சொன்னான்.

“கிழக்கே ஆடுகளை ஓட்டிப் போகிற எனது தம்பி மிர்ஷாபூர் பாதையில் குதிரைப்படைகள் போவதைப் பார்த்திருக்கிறான். ஒன்றிரண்டல்ல. எட்டாயிரம் குதிரை வீரர்கள். சாரை சாரையாக போய்க் கொண்டேயிருந்திருக்கிறார்கள்.”

“எங்கே யுத்தம் தொடங்கப்போகிறது'' எனக் கவலையான குரலில் கேட்டார் பைரவ்.

“இங்கில்லை. டெல்லியை நோக்கிப் போகிறார்கள். ஆனால், யுத்தம் தண்ணீரை விட வேகமாகப் பரவக்கூடியது. சத்கரிலும் ஒருவேளை யுத்தம் நடக்கக் கூடும்.”

“எங்கே யுத்தம் நடந்தாலும் நமது தானியங்களும் ஆடு மாடுகளும் தான் பறிபோகும். படைகளின் உணவிற்காக எவ்வளவு ஆடுகளைப் பறித்துக்கொண்டு போயிருக்கிறார்கள் தெரியுமா?” எனக்கேட்டார் பன்சி.

“கடந்தகாலத்தை நினைத்தால் பயமாகவும் இருக்கிறது. பரவாயில்லை என்றும் தோன்றுகிறது'' என்றார் சனத்.

“ஆடு திருடுகிறவனிடம்கூட நேர்மையை எதிர்பார்க்க முடியும். பிஷாடன் அரசிடம் எதிர்பார்க்க முடியாது'' எனச் சொன்னான் பைரவ்.

“உண்மை. அப்படி ஒரு ஆட்டுத் திருடன் இருந்தான். அவன் பெயர் பங்கி. அவன் ஒரு மந்தையில் இருந்து ஒரு ஆடு மட்டும்தான் திருடுவான். அப்படி திருடிப்போகும்போது ஒரு கட்டுச் சுருட்டும், ஒரு கட்டு வெற்றிலையும் பதிலுக்கு வைத்துவிட்டுத்தான் போவான். அவன் இடையர்கள் உறங்கும்போது ஒரு நாளும் திருட மாட்டான். இடையன் விழித்திருக்கும்போது அவன் கண்முன்பாகத்தான் ஆட்டைத் திருடிப்போவான். அவன் ஒரு நரி. நரிகளுக்கு ஆடு திருட சொல்லிக் கொடுக்கவா வேண்டும்?''

“நானும் பங்கியைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். எனது தாத்தாவின் மந்தையில் இருந்து ஆடு திருடிப்போயிருக்கிறான்'' என்றான் பைரவ்.

“அந்த பங்கியை நான் பார்த்திருக்கிறேன். அப்போது எட்டு வயதிருக்கும். இதேபோல ஒரு இரவு நானும் என் தாத்தாவும் கிடை அமர்த்திவிட்டு ஆடுகளுடன் படுத்துக்கிடந்தோம். என் தாத்தாவிடம் ஒரு குத்தீட்டி இருந்தது. இரவில் எப்போதும் அதைக் கூடவே

வைத்திருப்பார். இதே போல ஆகாயத்தைப் பார்த்தபடியே நானும் தாத்தாவும் பேசிக்கொண்டிருந்தோம். திடீரென உளுந்து வறுக்கும் வாசம். தாத்தா அதை முகர்ந்துவிட்டு சொன்னார்.

“நல்லபாம்பு ஊர்ந்துகொண்டிருக்கிறது“

எனக்கு ஆச்சரியமாக இருந்தது, வாசனையைக் கொண்டு தாத்தா பாம்பைக் கண்டுபிடித்துவிடுகிறாரே என்றபடியே ‘பாம்பு ஆட்டுக் கிடைக்குள் வந்துவிடாதா’ எனக் கேட்டேன்.

இதைக் கேட்ட மறுநிமிடம் தாத்தா தன் கையில் வைத்திருந்த குத்தீட்டியை உயர்த்தியபடியே கிடைக்குள் தவழ்ந்துபோக ஆரம்பித்தார்.

அப்போது பங்கி ஒரு ஆட்டைத் திருடிக்கொண்டு இருட்டில் ஓடத்துவங்கினான். தாத்தா அவனைத் துரத்திக்கொண்டு ஓடினார். ஆனால், பங்கி ஆட்டோடு ஓடிவிட்டான். திரும்பி வந்த தாத்தா சொன்னார்.

‘இந்த பங்கிதான் உளுந்துவாசனையைப் பரவவிட்டிருக்கிறான்.’

அன்றைக்கு என் கண்ணால் பங்கியை பார்த்தேன். பங்கி நல்லவன், ஆனால், ஆடு திருடுவது அவன் தொழில்.

நமக்கு ஆடு மேய்ப்பது வேலை என்றால் ஆடு திருடுவது அவனது வேலை. ஓநாய்களும் வாழத்தானே வேண்டும்” என்றார் பன்சி.

“பங்கி சுருட்டும் வெற்றிலையும் விட்டுப் போயிருந்தானா?’’ எனக் கேட்டான் பைரவ்.

“ஆமாம்” என்றார் பன்சி.

“பங்கி எதைத் திருடுவான் என நமக்குத் தெரியும். அவனிடம் பேராசை கிடையாது. ஆனால், ராஜாங்க அதிகாரிகள் எதைத் திருடுவார்கள்? எவ்வளவு திருடுவார்கள் என யாருக்கும் தெரியாது. அதிகாரத்தில் இருப்பவர்களின் பேராசைக்கு அளவேயில்லை.”

இதைக்கேட்ட மூன்று இடையர்களும் தங்களுக்குள் சிரித்துக் கொண்டார்கள். அப்போது யாரோ இருட்டில் வருவதுபோல தெரிந்தது.

“பங்கியைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம் இல்லையா? பங்கியே வருகிறான்” எனச் சொன்னார் பன்சி.

“அவன் இறந்து போய் ஐம்பது வருஷமாகிவிட்டது. ஆவியாகியும் இன்னும் ஆடு திருடும் பழக்கம் போகவில்லையா?’’ எனக் கேட்டான் சனத்.

பைரவ் இருட்டிற்குள் கேட்கும் நடைஒலியை அவதானித்து விட்டு சொன்னார்.

“இருட்டிற்குள் வருபவன் திருடனில்லை, அவன் களைத்துப் போய் நடந்துவருகிறான். அநேகமாக அவன் பகல் முழுவதும் நடந்து வந்தவனாக இருக்கலாம்.”

“வழிதவறி வந்த ஆளாக இருக்கக்கூடும்’’ என்றபடியே சனத் எழுந்துகொண்டார், வெளிச்சத்தை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்த மனிதன் அங்கே ஆடுகள் கிடையிட்டு இருப்பதை உணர்ந்தவனைப் போல குரலிட்டான்.

“பசியாக இருக்கிறது.”

நான்கு இடையர்களில் ஒருவன் கேட்டான்.

“யார் நீ. எங்கிருந்து வருகிறாய்?”

“சத்கரிலிருந்து வருகிறேன். பசி தாங்கமுடியவில்லை.”

பைரவ் எரிந்துகொண்டிருந்த விறகு ஒன்றைக் கையில் எடுத்து உயர்த்தியபடியே அந்த மனிதனை நோக்கி நடந்து போகத் துவங்கினார்.

நெருப்பின் வெளிச்சத்தில் அந்த மனிதனைக் கண்டார். அயர்ந்து தளர்ந்து போன முகம், ஒடுங்கிப்போன கண்கள், மெலிந்த கைகள், அடர்ந்த தாடி.

அந்த மனிதன் கையை விரித்தபடியே கேட்டான்.

“சாப்பிட ஏதாவது கொடுங்கள்.”

பைரவ் அவன் கையைப் பற்றி தன்னோடு அழைத்துச் சென்றான்.

சனத் நெருப்பின் முன்னால் உட்கார வைக்கப்பட்ட அந்த மனிதனுக்கு தன்னிடமிருந்த ரொட்டிகளில் இரண்டை எடுத்து நீட்டினார். அவன் வேகவேகமாக ரொட்டியைச் சாப்பிட்டான்.

பிறகு தோற்பையில் இருந்த தண்ணீரை வாங்கிக் குடித்தான். பிறகு கைகளை நெருப்பின் முன்னால் காட்டியபடியே சொன்னான்.

“இனி நான் பிழைத்துவிடுவேன்.’’

‘‘எதற்காக இந்த இரவில் இப்படி பசியோடு நடந்து வந்திருக்கிறாய்?’’

“போக்கிடம் இல்லாதவன் எங்கே போவான்? பசியோடு அலைந்து திரிய வேண்டியதுதானே’’ எனக் கேட்டான் அந்த மனிதன்.

உன் பெயர் என்னவென்று கேட்டார் சனத்.

“தூமகேது’’ என்றான் அந்த மனிதன்.

“சத்கரில் என்ன செய்துகொண்டிருந்தாய்?”

“ஆட்டுத்தோல் உரிப்பவனாக இருந்தேன். ஆடு திருடியதாகக் குற்றம்

சாட்டப்பட்டு காலாவில் அடைக்கப்பட்டேன். அங்கிருந்து தப்பி வந்து பல வாரங்கள் ஆகின்றன. எங்கே போவது எனத் தெரியவில்லை. நடந்துகொண்டேயிருக்கிறேன்.''

"பாதுஷாவின் ஆட்டுத்தோலைத் தேடிக்கொண்டிருக்கிறார்களே. அதற்காகத்தான் உன்னையும் கைது செய்தார்களா'' எனக்கேட்டான் பைரவ்.

"ஆட்டுத்தோல் பற்றிய தகவல் இங்கும் வந்துவிட்டதா? எனக்கு அதைப் பற்றி ஒன்றும் தெரியாது. நான் அப்பாவி. என் மீது அபாண்டமாக பழி சுமத்தி சிறையில் அடைத்துவிட்டார்கள்.''

"பிஷாடனின் அரசாட்சி அப்பாவிகளை சித்ரவதை செய்வது தானே'' என்றார் சனத்.

"காலாவில் இருந்து யாரும் தப்ப முடியாது என்பார்கள், நீ எப்படி தப்பினாய்" எனக் கேட்டான் பன்சி.

"அது ஒரு பெரிய கதை" என்றான் தூமகேது.

"நாங்களும் கதைதான் பேசிக்கொண்டிருந்தோம். அதுவும் ஒரு ஆடு திருடுபவனின் கதைதான். அவன் பெயர் பங்கி. உன் கதையில் என்ன நடக்கிறது?'' எனக் கேட்டான் பைரவ்.

"குற்றவாளிகளின் கதை ஒன்றுபோலதான் இருக்கும். எனக்கு நீதி கிடைக்கவில்லை. தப்பிவந்துவிட்டேன்."

"தகப்பனைக் கொன்றவர்கள் ஆளும் காலமிது. இங்கே நீதி எப்படிக் கிடைக்கும்? யாருக்கும் எதற்கும் நீதி கிடைக்காது'' எனச் சொன்னார் பைரவ்.

"உன்னை பிஷாடனின் ஆட்கள் தேடவில்லையா?" எனக் கேட்டான் பைரவ்.

"தேடிக்கொண்டிருக்கிறார்கள். என்னைப் பற்றிய கதைகள் அவர்களை குழப்புகிறது."

"அப்படி என்ன கதையது?'' எனக் கேட்டார் பன்சி.

"நடந்து நடந்து களைத்துப் போய்விட்டேன். வயிறு நிரம்பியதும் கண்ணைக் கட்டுகிறது. இந்த ஆடுகளுடன் படுத்து உறங்கப் போகிறேன்.''

"நாங்கள் உன்னைப் பிடித்துக்கொடுக்கமாட்டோம் என எப்படி நம்புகிறாய்'' எனக்கேட்டார் சனத்.

"ஆடு மேய்ப்பவர்களுக்கு என ஒரு நியாயம் இருக்கிறது. அவர்கள் விரோதிகளைக்கூட காட்டிக் கொடுக்கமாட்டார்கள்'' என்றபடியே அவன் ஆடுகளை ஒட்டிய ஒரு இடத்தில் போய் படுத்துக்கொண்டான்.

காற்று அடங்கியிருந்தது. துளசி இலைகள் போட்டுக் கொதித்துக் கொண்டிருந்த தண்ணீரை கொஞ்சம் குவளையில் வடித்துக் குடித்துக்கொண்டார் சனத். இன்னும் விடிய நிறைய நேரமிருந்தது.

தூமகேது ஆழ்ந்த உறக்கத்திலிருந்தான். அவன் மூச்சுக்காற்றின் சப்தம் துல்லியமாகக் கேட்டுக்கொண்டிருந்தது.

கடைசி நினைவுகள்

சிறையில் இருந்த அஜ்யா தனது தாடையைத் தடவிக் கொண்டாள். தழும்பு ஒன்று இருந்தது. ஆழமான தழும்பு. அம்மா அடித்த தழும்பு. அவள் தனது தாயை நினைத்துக்கொண்டாள், தன்னுடைய முகம் தாயின்முகம் போலவே மாறியிருக்கிறது. இளவயதில்கூட அவ்வளவு துல்லியமாக சாயல் தெரியவில்லை. ஆனால், வயதானதும் அம்மாவின் முகம் தனதாகிவிட்டது போலிருந்தது.

அஜ்யாவிற்கு தன் வாழ்நாளில் ஒரேயொரு ஆசைதானிருந்தது. பெண்ணாக உருமாறிய பிறகு ஒருமுறைகூட தனது தாயை நேரில் போய் பார்க்கவில்லை. அவளுக்கான பரிசுகளுடன் போய்ப் பார்க்க வேண்டும் என ஆசை கொண்டிருந்தாள். ஆனால், அம்மாவைத் தேடிப்போய்ப் பார்க்க அவளுக்குத் தைரியமில்லை. ஆணாக இருந்த தான் பெண்ணாக உடைகள் அணிந்ததற்காகவே அம்மா எவ்வளவு அடித்திருக்கிறாள். அவளை எப்படி தேடிப்போய்க் காண்பது. என தனக்குத் தானே சொல்லிக்கொண்டாள்.

அன்றிரவு அஜ்யாவிற்கு ஒரு கனவு வந்தது. அதில் ஆச்சரியமாக அவள் அம்மாவின் முன்பு உட்கார்ந்திருந்தாள். அம்மா அவளுக்கு ஜடை பின்னிவிட்டு பூச்சூடினாள். அவளது கைகளைப் பிடித்துக்கொண்டு போய் மரஊஞ்சலில் உட்கார வைத்து ஆட்டிவிட்டாள். வானுக்கும் பூமிக்குமாக அந்த ஊஞ்சல் ஆடியது. சந்தோஷத்தின் உச்சத்தில் ஆடிக்கொண்டிருந்தபோது சட்டென கனவு கலைந்து விழிப்பு வந்தது. இரண்டு காவலர்கள் தீப்பந்தத்துடன் சிறையினுள் நின்றிருந்தார்கள். இப்போது நேரம் என்ன? யார் அவர்கள்? திரும்பவும் தன்னை சித்ரவதை செய்ய அழைத்துப் போக இருக்கிறார்களா? அவள் பயத்துடன் எழுந்துகொண்டாள். ஒருவன் தன் கையில் இருந்த குவளையை நீட்டி, “இதைக் குடி” என்றான்.

அவள் என்னவென்று கேட்டாள்.

“குடி’’ எனத் திணித்தான். அதை வாங்கி முகர்ந்து பார்த்தாள். எலுமிச்சைச் சாறு. எதற்காக அதைக் குடிக்கத் தருகிறார்கள்.

அவள் கையில் வைத்துக்கொண்டிருந்தாள். அவன் அந்தக்குவளையைப் பிடுங்கி அவள் வாயில் திணித்தான். அவள் எலுமிச்சைச் சாற்றைக் குடித்தாள். அவர்கள் ஒரு வார்த்தைகூட சொல்லாமல் வெளியேறிப் போய்விட்டார்கள். எதற்காக நள்ளிரவில் எழுப்பி எலுமிச்சைச் சாற்றைக் குடிக்க வைக்கிறார்கள் என அவளுக்குப்புரியவில்லை. அவள் மறுபடியும் கைகளைத் தலைக்கு வைத்துப் படுத்துக்கொண்டாள். உறக்கம் அவளை அழுத்தும்போது இன்னொருவன் சிறைக்கதவைத் தள்ளித் திறந்து உள்ளே வந்தான். அவன் கையில் ஒரு பந்தமிருந்தது. அவன் உக்கிரமான குரலில்,

“எழுந்து நட’’ என்றான்.

சித்ரவதை ஆரம்பிக்கப்போகிறது என்ற பதற்றத்துடன் அவள் தள்ளாடி எழுந்து நடந்தாள். மெதுவாக அவளை நடக்க வைத்து அழைத்துப் போனான். மனித வாடையே இல்லை. இருட்டு, ஒரே இருட்டு. அவர்கள் நடக்க நடக்க அந்தப் பாதை நீண்டுகொண்டே யிருந்தது. அவள் ஒரேயொரு நட்சத்திரத்தையாவது பார்க்க விரும்பினாள். வானம் தெரியவில்லை அவளது அதிர்ஷடம் சிறிய ஜன்னல் ஒன்றின் வெளியே ஆகாசம் லேசாகத் தெரிந்தது. ஒன்றில்லை. மூன்று நட்சத்திரங்களைக் கண்டாள். சந்தோஷத்துடன் அவள் அந்த ஆளின் பின்னால் நடந்து போனாள்.

நிலவறை போன்ற ஒன்றின் படிக்கட்டுகள் வழியே அவளை நடக்க வைத்து அழைத்துப் போனார்கள்.

அங்கே இரண்டு பந்தங்கள் எரிந்துகொண்டிருந்தன. அதை ஒட்டி ஒரு தூக்குமேடையிருந்தது.

அவளுக்குப் புரிந்துவிட்டது. தன்னைத் தூக்கிலிடப்போகிறார்கள். இன்னும் சில நிமிடங்கள்தான் வாழ்க்கை. யாரை நினைத்துக் கொள்வது? யாருக்கு நன்றி சொல்வது? அவள் தன் தாயை நினைத்துக்கொண்டாள். ராதா சிற்பத்தை, தன்னை நேசித்த தர்ஷனை, அடைக்கலம் தந்த உத்யபூரியை, தன்னை சகோதரியாக நினைத்த பாதுஷா ஔரங்கசீப்பை நினைத்துக்கொண்டாள். அவள் அறியாமல் கண்ணீர் வந்தது. பெருமூச்சிட்டபடியே அல்லாவிற்கு நன்றி சொன்னாள். பின்பு அவள் வருத்தமோ கவலையோ எதுவுமற்றவள் போல நிதானமாக நின்றிருந்தாள். தானாகவே நடந்துபோய் தூக்குக் கயிற்றை மாட்டிக்கொண்டாள். அங்கிருந்த காவலாளிகளை நோக்கி “நன்றி சகோதரர்களே” என்றாள். அவர்கள் முகத்தில் சலனமேயில்லை. தூக்குக்கயிறு அவள் தொண்டையை இறுக்கும் போது கடைசியாகப் பார்த்த நட்சத்திரம் மனதில் தோன்றி ஒளிர்ந்தது.

இறந்துபோன அவளது உடலை ஒரு பொட்டலம் போல கட்டி ஆற்றில் வீசுவதற்காக இரண்டு காவலர்கள் சுமந்துகொண்டு போனார்கள். அப்போதுதான் காலை விடியத் துவங்கியிருந்தது.

ரெமியஸின் திருமணம்

அழகியும், பெரும் வணிகரான ஜெகத் சேட்டின் ஒரே மகளுமான மங்கரியைத் திருமணம் செய்து கொண்டுவிட்டான் ரெமியஸ்.

அந்நிய மண்ணில் வேர் ஊன்ற வேண்டும் என்றால் அங்கேயே பிறந்து வளர்ந்த பெண்ணைத் திருமணம் செய்துகொள்வதுதானே எளிய வழி. அக்பர் எத்தனை பெண்களை திருமணம் செய்து கொண்டிருக்கிறார். நாளுக்கு ஒரு திருமணம் நடந்ததாகக் கூறுகிறார்களே. வணிக ஒப்பந்தம் போன்றதுதானே திருமணமும்.

மங்கரியைத் திருமணம் செய்து கொண்டு விட்டதன் மூலமாக ரெமியஸ் கினாரி பஜாரின் முக்கிய பிரமுகர்களில் ஒருவனாக உயர்ந்து நின்றான். பிஷாடனின் நட்பும், ஜெகத்சேட்டின் மருமகன் என்ற அந்தஸ்தும் அவன் நிலையை உயர்த்தியிருந்தன.

அதைவிடவும் அவனது தேசத்தில் கண்டிராத அழகுள்ள ஒரு பெண் அவனுக்கு மனைவியாகி இருக்கிறாள் என்பது அதிர்ஷ்டத்தைத் தவிர வேறு என்ன.

மங்கரி. தான் அந்நிய தேசத்து ஆண் ஒருவனின் மனைவியாவோம் என அவள் நினைத்துக்கூட பார்த்ததில்லை. தனது தகப்பனின் வணிகப்பொருட்களில் தானும் ஒன்று என்பது அவளுக்கு வருத்தத்தைத் தந்தது. ஆனால், திருமணம் நடந்துவிட்டது, இனி அவனுடன் வாழ்வதைத் தவிர வேறு என்ன செய்வது.

ரெமியஸ் மங்கரியின் நீண்ட கூந்தலுக்குள் விரல் கொடுத்து விளையாடியபடியே சொன்னான்.

“உன்னை இந்த சத்கரின் மகாராணியாக்குகிறேன்.”

“நீங்கள் ஒன்றும் மன்னரில்லையே’’ எனக்கேட்டாள் மங்கரி.

“கிரீடம் என் கை எட்டும் தொலைவில்தானிருக்கிறது. அது என் சிரசிற்கு வந்தே தீரும்.”

“என் அப்பா உங்களை வணிகசக்கரவர்த்தியாக்கப் பார்க்கிறார், நீங்கள் சத்கரின் சக்கரவர்த்தியாகப் பார்க்கிறீர்கள்.”

“வணிகத்திற்கு முதலீடு தேவை. ராஜ்ஜியத்தை ஆள ஒரு முதலீடும் வேண்டியதில்லை, சாதுர்யமும் தந்திரமும் போதும்.”

“அதுதானே என்னைத் திருமணம் செய்ய வைத்தது’’ என்றாள் மங்கரி.

ரெமியஸ் சிரித்தான்.

“உண்மை, எனது கனவுகளில் ஒன்று நிறைவேறிவிட்டது, அடுத்த கனவையும் நிறைவேற்றிவிடுவேன்’’

•••

அவன் சொன்னது உண்மை. பிஷாடனை குரங்கிடமிருந்து காப்பாற்றியதில் இருந்து அவன் பிஷாடனுடன் நெருக்கமாகி விட்டிருந்தான். உறக்கமற்ற பிஷாடன் ரெமியஸை தன்னுடன் சூதாடுவதற்காக ஒவ்வொரு நாளும் அழைத்தான். விடிகாலையில் தான் ரெமியஸ் வீடு திரும்பினான்.

குரங்கைக் கொன்றதில் இருந்தே பிஷாடனின் மனநிலையில் பெரிய மாற்றம் உருவாகியிருப்பதை ரெமியஸ் கண்டு கொண்டிருந்தான். பிஷாடன் பயப்படுகிறான். எங்கே இறந்து போன குரங்கு திரும்ப வந்துவிடுமோ என அவன் கண்கள் தேடுகின்றன. அந்த பயம்தான் தனது முதலீடு. அதை தான் உரிய விதத்தில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த பயத்தை வளர்த்து எடுத்து கூடவே குழப்பதையும் உருவாக்கிவிட்டால் பிஷாடன் சொல்வதை எல்லாம் கேட்கத் துவங்கிவிடுவான் என்பதை ரெமியஸ் அறிந்திருந்தான்.

ஆகவே, பகடையாடிக் கொண்டிருக்கும்போது பிஷாடனிடம் பயந்துபோனவன் போல சொன்னான்.

“இரவில் உறங்குவதற்கே பயமாயிருக்கிறது.”

“என்னைப் போலவே உனக்கும் உறக்கமின்மை நோய் வந்து விட்டதா?” எனக் கேட்டான் பிஷாடன்.

“இல்லை மன்னா. கனவில் அந்தக் குரங்கு வந்து என்னை பயமுறுத்துகிறது.”

“எந்தக் குரங்கு?'' என எதுவும் அறியாதவன் போல கேட்டான் பிஷாடன்.

“நான் சுட்டுக்கொன்ற குரங்கு. அதன் பெயர்மறந்து போய்விட்டேன், அநாம். அதுதானில்லையா?”

“குரங்கு கனவில் வந்து என்ன செய்கிறது?”

“என் வயிற்றின் மீது ஏறி உட்கார்ந்து வயிற்றைக் கிழித்துக் குடலை அள்ளி மாலையாகப் போட்டுக்கொண்டது. அப்போதும் அதன் வெறியடங்கவில்லை.”

“செத்துப்போன குரங்கு உன் கனவில் எப்படி வந்தது?”

“இறந்து போனவர்கள் கனவில் வரத்தானே செய்வார்கள். யாரால் அதைத் தடுக்கமுடியும், நல்ல வேளை உங்களுக்கு இதுபோன்ற கனவுகள் வருவதில்லை'' எனக் கவலையான குரலில் சொன்னான் ரெமியஸ்.

“என் கனவில் வருவதற்குக்கூட அதற்கு பயம்'' எனச் சொல்லிச் சிரித்தான் பிஷாடன்.

“அப்படி அஜாக்கிரதையாக இருந்துவிடக்கூடாது மன்னா. அந்தக் குரங்கு ஏதாவது ஒரு வடிவில் திரும்ப வந்துவிடக்கூடும்.’’

“நிஜமாகவா?”

“ஆமாம். ஒருவேளை அது அரண்மனைக்குள் சுற்றிக்கொண்டுதான் இருக்கிறேதோ என்னவோ. அது உங்கள் மீது பாய்ந்தபோது அதன் கண்களில் ஒளிர்ந்த வன்மத்தை என்னால் மறக்கவே முடியவில்லை.’’

“போதும். குரங்கைப் பற்றிப் பேச வேண்டாம்.’’ என்றபடி பிஷாடன் தன் முன்னிருந்த மதுவைக் குடிக்கத் துவங்கினான். பிறகு வெறி பிடித்தவன் போல கேட்டான்.

“அந்தக் குரங்கை என் கையால் கொன்றிருக்க வேண்டும், நீ ஏன் அதைச் சுட்டுக் கொன்றாய்?’’

“உங்களைக் காப்பாற்றுவதற்காக.’’

“அது உன் விசுவாசம். ஆனால், நான் அதைக் கொல்ல விரும்புகிறேன். இறந்து போனவர்களைத் திரும்ப எப்படிக் கொல்வது’’

“அவர்கள்தான் இறந்து போய்விட்டார்களே.’’

“அதுதான் என் பிரச்சினை. இறந்து போய்விட்டாலும் சிலர் மீதான வஞ்சம், கோபம் அடங்கவில்லையே’’ என்றான் பிஷாடன்.

“அதை வம்சாவளிகள் மீது காட்டவேண்டியதுதான்.’’

“அப்படி அந்தக் குரங்கிற்கு யார் இருக்கிறார்.’’

“ஒரு மிருகம் செய்த தவறுக்கு இன்னொரு மிருகத்தை தண்டிக்க வேண்டியதுதானே. யார் கேட்கப்போகிறார்கள்’’ என்றான் ரெமியஸ்.

“சரியாகச் சொன்னாய். அதுதான் சரியான வழி. அப்போதுதான் என் ஆத்திரம் அடங்கும்.’’

“என்ன செய்யப்போகிறீர்கள் அரசே?’’

“வா. இந்த இரவிலே தண்டனையை துவங்கிவிடலாம்.”

பிஷாடன் எழுந்துகொண்டு வெறிபிடித்த குரலில் ஆணையிட்டான்.

“பட்டத்து யானையின் கண்களைக் குருடாக்கிவிடுங்கள். அதன் அலறும் சப்தம் எனக்குக் கேட்க வேண்டும்.”

பிஷாடனின் வெறித்தனத்தைக் கண்டு பயந்துபோன ரெமியஸ் அதைக் காட்டிக்கொள்ளாமல் வியந்து போனவன் போல சொன்னான்.

“அபாரமான தண்டனை.”

“இரவு இன்னமும் மீதமிருக்கிறது. வேறு யாருக்கு நான் தண்டனைகள் தருவது? இதுவரை நான் தண்டித்திராத ஒருவனை தண்டிக்க வேண்டும்.

யாரை தண்டிப்பது? யோசனை சொல் ரெமியஸ்.”

எங்கே அந்தக் கோபம் தன்மீது பாய்ந்துவிடுமோ என நினைத்த ரெமியஸ் சொன்னான்.

“நீங்கள் தண்டிக்க வேண்டிய வணிகர்கள் பலர் சத்கரில் வாழ்கிறார்கள். அவர்கள் உங்கள் தயவில் வாழ்ந்துகொண்டு உங்களுக்கு எதிராகப் பேசுகிறார்கள், செயல்படுகிறார்கள். இவ்வளவு ஏன்? புதிதாக டெல்லிக்கு பாதுஷா வந்தவுடன் நேரில் போய்ப் பார்த்து பரிசுகளை அள்ளிக் கொடுக்கப்போகிறார்கள் எனப் பேசிக் கொள்கிறார்கள்.’’

“யார் அந்தக் கயவன்?’’

“சூரஜ்மால். அவன்தான் கினாரி பஜாரை கையில் வைத்திருக்கிறான். அவன் வணிக சக்கரவர்த்தியாம்.’’

“இந்த இரவிலே அவன் தலையைத் துண்டித்துக் கொண்டுவரச் சொல்லிவிடுகிறேன்.’’

“அப்படியே தனது மகளை எனக்குத் திருமணம் செய்து வைத்துப் பெருமைப்படுத்திய ஜெகத் சேட்டை கினாரி பஜாருக்கு தலைவர் ஆக்கிவிடுங்கள்.’’

“இதுகூடவா செய்யமாட்டேன்?’’ என்றபடியே இரண்டு ஆணைகளையும் உடனே பிறப்பித்தான்.

“கினாரி பஜாரின் சூரஜ்மால் தலையைத் துண்டித்து ஒரு தட்டில் வைத்துக் கொண்டுவாருங்கள். ஜெகத்சேட்டை புதிய தலைவராக்கியதாக உடனே அவர் வீட்டிற்குச் சென்று அறிவியுங்கள்.”

“சந்தோஷம். மிகுந்த சந்தோஷம்’’ என ரெமியஸ் பணிவோடு வணங்கினான்.

“நீ என்னுடைய நண்பன். இதுகூடவா உனக்காகச் செய்ய மாட்டேன். வேறு யாரை தண்டிக்க வேண்டும்? சொல். என் தண்டிக்கிற ஆசை பெருகிக்கொண்டேயிருக்கிறது.’’

“ஒருவரை தண்டிப்பதைவிட தேசத்தில் இருக்கிற ஆயிரக்கணக்கான மக்களை தண்டிக்கலாமே” எனச் சொன்னான் ரெமியஸ்.

“அவர்கள் என் மக்கள் அவர்களை நான் எதற்கு தண்டிப்பது?’’

“அதனால்தான் கேட்கிறேன். தன் சொந்த நாட்டு மக்களை இம்சிக்கிற உரிமைகூட ஒரு மன்னருக்குக் கிடையாதா என்ன? எப்போதும் ஒரு எதிரி வெளியே இருந்து வந்துதான் மக்களுக்கு கஷ்டம் தர வேண்டுமா?’’

“அதுவும் சிந்திக்க வேண்டிய விஷயம்தான், என் நாட்டு மக்களை என்னைவிட சிறப்பாக யார் தண்டிக்க முடியும்?’’

அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது ஒரு தட்டில் வைத்து சூரஜ் மாலின் தலையைக் கொண்டுவந்திருந்தார்கள். பிதுங்கிய கண்களுடன் பருத்த கன்னங்களுமாக அந்தத் தலை உதிரம் சொட்ட இருந்தது.

அந்தத் தலையை வெறித்துப் பார்த்தபடியே பிஷாடன் சொன்னான்,

''இந்த சூரஜ்மால்தான் டெல்லிக்குப் போய் பாதுஷாவைக் காணப்போகிறானா. இவன் தலையை டெல்லிக்கு அனுப்பி வைத்து விடுகிறேன்.''

என்றபடியே, "உடனே இந்தத் தலையை டெல்லிக்குக் கொண்டு போய் வீசி எறிந்துவாருங்கள்" என உத்தரவிட்டான்.

அந்த இரவிலே தட்டு நிறைய தங்கக் காசுகளும் நகைகளும் பட்டு வஸ்திரங்களும் கொண்டுவந்து ஜெகத்சேட் பிஷாடனைக் காண்பதற்காக நின்றிருப்பதாக ஒரு ஆள் வந்து சொல்லிப் போனான்.

பிஷாடன் ஜெகத்சேட்டை உள்ளே வரச்சொன்னான்.

அவர் தனது பருத்த உடலை ஆட்டிக்கொண்டு முன்வந்து பரிசுப்பொருட்களை பிஷாடன் காலில் வைத்து விழுந்து வணங்கினார்.

பிஷாடன் சிரித்தபடியே சொன்னார்.

"பெரிய தவளையைப் போல இருக்கிறார்.''

"ஆமாம் தவளையேதான்'' எனச்சொல்லி சிரித்தான் ரெமியஸ்.

பிறகு எழுந்து நிற்கும்படியாக ஜெகத்சேட்டிற்கு பிஷாடன் ஆணையிட்டான்.

அவர் ஆயிரம் முறை பிஷாடனுக்கு நன்றி தெரிவித்தார். பிஷாடன் தனது வலிமையான கைகளால் ரெமியஸ் தோளில் தட்டிச் சொன்னான்.

"இவனை சந்தோஷப்படுத்தவே உங்களை கினாரி பஜாரின் தலைவராக்கியிருக்கிறேன்.''

கடவுளை வணங்குவதைப்போல அவர் கைகூப்பி வணங்கி நன்றி சொன்னார்.

திடீரென சந்தோஷம் அதிகமானவன் போல சொன்னான்.

"ரெமியஸ் அந்தக் குரல் கேட்கிறதா? பட்டத்து யானையின் கண்களைப் பறிக்கிறார்கள். பாவம் அது கதறுகிறது."

"நன்றாகக் கேட்கிறது."

"எவ்வளவு இனிமையாக இருக்கிறது? வலியில் அலறும் போது அந்த சப்தம் உண்மையாக இருக்கிறது? அதற்கு நிகராக வேறு எந்த இசையும் இருக்க முடியாது. அற்புதம். அபாரம்.''

பிஷாடன் யானையின் பிளிறலை ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்தான்.

ஜெகத்சேட்டுடன் தனது தந்திரம் பலித்துவிட்ட சந்தோஷத்தில் அரண்மனையிலிருந்து வெளியே புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தான் ரெமியஸ்.

டெல்லி பயணம்

டெல்லி பாதுஷாவிடமிருந்து பிஷாடனுக்கு விசேஷ அழைப்பு வந்திருந்தது. தன் ஆட்சி காலத்தில் இதுவரை ஒருமுறைகூட அவன் சத்கரை விட்டு வெளியே பயணம் செய்தது கிடையாது. ஆகவே டெல்லியில் இருந்து வந்திருந்த அழைப்பை பெரிதாக நினைக்கவில்லை. ஆனால், ரெமியஸ் அதை நல்லுறவின் அடையாளமாக கருதினான். ஆகவே கட்டாயம் பிஷாடன் டெல்லிக்குப் போய் புதிய மாமன்னரைச் சந்தித்து வர வேண்டும் எனக் கூறினான். பிஷாடனுக்கு அப்போதும் விருப்பம் வரவில்லை. அவனது மாமா முத்கலனும் ரெமியஸ் சொன்னதையே வழி மொழிந்தார்.

“பிஷாடா. இது வெறும் அழைப்பில்லை. சத்கரின் எதிர்காலம் இதில்தான் அடங்கியிருக்கிறது. பாதுஷாவின் கருணை உன்மீது திரும்பியிருக்கிறது. அவரை சந்தோஷப்படுத்த தவறினால் நம்மால் நிம்மதியாக ஆட்சி செய்ய முடியாது. மாமன்னருக்கு ஆயிரம் காதுகள், கண்கள் உள்ளன. அதை நாம் மறந்துவிடக்கூடாது.”

“மாமா இந்த சத்கர், டெல்லி பாதுஷாவின் வாயில் உள்ள கடைசிப்பல். அதை பற்றி எதற்கு கவலைப்பட போகிறார்?” எனக்கேட்டான் பிஷாடன்.

“அப்படி நினைக்காதே. பலநேரங்களில் கடை வாய்பற்கள் பிரச்சனையின் வேராகக் கருதப்பட்டு நீக்கப்படுகின்றன. நம் அதிர்ஷ்டம் பாதுஷா தானாக விருந்திற்கு அழைத்திருக்கிறார். பரிசுப்பொருட்களை அள்ளிக் கொண்டு புறப்படு.”

“சத்கரை விட்டு ஒரு அடி நான் வெளியே போனதில்லை. போகவும் விருப்பமில்லை மாமா.”

“அப்படி இருந்தால் எப்படி பிஷாடா? உனக்கு பதிலாக, நாங்கள் போக முடியாதே. இது மன்னர்களுக்கான விருந்தாயிற்றே.”

“இங்கிருந்து டெல்லி எத்தனை நாள் பயணம்?”

“ஆறு பகலிரவுகளில் கடந்து போய்விடலாம்.”

“குதிரைகளை வேகப்படுத்தினால்…”

“ஐந்து நாட்களில் போய்விடலாம். பயண களைப்பு தெரியாமல் எல்லா வசதிகளையும் செய்துவிடலாம். உன்னோடு இந்த அரண்மனையே உடன் வரும்.”

“நான் இல்லாத பத்து நாட்கள் யார் சத்கரை ஆள்வார்கள்.”

“நானில்லையா மருமகனே. நீ கவலையில்லாமல் போய்வா?” என்றார் முத்கலன்.

“நீங்கள் வயதானவர் மாமா. உங்களை சிரமப்படுத்த மாட்டேன். நான் இல்லாத பத்து நாட்கள் ரெமியஸ் சத்கரை ஆளட்டும்.”

“வேண்டாம் அரசே. நான் அந்நியன். வணிகம் செய்ய வந்தவன்” என்றான் ரெமியஸ்.

“அந்நியர்கள் ஆளும்போது சத்கர் எப்படியிருக்கிறது என மக்கள் அறிந்துகொள்ளட்டும். நீயேதான் ஆள வேண்டும்.”

“உங்கள் கட்டளை அதுவென்றால் நான் எப்படி மறுக்கமுடியும்.”

“மாமா உனக்கும் ஆலோசனை தருபவராகயிருப்பார்.”

“அது மட்டும்தானே எனது வேலை” எனச் சலித்துக் கொண்டார் முத்கலன்.

பிஷாடன் அங்குமிங்கும் நடந்தபடியே இருந்தான். பிறகு திடீரென கேட்டான்.

“நான் ஒருவன் டெல்லிக்குப் போவதற்குப் பதிலாக சத்கர் மக்கள் அனைவருமே டெல்லிக்குப் போனால் எப்படியிருக்கும் மாமா?”

“அதுவும் சிறந்த யோசனைதான்.”

“இதுவரை எந்த மன்னரும் தன் குடிமக்கள் அனைவருடன் டெல்லி பாதுஷாவை காண சென்றிருக்கமாட்டார். நானே அதிலும் முதலாவது ஆள், எப்படி என் யோசனை” என சிரித்தான் பிஷாடன்.

“குடிமக்கள் அனைவரையும் டெல்லிக்கு அழைத்துப் போய்வருவது எளிதில்லை பிஷடா” என்றார் முத்கலன்.

“நாம் ஏன் அழைத்துப் போக வேண்டும்? நான் டெல்லி போய் சேருவதற்குள் அவர்களாக டெல்லிக்குப் போய்ச் சேர்ந்திருக்க வேண்டும் என கட்டளை பிறப்பித்துவிடலாம். மக்கள் ஆடு மாடுகள் அல்ல, நாம் ஒட்டிச் செல்வதற்கு.”

“அவ்வளவு நீண்ட தூரம் பெண்கள் குழந்தைகள் பயணிப்பது சிரமம். அவர்களுக்கு விதிவிலக்கு தந்துவிடலாமா?” எனக்கேட்டார் முத்கலன்.

“ஆமாம். ஆமாம். சிரமம்தான். இந்த பயணம் ஆண்களுக்கானது. சத்கரில் உள்ள எல்லா ஆண்களும் உடனே டெல்லி கிளம்ப ஆணையிடுகிறேன்.”

“வணிகர்கள் இதை ஏற்றுக்கொள்ள மறுப்பார்கள்” என தயக்கத்துடன் சொன்னான் ரெமியஸ்.

“ஏற்றுக்கொள்ள மறுப்பவர்கள் தூக்கிலிடப்படுவார்கள். சத்கரிலிருந்து பல்லாயிரம் பேருடன் நான் டெல்லி பாதுஷாவை சந்திக்க வருகிறேன்

என உடனே தகவல் அனுப்புங்கள்.”

“உன் விருப்பங்கள் எப்போதுமே வித்தியாசமானவை பிஷாடா” எனச் சிரித்தார் மாமா.

•••

அன்று மாலையே சத்கர் எங்கும் முரசு அடிக்கப்பட்டு அரசாணை அறிவிக்கப்பட்டது. சத்கரிலிருந்து வெள்ளிக் கிழமைக்குள் ஆண்கள் அனைவரும் டெல்லிக்கு கிளம்ப வேண்டும். நோயாளிகள், துறவிகள், பிச்சைக்காரர்கள், குருடர்கள் என யாராக இருந்தாலும் விதி விலக்கில்லை. பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் மட்டுமே விதிவிலக்கு என முரசு அடிப்பவன் உரத்த குரலில் அறிவித்தான்.

“என்ன முட்டாள்தனமிது. எதற்காக நாம் டெல்லி போக வேண்டும் அதுவும் நினைத்தமாத்திரம் எல்லாவற்றையும் போட்டுவிட்டு டெல்லி கிளம்புவது எப்படி முடியும்? பிஷாடனுக்கு பைத்தியம் முற்றிவிட்டது” என ஆளுக்கு ஆள் முணுமுணுத்தார்கள்.

வணிகர்களுக்கு என்ன செய்வது எனத் தெரியவில்லை. இப்படி ஒரு நெருக்கடி உருவாகும் என அவர்கள் கற்பனைகூட செய்ததில்லை. ஒன்று கூடி முடிவு எடுக்க அவர்கள் கினாரி பஜாரின் தலைவராக இருந்த ஜெகத்சேட் வீட்டிற்குப் போனார்கள்.

ஜெகத்சேட் பயணத்திற்கான பொருட்களை கட்டிக் கொண்டிருந்தார்.

வணிகர்கள் தயக்கத்துடன் டெல்லி போகாமல் இருக்க விதிவிலக்கு பெற வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள்.

அதைக்கேட்ட ஜெகத்சேட் சொன்னார்.

“பிஷாட மன்னருக்காக பயணம் செய்வது ஒரு புனித யாத்திரை, அதை நாம் விருப்பத்துடன் ஏற்றுக் கொள்ள வேண்டும்.”

“பைத்தியக்காரத்தனமான யோசனை. இத்தனை ஆயிரம் பேர் திடீரென சத்கரை விட்டு டெல்லி போவது என்றால் விளையாட்டு வேலையா என்ன? நாம் இல்லாத நேரம் யாராவது சத்கரை கொள்ளையடித்துப் போய்விட்டால், பெண்கள், குழந்தைகளை யாரை நம்பி ஒப்படைத்து போவது?” எனக்கேட்டார் ஒரு வணிகர்.

“சத்கரை காக்க வேண்டியது என் மருமகனின் வேலை. அவனிடம் தான் மன்னர் சத்கரை ஒப்படைத்திருக்கிறார்” எனப் பெருமையாக சொன்னார் ஜெகத்சேட்.

“பாதுஷாவின் விருந்திற்கு பிஷாடன் போவதற்கு நாங்கள் ஏன் அலைக்கழிக்கப்பட வேண்டும்” எனக்கேட்டார் ஒரு வணிகன்.

“அதுதான் விதி. ரதத்தில் பூட்டப்பட்ட குதிரைகள் தன்னிஷ்டம் போல

போக முடியாது. கடிவாளம் யார் கையில் உள்ளதோ அவன் காட்டும் திசையில்தான் ஓட வேண்டும். நாம் வெறும் குதிரைகள். நம் கடிவாளம் பிஷாடன் கையில் உள்ளது” என்றார் ஜெகத்சேட்.

“நாம் அனைவரும் மன்னர் முன்பு மண்டியிடுவோம், மன்றாடுவோம்” என்றார்கள் வணிகர்கள்.

“சாவைத் தேடி நாமே போவதும் இதுவும் ஒன்றுதான்” என்றார் ஜெகத்சேட்.

“நாம் அனைவரும் வெளியேறிப் போய்விட்டால் சத்கர் மயானம் போலாகிவிடும்” என முணுமுணுத்தான் இன்னொரு வணிகன்.

ஜெகத்சேட் தன்னால் ஒன்றும் செய்ய இயலாது என கைவிரித்து விட்டார். அத்துடன் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகத்தான் இன்றே டெல்லி கிளம்புவதாகவும் தன்னோடு தனது மகன்கள் மூவரும் உடன் வருவதாக சொன்னார்.

கினாரி பஜார் வணிகர்களுக்கு என்ன செய்வது எனத் தெரியவில்லை.

“அநியாயம், அநியாயம்” என்று மட்டும் முணுமுணுத்துக் கொண்டார்கள்.

•••

அதை முணுமுணுப்பு மஹாபிரஜைகளிடம் உரத்து வெளிப்பட்டது. அவர்களுக்குள் காரசாரமாக விவாதம் நடைபெற்றது.

“பைத்தியக்காரன் பிஷாடன் நம்மை எதற்கு டெல்லி போகச் சொல்கிறான்.”

“அவன் கட்டளை நம்மை ஒன்றும் செய்யாது, நாம் கடவுளுக்கு மட்டுமே பயந்தவர்கள்.”

“அதை பிஷாடனுக்கு புரியவைக்க வேண்டும்.”

“பிஷாடனை பகைத்துக்கொண்டால் சத்கரில் வாழ முடியாது.”

“அதற்காக அவனது பைத்தியக்காரதனத்தை ஏற்றுக்கொண்டு டெல்லி போவது எளிதானதில்லை.”

“என் கிழட்டு தந்தையை யோசித்துப் பார். அவருக்கு தொன்னூறு வயது. அவரும் டெல்லி புறப்பட வேண்டும் என்பது தெய்வத்திற்கே அடுக்காத செயல்.”

“பிஷாடனிடம் யார் இதைப் பற்றி பேசுவது?”

“பேசினாலும் அவன் காது கொடுத்து கேட்க மாட்டான்.”

“இந்த அநீதியை பொறுத்துக்கொண்டு போக முடியாது.”

“பிஷாடனிடமிருந்து தப்பிக்க நாம் ஏதாவது செய்தே ஆக வேண்டும்.”

“கோவில் குளத்தில் ஒரு பன்றியை கொன்று வீசச் செய்யுங்கள். நாம் டெல்லி போக வேண்டிய அவசியம் ஏற்படாது” என்றார் மஹாபண்டிதர் சுரபர்.

“குளம் தீட்டுப்பட்டுவிடுமே.”

“அந்தத் தீட்டை போக்குவதற்கு நாம் சடங்குகள் செய்யவேண்டும்? அதை மீறி பயணம் புறப்பட்டால் கடவுளின் கோபம் பிஷாடனை வழியிலே கொன்றுவிடும் என்று எச்சரிக்கை செய்வோம்.”

“இது நடக்ககூடியதா?”

“கடவுளின் மீது பயமில்லாத அரசன் யார் இருக்கிறார்? எனக் கேட்டார் சுரபர்.

“தீட்டுபட்ட குளத்தை என்ன செய்வது?” எனக்கேட்டான் இன்னொரு பண்டிதன்.

“பிஷாடன் செலவிலே அதை நிவர்த்தி செய்வோம். இரவுக்குள் ஒரு பன்றியை கொன்று கோவில் குளத்தில் வீசி எறிய வை” என்றார் சுரபர்.

“அது ஒன்றும் பெரிய விஷயமில்லை. நகிலியில் உள்ள புலையனை அழைத்து உத்தரவிட்டால் போதும் செய்து முடித்துவிடுவான்.”

“நாம் சொல்லி செய்வது போலிருக்கக்கூடாது” என்றார் சரபர்.

“அதுகூடவா தெரியாது. நாளை காலையில் செத்த பன்றி குளத்தில் மிதக்கும்.”

மஹாபண்டிதர்கள் சிரித்துக்கொண்டார்கள். திட்டமிட்டது போலவே ஒரு பன்றியை கொன்று அதன் உடலை கோவில் குளத்தில் வீசி எறிந்தார்கள். புனிதக்குளம் தீட்டுபட்டுவிட்டதை பிஷாடனிடம் அறிவிப்பதற்காக மஹாபண்டிதர்களின் குழு அரண்மனைக்குப் போனது.

அப்போது பிஷாடன் கீரி ஒன்றுடன் விளையாடிக் கொண்டிருந்தான். கீரி நீண்ட கயிற்றில் கட்டப்பட்டிருந்தது.

மஹாபண்டிதர்கள் பிஷாடனை வணங்கி கோவில் குளத்தில் யாரோ பன்றியை கொன்றுவீசிவிட்டார்கள் என புகார் சொன்னார்கள், பிஷாடன் அவர்களை முறைத்து பார்த்தபடியே கேட்டான்.

“நீங்கள் டெல்லிக்குக் கிளம்பவில்லையா?”

“கோவில் குளம் தீட்டுப்பட்டுவிட்டது. எங்களின் புனிதம் பாழ்படுத் தப்பட்டுவிட்டது.”

“அதைக் காரணம் காட்டி நீங்கள் டெல்லி போக மறுக்கிறீர்களா?” எனக்கேட்டான் பிஷாடன்.

“இல்லை அரசே. பதினான்கு நாட்கள் குளக்கரையில் அமர்ந்து நாங்கள்

குளத்தைப் புனிதப்படுத்தும் சடங்கு செய்யாவிட்டால் கடவுளின் கோபத்திற்கு உள்ளாக நேரிடும்."

"நாளை இரவுக்குள் மஹாபண்டிதர்கள் அனைவரும் டெல்லிக்குக் கிளம்பிப் போகாவிட்டால் உங்கள் தலைகள் துண்டிக்கப்பட்டுவிடும்."

"இது நியாயமில்லை" என மறுத்தார் ஒரு பண்டிதர்.

"உண்மை. இது நியாயமில்லைதான். நாளை வரை எதற்கு காத்திருக்க வேண்டும்? டெல்லி போக மறுப்பவர்களின் தலையை இப்போதே துண்டித்துவிடலாமே."

"கடவுளின் கோபம் உன் மீது பாயும் பிஷாடா" என ஒரு பண்டிதர் எச்சரிக்கை செய்தார்.

"இவனது தலையை இப்போதே துண்டித்துவிட ஆணையிடுகிறேன், கடவுள் என்ன செய்கிறார் என பார்த்துவிடலாம்" என உத்தர விட்டான் பிஷாடன்.

மஹாபண்டிதர்கள் கண்முன்பாக ஒரு பண்டிதன் தலை துண்டிக்கப்பட்டது. மற்றவர்கள் பயத்தில் உறைந்து போய் நின்றிருந்தார்கள்.

துண்டிக்கப்பட்ட தலையை தன் கையில் ஏந்தியபடியே பிஷாடன் மற்றவர்களிடம் கேட்டான்,

"டெல்லிக்குப் போவதைப் பற்றி என்ன முடிவு செய்திருக்கிறீர்கள்?"

"உடனே கிளம்பி விடுகிறோம்."

"டெல்லியில் இருந்து திரும்பி வந்தவுடன் பொன்னும் மணியும் தருகிறேன். கோவில் குளத்தை புனிதப்படுத்திவிடலாம்."

அவர்கள் மரணபீதியில் அரண்மனையிலிருந்து வெளியேறி வந்தார்கள். அன்றிரவு மஹாபண்டிதர் சரபரின் வீட்டில் அவர்கள் ஒன்று கூடினார்கள்.

சரபர் சொன்னார்.

"இந்த சாவு நமக்கு விடப்பட்ட எச்சரிக்கை. பிஷாடன் இனி அரியணையில் இருக்கக்கூடாது. அவன் தண்டிக்கப்பட வேண்டும்."

"அதற்கு முன்பு நாம் டெல்லி புறப்பட்டாக வேண்டும். இல்லாவிட்டால் உடலில் உயிர் தங்காது."

"பைத்தியக்காரன் நம்மை இப்படி அலைக்கழிக்கிறான். புறப்படுங்கள்."

மஹாபண்டிதர்களும் வேறுவழியின்றி டெல்லிக்கு பயணம் புறப்பட்டார்கள்.

•••

சத்கர்வாசிகள் அத்தனை பேரையும் ஊரைவிலக்கி டெல்லி நோக்கி பயணிக்க வைப்பது எளிதாகயில்லை. ஆனால், வேறு வழியின்றி உயிருக்குப்பயந்து அவர்கள் கூட்டம் கூட்டமாக டெல்லியை நோக்கி நடந்தார்கள்.

குதிரைவண்டிகள், மாட்டுவண்டிகள், குதிரைகள், மட்டக்கழுதைகள் என சத்கரை விட்டு வெளியேறும் ஆட்கள் ஆளுக்கு ஒருவிதமாக டெல்லியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்கள்.

வயதானவர்களால் நடக்க முடியவில்லை. அவர்களை இருவர் தூளி கட்டித் தூக்கிக்கொண்டு போனார்கள். பஞ்ச காலத்தில் ஊரை விட்டு வெளியேறி போகிற மனிதர்களைப் போல அவர்கள் மௌனமாக டெல்லியை நோக்கிப் பயணம் செய்யத் துவங்கினார்கள்.டெல்லி போக விருப்பமில்லாமல் ஓடி ஒளிந்து கொண்டவர்களை தேடிப்பிடித்து கோட்டை வாசலில் தூக்கிலிட்டார்கள். துர்கா கோவிலின் முன்பு வருஷக்கணக்கில் பிச்சை எடுத்துக் கொண்டிருந்த பிச்சைக்காரனும்கூட டெல்லி நோக்கிப் புறப்பட்டான். கைத்தடி ஒன்றை ஊன்றிக்கொண்டு கால்களை இழுத்து இழுத்து அவன் நடந்து போனான். நகரம் மெல்ல காலியாகிக்கொண்டே வந்தது. வீடுகளில் இருந்த பெண்களும் குழந்தைகளும் தங்களின் நிலை என்னவாகப் போகிறதோ என பயந்து நடுங்கினார்கள். சிலர் சத்கரை விட்டு வெளியேறி தனது சொந்த ஊர்களைத் தேடிப்போனார்கள்.

மேய்ச்சலுக்கு ஒட்டிச்செல்லும் ஆடுகளைப் போல நாடெங்குமிருந்து மக்கள் டெல்லியை நோக்கிப் போய்க்கொண்டேயிருக்கிறார்கள், சாலைகளில் புழுதி பறக்கிறது. சுட்டெரிக்கும் வெயிலில் தண்ணீரும் உணவும் கிடைக்காமல் அல்லாடுகிறார்கள். சத்கரின் கினாரி பஜாரில் ஒரு ஆள் இல்லை. கடைகள் மூடப்பட்டுவிட்டன. இசையும் கூத்தும் ஆட்டமும் ஒடுங்கிவிட்டது. ஆந்தைகள் கடைவாசலில் வந்து உட்கார்ந்து கண்களை உருட்டிக்கொண்டிருந்தன.

பிஷாடனும் தன் அரண்மனை பணியாளர்கள், காவலர்கள், மெய்காவலர்கள் என பெரும்திரளுடன் டெல்லி நோக்கிய பயணத்தை துவக்கினான். எராமஸின் கைகளில் சத்கர் ஒப்படைக்கபட்டது.

அவன் சந்தோஷத்தின் உச்சத்தில் தன் மனைவியிடம் சொன்னான்.

“இப்படி ஒரு முட்டாளை என் வாழ்நாளில் கண்டதில்லை, பிஷாடன் இனி ஊர் திரும்பி வரமாட்டான். நானே இனி சத்கரின் அரசன்.”

•••

டெல்லிக்குப் போகும் வழி தெரியாமல் தடுமாறி வேறு வழி போனவர்கள், திருடர்களிடமும் வழிப்பறிக் கொள்ளையர்களிடமும் மாட்டிக்கொண்டவர்கள். டெல்லிக்குப் போவதற்கு பதிலாக வேறு தேசத்தை நோக்கித் தப்பி ஓடியவர்கள் என ஆளுக்கு ஒரு பக்கம்

சத்கர்வாசிகள் சிதறிப்போனார்கள்.

ஒரு இடத்தில் வணிகக் குழுக்களுக்குள் சண்டை வந்து அவர்கள் ஒருவரையொருவர் தாக்கிக்கொண்டார்கள். விஷமேறிய குளத்து தண்ணீரைக் குடித்து நூற்றுக்கணக்கானவர்கள் குளக்கரையில் செத்துக்கிடந்தார்கள். வலியும் வேதனையும் ஓலமுமாக அவர்கள் டெல்லியை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்கள். பிஷாடனின் பல்லக்குப் பரிவாரங்களுடன் ஊர்ந்து வந்துகொண்டிருந்தது.

சத்கரை விட்டு வெளியே வந்திராத அவனுக்குச் சுட்டெரிக்கும் வெயிலும் வெடித்துக் கிடக்கும் நிலமும் அச்சமூட்டின. காற்றில் ஈரமேயில்லை. அவனது சுவாசக்கோளங்கள் எரிச்சல் கண்டன. மூத்திரக்கடுப்பு ஏற்பட்டது. கண்கள் சிவந்துபோய் நமநமத்தன. தாங்கமுடியாத வலி கொண்டவன்போல பல்லக்கை ஆங்காங்கே நிறுத்திநிறுத்திப் பயணித்தான். வெக்கை காரணமாகவே விடிகாலையில் பயணிப்பது என்றும் வெயில் வந்தவுடன் கூடாரம் அடித்து தங்கி விடலாம் எனவும் முடிவு செய்துகொண்டார்கள்.

அப்படி ஒரு பின்னரவில் உறக்கமற்று கிடந்த பிஷாடன் இரவுப் பூச்சிகளின் சப்தத்தை கேட்டுக்கொண்டிருந்தான், எங்கோ பூமிக்குள் புதைந்து கிடப்பதுபோலவே இருந்தது. எதற்காக இந்தப் பூச்சிகள் வாய் ஓயாமல் கத்துகின்றன. அதை பிஷாடனால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அவன் எரியும் பந்தங்களை வெறித்தபடியே படுக்கையில் கிடந்தான்.

அவனது கூடாரத்தை நோக்கி நிழல்கள்போல மூன்று பேர்கள் ஒளிந்து ஒளிந்து வந்தார்கள். காவலுக்கு இருந்த வீரர்கள் கண்அயர்ந்து சரிந்து கிடந்தார்கள்.

திடீரென படுக்கையில் கிடந்த பிஷாடன் பறவையின் ஒலி போன்ற ஒன்றை கேட்டான். என்ன பறவையது. எதற்காக தன் கூடாரத்தின் அருகில் வந்து கத்துகிறது. அதன் சப்தத்தை சகிக்கமுடியாமல் அவன் காவலர்களை அழைத்தான். யாரும் வரவில்லை.

பிஷாடனின் கூடாரத்தினுள் எரிந்துகொண்டிருந்த பந்த வெளிச்சம் திடீரென அணைக்கப்பட்டது.

ஆத்திரத்துடன் பிஷாடன் படுக்கையை விட்டு எழுந்தபோது திடீரென யாரோ அவன் மீது பாய்ந்து அமுக்கினார்கள். அடுத்த சில நிமிடங்களில் அவன் வாயைப் பொத்தி கைகால்களைக் கட்டி கம்பளம் ஒன்றில் சுருட்டித் தூக்கிக்கொண்டு ஓடினார்கள். காவலர்களில் ஒருவன் தூக்கக் கலக்கத்தில் யாரோ வெளியேறிப் போவதைக் கண்டான். ஆனால், குரல் எழுப்பவில்லை.

விடிந்தபோது கூடாரத்தில் பிஷாடனைக் காணவில்லை என ஆளுக்கு ஆள் தேடினார்கள். மன்னர் காணாமல் போய்விட்டார் என்ற தகவல்

வெளியானதும் படைவீரர்கள் பதற்றமடைந்தார்கள். நான்கு திசைகளிலும் தேடி அலைந்தார்கள். இதற்குள் டெல்லி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த மக்கள் பிஷாடன் காணாமல் போய்விட்டான் என்ற தகவலை கேள்விப்பட்டதும் இனி எதற்காக டெல்லி போக வேண்டும் என சத்கர் திரும்பத் தொடங்கினார்கள். மஹாபண்டிதர்கள் உற்சாக மிகுதியில் பிஷாடன் செத்து ஒழிய வேண்டும் என சாபமிட்டார்கள். தொடர்ந்து டெல்லி போவதா இல்லை சத்கர் திரும்பிவிடுவதா என மக்களிடம் குழப்பமும் பதற்றமுமான நிலை உருவானது.

•••

பிஷாடனை தூக்கி வந்தவர்கள் அவனது இரண்டு கண்களையும் குருடாக்கினார்கள். யார் அவர்கள் என்பதை பிஷாடன் அறிந்திருக்கவில்லை. ஆனால், அவர்களின் குரலில் இருந்த வன்மம் அவனை பயங்கொள்ளச் செய்தது.

அவர்கள் பிஷாடனின் ஆடைகளைப் பிடுங்கிக்கொண்டு நிர்வாணப்படுத்தி அடிவானத்தைப் பார்க்கும்படி நிறுத்தினார்கள். செம்பிழம்பாய் சூரியன் கிழக்கில் எழுந்துகொண்டிருந்தது.

பிஷாடன் பயத்துடன் கேட்டான்,

“நீங்கள் யார், என்னை என்ன செய்யப்போகிறீர்கள். எதற்காக என் கண்களை குருடாக்கினீர்கள்?”

“உன் குருட்டுத்தனமான யோசனைக்குப் பழிவாங்குவதற்கு இது தான் தீர்வு. பிஷாடா உன்னை உடனடியாகக் கொன்றுவிட்டால் அடுத்தவர்களின் வலியும் வேதனையும் புரியாமல் போய்விடும். விசித்திரமான தண்டனைகள் தருவதில் நீ நிகரற்றவன், நாங்களும் உனக்கு விசித்திரமான தண்டனையைத்தான் தரப்போகிறோம். உனது கைகால்களை துண்டித்துவிடப் போகிறோம். இனி நீ புழுவைப் போல உன் உடலால் ஊர்ந்துகொண்டுதான் வாழ வேண்டும்.”

“வேண்டாம் என்னைக் கொன்றுவிடுங்கள்” என அலறினான் பிஷாடன்.

சொன்னதுபோலவே அவனது இரண்டு கைகால்களையும் துண்டித்துவிட்டுப் புறப்பட்டார்கள்.

பிஷாடன் வலி தாங்கமுடியாமல் கதறி அழுதான். தன்னை ஏன் கொல்லாமல் இப்படி விட்டுப் போனார்கள் என ஆத்திரப் பட்டான். வெயில் அவன் உடலில் படுவதைத் தாங்கமுடியாமல் அலறினான். எங்கிருந்தோ நாய் குரைப்பதுபோல அவனுக்குக் கேட்டது. நாய்கள் அவனைக் கொல்லத் தேடி வருகின்றனவா, அவனுக்குப் பயமாக இருந்தது. “நாய்கள்… நாய்கள்” எனக் கத்திக் கொண்டேயிருந்தான். அவனால் கொல்லப்பட்ட ஆயிரமாயிரம் நாய்கள் ஒன்று திரண்டு அவனை சுற்றி நின்றுகொண்டு குரைப்பது போலவும், அந்த நாய்கள்

கோரைபற்களை நீட்டிக்கொண்டு தன்னைக் கிழித்து தின்ன துடிப்பதாகவும் உணர்ந்தான். கைகள் இல்லை, கால்கள் இல்லை. நாய்களிடமிருந்து தப்பி ஓட முடியாது. நாய்களின் மூச்சொலி தன் கன்னத்தில் படுகிறது. நாய்கள்தானா, இல்லை கற்பனையா? பயம்தான் நாய் உருக்கொண்டு உலவுகிறதா? பிஷாடனுக்குப் புரியவில்லை, ஆனால், அவன் பயத்தில் கத்திக்கொண்டேயிருந்தான், அந்த பிரதேசத்தில் அவனைத் தவிர யாருமேயில்லை, தூரத்தில் பறந்துகொண்டிருந்த பருந்து ஒன்று மட்டும் தாழ சிறகடித்து பறந்து சுற்றிவிட்டு மீண்டும் வானேறி உயரத்தில் பறந்துபோனது.

வெயிலிலும் இருட்டிலும் பிஷாடன் கத்திக்கொண்டேயிருந்தான். திடீரென சத்கரும் தனது அரண்மனையும் அநாம் குரங்கும் அவன் நினைவில் வந்தன. தன்னால் சாகமுடியவில்லையே என பின்பு அவன் ஆத்திரப்பட்டான். பசியும் தாகமும் அவனை வாட்டின. பிடுங்கி எறியப்பட்ட செடி ஒன்று வெயிலில் வாடுவதுபோல அவன் உடல் காய்ந்துபோகத் துவங்கியது. எட்டுநாட்களுக்குப் பிறகு அந்தப் பகுதியை கடந்த பாரவண்டிக்காரன் இறந்து புழு மொய்த்துப்போன உடலைக் கண்டான். அது பிஷாட மன்னன் என அவன் அறிந்திருக்கவில்லை.

ஊர்களின் விசித்திரம்

இருநூறு வீடுகளே அந்தக் கிராமத்திலிருந்தன. எங்கே செல்வது என அறியாமல் மாதக் கணக்கில் கால்கள் போனபோக்கில் நடந்து கொண்டிருந்தான் தூமகேது. வெக்கை அவனை மிகவும் சோர்வடையச் செய்திருந்தது. காற்றை முகத்தில் உணரும் நிமிடங்கள் மட்டுமே ஆறுதல் அடைந்தான். மண்டை ஓட்டுக்குள் கரையான்கள் திரிவதுபோல வலி ஊர்ந்து கொண்டிருந்தது. சில நேரம் மண்டை ஓடு காலியாகிவிட்டது போலவும் தோன்றியது. ஓசைகளே இல்லாத அந்தப் பாதையில் நடந்தபோது தூரத்தில் கிராமம் ஒன்றிருப்பதன் புகை தெரிந்தது. அந்த ஊரை நோக்கி மெதுவாக நடந்தான். பூமியைக் கீறி முளைக்க எத்தனிக்கும் விதையைப் போலிருந்தது அவனது நடை. எப்படியாவது கிராமத்தை அடைந்துவிட வேண்டும். வழியில் மயங்கிவிழுந்து விடக்கூடாது என்ற மனவைராக்கியம் உறுதியாக இருந்தது. நடக்க நடக்க கண்கள் மங்கிக் கொண்டு வர உலகமே கருமையாகி இருண்டுவிட்டது போலிருந்தது. தூரத்தில் மங்கிய குரலோசைகளை என்னால் கேட்கமுடிந்தது அவை மனிதர்களின் குரலா இல்லை மிருகங்களின் சப்தமா, பூச்சிகள் தான் அப்படி சப்தமிடுகிறதா. காதைத் தீட்டிக் கொண்டு உற்றுக்கேட்டான். மனித சப்தமேதான். மெலிதாகக் கேட்கிறது. நடக்க நடக்க ஊரின் வாசனையை நுகர முடிந்தது. இரண்டு பூனைகள் ஒன்றையொன்று துரத்திக்கொண்டு அவனைக்கடந்து போயின. மனிதர்களுடன் வசிக்கும் பூனைகளுக்குத்தான் காதல்விளையாட்டு இருக்கும். அவன் மெதுவாக ஊரை நோக்கி நடந்தான். அவன் முன்பாக எதிர்ப்பட்ட முதல் மனிதன் தூமகேதுவை வியப்போடு பார்த்தபடியே சொன்னான்.

“வெளியில் இருந்து வரும் முதல்மனிதன் நீதான். வெளிஆட்கள் இங்கே வந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டது.”

“நிஜமாகவா?”

“ஆமாம். இந்த ஊரைச் சுற்றிலும் வெட்டவெளியே உள்ளது. அருகில் வேறு ஊர்களே இல்லை. நீ எப்படி இங்கு வந்தாய்.”

“வழிதவறி வந்துவிட்டேன்.”

“உன்னைப் பார்த்தாலே தெரிகிறது. நீ இங்கேயே இரு. உன் வருகையை ஊருக்கு அறிவிக்கிறேன்.”

“இந்த ஊரின் பெயர் என்ன?”

“ஜோயா.”

என்றபடியே அந்த மனிதன் ஊருக்குச் சென்று வெளியாள் ஒருவன் அந்த ஊருக்கு வந்திருப்பதைப் பற்றிச் சொன்னான். சில நிமிடங்களில் அவனைக் காண ஊரே திரண்டுவிட்டது. அவர்கள் முகத்தில்

சந்தோஷம் ததும்பியிருந்தது. அவர்கள் அவனுக்குக் குடிக்க மாதுளைச் சாற்றைத் தந்தார்கள். அவ்வளவு சுவையான சாற்றை அவன் குடித்ததேயில்லை. அந்த ஊரில் இருந்த பெண்கள் எவரும் வெட்கப்படவில்லை. நல்ல உழைப்பாளிகள் என்பது அவர்கள் உடற்கட்டிலே தெரிந்தது. சின்னஞ்சிறுவர்கள்கூட பொலிவான முகத்துடன் இருந்தார்கள். அவனைச் சுற்றி அமர்ந்துகொண்டு அவர்கள் பல்வேறு கேள்விகளைக் கேட்டார்கள். அவர்களுக்கு வியப்பாக இருந்த ஒரே பொருள் உப்பு மட்டுமே.

அவனிடம் ‘‘உப்பு விளைவதை அவன் கண்டிருக்கிறானா’’ எனக் கேட்டார்கள்.

‘‘இல்லை’’ என்று சொன்னான்.

“கடல் எப்படியிருக்கும்?” என ஒரு பெண் கேட்டாள்.

“நானும் கண்டதில்லை” என்றான் தூமகேது.

உப்பு மட்டுமே அந்த ஊரில் விலைக்கு வாங்க வேண்டிய பொருளாக இருந்தது. அதை வெளியூருக்குச் சென்று வாங்கி வர வேண்டிய பொறுப்பை இரண்டு பேர் ஏற்றிருந்தார்கள். அவர்கள் ஆறு மாத காலத்திற்கு ஒரு முறை மாட்டு வண்டியில் போய் உப்பு மூட்டைகளை வாங்கிவந்தார்கள். அதைத் தவிர அந்த ஊரில் எந்தப் பொருளும் விலைக்கு வாங்கப்படவில்லை. அவர்கள் ஒன்றாக சமைத்தார்கள். ஒன்றாகச் சாப்பிட்டார்கள். அவரவருக்கு என்ன வேலைகள் செய்யமுடியுமோ அதைச் செய்தார்கள். வயதானவர்கள் கூட ஓய்வு எடுக்கவில்லை. குழந்தைகளை வளர்க்க வேண்டியது ஊரின் பொறுப்பு. திருமணம். இறப்பு எல்லா விஷயங்களையும் ஊர் பார்த்துக்கொள்ளும். ஊரை அவர்களே நிர்வகித்துக்கொண் டார்கள்.

தூமகேது வியப்போடு கேட்டான்,

“மொத்த ஊரும் ஒரு குடும்பம்தானா?”

“ஆமாம். ஒரு குடும்பம்போலதான் வாழ்கிறோம். தனித்தனி வீடுகள் இருக்கின்றன. ஆனால், எந்த வீட்டிற்கும் கதவுகள் கிடையாது. பூட்டு சாவி போன்றவை இங்கேயில்லை. உடைகளை நாங்களே நெய்துகொள்கிறோம். உணவை நாங்களே உற்பத்தி செய்துகொள்கிறோம். கால்நடைகளைப் பராமரிக்கிறோம். நீர்நிலைகளை நிர்வாகம் செய்கிறோம். சண்டை சச்சரவு, பொறாமை, வன்முறை எதுவும் இங்கே கிடையாது.”

வியப்போடு கேட்டுக்கொண்டிருந்தான் தூமகேது.

ஊரைப்பற்றி சொல்லிக்கொண்டிருந்தவர் தூமகேதுவிடம் கேட்டார்.

“உனக்கு என்ன வேலைகள் செய்யத்தெரியும்?”

“தோல் பதப்படுத்துவேன். தோலை உரித்து எடுப்பேன். தோலில்

காலணிகள் செய்யத் தெரியும்.”

“இந்த வேலையை நீ இங்கிருந்தும் தொடரலாம்.”

“நான் ஒரு வழிப்போக்கன். அநாதை.”

“இல்லை. நீ எங்களில் ஒருவன். இங்கேயே இருந்துவிடு.”

தூமகேது அவர்களின் அன்பை நினைத்து நெகிழ்ந்தபடியே சொன்னான்.

“எனக்கு விருப்பம் இல்லாத நாளில் கிளம்பிவிடுவேன்.”

“நாங்கள் யாரையும் எதற்கும் கட்டாயப்படுத்துவதில்லை.”

தூமகேது அங்கே தங்க முடிவு செய்துகொண்டான். மறுநாள் முதல் அந்த ஊரில் அவனால் முடிந்த வேலைகளைச் செய்ய ஆரம்பித்தான். காலை நான்கு மணிக்கு ஊரே விழித்துக்கொண்டு விடும். அவர்வர் வேலையை துவங்கிவிடுவார்கள். ஆண்களை விட பெண்கள் கடின உழைப்பாளிகள். அவர்கள் விவசாயப்பணிகளை மேற்கொண்டார்கள். ஆண்களில் சிலர் மேய்ச்சலுக்கு ஆடு மாடுகளை ஓட்டிப் போனார்கள். அவர்கள் அனைவரும் ஒன்றாகச் சாப்பிடுவதற்காக பொது உணவறை இருந்தது. அதுபோலவே மாலை சூரிய அஸ்தமனத்தின் முன்பு அவர்களின் இரவு உணவு முடிந்துவிடும். அதன் பிறகு அனைவரும் ஒன்று கூடி ஆடிப்பாடிக் கதைகள் பேசி மகிழ்வார்கள். வயதில் மூத்த சிலர் தங்களின் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதும் உண்டு. சில நாட்கள் அவர்கள் உடல் ஆரோக்கியத்தின் பொருட்டு உண்ணாநோன்பிருந்தார்கள். திடீரென தான் இன்னொரு உலகிற்குள் வாழ்வது போலவே தூமகேது உணர்ந்தான். எந்தத் தருணத்திலும் யாரும் யாரையும் கோவித்துக் கொள்வதில்லை. கணவன், மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் அன்றாடம் நன்றி செலுத்தினான். பரஸ்பரம் ஒருவருக்கொருவர் நன்றி சொல்லிக் கொண்டார்கள். பழமரங்களில் சிலவற்றைப் பறவைகளுக்காக விட்டு வைத்திருந்தார்கள். அதில் ஒரு பழம்கூடப் பறிப்பதில்லை. யாரும் யாருடைய வேலை பற்றியும் குறை கூறவில்லை. எவருக்காவது உடல் நலமில்லை என்றால் அடுத்தவர் ஓடியோடி உதவி செய்தார்கள். ஊரில் இருந்த மருத்துவர் அக்கறையுடன் மருத்துவம் செய்தார். பிள்ளைகளுக்கு அவர்களே தொழிலும் எழுத்தும் கற்றுத் தந்தார்கள். ஊரில் பெரியதானியக் களஞ்சியம் இருந்தது. அதில் ஏழு ஆண்டுகளுக்குத் தேவையான தானியங்களைச் சேகரித்து வைத்திருந்தார்கள்.

இப்படி ஒரு ஊர் இருக்கமுடியுமா என்பது போலிருந்தது ஜோயாவின் இயல்பு. உழைப்பதும் உண்பதும் சந்தோஷமாக ஆடிபாடுவதும் ஆழ்ந்து உறங்குவதும், அடுத்தவருக்கு உதவி செய்வதுமாக தன் வாழ்க்கையைக் கழிக்கத் துவங்கினான் தூமகேது.

சிலவேளைகளில் அவன் தனியாக இருப்பதைக் கண்ட பெண்கள் அவனுக்கு ஆறுதலாக அமையும் என உடன் வந்து பேசுவார்கள். ஒரு பெண் அவன் மீதான இரக்கத்தில் தேவை என்றால் அவனுடன் ஒன்றாக உறங்கவும் இன்பம் தரவும் தயாராயிருப்பதாகச் சொன்னாள்.

“இல்லை வேண்டாம்” என தூமகேது மறுத்தான்.

அந்தப் பெண் இயல்பான புன்னகையோடு சொன்னாள்.

“பசித்த நேரத்தில் உண்பது போன்றதுதான் உடல்வேட்கையும். உன் உடற்பசிக்கு பெண் தேவை என்றால் கூச்சமில்லாமல் நீ என்னை அணுகலாம்.”

அப்படி ஒரு பெண் பேசிக்கேட்பது அதுவே முதல்முறை. அவன் வேண்டாம் எனப் பிடிவாதமாக மறுக்கவே அவள் சொன்னாள்

“உடலால் ஒருவருக்கொருவர் இன்பம் தருவது தவறில்லை. தயக்கம் வேண்டாம்.”

அந்தப் பெண் சொன்னது அவன் மனதில் ஆழமாகப் பதிந்து போனது. சில நாட்கள் அவர்கள் இரவு ஒன்றுகூடும் போது அவனது கடந்தகாலத்தைப் பற்றிக் கேட்பார்கள். சத்கரைப் பற்றியும் அதன் விசித்திர அரசன் பிஷாடன் பற்றியும் அவன் கதை கதையாகச் சொல்லிக்கொண்டிருப்பான். அதைக் கேட்கும் பெண்கள் அய்யோ பாவம் எனக் கண்ணீர்விட்டு அழுவார்கள்.

அந்த ஊரில் எவராவது இறந்துபோய்விட்டால் யாரும் அழுவதில்லை. அந்த மனிதன் வாழ்வதற்கு காரணமாக இருந்த மண்ணுக்கும் மரங்களுக்கும் தண்ணீருக்கும் காற்றுக்கும் நன்றி சொல்லிவிட்டு அந்த உடலை விலங்குகளுக்கு உணவாக அளித்து விடுவார்கள். அதுதான் அவர்களின் பழக்கம்.

ஒரு நாளிரவு ஊரே பரபரப்பாக இயங்கிக்கொண்டிருந்தது. என்ன நடக்கப்போகிறது என தூமகேது ஒருவரிடம் கேட்டபோது சொன்னார்.

“இன்றைக்கு சுடரணி விழா.”

சுடரணி விழாவில் என்ன செய்வார்கள் எனப் புரியாமல் தூமகேது காத்துக்கொண்டிருந்தான்.

இரவானதும் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் சிறிய அகல்விளக்கில் தீபங்களை ஏற்றி, தன்வீட்டின் முன் கொண்டுவந்து வைத்தார்கள், ஊரில் இருந்த அத்தனை வீடுகளிலும் தீபங்கள் எரிந்து கொண்டிருந்தன. சூரியகாந்திப் பூக்கள் மலர்ந்திருப்பதுபோல ஊரே ஜொலித்துக் கொண்டிருந்தது. நள்ளிரவு துவங்கியதும் அவர்கள் எரிந்துகொண்டிருந்த அகல்விளக்கை எடுத்து வான் நோக்கி வீசினார்கள். அந்த விளக்கிலிருந்து சுடர் மட்டுமே தனியே பிரிந்து ஒளிர்ந்தபடியே மிதக்கத் துவங்கியது. ஒன்றிரண்டில்லை,

நூற்றுக்கணக்கான சுடர்கள். வானில் ஒரு சேர மிதந்து கொண்டிருப்பதைக் காண சந்தோஷமாக இருந்தது. சுடர்கள் பறவைகளைப் போல வானில் மிதந்துகொண்டிருந்தன. எங்கும் ஒளி மயம். என்ன விந்தையிது. விளக்கிலிருந்த சுடர்கள் வானேறி மிதக்கிறேதே என அவன் தாங்கமுடியாத வியப்புடன் அதை ரசித்துக்கொண்டிருந்தான்.

“நமது சந்தோஷம்தான் இந்த தீபத்தை எரியச் செய்கிறது. சந்தோஷத்துடன் அன்புடன் ஒருவன் வானை நோக்கி தீபத்தை எறிந்தால் அந்தச் சுடர் காற்றில் மிதந்தபடியே எரியும். அதுதான் எங்கள் நம்பிக்கை. பாருங்கள் எத்தனை சுடர்கள் வானில் நடனமிடுகின்றன’’

தூமகேது வியப்போடு கேட்டான்.

“காற்று சுடரை அணைக்கவேயில்லை.”

“ஆமாம். இன்று ஓர் இரவு சுடரை காற்றால் அணைக்கமுடியாது. இது தீபங்களின் உற்சவ நாள். எவ்வளவு வலிமையாகக் காற்று அடித்தாலும்   தீபங்கள் அணையாது.”

தூமகேதுவிற்கும் ஒரு தீபத்தை வானில் விட ஆசையாக இருந்தது. அவன் ஒரு அகலை வாங்கி வான் நோக்கி வீசினான். அவனது அகலில் இருந்த சுடரும் வானில் மிதந்துபோகத் துவங்கியது.

சந்தோஷத்தில் அவன் மனம் நிரம்பிப் போனது.

“வெட்டவெளியில் சுடர்கள் எரிகின்றன. நகர்ந்து போகின்றன. இந்த உலகம் அன்பால் ஆனது என்பதை இந்த நிகழ்வு உறுதிப்படுத்துகிறது’’ என்றான் ஒருவன்.

விடியும்வரை அவர்கள் வானேறி நடனமிடும் சுடர்களைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். தன் வாழ்நாளில் அதுபோன்ற ஒரு இரவை தூமகேது கண்டதேயில்லை. நட்சத்திரங்கள் வானிலிருந்து மறைவதுபோல காலை வெளிச்சம் வந்தவுடன் அந்தச் சுடர்கள் தானே மறைந்தன.

மனைவி பிள்ளைகளைத் தேடிக் கண்டடையாமல் எங்கோ சந்தோஷத்துடன் இன்பத்தை அனுபவித்தபடியே வாழ்ந்து கொண்டிருக்கிறோமே என்ற குற்றவுணர்ச்சி தூமகேதுவை அழுத்த ஆரம்பித்தது. அடுத்த சில மணி நேரத்தில் அவன் எவரிடமும் சொல்லிக்கொள்ளாமல் ஜோயாவிலிருந்து வெளியேறி நடக்க ஆரம்பித்தான். ஊர் அவன் கண்ணில் இருந்து மறையும் தொலைவிற்கு வந்த போது அவன் கைகூப்பி அந்த ஊருக்கு நன்றி சொன்னான். பின்பு விடுவிடுவென அவன் மேற்கு நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

குலாபி

ஒளிந்து வாழ்பவனுக்கு வேசையர் விடுதி பாதுகாப்பானது. அங்கே உணவும் உடைகளும் தந்துவிடுவார்கள். வேலையும் அதிகமிருக்காது. பயந்து ஓட வேண்டிய அவசியமும் இல்லை.

குவாலியரில் இருந்த குலாபி வேசையர் விடுதியில் தூமகேது பணியாளராக இருந்தான். குலாபி வேசையர் விடுதியில் இருந்தவர்களில் காதம்பரிதான் மிகவும் குள்ளமானவள். இரண்டரை அடிக்குள்தானிருப்பாள். ஆனால், வயது முப்பத்தைந்தைக் கடந்திருந்தது.

அவளை ஒரு பெண்ணாகவே யாரும் கருதவில்லை. விளையாட்டு பொம்மைகளில் ஒன்றைப் போலவே கருதினார்கள். எடுபிடி வேலைகளுக்கும் முதுகு கைகால் பிடித்துவிடுவதற்கும், பூத்தொடுத்துத் தருவதற்கும் மட்டுமே அவளைப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

தன்னை இந்த உலகம் ஒரு பெண்ணாகக் கருதவில்லை என்ற கவலை அவளுக்குள் இருந்தது. அவள் தன்னை ஒரு பெரிய மனுஷியாகக் காட்டிக்கொள்வதற்காக ஒன்றுக்கு மேல் ஒன்றாக இரண்டு மூன்று பாவடைகள் கட்டிக் கொள்வாள். சின்னஞ்சிறு தலையில் நிறைய பூக்களை வைத்துக்கொள்வாள். கை நிறைய வளையல்கள். உதடு சிவப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக வெற்றிலை வேறு போட்டுக்கொண்டேயிருப்பாள். தன்னால் பாட முடியும் என்பதைக் காட்டிக்கொள்வதைப் போல பொய்த்தொண்டையில் பாடுவாள். குலாபிக்கு அவள்தான் தோழி. ஒவ்வொரு நாளும் தன்னிடம் சுகம் காண வந்த ஆணைப்பற்றி காதம்பரியிடம் குலாபி பகடி பேசுவாள்.

“காமவசப்பட்ட நிலையில் இந்த உலகில் எல்லா ஆண்களும் ஒன்றுபோலதானிருக்கிறார்கள். கிழட்டுப் பசு புல்லை மேய்ந்த கதை தான்.”

காதம்பரிக்கு உடலின்பத்தைப் பற்றிப் பேசுவது என்றால் அத்தனை பிடிக்கும். அதற்காகவே அவள் வேசையர் விடுதியில் இருந்த பெண்களுக்குத் தேடிப்போய் சேவகம் செய்வாள். ஒவ்வொருத்தியும் சொல்லும் கதைகளைக் கேட்டால் பாலுறவு என்பது சகதியில் விழுந்து பன்றிகள் சண்டையிடுவதைப் போலதான் தோன்றும். அவளுக்கும் தன்னைத் தேடி ஒரு ஆண் வரமாட்டானா, தன்னைக் கட்டி அணைத்து இன்பங்கள் தரமாட்டானா என்ற ஆதங்கமாகவே இருக்கும்.

ஆனால், அந்த வீட்டில் காதம்பரியை எந்த ஆணும் நாடியதேயில்லை. சில வேளைகளில் ஆணும் பெண்ணும் சம்போகம் செய்வதை ஒளிந்திருந்து கண்டிருக்கிறாள். அப்போது அவளது கால்விரல்களில் துவங்கி உச்சந்தலை வரை நெருப்பு பற்றிக்கொண்டது போலிருக்கும்.

பெருமூச்சும் ஏக்கமுமாக அவள் படுக்கையில் விழுந்து அழுவாள். தன்னை நேசிக்க யார் இருக்கிறார்கள்? எந்த ஆணுக்கு இரண்டரை அடி உயரப்பெண்ணைப் பிடிக்கும். ஏன் தன்னால் இன்பம் தர முடியாது என நினைக்கிறார்கள். சிலவேளைகளில் வணிகர்களை அழைத்து வந்த குதிரையோட்டிகளைச் சீண்டி படுக்கைக்கு அழைத்திருக்கிறாள். ஒருமுறை அப்படி அழைத்தபோது ஒரு ரதசாரதி திட்டினான்.

“நாற்றம் பிடித்த குள்ளச்சியே. உன்னோடு படுத்து சுகம் காணுவதற்கு பதிலாக நாயோடு உறவு கொண்டுவிடலாம்.’’

அந்த ரதசாரதி மீது அவள் காறித் துப்பினாள். அவன் ஆத்திரத்துடன் சொன்னான்,

“போ, எங்காவது இருட்டில் கழுதை நின்றிருக்கும். அதுதான் உனக்குச் சரியான ஜோடி.”

அவள் ரத சாரதியை மிக மோசமான வார்த்தைகளால் திட்டினாள். அந்த சண்டையை வேடிக்கை பார்த்த பணியாளர்கள் கைதட்டிச் சிரித்தார்கள். காதம்பரிக்கு அவமானமாகவும் ஆத்திரமாகவும் இருந்தது. அவள் தனது படுக்கையில் விழுந்து அழுதாள். இரண்டு நாட்கள் வெளியே வரவேயில்லை. குலாபி அவளை ஆள்விட்டு அழைத்தபோதும் அறையின் கதவைத் திறக்கவேயில்லை.

மூன்றாம் நாள் குலாபியே வந்து கதவைத் தட்டினாள்.

“காதம்பரி கதவைத் திற. இது என்ன பிடிவாதம்?”

காதம்பரி அழுது ஓய்ந்த குரலில் சொன்னாள்.

“என்னை யாருக்கும் பிடிக்கவில்லை. நானும் ஒரு பெண்தானே.’’

குலாபி சொன்னாள்.

“உனக்கு நானே ஒருவனைத் திருமணம் செய்து வைக்கிறேன் போதுமா?’’

“நிஜமாவா, என்னை ஒருவன் திருமணம் செய்துகொள்வானா?’’

“நிச்சயம் அப்படி ஒருவன் கிடைக்காமலா போய்விடுவான். நீ கதவைத் திற.’’

“இப்போது நான் அலங்கோலமாக இருக்கிறேன். குளித்துத் தயார் ஆகியதும் கதவைத் திறக்கிறேன்’’ என்றாள் காதம்பரி.

குலாபி சிரித்தபடியே சொன்னாள்.

“சரி, சரி. அழகுபடுத்திக்கொண்டுவந்து என்னைப் பார்.’’

காதம்பரி அன்றைக்கு வாசனை திரவியங்களுடன் ரோஜா இதழ்களை நிரப்பி அந்தத் தண்ணீரில் குளித்தாள். கீரைத்தண்டு போன்ற தனது கேசத்தை நறுமணப்புகையால் கமழவிட்டாள். அவளுக்கு பிடித்தமான

மஞ்சள் வண்ணப் பட்டுப்பாவாடை ஒன்றை எடுத்து உடுத்திக்கொண்டாள். தலையில் ஆரம்போல பூக்களைச் சூடிக்கொண்டாள். பாசிமாலைகளையும், பவளமோதிரத்தையும் அணிந்துகொண்டு அவள் கண்ணாடி முன்பாக வந்து பார்த்தபோது தான் எவ்வளவு அழகு என்று அவளுக்குத் தோன்றியது.

“காதம்பரி உன்னைக் கட்டிக்கொள்ள ஒருவன் வரப்போகிறான். அவனுடன் வேண்டும் மட்டும் இன்பத்தை அனுபவிக்கலாம்” என்று சொல்லி கண்ணைச் சிமிட்டிக்கொண்டாள். பிறகு இடுப்பை ஆட்டி ஆட்டி நடந்தபடியே அவள் குலாபியின் அறையை நோக்கி நடந்து போனாள். வழியில் தென்பட்ட பெண்கள் அவளை கேலி செய்து குலாபி உனக்கு மாப்பிள்ளை பார்க்கச் சொல்லியிருக்கிறாள் என்றார்கள். அந்தக் கேலியை ரசித்தபடியே காதம்பரி குலாபியின் அறைக்குப் போனாள்.

குலாபி படுக்கையில் ஆடையில்லாமல் குப்புறப்படுத்துக் கிடந்தாள். அவள் முதுகில் நகக்கீறல்கள் ஆழமாகப் பதிந்துபோயிருந்தன. வைத்தியம் செய்யும் நல்லம்மாள் மயிலிறகால் மருந்தை முதுகில் தடவியபடியே கேட்டாள்.

“இத்தனை ஆழமாகவா நகத்தைக் கொண்டு கீறுவான், யாரம்மா அந்த ஆள்?’’

“கடலோடி. கப்பலைச் செலுத்துவதைப்போல என் உடலை வேதனைப்படுத்தி விட்டான்.’’

“கடலில் பெண்கள் கிடைக்காமல் பலமாதங்கள் அவதிப்பட்டி ருப்பான். அந்தத் திணவை ஒரே நாளில் தீர்த்துக்கொண்டிருக்கிறான். இந்தக் காயங்கள் ஆறுவதற்கு மூன்று நாட்கள் ஆகும். ஓய்வெடுங்கள்’’

“அப்படியிருக்க முடியாது. இன்றிரவு பட்டுவணிகன் ஒருவன் வருகை தர இருக்கிறான்.”

“உங்கள் உடல் ஒன்றும் கல்லிலோ இரும்பிலோ செய்ததில்லையே.”

“அதை எந்த ஆணும் உணர்வதில்லை. காமம் என்றால் கரும்பைச் சாறுபிழிவதைப் போல நினைக்கிறார்கள்.”

காதம்பரி தொண்டையைச் செருமியபடியே குலாபியின் அருகில் வந்து நின்று கேட்டாள்.

“என் அலங்காரம் எப்படி?”

குலாபி அவளை ஏறிட்டுப் பார்த்தபடியே சொன்னாள்,

“நான் ஆம்பிள்ளையாக இல்லாமல் போய்விட்டேனே எனத் தோன்றுகிறது காதம்பரி. உன் அலங்காரம் பிரமாதம்.’’

“நிஜமாவாக? இந்தச் சிவப்புப் பூக்கள் மஞ்சள் உடைக்குப்

பொருத்தமாக இருக்கிறதா?”

“அதை உன் காதலன்தான் சொல்ல வேண்டும்’’ எனச் சொல்லி குலாபி சிரித்தாள்.

காதலன் என்ற சொல்லைக் கேட்டதும் காதம்பரிக்கு வெட்கம் வந்தது. அவள் புன்சிரிப்புடன் சொன்னாள்.

“காதலன் மட்டும் கிடைத்துவிட்டால் போதும் ஆறுமாதங்களுக்குள் பிள்ளை பெற்றுவிடுவேன்.”

“அய்யோ, அப்படி அவசரம் காட்டாதே. இன்பத்தை முழுமையாக அனுபவிக்கமுடியாமல் போய்விடுகிறோம். உன்னை காதலனுடன் உள்ளே தள்ளி அறையைப் பூட்டிவிடுவோம். இரண்டு வருஷங்களுக்குப் பிறகுதான் கதவைத் திறந்துவிடுவோம்.’’

“அவ்வளவு சீக்கிரமாகவா?” எனக் கேட்டாள் காதம்பரி.

அதைக்கேட்டு நல்லம்மாளும் குலாபியும் சிரித்தார்கள். காதம்பரி சொன்னாள்.

“மாப்பிள்ளை பார்க்கும்போது உயரமும் உடற்கட்டும் உள்ள ஆளாகப் பாருங்கள். இல்லாவிட்டால் அவனால் என்னை சமாளிக்க முடியாது.”

“சரிதான். அதுவும் நல்லயோசனைதான்’’ என்றாள் நல்லம்மாள்.

குலாபி தன் வலியை மீறிச் சிரித்தபடியே சொன்னாள்,

“இதை எல்லாம் கேட்கும்போது காதம்பரி உனக்கு ஒரு சுயம்வரம் நடத்தி விடலாம் என்றுகூடத் தோன்றுகிறது.”

“ஒருவேளை ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்கள் என்னைத் திருமணம் செய்துகொள்ள ஆசைப்பட்டுவிட்டால் என்ன செய்வது’’ எனக் கேட்டாள் காதம்பரி.

“கட்டிக்கொள்ள வேண்டியதுதான். பாஞ்சாலி ஐந்து பேரைக் கட்டிக்கொள்ளவில்லையா?”

“அப்படி என்றால் நான் ஆறுபேரைக் கட்டிக்கொள்வேன்’’ என்றாள் காதம்பரி.

குலாபியால் சிரிப்பைக் கட்டுப்படுத்தமுடியவில்லை. அவள் காதம்பரியை அருகில் அழைத்து கன்னத்தில் முத்தமிட்டபடியே சொன்னாள்.

“நங்கூரத்தைப் போல உறுதியான ஆண் உனக்குக் கிடைப்பான்.’’

காதம்பரியும் குலாபியை முத்தமிட்டாள். குலாபி காதம்பரி தலையில் சூடியுள்ள பூவை முகர்ந்தபடியே சொன்னாள்,

“படுக்கைச் சுகம் என்பது நீ நினைப்பதுபோல பெரிய விஷயமில்லை,

அருவருப்பான விவகாரம்.”

“பொய் சொல்லாதே குலாபி. இத்தனை வருஷம் நீ மட்டும் அதை அனுபவித்துக்கொண்டேயிருக்கிறாய்.”

“இல்லை காதம்பரி. நான் ஒருமுறைகூட அந்தச் சுகத்தை உணரவேயில்லை. இது தொழில். வண்டி இழுத்துச் செல்லும் குதிரை சந்தோஷம் அடையுமா என்ன?”

“பரவாயில்லை. நானும் குதிரையாக இருந்துவிட்டுப் போகிறேன்.’’

“காற்று மரங்களை மட்டுமில்லை, சிறுபுல்லையும் அசைக்கத் தானே செய்கிறது. காமத்திலிருந்து நீ மட்டும் தப்பிவிட முடியுமா என்ன?’’

“நீங்கள் எல்லோரும் பொறாமைப்படக்கூடிய ஒருவன் எனக்குக் கிடைப்பான் பார்.”

“அப்படி ஒருவன் கிடைத்தால் அவனை கள்ளத்தனமாக அடைந்து விடுவேன்.’’

“அப்படி நடந்தால் உன்னை வெட்டிக் கொன்றுவிடுவேன் குலாபி. நிச்சயம் செய்வேன்.’’

“இத்தனை வருஷங்கள் உனக்கு சோறு போட்டு பட்டு உடைகள் தந்து ஆதரித்த என்னையே கொன்றுவிடுவாயா?’’

“ஆமாம் குலாபி. அவன் என்னோடு மட்டும்தான் படுக்கையைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். என்னால் தரமுடியாத எதை

நீ அவனுக்குத் தர முடியும்?”

“என்னைப்பற்றி உனக்குத் தெரியும் காதம்பரி. என்னைத் தேடி வந்த ஆண் அதன்பிறகு வேறு பெண்ணை நாடமாட்டான். நரம்புகளை மீட்டி ஒருவனை உச்சநிலைக்குக் கொண்டுசெல்ல எனக்குத் தெரியும்.’’

“அதில் உன்னைவிட நான் கெட்டிக்காரி’’ என்றாள் காதம்பரி.

“அப்படியா? அதையும் பார்த்துவிடலாம். முதலில் அப்படி ஒருவன் கிடைக்கட்டும்.’’

“குலாபி, நீ சத்தியம் செய்திருக்கிறாய். நல்ல ஆணைத் தேடித் தர வேண்டியது உனது வேலை.’’

“ஆண்களுக்கா பஞ்சம்? நீ கவலைப்படாதே’’ என்றாள் குலாபி.

•••

இந்த உரையாடல் நடந்த மூன்று மாதங்களுக்கு காதம்பரியைத் திருமணம் செய்துகொள்ளும்படி பலரையும் கேட்டுவிட்டாள், ஒருவரும் அதற்குத் தயாரில்லை. நூறு பொற்காசுகள் தருவதாகக் கூட குலாபி சொல்லிப் பார்த்துவிட்டாள். ஒருவரும் அவளைக்

கட்டிக்கொள்ளத் தயாரில்லை. யவனிக வணிகரான ஒரு கிழவன் மட்டும் அவளை தனது பணிப்பெண்ணாக விலைக்கு வாங்கிக்கொள்ள தயாராயிருந்தான். அவளைக் கட்டிக்கொண்டு மனைவியாக்கிக்கொள் என அந்தக் கிழவனிடம் சொன்னாள் குலாபி. அவன் மறுத்துவிட்டான்.

தன்னை ஒரு ஆணுக்கும் பிடிக்கவில்லை என்று உணர்ந்த காதம்பரி சேலையில் தூக்குமாட்டிக்கொண்டு சாக முயன்று காப்பாற்றப் பட்டாள். குலாபி அவளைக் கோவித்துக் கொண்டபோது காதம்பரி அழுதபடியே சொன்னாள்.

“நான் பெண்தான். எனக்கும் தொடைகளில் குருதி வழிந்தோடுகிறது. நாய்களைப் போல நாக்கைத் தொங்கவிட்டு வரும் இந்த ஆண்களுக்கு என்னதான் வேண்டும்?’’

“அழாதே காதம்பரி. எந்தப் பெண்ணும் கன்னியாகவே இறந்து போய்விடுவதில்லை. யாராவது ஒருவன் அவளுக்காக வந்து சேருவான்.’’

“பொய். இப்படிச் சொல்லிச்சொல்லி என்னை ஏமாற்றி விட்டாய். என்னைத் தேடி எவனும் வர மாட்டான். நான் ஒரு நாயைத் திருமணம் செய்துகொள்ளப்போகிறேன். அதுதான் ஆண்களுக்கு நான் தரும் பதிலடி.”

“அவசரப்படாதே. பௌர்ணமிக்குள் ஒருவனைத் திருமணம் செய்து வைக்கிறேன்” என்றாள் குலாபி.

காதம்பரிக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. அவள் தலைவிரிக் கோலமாக படுக்கையில் கிடந்தபடியே ஆதங்கத்துடன் கேட்டாள்

“எந்தப் பெண்ணும் ஆணின் உயரத்தைப் பற்றிக் கவலைப்படுவதேயில்லை. இந்த ஆண்களுக்கு மட்டும் என்ன கேடு?”

•••

பௌர்ணமிக்கு இரண்டு நாள் முன்பாக மிதமிஞ்சிக் குடித்துவிட்டு ஒருவன் பின்னிரவில் வந்து குலாபியின் வீட்டுக் கதவைத் தட்டினான். கைவிளக்கோடு தூமகேது கதவைத் திறந்தபோது, அவன் நிலைகொள்ளாமல் தடுமாறி விழுந்தான். தூமகேது விழுந்து கிடந்தவனைப் புரட்டியபோது போதையில் செருகிய கண்களுடன் அவன் “குலாபி இருக்கிறாளா?” எனக் கேட்டான்.

இது குலாபியின் வீடில்லை என்று சொல்லி தூமகேது அவனைத் துரத்தமுயன்றான். அப்போது, ஒரு அறையிலிருந்து பெண்ணின் சிரிப்பொலி வருவதைக் கேட்ட அந்த ஆள், “எனக்கு ஒரு பெண் வேண்டும். அவள் யாராக இருந்தாலும் சரி. உடனே வேண்டும்” என்றான்.

தூமகேதுவிற்கு என்ன செய்வது எனத்தெரியவில்லை. அவன்

உதவிக்காக காதம்பரியை அழைத்தான்.

குடிபோதையில் தள்ளாடிக் கொண்டிருந்தவனைத் துரத்துவதற்காக குறுவாள் ஒன்றைக் கையில் ஏந்தியபடியே தன் அறையினைவிட்டு வெளியே வந்த காதம்பரியைக் கண்ட அவன் தன்னை, மறந்து கைகளை உயர்த்திச் சொன்னான்.

“ஆஹா பேரழகி, இப்படி ஒரு அழகியை நான் கண்டதேயில்லை, இவளைப் போல ஒரு பெண் ஈரேழு பதினாலு லோகத்திலும் இல்லை. என்ன நறுமணம், என்ன ஒரு நளினம்?’’

அதைக்கேட்ட போது காதம்பரிக்கு வெட்கமாக இருந்தது.

“கைவிளக்கை உயர்த்திப்பிடி, இந்த அழகைக் கொஞ்சம் குடித்துக் கொள்கிறேன்” என தூமகேதுவைப் பார்த்துச் சொன்னான் அந்த ஆள்.

தூமகேது தயக்கத்துடன் விளக்கை உயர்த்திப்பிடித்தான். அந்த மனிதன் நாக்கை சப்புக் கொட்டியபடியே சொன்னான்.

“வெண்தாமரை போன்ற முகம். திராட்சைப் பழம் போன்ற கண்கள். காந்தள் விரல்கள். ஒரேயொரு முறை இவள் நிழலை நான் முத்தமிட்டுக்கொள்ளட்டுமா?’’

அதைக்கேட்ட பணிப்பெண்ணிற்கு சிரிப்பாக வந்தது. அவள் ரகசியமான குரலில் காதம்பரியிடம் சொன்னாள்.

“போதையில் உளறுகிறான்.”

“இல்லை. அவன் உண்மையைத்தான் சொல்கிறான். அவனை என் அறைக்கு அழைத்துக்கொண்டுவா.”

அதைக்கேட்ட அந்தக் குடிகாரன் சொன்னான்.

“என்னிடம் சல்லிக்காசு கிடையாது. ஆனால், இவள் அழகை ரசிப்பதற்கு மனதிருக்கிறது.”

காதம்பரி அந்த ஆளை உன்னிப்பாகப் பார்த்தாள். நாற்பது வயதைக் கடந்திருக்கும். மெலிந்த தோற்றம். விடைத்த காதுகள். பெரிய மூக்கு. நிச்சயம் திருமணம் செய்திருப்பான். ஆளைப் பார்த்தால் வேறு ஊரைச் சேர்ந்தவன் போலிருக்கிறான். அவன் ஒரு ஆண். அந்த ஒரு தகுதி போதும்தானே.

காதம்பரி ஒரு பக்கமும் தூமகேது ஒரு பக்கமுமாக பிடித்து அவனை காதம்பரியின் அறைக்குக் கொண்டுபோனார்கள். அவளது அறைக்குள் வந்த முதல் ஆண் அவன்தான். என்றாவது ஒரு ஆண் தன்னைத் தேடி வரக்கூடும் என அவள் பெரிய படுக்கையை வைத்திருந்தாள். அந்தப் படுக்கையில் விழுந்த அவன் போதை கலைந்தவனைப் போல கேட்டான்.

“குடிப்பதற்கு ஷராப் இருக்கிறதா?’’

“கொண்டுவருகிறேன்” என்றபடியே காதம்பரி வெளியேறிப் போனாள்.

அவள் திரும்பிவந்தபோது அந்த ஆள் உறங்கியிருந்தான். அவன் அருகில் படுத்துக்கொண்டு தனது கைகளை அவன் மீது போட்டுக் கொண்டாள். ஒரு ஆணுடன் சேர்ந்து உறங்குகிறோம் என்கிற கிறக்கமே அவளுக்குப் போதுமானதாயிருந்தது. அந்த ஆணின் கைகளைத் தன்னோடு சேர்த்துக்கொண்டாள். உறங்கும் குழந்தையை முத்தமிடுவதைப் போல அவனை முத்தமிட்டாள். அவன் குறட்டை ஒலியோடு உறங்கிக்கொண்டிருந்தான்.

மறுநாள் காலை எப்போது காதம்பரியின் அறைக்கதவு திறக்கப்படும் என எல்லாப் பெண்களும் காத்திருந்தார்கள். காதம்பரி அறைக்கதவைத் திறக்கவேயில்லை. அந்தப் பெண்கள் பொறாமைப்படட்டும் என அவள் படுக்கையிலே கிடந்தாள். போதையில் கிடந்தவன் உறங்கி எழவேயில்லை. வேண்டும் என்றே அவள் பொய்யாகக் கலவிக் கூச்சலிட்டாள். அதைக்கேட்ட மற்ற பெண்கள் காதம்பரி அதிர்ஷ்டசாலி என்றார்கள். இரண்டு நாட்கள் அந்தக் கதவு திறக்கபடவேயில்லை, இடையில் கண்விழித்துக் கொண்டவனுக்கு ஷராப் கொடுத்து மீண்டும் மயக்கமாக்கினாள் காதம்பரி.

மூன்றாம் நாள் காலை அவள் குளித்து முடித்து சிவப்புநிறப் பூக்கள் கொண்ட பட்டுப் பாவாடை உடுத்தி தலையில் சரமாக பூக்களைச் சூடி வெளியே வந்தபோது அந்தப் பெண்கள் உண்மையிலே காதம்பரி பேரழகி என்பதைப் போலவே உணர்ந்தார்கள். அவள் பெண்களை தன்னைச் சுற்றி அமரவைத்து அந்த ஆணின் பாலின்ப சேஷ்டைகளைப் பற்றி பொய்யாகச் சொல்ல ஆரம்பித்தாள்.

“எப்படி இருந்தது முதல் அனுபவம்?’’ எனக்கேட்டாள் ஒருத்தி.

“யானை மரத்தை முறிப்பதைப் போலிருந்தது’’ என்றாள் காதம்பரி.

“அவனது முத்தம் எப்படியிருந்தது?” எனக் கேட்டாள் இன்னொருத்தி.

“கிளி பழம் கொத்துவதைப் போலிருந்தது’’ என வெட்கப்பட்டாள் காதம்பரி.

“அந்த ஆணைப் பற்றி என்ன நினைக்கிறாய் காதம்பரி’’ எனக் கேட்டாள் மற்றவள்.

“அவன் ஒரு மந்திரவாதி, எனக்குப் பறக்கக் கற்றுத்தருகிறான். இத்தனை காலம் இல்லாமல் புதிய சிறகு முளைத்து வானில் பறக்கிறேன்.’’

“நாங்களும் அதே வானில் பறந்திருக்கிறோம்’’ எனச் சீண்டினாள் இன்னொருத்தி.

“கழுகும் கொசுவும் ஒரே வானில் பறந்தாலும் இரண்டும் ஒன்றில்லையே’’ என்றாள் காதம்பரி.

அந்தப் பெண்கள் ஆசையுடன் கேட்டார்கள்,

“ஒரேயொரு முறை அவனைப் பார்க்கலாமா?’’

“என் ஆசை தீரட்டும். அனுப்பிவைக்கிறேன். அதுவரை இந்தக் கதவைத் திறக்கவே மாட்டேன்’’ என்றாள் காதம்பரி.

அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது, பணிப்பெண் வந்து அந்த ஆள் எழுந்துகொண்டு கூச்சலிடுகிறான் என்றாள்.

காதம்பரி தன் அறையை நோக்கி ஓடினாள். அவன் உடைகள் இல்லாமல் நிர்வாணமாக நின்றபடியே கத்தினான்.

“எனக்குப் பசிக்கிறது. சாப்பிட ஏதாவது கொடு.”

“உடனே கொண்டுவரச் சொல்கிறேன்.’’

என்றபடியே காதம்பரி சமையற்கூடத்தை நோக்கி ஓடினாள். சமைத்து வைத்திருந்த இறைச்சி, ரொட்டி, மற்றும் பாதம்பருப்புகள், பழங்களை அள்ளி எடுத்துக்கொண்டு அறைக்குத் திரும்பி ஓடி கதவைச் சாத்திக்கொண்டாள்.

எங்கிருந்தோ வந்த ஒரு குடிகாரன் காதம்பரி அறையில் அடைந்து கிடக்கிறான் எனக் கேள்விப்பட்ட குலாபி அதைப்பற்றி விசாரிக்க காதம்பரியை அழைத்துவரச் சொன்னாள்.

ஆனால், பணிப்பெண் அறைக்கதவு மூடியிருக்கிறது என, திரும்பி வந்து சொன்னாள்.

மூடப்பட்ட அறையினுள் காதம்பரி குடிகாரனை குளியல் அறைக்கு அழைத்துப்போய் குழந்தையைக் குளிக்க வைப்பதுபோல குளிப்பாட்டினாள். அவன் தலையைத் துவட்டிவிட்டாள். சாம்பிராணிப் புகை போட்டாள். என்றாவது தன்னைத் தேடி வரும் ஆணிற்குப் பரிசாகத் தர வேண்டும் என்று திருடி வைத்த காவல் அதிகாரியின் உடையை அவனுக்கு அணிய வைத்தாள். கண்ணாடி முன்பாக அவனை அழைத்துப் போய் உட்கார வைத்து கைகால் முழுவதும் சந்தனம் பூசி, கழுத்தில் முத்துமாலை அணிவித்து கைவிரல்களில் மோதிரம் போட்டுவிட்டாள். பிறகு அவனுக்கான உணவை ஊட்டிவிட்டாள்.

அந்தக் குடிகாரன் தன்னை சந்தோஷப்படுத்தும் அந்தக் குள்ளச்சியை வியப்போடு பார்த்தபடியே கேட்டான்,

“உன் பெயர் என்ன?”

“காதம்பரி.”

“நீ அழகாயிருக்கிறாய்’’ என்றான் குடிகாரன்.

“இதை நேற்று இரவிலிருந்து சொல்லிக்கொண்டேயிருக்கிறாய், நிஜமாகவே நான் அழகிதானா?’’

“அழகி என்றா சொன்னேன், பேரழகி” என்றான் அவன்.

உனது பெயர் என்னவென்று கேட்டாள் காதம்பரி.

“நியோகி’’ என்றான் அவன்.

காதம்பரியின் அறைக்கதவு திறக்கப்படவில்லை என்பதால் குலாபியே நேரில் வந்து நின்று கதவைத் தட்டினாள்.

குலாபியின் குரலைக் கேட்ட காதம்பரி சொன்னாள்.

“என் அழகைப் புகழ்ந்து சொல், உரத்த குரலில் சொல்.”

“நீ அழகின் ராணி, நீலமேகத்தைவிடவும் அழகானவள். கோடை மழையைப் போல உக்கிரமானவள்.”

அவன் பித்தேறியது போல எதைஎதையோ புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தான். வெளியே நின்றிருந்த குலாபிக்கு ஆச்சரியமாக இருந்தது. இதுவரை எந்த ஆணும் அவளை இப்படிப் புகழ்ந்து பேசியதேயில்லை. அவள் பொறாமை தாங்கமுடியாதவளைப் போல சொன்னாள்.

“காதம்பரி, ஒரேயொரு முறை அறைக்கதவைத் திற. அந்த ஆளின் முகத்தை மட்டுமாவது பார்த்துவிட்டுப் போகிறேன்.’’

“இரண்டு வருஷங்களுக்குக் கதவு திறக்காது’’ எனக் கேலியாகச் சொன்னாள் காதம்பரி.

அதைக்கேட்டு நியோகி சிரித்தான், குலாபிக்கு அவர்கள் சிரிப்பு சந்தோஷத்தைத் தந்தது. அனுபவிக்கட்டும். இத்தனை நாட்களாக கிடந்த ஏக்கத்தைப் போக்கிக்கொள்ளட்டும் என அவள் தன் அறைக்குத் திரும்பிப் போனாள்.

மூன்றாம் நாள் காலை காதம்பரி வெளியே வந்தாள், பணிப் பெண்ணை அழைத்து வணிகவீதிக்குச் சென்று தூரிகைகளும் வண்ணங்களும் வாங்கி வரச்சொன்னாள்.

எதற்காக எனப் பணிப்பெண் கேட்டதற்கு காதம்பரி சொன்னாள்.

“அந்த ஆள் ஒரு ஓவியன், என்னைச் சித்திரம் தீட்டப்போகிறான்.’’

காதம்பரியைப் படம் வரைந்தால் எப்படியிருக்கும் தெரியுமா எனப் பெண்கள் கேலி பேசிச் சிரித்துக்கொண்டார்கள். பணிப்பெண் தூரிகையும் வண்ணங்களையும் வாங்கிக் கொண்டு வந்து தந்தாள்.

ஐந்து நாட்கள் அவன் காதம்பரியைப் படுக்கையில் உட்கார வைத்து படம் வரைந்து கொண்டேயிருந்தான். இடையிடையில் கோப்பை கோப்பையாக மதுவைக் குடித்துக்கொண்டு மிருந்தான். ஆறாம் நாளில் அவளை அழைத்து தான் வரைந்த ஓவியத்தைக் காட்டினான். காதம்பரியால் நம்பமுடியவில்லை. அது அவள்தானா? எத்தனை

அழகு. தலையில் மலர் கிரீடம், தேவதைகள் அணிந்திருப்பது போன்ற பட்டாடை. கழுத்தில் மின்னும் வைரம், பரிவும் கருணையும் கொண்ட கண்கள். நிஜமாகவே தான் இப்படி இருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். ஆனால், நியோசியின் கண்களுக்கு நான் இத்தனை அழகாகக் காட்சி தந்திருக்கிறேனா? இதற்கு என்ன நன்றிக் கடன் செய்வது? அவள் நியோசியைக் கட்டி அணைத்துக்கொண்டாள்.

அவன் புன்சிரிப்புடன் சொன்னான்.

“நேரில் உள்ள அழகு ஓவியத்தில் வரவில்லை.’’

அவள் கண்ணீர்விட்டபடியே சொன்னாள்.

“செத்துவிடலாம் போலிருக்கிறது.’’

அவன் அவளை அணைத்தபடியே சொன்னான்.

“சுடர் சிறியதுதான். அதுதானே ஒளிர்கிறது.’’

தான் ஒரு சுடர் என்பதைப் பெருமையுடன் உணர்ந்தவள்போல சொன்னாள்.

“என்னை எனக்கே நீதான் அடையாளம் காட்டுகிறாய்.’’

“அதுதான் ஓவியனின் வேலை’’ என்றான் தூமகேது.

சந்தோஷப் பரவசத்தில் அந்த ஓவியத்தை அவள் குலாபியின் அறைக்கு எடுத்துக்கொண்டு ஓடினாள்.

குலாபியாலும் நம்பமுடியவில்லை, இது காதம்பரிதானா, கந்தர்வ அழகியைப் போலிருக்கிறாளே என நினைத்தபடியே சொன்னாள்.

“அழகான ஓவியம்.’’

“ஓவியத்தை விடுங்கள். என் அழகு எப்படியிருக்கிறது?’’

“அழகியை ஓவியம் வரையும்போது அழகாகத்தானே இருக்கும்’’ என்றாள் குலாபி.

“அவன் என்மீது மயங்கிக் கிடக்கிறான். அந்தக் கிறக்கம்தான் ஓவியத்திற்கு அழகைச் சேர்த்திருக்கிறது.”

“உன்னைப் பார்த்தால் பாதுஷாக்களே மயங்கிவிடுவார்களே’’ எனக் கேலி செய்தாள் குலாபி.

“எந்த பாதுஷாவாக இருந்தாலும் என் நியோகிக்கு ஈடாக மாட்டான்’’ என்றாள் காதம்பரி.

“நியோகி என்பதுதான் அவன் பெயரா, ஆள் எப்படி முரடனா?’’

“எந்தப் புலியாக இருந்தாலும் என் படுக்கைக்கு வந்தால் பூனையாகி விடும்’’ எனச் சொல்லிச் சிரித்தாள் காதம்பரி.

அதைக்கேட்டு குலாபி சிரித்தபடியே சொன்னாள்.

“உன் சிரிப்பைக் காணும்போது, எனக்கே பொறாமையாக இருக்கிறது. அவனை இப்போதாவது ஒருமுறை அழைத்து வந்து காட்டக்கூடாதா’’

“மாலை நடனத்தின்போது அழைத்து வருகிறேன்’’ என்றாள் காதம்பரி.

சொன்னது போல அன்று மாதங்கியின் நடனத்தைக் காணுவதற்காக அவனை வரவேற்புக்கூடத்திற்கு அழைத்து வந்தாள். குலாபி மாளிகையில் இருந்த அத்தனை பெண்களும் அப்போதுதான் அந்த ஆளைப் பார்த்தார்கள். சராசரியைவிட குறைவான உயரம். கறுத்த உடம்பு. விடைத்த காதுகள். போதையேறிய கண்கள். இவன்தானா அந்த அழகன்? எனக் கேலி செய்தார்கள்.

காதம்பரி மட்டும் அவனுடன் கைகளைப் பற்றியபடியே கூடவே அலைந்துகொண்டிருந்தாள். அந்த மனிதன் நாள் முழுவதும் குடித்துக் கொண்டேயிருந்தான். அகோரப்பசியில் கிடைத்ததை எல்லாம் தின்றான். மது கிடைக்காத நேரத்தில் அவளை கண்டபடி திட்டினான், பகலில் அவளை நிர்வாணக் கோலத்தில் படுக்க வைத்து ஓவியங்கள் வரைந்து கொண்டிருந்தான். சில நாட்கள் பாதி வரைந்த ஓவியத்தைக் கிழித்து எறிந்தான். ஆனால், போதையின் உச்சத்தில் அவளைப் புகழ்ந்து சொல்வதை நிறுத்தவேயில்லை. சில வேளைகளில் காதம்பரி உறங்கியபோது அவன் ரகசியமாக அந்த வீட்டில் இருந்த வேறு பெண்களின் அறைக்குப் போய் படுத்து உறங்கினான். சில பெண்களை அவன் ஓவியம் வரைந்து தந்ததும் நடந்தேறியது. காதம்பரிக்கு இதைப் பற்றித் தெரிந்து அவனுடன் சண்டையிட்டபோது நியோகி சொன்னான்.

“அழகாக கோவித்துக்கொள்கிறாய். இந்த உதடுகள் எத்தனை வேகமாகத் துடிக்கின்றன?’’

“நீ என்னை ஏமாற்றிவிடலாம் என நினைக்காதே, உன்னைக் கொன்றுவிடுவேன்’’ என காதம்பரி கத்தினாள்.

“மது கிடைக்காதபோதுதான் வேறு பெண்ணைத் தேடிப் போவேன். நீ மதுவை வாங்கிக் கொடு. அல்லது குலாபி அறையில் இருந்து திருடிக் கொண்டுவந்து கொடு.’’

அவனுக்காக காதம்பரி குலாபி அறையில் இருந்த காபூல் மதுவைத் திருடி வந்து கொடுத்தாள்.

பின்பு ஒரு நாள் அவன் சொன்னான்,

“நான் உன்னை விட்டுப் போகப்போகிறேன். எனக்கு இங்கே இருக்கப் பிடிக்கவில்லை. இது சிறைச்சாலையைப் போலிருக்கிறது.’’

“உனக்கு என்ன வேண்டும் என்று சொல். நான் செய்து தருகிறேன்.’’

“குலாபியை நான் ஒரு ஓவியம் வரைய வேண்டும். அதற்கு ஒத்துக்கொள்ளச் சொல்.’’

“குலாபி நிச்சயம் எனக்காக ஒத்துக்கொள்வாள்.’’

“அவளை நிர்வாணமாக வரைய வேண்டும். அதற்கு அவள் ஒத்துக்கொள்ள வேண்டும்.’’

“இல்லை, அது முடியாது, குலாபி ஒருபோதும் அதற்கு ஒத்துக் கொள்ள மாட்டாள்.’’

“அப்படியானால் இன்றிரவே நான் கிளம்பிப் போய்விடுவேன்.’’

“போகாதே, நீ இல்லாவிட்டால் நான் செத்துப் போய்விடுவேன்.’’

“செத்துப்போ. அதை பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால், நான் குலாபியை ஒருமுறை ஓவியம் வரைய வேண்டும். அது சாத்தியம் ஆகாவிட்டால் இந்த நகரை விட்டே போய்விடுவேன்.’’

“நான் ஏற்பாடு செய்கிறேன், காத்திரு’’ என்றாள் காதம்பரி.

அடுத்த நாள் குலாபியின் அறைக்குப் போன காதம்பரி அவளது கால்களைப் பிடித்துக் கண்ணீர்விட்டு அழுதபடியே நியோகியின் கோரிக்கையைச் சொன்னாள்.

ஆத்திரம் அடைந்த குலாபி அந்தப் பைத்தியக்காரனை நானே துரத்திவிடுகிறேன் எனக் கத்தினாள்.

“குலாபி, ஓவியம்தானே வரையப்போகிறான். நிர்வாணமாக இருப்பது உனக்கு ஒன்றும் புதிதில்லையே. எனக்காக ஒரேயொரு முறை அனுமதி கொடு.’’

“முடியவே முடியாது. அந்தப் பைத்தியக்காரன்தான் வேண்டும் என்றால் நீயும் அவனுடன் கிளம்பிப் போய்விடு.’’

காதம்பரிக்கு என்ன செய்வது எனப்புரியவில்லை. அவள் பழம் நறுக்கும் கத்தியை எடுத்து தனது குரல்வளையில் வைத்துக்கொண்டு சொன்னாள்.

“இப்போதே நான் செத்துப் போய்விடுகிறேன்.’’

குலாபி அவளது கையிலிருந்த கத்தியைப் பிடுங்கி எறிந்துவிட்டு சொன்னாள்.

“பகலில் என்னால் நிர்வாணமாக இருக்க இயலாது, இரவில் அவனை ஓவியம் வரைய வரச்சொல்.’’

“நன்றி குலாபி, இரண்டே நாட்களில் அவன் ஓவியம் வரைந்து விடுவான்’’

காதம்பரி இந்த விஷயத்தை நியோகியிடம் சொன்னபோது அவன் சந்தோஷத்தில் திளைத்தவனைப் போல சொன்னான்.

“காதம்பரி நீ இளவெயிலைப்போல அழகானவள். பனியைப் போல

மிருதுவானவள். வெல்லக்கட்டியைப் போல உன்னைக் கடித்துத் தின்றுவிட ஆசையாக இருக்கிறது.”

“இந்தப் புகழ்ச்சிகளைக் கேட்டு அலுத்துப் போய்விட்டது,

நீ என்னை ஏமாற்றுகிறாய்.”

“எல்லா ஆண்களும் பெண்களை ஏமாற்றத்தானே செய்கிறார்கள்.’’

“நீ மோசக்காரன். எனது பலவீனத்தைப் பயன்படுத்திக் கொள்கிறாய்.’’

“பெண்களிடம் கற்ற வித்தைதான் அது.”

“இரண்டே இரவுகள் குலாபி படம் வரைய ஒத்துக் கொண்டிருக்கிறாள்.’’

“அது போதும். ஆனால், அந்த அறைக்குள் நான் படம் வரைந்து முடியும் வரை யாரும் வரக்கூடாது. குறிப்பாக நீ அந்த அறைப்பக்கமே வரக்கூடாது.’’

‘‘ஓவியம் தானே வரையப்போகிறாய்?”

“காற்று வேகமாக அடித்தால்கூட என் கவனம் சிதறிப்போய்விடும், அதனால்தான் சொல்கிறேன்.”

“ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், குலாபியை ஓவியம் வரைந்த மறுநாள் நீ என்னைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும்.”

“நிச்சயம். அதற்கான ஏற்பாடுகளை நீ இப்போதே செய்ய ஆரம்பித்து விடலாம்.”

•••

தூமகேதுவிற்கு நடனப்பெண்களின் மனதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. திடீரென அதிகப் பாசம் காட்டினர். அதிகம் கோவித்துக்கொண்டார்கள். பசிக்கு சாப்பாடு கிடைக்கிறதே என தூமகேது அங்கே வேலையில் இருந்தான்.

குலாபி தன் அறைக்குள் வந்த அந்த ஆளை முறைத்துப் பார்த்த படியே கேட்டாள்.

“விளக்குகளை ஏன் இடம் மாற்றி வைக்கிறாய்?”

“எனக்கான வெளிச்சத்தை உருவாக்குகிறேன்.”

“காதம்பரிக்காக மட்டுமே இதற்கு சம்மதிக்கிறேன். நீ ஒரு அடி என் படுக்கையை நோக்கி வரக்கூடாது புரிகிறதா?”

“கண் பார்த்து கை வரையப் போகிறது. நான் எதற்கு உங்கள் அருகில் வரப்போகிறேன்?”

குலாபி தன் உடைகளைக் களைந்தாள். விளக்கின் வெளிச்சத்தைத் தூமகேது அதிகப்படுத்தினான்.

அவள் மீது மஞ்சள்நிற வெளிச்சம் படர்ந்தது. பிறந்தமேனியான அந்த உடலை வெறித்துப் பார்த்தபடியே இருந்தான். பிறகு தனக்குத் தானே சொல்லிக்கொண்டான்.

“சந்தனப்பதுமை போன்ற உடல். அற்புதம், பேரழகு.”

விடுவிடுவென அவன் இடது கையால் தூரிகை கொண்டு வண்ணங்களைத் தோய்த்து வரையத் துவங்கினான். அவளுக்கு உறக்கம் கண்களைக் கவ்வியது. அவன் மௌனமாக வரைந்து கொண்டேயிருந்தான். சில வேளைகளில் படம் வரைவதை நிறுத்திக்கொண்டு கொஞ்சம் குடித்தான். சில வேளைகளில் அவள் உடலை வெறித்துப் பார்த்தபடியே நிறங்களை சபித்துக் கொண்டிருந்தான், விடியும் தருவாயில் அவள் சோர்ந்துபோய் கேட்டாள்.

“படம் வரைந்து முடிந்துவிட்டதா?”

நாளை வரையலாம் என்றபடியே அவன் போதையின் உச்சத்தில் தளர்ந்துபோய் தனது அறைக்குச் சென்றான். காதம்பரி அவன் வரைந்த ஓவியத்தைக் காண விரும்பினாள். ஆனால், அதை எங்கே வைத்திருக்கிறான் என அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை.

மறுநாள் காலை குலாபியின் அறைக்குப் போனபோது அவள் ஆழ்ந்து உறங்கிக்கொண்டிருந்தாள். அன்று மதியம் எழுந்து கொண்ட குலாபி குளித்து ஈரத்தலையை உலர்த்திக்கொண்டிருந்த போது காதம்பரி வந்திருந்தாள்.

குலாபி சொன்னாள்.

“அவன் பார்வை என் நரம்புகளை ஊடுருவுகிறது. நெருப்பில் இறைச்சியை வாட்டுவதைப் போல பார்வையாலே என்னை வாட்டுகிறான்.”

“அவனால் வேறு தொந்தரவு ஏதும் இல்லையே?”

“இல்லை. ஓவியர்களின் கண்களுக்கு உலகம் வேறுவிதமாகத்தான் தெரியும் என்கிறார்கள். அவன் இடக்கைப் பழக்கம் கொண்டவனா’’

“ஆமாம், என்னையும் அப்படித்தான் நாட்கணக்கில் வரைந்து கொண்டிருந்தான். எனக்கு எரிச்சலாகத்தான் இருந்தது. ஆனால், முடிவில் அந்த ஓவியத்தின் அழகிற்கு நிகரேயில்லை.”

“அப்படி என்னதான் வரைகிறான் எனப் பார்க்கலாம்” எனச் சிரித்தாள் குலாபி.

இரண்டாம் நாளும் நியோகி குடித்துக்கொண்டேயிருந்தான். இடை இடையில் படம் வரைந்தான். கைவிளக்கை அவள் உடல் அருகே கொண்டுவந்து தொலைத்த பொருளைத் தேடுவதைப்போல மேலும் கீழுமாக எதையோ தேடினான். பிறகு பைத்தியம் பிடித்தவன் போலப்

புலம்பியபடியே ஆவேசமாகப் படம் வரைய ஆரம்பித்தான்.

விடியும் தருவாயில் தனது தூரிகையை வீசி எறிந்துவிட்டு குலாபியிடம் சொன்னான்.

“என்னைக் கொன்றுவிடு. பேரழகியின் கையால் சாகவே விரும்புகிறேன்.’’

குலாபி எழுந்து வந்து நியோகி வரைந்த ஓவியத்தைப் பார்த்தாள், ஒளிரும் கண்களும் பீறிடும் அழகும் கொண்ட அவளை பட்டாடை களுடன் இரண்டு சிறகுகள் விரித்து நிற்பது போல வரைந்திருந்தான். அந்த வியப்பிலிருந்து அவளால் மீளமுடியவில்லை, இத்தனை அலங்காரங்களுடன் தன்னை வரைவதற்கு எதற்காக பிறந்தமேனியாகக் காட்சி தரச் சொன்னான்.

அதற்கான பதிலை அவன் சொன்னான்.

“குலாபி, என் ஓவியத்திற்குப் பரிசாக ஒரேயொரு முத்தம் தந்துவிடு, அது போதும்.”

குலாபி அவனைக் கட்டிக்கொண்டாள். அழுத்தி அவன் உதடுகளில் முத்தமிட்டாள். சூடான அவனது மூச்சு தனது மார்பில் படுவதை உணர்ந்தாள். விடிகாலையில் காதம்பரி வந்து குலாபியின் அறைக் கதவைத் தட்டியபோது அது சாத்தப்பட்டிருந்தது. அவள் ஓங்கித் தட்டிக் கொண்டேயிருந்தாள். அறையின் பின்கதவு திறந்திருப்பதாகப் பணிப்பெண் சொன்னபோது அந்த வாசல்வழியாக உள்ளே போனாள் காதம்பரி.

சர்வ அலங்காரமான குலாபியை வரைந்த ஓவியம் அங்கேயிருந்தது. குலாபியையும் காணவில்லை. நியோகியையும் காணவில்லை. அவள் ஆத்திரம் பொங்க குலாபி எங்கே எனக் கேட்டாள்.

அதற்கு ஒரு பணிப்பெண் விடிகாலையில் குலாபியும் அந்த ஓவியனும் ஓடிப்போய்விட்டார்கள் என்றாள்..

காதம்பரியால் அந்தச் செய்தியைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை, அவள் குலாபியின் அறைக்குத் வைத்தாள். தனது ஓவியங்களைக் கொண்டுவந்து தீயில் போட்டாள். ஆற்றாமையில் அழுது புலம்பியபடி இருந்த காதம்பரி தன்னை ஏமாற்றிய நியோகியைக் கொல்ல விரும்பினாள். ஆனால், அவர்கள் இந்த நேரம் எங்கே போயிருப்பார்களோ, எப்படி தேடிப்போவதோ எனப் புரியாமல் குழம்பிப்போய் குறுங் கத்தியால் தன் வயிற்றைத் தானே கீறிக்கொண்டு அவள் உயிரை விட்டாள்.

காதம்பரியின் மரணத்துடன் குலாபி மாளிகை மூடப்பட்டது. குலாபியை அழைத்துக்கொண்டுபோன நியோகி அவளை ஒரு அராபிய வணிகனிடம் விற்றுவிட்டு உத்கலாவிற்குப் போய்விட்டான்

என்றார்கள்.

குலாபி ஓடிப்போன பிறகு அங்கே இருந்தவர்கள் திசைக்கொரு வராகப் பிரிந்து போனார்கள். தூமகேதுவும் வழியில்லாமல் வெளியேறிப்போனான். அவனால் பெண்களின் விசித்திர மனதைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை. ஏன் இப்படி தன்னை அழித்துக் கொள்கிறார்கள். காதல் அத்தனை வலிமையானதா என்ன? ஒரு குடிகாரனிடம் அப்படி என்ன பிரேமை. எதைக் கண்டு மனதை பறிகொடுக்கிறார்கள்.

நளாவிடம் அவன் ஒருமுறைகூட ஆசை வார்த்தைகள் பேசியதில்லை. நளாவின் உடலில் எப்போதும் சூடவாசனையடிக்கும். சூடத்தை பச்சிலைகளுடன் சேர்த்து காய்ச்சிய தைலத்தை இடுப்பு வலிக்காகத் தேய்த்துக்கொண்டிருப்பாள். வற்றிப்போன ஸ்தனங்கள். மெலிந்த உடல். அதில் என்ன கவர்ச்சியிருக்கிறது. நடனப் பெண்கள் அப்படியில்லை. அழகும் வாசனையும் கொண்டவர்கள். ஆனால், அன்பிற்காக ஏங்கியவர்கள்.

நடன விடுதியில் இருந்த நாட்களில் தன்னை ஒரு பெண்ணாகவே தூமகேது உணர்ந்தான். அது குடும்பத்தின்மீது மேலும் நாட்டத்தை உருவாக்கியது. அந்த வேதனையை அவனால் தாங்க முடியவில்லை.

கங்கை கரையில்

தூமகேது கங்கையின் கரைகளுக்கு வந்து சேர்ந்திருந்தான். எங்கும் யாத்ரீகர்களின் கூட்டம். காவி உடை அணிந்த துறவிகள். படித்துறை தெரியாத முகங்கள். இறந்த உடல்களை எரிப்பதற்காகக் கொண்டுவந்தவர்கள் படித்துறையில் காத்துக்கொண்டிருந்தார்கள்.

கங்கையில் புதிய சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. ஆற்றில் குளிக்கவும், பிணம் எரிக்கவும் வரி விதிக்கப்பட்டிருந்தது. அந்த வரிகளை பாதுஷா ஔரங்கசீப் நீக்கிவிட்டார் எனச் சிலரும், இந்துகள் கட்டாயம் இந்த வரியைச் செலுத்தியாக வேண்டும் எனச் சிலரும் சொன்னார்கள்.

இறந்துபோன ஒரு விவசாயி உடலை கங்கைக் கரையில் எரித்து சாம்பலைக் கரைக்க வேண்டும் என்பது உறவினர்கள் காத்திருந்தார்கள்.

அந்த விவசாயின் மகன் தன் கையிருப்பில் இருந்த நாயணங்களை காரியஸ்தர் முன்பாகக் கொடுத்து இவற்றை வைத்துக்கொண்டு தந்தையை எரியூட்டி சாம்பல் கரைக்க அனுமதிக்க வேண்டும் என்றான்.

ஆனால், காரியஸ்தர் அப்படி தன்னால் அனுமதிக்க முடியாது. இதற்கென வரிவசூல் செய்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் கடந்த சில நாட்களாக உடல்நலமற்று வீட்டில் இருப்பதால் எவருக்கும் கங்கை கரையில் சடலத்தை எரிக்க அனுமதியில்லை என்றார்.

அந்த வரிவசூல் செய்பவரின் பெயரைக் கேட்டான் விவசாயியின் மகன்.

“அஜிமுக்” என்றான் அந்தக் காரியஸ்தன்.

“இறந்த உடலை வைத்திருந்தவர்கள் நாம் யாரையும் கேட்கத்தேவையில்லை. கங்கை நமது தாய். அவள் கருணைமிக்கவள். அவள் இந்த உடலை ஏற்றுக்கொள்வாள். வாருங்கள் அப்படியே மிதக்கவிடுவோம்” என்றனர்.

விவசாயிகளில் ஒருவன் தன்வசமிருந்த கூலியைக் கொடுத்து ஒரு படகைப் பேரம்பேசி முடித்தான்.

இறந்த உடலைப் படகில் ஏற்றிக்கொண்டு கங்கையினுள் கொண்டு போனார்கள். இதற்குள் விஷயம் படித்துறைக் காவலர்களுக்குத் தெரிந்து போனது.

அவர்கள் உடலை கங்கையில் வீசுவதற்கு முன்பு தடுக்க வேண்டும் என வேகமாகப் படகில் பின்தொடர்ந்தார்கள்.

நடு ஆற்றில் போய் நின்றவுடன் சாமந்தி மாலைகளை ஆற்றில் எறிந்துவிட்டு துணியில் சுற்றிய அந்தக் கிழவரின் உடலை அவர்கள்

கங்கையில் விட்டு வணங்கினார்கள்.

சவம் மூழ்குவதற்காக பெரிய கல் ஒன்றும் உடலோடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்தது. ஆகவே அந்த உடல் வேகமாக கங்கையினுள் சென்று மறைந்தது.

படகில் கரையை நோக்கி வந்த அத்தனை பேரையும் காவலர்கள் பிடித்து நிறுத்தி படித்துறையிலே சவுக்கடிகள் கொடுத்தார்கள். வலிதாங்கமுடியாமல் விவசாயிகள் ஓலமிட்ட போதும் அடிப்பதை நிறுத்தவில்லை.

கிராமத்து மனிதர்கள் இப்படி அடிபடுவதைக் காணச் சகிக்காமல் அங்கிருந்த கூலிகளும் படகோட்டிகளும் படித்துறைக் காவலர்களை பாய்ந்து தடுத்ததோடு அவர்களை பதிலுக்கு அடித்து கங்கையில் வீசி எறிந்துவிட்டார்கள்.

காவலர்கள் தாக்கப்பட்ட விஷயம் நகரில் பரபரப்பான பின்விளைவை உண்டுபண்ணியது. இதற்கு பதில் தர வேண்டும் என முடிவு செய்த திவான் உபைதூர் உடனடியாக தனது ஆட்களை அனுப்பி கங்கைக் கரையில் தென்படும் விவசாயிகள் அத்தனை பேரையும் அடித்து உதைத்து இழுத்துவரும்படியாக ஆணையிட்டார்.

அன்றிரவுக்குள் நூற்றுக்கணக்கான மனிதர்கள் அடித்து இழுத்து வரப்பட்டார்கள். கங்கையில் எரிப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட சடலங்கள் சூறையாடப்பட்டன. தூமகேதுவிற்கும் அடி விழுந்தது, அவன் பயத்தோடு தப்பியோடினான்.

படித்துறைகளில் ஆள்நடமாட்டமேயில்லை. தங்களை காரணமின்றித் தாக்குகிறார்கள் என ஆத்திரப்பட்ட விவசாயிகள் கம்புகள், தடிகள், கற்கள் கொண்டு தாக்க ஆரம்பித்தார்கள். ஆண், பெண், வயதானவர் குழந்தை என பேதமில்லாமல் அவர்கள் திவான் ஆட்களால் தாக்கப்பட்டார்கள்.

மூன்று நாட்கள் கங்கைக் கரை ஸ்தம்பித்துப்போனது. அந்தத் தாக்குதலில் காயம்பட்டவர்கள் நூற்றுக்கும் மேல். பதினாறு பேர் இறந்துபோனார்கள். தகவல் பாதுஷா வரை சென்றது. உடனடி தீர்வு அறிவிக்கப்பட்டது. கங்கையில் குளிப்பதற்கும் அஸ்தி கரைப்ப தற்கும் வரி நீக்கப்பட்டது என்ற செய்தி பகிரங்கமாக முரசு அடித்து அறிவிக்கப்பட்டது. அத்தோடு அடுப்பு எரிக்கப் பயன்படும் வறட்டிகளின் மீது போடப்பட்ட வரி, பால்வரி, எண்ணெய் வரி, சக்கரை வரி, கரும்பு பழங்கள் மீதான வரி, பட்டுத் துணி, ஆட்டு இறைச்சி மீதான வரி போன்றவையும் நீக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டன.

நீக்கப்பட்ட வரிகளை எவரேனும் வசூலித்தால் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது. அதன்பிறகே கங்கையில் உடல்கள் வரியின்றி எரியூட்டப்பட்டன.

தூமகேது அதற்குள் கங்கையை விட்டு நீங்கியிருந்தான்.

சம்புவின் கடற்பயணம்

சம்பு ஒரு கடற்பயணத்தை மேற்கொள்வது என முடிவு செய்தான். யமுனை நதியில் இறந்தவனின் உடல் மிதப்பதைப் பார்த்துக் கொண்டு எத்தனை நாள் மனத்துயரத்திலே ஒடுங்கிகிடப்பது. ஆகவே போர்த்துகீசிய வணிகன் ஒருவன் கேட்டுக்கொண்டபடியே நான்கு யானைகளைக் காட்டில் பிடித்து அவற்றை லிஸ்பன் நகருக்குக் கொண்டுபோவது என சம்பு முடிவு செய்துகொண்டான். யானைகளின் எடைக்கு பொன் தருவதாக போர்த்துகீசிய வணிகன் ஒப்பந்தம் செய்திருந்தான். ஆகவே இந்த வணிகத்தில் தான் பெரும் பொருளீட்டிவிட முடியும் என சம்பு நம்பினான்.

இதற்காக காட்டு யானைகளைக் குழிபறித்துப் பிடித்து வர ஏற்பாடு செய்திருந்தான். நாற்பது வேட்டைக்காரர்கள் ஒன்று சேர்ந்து யானைகளைப் பிடித்து வந்தார்கள்.

சம்பு தனது முதற் கடற்பயணத்தைத் துவக்கிய போது காற்றடி காலமாக இருந்தது. கடலில் அவன் இதுவரை சென்றதில்லை. ஆகவே பயணம் துவங்கிய சில நாட்கள் மிக சந்தோஷமாக இருந்தான். நீலக்கடலும் இதமான காற்றும் மதுவும் உணவும் அவனை சந்தோஷத்தில் ஆழ்த்தின.

அந்தப் பயணத்தில் அவனோடு நாற்பத்தியெட்டு பணியாளர்களும், பனிரெண்டு காவல்காரர்களும், இரண்டு மாலுமிகளும் நான்கு சமையற்காரர்களும், இரண்டு இசைக்கலைஞர்களும், ஒரு ஆருடம் சொல்பவனும், இரண்டு வானியல் வழிகாட்டிகளும் உடனிருந்தார்கள்.

கப்பல் கிளம்பிய ஐந்தாம் நாள் சம்பு குடித்துக் கொண்டிருக்கும்போது திடீரென ஆருடம் சொல்லும் அடகாவை அழைத்து “எனது அதிர்ஷ்டம் எப்படியிருக்கிறது?” எனக்கேட்டான்.

அடகா மணற்கடிகாரம் போன்ற ஒன்றைக் குலுக்கி தலைகீழாக வைத்தான். விழுந்துகொண்டிருக்கும் மணல் ஏதோ ரகசியம் சொல்வது போல காதை நெருக்கமாக வைத்துக் கேட்டுவிட்டுச் சொன்னான்,

“இந்தப் பயணம் பாதியில் முடிந்து போகும். நாம் எவரும் கரைசேர முடியாது. யானைகள் கடலில் மிதப்பதை நீங்கள் காண்பீர்கள். இதுதான் விதி.”

சம்பு கோப்பையில் இருந்த மதுவை முழுவதும் விழுங்கிவிட்டு சொன்னான்.

“எனது விதியை நான் பார்த்துக்கொள்கிறேன். இவன் விதியைப் பற்றிச் சொல்.’’

எனத் தன் முன்னே உணவு பரிமாறுவதற்காக நின்றிருந்த நாசர் என்ற கிழட்டு மனிதனைப் பார்த்துச் சொன்னான்.

“மூன்று தினங்களுக்குள் இவன் கடலில் விழுந்து மீன்களுக்கு உணவாகிப் போவான்'' என்றான் அடகா.

நாசர் பயந்துபோன கண்களுடன் சொன்னான்.

“உளறாதே. நான் கப்பலின் சமையற்கூடத்தை விட்டு வெளியே வருவதேயில்லை. என்னை எப்படி கடல் மீன்கள் சாப்பிட முடியும்?''

“எனக்குத் தெரியாது. ஆனால், அப்படித்தான் உன் விதி எழுதப் பட்டிருக்கிறது.''

அந்தக் கிழவன் எரிச்சலுடன் சொன்னான்.

“இவன் ஒரு சைத்தான். கப்பலில் இவனை உடன் அழைத்து வந்தது தவறு.”

சம்பு பரிகாசத்துடன் சொன்னான்.

“ஆருடங்கள் எல்லாமும் பலித்துவிடும் என்றால் மனிதர்கள் எந்த சாதனையும் செய்திருக்க முடியாது. எல்லா ஆருடங்களையும் நான் பொய்யாக்குவேன். உன் மீது கோபமில்லை. நீ போகலாம்.”

அன்றிரவு முழுவதும் சம்பு குடித்துக்கொண்டேயிருந்தான்.

விடிகாலையில் அவன் எழுந்து கடற்பரப்பிற்கு வந்தபோது ஒரு அலை உயரமாக எழுந்து ஆடிக்கொண்டிருந்தது. அது யானை யைப் போலவே தோன்றியது. சம்பு அந்த அலையை ரசித்தபடியே காலை வெயிலின் ரம்மியத்தை ரசித்துக்கொண்டிருந்தான்.

ஆனால், நாசரால் அன்றிரவு உறங்கமுடியவில்லை.

“தன் விதி மீன்களுக்கு உணவாக முடிந்துவிடுமோ” என அவன் அச்சம் கொள்ளத்துவங்கினான்.

கப்பலின் சமையல் அறையை விட்டு எந்தக் காரணத்தை முன்னிட்டும் வெளியே போகக் கூடாது என முடிவு செய்துகொண்டான். அதை விடவும் இந்த சைத்தானை எப்படியாவது கொன்று கடலில் வீசி எறிந்துவிட வேண்டும். கண்முன்பாக தனது சாவு எப்படி நடக்கும் எனச் சொல்லிவிட்டானே என ஆத்திரப்பட்டான்.

இரண்டு நாட்களுக்கு நாசர் தன் அறையை விட்டு கப்பலின் மேல்தளத்திற்கு வரவேயில்லை. ஆனால், மூன்றாம் நாளின் இரவு அவன் உறக்கத்தில் நடந்து வெளியே வந்தான். அவனுக்குத் தான் கடலின் மேல்தளத்திற்கு நடந்து கொண்டிருக்கிறோம் என்ற தன் உணர்வுகூட ஏற்படவில்லை.

இரவில் கடல் கொந்தளித்துக் கொண்டிருந்தது. கப்பலின் மேல்

தளத்தில் பாதுகாப்பிற்கு இருந்தவர்கள்கூட உறங்கியிருந்தார்கள். தன் மீது வீசும் குளிர் காற்றையும், இருண்ட ஆகாயத்தையும்கூட நாசர் உணரவில்லை. அவன் கப்பலின் விளம்பில் போய் நின்றபடியே கடலைப் பார்த்துக்கொண்டேயிருந்தான். ஏதோவொரு விசை அவனை இழுத்துக்கொண்டு போவது போலிருந்தது. அவன் தன்னை அறியாமல் கடலில் தாவிக் குதித்தான். அவன் கடலில் குதிக்கும் சப்தம் கேட்டு பாதுகாவலர்களில் ஒருவன் எழுந்து விளக்கைத் தூண்டிவிட்டுப் பார்த்தபோது நாசரை அலை இழுத்துக்கொண்டு போய்க்கொண்டிருந்தது. அவன் அலறிக்கொண்டிருந்தான்.

எச்சரிக்கை மணியை எழுப்பி கடலில் இருந்தவர்களை பாதுகாவலன் எழுப்புவதற்குள் நாசர் தண்ணீருக்குள் மூழ்கியிருந்தான். அவன் உடலை மீன்கள் தின்னத்துவங்கியிருந்தன.

பாதித் தூக்கத்தில் எழுப்பி வரப்பட்ட அடகா தான் ஆருடம் சொன்னது போலவே நாசர் கடலில் விழுந்து இறந்து போனான் என்பதை அறிந்தபோது வருத்தம் அடைந்தான். ஆனால், சம்பு இந்தச் சம்பவத்தால் திடுக்கிட்டுப்போனான்.

“அடகா சொன்ன யாவும் நடக்கப்போகிறதா?”

“தன் விதி கடலில் முடிந்துவிடப்போகிறதா?”

“அறிந்தேதான் கடைசி யாத்திரையை மேற்கொள்கிறேனா?”

அவனுக்குக் குழப்பமாக இருந்தது. அவன் அடகாவை தன் அறைக்கு அழைத்து மறுபடியும் கேட்டான்.

“என் அதிர்ஷ்டம் எப்படியிருக்கிறது.”

அடகா அந்த இரவிலும் தனது ஆருடக்கடிகையை எடுத்து வந்து மணலைத் தலைகீழாகக் கொட்ட வைத்தான். அந்த மணல் காலத்தின் ரகசியத்தை மெல்லிய குரலில் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்டான். பிறகு சந்தோஷமான குரலில் சொன்னான்.

“இதுவரை மனிதர்கள் யாரும் பார்த்திராத விநோதம் ஒன்றை நாம் காணப்போகிறோம். எந்தக் கடலோடிக்கும் கிடைக்காத அபூர்வ காட்சி நம் முன்னே தோன்றப்போகிறது.”

“எப்போது?'' எனக் கேட்டான் சம்பு.

“நாள், நேரம் தெரியவில்லை. ஆனால், அது ஒரு அபூர்வமான நிகழ்வு.”

அப்படி என்ன காட்சியைத்தான் காணப்போகிறோம். அதில் என்ன சந்தோஷம் கிடைத்துவிடப்போகிறது? என சம்பு யோசித்துக் கொண்டிருந்தான்.

அதன் பிந்திய நாட்களில் அடகா சொன்னதுபோல கடலில் எந்தக்

காட்சியும் காணமுடியவில்லை. குளிர்க்காற்றும் ஒளிரும் நட்சத்திரங்களும் பேரிரைச்சலுடன் வீசும் அலையைத் தவிர கடலில் வேறு ஒரு மாயமும் நிகழவில்லை.

ஒன்பது நாட்கள் கப்பல் கடலில் சீராகச் சென்று கொண்டேயிருந்தது. பத்தாம் நாள் பின்னிரவில் பாய்மரத்தில் இருந்தவன் உரத்த குரலில் சொன்னான்,

“நட்சத்திரங்கள் தரையிறங்கிக் கொண்டிருக்கின்றன. கடலே தெரியவில்லை.”

அந்தச் செய்தியைக் கேட்டதும் கப்பலில் இருந்த அத்தனை பேரும் விழித்துக்கொண்டார்கள். எங்கிருந்தோ ஒரு மணிச்சப்தம் கேட்கத் துவங்கியது, இனிமையான சங்கீதம்.

சம்பு வானைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

ஆயிரக்கணக்கில் நட்சத்திரங்கள். இவ்வளவு நட்சத்திரங்கள் எப்படி வானில் முளைத்தன. பார்த்துக்கொண்டிருந்தபோதே நட்சத்திரங்கள் மழை பெய்வதைப் போல வானிலிருந்து உதிரத்துவங்கின. வெளிச்சம், நிகரற்ற வெளிச்சம், எங்கும் நட்சத்திரங்கள் உதிர்ந்துகொண்டேயிருந்தன. ஒன்றோடு ஒன்று உரசியும் தொட்டும் விளையாடும் சிறார்களைப் போன்றிருந்தது அந்தக் காட்சி.

திடீரென கடல் உயரமாகிக்கொண்டே போனது போலிருந்தது, வானமும் கடலும் தொட்டுவிடப்போகின்றதா. வானிலிருந்த தேவதைகள் இந்த விளையாட்டினை ஆடுகிறார்களா, இல்லை கடவுளேதான் நட்சத்திரங்களை வீசி விளையாடுகிறாரா?

ஆச்சரியம். ஆனால், உண்மை. கடலில் இருந்த அத்தனை மீன்களும் நீர்ப்பரப்பிற்கு வந்து நட்சத்திரங்கள் விழுவதைக் கண்டு ஆரவாரத்துடன் குதித்து ஆடிக்கொண்டிருந்தன. கப்பலைச் சுற்றிலும் நான்குபுறமும் நட்சத்திரங்கள் விழுந்துகொண்டேயிருந்தன. கடலில் விழுந்த நட்சத்திரங்கள் மீன்களைப் போலத் துள்ளின. இது மாய இரவு. வானும் கடலும் கூடுகின்றன.

வானிலிருந்த அத்தனை நட்சத்திரங்களும் ஒன்று சேர்ந்துவிட்டன. அதன் வெளிச்சம் அபூர்வமானதாக, அற்புதமானதாக இருந்தது. என்னசொல்வது? விந்தை, மனிதர்கள் கண்டிராத மகத்தான விந்தை.

கடல் அலைகள் அடங்கியிருந்தன. வானம் கடலின் உதட்டைக் கவ்விக்கொண்டு அழுத்தி முத்தமிட்டுக்கொண்டிருப்பது போலிருந்தது. சம்பு சொன்னான்.

“இந்த அதிசயத்தைக் காண நான் பெரும் அதிர்ஷ்டம் செய்திருக்க வேண்டும்.”

அடகா வானை நோக்கி மண்டியிட்டு வணங்கியபடியே சொன்னான்.

“கடவுளின் விந்தையை மனிதர்களால் அறிந்துகொள்ள முடியாது. நட்சத்திரங்கள் பறவைகளைப் போல உருமாறிவிட்டன பாருங்கள். அதோ நட்சத்திரங்கள் பறக்கின்றன. இல்லை பூக்களைப் போல பூத்துச் சொரிகின்றன. எப்படிச் சொல்வேன் இந்த விந்தையை? கடவுள் தன் கையிலிருந்த அத்தனை நட்சத்திரங்களையும் கடலில் விதைத்துக்கொண்டிருக்கிறார். அதோ பாருங்கள். சுறா, அதன் மீது எத்தனை நட்சத்திரங்கள். சுறா நட்சத்திரங்களை அணிந்து கொண்டு அசைந்து கொண்டிருக்கிறது. நட்சத்திரங்கள் குரங்கைப் போலத் தாவுகின்றன. இளம்பெண்ணின் கண்களைப் போலச் சிமிட்டி அழைக்கின்றன.”

அவன் விந்தையில் கிறங்கிப் புலம்பிக்கொண்டேயிருந்தான். சம்பு கப்பலில் விழுந்த நட்சத்திரங்களை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். பறவையின் இறகைப் போன்றதுதான் நட்சத்திரங்களுமா? ஒவ்வொரு நட்சத்திரமும் ஒரு இறகா? அவன் தன் கையை நீட்டி ஒரு நட்சத்திரத்தின் ஒளியைப் பிடித்தான். அவன் கையில் அது வெண்முத்தைப் போல உருண்டது. வாழ்வில் முதன்முறையாக நட்சத்திரத்தைக் கையில் ஏந்தியிருக்கிறேன். இதை விட அதிர்ஷ்டம் வேறு என்ன வேண்டும்?

அவன் கையிலிருந்த அந்த வெண்முத்து கண்முன்னே மறைந்து போனது. மாயம். இது உண்மையில் கடவுளின் வேலைதானா? இல்லை ஜின்களின் வேலையா? அவனுக்கு குழப்பமாகவும் இருந்தது, கப்பல் பணியாளர்கள் ஒன்று சேர்ந்து கடவுளை வாழ்த்திப் பாட ஆரம்பித்தார்கள். சம்பு அவர்களுடன் சேர்ந்துபாடினான்.

திடீரென்று வானிலிருந்த வெளிச்சம் மங்கியது. விந்தை முடியப் போகிறதா என ஆதங்கத்துடன் வானை ஏறிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தான் சம்பு.

சம்புவால் அந்த இரவை மறக்கமுடியவில்லை. அவன் அந்த சந்தோஷத்திலே ஆழ்ந்து உறங்கினான். ஆனால், மறுநாள் கடல் கொந்தளிக்கத் துவங்கியது. சீறி ஊளையிடும் மிருகம்போல மூர்க்கம் கொண்ட கடலை வெறித்தபடியே சம்பு நின்றிருந்தான். அப்போது கடலின் தொலைவில் யமுனை நதியில் மிதந்த மனிதனின் பிணம் மிதந்துகொண்டிருந்தது. கண்ணைக் கசக்கிக்கொண்டு பார்த்தான். அதே பிணம்தான். ஆற்றிலிருந்து எப்படி கடலுக்கு வந்தது? அவன் ஒரு குத்தீட்டியை எடுத்து அதை நோக்கி எறிந்தான். ஈட்டி கடலில் பாய்ந்து மறைந்தது.

அன்று மாலை கடலின் கொந்தளிப்பு அதிகமாகி அது கப்பலைப் புரட்டிப் போடத்துவங்கியது. கப்பலில் இருந்த யானைகள் பலமாகச் சப்தமிட்டன. தங்கள் வாழ்க்கையை கடல் காவு கொள்ளப்போகிறது என அனைவரும் பயந்து அலறினார்கள்.

பெருங்கரம் ஒன்று கப்பலைத் தூக்கி எறிவதுபோல கடல் அலை ஒன்று சீறிக் கப்பலைப் புரட்டிப் போட்டது. யானைகள் தடுமாறி விழுந்தன. கப்பல் உடைந்து சிதறியது. யானைகள் கடலில் மிதக்கத் துவங்கின. கடலில் விழுந்த சம்பு பார்த்தான்.

அடகா சொன்னது நிஜம். யானைகள் கடலில் மிதக்கின்றன. தன் வாழ்க்கை முடியப்போகிறது.

யானையின் தும்பிக்கைகள் அலைகளை மீறி உயர்ந்து எழுந்தன. யானைகள் கடலில் தத்தளித்தன.

சூரியன் மறைந்துகொண்டிருந்த அந்த மாலை நேரத்தில் நடுக் கடலில் யானைகள் அலைகளால் இழுத்துச் செல்லப்படுவதும் எதிர்த்து நீந்த முயன்று தத்தளிப்பதையும் கண்டான்.

அவன் கொண்டுபோன வணிகப்பொருட்கள் கடலில் மிதந்து கொண்டிருந்தன. பணியாளர்களும் மாலுமிகளும் செத்து மிதந்தார்கள். ஒரு யானை கடலில் மிதந்து போய்க்கொண்டிருந்தது.

அதுதான் அவனது கடைசிக் காட்சி. பின்பு அவனும் இறந்து போனான். அந்த உடலும் தண்ணீரில் மிதக்கத் துவங்கியது.

எங்கோ யமுனை ஆற்றின் படித்துறையில் படகோட்டித் திரிந்த சம்பு அடையாளமற்ற ஒருவனாக கடலில் தனியே மிதந்து கொண்டிருந்தான். கடற்பறவைகளில் ஒன்று அவன் மீது வந்தமர்ந்து சப்தமிட்டது. கடல் கொந்தளிப்பு அடங்கி மௌனமாகியிருந்தது.

புரிந்துகொள்ள முடியாத வாழ்வின் புதிரை அடையாளப்படுத்துவது போல அந்த உடல் ஏழு நாட்களுக்குக் கடலில் மிதந்து கொண்டிருந்தது. பின்பு அது மீன்களுக்கு இரையானது.

மதுராவில் தூமகேது

ஔரங்கசீப்பிற்குப் பிறகு பாதுஷாவாக அரியணை ஏறிய ஷாஆலம் நான்கே மாதங்களில் இறந்து போனார். புதிய பாதுஷாவாக பகதுர் ஷா பதவி ஏற்றிருந்தார். தேசம் சிதறுண்டு போகத் துவங்கியிருந்தது. ஒருபுறம் கிழக்கிந்திய கம்பெனி கல்கத்தாவில் காலூன்றத் துவங்கியிருந்தார்கள். மறுபுறம் உள்நாட்டு குழப்பங்கள் அதிகமாகிக் கொண்டிருந்தன.

கலவரத்தால் மதுரா பற்றி எரிந்துகொண்டிருந்தது.

தூமகேது பயத்துடன் வீதியில்நின்றிருந்தான், அங்கே எப்படி வந்து சேர்ந்தான். ஏன் இந்த மனிதர்கள் ஒருவரை ஒருவர் வெட்டிக்கொண்டு சாகிறார்கள். எதுவும் அவனுக்குப் புரியவில்லை.

அவன் கையில் ஒரு வாள் இருந்தது.

அந்த வாள் அவன் கைக்கு எப்படி வந்தது எனத் தெரியவில்லை. யாரோ அவன் கையில் அதைத் திணித்துவிட்டுப் போயிருந்தார்கள்.

இரண்டு நாட்களின் முன்பாக மதுராவின் வெளியே பாதுஷாவின் இருபதாயிரம் பேர் கொண்ட படைப்பிரிவு வந்து சேர்ந்து முகாமிட்டிருந்தது. அவர்கள் வந்திருப்பதன் நோக்கமே கோவிலை இடிப்பதுதான் என மக்கள் பேசிக்கொண்டார்கள். ஆகவே ஆவேசத்துடன் பதில் தாக்குதலில் ஈடுபடத்துவங்கினார்கள்.

கலவரம் வெடித்தது.

எங்கே பார்த்தாலும் கொல்லுங்கள், கொல்லுங்கள் என்ற சப்தம் கேட்டுக்கொண்டிருந்தது. யார் யாரைக் கொல்கிறார்கள் எனத்தெரியவில்லை. வணிகவீதிகள் சூறையாடப்பட்டிருந்தன. வீடுகளுக்குள் புகுந்து காவலர்கள் பெண்களையும் குழந்தைகளையும் இழுத்துக் கொண்டுவந்து வெளியே போட்டு வெட்டினார்கள்.

ஒரு சிறுவன் தலை துண்டிக்கப்பட்டு உடல் மட்டும் தனியே துடித்துக்கொண்டிருந்தது. வீதிகள் ரத்தவெள்ளத்தில் மிதந்துகொண்டிருந்தன. கையில் மிகப்பெரிய வாள் ஒன்றை வைத்துக்கொண்டு தூமகேது நின்றிருந்தான்.

அப்போது ஒரு கிழவன் கையில் வாளோடு ஓடி வருவதைக் கண்டான். அந்தக் கிழவன் குதிரைலாயத்திற்குள் புகுந்து ஒளிந்து கொண்டிருந்த ஒரு பெண்ணை வெளியே இழுத்து வந்தான். அந்தப் பெண்ணிற்கு நாற்பது வயதிருக்கும். பருத்த உடம்பு. அவளுக்கு மூச்சு வாங்கியது. அவள் கைகளைக் கூப்பியபடியே தன்னை விட்டுவிடும்படியாகக் கெஞ்சினாள்.

கிழவன் அவள் குரலைக் கேட்கவில்லை. அவள் உடைகளைக் கிழித்து

எறிந்தான். பலாக்காய்கள்போல தொங்கிக் கொண்டிருப்பதைப் போல பருத்த ஸ்தனங்களை அவள் மறைக்க முயன்றாள். அவன் அந்தப் பெண்ணை மண்ணில் தள்ளி அவள் மீது ஏறி உட்கார்ந்து கொண்டான். அவள் கண்கள் பிதுங்கக் கத்தினாள்.

ஒரு குதிரையின் மீது ஏறிச் சவாரி செய்வதுபோல அந்தப்பெண் மீது ஏறிக்கொண்டு அவன் இயங்கினான். அவள் பிணத்தைப் போலக் கிடந்தாள். கிழவன் தன் பற்களால் அந்தப் பெண்ணின் கன்னத்தையும் கழுத்தையும் கடித்தான். அவள் வேதனையில் அழுதாள். பிறகு எழுந்து நின்று தனது உடையை இறுக்கிக் கட்டிக் கொண்டு அவன் தனது கூரான வாளை அவளது அடிவயிற்றில் செருகி இழுத்தான். ரத்தம் பீச்சியது. அப்போதும் அவள் தன் கைகளால் மார்பை மூடிக்கொண்டிருந்தாள். அந்தக் கிழவன் அவள் முகத்தில் காறி உமிழ்ந்துவிட்டு அடுத்த ஆளைக் கொல்ல அடுத்த வீதிக்கு ஓடினான். அந்தப் பெண் இறந்து போகவில்லை. உயிருடன் தானிருந்தாள். அவள் அருகில் போனபோது தன் கால்களை ஒடுக்கிக்கொண்டு “என்னைக் கொன்றுவிடு, கொன்றுவிடு” என அலறினாள். அப்போதுதான் தன் கையில் வாள் இருப்பதை தூமகேது உணர்ந்தான். அதை வீசி எறிந்துவிட்டு ஓடிவிடலாமா எனத் தோன்றியது. அந்த பெண் பெருகியோடும் குருதியோடு எழுந்துகொள்ளப் பார்த்தாள். அவளுக்கு உதவி செய்வதற்காக தூமகேது முயன்றான்.

அவள் பயந்துபோய் அவனை விலக்கிவிட்டு மீண்டும் மண்ணில் விழுந்தாள். இந்த முறை அவள் பூமியைப் பார்த்தபடியே விழுந்து கிடந்தாள். சட்டையில்லாத அவள் முதுகில் தழும்புகள் இருப்பதைக் கண்டான். வாழ்நாள் முழுவதும் அவள் யார் யாரிடமோ அடியும் சூடும் வாங்கி அவதிப்பட்டிருக்கிறாள். திடீரென தானே அவளைக் கொன்றதைப் போலவே உணர்ந்தான்.

அந்த முதுகைக் காணும்போது குமட்டிக்கொண்டு வந்தது. அப்போது தொலைவில் ஒரு கும்பல் உயர்த்திய வாளுடன் வந்து கொண்டிருந்தது. முன்னால் வந்துகொண்டிருந்த இருவர் கையில் துண்டிக்கப்பட்ட தலையிருந்தது. அதிலிருந்து ரத்தம் சொட்டிக் கொண்டிருந்தது. திறந்த கண்களுடன் அந்தத் தலைகள் வீதியை வெறித்துப் பார்ப்பது போலிருந்தது. வந்தவர்கள் இறந்து கிடக்கும் பெண்ணையும் அருகில் கையில் வாளுடன் நிற்கும் தூமகேதுவைப் பார்த்துச் சிரித்தபடியே சொன்னார்கள்.

“கிழட்டுப் பன்றியைப் போய் வேட்டையாடியிருக்கிறாய். எங்களுடன் வா. சிட்டுக்குருவிகளை வேட்டையாடலாம்.”

தூமகேது அந்தப் பெண்ணைத் தான் கொல்லவில்லை என்று சொல்ல நினைத்தான். ஆனால், வாய் வரவில்லை. அந்தக் கும்பல் அவனைக் கடந்து போய்விட்டது. ஒரேயொரு இளைஞன் மட்டும் கும்பலை விட்டு ஒதுங்கி நின்றிருந்தான். அவன் தலையைப் பிடித்துக்கொண்டு

குனிந்து வாந்தி எடுத்தான். பச்சையான திரவம் வாயிலிருந்து கொட்டியது. அடிவயிற்றைப் பிடித்துக்கொண்டு அவன் வாந்தி எடுத்தான்.

அந்த இளைஞன் அருகில் போய் நின்ற தூமகேது கேட்டான்,

“என்ன செய்கிறது உனக்கு?’’

“என் வாழ்நாளில் முதன்முறையாக ஒரு மனிதன் உயிரோடு எரிக்கப்படுவதை இன்றுதான் பார்த்தேன். கண்முன்னே அவனைத் வைத்து எரித்துவிட்டார்கள்.”

“யார் அவன்? எதற்காக எரித்தார்கள்?’’

“யாருக்குத் தெரியும்? இங்கே யார் யாரை எரிக்கிறார்கள் என்று அறியமுடியவேயில்லை. கொல்லவேண்டும் என்ற வெறி மட்டுமே இருக்கிறது. எரிந்து போனவனை சில முறை பஜாரில் பார்த்திருக்கிறேன். புறாக்களை விற்பவன் என்று நினைக்கிறேன்.”

“அவனை எதற்காகக் கொன்றார்கள்?”

“ஒரு காரணமும் இல்லை. இந்த நகரில் கொல்லப்பட்டவர்கள் எல்லோரும் ஏழை எளிய மக்கள். அவர்கள் வேட்டையாடப் படுகிறார்கள். அதிகாரத்திலிருப்பவர்களை சந்தோஷப்படுத்த மதச்சண்டை பயன்படுகிறது.”

அந்த இளைஞன் முகத்தைக் கையால் துடைத்துவிட்டு எழுந்து நின்று தன் உடையில் ஒட்டிய வாந்தியை சரிசெய்தபடியே கேட்டான்.

“இந்தப் பெண்ணை நீ எதற்காகக் கொன்றாய்?”

“நான் கொல்லவில்லை. இந்த வாள் என்னுடையதில்லை. என் கையில் திணிக்கப்பட்டது.”

“எல்லோரின் கைகளிலும் உள்ள ஆயுதங்கள் திணிக்கப்பட்டவை தான்.’’

“நான் இடக்கைப் பழக்கம் கொண்டவன். என்னால் வாளைப் பயன்படுத்த முடியாது.”

“நானும் இந்த வாளை இப்போதுதான் ஏந்துகிறேன். இதைக் கையில் ஏந்தியவுடன் கொலை வெறி தானே வந்துவிடுகிறது.”

“அது வாட்களின் குணம். அதன் துர்விதி மனிதர்களைக் கொலையாளியாக்கிவிடுகிறது.”

“அப்படியில்லை. மனிதர்கள் கொலைபுரிய ஆசைப்படுகிறார்கள். சந்தர்ப்பத்திற்காகக் காத்திருக்கிறார்கள். இதுபோன்ற சந்தர்ப்பங்கள் அதற்கான வடிகாலாக மாறிவிடுகின்றன.”

“ஒரு கிழவன் இந்தப் பெண்ணை நடுரோட்டில் வன்புணர்ச்சி

செய்துகொன்றதை நானே பார்த்தேன்.”

“அது அவனது நீண்டநாள் ஆசை. இன்று நிறைவேற்றிக் கொண்டிருக்கிறான். கலவரம் மனிதர்களின் ரகசிய ஆசைகளைப் பூர்த்தி செய்கிறது.”

“இந்த வாளை நான் வீசி எறிந்துவிடப்போகிறேன்.”

“எறிந்துவிட்டால் நீ மறுநிமிடம் கொல்லப்பட்டுவிடுவாய்.”

“உன்னையும் என்னையும் போல இந்தப் பெண் ஏன் கையில் வாளை ஏந்தவில்லை. இவள் ஏன் தப்பி ஓட மட்டுமே முயன்றாள். ஏன் இப்படி அநியாயமாக உயிரை விட்டாள்?”

“ஒரு உயிரைப் பற்றி நீ கவலைப்படுகிறாய். இன்றைய காலை துவங்கி மாலைக்குள் எத்தனை ஆயிரம் பேர் கொல்லப்பட்டு விட்டார்கள் தெரியுமா?”

“புறா விற்பவனை எதற்காகப் பிடித்துத் வைத்தார்கள்?’’

“அதுதான் எனக்கும் புரியவில்லை, புறாவிற்பவர்கள் மனிதர்களின் மனசாட்சியைத் தொந்தரவு செய்கிறார்கள். அதற்கு தண்டனை தான் இந்தக் கொலை.”

“புறா விற்பவன் எப்படி மனசாட்சியைத் தொந்தரவு செய்யமுடியும்? அந்த மனிதனை யார் பிடித்து வந்தது?’’

“உண்மையைச் சொன்னால் நான்தான் கொலையாளி. ஆம் நானேதான் அவனைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்து கொன்றேன். இடிந்துபோன குடியிருப்பு ஒன்றின் உள்ளே சிறியதும் பெரியதுமாக முப்பது வீடுகளுக்கும் மேலிருந்தன. அதில் ஒன்றில் புறா விற்பவன் குடியிருந்தான். என்னோடு வந்தவர்கள் ஆவேசத்துடன் வீடுகளுக்குள் புகுந்து வெட்ட ஆரம்பித்தார்கள்.

அப்போது புறா விற்கும் கிழவன் வாளோடு நிற்பவன் என் முன்னால் மண்டியிட்டு, “என் பெண்களை விட்டுவிடுங்கள். என் தலையைத் துண்டித்துக் கொள்வதாக இருந்தால் எடுத்துக் கொள்ளுங்கள்” என்று சொன்னான்.

யாரோ கத்தினார்கள்,

“இவனை உயிரோடு கொளுத்திவிடலாம்.’’

அவர்கள் இதுவரை ஒருவனைக்கூட உயிரோடு கொளுத்தியதில்லை என்பதால் உற்சாகமானார்கள்.

அவனைப் பிடித்து மரத்தில் கட்டி வைத்து விளக்கு எண்ணெயும் கற்பூரத்தையும் கொட்டி அவன் மீது நெருப்பு வைத்தார்கள். புறா விற்கும் கிழவன் என் கண்முன்னே எரிந்தான். ஆச்சரியம், அவன் வேதனையில் அலறவில்லை. துடிக்கவில்லை. மழைக்குள்

நிற்பவனைப் போல ஒடுங்கிப் போய் நின்றிருந்தான். அவன் கண்கள் அந்தக் கூட்டத்தில் என்னை மட்டுமே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தன. நான் எரிந்துகொண்டிருந்தவன் மீது ஒரு கட்டையை வீசி அடித்தேன். அவனது எலும்பு முறிந்து விழுந்தது. அவன் கண்முன்னே எரிந்து விழுந்தான்.

அந்தக் குடியிருப்பில் நாங்கள் முப்பது பேருக்கு மேலாகக் கொன்றிருப்போம். அதில் இரண்டு குழந்தைகளும் அடக்கம். அதில் ஒரு குழந்தை பிறந்து சில நாட்களே ஆகியிருந்தது. துர்ஆவிகள் பிடித்து அலையும் இந்த நகரில் வந்து ஏன் அந்தக் குழந்தை பிறந்தது? அதுவும் என்னைப் போன்ற இழிபிறவிகள் மத்தியில் எதற்காக அது பிறக்க வேண்டும். அந்தக் குழந்தையைக் கொன்றவன் எரிச்சலான குரலில் சொன்னான்.

“குழந்தையின் வயிற்றிலிருந்து தாயிடம் குடித்த பால் கசிந்து வருகிறது.”

அதைக் கேட்டபோதுதான் எனக்குக் குமட்டத் துவங்கியது. நான் அதைக் காட்டிக்கொள்ளாமல் அவர்கள் பின்னால் நடந்தேன். வீதிவீதியாக நாங்கள் வேட்டையாடினோம். இல்லை, அது முழு நிஜமில்லை. சாகர் மைதான் பகுதிக்குள் நாங்கள் வாளோடு சென்ற போது தாக்கப்பட்டோம். எங்களைத் தாக்கியவர்கள் சிறுவர்கள். அவர்கள் வீட்டிலிருந்த தட்டுமுட்டு சாமான்கள், பானைகளைக் கொண்டு எங்களைத் தாக்கினார்கள். சில சிறார்கள் எச்சிலைத் துப்பி எங்களை விரட்டிவிட முயன்றார்கள். அபத்தமான விளையாட்டினைப் போலவே இருந்தது. நாங்கள் அந்தச் சிறார்களைக் கொல்ல விரும்பவில்லை. மாறாக அவர்களை அடித்து துரத்திக் கொண்டு ஓடினோம். ஒரு வீட்டின் மொட்டை மாடிக்கு அவர்கள் ஓடினார்கள். நாங்களும் பின்தொடர்ந்தோம். உண்மையில் அந்தச் சிறுவர்கள் எங்களை மறைவிடத்திற்கு அழைத்துக் கொண்டு வருவதற்காக திட்டமிட்டுச் செயல்பட்டிருக்கிறார்கள் என்பது பின்பே தெரிய வந்தது.

மறைந்திருந்த இருபது ஆண்கள் கையில் வாளுடன் பாய்ந்தார்கள். அவர்கள் இதுவரை வாள் ஏந்தி எவருடனும் சண்டையிட்டவர்களில்லை என்பது அவர்கள் வாளைப் பயன்படுத்தும் விதத்திலே தெரிந்தது. உடலின் எந்த பாகத்தில் வாளைச் செருகுவது? எப்படி வீசுவது எனத்தெரியாமல் ஆத்திரமும் கோபமும் மட்டுமே துணையாகக் கொண்டு அவர்கள் தாக்கினார்கள். அந்த வெறித்தாக்குதலில் எங்களோடு வந்தவர்களில் மூன்று பேர் இறந்து போனார்கள். ஆனால், அங்கிருந்தவர்களைக் கொன்று குவித்தோம். இறந்த உடல்களை அந்த மாடியிலே போட்டுவிட்டு நாங்கள் வீதிக்கு வந்தோம். அப்போது ஒரு எலி எங்கள் குறுக்காக ஓடியது. வாள் ஏந்திய ஒருவன் அந்த எலியை விட்டுவைக்கக்கூடாது எனப் பின்னாடியே ஓடினான். எலி வேகமாகப் படியிறங்கி ஒரு மரக்கதவை நோக்கி

ஓடியது. அந்த மரக்கதவு பூட்டப்பட்டிருந்தது. கதவை அவன் ஓங்கித் தட்டினான். உள்பக்கமாகப் பூட்டப்பட்டிருந்தது. பிறகு கதவு துவாரம் வழியாகவே பார்த்தான். பிறகு உரத்த குரலில் சப்தமிட்டான்.

“ஓடிவாருங்கள். நிறைய புறாக்கள் அடைந்து கிடக்கின்றன.”

வாளோடு படியிறங்கிக் கொண்டிருந்தவர்கள் அந்தக் கதவை நோக்கி வந்தார்கள். கதவு உடைக்கப்பட்டு உள்ளே போனபோது இருபதுக்கும் மேற்பட்ட பெண்கள் இறந்து கிடந்தார்கள். அவர்கள் ஒருவரையொருவர் வெட்டிக்கொண்டு இறந்துபோயிருக்கிறார்கள் என்பது தெரியவந்தது. எங்கும் ரத்தம் வழிந்துகொண்டிருந்தது. அந்தப் பெண்களின் கைகள் ஒன்றையொன்று பற்றிக் கொண்டிருந்தன.

பரஸ்பரம் ஒருவரையொருவர் வெட்டிக் கொல்வது எளிதா என்ன? என்னால் அந்தக் காட்சியைக் காணமுடியவில்லை. இதயம் வேகமாக அடித்துக்கொண்டிருப்பது போலானது. நான் அவர்களை விட்டுக் கீழே இறங்கி ஓடினேன். ஒருவன் இறந்து கிடந்த பெண்களின் நகைகளைக் கழட்டிக் கொண்டிருந்தான்.

நான் வீதியில் வந்து நின்று கத்தினேன். அந்த கும்பல் இறங்கி வீதிக்கு வந்திருந்தது. வாள் ஏந்திய ஒருவன் தன் கழுத்தில் பெண்களின் நகைகளை அணிந்துகொண்டு ஆடிக்கொண்டிருந்தான். நகர கால்வாய் முழுவதும் உடல்கள் மிதந்து கொண்டிருப்பதாக ஒருவன் சொன்னான். இன்னொருவன் நகரில் பாதியை எரித்துவிட்டார்கள். நாளைக்கு இந்த நகரம் சாம்பல்மேடாகிவிடும் என்றான்.

அதற்குள் மிச்சம் இருப்பவர்களைக் கொன்று தீர்ப்போம் என அந்த கும்பல் கிளம்பியது. நான் அவர்களுடன் நடந்து வந்து கொண்டிருந்தேன். அப்போது திடீரென சாலையில் குற்றுயிராகக் கிடந்த ஒருவன் கைகள் என் கால்களை இறுக்கப்பிடித்துக் கொண்டன, அந்த மனிதன் எதற்காக என் கால்களை இறுக்கிப்பிடித்தான் என புரியவில்லை. குனிந்து அந்தக் கைகளை விலக்கிவிட முயன்றேன். ஆனால், அந்தக் கையின் பிடி வலிமையாக இறுகியிருந்தது. அவன் கையைத் துண்டிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதால் அந்தக் கையை வெட்டி எடுத்தேன். என் காலோடு ஒரு மனிதன் கை இறுகியிருப்பதைக் கண்டபோது அதுவரை அடக்கி வைத்திருந்த வாந்தி பீறிடத்துவங்கியது. என் காலை வெட்டி எறிந்துவிடலாமா என நினைத்தேன். துண்டிக்கப்பட்ட அந்தக் கையைப் பிடுங்கி எறிந்தேன். ஆனாலும் என்னால் குமட்டலைக் கட்டுப்படுத்த முடியவில்லை. வழி முழுவதும் வாந்தி எடுத்துக்கொண்டே வந்தேன். குடலே பிதுங்கி வெளியே வந்துவிடும் அளவிற்கு வாந்தி எடுத்தேன். ஆனால், குமட்டல் நிற்கவேயில்லை. தலை சுற்றியது. அதனால்தான் இங்கே நின்றுவிட்டேன்.

“நீ குரூரமானவன். உன்னைப் போல மோசமான மனிதனை நான்

கண்டதேயில்லை. உண்மையில் நீ ஒரு கோழை. உன்னை நான் கொல்லப்போகிறேன்'' எனத் தன் கையில் இருந்த வாளை உயர்த்தினான் தூமகேது.

அதைக் கேட்ட இளைஞன் சொன்னான்.

“உன்னால் என்னைக் கொல்ல முடியாது, உன் கைகள் நடுங்குகின்றன.''

“இல்லை நான் கொல்வேன்.''

“கொன்றால் நீயும் என்னைப் போலாகிவிடுவாய். இந்த நகரம் எல்லா சாமானிய மனிதர்களையும் கொலையாளி ஆக்கி சந்தோஷப்படுகிறது. அதில் நீயும் சேர்வதாக இருந்தால் என்னைக் கொல்லு.''

“இல்லை. நீ பொய் சொல்கிறாய். சாவிலிருந்து தப்பிக்க முயலுகிறாய்.''

“பொய். ஆனால், பொய்தான் மனிதர்களைக் காப்பாற்றுகிறது. உண்மை காவு வாங்க மட்டுமே செய்கிறது.''

“பேசாதே. வாயை மூடு. உன் பேச்சு என்னை பலவீனப்படுத்துகிறது.''

“கொல்வது எளிதானதில்லை. அதற்கு வலிமை இருந்தால் மட்டும் போதாது. பைத்தியக்காரத்தனம் தேவை.”

“அப்படி என்றால் நீ என்னைக் கொன்றுவிடு. அடையாளம் தெரியாத இந்த மனிதர்களுடன் நானும் இறந்துபோய்விடுகிறேன்.''

“உன்னை நான் எதற்கு கொல்ல வேண்டும். வா. உன் விருப்பம் போல என்னைக் கொன்று போடு.''

அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது தொலைவில் ஒரு கும்பல் வாள் ஈட்டிகளுடன் ஆவேசமாக வந்துகொண்டிருப்பது தெரிந்தது. அவர்கள் ஆரவாரக் கூச்சலிட்டபடியே வந்து கொண்டிருந்தார்கள்.

“உன்னால் என்னைக் கொல்ல முடியாது.”

“நிச்சயம் கொல்வேன்'' என அந்த இளைஞன் வெறித்த பார்வையுடன் சொன்னான்.

வாளை உயர்த்தினான் தூமகேது.

கும்பல் ஈட்டிகளையும் சூலத்தையும் வாளையும் உயர்த்தியபடியே ஆவேசமாக நெருங்கி வந்துகொண்டிருந்தது.

வேறு வழியில்லை. தூமகேது தன்முன் நிற்பவன் தலையை தனது வாளால் துண்டித்தான். அவன் தலைமயிரைப் பிடித்துத் தூக்கினான்.

இவ்வளவு நேரம் தன்னோடு பேசிக்கொண்டிருந்தது இந்தத் தலைதானா?

அவன் அசூயையை அடக்கிக்கொண்டு தலையை கையில்

ஏந்தியபடியே நின்றான்.

கும்பல் அவனை நோக்கி வந்தது. அவன் கையில் இருந்த தலையைப் பார்த்ததும் உற்சாகமாகியது. அந்த கும்பலை வழி நடத்தியவன் தலையைத் தனது ஈட்டியால் குத்தி வீசி எறிந்தான். அது ஒரு வீட்டின் கூரையில் போய் விழுந்தது. பின்பு அவன் தூமகேதுவைக் கட்டி அணைத்துக்கொண்டு சொன்னான்.

“ஒரு உயிருக்கு நான்கு உயிர் ஈடாகப் பெற வேண்டும். அந்த நாய்களைக் கொன்று குவியுங்கள்.”

அவர்கள் பின்னால் மௌனமாக தூமகேது போய்க் கொண்டிருந்தான். அன்று ஒருநாளில் இருபதாயிரம் பேர் கொல்லப்பட்டார்கள் எனக் கேள்விப்பட்டான்.

பாதி எரிந்து போயிருந்த சித்ரமஹால் பகுதியில் உள்ள ஒரு வீதியில் குதிரையொன்று குத்துப்பட்டு இறந்துகிடந்தது. குதிரையை யார் வெட்டிக் கொன்றார்கள் எனத்தெரியவில்லை. அதன் உடலில் இருபத்திமூன்று இடங்களில் வெட்டு விழுந்திருந்தது. அந்தக் குதிரை கால்களைப் பரப்பியபடியே விழந்து கிடந்தது. அதன் கண்கள் டெல்லி நகரை வெறித்துக்கொண்டிருந்தன.

விடிகாலையில் எதிர்பாராமல் மழை பெய்யத் துவங்கியது, காற்றோடு மழை சேர்ந்துகொண்டது. இறந்த உடல்களின் மீது மழை பொழிவதைக் கண்டபோது தூமகேதுவிற்கு குமட்டிக் கொண்டு வந்தது. அவன் தன்னை மீறி வாந்தி எடுக்கத் துவங்கினான்.

அடிவயிற்றைப் பிடித்துக்கொண்டு அவன் வாந்தி எடுத்துக் கொண்டிருந்தான். அவன் முதுகின் மீது பெய்துகொண்டிருந்தது மழை. எதற்காக இந்த நகருக்கு வந்தேன். ஏன் இப்படி நடந்து கொண்டேன் என தூமகேது புலம்பிக்கொண்டிருந்தான்.

விக்டோரியா பஜார்

வங்காளத்தில் தங்கள் வணிகத்தை வளமைப்படுத்த ஹூக்ளி ஆற்றங்கரையில் மூன்று கிராமங்களை விலைக்கு வாங்கி கல்கத்தா என்ற ஊரை உருவாக்கினார்கள் கிழக்கந்திய கம்பெனி அதிகாரிகள். காசிம் பஜாரின் அதிகாரியாக வந்த வாரன் ஹேஸ்டிங் பேராசையுடன் வங்கத்தைச் சூறையாடத் துவங்கினான். நவாப்புகள் அதற்கு துணை நின்றார்கள். நவாபின் படையைப் பயன்படுத்தி சத்கரை கைப்பற்றினார்கள் கம்பெனியினர். சத்கர் கம்பெனியின் முக்கிய வணிக மையமாக உருமாறியது.

கிழக்கிந்திய கம்பெனியினர் சத்கர் பஜாருக்கு புதிய பெயரைச் சூட்டியிருந்தார்கள். அது விக்டோரியா பஜார் என அழைக்கப்பட்டது. நகர நிர்வாகம் கம்பெனி ஆட்சிக்குப் போனதை மஹாபண்டிதர்கள்

வரவேற்றுக் கொண்டாடினார்கள். ரெமியஸ் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகி தூக்கிலிடப்பட்டான். சந்தையின் நடுவே அவனை கம்பெனி அதிகாரிகள் தூக்கிலிட்டார்கள்.

சத்கருக்கு புதிய கவர்னராக பென்டிங் நியமிக்கப்பட்டான். அதே நேரம் வாரன் ஹேஸ்டிங் மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு விசா ரணைக்காக அழைக்கப்பட்டார். சத்கர் சந்தையில் புதிய வரிகள் விதிக்கப்பட்டன. பிஷாடன் ஆண்டபோதும், கம்பெனி ஆட்சியின்போதும் நிகிலி மாறிவிடவேயில்லை. கழிவுகளைச் சுமப்பதற்கு மட்டுமே சாமர்கள் பயன்படுத்தப்பட்டார்கள்.

•••

கான்பூர் ஏரியில் ஒரு உடல் மிதந்து கொண்டிருப்பதாக மீன்பிடிக்கச் செல்லும் ஒருவன் சொன்னான்.

இறந்துபோன ஒருவனின் உடல் ஏரியின் நடுவில் மிதந்து கொண்டிருந்தது. முத்து ஏரி எனப்படும் அந்த ஏரி குடிநீருக்கானது. அதில் இறந்துபோன ஒரு உடல் மிதந்து கொண்டிருப்பது இதுவே முதல்முறை. ஆகவே கான்பூர் வாசிகள் அந்த உடல் யாருடையது எனக் காண்பதற்காகத் திரண்டு வந்தார்கள். குதிரை லாட வடிவில் இருந்த அந்த ஏரி கண்கொள்ளாத அளவு பரந்துவிரிந்துகிடந்தது. ஏரியின் கரையைச் சுற்றிலும் மரங்கள் அடர்ந்திருந்தன. ஏரியின் கரையிலே குடிசை அமைத்துக்கொண்டு வசித்தார்கள் மீனவர்கள். ஏரியின் வலது பக்கம் இடிந்துபோன பழைய கோவில் ஒன்றிருந்தது. அந்த ஏரியில் முதலைகள் இருப்பதாகச் சொல்லிக்கொண்டார்கள்.

ஆகவே, யாரும் ஏரியினுள் செல்வதில்லை. ஒருமுறை மரப்பலகை ஒன்றினை படகு போலாக்கிக்கொண்டு துறவி ஒருவன் அந்த ஏரியின் நடுவில் இருந்த தட்டில் போய்த் தங்கியிருந்தான். நாட்கணக்கில் அவன் ஏரியை விட்டு வெளியேறி வரவேயில்லை. ஏரித் தண்ணீரின் மீது அவன் நடந்து போகக்கூடியவன் என்றும், அவன் தண்ணீரின் மீது நெருப்பை உண்டு பண்ணிக்கொண்டு அதில் குளிர்காய்ந்து கொள்கிறான் என்றும் பேசிக்கொண்டார்கள். ஏரியின் கரையில் வசித்த மீனவப்பெண்கள் அந்தத் துறவி இரவெல்லாம் மந்திரங்களை முணுமுணுக்கிறான். அந்தக் குரல் தங்களுக்குக் கேட்டுக் கொண்டிருக்கிறது என்றும் சொன்னார்கள்.

அவனிடம் ஆசி வாங்குவதற்காக ஆட்கள் ஏரிக் கரையில் திரண்டார்கள். பல நேரம் துறவிக்காகக் கொண்டுவந்த காணிக்கைப் பொருட்களைக் கரையிலே வைத்துவிட்டுப் போய்விடுவார்கள், காணிக்கைப் பொருட்கள் யாவையும் மீனவக்குடும்பங்கள் எடுத்துக்கொண்டன. அந்த துறவி எதற்காக ஏரியின் நடுவில் போய் அமர்ந்திருக்கிறான் என யாருக்கும் தெரியவில்லை. ஒருநாள் காலை அந்த துறவி தனது மரப்பலகையோடு ஏரியிலிருந்து பறந்து வானில்

மறைந்துவிட்டான் என ஒரு மீனவப்பெண் சொன்னாள். அதை ஊரே நம்பியது. ஆனால், அது உண்மையா என்பதை பற்றி யாரும் விசாரிக்கவேயில்லை. ஆனால், மீனவக்குடும்பத்தில் ஒரு இளம்பெண் திடீரென கர்ப்பம் கொண்டாள். அந்த கர்ப்பத்திற்குக் காரணம் துறவி ஒவ்வொரு இரவும் அவர்கள் குடிசையில் வந்து தங்கிப்போனது தான் என அந்த பெண்ணின் தாய் புலம்பிக்கொண்டிருந்தாள். அதை யாரும் கேட்டுக்கொள்ளவில்லை. கர்ப்பிணியான இளம் பெண்ணிடம் துறவியைப் பற்றி கேட்டபோது அவன் ஒரு திருடன் என்று மட்டுமே பதில் சொன்னாள். அந்தத் துறவிக்குப் பிறகு யாரும் அந்த ஏரிக்குள் செல்லவேயில்லை. மழைக்காலங்களில் ஏரி நிரம்பிப் போய்விடும்போது கரை உடைந்து தண்ணீர் வெளியேறாமல் இருக்க பெண்கள் ஏரிக்கு விளக்குப் போடுவார்கள். அந்த ஒரு நாளில் ஏரியில் நூற்றுக்கணக்கான விளக்குகள் மிதக்க விடுவார்கள். அதைத் தவிர வேறு எந்த விசேஷமும் ஏரியில் நடந்ததில்லை.

இன்று ஒரு உடல் செத்து மிதப்பதைக் கண்டதும் கான்பூர்வாசிகள் குழப்பமடைந்து போனார்கள்.

“படகில் சென்று அந்த உடலை கரைக்குக் கொண்டுவர வேண்டும்” என ஒரு கிழவன் சொன்னான்.

ஆனால், யாரும் படகை எடுத்துக்கொண்டு முன்செல்லவில்லை. இறந்துகிடந்தவன் எந்த மதத்தைச் சேர்ந்தவன் என்ற கேள்வியை யாரோ எழுப்பினார்கள்.

“கரைக்குக் கொண்டுவருவதற்குள் அவன் இந்துவா, இஸ்லாமியனா எனப் பரிசோதனை செய்துவிட வேண்டும். ஒருவேளை அவன் இஸ்லாமியனாக இருந்தால் இது திட்டமிட்ட சதியாகத்தான் இருக்கும்.”

“குடிநீர் எல்லோருக்கும் பொதுவானது. அதை யார் களங்கப்படுத்தப் போகிறார்கள்” என கேட்டாள் ஒரு பெண்.

அதைக் கேட்ட ஒருவன் ஆத்திரத்துடன் சொன்னான்.

“வாயை மூடு. இந்த நகரில் குழப்பம் ஏற்படுத்தவேண்டும் என பலர் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இது அவர்களின் வேலையே தான்.

இறந்தவன் யார் எனத் தெரியாமல் அவன் உடலை நாம் கொண்டு வரக்கூடாது.”

“இறந்துவிட்டவனுக்கு ஏது மதம்? அவனது மத அடையாளங்களை எப்படித் தெரிந்துகொள்வது?”

“இறந்து போய்விடுவதால் ஒருவனின் மதம் அழிந்து போய்விடாது. அந்த உடலின் உடையை உருவிப் பாருங்கள். உடல் அவன் மதத்தைக் காட்டிக் கொடுத்துவிடும்.”

“கரைக்குக் கொண்டுவந்து அதை சோதிக்கலாமே” எனக் கேட்டார் ஒரு

கிழவர்.

“இல்லை, அதை ஏரியின் உள்ளே வைத்தே நாம் சோதித்து அறிய வேண்டும்.”

“ஒருவேளை அவன் இஸ்லாமியனான இருந்தால் அந்த உடலை விட்டுவிட வேண்டுமா?”

“இல்லை. ஒரு உடலுக்குப் பதிலாக நூறு உடல்களைக் கொன்று மிதக்கவிட வேண்டும்” என்றான் அந்த கிழவன்.

அதற்குள் மூன்று பேர் ஒரு படகுடன் ஏரியினுள் செல்ல தயார் ஆனார்கள். ஒருவன் இறந்து மிதப்பவனை இழுப்பதற்கு ஒரு நீண்ட பிடி கொண்ட குறடு ஒன்றும், உடைகளை கிழித்துஎறிய தனக்கு வெட்டுகத்தியும் வேண்டும் எனக்கேட்டான்.

மீன் நறுக்குவதற்காகப் பயன்படும் வெட்டுக்கத்தி ஒன்றை அவனுக்கு தந்தார்கள். அவர்கள் ஏரியினுள் இறந்த உடலை நோக்கிப் படகைச் செலுத்த ஆரம்பித்தார்கள். இறந்தவனின் முதுகில் வெயில் பட்டு மினுங்கிக்கொண்டிருந்தது. ஏரி தண்ணீரில் படகு மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது. இதற்குள் கரையில் கூட்டம் அதிகமாகத் துவங்கியது.

ஏரிக்கரையிலிருந்து ஒருவன் கத்தினான்.

“மீரட்டில் இருந்து தப்பிய குற்றவாளி ஒருவனை தேடிக் கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை அது இவனாக இருந்துவிட்டால் உங்களுக்கு நூறு வெள்ளிகாசுகள் கிடைக்கும்.”

படகைச் செலுத்திக்கொண்டிருந்தவர்களுக்கு அக்குரல் கேட்கவில்லை. ஏரியின் மீது காற்று மெதுவாக ஊர்ந்துபோய்க் கொண்டிருந்தது. தேங்கிக் கிடந்த தண்ணீர் என்பதால் கரும்பச்சை நிறத்திலிருந்தது. ஒரு நீர்ப்பூச்சி தன்னைக் கடந்து போகும் படகை ஏறிட்டுப் பார்த்தபடியே நடந்து கடந்தது. படகு இறந்த உடலை நோக்கி போகப்போக தண்ணீரின் வேகத்தில் உடல் நகர்ந்து போகத் துவங்கியது.

கையில் இருந்த நீண்ட குறடை வீசி அந்த உடலை அருகில் இழுத்தார்கள். பின்பு ஒருவன் படகிலிருந்து எட்டி இறந்த உடலின் உடையைக் கிழித்தான். செத்துக் கிடந்தவனின் ஆண் உறுப்பு தெரிந்தது. மறுநிமிடம் அவன் சப்தமாகச் சொன்னான்.

“இவன் இஸ்லாமியன் இல்லை.”

அந்தக்குரல் கரைக்கு கேட்டதா எனத்தெரியவில்லை, ஆனால், படகிலிருந்தவன் உடனே அந்த உடலை படகில் ஏற்றும்படி அவசரம் காட்டினான்.

உடல் கரைக்குக் கொண்டுவரப்பட்டபோது மக்கள் கூடி நின்று அதை வெறித்துப் பார்த்தார்கள். தளர்ந்துபோன ஆண்குறியுடன் கால்களைப் பரப்பியபடி விழுந்துகிடந்த அந்த உடலைக் கண்டு எந்த பெண்ணும்

முகம் சுழிக்கவில்லை. கூட்டத்தில் ஒருவன் சொன்னான்.

“அவன் உடம்பில் நிறைய காயங்கள் இருக்கின்றன. அடித்துக் கொன்று ஏரியில் வீசியிருக்கிறார்கள்.”

“ஒருவேளை இவன் திருடனாக இருக்கக்கூடுமோ?”

“இல்லை. ஒற்றனாக இருப்பானோ?”

“அவனது முகச்சாயலைக் கண்டால் தூரதேசத்தைச் சேர்ந்தவன் போலிருக்கிறான். யாத்திரைக்கு வந்த பயணியா?” எனக்கேட்டான் இன்னொருவன்.

அங்கிருந்த பலரும் அவன் முகத்தை நெருங்கிப் பார்த்தார்கள். ஒரேயொரு ஆள் மட்டும் சொன்னான்.

“இவனை நான் பார்த்திருக்கிறேன். ஜாகிர்தார் சப்ரூ வீட்டின் குதிரை லாயத்தில் வேலை செய்தவன்.”

“இவன் எப்படி இறந்து போனான். யாராவது கொன்று வீசி விட்டார்களா?” என ஒருவன் கேட்டான்.

“இதுவெல்லாம் பெரிய இடத்து விஷயம். வாயை மூடு” என ஒருவன் அடக்கினான்.

“இறந்து கிடந்தவன் கண்கள் வெறித்துக்கொண்டிருக்கின்றன. அதை மூடுங்கள்” எனக் கூட்டத்தில் குரல் தந்தான்.

யாரோ குனிந்து அந்தக் கண்களை மூட முயன்றார்கள். ஆனால், கண்களை மூடமுடியவில்லை.

மீனவப்பெண்களில் ஒருத்தி சொன்னாள்.

“அவன் பசியோடு இறந்து போயிருக்கிறான். பசியோடு இறந்தவர்கள் கண்களை மூடமுடியாது.”

“அதுதான் இறந்து போய்விட்டானே. இனியும் எதற்காக ஏங்கிக் கொண்டிருக்கிறான்” என ஒரு மற்றவன் பரிகாசம் செய்தான்.

“இறந்தவர்களுக்கும் பசிக்கும். அவர்களுக்கு உணவளிக்க வேண்டியது நமது கடமை” என்றாள் மீனவப்பெண்.

“இவன் வாயில் கொஞ்சம் சக்கரையைப் போடுங்கள். கண்கள் மூடிக்கொண்டுவிடும்” என்றாள் ஒரு கிழவி.

அவள் சொன்னது போலவே வாயில் சர்க்கரை போடப்பட்டதும் அந்த கண்களை எளிதாக மூட முடிந்தது.

ஜாகிர்தார் வீட்டிற்கு ஆள் அனுப்பி பணியாள் ஒருவன் செத்துக் கிடப்பதைப் பற்றி தகவல் தெரிவித்தார்கள். ஜாகிர்தாரின் உதவியாள் போலன் குதிரையில் வந்து இறங்கி அந்த உடலைப் பார்த்துவிட்டு

சொன்னான்.

“இப்படி ஒரு மனிதன் ஜாகிர்தார் வீட்டில் வேலை பார்த்ததேயில்லை. இவன் யாரோ பிச்சைக்காரன்.”

“அப்படியானால் இவன் உடலை என்ன செய்வது?” எனக் கேட்டான் ஒரு மீனவன்.

“ஏரிக்கரையிலே குழிதோண்டி புதைத்துவிடுங்கள். இவன் ஜாகிர்தார் வீட்டில் வேலை செய்தவன் எனச் சொன்னது யார்?” எனக்கேட்டான் போலன்.

கூட்டத்திலிருந்த ஒருவன் சொன்னான்.

“மாலிக், நான் இவனை ஜாகிர்தார் வீட்டில் பார்த்திருக்கிறேன்.”

“பொய். உன் பெயர் என்ன? நீ எதற்காக ஜாகிர்தாரை பார்க்க வந்திருந்தாய்?”

“என் பெயர் பிமல். பச்சை குத்துகிறவன். உம்ரா பேகத்தின் கைகளில் பச்சை குத்துவதற்காக என்னை அழைத்திருந்தார்கள்.”

“அப்போது நீ இவனை கண்டாயா?”

“ஆமாம். ஜாகிர்தார் குதிரைலாயத்தில் வேலை செய்து கொண்டிருந்தான்.”

“சுத்தப்பொய். அதோ அந்த ஏரியின் மேலே பறக்கிறதே அது என்ன பறவை?”

“கொக்கு” என்றான் பிமல்.

“நான் கேட்டது நீர்க் காகத்தை. கண்முன்னே பறக்கும் பறவையைக் கூட உன்னால் அடையாளம் காணமுடியவில்லை. நீ எப்படி இவனை ஜாகிர்தார் வீட்டில் கண்டதாக சொல்கிறாய்?”

“மாலிக், இந்த மனிதன் என்னோடு பேசியிருக்கிறான். தன் பெயரை பச்சை குத்தும்படியாக கெஞ்சினான்.”

“எதற்காக?”

“தன்னிடம் நினைவுபடுத்திக் கொள்ளும்படியாக தன் பெயர் மட்டும்தான் இருக்கிறது. அதைப் பச்சை குத்திவிடும்படிச் சொன்னான்.”

“நீ இவன் கைகளில் பச்சை குத்திவிட்டாயா?”

“ஆமாம் மாலிக். இவன் பெயர் தூமகேது, இதோ பாருங்கள்.” என இறந்து கிடந்தவனின் இடக்கையை புரட்டிக்காட்டினான்.அதில் தூமகேது என எழுதப்பட்டிருந்தது.

“இறந்தவனுடன் தொடர்புள்ள ஒரே ஆள் நீ ஒருவன். நீயே இவனை ஏன் கொன்றிருக்கக் கூடாது?” எனக் கேட்டான் போலன்.

“நான் எதற்காக அவனை கொல்லப்போகிறேன்?” எனக்கேட்டான் பிமல்.

“யாருக்குத் தெரியும்? உன் மனைவிக்கும் இவனுக்கும் கள்ளத்தொடர்பு இருந்திருக்கலாம். அல்லது இவனும் நீயும் சேர்ந்து எதையாவது கொள்ளை அடித்திருக்கலாம். ஏன் மன்னருக்கு எதிராக சதிகூட செய்திருக்கலாம்.”

“இல்லை. பொய். இவனை எனக்குத் தெரியாது.”

“இப்போதுதான் தெரியும் என்றாயே.”

“தெரிந்தவன்போலத் தோன்றினான். சாயலை வைத்துச் சொன்னேன்.”

“இவனை நீ ஜாகிர்தார் வீட்டில் வைத்துப் பார்த்திருக்கிறாயா?”

“நான் ஜாகிர்தார் வீட்டிற்கு வந்ததேயில்லை.”

“இவன் கையில் நீ பச்சை குத்தவில்லை.”

“இப்படி ஒரு பெயரைக்கூட நான் கேள்விப்பட்டதில்லை. இவன் வேறுதேசத்தைச் சேர்ந்தவன்.”

“பிறகு என்ன அநாதை பிணத்தை அடக்கம் செய்வதற்கு யாரைக் கேட்க வேண்டும்?”

போலன் முன்பாகவே இறந்த உடலை இழுத்துக்கொண்டு போய் குழி வெட்டிப் புதைத்து வந்தார்கள். போலன் அந்த இடத்தை விட்டுப் போகும்போது அங்கிருந்த மீனவர்களை அழைத்துச் சொன்னான்.

“இறந்து போனவனைப் பற்றி யார் வந்து விசாரித்தாலும் உடனே ஜாகிர்தார் வீட்டிற்கு வந்து என்னிடம் சொல்ல வேண்டும் புரிந்ததா?”

மீனவர்கள் தலையாட்டினார்கள். போலன் உடலைப் புதைத்தவர்களுக்கு சில்லறை நாணயங்களை வீசி எறிந்துவிட்டு தனது குதிரையில் ஏறிப் போனான்.

அன்றிரவு மீனவர்களில் ஒருவன் சொன்னான்.

“நிச்சயம் ஜாகிர்தார்தான் இவனை அடித்துக்கொன்றிருப்பார்.”

“அது ஒன்றும் ஆச்சரியமில்லை. இவனைப் போல எத்தனையோ பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.”

“இந்த போலன் மகா மோசமானவன். ஒருநாள் இவனும் இப்படி அநாதைப் பிணம்போல ஏரியில் மிதப்பான் பார்.”

•••

ஜாகிர்தார் சப்ரூவின் வீட்டின் மாடியில் இரவு விருந்து நடந்து கொண்டிருந்தது. அதில் கலந்துகொள்ள நிறைய விருந்தினர்கள் வந்திருந்தார்கள். சிறப்பு விருந்தினராக ரூபன் ஸ்மித் என்ற கிழக்கிந்திய

கம்பெனி அதிகாரி அழைக்கப்பட்டிருந்தார். அந்த விருந்தில் திடீரென போலன் எதையோ கண்டு அலறினான்.

சப்ரூ உள்ளிட்ட பலரும் அதைக்கேட்டு பயந்து போனார்கள்.

போலன் பயந்து போனவன்போல விருந்தில் உணவு பரிமாறிக் கொண்டிருந்த ஒருவனை காட்டிச் சொன்னான்.

“இவன் இறந்துபோனவன். காலையில் நான்தான் இவன் உடலை புதைத்து வந்தேன்.”

“போலன் உனக்குப் போதை ஏறிவிட்டது. இவன் இன்றைக்கு தான் புதிதாக வந்த வேலையாள்.”

“அவனேதான். அவன் உடலைத்தான் ஏரியில் இருந்து இன்று மீட்டார்கள். என் கண்ணால் இறந்த உடலைப் பார்த்தேன்.”

“இறந்தவன் எப்படி உயிர்பெற்று வரமுடியும்?”

“அதுதான் குழப்பமாக இருக்கிறது, இவன் செத்துகிடந்த மனிதனே தான்.”

நடந்துகொண்டிருக்கிற குழப்பம் என்னவென்று தெரியாமல் ரூபன் ஸ்மித் சப்ரூவிடம் ஏதாவது அசம்பாவிதம் நடந்துவிட்டதா என ஆங்கிலத்தில் கேட்டார்.

“இல்லை சிறிய குழப்பம்” என்றபடியே சப்ரூ அந்த வேலையாளை அழைத்து போலன் முன்பாக நிறுத்தினார்.

“போலன் அந்த மனிதனை உற்றுப் பார்த்துக் கொண்டேயிருந்தான். அதே கண்கள். அதே புருவம். அதே உருவம். இவனேதான். அவன் கையில் நிச்சயம் ஏதோவொரு பெயர் பச்சை குத்தபட்டிருந்தது.”

பயத்துடன் போலன் தன் முன்நின்றவனின் கையை பிடித்து உயர்த்தி பார்த்தான்.

அதில் எந்த பெயரும் பச்சை குத்தப்படவில்லை.

அவன் குழப்பத்துடன் “உன் பெயர் என்ன?” என்று கேட்டான்

அந்த மனிதன் மென்மையான குரலில்.

“தூமகேது.”

“அதே பெயர் தான். இந்த பெயர் கொண்டவன்தான் இன்றைக்கு இறந்து போனான்” என போலன் உளறினான்.

“ஒரே பெயர் கொண்ட இரண்டு பேர் இருக்கக்கூடாதா“ என சப்ரூ கோபத்துடன் கேட்டார்.

“இல்லை மன்சூர். இவன்தான் அந்த ஆள். இறந்தவன் உயிர் பிழைத்து வந்துவிட்டான்.”

“நீ உளறுவதை நிறுத்து. காசிம், இவனை அழைத்துப்போய் படுக்க வை. என ஒரு ஆளிடம் உத்தரவிட்டார் சப்ரூ.

போலன் பயந்து வெளிறிய முகத்துடன் அந்த இடத்தை விட்டு வெளியேறும்போது சொன்னான்.

“இவனைத் துரத்திவிடுங்கள். இறந்தவனை வேலை வாங்க வேண்டாம் அது மோசமான விளைவுகளை உண்டுபண்ணிவிடும்.”

அந்த குரலை யாரும் கேட்டுக்கொள்ளவேயில்லை. போலனை இழுத்துக்கொண்டு போன பிறகு சப்ரூ நடந்தவற்றை பற்றி ரூபன் ஸ்மித்டிடம் சொல்லி சிரித்துக்கொண்டிருந்தான்.

இதை கேட்ட ரூபன் ஸ்மித் “போதை மட்டும் காரணமிருக்காது, இது கஞ்சாவின் வேலை. நிறைய புகைத்திருப்பான்” எனச் சொல்லி சிரித்தான்.

சப்ரூ அதைக்கேட்டுச் சிரித்தபடியே, “இறந்தவன் கையால் நாம் ஒரு கோப்பை மது அருந்தலாம்தானே” என்றான்.

ஸ்மித்தும் அதற்குச் சம்மதம் தெரிவித்தான். தூமகேதுவின் கையால் அவர்கள் ஆளுக்கு ஒரு கோப்பை மதுவை வாங்கி அருந்தினார்கள்.

பிறகு ரூபன் ஸ்மித் சொன்னார்.

“இந்த பணியாளனை என்னோடு அனுப்பி வையுங்கள். எனக்கும் இப்படி ஒரு ஆவி வேலைக்கு தேவைப்படுகிறது.”

அதைக்கேட்டு சப்ரூ சப்தமாகச் சிரித்தான்.

மறுநாள் போதை தெளிந்த போலன் ஜாகிர்தாரின் வீட்டு வேலையாள் தூமகேதுவை அழைத்து வரச்சொல்லியிருந்தான்.

தூமகேது அவன் முன்னால் தலைகவிழ்ந்தபடியே நின்றான்.

“உண்மையைச் சொல். நீ யார்? எது உனது ஊர்?”

“சத்கர்.”

“அது எங்கோ தொலைவில் அல்லவா இருக்கிறது?”

“ஆமாம். கால்போன போக்கில் சுற்றியலைந்து இங்கே வந்து சேர்ந்தேன்.”

“முன்பு நீ என்ன வேலை செய்து கொண்டிருந்தாய்?”

“ஆட்டுத்தோல் உரிப்பது.”

“உன்னைப்போல உருவமுள்ள சகோதரன் எவனாது இருக்கிறானா?”

“இல்லை. எனது பிள்ளைகள்தான் என் ஜாடையில் இருக்கிறார்கள்.”

“முட்டாளே உன்னுடைய உருவத்தில் இறந்துபோன ஒருவனை நேற்று

பார்த்தேன்.”

“அது நிச்சயம் நானில்லை” என்றான் தூமகேது.

“குழப்பமாக இருக்கிறது. இறந்து போனவன் இந்த வீட்டில் குதிரை லாயத்தில் வேலை பார்த்ததாக ஒருவன் சொன்னான். “

“இருக்கலாம். எளியவர்கள் ஒன்று போலத்தானிருக்கிறார்கள்.”

“ஒரே பெயருடனா இருப்பார்கள்?” எனக் கோபமாகக் கேட்டான் போலன்.

“நான் பசிக்கொடுமையால் வேலைக்கு வந்தவன். எனக்கு எதுவும் தெரியாது. தூமகேது என்ற பெயரை சாமர்களில் பலரும் வைத்திருக்கிறார்கள்” என்றான் தூமகேது.

“இவனை ஆங்கிலேய துரையிடம் வேலைக்கு அனுப்பி விடுங்கள். அவன்தான் இவனைப் போல அடிமைகளை வைத்து வேலை வாங்க சரியான ஆள்” என்றான் போலன்.

தூமகேது பயந்து போய் நின்றிருந்தான்.

மறுநாள் காலை அவர்கள் தூமகேதுவை தேடியபோது அவன் அங்கேயில்லை.

அலையும் நாட்கள்

நடந்து அலைந்து தூமகேது உருமாறியிருந்தான். அவனால் எங்கும் நிலைகொள்ள முடியவில்லை. அந்த ஊரில் மனிதர்களை விடவும் பறவைகளே அதிகமிருந்தன. ஒவ்வொரு மரத்திலும் இலைகளை விடவும் அதிகமாகயிருப்பதுபோல பறவைகள் அமர்ந்திருந்தன. பறவைகளின் ஒலியைத் தவிர அந்த ஊரில் வேறு சப்தமேயில்லை.

எதற்காகப் பறவைகள் இப்படி ஒரு ஊர் முழுவதும் நிரம்பியிருக்கின்றன என தூமகேதுவிற்குப் புரியவில்லை. ஊரில் ஒருவர்கூட அந்த பறவைகளை வெறுக்கவோ, விரட்டவோ செய்யவில்லை. அவர்கள் பறவைகளை நேசித்தார்கள்.

அந்த ஊரில் ஒரு பறவை மனிதனிருந்தான். அவன் நடந்து போகும்போது அவனது தலையில் தோள்களில் பறவைகள் அமர்ந்திருந்தன.

அவனே ஒரு நடமாடும் விருட்சம் போலிருந்தான்.

ஒருமுறை அவன் தலையில் அமர்ந்த ஒரு பறவை முட்டையிடவே அது குஞ்சு பொரிக்கும் நாள் வரை அதே இடத்தில் நின்றுகொண்டேயிருந்தான் என்றார்கள். அந்த மனிதன் பறவைகளின் குரலில் சப்தமிட்டான். அவனது குரலுக்கு பறவை களும் பதில் எழுப்பின.

அந்த பறவை மனிதன் முந்தைய பிறவியில் நிச்சயம் ஒரு பறவையாக பிறந்திருப்பான் இல்லாவிட்டால் இவ்வளவு ஒட்டுதல் வராது என ஊரார் சொன்னார்கள்.

அவனை நடக்கும் பறவை என்றே அழைத்தார்கள். பறவைகளுக்கு உணவளிப்பது, தண்ணீர் கொடுப்பது, குஞ்சுகளை காப்பாற்றி பராமரிப்பது அவனது வேலை. சில நேரங்களில் அவன் பின்னால் நூற்றுக்கணக்கான பறவைகள் பறந்து வரும். ஏதோ தேவதூதர் நடந்து போவதுபோல அவன் முன்னால் போய்க்கொண்டிருப்பான்.

அவனது வீட்டை பறவைகளுக்கு நன்றாகத் தெரியும். ஒரு முறை அவன் உடல்நலமற்றுப்போன நாளில் அவன் வீட்டின் முன்பாக ஆயிரக்கணக்கான பறவைகள் திரண்டுவந்துவிட்டன. ஆனால், ஒரு பறவையும் சப்தம் எழுப்பவில்லை. அவன் நலம் அடைந்து வெளியே வரும்வரை அவை அதே இடத்தில் அமர்ந்திருந்தன.

தூமகேது அந்த கிராமத்தைக் கடந்து போகும்போது அவன் தலைக்கு மேலும் பறவைகள் வட்டமிட்டபடியே வந்தன. பறவை மனிதனை வழியில் கண்டான். அவன் புன்சிரிப்புடன் அவனை வரவேற்று “நீ எந்த ஊர்ப் பறவை?” என்று கேட்டான்.

தூமகேதுவிற்கு அப்படி கேட்டது பிடித்திருந்தது.

“சத்கர்” என்றான் தூமகேது.

“எங்கே போகிறாய்?”

“தெரியவில்லை. மனைவி பிள்ளைகளை தேடி அலைகிறேன்” என்றான் தூமகேது.

“உனக்கு வழிகாட்டுவதற்கு ஒரு பறவையைத் துணைக்கு அனுப்பி வைக்கவா?”

“பறவைகளால் வழிகாட்டமுடியுமா?”

“முடியும். இங்கிருந்து வடக்கே போனால் சிறுநகரம் ஒன்று இருக்கிறது. ஆனால், பாதை தவிர நீ கிழக்கே போய்விட்டால் காடு பின்பு அங்கிருந்து நீ வெளியேறிப் போக முடியாது. நான் இந்தப் பறவைகளை உன் துணைக்கு அனுப்பி வைக்கிறேன். நீ பயணம் செய்யலாம்.”

தூமகேது நன்றி தெரிவித்தான். பறவை மனிதன் ஏதோ சப்தமிட்டான். மறுநிமிடம் ஒருபறவை தூமகேது முன்னால் பறக்க ஆரம்பித்தது.

“இதைப் பின்தொடர்ந்து போ” என்றான் பறவை மனிதன்.

அதன்படியே தூமகேது ஒரு பறவையின் நிழலைப் போல கூடவே செல்ல ஆரம்பித்தான். வழியில் அவனுக்குக் காய்ச்சல் கண்டது. நடுக்கத்துடன் விழுந்து கிடந்தான். நிச்சயம் இறந்துபோய் விடுவோம் என நம்பினான். படகோட்டி ஒருவன் மருத்துவம் செய்து நலமாக்கினான். நோய் நீங்கியபோதும் உடல் வலுவற்றுப் போனது. ஆறேழு மாதங்கள் படகோட்டி வீட்டிலே கிடந்தான். எதற்காக உயிர் வாழ்கிறேன். இன்னும் என்ன மிச்சமிருக்கிறது என தனக்குத்தானே கேட்டுக்கொண்டான். பதிலற்ற அக்கேள்வி அவனை மேலும் வேதனைப்படுத்தியது.

முதுமை தூமகேதுவை உருமாற்றியிருந்தது. நரைத்த தலையும், சுருங்கிய தோலும், முகமும் கொண்டவனாக அவன் நடந்து கொண்டிருந்தான். அவனது தோற்றத்தை மனைவி பிள்ளைகள் கண்டால்கூட கண்டுபிடிக்கமுடியாதபடி, அழுக்கடைந்துபோய் கழுத்து எலும்புகள் துருத்திக்கொண்டிருக்க அவன் பிச்சைக்காரனைப் போலிருந்தான். காலில் புண்கள் ஏற்பட்டு சீழ்வழிந்து கொண்டிருந்தது. கிழிந்த துணி ஒன்றை சுற்றியிருந்தான். குளிருக்கு பயந்து பல்வேறு கிழிந்த துணிகளை உடலில் சுற்றிக் கொண்டிருந்தான். தலையிலும் ஒரு சிவப்பு துணி கட்டப்பட்டிருந்தது. அவனது வயிறு ஒட்டிப்போயிருந்தது. பசித்த நேரம் உணவிற்காக யாசித்தான். கிடைத்த வேலைகளை செய்தான். உறக்கம் வந்த இடத்தில் உறங்கி கழித்தான். தனது கடந்தகாலத்தை முற்றிலும் மறந்துவிட்டவன் போல அவன்

அலைந்து கொண்டிருந்தான்.

•••

ஜமீல் எனும் கவிஞன்

இருபத்தியோறு தலைமுறைகளாக கவிஞர்களாக வரும் பரம்பரையைச் சேர்ந்தவனும் ஆக்ராவின் பெரும் சூதாட்டக்காரனுமான கவி ஜமீல் ஹத்மலிடம் ஒரு விசித்திரமான பழக்கமிருந்தது, அவன் கண்ணாடி முன் உட்கார்ந்தபடியே தனக்குத் தானே பகடையாடிக் கொண்டிருப்பான். கண்ணாடியில் உள்ள அவனது உருவத்துடன் அவன் பேசிக்கொள்வதும் உண்டு. சில வேளைகளில் அவனுடன் சூதாடுவதற்கு வரும் உமர் அதைப்பற்றி கேட்பதுண்டு.

“ஜமீல் உன்னோடு நீயே ஏன் பகடையாடுகிறாய்?”

“ஒருவனுக்கு தன்னை தவிர வேறு ஏமாற்றாத துணை ஏதிருக்கக்கூடும்.”

“தன்னை ஆராதிப்பவர்களைக் கண்டிருக்கிறேன். இது என்ன பழக்கம்? தன்னைத்தானே பழிவாங்கிக் கொள்வதா?”

“உமர். இது சிறுவயது பழக்கம். கண்ணாடி பார்க்கத் துவங்கிய முதல்நாளை நீ மறந்திருப்பாய். என்னால் அந்த அதிர்ச்சியில் இருந்து மீளமுடியவே முடியவில்லை. நான் இப்படித்தானிருப்பேன் என்பதை என்னால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. ஆனால், மெல்ல ரசிக்கத் துவங்கினேன். கண்ணாடி எனது ரகசிய வீடு என உணர்ந்தேன். என்னுடன் நான் பழகத் துவங்குவதற்கு கண்ணாடிதான் துணையாக இருந்தது. இன்றும் கண்ணாடியே எனது ஆத்ம நண்பன்.”

“ஜமீல் பெண்கள்தான் அதிகம் கண்ணாடியை நேசிப்பவர்கள்.”

“காரணம் அவர்களால் தன் அகத்தை எளிதாக அடையாளம் காண முடிந்துவிடுகிறது.”

அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது அறையின் பாதி திறந்த கதவு வழியே கழுத்தில் மணி கட்டப்பட்ட பூனை ஒன்று மெதுவாக நடந்துவந்தது.

அந்த ஓசையைக் கேட்டு சிரித்தபடியே உமர் சொன்னான்.

“கழுத்தில் மணி கட்டப்பட்ட பூனை உன் ஒருவனிடம் தானிருக்கிறது.”

“இதைப் பூனை என்று சொல்லதே. இது ஒரு சூபி ஞானி. இதன் பெயர் என்ன தெரியுமா? எலி. வேடிக்கையாக இருக்கிறதா? நான் அப்படிதான் அழைக்கிறேன். ஒரு பூனை தன்னை எலி என அழைப்பதை ஒருபோதும் ஆட்சேபம் செய்வது கிடையாது.”

“ஜமீல் ஒரு பூனைக்கு எலி என பெயர் வைத்தவன் நீ ஒருவன்தான்” என சிரித்தான் உமர்.

“ஒரு சொல்லை மாற்றிவிடுவதன் மூலம் எவ்வளவு மாற்றம் உருவாகிவிடுகிறது பார்” எனச் சிரித்தான் ஜமீல்.

“கவிஞன் இல்லையா, அப்படித்தான் பேசுவாய்” என்றான் உமர்.

“இந்த பூனை கவிதை கேட்கிறது, பலநேரங்களில் கவிதை நன்றாக இல்லை என்றால் மௌனமாக நகர்ந்து போய்விடுகிறது. கவிதை பிடித்திருந்தால் வாலை ஆட்டுகிறது.”

“உனக்கேற்ற விமர்சகன்” என்றான் உமர்.

“இதைக் கேட்டால் நீ இன்னும் ஆச்சரியப்படுவாய். இந்தப் பூனைக்கு ரோஜாப்பூவை மட்டும்தான் பிடிக்கிறது. அது ரோஜாவை முகர்ந்து பார்க்கிறது. ரோஜாக்களைச் சுற்றிச்சுற்றி வருகிறது. ஞானிகளுக்கு ரோஜா பிடிக்கும்தானே” என்று சொல்லிச் சிரித்தான்.

பிறகு பகடையை எடுத்து ஓரமாக வைத்துவிட்டு எழுந்துகொண்ட படியே சொன்னான்.

“நேற்றிரவு ஒரு விசித்திரமான மனிதனைச் சந்தித்தேன். வீதியில் தூக்குக் கயிறு விற்றுக்கொண்டு போய்க்கொண்டிருந்தான்.”

“என்ன சொல்கிறாய் தூக்குகயிறா?”

“எனக்கும் இதே ஆச்சரியம்தான் ஏற்பட்டது. அவன் தன் தோளில் நிறைய சுருக்கிடப்பட்ட தூக்குக்கயிறுகளை போட்டிருந்தான். உறுதியான முரட்டுக் கயிறுகள். ஒன்றுபோல செய்யப்பட்டிருந்தன. மலிவான விலையில் அவன் தூக்குக் கயிறுகளை விற்றுக்கொண்டிருந்தான். வீடு கடைகளின் வாயில்களில் நின்றும் பாதையில் கடந்தும் போகும் மக்கள் அவன் குரலைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். யாரும் ஒருவன் ஏன் தூக்கு கயிறு விற்கிறான் என அதிர்ச்சி அடையவேயில்லை. எல்லா வணிகப்பொருட்களையும் போல தூக்குக் கயிறும் ஒரு சந்தைப்பொருளே என அவர்கள் கருதியிருக்கக்கூடும். அவன் உரத்த குரலில் தூக்குக்கயிற்றை விலை கூவி விற்றுக்கொண்டிருந்தான்.”

“யார் அவன்? எதற்காக தூக்கு கயிறு விற்கிறான்” எனக்கேட்டான் உமர்

“அதை அறிந்துகொள்வதற்காகதான் அவனை நிறுத்திப் பேசினேன். அவன் பெயர் தூமகேது, எந்த ஊர் என்று கேட்டதற்கு துரத்தப்பட்டவன் என்று மட்டும் பதில் சொன்னான்.”

“தூக்குகயிறுகளை ஏன் விற்கிறான்?” என ஆர்வமாக கேட்டான் உமர்.

“அரசின் நெருக்கடிகளையும் புதிய கெடுபிடிகளையும் அராஜகத் தின் கொடுங்கரத்தையும் தாங்கமுடியாமல் மனிதர்கள் அவதிப்படுகிறார்கள். அவர்கள் தங்களை தானே தண்டித்துக் கொள்ள உதவுவதற்காக தூக்குக்கயிறுகளை விற்பதாகச் சொன்னான்.”

“அவன் சொல்வது உண்மை. மக்கள் நெருக்கடியில் மூச்சுதிணறிக் கொண்டிருக்கிறார்கள்.”

“அந்த தூக்குக்கயிறுகளில் ஒன்றை நானும் விலைக்கு வாங்கிக்கொண்டேன்” என்றான் ஜமீல்

“உனக்கு எதற்காக தூக்கு கயிறு?” எனக்கேட்டான் உமர்.

“நீதி மறுக்கப்பட்டவர்களின் கதையை பாடுகிற என்னை தூக்குக் கயிறு இறுக்கத்தானே போகிறது. அதற்கு முன்பு நானே இதை கழுத்தில் மாட்டி ஒத்திகைப் பார்த்துக்கொள்வது நலம்தானே” என்றான்.

“ஆள்பவர்கள் கவிதையை கண்டு ஒருபோதும் பயப்படுவதில்லை” என்றான் உமர்.

“அப்படி நினைத்துக்கொள்ளாதே. கவிதை என்பது விசித்திரமான ஆயுதம். உலகில் இதுவரை கவிதைகளும் புத்தகங்களும்தான் தடை செய்யப்பட்டிருக்கின்றன. ஆயுதம் எதுவும் தடைசெய்யப்பட வில்லை.”

“நீ உண்மையைத்தானே ஜமீல் பாடுகிறாய். பின் ஏன் பயப்படுகிறாய்?”

“கவிஞர்கள் எவ்வளவு நேசிக்கப்படுகிறார்களோ, அவ்வளவு வெறுக்கவும் படுவார்கள். இதுதான் உலகின் நியதி.”

“உலகெங்கும் நிரபராதிகளின் கதை ஒன்றுபோலத்தானிருக்கிறது, பாவம் இந்த ஆட்டுதோல் விற்பவன், செய்யாத குற்றத்திற்காக ஒளிந்து வாழுகிறான்.”

“நிரபராதி என்றால் அதை நிருபணம் செய்துவிடலாம்தானே.”

“அது எல்லோராலும் முடியாதது. உமர் உனக்கொரு கதை சொல்கிறேன். என்னுடைய கதையில்லை. என் தந்தை சொன்ன கதை. நான்கு குருடர்கள் ஒன்று சேர்ந்துபோய் யானையைப் பார்த்த கதையைக் கேள்விப்பட்டிருக்கிறாய்தானே. இந்த நான்கு குருடர்களும் சகோதரர்கள். இவர்களுக்குத் தந்தை ஒருவன் இருந்தான். அவனும் ஒரு குருடனே. அவனிடம் தான் யானையைப் பார்த்த கதையை நான்கு குருடர்களும் விவரித்தார்கள். அதைக் கேட்ட தந்தை நால்வர் சொல்வதும் தவறு. யானை என்ற சொல்லைக் கேட்டவுடன் அது சிறிய உடல் கொண்ட பிராணியாக இருக்கும் என்றே தோன்றுகிறது என்றான். அதைக் கேட்ட நான்கு குருடர்களும் தந்தை சொல்வது சரியே. நாங்கள் அதைத் தொட்டு உணரும்போதும் ஒரு அதிசயத்தையும் காணமுடியவில்லை என்றார்கள். இந்த குருட்டு தந்தையை போன்றவர்களே சட்டத்தை எழுதுகிறார்கள். அவர்களுக்கு குற்றவாளி என்பது வெறும் சொல் மட்டுமே.”

“சரியாகச் சொன்னாய் ஜமீல்.”

“இந்தத் தேசம் வெகுவிரைவில் அந்நிய தேசத்தின் சட்டத்தால் ஆளப்படப் போகிறது. அதற்கான முகாந்திரங்களை நான் காண்கிறேன்.”

“என்ன சொல்கிறாய்?”

“மழை வருவதன் முன்பு மழைவாசம் வருமில்லையா?” என்றான் ஜலீல்.

“நானும் நீயும் சூதாடுவதுபோல இந்த தேசமும் சிலரால் சூதாடப்படுகிறது. நமது தேசம் அவர்களின் சூதுப்பொருள்.”

“அதைத்தான் அந்த மனிதன் என்னிடம் சொன்னான். பலசாலியும் பலமற்றவனும் ஒரே பயத்தில் வாழ்ந்து கொண்டிருப்பது நம் காலத்தின் சாபமா? எல்லா தத்துவ சாஸ்திரங்களும் வெறும் மழுப்பல்கள்தானா.”

“நியாயத்தின் கபடத்தன்மை என்னை ஆவேசம் கொள்ளச் செய்கிறது. தங்களுக்காகத் தாங்களே சட்டங்களை உருவாக்கிக் கொள்ளும் சுயதிகாரத்தை நான் வெறுக்கிறேன். இந்த தேசத்தில் மூன்று விதமான மனிதர்கள் வாழ்கிறார்கள். ஒரு விதம் உண்மையை அறிந்துகொள்ள ஒருபோதும் விரும்பாதவர்கள். இரண்டாம் விதம் உண்மையை அறிந்துகொண்டு சொல்ல முடியாமலும் ஏற்றுக்கொள்ள முடியாமலும் தவிப்பவர்கள். மூன்றாம் விதம் உண்மையைத் தேடி அறிந்துகொள்வதுடன் அதை உரத்துச் சொல்பவர்கள். நான் மூன்றாவது வகையைச் சேர்ந்தவன். என்னால் உண்மையை ஒளித்துக்கொண்டு வாழ முடியாது.”

“அதிகாரத்தை அடைவதற்குத்தானே இத்தனை சூழ்ச்சிகளும், வினைகளும், வன்முறைகளும் நடைபெறுகின்றன. விதியின் கடிவாளம் அதிகாரத்திலிருப்பவன் கையில்தானே இருக்கிறது” என்றான் உமர்.

அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது குளிர் காற்று ஜன்னல் வழியாக உள்ளே நுழைந்தது. அந்த உரையாடலில் விருப்பமற்றது போல பூனை அங்கிருந்து கடந்து போனது.

ஜலீல் சொன்னான்,

“இந்த தூமகேது எனது தந்தையை நினைவுபடுத்திவிட்டான், அவரும் தூமகேதுவைப் போல செய்யாதக் குற்றத்திற்காகக் கொல்லப் பட்டவர்தானே.”

“அரசனுக்கு நெருக்கமாகயிருப்பவர்கள் காரணமில்லாமல் கொல்லப்படத்தானே செய்வார்கள்.”

“எனது தந்தை செய்த ஒரே தவறு. அரசனை நண்பனாக கருதியதே. அதிகாரத்திலிருப்பவர்களுக்கு நண்பர்கள் எதிரிகள் என்ற பேதமில்லை. யார் தேவைப்படுகிறார்களோ அவர்களை பலி கொடுத்துவிடுவார்கள். இதுதான் தாராவிற்கு நடந்தது. ஷாஜகானுக்கும் நடந்தது. ஏன் ஒளரங்கசீப்பும் இதற்கு விதிவிலக்கில்லையே. இந்த தேசத்தில் ஒரு கவிஞனை புரிந்துகொள்வதற்கு யாருக்கும்

திறமையில்லை, விளக்கின் இயல்பு வெளிச்சம் தருவது. இருள் மீதான பகையில் அந்த வெளிச்சம் உருவாவதில்லை. அந்தத் தூக்கு கயிறு விற்பவன் என்னை அமைதியிழக்கச் செய்துவிட்டான். தூமகேதுவை நான் பாடப்போகிறேன். அவன் தனி நபரில்லை. நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து வரும் அவலத்தின் அடையாளம். அவனை பாடுவேன். நீதிமறுக்கப்பட்டவனின் குரலை உலகமே கேட்கச்செய்வேன்.”

பூனை எரிச்சலான குரலில் மியாவ் என்றது.

உமர் சிரித்தபடியே சொன்னான்.

“உனது பூனை ஒரு ஞானிதான். உரத்த அறிவிப்புகள் எதுவும் அதற்குப் பிடிப்பதில்லை.”

ஜலீல் தனது பூனையை எடுத்து அணைத்தபடியே சொன்னான்,

“பூனைகளுக்குக்கூட உண்மை பிடிப்பதில்லை.”

ஜலீல் உணர்ச்சிபூர்வமான குரலில் சொன்னான்,

“அதோ அந்த தூக்கு கயிறு. அதை விற்றுக்கொண்டு அலையும் அந்த கிழவன் தூமகேதுவை உன் வழியில் எங்காவது பார்த்தால் அவனிடம் சொல், நீதியை மறைக்கலாம். ஆனால், தோற்கடிக்க முடியாது. என் கவிதை அவனுக்காக நீதி கேட்கும். குரலற்றவர்களுக்கு எனது கவிதைகள் குரலாக அமையும்.”

பூனை மௌனமாக அதை கேட்டுக்கொண்டிருந்தது.

நினைவுகளின் நிழலில்

தூமகேது முற்றிலும் தளர்ந்து போயிருந்தான். நடந்தால் பெருமூச்சு வருவதாக இருந்தது. போதும். இந்தக் கால்கள் ஏன் ஓய்வதேயில்லை. என்ன பைத்தியக்காரத்தனமிது. எதைத் தேடி அலைகிறேன். கடற்கரையில் நாணத்தைத் தொலைத்த சிறுவன்போல ஏன் இப்படி அலைபாய்கிறேன். போதும். நடந்தது போதும். கால்கள் சொல்வதை இனி கேட்கக்கூடாது என முடிவு செய்துகொண்டு புளியமரத்தடியில் உட்கார்ந்திருந்தான். அவனது கால்கள் அயர்ந்து போயிருந்தன. இடுப்பு எலும்புகள் வலித்தன. பேசுவதற்குக்கூட உடலில் தெம்பில்லை. அடர்ந்து நரைத்த கோரை தாடியும் பருத்துவீங்கிப்போன புருவங்களும் சூரியவெளிச்சத்தைக் கண்டால் தானே சுருங்கிக் கொள்ளும் கண்களும் உலர்ந்து சுருங்கிய தோலும், அழுக்கேறிய கைகளும் கொண்டிருந்தான். பலநூறு வயது வாழ்ந்துவிட்டது போன்ற அலுப்பாகயிருந்தது. வீடற்றவன் வேகமாக முதுமை அடைந்துவிடுகிறான்.

வெகுதூரம், வெகுநாட்கள் அலைந்து திரிந்தாகி விட்டது. வழியில் ஒருமுறைகூட மனைவி பிள்ளைகளைக் காணமுடியவில்லை. இனி அவர்களைக் காணமுடியும் என்ற நம்பிக்கையும் போயிருந்தது.

அவர்கள் நிச்சயம் எங்காவது பிழைத்து இருப்பார்கள்.

தன் வாழ்வு முடியப்போகிறது. என்ன தவறு செய்தோம். எதற்காக இப்படி குற்றவாளியாக்கப்பட்டு காலாவில் அடைக்கப்பட்டோம்.. தப்பிப் போவது விடுதலை என்று நினைப்பது எவ்வளவு முட்டாள்தனம். அது வாழ்நாள் முழுவதும் குற்றவாளியாக வாழ வேண்டிய நெருக்கடியில்லையா. ஆனால், எத்தனை காலம் சிறைக்குள் ஒடுங்கிக் கிடப்பது.

தான் செய்தது சரியா தவறா என அவனுக்குப் புரியவில்லை.

சத்கரில் தான் வாழ்ந்த நாட்களை நினைத்துக்கொண்டான்.யாருக்கோ அவை எல்லாம் நடந்தது போலிருந்தது. தான் அந்த தூமகேது இல்லை.

இவன் நடைப்பிணம். இறந்து போனால் அழுவதற்கு யாருமற்றவன்.

இப்படி தன் வாழ்க்கை முடியும் என அவன் ஒருபோதும் நினைத்ததில்லை.அந்த வேதனை அவன் மனதை வெகுவாக அழுத்தியது. தன்னை மீறி அவன் அழுதான். ஒருபோதும் இனி திரும்ப முடியாத தனது ஊரை, மனைவி, மக்களை நினைத்து அழுவது போலிருந்தது.

நீண்ட விசும்பலுக்குப் பிறகு அவன் கண்களை மூடிப் படுத்துக் கொண்டான். இதுதான் கடைசி இடம். இனி இந்த பூமியில் ஒரு அடி எடுத்து வைத்துப் போக முடியாது. போதும் எனத் தோன்றியது.

வயிறு பசித்தது. ஆனால், சாப்பிடக்கூடாது என வைரக்கியமாக இருந்தான். உடலின் குரலுக்குப் பணிந்தது போதும். இந்த உடலை நீங்கிவிடலாம். எவ்வளவு நாட்கள் இதைத் தூக்கிக்கொண்டு அலைவது?

அவன் மண்ணை வெறித்தபடியே தலைகவிழ்ந்திருந்தான்.

தொலைவில் ஆட்கள் கூட்டமாக வரும் குரல் கேட்டது. அவன் கண்களைத் திறக்கவில்லை.

கையில் பச்சை கொடி ஏந்தியபடியே இசைப்பாடல்களை பாடிக்கொண்டு ஏராளமான ஆட்கள் அவனைக் கடந்து போய்க்கொண்டிருந்தார்கள். ஒருவன் மரத்தடியில் இருந்த தூமகேதுவிற்கு நாணயம் ஒன்றை யாசகமாகப் போட்டுவிட்டுச் சென்றான். இன்னொரு ஆள் அருகில் அமர்ந்து தூமகேதுவை எழுப்பி உணவும் தண்ணீரும் தந்தான்.

“எங்கே போகிறீர்கள்?” எனக்கேட்டான் தூமகேது.

“ஞானி ஷரீப் தர்காவிற்கு யாத்திரை போகிறோம்.”

அவர்களுக்கு கைகூப்பி வணக்கம் சொன்னான் தூமகேது.

அந்த கூட்டத்தில் ஔரங்கசீப் தன் கையால் செய்து தந்த தொப்பியை அணிந்த பிச்சைக்காரனும் இருந்தான். அஜ்யாவிடம் பாதுஷா ஒப்படைத்த வெண்ணிற தொப்பியது. அந்த பிச்சைக்காரன் ஏதோ யோசனைக்குப் பிறகு தனது தொப்பியை கழட்டி தூமகேதுவை நோக்கி வீசியபடியே சொன்னான்,

“சகோதரா, இந்தத் தொப்பியை அணிந்துகொள். வெயிலில் இருந்து உன்னை காப்பாற்றும்.”

தூமகேது தன் முன்னே கிடந்த தொப்பியை எடுத்து அணிந்து கொண்டான்.

அது பேரரசன் ஔரங்கசீப் தன் கைகளால் செய்த குல்லா என அவனுக்குத் தெரியாது.

ஆனால், தன் தலைக்கு அந்த குல்லா பொருந்தியிருப்பதை நினைத்து சந்தோஷம் கொண்டபடியே பிச்சைக்காரனுக்கு நன்றி சொன்னான்.

“இது எந்த இடம்? அருகில் என்ன ஊர் இருக்கிறது?” என தூமகேது கேட்க நினைத்தான். பிறகு தெரிந்து என்ன செய்துவிடப் போகிறோம் என கண்களை மூடிக்கொண்டான்.

யாத்ரீகர்களில் ஒருவன் தன் கையில் வைத்திருந்த சாமந்தி மாலை ஒன்றை தூமகேதுவை நோக்கி வீசினான். அந்த மாலை தூமகேது மடியில் வந்து விழுந்தது.

பத்துவயதில் ஆசைப்பட்ட மாலையது. இன்று மடியில் வந்து

விழுந்திருக்கிறது.

அந்த வாசனையை நுகர்ந்தபோது, அவன் அறியாமல் கண்கள் கலங்கின.

சாமந்தி மாலையை எடுத்து கழுத்தில் அணிந்துகொண்டான்.

அவனை அறியாமல் “நளா, நளா, நான் எப்படியிருக்கிறேன்“ எனக் கேட்டான்.

மனைவியிடம் தன் மாலையை காட்டி பெருமை கொள்ள வேண்டும் என்பது போலிருந்தது அக்குரல்.

அவள் இங்கில்லை. தான் வீட்டில் இல்லை என்ற நினைப்பு வந்தவன்போல அவன் தாங்கமுடியாத வருத்ததுடன் தலைகவிழ்ந்து கொண்டான்.

கடந்து போகிறவர்கள் அடிக்கும் உற்சாகமான மேளச்சப்தம் அவன் காதில் கேட்டுக்கொண்டேயிருந்தது.

துக்கத்தையும் வேதனையும் மீறி அவனறியாமல் அவனது இடக்கை தாளமிட்டுக்கொண்டிருந்தது.

••